உ

சிவமயம்.

ஸ்ரீ சிவஞான போதம்

ஸம்ஸ்கிருத சுலோகத்திற்கு ஸ்ரீமெய்கண்ட

தேவநாயனாரால்

மொழிபெயர்த்தருளிய தமிழ்ச்சூத்திரமும்

திருத்துருத்தி இந்திரபீடம்

கரபாத்திர சுவாமிகள்

ஆதீனம்

ஈசூர் சச்சிதானந்தசுவாமிகள்

மாணாக்கராகிய

பழனிச்சாமி சுவாமிகள்

அவர்களால் இயற்றிய

வேதாந்த தீபிகையுரையும்.

ஸ்ரீசிவஞானபோத ஸமஸ்கிருத ஸூத்திரத்திற்கு

திருவையாற்றிலிருக்கும்

லக்ஷயானந்தத்தினாலியற்றியவுரையும்.

கும்பகோணம்

"ஸ்டார் அச்சுக்கூடத்தில்"

பதிப்பிக்கப்பட்டது.

1922.

இதன் விலை] *Copy Right Registered.* [ரூபா. 3

உ

அறிவிப்பு.

வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலையை விளக்குவதாகும் இப்புத்தகத்தைப்பெற விரும்புமன்பர்கள் எனது மாணவர்களாகிய அம்மாபேட்டை, ஜவுளி, ம௱. நடேஸதேவர், & நா. சுந்தரம்பிள்ளையென்றவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

22—12—22-ல் (துன்மதிஸ்ரீ மார்கழிமீ 8உ) கும்பகோணம், டவுன் ஹைஸ்கூல், தமிழ்பண்டிட், அ. பாலசுப்பிரமணியபிள்ளையும், கும்பகோணம், யதார்த்தவசனி அச்சுக்கூடத்தலைவராகிய டி. வி. கோவிந்தசாமி பிள்ளையும், என்னிடம் பாரம் 1-க்கு 7 ரூபாப் கூலிபேசி, மாதம் 10 பாரம் கொடுப்பதாக சம்மதித்து, 30 ரீம் பிரிண்டிங் பேப்பர்களையும், 101 ரூபாயையும், பெற்றுக்கொண்டு 15 பாரம் அடித்துவிட்டு, 13—1—22-ல் ரூபாய் 150 பெற்றுக்கொண்டு மற்றைய நான்கு மாதத்திற்கும் பத்து பாரம் அடித்தும் ஒரிஜனலையும் பணத்தையும் கைப்பற்றிக்கொண்டுகெடுதி செய்யத் தொடங்கிவிட்டதைக்கண்டு 18—4—22-ல்ஷியார்களிடம் எழுதிவாங்கினபின், கும்பகோணம் பாணாதுறை மேலவீதி 3-நெ. வீட்டிலிருக்கும், பண்டிட், சாமிநாதபிள்ளை 28—4—22-ல் பூநாரியிருப்பு, நடேஸ உடையாருக்கு போட்ட லெட்டரில் ஷியார்கள் அச்சிடமுடியாதென்று சொல்லிவிட்ட விபரத்தைத்தெரிந்து, வந்து கேட்க, ஷியார்கள் முதற்சூத்திரந் தொடங்கி அச்சிட்ட 25 பாரங்களையும், வெத்துப்பேப்பர், 11 ரீமையும் 4—5—22-ல் கொடுத்துவிட்டு, பாக்கி 76 ரூபாயையும், 4 ரீம் பேப்பரையும் எடுத்துக்கொண்டு வீண்வழக்குப்பேசி மருட்டுகின்றனர்கள். அதன்பின்னர், கும்பகோணம் ஸ்டார் பிரஸின் சொந்தக்காரர்களாகிய டி. கே. காசிநாதருவ் கோவில்கர்&பிரதர்ஸ் அவர்களால் மாதம் 1-க்கு 16 பாரம்வீதம் 1922-ஸ்ரீ மேமீ 9உ (துந்துபிஸ்ரீ சித்திரைமீ 27உ) முதல் ஒன்றரைமாத டயத்துக்குள் முடித்துக்கொடுத்து எனது சிரமத்தைப் பரிகாரஞ்செய்தனர்கள். அவர்களது பேருதவியை என்றும் மறக்கத்தக்கதன்று.

5-6

உ

சிவமயம்.

சாற்றுக்கவிகள்.

திருவாரூர்

ஸ்ரீ குருதெக்ஷிணாமூர்த்திசுவாமிகள் மடாலயத்திற்குரிய

ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவானந்தசுவாமிகள் பாதசேகரன்

மாணிக்கசுவாமிகளால்

இயற்றப்பட்ட

நேரிசை யாசிரியப்பா.

உயிரிற் றொன்றாத் துணைபா யுற்று
செயிறறு முள்ளத் தின்பறி வாகி
நிறைபரம் பரமா நின்மல னருளான்
மறையின் விழுப்பொருள் நால்வர்க்கு வழங்கியாங்
கப்பொரு ளுணர்தற் காற்ற லின்றிய
தப்புளத் தவர்கள் தனிநிலை யெய்ந்து
மும்மல மொழிந்து முத்திபெற் றுய்வான்
அம்மல மகற்று மாக்கம நூற்களை
நன்ன ருளத்து நந்தி கணத்தவர்
மன்னருஞ் சிறப்பின் மணிவர் சகப்பெயர்
புங்கவர்க் கருளாற் புகன்றன னென்ப
அங்கவை காமிக மாதியா மொழிந்த

பன்னுன் கிரட்டிப் பான்மைய வதனுட்
சொன்ன ரௌரவத் துணிபொரு ளுணர்த்துஞ்
சிவஞான போதமாஞ் செவ்விய நூற்குத்
தவஞான மின்றித் தனைத்தான் புகழ்ந்தே
இருமாந் திடற்படு மேழையர் சில்லோர்
திறமறு முப்பொரு ளுண்மையாத் தெரித்து
பாடிய மெனப்பெயர் பண்புற வியற்றி
மூடர்கள் வியப்ப முன்னுற விடுத்தனர்
அவருரை கைக்கொண் டலமரு மாக்கள்
தவருளந் தெளிந்து தத்துவ முணர்ந்து
தடையற வின்பத் தடங்கடல் படிந்தே
யிடையறு மகிழ்ச்சி யெய்தினி திருப்பத்
திருவுளங் கொண்டு திருத்தகு வுரையா
மிருவே தாந்த தீபிகை யெனவே
சிவணிய பாடியஞ் சிறப்புற வமைத்துச்
சிவப்பிர காசஞ் சிவஞான சித்தியாந்
தாந்திரிக துவித சைவசித் தாந்தம்
சாந்த முறுப்பத முத்தியாச் சாற்றி
அன்னவர் நூற்களை மேற்கோ ளறைந்து
முன்னோர் புகன்ற முதனூற் காட்டி
ஒத்துப் பொருளி னுண்மை யுரைத்தே
யேத்தி யாவரு முத்தி யெளிதுறக்
காதலா மலகக் காட்சியிற் றெரித்துச்
சாதனன் ஞானச் சங்கர பகவற்
பாதனற் றுண்மலர் பற்றறப் பற்றும்
சாதுசங் கத்தவர் தனதுளங் களிப்ப

5-6

இமகிரித் தோன்றிய என்றா ழென்னத்
தமவஞ் ஞானந் தணந்தன னன்னுன்
கைம்மா றுகவாக் கண்ணுத லொப்பான்
மைம்மலி யுலகம் பொய்யெனத் தேர்ந்து
முற்றத் துறந்து முதுக்குறை வெய்தி
கற்பனை யாவுந் தன்னிடைத் தோற்றுஞ்
சொப்பன மென்னத் துணிந்த பேரறிஞன்
செப்பு தத்துவ மசிப்பொரு டேர்ந்தோன்
சீவன் முத்திபா நிலையினிற் றிகழ்வோன்
பாவலர் போற்றும் பழனிச் சுவாமியாம்
பண்புறு நாமம் படைத்த பண்டிதன்
பண்டை யோர்பரவுஞ் சச்சிதா னந்தப்
புங்கவன் பதமலர் போற்றும்
பங்கல மார்புகழ் மாட்சிமைத் தவனே.

வானராங்குடி
பிரம்ம-ஸ்ரீ ப. கிருஷ்ணசுவாமி அய்யரவர்களால்
இயற்றப்பட்ட

நிலைமண்டல வாசிரியப்பா.

தாமரை நண்பன் றன்னொளி பரப்பி
தீமல மன்ன திமிரம் போக்கிப்
போகமார் மன்பதை பொன்முக விழிகட்
கேகமாய் நின்றே யிலங்கிடு மாபோல்
சோமன் வன்னி சூரியர்க் கொளியருள்
தாவிலா வேக தற்பிர காசன்
அங்கண்மா ஞாலத் தகவிரு ளகல
பொங்கற முதலாப் பொதிமறை முதனூல்
பாங்கா யியற்றிப் பாஞ்சசகஞ் சிவன்
சாங்குவா தத்தாற் சற்று மிலையெனத்
தானே தனித்தொளிர் தத்துவ தயாநிதி
பானேர் மொழியுமை பங்கன் பரமன்
தேனே யனைய திருவா சகஞ்சொலத்
தானே யாகிய தனிமணி வாசகன்
தேசிகோத் தமனைத் திருப்பெருந் துறையில்
போதித்த சிவஞான போத மதற்கு
உளக்கண் ணில்லா உத்தம வந்தகர்
அளப்பிலா வானந்த மாம்பதி யென்றும்
அறிவிக்க வறிவது ஆன்மா வென்றும்
அறியுந் திறனிலா தகன்மல மென்றும்
முப்பொருண் முத்தியி லுண்டென முழக்கித்

தப்புரை செப்பித் தாந்தடு மாறுவர்
யென்னே விந்தை யிவருரை பாடியம்
அன்னவ ருரைகளு மவர்பா டியமும்
இரவியி னெதிருறு மிருள தெனும்படி
சுரகுரு மொழிநிகர் சொன்னயம் பொருணய
வென்றிகொ ளத்வைத வேதாந்த தீபிகை
யென்றுயர் பெயரா லியற்றினன் பாடியங்
கலைவலோர் பலருங் கண்டுளங் களிப்பத்
தலைமையா நூல்பல சாற்றிய பெரியோன்
அறிவல தறியாமை யலவல வென்போன்
அறிவே தானல தயலன் றென்போன்
அறிவினுக் கறிவறி யாமை யறைதல்
குறியிலர் கூற்றே யன்றியின் றென்போன்
மறைமுடி விளங்கு மந்திர நூற்கும்
இறைவன் மொழிந்த வினையிலா நூற்குந்
துறைபடங் கலவன் சொற்றமெய் நூற்கு
மறைவலோர் பகர்ந்த மற்றுள நூற்குஞ்
சங்கர குரவன் சாற்றிய படியே
எங்களுக் குரமுற வக முரைத்தோன்
இந்திர பீடத் திலங்கிய மரபினில்
வந்தவ தரித்த மாபெருங் கருணைச்
சச்சிதா னந்த சற்குரு பதத்தே
யிச்சையா லனுதின மிணைவிழி வைப்பவன்
மழவிடைப் பாகன் மகனடி துதிக்கும்
பழனிச் சாமியாம் பண்புறு தவனே.

திருத்துரைப்பூண்டி தாலுக்கா அம்மளூர் பிரசங்க வித்வான்

குு. க. சதாசிவம் பிள்ளையவர்களால்

இயற்றப்பட்ட

நிலமண்டலவாசிரியப்பா.

அன்பின் றுன்னிய வமைதரு முலகத்து
புன்மனைக் குரீஇ யின்முகம் விளக்க
மின்மினி கூட்டி மென்குரற் பார்ப்பினம்
களிமிக் கூர வளர்ப்பது கடுப்ப
மாசறக் கிடந்த நீனிறப் படாஅத்து
உடுக்கணம் பரப்பிய உள்ளக் கள்வன்
செம்பதம் தரூஉம் செம்பதந் தழுவும்
பயிர்ச்சி யெவர்க்கு மியற்கை யன்றே—யதனால்
மன்னு வுலகத்து மன்னுதல் குறித்தோ
ரறிவூ டளாவிய அன்பின் றுதவிய
ஒத்துமுறைத் தொகுதியின் உறுதியுட் படுத்தி
யளவையிற் படுத்திய வளவினாற் பொருட்களைத்
திரிபி னுணர்ந்தத் தீமையிற் சுழன்று
முப்பொருண் முடிபு முனைவன் மொழியும்
பழுதுபடக் கூறிப் பகைத்தல் காணூஉ
திப்பிய நெறியு முக்குண வயத்தான்
அப்பகை கடிந்து மெய்ப்பொரு ளுணர
வுண்மை யின்பத் திலகுதாழ்ந் துயர
வொப்ப வுரைத்த பற்பல நூற்களுள்
சைவந் தழைஇய மெய்வந் தொளிர

மெய்கண் டாரிவர் மெய்கண் டாரென
மெய்கண் டாட மெய்கண் டார்செய்
சித்தாந்த விளக்கெனுஞ் சிவஞான போதத்துக்
கத்திய வுரையிற் சுற்றிய பிழையெலாங்
கைத்தலா மலக மொப்ப விளக்கியும்
பாவே தாந்த மறைபுரை புணர்த்தியு
மிருவேறு கொள்கை யிலையிலை யென்று
வுரைவா யொலிப்ப வுரைவா யுரைத்தனன்—அவனே
பண்டுநான் முனிவர் கண்டகங் களிப்ப
கல்லா னிழற்ற சொல்லாற் சொலாது
சொற்றுணை யான சோதி வானவன்
வழிவழி வந்த மாதவர் மரபின்
தலைமை செய்திய கலைமே வுளத்தன்
உபதே சிப்பா னுருவந் தாங்கிய
வொருபெருங் கடவு ளுருபே ரணைந்த
தோமில் பழனிச் சாமி யென்ன
உலகமுழு துவப்ப நிலவி யோனே.

வெண்பா.

அவஞான நீக்கி யருள்ஞானந் தேக்குஞ்
சிவஞான போதவுரைச் செம்மை—தவஞானஞ்
சேமியா ருங்கொள்ளச் செய்தளித்தா னம்பழனிச்
சாமியா குஞ்சிவநே சன்.

ஒன்றுபொரு ளேயென்ன வொன்றுபட்டாற் போன்மதமு
மொன்றுபட வேயுரையு மொன்றளித்தா—னின்றுமுதல்
வேதாந்த சித்தாந்தம் வேறன்று லொன்றென்ன
வேதாந்த மிற்கண்டா ரேற்று.

(1) காணூஉ—கண்டு. (2) சேமியாரும்—சேமியாதவர்களுங் கூட (3) ஒன்றென்னவே—தாம் தம்மில்கண்டார். (4) யேற்று—உரையை யேற்று எனக்கொள்க.

உ

சிவமயம்.

விஷயசூசிகை.

பக்கம்.

முகவுரை.

தற்சிறப்புப்பாயிரம்.

போதுப்பாயிரம்.

முதல் சூத்திரம்.

இரண்டாஞ் சூத்திரம்

மூன்றுஞ் சூத்திரம்.

நான்காம் சூத்திரம்.

ஐந்தாம் சூத்திரம்.

ஆறாஞ் சூத்திரம்.

ஏழாஞ் சூத்திரம்.

எட்டாஞ்சூத்திரம்.

ஒன்பதாஞ் சூத்திரம்.

பத்தாஞ் சூத்திரம்.

பதினோராஞ் சூத்திரம்.

பனிரண்டாஞ் சூத்திரம்.

விஷயசூசிகை முற்றிற்று.

உதாரணச் செய்யுட்களின் அகராதி.

அகராதி முற்றிற்று.

"ஸ்டார் அச்சுக்கூடம்" கும்பகோணம்.

உ

திருச்சிற்றம்பலம்.

முகவுரை.

காப்பு.

தானே பரமாதி யாகத் தடித்ததூஉம்
தானே யலவாத் தனித்ததூஉம்—தானே
இருந்தபடி நிற்பதூஉ மென்று னலென்
பெருங்காப்பிந் நூற்கிதுவே பேறு.

கடவுள் வாழ்த்து.

உண்டிலை யாமன் றெனப்படா அ முதலை
அங்ஙன மாத லதுவழுத் தலபிற.

(இதன் பொருள்) இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், உண்டெனற்கும், இன்றெனற்கும், ஆமெனற்கும், அன்றெனற்கும் உடன்படாது ஒளிர்வதாகிய ஓர் முதற்பரம்பொருளைத் தன்மையாதி மூன்றிடமில்லாவிடத்து எங்ஙனம் வழுத்தல் கூடும். கூடாததால் அஃதெங்ஙனமோ அங்ஙனமாகத் தனது சேட்டையின்றி நிற்றல் வழுத்தலெனப்படும். இதற்குமாறாக நின்று வழுத்தல் அனைத்தும் வழுத்தலன்று பிறவாதலின்.—என்றவாறு.

தனக்கயலான வஸ்துவைக்கருதி இக்கால்வகையானும், இவற்றுள் யாதானு மொன்றானும் நிலையுறுத்தப்புகுந்தால் முரணுயமைவதன்றி என்றுந் தொலையாவழக்காய் முடியும்; முடிவதைப்பற்றி இங்ஙனங்கூறியதென்க. இல்லையென்பது - இலையென்றும், அல்லவென்பது - அலவென்றுந் தொகுத்தல் பெற்றன. அது - எழுவாய், வழுத்து - பயனிலை, பிற - எழுவாய், அல - பயனிலை. சுசாதியாதி விகற்பமிறந்ததை வழுத்தியது. இந்நூலுரை இனிதுமுடியப் பலவாறாக விரிந்துள்ள பற்பல பாஷைகளி லொன்றாகிய தமிழென்னும் இலக்கியமும், அதனைத் தூய்தாக்கற்கியைந்த எழுத்துமுதலிய பஞ்சவிலக்கணமும்போல அனந்தமதப் பிரவாகபேத முரணுயுள்ள நிச்சயங்களனைத்தும் புத்திவிகற்பத்தா லாயதெனச் சோதனைஞாயம் பொரு

த்த முகத்தாலஞ்சாது நின்று அவற்றைப் பூர்வபட்சமாக்கற்கும், அவர்போற் சொல்லாலல்லது வாச்சியம், இலட்சியமென்னும் அர்த்தங்காரணமாக அன்னோர் திசைகாணாநகறற்கும், அபிமானத்தாலல்லது எதார்த்தமாய் நின்று உண்மையை விளக்கற்கும் சர்வமத கோளரியாமெனல். இதனை மதாபிமான மற்றோர் யாண்டு மேற்றற்கும், அங்ஙனம் உண்மையாக வேற்று அனுசந்தானஞ் செய்தோர்க்கு மறுமையி லென்பதின்றி இம்மைக்கண்ணேதானே துக்கநிவிர்த்தியும், தடையற்ற ஆனந்தமுமெய்தற்கும் செய்ய மிக்க வலியுள்ளது வேதாந்தமாதலினானும். இதனை ஏற்றற்பாலார் விடயதோடதிருட்டி மிக்கோராதலினானும், இங்ஙனம் எவற்றினுஞ்சிறந்த மேலா மனுபூதிநிலை வடிவாயமைந்த ஏகமேவாத்வைத சுயம்பிரகாச சைதன்யத்தை மாத்திரம் பிரதிபாதிக்கும் ஞானகாண்டத்திற் கூறப்படும் விடயம் பின்னர் ஏகமாக்கற்கு முன்னர் திருக்த திருசியமெனப்படுவது. இங்ஙனங் கூறப்படுவதும், சகசீவபர விகற்பபேதங்களை அகற்றற்காதல் இனிது பொருந்தும். திருக்கு திருசியமென்பவற்றிற்குச் சச்சிதானந்த நித்திய பரிபூரணமெனவும், அநிர்த சடதுக்க அநித்திய கண்டமெனவும் இலக்கணமிருப்பதால், இவ்விரண்டையும் இலக்கியமாக்கி இவ்வுரை கூறப்புகுதலின் இதனை வேதாந்த தீபிகையெனக் காரணக்குறிபாக மூதுணர்வோர் ஏற்கப் பெயர்தந்ததென்க. இவ் வேதாந்த விலக்கியமும், இலக்கணமும், இவற்றை யமைத்துக்கூறுந் தமிழிலக்கியமும், இலக்கணமும் விக்கினமின்றி நிறைவேறக் கடவுள்வாழ்த்துக் கூறியதென்க. இலக்கண மிலக்கியத்தின் அமைதியாதலினானும், இலக்கியங்கண்டதற்கு இலக்கணமென விதியிருப்பதினானும், வேதாந்தவிலக்கியம் இன்னதென்றறியார் தமது இலக்கணம் எங்ஙனந் தெளிதற்பாலார். அதனை விளக்குவிப்பான் இவ்வுரை கூறப்புகுந்ததென்க.

திருமந்திரநூன்முகம் 11-வது பக்கத்தில் மேலும், "காலோத்தரம்" என்னும் உபாகமம், சிவபிரானுக்கும், கார்த்திகேயக்கடவுளுக்கும் பெரும்பாலும் சரியை வரலாற்றைப்பற்றியும் கிரியை வரலாற்றைப்பற்றியும், நிகழ்ந்த ஓர்வித சம்வாதம். புரோத்கீதாகமத்திலடங்கும் உபாகமங்களுள் ஒன்றாகி, "ஸ்ரீ காலஞானம்" என்று மறுபெயர்தாங்கும் "த்ரிகால ஞானம்" என்னும் ஆகமத்தை, அதற்குரித்தான "தேவீகாலோத்தரம்" என்னும் பெயரை விட்டு, அறிவின்மையால் சிலர் "காலோத்தரம்" எனக்கூறுவர். அது பெருந்தவறு. என்றும்,

நாம் மேற்சொல்லிய ஆகமங்கள்யாவும் நேபாளவேந்தனது "எட்டுநூற்களஞ்சிய"த்தில் உளவேயன்றி, அச்சேறவில்லை என்றும், வேதாரண்யம், வை. வே. இராமணசாஸ்திரியவர்கள் அழுக்காறுதியை மேற்கொண்டோரைத் ததுபோலாகாமல், மான்போலும் நோக்கத்தையும் கூர்மையினால் வேலையொத்த ஒள்ளிய நயனத்தையும், வாசனைநிறைந்த செவ்வாம்பல்போன்ற

சிவக்தவாயையும், வண்டுகள்தங்கிய மலரைமுடித்த கூந்தலையுமுடைய உமாதேவியார் சிவபெருமானது குற்றமற்ற ஸ்ரீபாதத்தில் நமஸ்கரித்துத் துதித்து, பிரமன், விஷ்ணுக்கள்முதலிய தேவர்களுக்கெல்லாம் நாயகனே! தீவிரம், தீவிரதரமுதலான சத்திநிபாதத்தினாலே பவித்திரமாகிய அந்தக்கரணத்தையுடையராய் நித்தியராயிருக்கிற பக்குவான்மாக்கள் யாவர்க்கும் ஆணவாதி பஞ்சபாச பந்தநிவர்த்தியின்பொருட்டு, பசுத்துவ நிவர்த்தியில்விட்டு நீங்காமலிருக்கிற பதித்துவப் பிராப்தியாகிய சிவசாக்ஷாத்காரமாயுள்ள பரமசிவ சாயுச்சியத்தைவிளக்கும் ஞானத்தையும், ஞானசாரத்தையுங் கிருபையினாலே அடியேனுக்குத் திருவுளம் பற்றவேண்டும் என்று விண்ணப்பஞ்செய்து கேட்க, எவற்றிற்குமுதற்காரணமாயுள்ள சிவபெருமான் விசேஷமாகிய நல்லகுணத்தையுடையாளே! ஞானத்தினாலும், ஞானசாரத்தினாலும் ஞானிகளானவர்கள் பஞ்சபாசங்களையுநீங்கிச் சிவசாயுச்சியத்தை அடைதற்குரிய ஞானத்தையும், ஞானசாரத்தையும் விரித்துச் சொல்லுகிறோம். இங்ஙனஞ் சொல்லப்பட்ட காலோத்தர ஞானபோதத்தினாலே சித்தசலனம் நீங்கி விளங்காதபேருக்கு அநந்தகோடி சாத்திரபோதையினாலும் ஞானம் உண்டாகாது என்று விஸ்தாரமாக மேற்சொல்லப்படும் ஞானசாரங்களினாலே உண்டாகும் மோட்சரூபமாயிருக்கிற ஞானசாதகருடைய சொரூபமுதலியவற்றை எண்பத்தைந்து சூத்திரங்களால் திருவாய்மலர்ந்தருளி முந்திச்சொல்லப்பட்ட ஞானமும், ஞானசாரத்தினுடைய முடிவுமாகிய பரிபாக காலத்திலே உண்டாகும் ஞானம் நம்மாலே சொல்லப்பட்டது. அன்றியும், சொல்லத்தக்க எல்லாவற்றையுஞ் சொன்னோம்; ஆதலால், மீண்டும் இனி உனக்கு இதனைச் சொல்லப்புகின், சொல்லத்தக்கது யாது? (ஒன்றும் இல்லை என்றபடி) என அருளிச்செய்த ஞானநூலாகிய இதனை அடியில்வரும் மேற்கோளானும், பாயிரத்தானுங் கண்டுகொள்க.

அரியவாக்கையின் மானுடவாக்கையே யாக்கை
விரியுநோன்பினி லுயிர்கொலாவிரதமே விரதங்
கருதிற்றெய்வநங் கண்ணுதற்றெய்வமே தெய்வந்
தெரியிற்றேவிகா லோத்தரத்தேற்றமே தேற்றம்.

என்று சிவஞானவள்ளலார் சிரமேற்கொண்டு துதித்ததுபோல ஞானவான்கள்பலரும் உச்சிமேற்கொண்டு துதித்தற்குரிய அரியபெரிய மகத்துவம் பொருந்திய இத்தேவிகாலோத்தரம்;

ஸ்ரீ கைலாசபதியாகிய சிவபெருமானுடைய திருமுகத்திற் றோன்றியதாயும், உலோகோத்தரமாயும், சிவாகமத்திலே சுத்தமான ஞானத்தையு ஞானசாரத்தையும் போதிப்பதாயுமுள்ள ஞானசாரப் போதகப்படலமானது காமிகாதி சிவாகமமிருபத்தெட்டையு, மிக்கசாரமா யெடுத்துச்சேர்த்த சங்கிதையாயிருக்கின்றது. அப்படலத்தி னெண்பத்தைந்து சூத்திரங்களையுக்

தமிழ்ச்செய்யு ளாறுபத்தொன்பதால் தேவிகாலோத்தரமென்னும் பெயரினு லச்சாத்திரஞ் செய்யப்பட்டதாதலால், சாதன சதுட்டயமுடையவர்களதனைப் பழுதறவோதித் தம்மாட்டுள்ள குற்றங்களைத்தேர்ந்து நிவர்த்திசெய்து கொள்ளாநிற்பர்கள். அபக்குவர்க்கந்நூலி னுட்கருத்து விளங்காவாதலா லவர்களாற் கூறப்படுங்குற்றங் குற்றமாகக் கொள்ளப்படமாட்டாது.

அத்தேவிகாலோத்தரம்போ லிந்நூலும் இரௌரவாகமத்திற் பாசவிமோசனப்படலத்திற் காமிகாதி சிவாகமமிருபத்தெட்டையுஞ் சாரமாயெடுத்துச்சேர்த்த சங்கிதையாயிருக்கின்றது. அந்தச் சிவஞானபோதப் பன்னிரண்டு சூத்திரங்களைத் தமிழிற் பன்னிரண்டு சூத்திரமாக முதனூலின் பெயரானே மெய்கண்டதேவநாயனார் மொழிபெயர்த்தருளினர்.

இந்நூற் குரைசொலப்புகுவாரனுபவிகளாகவேண்டும்; அனுபவமாவது யாதானுமொன்றை நான் நகாலத்தினு மித்தையாக்கிப் பரமாக்கித் தானாக்க வேண்டும். இங்ஙனமாக்கற்கு வலியின்றேல் ஞாயஞ், சோதனை, பொருத்தமென்னு மிம்மூன்றானு முரணின்றிய வுத்தியாலேனு மங்ஙனமாக்கவேண்டும். அதற்கும் வலியின்றேற் சுருதிமுகத்தாலேனும் யுக்திக்குமாறின்றிக் கூறல்வேண்டும். மாறுவது உபமான உபமேயங்கட்குப் பொருத்தமின்றிக் கூறலு முதனூலுக்கு வழிபுடைநூல்களையும் வழிநூலுக்குப் புடைநூல்களையும் மேற்கோளாகக்கூறுதலுங் குதர்க்கயுத்திகளைத் தருக்கயுக்திபோற் கூறுதலுமாம்.

அனுபவமில்லாவிடத் தனைத்தையுஞ் சின்மாத்திரமாக்கி யனுபவித்தல் கூடாது. யுத்தியேனுமின்றேற் பிரபலசுருதியென்பதற்கு விக்கினம்வரும். "வேதமோடாகம மெய்யாமிறைவனூ" லெனத் திருமந்திரமும். "வேதமுடனாகம புராணமிதிகாசமுதல் வேறுமுள கலைகளெல்லா" மெனத் தாயுமானாரும். "தேவர்குறளுந் திருநான்மறைமுடிவு, மூவர்தமிழு முனிமொழியுங் — கோவைத், திருவாசகமுந் திருமூலர்சொல்லும், ஒருவாசகமென்றுணர்." என்றவ்வையாருங் கூறியவாறு மேற்கோள்காட்டி யுரைகூறுவிடில் ஆன்மவிலக்கணங்கல்லாத வேனையபண்டிதர் வித்வான்களைக் காட்டினுந் தாம் சைவசித்தாந்த சாம்பிரதாயத்தா ரென்பதிற் சிறப்பென்னை.

இன்னும் 1892-ஆ இந்து தியாலாஜிகல் யந்திரசாலையில் பதித்துள்ள திருவருட்பயன் முகவுரையில், "மெய்ப்பொருளே திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்டதேவரா யவதரித்துச் சிவஞானபோதமென்னு நூலருளிச்செய்தனர். சிவஞானபோதத்தை விரித்து அவர் மாணாக்கர் அருணந்திதேவர் சிவஞானசித்தி செய்தருளினர். அருணந்திதேவர் மாணாக்கராகிய மறைஞானசம்பந்தரிடம் அநுக்கிரகம்பெற்ற உமாபதிசிவாசாரியார் சிவஞானசித்தியைத்தொகுத்துச் சிவப்பிரகாசமென யாவரும் எளிதிலுணரும்படி யோர் நூலருளிச்செய்தனர். உமாபதிசிவாசாரியார் தாம்செய்த சிவப்பிரகாசம்

முன்னூற்கேற்ப முடிந்தமையால் சிறிது விரிந்திருப்பதைப்பற்றி மிகுபக் குவமுடைய அடியார்க்கு வருத்தமின்றி மனனமாகும்பொருட்டுத்திருவருட் செயலால் திருவருளடையும் திருவருட்பயனென் றிந்நூலருளிச் செய்தனர் என்றிருத்தற்குமாறுக அடுத்த சிறப்புப்பாயிரத்தில் :—சிவப்பிரகாசத் திருப் பெயர்மேவிச் சைவநூற்சலதி தொய்தினிற்கடத்து, மரக்கலமதற்கு மாலுமி யொப்ப, வெழிலீரைந்தும் வழுவறப்புணர்த்தித், தெள்ளுசீர்ப்புலமை வள்ளு வன் றனக்கோர், நற்றுணையுடைத்தெனக் கற்றவர்களிப்ப, வருட்பயனென் னுவதற்கொரு நாமந் தெருட்படப்புனைந்து செந்தமிழ்யாப்பிற், குறளடி வெள்ளை யொருநூறியம்பினன், மற்றவன் புலியூர்வளநகர்க்கீழ்பாற், கொற் றவன்குடியிற் குடிகொண்டுறைந்த, பூசுரனுறைந்த புதுமதிவேணியுங், காசு றுங் கண்டமுங்கரந்த, தேசிகனுமாபதி சிவனென்பவனே. என்றும்.

திருவருட் பயன்.

உமாபதிசிவனென்னும் பிள்ளைத்திருநாமத்திற்கும், இந்நூற்கும் முதல் வராகிய கொற்றவன் குடிமுதலியார், அறம்பொருள் இன்பம் வீடென்னு நான்கினுள்வீட்டு நெறிகாட்டுவான் தம்மானெடுத்துக்கொள்ளப்பட்ட இலக் கியம் இடையூறின்றி யினிதுமுற்றுதற்பொருட்டு, ஆதிக்கண்ணே கரிமுகக் கடவுளை வணக்கஞ்செய்தருளுகின்றார், என்றும் கூறியுள்ளன. ஆதலால் ஷெ சிவஞானபோதம் மொழிபெயர்ப்பேயென்பதையும், சிவஞானசித்தி யார் வழிநூலும், சிவப்பிரகாசம், திருவருட்பயன் முதலியன புடைநூலுமா மென்பதையும், திருக்குறள்முதலியன நாற்பொருட்பயக்கும் நலனுடைத் தென்பதையும், அவரது மதநூற்களைக்கொண்டும் விளக்குதும். அதாவது:—

தத்துவஞான நிஷ்டாபராகிய திருமூலநாயனர் திருவாய்மலர்ந்தருளிய பத்தாந்திருமுறையென்னும் திருமந்திரத்திற்குமாவை, வே. விசுநாதபிள்ளை யால் எழுதப்பட்ட குறிப்புரையில் 29—9—1911, வேதாரண்யம், வை. வே. இரமண சாஸ்திரியவர்களால் எழுதப்பட்டுள்ள நூன்முகத்தில் ஏழாவது பக்கத்தில் :—திருமூலநாயனர் காலம், வடமொழி ரௌரவாகமத்தின் ஓர் பகுதியாகிய சிவஞானபோதம் என்னும் நூலைத்தமிழில் மொழிபெயர்த்து, அதுவாயிலாக ஆகமக்களஞ்சியத்தின் ஞானபாதப் பெரும்பயனைத் தமிழ் நாட்டினர்க்கு அளித்து, ஆகமாந்தத்தை ஒருவாறு நிலைநிறுத்திய பேறி வின் வள்ளலான மெய்கண்டார் நாட்குப் பன்னூற்றாண்டுகள் முந்தியது. ஆயினும், ஷெ திருமூலநாயனர்போல் ஆகமாந்தத்தின் கோட்பாடுகள் அனைத் தினிடத்தும் அன்புரிமைபாராட்டி, அவைகளை ஐயமற அணிவகுத்து, ஒளி வீசும் மாமணிக்குவியல்போன்ற பாசுரங்கள்வழியாகச் சுவைபெருக அளிக் கும்வாய்மை, இத்தென்னிந்தியாவில் வேறு தமிழ்நூலாசிரியரெவரிடத்தும் இவ்வண்ணம் இல்லையென ஒருவாறு நாம்சொல்லுதல்கூடும், என்றும். (8) இஞ்ஞானக்களஞ்சியத்தின் (சிவஞானபோதத்தின்) மெய்ப்பொருளை

உணர்த்த வடமொழியில் இருபேருரைகள் உள. அவற்றைச் சமைத்தோர் கள் வித்தியாரணியசுவாமிகளும், சிவாக்கிரயோகிகளுமே. அவ்வுரைகளில் ஒன்றும் இன்னும் அச்சேறவில்லை, என்றும் வரைந்துள்ளார்.

மற்றும், கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியரருளிச்செய்த கோயிற் புராணம் சந்தானகுரவர் வரலாற்றில், பரஞ்சோதிமுனிவர் கைலாயத்தை விட்டுவந்து சிவஞானபோதத்தை, மெய்கண்டதேவருக்கருளிச்செய்ய, அதனையவர் தமிழில் மொழிபெயர்த்து வார்த்திகப் பொழிப்புரைசெய்து, அருணந்திசிவாசாரியர்முதலிய நாற்பத்தொன்பதின்மர்களுக்கருளிச்செய்ய அவர் சிவஞானபோதத்திற்கு வழிநூலாகச் சிவஞானசித்தியார், இருபாவிருபது என்னுமிரண்டையுமமைத்து அம்மூன்றையும் மறைஞானசம்பந்த சிவாசாரியருக்கருளிச்செய்ய, அவர் உமாபதிசிவாசாரியருக்கருளிச்செய்ய, அவர் தமிழிலே சிவப்பிரகாசம், திருவருட்பயன் முதலிய புடைநூல்களைச் செய்தன ரென்றும், இன்னும் திருவாவடுதுறை ஆதீனத்துத் திராவிடமகாபாஷ்ய கர்த்தராகிய சிவஞானயோகிகளருளிச்செய்த பிரபந்தத்திரட்டு ஷெயாது வரலாற்றின் நான்காம்பக்கத்தில், அவ்வடமொழிச் சிவஞானபோதத்தைத் தமிழில் வார்த்திகப்பொழிப்பாக மொழிபெயர்த்து அருணந்திசிவாசாரியருக்கு அளித்தருளினர். அவர் அதற்கு வழிநூலாகச் சிவஞானசித்தியாரும் இருபாவிருபதையுமியற்றி அவைகளை மறைஞானசிவாசாரியருக் குபதேசித் தருளினர். அவர் உமாபதிசிவாசாரியருக் குபதேசித்தருளினர். அவர் வடமொழியில் பௌஷ்கராகமத்துக்கு வியாக்கியானத்தையும், தமிழிலே புடைநூலாகிய சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறிவிளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் எட்டுச் சைவசித்தாந்த சாத்திரங்களையு மற்றைப்புராணங்களையு மியற்றினர் என்பது காணப்படுகின்றது. இன்னும் ஷெ சிவஞானசுவாமிகள் பிரபந்தத்திரட்டில் குளத்தூர் சோமேசர் முதுமொழி வெண்பாவென்னு நூலுமொன்று அது திருக்குறள் நூற்றிமுப்பத்துமூன்று அதிகாரத்தில் அதிகாரத்துக் கொவ்வொரு குறளெடுத்து முதுமொழிகூட்டி 133 வெண்பாவாகப்பாடிய நூல். அவற்றுள் வீட்டுக்குக்கூறிய வெண்பாக் கள் :—

நிலையாமை.

ஆக்கையு மாயிரத்தெட் டண்டங் களுநிலையா
தூக்கியழிந் தான்சூரன் சோமேசா—நோக்கியிடில்
நில்லாதவற்றை நிலையினவென் றுணரும்
புல்லறி வாண்மை கடை.

துறவு.

கோவணமொன் றிச்சிப்பக் கூடினவே பந்தமெலாந்
தூவணஞ்சேர் மேனியாய் சோமேசா—மேவில்
இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து.

மெய்யுணர்தல்.

காரிகையா ரைப்பொன்னைக் காட்டவுங்கா மாதிமும்மைச்
சோர்விழந்துய்ந் தாரரசர் சோமேசா—வோருங்காற்
காமம் வெகுளி மயக்க மிவைமூன்றன்
நாமங் கெடக்கெடு நோய்.

அவாவறுத்தல்.

தாய்கருவில் வாழ்குழவி தாமெல்லாம் வேண்டுவது
தூயபிற வாமையொன்றே சோமேசா—வாயதனுல்
வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

ஊழ்.

முன்ன ரமண்மதத்து மூண்டரசர் பின்சைவந்
துன்னியது மென்வியப்போ சோமேசா—வுண்ணுங்காற்
பேதைப் படுக்கு மிழவூ ழறிவகற்று
மாகலூ ழுற்றக் கடை. என்பவைகளும்,

இன்னும் குமாகுருபாசுவாமிகள் சரித்திரத்தில் 6-ம் பக்கம்: மதுரையில் பின்பொருநாள் திருமலைநாயகர் வெகுநேரம்வரையில் போசனஞ்செய்யாதிருந்தமைகண்டு, சுவாமிகள், "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி, தொகுத்தார்க்குந் துய்த்த லரிது." என்னுந் திருக்குறளை யெடுத்தோத; அரசருவந்து "அரிய திருக்குறளெனப்படும் தமிழ்வேதத்தை முற்றும் ஆராய்ந்து தெளிதற்குக் காலமில்லையாதலால், அதிலுள்ள அறமாதி நான்கினையும் விளக்கிச் சுருக்கமாக ஒருநூல் செய்துதரவேண்டுமெனப் பிரார்த்திக்க, அவ்வாறே நீதிநெறிவிளக்கமென்னு நூலைச்செய்தருளினர். அவற்றுள் வீட்டுக்குரிய வெண்பாக்கள்:—

மெய்யுணர்ந்தார் பொய்ம்மேற் புலம்போக்கார் மெய்யுணர்ச்சி
கைவருதல் கண்ணுப் புலங்காப்பார்—மெய்யுணர்ந்தார்
காப்பே நிலையாப் பழிநாண நீள்கதவாச்
சேர்ப்பார் நிறைத்தாழ் செறித்து.

கற்றுத் துறைபோய காதலற்குக் கற்பினாள்
பெற்றுக் கொடுத்த தலைமகன்போன்—முற்றத்
துறந்தார்க்கு மெய்யுணர்விற் றோன்றுவதே யின்ப
மிறந்தவெலாந் துன்பமலா தில்.

கற்றுங் கறிந்தடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்
பெற்றது கொண்டு மனந்திருத்திப்—பற்றுவதே
பற்றுவதே பற்றிப் பணியறநின் றொன்றுணர்ந்து
நிற்பாரே நீணெறிச்சென் றார்.

ஐயந் திரிபின் றளந்துத் தியிற்றெளிந்து
மெய்யுணர்ச்சிக் கண்விழிப்பத் தூங்குவார்—தம்முளே
காண்பதே காட்சி கனவு நனவாகப்
பூண்பதே தீர்ந்த பொருள். என்னுமிவைகளுமன்றி

பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புனதம்
ஆவிற் கருமுனியா யானைக் கமாரும்பல்
தேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா.

என்று கவிசாகரப் பெருந்தேவனார் புகழ்ந்துகூறியவண்ணம், உலகில் வழங்கப்பெறும் நூற்களிற் சிரோமணியாயும், செந்தமிழ்க்கடலாயும், செந்தமிழ்க் களஞ்சியமாயும், செந்தமிழ்க்கற்பகமாயும், செந்தமிழ்த்திலகமாயும், புருஷார்த்தபொக்கிஷமாயும் விளங்குகின்ற மேம்பாட்டினாலே, திருக்குறள் பல்வேறு தேசத்தாராலும், சாதியாராலும், சமயத்தாராலும், தங்கடங்கள் பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு, எக்காலத்தும், எவ்விதத்தும், எள்ளளவும் தன் இயற்கை கலங்குன்றாது, குன்றின்மேலிட்ட விளக்கம்போல இந்நிலவுலகத்தில் நிலைபெற்று நிலவிக்கொண்டிருக்கிறது.

இத்தெய்வநூலுக்கு உரைவகுத்தார் "தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்; பரிமேலழகர் பருதி—திருமலையர்; மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர்." என்னும் பதின்மர் என்பர். அப்பதின்ம ருரைகளுட் சிறப்புற்றுத் தொன்றுதொட்டு ஆன்றோரால் வழங்கப்பட்டு வருவது பரிமேலழகர் உரையேயென்பர்.

யாழ்ப்பாணத்துநல்லூர் ஆறுமுகநாவலர் அச்சிட்ட திருக்குறள்மூலமும், பரிமேலழகர் உரையுமடங்கிய புத்தகத்தின் ஆரம்பத்தில், உரைப்பாயிரம் என்ற தலையங்கத்தின்கீழ், "இந்திரன்முதலிய இறைவர் பதங்களும், அந்தமிலின்பத்தழிவில் வீடும், நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரா னெடுக்கப்பட்ட பொருள் நான்கு. அது அறம், பொருள், இன்பம, வீடென்பன. அவற்றுள், வீடென்பது, சிந்தையுமொழியுஞ்செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது, இலக்கணவகையாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்." என்று வரையப்பட்டிருக்கிறது.

இது, 'பரிமேலழகர் உரைநடைதானோ? அல்லது பிறர் உரைநடையோ?' என்று ஐயுறுதற் கிடந்தரா நின்றது என்னை? இது, பரிமேலழகராற் கூறப்பட்டதாயின், நூலினது சிறப்புப்பாயிரத்துக்கும், நூலகத்துத் தாமெழுதிய வுரைநடைக்கும், வேறுபட்டு "மாறுகொளக்கூறல், மயங்கவைத்தல்" முதலிய பல்வகைக் குற்றங்களுக் கிடந்தந்து, நாயனாரது சிறப்பையும், நூற்சிறப்பையும் போக்கும் போக்குற்றதாய் விளங்குவதா யிருத்தலின். ஆதலின், இவ்வுரைப்பாயிர வுரைநடையின் ஆரம்பத்தை யொருவாறு ஆராயத்தொடங்குவாம்.

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி."

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

என்றிரு திருக்குறளையும் ஈண்டு சிந்தையுட்கொண்டு கவனிக்கவேண்டும்.

இந்திரன்முதலிய இறையவர் பதவிகளையும், அந்தமி லின்பத்தழிவில் வீட்டையும் நெறியறிந்து எய்துதற்குரியவர் மாந்தரெனவும், அவர்கள் அவ்விரண்டையும் அடையும் வழியறிந்து, அடைதற்கு உறுதியென வுயர்ந்தோரா னெடுக்கப்பட்ட பொருள், அறம் பொருளின்பம் வீடெனு நான்கெனவும், அவற்றுள் வீடென்பது சிந்தையுமொழியுஞ் செல்லாநிலைமையுடையதெனவும், அக்காரணம்பற்றி அது 'துறவற'மாகிய காரணவகையாற் கூறப்

படுவதன்றி இலக்கணவகையாற் கூறப்படாமையை யுடையதெனவும், அத னல் நூல்களாற் கூறப்படுவன வீனை அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றுபொருளுமே யாகுமெனவும், அவ்வுரைப்பாயிரமுகத்தால் நன்கு விளங்குகின்றன.

முன்னர்த்தான் கண்டறியா வொருபொருளைக் கண்டறிந்துகொள்வ தற்கு, அதிவியாத்தி. அவ்வியாத்தி, அசம்பவம் முதலிய குற்றங்களின்றிச் சிறந்த அடையாளமாய் விளங்குவதெதுவோ, அது இலக்கணம் என்று கூறப்படும். இலககணம் எனினும், இயல்பு எனினும் பொருந்தும். அது தடத்தலக்கணம், சொருபலக்கணம் முதலிய பலதிறப்படும். தடத்தலக்கண த்தைப் பொதுவியல்பு என்றும், சொருபலக்கணத்தைச் சிறப்பு இயல்பு என் றும் தமிழ்நூலோர் கூறுவர். அஃதன்றியும், விட்டலக்கணை, விடாதலக் கணை, விட்டுவிடாதலக்கணையென்னு மூன்றனு ளத்துவிதிகளின் கொள்கை யெனக்காட்டி யிவாது சிவஞானசுவாமிகள் மறுக்கின்றவிதம் வருமாறு :— சிவஞானசித்தியார் ஒன்பதாஞ்சூத்திரம் ஏழாவது செய்யுளின் விசேடவுரை, ஒருபொருள் மற்றொருபொருளாதல் யாண்டுமின்மையின், அதுநா ஞனே னென்னு மோர்வார்த்தைப் பொருள்படுமாறு யாங்ஙனமென் றாசங்கித்தார் க்கு ஒன்றுகெட் டொன்றுமெனக்கொண்டு பரிணாமங்கூறுவாரு, மதுநா னென்னுமிருபெயரும் விட்டுவிடாத ஆகுபெய (இலக்கணை) ரெனக்கொண்டு கேவலாத்துவிதங் கூறுவாருமா யிடர்ப்படுவரென்று சிவஞானசுவாமிகளான் மறுக்கப்பட்ட இவ்விலக்கணையைத் திருமூலநாயனுர் சாமவேதத்தின் சாந் தோக்கிய வுபநிஷத்தின் தத்துவமசி மகாவாக்கியத்தைத் திருமந்திரத்தில்

ஆகிய வச்சோயந் தேவதத் தன்னிடத்
தாகிய விட்டு விடாத லக்கணைத்
தாகுப சாந்தமே தொந்தத் தசியென்ப
வாகிய சீவன் பரன்சிவ னாகுமே.

என்று கூறியதில் அச்சோயந் தேவதத்தனிடத்தெனச் சோயந் தேவ தத்தனை உவமானமாகக்கூறினர். இன்னுமிலக்கணத்திரயத்தில் ; இச்சிவ ஞானபோதப் பத்தாஞ்சூத்திரத்தில் அவனே தானேயாகிய வந்நெறியேக னாகி யென்ற இலக்கணத்திற்கியைய,

விட்ட விலக்கணை தான்போம் வியமத்துத்
தொட்டு விடாத துபசாந்தத் தேதொகும்
விட்டு விடாதது மேவுஞ்சத் தாதியிற்
சுட்டு மிலக்கணு தீதஞ் சொரூபமே·

என்றுங்கூறினர். அத்துவித நூல்களெல்லாம் விட்டுவிடாத லக்கணையை யதுபோற்றன் கூறுகின்றனவென்பதை யுணராமல் ஷ்ரீ சிவஞானசுவாமிகள் சித்தியாருரையி லத்துவித சித்தாந்தத்தை மறுத்துத்தமது சித்தாந்தத்தை ஸ்திரப்படுத்தற் கதன்மேல் "அங்ஙனமிடர்ப்பட் டுரைப்பனவெல்லாம் பொருளல்லவென்பார்; பண்டைமறைகளுமது நானேனென்று பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணேயென்றார். எனவே, வேதாந்த மகாவாக்கியமுஞ் சித்தாந்த மகாவாக்கியமும் பொருளாறென்றென்பதூஉம் பெறப்பட்டது" எனக்கூறி, வேதாந்தத்திற்கு அத்துவிதிகள் கூறுமுறை தவறெனவுந் தாங்கூறுமுறையே சரியெனவுங்கூறினர். இதனைவிவாது கொள்கையெல்லாந் திருமூலநாயனர் கருத்திற்குஞ் சுருதிகட்கும் விரோதப்படுகின்றது.

சுருதிஸ்மிருதி புராணமிதிகாசமாதிகளைப் பிரமாணமாகக்கொள்ளு மிப்பரதக்கண்டத்திற் பூர்வீகமாய் விளங்கிவரும் வைதிக சமயமாகிய சமுத்திரத்தின்கண் அப்போதைக்கப்போது எத்தனையோ அவைதிக மதங்களாகிய அலைகள் தோன்றித்தோன்றித் தங்நிலைகெட் டொடுங்கினவென்பது பிரசித்தம். அப்படியே யிப்போதுஞ் சில தோன்றியிருக்கின்றன. அவற்றிலவைதிக தாந்திரிக துவிதசைவமதமென்பதுமொன்று. அது அவைதிகமாயிருந்தும், வைதிகம்போனடித்துக்கொண்டு, சுருதிஸ்மிருதி புராணமிதிகாசங்களையு மவற்றின்முடிபான மகாவாக்கியப்பொருளையு மப்பொருளின் சித்தாந்தமான அத்துவிதத்தையுந் தூஷிப்பதுமன்றி யந்நூல்களுக்குத் தப்புரை யெழுதியும் வருகின்றது.

மேற்படி சிவஞானசித்தியானது, வேதசித்தாந்தத்தை நிந்திக்குமாறெண்ணி யதற்கு மாயாவாதமென்று யாதோர் காரணமின்றிப் பேரிட்டுப் பரபக்கத்திலதைத் தூஷித்ததைப்பற்றிச் சிறிதிங்கு கூறுவாம்.

மேற்படி சிவஞானசித்தி பரபக்கம் மாயாவாதிமதம் 5-வது செய்யுளில்; அஃதன்றிப் பிரபஞ்ச மெய்போலத்தோன்றிப் பிரகாசிக்கிறபடியும் பாரமார்த்தத்திற் பொய்யாகிறபடியு மெங்ஙனமென்னில்: வெள்ளிபோலப் பிரகாசிக்குமிப்பியையும், வெள்ளியையுங் கனவிலிட்டால் இப்பிகெட்டு வெள்ளிநின்றாற்போல மெய்போலத்தோன்றும் பிரபஞ்சமும் அவிகாரமாகிய பிரமமும் பாரமார்த்தத்தில் நிரூபணஞ்செய்தால் அவிகாரமாகிய பிரமமே மெய்யாய் பிரபஞ்சம் பொய்யாகக் கொள்ளப்படும் என்றுரைப்பது வேதாந்தமெனக் கூறியிருக்கின்றனா. இவ்வுபமான மிவர்மாயாவாதமெனப் பேரிகைகொட்டிவரும் வேதாகமமுதலிய பதினன்குவித்தைகளிலுங் கிடையாது. அல்லதிவ்வுபமான மிருக்குமிடத்தை யிவரேனு மிவரினத்தவரேனு மெடுத்துக்காட்டி சத்தியவாதிகளாயினரு, மாவாருமில்லை.

இன்னுர் "துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவது வீடு." என்ருர். இதனுல் வீடு காரியப்பொருளென்றும், அதனை யடைதற்குரிய காரணம் துறவறமென்றும் முடிந்தன. "பற்றற்றகண்ணே பிறப்பறுக்கும்" எனவும், "தூஉய்மையென்ப தவாவின்மை" எனவும், "அற்றவரென்பார் அவாவற்ருர்" எனவும், "ஆராவியற்கை யவாநீப்பின் அந்நிலையே, பேராவியற்கைதரும்" எனவும் ஆசிரியர் நூலகத்துட் கூறுதலானும், "அற்றது பற்றெனி லுற்றது வீடு" என ஆழ்வார்கள் திவ்யப்பிரபந்தங் கூறுதலானும், "பற்றற்றகண்ணே பிறப்பறுக்கும்......" என்ற திருக்குறள் வுரையிலே, "இதனுல், ஒருவன் தானல்லாத வுடம்பை யானென்றும், தன்னேடியையில்லாத மனைவிமக்கள் வீடுமுதலியவற்றை யெனதென்றும் கூறும் இருவகைப்பற்றும், தேசிகர்பாற்பெற்ற வுறுதிமொழியானும் யோகப்பயிற்சியானும், அவை யானெனது தன்மைதெளிந்து, அற்றபொழுதே அப்பற்றறுதியவன் பிறப்பைபறுக்கும். காரணமற்றபொழுதே காரியமுமற்றதாமுறைமைபற்றி, பற்றற்றகண்ணே என்ருர்." என்று பரிமேலழகர் கூறுதலானும், துறவறமாகிய பற்றறுதலாலாகிய காரியம் பிறவியொழிவேயன்றி,வீடன்று. பிறவியொழியவே,அதனுட் கொள்ளிவட்டங்கறங்குதிரை சகடக்கால்வெண், குறுக்தொடியார் தயிர்மத்து நெடுந்தாளூஞ்சல்போன்று மாறிமாறிச் சுழன்று சுழன்று திரிந்துவருந்திய, ஆன்மா தன்சொரூப சாக்ஷாத்காரவடிவாய் அதாவது தனது யதார்த்த நிரதிசய இன்பமயமாய் விளங்குதலே வீடு என்பது அத்திருக்குறளின் தேற்றமாம். இதுபற்றியே ஔவைப்பிராட்டியாரும்,

ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொ ளெஞ்ஞான்றுங்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

ஷை ஔவைக்குறள் வீட்டு நெறிப்பாலில் (முதலாவது)

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன். என்றதனுனும்,

நீதிநெறிவிளக்கம்.

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு—முறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூஉங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை,

திருவாய்மொழி.

நன்றாய் ஞானங் கடந்துபோய் நல்லிந் திரிய மெல்லாமீர்த்
தொன்றாய்க் கிடந்த வரும்பெரும்பாழுலப்பிலதனையுணர்ந்துணர்ந்து
சென்றாங் கின்ப துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றா
லன்றே வப்போ தேவீடு வதுவே வீடு வீடாமால்.

அற்றது பற்றெனி, லுற்றது வீடுயிர்
செற்றது மன்னுறி, லற்றிறை பற்றே.

வைராக்கியதீபம்.

ஈதலே யறமு மநித்தமா மனைத்து மிகழ்ந்துகை விடுதலே வீடு, மாதலாற் றானக் குரியவில் வாழ்க்கை யதனையே யறமெனக் கூறிக், கோதிலா வீட்டி னிலக்கண மிருத்தல் குறித்துமெய் யுணர்வையுந் துறவு, டோதினர் வேதந் தனைத்தமி ழுருவத் தொளித்தெமக் களித்தவள் ளுவரே.

(எ-து.) யாவர்க்குங் கொடுக்குதலே தருமமும் அநித்தியமாகிய வெல்லாவற்றினையுந் துன்பமென்றிகழ்ந்து கைவிட்டு நீங்குதலே வீடும் ஆதலின் தானங்கொடுத்தற்குரிய இல்வாழ்க்கையையே அறமெனக்கூறித் துறவின்கட் குற்றமற்ற மோக்ஷலக்ஷண மிருத்தலைநோக்கி, மெய்ப்பொருளை யறிதற்கேதுவாய ஞானங்கூறி மெய்யுணர்வென்னு மதிகாரத்தையுந் துறவதிகாரத்தோடு சேர்த்துக்கூறினர். வேதார்த்தங்களைத் தமிழ்மொழிரூபத்திலே மறைத்தெமக் கருளிச்செய்த திருவள்ளுவநாயனார், எ-று. என்பதில்,

கோதிலா வீட்டி னிலக்கண மிருத்தல் குறித்துமெய்
யுணர்வையுந் துறவு டோதினர். என்றதனுனும்,

திருமந்திர நான்முகம் 28-ம் பக்கத்தில் 9-ம் தந்திரமாகிய இறுதித்தந்திரம் பஞ்சாக்கரத்தின் உட்பிரிவுகளையும், அவைகளின்மெய்ப்பொருள்களையும், அம்மெய்ப்பொருள்களை ஊன்றி இடைவிடாதுநினையும் ஆன்மாவினது அகவுணர்ச்சி மேலீட்டினால் அவ்வான்மாவின் புந்தியிற்பொழியும் இறைவனது இன்னருட் பெருவெள்ளத்தின் தன்மைகளையும், அத்தன்மைகளைச் சார்ந்து அப்பேரின்பவீட்டை அணுகும் அவ்வான்மாவுக்குப் புலப்படும் பற்பல காட்சிகளையும், அவ்வீட்டின் இறுதி இயக்கத்தையும் உரைத்துமுடிப்பதாகும். ஆதலால், வடமொழி நான்மறைகளிலோதியுள்ள இன்பப்பயனளிக்கும் பெருமாட்சியை அவர் ஓர் ஐயப்பாடுமின்றி விளங்கவைத்தாரெனக்

கொள்ளற்பாலது'' என்றும். நூன்முகம் 26-ம் ப. "திருமூலர் தென்னிந்தியாவிற்கு வந்தகாலத்துத் தமிழில் ஞானநூல்கள் மிகுதியாயில்லை'' என்றும், வேதாரண்யம் வை. வே. இராமண சாஸ்திரியவர்கள்கூறிய உறுதிமொழியானும், இவரதுவாதம் பெருங்காற்றிலகப்பட்ட விலவம்பஞ்சுபோற் பறந்தொழிந்தவாறறிக.

அவற்றுள், "வீடு என்பது இலக்கணவகையாற் கூறப்படாது." என்ற கூற்றுமுன்னரே மறுக்கப்பட்டவாறு கண்டுதெளிக.

"நூல்களாற் கூறப்படுவன, வீடொழிந்த ஏனை மூன்றுமேயாம்.'' என்றார்.

நூல் என்ற சொற்குப்பொருள் யாதோவெனின்,

பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு.

இதுவுமது.

ஊத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா—மரத்தின்
கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர்
மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு.

நூலென்றது—உவமவாகுபெயராம்.

பஞ்சுகொண்டு இழைத்து நூற்கப்படும் நூல்போலச் சொற்கொண்டு தொடுத்து அமைக்கப்படுவதும், மரம் முதலியவற்றின் கோணலைத்தீர்த்துச் செப்பஞ்செய்யும் எற்றுநூல்போல மனத்தின்கோணலைத்தீர்த்துச் செவ்வைசெய்வதும், நூலென்க. இன்னும், நூலென்றது ஒப்பினுயதோர் ஆகுபெயராம். அவ்வொப்பாயவாறென்னையெனின்: குற்றங்களைந்து எஃகின் பன்னுனைப் பஞ்சுகளையெல்லாம், கைவன்மகடூஉத் தூய்மையும் நுண்மையுமுடையவாக வோரிழைப்படுத்தினுற்போல, "வினையின் நீங்கிவிளங்கிய அறிவனுலே'' வழுக்களைந்து, எஃகிய இலக்கணங்களையெல்லாம், முதலுமுடிவு மாறுகோளின்றாகவும், தொகையினும் வகையினும் பொருண்மைகாட்டியும், உரையுங் காண்டிகையும் உள்நின்றகலவும், ஈரைங்குற்றமுமின்றி, ஈரைந்தழகுபெற, முப்பத்திரண்டு தந்திரவுத்தியோடு புணர்க்கப்படூஉந் தன்மையுடைமையானென்க'' என்று நச்சினார்க்கினியர் கூறிய வுரைகடையானுங் கண்டுகொள்க.

அத்தகைய நூலி னியல்பு யாதோவெனின்,

நூலி னியல்பே நுவலி னோரிரு
பாயிரந் தோற்றி மும்மையி னொன்றாய்
நாற்பொருட் பயத்தோ டெழுமதந் தழுவி
ஐயிரு குற்றமு மகற்றியம் மாட்சியோ
டெண்ணான் குத்தியி னோத்துப் படல
மென்னு முறுப்பினிற் சூத்திரங் காண்டிகை
விருத்தி யாகும் விகற்பநடை பெறுமே.

என்ற சூத்திரங் கூறியாங் கமைத்துக்கொள்க.

அந்நூல்தான், 'முதல்வழி சார்பு' என மூவ்வகையாகப் பகுக்கப்பெறும். அம்மூவகை நூல்களையும், மொழித்திறத்தின் முட்டறுத்துப்பொருண் முடிபுகாண்டற்கு எண்ணும் எழுத்துங்கருவிநூலெனக் கூறுவர். எண்—தருக்கநூல்; எழுத்து—இலக்கணநூல். மீண்டும் அம்மூவகை நூலுஞ்சம் முட்கொண்ட பொருண் மிகுதிப்பாட்டால், 'அறநூல், பொருள்நூல், இன்பநூல், வீட்டுநூல்' என நான்காகவும் பகுக்கப்பெறும். அறத்தினியல்புகளை விளக்குநூலை, அறநூல் என்றாற்போல, வீட்டின் இயல்புகளை யுணர்த்து நூல்களை வீட்டுநூலென்பர் மேலோர்.

'நூல்களாற் கூறப்படுவன வீடொழிந்த மூன்றுமேயாம்.' என்று கூறியதனால், அம்முப்பொருளும் அறநூல், பொருள்நூல், இன்பநூல் ஆகிய மூன்றாலும் ஓதப்பெறுதல் முறையேயாம். அம்முறையே வீடு, 'வீட்டு நூலாற் கூறப்படுமுறை யுடைத்தாகும்' என்பதுதானே போதரும். அவ் வீட்டுநூல்தான் யாவையோவெனின், தமிழ்மொழியின் மேற்கூறிய வேதங்களும்,

எந்தைசன காதியருக் கீந்தநூல் முற்காலம்
நந்திக் குரைத்தருளு ஞானநூல்—செந்துவர்வாய்த்
தேவிக் குரைத்தநூல் சீராமற் கோதியநூ
லாவிக் குரியநூ லாம்.

என்றவெண்பாவிற்சொல்லிய நூல்களும், பிறவுமேயாம். அறம்பொருளின்பம் வீடடைதல் நூற்பயனே என்றபடி நாற்பொருட்பயக்கு நலமுடையதெதுவோ அதுநூல் என்ற நூலியல்புக்கு "மூன்றுமேயாம்" என்றதுமாறுபடாது யாங்ஙனமமையும்.

முன்னர் "நூல்களாற் கூறப்படுவன எனை மூன்றுமேயாம்" எனப் பிரிநிலையேகாரம் ஈற்றுப்புணர்த்தோதிய இவரே, 'வீடு துறவறமாகிய காரணவகையாற் கூறப்படும்.' என்று உடன்பட்டாராதலின், அக்காரணங் கொண்டேனும் அவ்வீட்டியலைக் கூறுவதற்கு யாதானுமோர் நூல்வேண்டுதலின்றியமையாதாதலின், "நூற்களாற் கூறப்படுவன ஏனைய மூன்றுமென்பதோடமையாது, வீடுங்கூறப்படும்." என்றாகி 'அதிவியாத்தி' யென்னுந் தோடத்தாற்றுக்குண்டு, 'மேற்கோளழிவு' என்னுந் தோல்வித்தானமுமெய்தப்பெறுவாராயினர். ஆகலால், அத்தொடர்மொழியின் மயக்குற்றுநின்ற 'நூல்கள்' என்னும் மொழி, இருதலைக்கொள்ளியிலகப்பட்ட எறும்புபோலத் தப்புதற்கிடமின்றி யிடருறுத்துவதாயிற்று.

இனி, 'எனைமூன்றுமே' என்ற தொடர்மொழியின் ஈற்றேகாரத்தைப் புடைபெயர்த்து, வீடு என்பதனீற்றிற்புணர்த்து, 'நூல்களாற் கூறப்படுவது வீடே' எனத்தேற்றமாக்கி, ஒருபொருட் பலசொல்லினையும், ஒருசொற் பலபொருளினையும், முறையே சொற்கூட்டமும், பொருட்கூட்டமும் என்பர் இலக்கணநூலோர். வேதாகமபுராண முதலிய நூல்களையும், மாயாகாரியமாயுள்ள சகல பிரபஞ்சங்களையும், முறையே சொற்கூட்டமும் பொருட்கூட்டமும் என்பர் வீட்டுநூலோர். அறமுதலியனகூறும் அந்நான்கு நூலுள், வீட்டுநூலே சிறப்புடைத்து. ஏனை அறநூல், பொருணூல், இன்பநூலாகிய மூன்றும் அச்சிறப்பின்று. வீட்டுநூல் நான்கனுள் அறிவுநூல் சிறப்பு. சரியைமுதலிய மூன்றும் அச்சிறப்பின்று' என்று திருக்கயிலாய பரம்பரை, திருவாவடுதுறை யாதீனத்து, சாமிநாததேசிகரால் செய்யப்பட்டச்சிட்டிருக்கும், இலக்கணக் கொத்துரைப்பாயிரம் 7-வது பக்கத்திற் கூறப்பட்டிருப்பதற்கேற்ப 'நூல்களாற் சிறப்பித்துக் கூறப்படுவது வீடொன்றே' எனக் கோடற்கையப்பாடின்றென்க.

அவைபோல, நந்தெய்வநூலாகிய திருக்குறள் எப்பொருளைக் கூறுவதாகும் என்றாலோ? "அறமுதலிய நாற்பொருளின் திறங்களியாவற்றையும் ஒருசேரத் தொகுத்து, வகுத்து, விரித்துக்கூறும் வனப்பாலும், திட்பநுட்பத்தாலும், தனக்கொப்புயர்வின்றி வீறற்றுவிளங்கும் மேம்பாடுடையது" என முற்கூறியுள்ள இந்நூற்சிறப்பால் வலியுறுத்தப்பட்டிருப்பினும், விளங்குதற்பொருட்டுத் திருவள்ளுவமாலையிற் சிலவற்றைப் படியெடுத்துரைத்து மேற்சேறும்.

"அறனறிந்தே மான்ற பொருளறிந்தேம் இன்பத் திறனறிந்தேம், வீடுதெளிந்தேம்" "மும்மையின்—வீடவற்றின் நான்கின் விதிவழங்க வள்ளுவனார் பாடினர்." "பேறலரிய நான்குமொழிந்த பெருநாவலர்." "முப்பாலி னூற்பான்மொழிந்தவர்." "அறம்பொரு ளின்பம்வீடென்னு மந்நான்கின், திறன்தெரிந்து செப்பியதே." என அசரீரிநாமகள் இறைய

னூர் முதலிய கடவுளாலும், பொய்யடிமையில்லாப் புலவர்பலராலுங் கூறிய சிறப்புப்பாயிரம் அதனை வலியுறுத்தும்.

இன்னும், இந்நூலுரை பதிப்பித்தற்கு பிற்காலத்தின் மகாவித்வான்களாய் விளங்கியவர்களுள், திரிசிரபுரம் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள்—"செங்கதிரின் வள்ளுவரென்றொரு நாமம்மேவத் தோன்றி—மறையகத்தமைந்த அறமுதல் நாற்பொருளும்—சுவைநன்னுதாக — உலகுவப்பவளித்தான்." என்றும்,

ஷை பிள்ளையவர்கள் மாணாக்கராகிய தியாகராஜ செட்டியாரவர்கள்—"நான்மறைமுழங்கு நன்னுவுடைக்கடவுள்—திருவள்ளுவராய் மகிதலத்துதித்து, மக்கள் அறமுதல் நான்குந்திறமுறவுணரவும், நன்மைபெங்கணுநனிசிறந்தோங்கவும்......திருவாய்மலர்ந்து......புகன்ற, தெய்வத்திருக்குறளென்னுஞ் செந்தமிழ்வேதம்...." என்றும்,

ஷை பிள்ளையவர்கள் மாணாக்கராகிய சோடசாவதானம் சுப்பராயச் செட்டியாரவர்கள், தெய்வப்புலமைத் திருவள்ளுவர்......அறம்பொருளின்பம் வீடெனும், நாற்பொருட்பயக்கும்......திருக்குறளென்னுந் தெய்வமாமறை......" என்றும்கூறிய சிறப்புப்பாயிரச் செய்யுட்பகுதிகளாலும், இந்நூல் நாற்பொருள் உணர்த்தும் நலம்வாய்ந்ததெனவும் உணரப்படும்,

இதுகாறுங் கூறியவாற்றால், திருக்குறள் பரிமேலழகர் உரைமுகத்துள்ள உரைப்பாயிரமானது, மிகைபடக்கூறல், கூறியதுகூறல், மாறுகொளக்கூறல், வழூஉச்சொற்புணர்த்தல், வெற்றெனத்தொடுத்தல் முதலிய பலவிதகுற்றங்கள் பொதுளியதாய், நூலுக்கும், நூலகத்துள்ள உரைநடைக்கும் சிறப்புப்பாயிரத்துக்கும் முரணுற்று விளங்குவதாயிருத்தலின் பரிமேலழகர் உரைநடையன்றெனவும், அவ்வாறின்றி அவரது உரைநடையெனக்கொள்ளின், அதுதன்மாட்டுள்ள, மொழிவாக்கிய முதலியவற்றின் ஆற்றலியைபு முறைமைமுதலியவை புரைபட்டு நெறியிற்றொருவுழுகும் புன்மொழித்தொடராயும், "திருவள்ளுவர் கருத்தமைதிகருதிப் பரிமேலழகன் விரித்துரைத்தான்." என்றும், "நூலிற்பரித்த வுரையெல்லாம் பரிமேலழகன் தெரித்தவுரையாமோ?" என்றும, உலகம் புகழ்ந்கூறும் அந்நூலுரைமுழுவதும், தன்னியற்கைநலனாகிய பெருமையை யொருங்கேயிழந்து போக்குற்றவுரைநடையாயும் முடியுமெனவும், பசுமரத்தாணிபோற் பற்பல நூற்பிரமாணங்களாலும், யுக்திவகையாலும் விளக்கமாய் உணர்த்தப்பட்டமை யுய்த்துணர்ந்துகொள்க! இவ்வுண்மை இவ்வாறாக:—

இவ் வழூஉக் குழூஉ கெழீஇய வுரைநடையைப் பின்பற்றிச், சென்ற சில நூற்றாண்டாக, நமது செந்தமிழ்நாட்டிலே "சைவசித்தாந்தி" யெனப் பெயரிட்டுக்கொண்டு வெளிவந்துள்ள சிலர், தமது முன்னாசிரியருக்கும்,

அவர்கள்செய்துள்ள சமயநூல்களுக்கும் பெருமையுண்டுபண்ணவேண்டுமெ ன்னும் விருப்பத்தாலோ, வேறெதனாலோ, "திருவள்ளுவதேவர் தமது நூலாகிய திருக்குறளில், அறமுதல் முப்பாலே கூறிமுடித்தார். அவர் கூறாதுவிடுத்த வீட்டுப்பாலைக் கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியார் திரு வருட்பயனாகிய துவிதசைவநூலாற் கூறலானார்." என்றுசொல்லியும் எழுதி யும் வருகிறார்களெனக் காணப்படுகிறது. இதனை, "தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனா ரருளிச்செய்த திருக்குறட் பரிமேலழகருரை கடினமா யிருத்தலின் யாவருமுணர ஓர் கருத்துரையும், அந்நாயனார்சொல்லாது சொ ல்லி விடுத்தருளிய வீட்டுநெறியைக் கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியா ரருளிச்செய்த சைவசித்தாந்த சாத்திரத்திலொன்று திருவருட்பயனாகக் கூறியிருத்தலால், அதற்கோர் கருத்துரையும், பல்ருக்கும் உபயோகமாக வெளியிடக்கருதித் திருமயிலைச்செந்தில் வேலுமுதலியாரவர்கள் விரும்பிய வண்ணம் அச்சிட்டுமுடித்தனன். "என்றும்

அறிவிப்பில்,

உலகத்தில் மானுடதேகத்தை யெடுத்ததனாலடையவேண்டிய, அறம் பொருளின்பம் வீடெனும் புருஷார்த்தம் நான்கனுள், முதல்மூன்றையும் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் திருக்குறள்வழியாய் வெளியிட்ட னர். நான்காவதாகிய வீட்டுநெறியைக் கடவுள் குருமூர்த்தமாய் ஆன்மாக் களுக்கு விளக்குமுறையைக் கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியசுவாமிகள் ஷை திருக்குறளுக்கு நற்றுணையாகத் 'திருவருட்பயன்' என்னுஞ் சித்தாந்த நூலைக் குறட்பாவினால் செய்தருளினர்.

விஜயஸு வைகாசிமீ (ஒப்பம்)

வி. சுந்தரமுதலியார்.

என்றும் இவ்வாறு திருக்குறளும், திருவருட்பயனும், அவற்றின் கருத்துரை யுமடங்கிய பதிப்பிலெழுதப்பட்டிருக்கிறது.

இவற்றால், (1) "நாயனார் வீட்டுநெறியைச் சொல்லாதுசொல்லி விடு த்தார்" என்றும், (2) "அவர் அறம் பொருளின்பமாகிய முப்பாலே கூறி னார்" என்றும், (3) "கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியார் திருவருட் பயனென்னும் சைவசித்தாந்தநூலால் அவ்வீட்டு நெறிகூறி, திருக்குறளுக்கு நற்றுணையாய்ச் சேர்த்தருளினர்" என்றும், (4) "அவ்வீட்டுநெறிதான், கடவுள் குருமூர்த்தமாய் ஆன்மாக்களுக்கு விளக்குமுறை" என்றும் வெளி யாகின்றன.

ஆதலின், திருக்குறள் சைவசித்தாந்தநூலென முடிந்தது. என்னை? திருவருட்பயனாகிய வீட்டுநெறிநூலைத் தனக்குத்துணையாகப் பெற்றமை யின். அதுவன்றியும் திருக்குறள் வீட்டுநெறிப்படாத நாட்டுநெறியுடைய தெனவும் பெறப்படுகின்றது.

இனி, முதலில், நாயனார் எம்மதத்தை மேற்கொண்டவரென வாராயத் தொடங்குவாம். நாயனாரோ வேதப்பொருளை விரகால் விரித்துரைத்தவர் எனவும், பிறவும் அவர்சிறப்பால் முன்புவிளக்கப்பட்டிருத்தலின், வேதநெறி யொழுகிய வேதியர் என்பது வெள்ளிடைவிலங்கலாம். ஆதலால், வேதத்தைப் 'பசுநூல், பொதுநூல்' என்பனவாதிய கூறிப்புறன்பழிக்கும் துவித சைவநெறிக்கு அவர்கருத்து எவ்வாறுபொருந்தும். அவர் சமயக்கணக்கர் மதிவழிப்படாப் பெருநெறியாளரென்பது, அவர்கூறிய கடவுள்வாழ்த்தே தக்க சான்றுபகரும். *முதற்குறளால், 'இறைவன் விவர்த்தவுபாதான நிமித்தகாரணனாவான்' என்று தன்கோள்நாட்டினாராதலின், நாயனாருக்கும், துவித சைவத்துக்கும் கரும்புக்கும், வேம்புக்கும் எவ்வளவு ஒற்றுமையோ அவ்வளவு ஒற்றுமையுண்டென அறிக.

இனி, "நாயனார் வீட்டுநெறியைச் சொல்லாதுசொல்லி விடுத்தார்." என்பதை யாராய்வாம்.

நாயனார் வீட்டுநெறியைச் சொல்லாதுசொல்லினார் என்றால் அவர் அதைக்குறிப்பாற் கூறியுள்ளார் என்பது போதரும். எனவே, அவர்வீடு கூறாதில்லை யென்பதாயிற்று. ஆகவே, அப்பெருநாவலரால் கூறப்பட்டதொன்றைக் கொற்றங்குடியார் கூறவேண்டாவாயிற்று. அற்றன்று, நாயனார் குறிப்பாக்கூறியதைக் கொற்றங்குடியார் வெளிப்படையாச் சொன்னாரெனின்,—அத்தெய்வப்புலவரால் வெளியிடமுடியாதொன்று கொற்றங்குடியார்மாத்திரம் எவ்வாறு வெளியிடக்கூடும்? அறம்முதலிய மூன்றும்வெளிப்படுத்தியநாயனார், வீட்டைக் குறிப்பாக்கூறக் காரணமென்ன?" என்னுமாசங்கைகள்நிகழும். அவ்வாறு குறிப்பாலுணர்த்தினாரெனின், "அறனறிந்தேம்......வீடுதெளிந்தேம்" என்ற சிறப்புச்செய்யுளில் அறமுதல் மூன்றுமறிந்தேம், வீடுதெளிந்தேம் அதாவது தெளிவாய், விளக்கமாய்த் தெரிந்தேம் என்னும் பொருளுக்கு முரணுறுமெனக்கொள்க. அவர் நாற்பொருளுமொருங்கே வெளிப்படையாய்க் கூறியுள்ளாரென்பது முன்பு தெளிவாய் விளக்கப்பட்டிருத்தலின், அவற்றை யாய்ந்தறிக.

இனி, "கொற்றங்குடியார் திருவருட்பயனென்னும் சைவநூலைச் செய்து, திருக்குறளுக்கு நற்றுணையாய்ச் சேர்த்தார்" என்றார். இவ்வாறு நம்நண்பர் கூறுவது, உலகம் நகையாடற்கிடனாம். திருக்குறளானது எல்லாப்பொருள்களையுந் தன்னகத்துக்கொண்டு, எப்பாஷையிலுமுள்ள எவ்வித நூல்களுக்கும் பெருந்துணையா யிருந்துகொண்டிருக்க, அது வேறுநூலொன்றைத் துணைக்கொண்டது என்றால் யாவர்தான் நகையார். பூவெனப்படு

---

* இதனை முதற்குறள் வாதமுதலிய துவித சைவகண்டன நூல்களா லாய்ந்துணர்க.

வது பொறிவாழ்பூவேபோல், பாவெனப்படுவது வள்ளுவர் வெண்பாவே யென்பது ஆன்றோர் வழக்கு. ஆதலால், அத்தெய்வப்புலவருக்கும், அவரது நூலுக்கும் வேறுதுணைகூறுவது பேதமையினும் பேதமையாவதுமன்றி, ஆன்றோர் ஆணைவழிதப்பிய அபராதமும் ஆகும். அப்படிக்கூறுந்துணையும், அணுவுக்கும், அண்டத்திற்கும், அறுகுநுனி பனித்திவலைக்கும் அலைவீசும் ஆர்கலிக்கும் துணைகூறத்தொடங்கியதாய் முடியும்.

இனி, "அவ்வீட்டுநெறிதான் கடவுள் குருமூர்த்தமாய் ஆன்மாக்களுக்கு விளக்குமுறை" என்றார். "வீடாவது அந்தமி லின்பத்தழிவின்மையுஞ், சிந்தையுமொழியுஞ் செல்லாநிலைமையுமானது" என உரைப்பாயிரங் கூறுகிறது. இவர் "கடவுள குருமூர்த்தமா யான்மாக்களுக்கு விளக்குமுறை." என்கிறார். சிந்தையுமொழியுஞ் செல்லாநிலைமையுடையதை ஆன்மாக்களெவ்வாறறிதற்கேலும்? கொற்றங்குடியார் விளக்குகின்ற அம்முறையிலக்கணவகையால் விளக்கினாரா? காரணவகையால் விளக்கினாரா? இலக்கணத்தால் விளக்கினாரெனின்: நன்றுகூறினாய். அவ்விலக்கணம் தெய்வப்புலவருக்குத் தெரியாதிருந்ததென்னோ? கொற்றங்குடியார் மாத்திரம் அவ்விலக்கணமெவ்வாறுணர்ந்தார்? அற்றன்று. வீடு காரணவகையாற்றான் கூறப்படுமியல்புள்ளது. ஆதலால், கொற்றங்குடியார் அவ்வகையிற் கூறினார் எனின், அவ்வாறுகூறியது தொகுத்தா? வகுத்தா? விரித்தா? தொகைவிரி செய்தா? மொழிபெயர்த்தா? என்று நிகழுங்கடாக்களுக்கு யாது விடையிறுப்பாய்? முறையின்றித் தலைமயங்கிக்கிடந்த வீட்டினியல்புகளையெல்லாம் முறைப்படுத்தி யுலகுக்குபகரித்த நாயனாரது பேராற்றலறியாய் போலும். உதாரணமாக:—தவத்தி னியல்புகளையெல்லாம் "உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை, யற்றே தவத்திற் குரு." என் றிருமொழியுளடக்கிக் காட்டியிருக்கும் நாயனார் திட்பநுட்பம் நாமா அறிய வல்லேம்? நாயனார் கூறியிருக்கும் வீட்டுநெறி பனையொத்து விளங்குகிறது. கொற்றங்குடியார் கூறியது ஒருதினையிற் பதினாயிரங்கோடியி லொருபங்கு மியலாது. அவ்வாறு வீட்டுநெறியை விளக்கவந்த திருவருட்பயனிலுள்ள பத்ததிகாரமும், திருவள்ளுவ ரிணைபடியில் அடங்குவதாயிருக்கின்றது. எவ்வாறெனில்? பதிமுதுநிலை முதலியன கடவுள் வாழ்த்திலும் அருளுறுநிலைமுதலியன அருளுடைமையிலும், அறியுநெறி மெய்யுணர்தலிலும், அணைந்தோர் தன்மை நீத்தார் பெருமையிலும, உள்ள ஒருபாவின் சிலசீரின், ஏகதேசநிலையைத் துணையாய்ப்பற்றி, மலையையடைந்த அணுப்போலும் மறைந்தொழிவதாகும். இதனால், திருவருட்பயன், முதல்வழி சார்பு என்னும் யாதொரு நிலையும்பெறாது, அந்தரநிலையை யடையத்தக்கதாய் முடிந்தது. வடவானலத்துக்குத்துணையாய் மசகத்தைச் சேர்த்தாற்போல திருக்குறளுக்குத் துணையா யித்துவிதநூலைச் சேர்த்துத் தன்னூலின் உருவையுங் காணுவொருவராய் முடிந்தார்.

இதுகாறுங்கூறியவாற்ருல், நாயனுர் வேதவழிவந்த வேதியரெனவும், அவரது நூல் அறமாதி நாற்பொருளையும் ஒருங்கே யொருதன்மையா யுணர்த்திநிற்பதெனவும், கொற்றங்குடியாரும், அவர்செய்த திருவருட்பயனென்னும் நூலும், நாயனுருக்கும், அவர் வாய்மொழி மாண்புக்கும் அணுத்துணையுந் துணையாகாவெனவும், அத்தகைய திருவருட்பயனும், நாயனுரது ஈரடியுளிரண்டொருசீரு ளிரும்புண்ட நீர்போற் சுவறிச் சொருபமற் ருெழியத்தக்கதெனவும் விளக்கப்பெற்றன.

ஆதலின், திருக்குறளையும், திருவருட்பயனையுஞ்சேர்த்துப் பதிப்பித்த வி. சுந்தரமுதலியார் கூற்று, கூற்றுண்டொழிந்தவாறறிக!

அருந்தமிழுணர்ந்த அறிஞர்காள்!

வீடொன்று பாயிர நான்கு விளங்கற
நாடிய முப்பத்து மூன்ருென்றாழ்—கூடுபொரு
ளெள்ளி லெழுப திருபதிற் றைநதின்பம்
வள்ளுவர் சொன்ன வகை,

என்று பொய்யடிமையில்லாப் புலவர்மணிகளுள் ஒருவராகிய சிறுமேதாவியார்கூறிய இச்சிறப்புச் செய்யுளானது, திருக்குறளின் பால்கட்கு அதிகாரவரையறை யுணர்த்துகின்றது.

இதன்தொடக்கத்தில், "வீடொன்று பாயிர நான்கு" என்றது, வீட்டினிபல்புகளெல்லாம் பொதிந்துவிளங்கும் பாயிரமானது நான்கதிகாரமுடைத்து. ஒன்றுதல்—பொருந்துதல். இனி, வீடு—வீட்டி னியல்புணர்த்தும், ஒன்று—ஒருபால், பாயிரம் நான்கு—பாயிரமாகிய நான்கதிகாரமுடைத்து என்றுங்கூறத்தகும். என்னை? இப்பாயிரமானது, நூற்குப்புறவுரையாகிய பொதுப்பாயிரம் சிறப்புப்பாயிரம்போலாது, நூல்நுதலிய பொருள்கள் நான்கனுள் அறத்தின்பகுதியாகவே முடிதலின், பிறராற்கூறப்படாது, நூலினகத்துறுப்பாக ஆசிரியராற் கூறப்பட்டது. இது அறத்தின் பகுதியாகவே முடிதலைத் திருவள்ளுவமாலையில், தொடித்தலைவிழுத்தண்டினர், "அறநான்கு" அதாவது, அறததுப்பாலினுட், பாயிரம் இல்லறம், துறவறம், ஊழ் என்னும் நான்கு பிரிவுகளுள்ளன என்றும், எறிச்சலூர் மலாடனுர், "பாயிர நான்கு......அறத்துப்பால் நால்வகை......" என்றும், மதுரைப்பெருமருதனுர் "அறம் முப்பத்தெட்டு..." என்றும் கூறியவாற்ருற் றெளியப்பெறும். இப்பாயிரம் அறத்தின் பகுதியைக் கூறியதெனவே, அதன்பயனுகிய வீட்டியல்புகளைக் கூறியதென்பது சொல்லாமலே போதரும். என்னை? ஆசிரியர் தொல்காப்பியனுர் செய்யுளியலிலேகூறிய "அந்நிலை மருங்கி னறமுத லாகிய, மும்முதற்பொருட்கு முரியவென்ப" என்ற 106-வது சூத்திரவுரையில், உச்சிமேற் புலவர்கொள்

நச்சினார்க்கினியர், "உலகியற்பொருள் மூன்றனையு மிவையெனக்கூறி, அவற்றை விடுமாறுங்கூறவே, வீடுங்கூறிற்றாம்" என்று கூறிய வுரைகடையாற் கண்டுதெளிக. இன்னும், அறமுதலிய மூன்றினியல்பெல்லாம், அவ் வீட்டினகத்தே யடங்குவனவாயிருத்தலின், அதனை வலியுறுத்தற்கு 'வீடொன்று பாயிரம்' என்றுரெனினும் பொருந்தும். எவ்வாறெனில்? மனைவி, மக்கள், தாய், தந்தை, சகோதரர் முதலிய உயிர்ச்சார்பு; புவி, தனம், தானியம்; ஆடை, ஆபரணம், ஆடு, மாடு, அடிமை முதலிய பொருட்சார்பு ஆகிய சர்வ சங்கபரித்தியாகவாயிலாய், உயிர்நித்திய பூரணநிரதிசயானந்த சொரூபமாய் விளங்கிநிற்றலே வீடென்று மேலோர்கூறுவர். தருமமாவது பெரும்பான்மையுந் தானந்தவமாகிய இரண்டினு மடங்கும். அவற்றுள், உடல்பொருளாவியாகிய யாவற்றையுந் தன்னையாட்கொண்ட குருமூர்த்திக்குச் சர்வசுதந்தரமாகத் தத்தஞ்செய்தலைவிட மேலான தானமுமில்லை. அதனால், தற் சுதந்தரமின்றி விளங்குந்தன்மையினு மேலான தவமுமில்லை. உலகத்துப் பொருள்களெல்லாம் ஓர் காலத்துத்தோன்றி நசிக்கும் அநித்தியத்தன்மையுடைமையால், எக்காலத்தும் அழிவின்றிவிளங்கும் வீடே சிறந்த பொருளெனபது 'சிறப்பீனும்......' என்று கூறுமாற்றுற் பெறப்படும். உலக வின்பமெல்லாம் தோற்றக்கேடு, உயர்வு, தாழ்வு முதலியன வுடையவாய்த் துன்பத்துக்கேதுவாகு மதுபோலாது, காலத்தினுலுந் தேசத்தினுலுங் கண்டிக்கப்படாத, நித்தியநிரதிசயானந்த சொரூபமாய்விளங்கும் வீட்டின்பமே மிகமேலான வின்பமென்று மேலோர் கூறுவர்.

இவ்வாற்றால், அறம் பொருளின்பமாகிய மூன்றின் திறனெல்லாம் இவ்வீட்டினகத்தே விளங்குவனவேயன்றிப் பிறிதின்றெனக் கடைப்பிடிக்க உதாரணம்:—

அறம்பொரு ளின்பம்வீ டாயவோர் நான்கின்
திறந்தெரிந்திங் கொன்றாக்கிச் சிந்தை—கறங்கென்ன
வாடாது நிற்றற் கருநெறியெல் லாமுறையிற்
கோடா தளிப்போன் குரு.

இன்னும், அறத்துப்பால் கூறுமவையெல்லாம், பாயிரத்தின் அறன்வலியுறுத்தலி னடங்குதலாலும், அவ்வறனே மற்றைப்பொரு ளின்பங்கட்குக் காரணமாதலாலும், அவ்வறன்முதலிய மூன்றும் வீட்டினகத்தே யடங்கிநிற்றலானும், 'வீட்டியல்பு ஒன்றியபாயிரம்' என்றும்.

இன்னும், "கோதிலா வீட்டினிலக்கணமெல்லாந், துறவூடோதினர்" என்று பிறசான்றோர் கூறுமாற்றால், வீட்டினியல்புகளெல்லாம பொலிந்து விளக்கும் மெய்யுணர்வு, துறந்தார் மாட்டுள்ளதாதலின், அவரது அதிகாரத்

தைத் தன்னகத்துக்கொண்டு விளங்குவது பாயிரமாதலால், "வீட்டினியல்பு பொருந்திய பாயிரம்" என்ரும்.

இதுகாறுங்கூறியவாற்ருல், தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனர், தனது வாயுறைவாழ்த்தாகிய திருக்குறளினிடத்தே, "அறம் பொருளின்பம் வீடு" என்னும் உறுதிப்பொருள் நான்கினியல்புகளெல்லாம், குன்றக்கூறல் முதலிய குற்றங்களுக்கிடந்தராது நிறைந்துவிளங்குகின்றனவென்பது வச்சிரஸ்தம்பம்போல் நிலைநிறுத்தவாறறிக,

இவ்வாறே, சைவசித்தாந்திகளென்னுந் துவிதமதவாதிகள், முன்னோர் நூலின் முடிபொருங்குணராது, தத்தம் வாய்வந்தவாறே, நூலியல்பையும், உரையையும், பிறழக்கொண்டுபேசியும், எழுதியும் வருவதைக்கண்ணுற்று, அவர்களது திரிபுணர்ச்சியை மாற்றுவான்கருதி, அவர்கள் சிரமேற்கொண்டொழுகும் தென்மொழிச் சிவஞானபோதமாகிய நூலின் மூலத்தின் உண்மையுரை யொன்றெழுதி வெளியிடலாயினேன். பூரணகல்வியும், பேரறிவும்வாய்ந்த பெரியோர்கள், செய்தற்கரிய இதனைச்செய்தற்கு, அத்தகைய அறிவாற்றல் ஒருசிறிதும் அடையப்பெருத அடியேன் செய்துள்ள இவ்வுரையகத்துக் காணப்படும் குற்றங்களைந்து, குணங்கொண்டொழுகுதல், கற்றறிந்த மாந்தர் கடமையாமெனப் பன்முறையும் பிரார்த்திக்கின்றேன்.

வெண்பா.

தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளா
லான வறமுதலா வந்நான்கு—மேனோருக்
கூழி னுரைத்தாற்கு மொண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னாற்று மற்று.

வாயுறைவாழ்த்து.

எப்பொரு ளெத்தன்மைத்தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

இன்னும், ஆடுநனையுதென்று நரி கண்ணீர்விட்டழுகுதென்று கூறும் பழமொழிக்கும்,

குட்டித் திரட்காடி யாறெழுகக் கோன்குதித்துக்
கட்டிப் புதைந்த கதையாகுந்—துட்டமலப்
பித்திலே மூத்தவர்க்குப் பேய்பிதற்றும் பேதையர்கள்
புத்திபோற் காட்டும் பொருள்.

என்னும் வெண்பாவிற்கு மிலக்கியமாகச் சிவஞானசித்தியார் :

8-ம் சூத்திரம். 19-ம் செய்யுள்.

புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம

வறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து
மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்து

சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேதச்
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்

திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்.

என்னுஞ் செய்யுளுரையில், "சீவர்கள் பிறந்திறவாப் பெருவாழ்வாகிய பேரின்பமுற்று வாழவேண்டுமானால், புறப்புறச்சமயம், புறச்சமயம், அகப்புறச்சமயம், அகச்சமயமென்னு மிருபத்துநான்கு சமயங்களிலும் புகுந்துநின்று அங்கங்குள்ள விதிப்படி மேன்மேன் மதங்களை யிகழாமலொழுகியும், தருமசாஸ்திரங்களையும், நான்காச்சிரமங்களையும், அரியதவங்களையும், அறுபத்துநான்கு கலைஞானங்களையும், நான்குவேதங்களையும், பதினெண் புராணங்களையும். வேதார்த்தமாகிய நூற்றெட் டுபநிடதங்களையும், அவைகளின் பொருளைப் பன்முறை யமுந்தநோக்கி யாராய்ந்து முன்பின் விரோதம் வாராமற் சமன்வயஞ் செய்தறிந்தும்; இவ்வரிசையில் வழுவாதுசென்றாற், சித்தாந்தசைவமார்க்கத்தி லணுகப்பெறுவார்கள். இதிற் சரியை கிரியை யோகஞ்செலுத்தியபின சிவஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்களென்றும், நாம் பிரமமென்னும் ஏகான்மவாதிகட்குச் சிலவுபநிடதங்களும், தங்கட்குப் பலவுபநிடதங்களும், தங்கள், தங்கள் கொள்கைக்குத்தக்கபடி பொருள்கொண்டு மகிழ்தற்கிடந்தந்து நிற்கின்றதென்றும், நீதிநெறியினிற்கு மூலகோரும், ஞானநெறியினிற்கு முயர்ந்தோருமாகிய இருவரு முய்தற்பொருட்டு வேதத்தையும்; ஞானநெறியினிற்போர் மட்டுமுய்தற்பொருட்டு ஆகமத்தையுமருளிச்செய்தனனென்றும், உபநிடதங்கள் பலகடவுட்கும் பரத்துவங்கூறுதலால், சிவனொருவனுக்கே பரத்துவங்கூற வாகமத்தையருளினனென்றும், வேதத்துக்கு விரித்தியுரையாகிய பாஷ்யம்போல்வது ஆகமமென்றும், 14-வது செய்யுளில், "அருமறையாகம முதனூலனைத்து முரைக்கையினு" லென்றும், 13-வது செய்யுளில் "ஓதுசமயங்கள்பொரு ளுணருநூல்களொன்றோடொன்றொவ்வா" தென்றும், "நீதியினுலிவையெல்லா மோரிடத்தே காண நின்றயாதொருசமய மதுசமய" மெனவும், "ஆதலினுனிவையெல்லா மருமறையாகமத்தே யடங்கியிடு" மென்றும், 15-வது செய்யுளில்,

"வேதம் உலகர்க்கும் ஞானதிகாரிகளுக்குமுரித்தாய் பல கடவுட்கும் பரத்துவங் கூறுதலினல் பொதுவும்" "ஆகமம் ஞானதிகாரிக்கே யுரித்தாய்சிவ பெருமானுக்கே பரத்துவங் கூறுதலினல் சிறப்பு" மாமென்றும், வேதத்தின்முடிவான பொருளைச்சொல்லும் சிவாகமம் சித்தாந்த மெனப்படுமென்றும், தாயுமானர் சைவசமயமே சமயமென்று சிறப்பித்துக்கூறினரென்றும், இன்னுமவரே மற்றை யெண்ணிறந்த சமயங்களெல்லா மிவரது சைவசமயத்திற்புகுதற்குச் சௌபானங்கள் (படிவரிசைகள்) எனக்கூறியிருப்பதாகவும், "இயல்பென்றுந் திரியாம லியமமாதி யெண்குணமுங் காட்டியன்பாலின்ப மாகிப், பயனருளப் பொருள்கள்பரி வாரமாகிப் பண்புறவுஞ் சௌபான பக்ஷங்காட்டி, மயலறுமந் திரஞ்சிக்ஷை சோதிடாதி மற்றங்க நூல்வணங்க மௌனமோலி, யயர்வறச்சென் னியில்வைத்து ராஜாங்கத்தி லமர்ந்ததுவை திகசைவ மழகிதந்தோ" என்னுஞ்செய்யுளையு மெடுத்துக்காட்டினர்.

இச்செய்யு ளிவர்கூறிய சமயங்களைச் சௌபானமாகக்கூறுமற், சரியையாதியை யங்ஙனம் படியாகக்கூறியதால் மேற்கோளழிவும், தமது சித்தாந்த சைவத்தை சிறப்பிக்கவேண்டுமென்னு மிச்சைகொண்டு, வேதாந்தமாகிய வைதிகசைவத்தைச் சிறப்பித்தமையால் வேறுமேற்கோளுமாக முடிந்ததுமன்றி, 'அழுக்காறுடையார்க் கதுசாலுமொன்னர், வழுக்கியுங் கேடீன்பது' என்றும், "நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றி, குற்றமுமாங் கேதரும்." என்றுங்கூறிய குற்றத்திற்கிவரை யிலக்காக்கிவிட்டது. ஷெ தாயுமானவரைக்கொண்டே மேற்கோளழிவென்பதை யிவர்க்கு வலியுறுத்துதும்.

போனக மிருக்கின்ற சாலையிடை வேண்டுவ புசித்தற் கிருக்குமதுபோற், புருஷர்பெறு தர்மாதி வேதமுட னாகமம் புகலுமதினலாம் பயன், ஞானநெறி முக்யநெறி காட்சியநு மானமுதனைவிதங்க டேர்ந்து, நானு னெனக்குளறு படைபுடை பெயர்த்திடவு நான்குசா தனமு மோர்ந்திட், டானநெறி யாஞ்சரியை யாதிசோபானமுற் றனுபக்ஷ சம்புபக்ஷ, மாமிரு விகற்பமு மாயாதி சேவையு மறிந்திரண் டொன்றென் னுமோர், மானத விகற்பமற வென்றுநிற் பதுநமது மரபென்ற பரமகுருவே, மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன் மரபில்வரு மௌன குருவே.

சிற்சுகோதயவிலாசம்.

"ஐவரென்றபுல வேடர்........மெய்வருந்துதவ மில்லை நற்சரியை கிரியை யோகமெனு மூன்றதாய், மேவுகின்றசவு பானநன்னெறி விரும்ப வில்லையுல கத்திலே, பொய்முடங்குதொழில் யாததற்கல சாரதித்தொழி னடத்திடும்" என்றும், "யோகியர்க்கே ஞானமொழுங்காம்பே ரன்பான

தாகியரும் யோகமுன்னே சார்ந்தோர். விரும்புஞ்சரியைமுதன் மெய்ஞ் ஞானநான்கு, மரும்புமலர் காய்கனிபோ லன்றோபராபரமே.'' என்றுஞ் சரியையாதியை சௌபானமாகக் கூறுதலின் மேற்கோளழிவாயிற்று.

பூர்வத்தில் சமயங்களாறுவகையாமென்பதற் குதாரணம்.

திருமந்திரம்.

ஒன்றதே பேரூர் வழியதற் காறுள
தென்றதே போலு மிருமுச் சமயங்கள்
நன்றிது தீதிது வென்றுரை மாந்தர்கள்
குன்று குரைத்தெழு நாயையொத் தாரே.

முதலொன்று மானை முதுகுடன் வாலுந்
திதமுறு கொம்பு செவிதுதிக் கைகால்
மதியுட னந்தகர் வகைவகை பார்த்தே
யதுகூற லொக்கு மாறு சமயமே. என்றும்,

பட்டினத்தார்.

அன்றென்று மாமென்று மாறு சமயங்க
ளொன்றேடொன் றெவ்வா துரைத்தாலும். என்றும்

தாயுமானர்.

"மாறுபடு தர்க்கந் தொடுக்கவறிவார்.........திரமென்று தந்தம் மதத்தையே தாமதச் செய்கைகொடு முளறவறிவா, ராறுசமயங்கடொறும் வேறு வேறாகிவிளை யாடுமுனை யாவ ரறிவார்'' என்றும், "பேதித்தசமயமோ வொன்றுசொன படியொன்று பேசாது'' என்றும், "ஆனமான சமயங்களாறுக்குந், தானமாய்நின்று தன்மயங்காட்டிய, ஞானபூரண நாதனைநாடியே, நீனனேனின்பர் தேக்கித் திளைக்கவே'' என்றும், பிற்காலத்தில் இச்சமயங்க ளொன்றொன்றினின்று மநேகசமயங்களாக விரிந்திருத்தலினாலும்; அவ்வச்சமயங்களும் சம்பந்தசுவாமிகள், சங்கராசாரியர் முதலியோரால் வாதிக்கப்பட்டும் ஒழிவுகூடாமல் அனந்தமான அளவைகளைக்கொண்டு நிற்கின்றமையினாலும்; "திகழ்கின்ற சமயமு மனந்த'' மென்றுங்கூறினார்.

அவிரோதவுந்தியார்.

ஒன்றோடொன் றெவ்வா மதங்களொன் றென்றினாற்
பொன்றுவ தில்லையே யுந்திபற
பொய்யென்ப தெத்தைநா முந்திபற. என்றும்

திருஞானசம்பந்தசுவாமிகள்—திருமுதுகுன்றம்—174.

மேனியிற்சீ வரத்தாரும் விரிதருதட் குடையாரும் விரவலாகா, ஊனிகளா யுள்ளார்சொற் கொள்ளாது முள்ளுணர்ந்தங் குய்மின் றொண்டர், ஞானிகளா யுள்ளார்க ணான்மறையை முழுதுணர்ந் தைம் புலன்கள் செற்று, மோனிகளாய் முனிசெல்வர் தனித்திரு ந்து தவம்புரியு முதுகுன் றம்மே,

அங்கமாறும் வேதநான்கு மோது பயனெடுமாற்
றங்கணுஞ் நேடநின்ற சங்கரன் தங்குமிடம்
வங்கமாரு முத்தமிப்பி வார்கட லூடலைப்பப்
பங்கமில்லார் பயில்புகாரிற் பல்லவ னீச்சரமே.

திருப்பரங்குன்றம்.—132.

"அங்கமோ ராறு மருமறை நான்கு மருள்செய்து."

திருவல்லம்.—149-ப.

"பெரியவன்........அரியவ னருமறை யங்கமானன்."

திருமுதுகுன்றம்.—174-ப.

"அறங்கிளரு நால்வேத மாலின்கீ ழிருந்தருளி."

திருவையாறு.—222-ப.

"நண்ணியோர் வடத்தினிழ லல்வர் முனிவர்க்கன்
றெண்ணிலி மறைப்பொருள் விரித்தவ ரிடஞ்சீர்."

திருக்கழிப்பாலை,—209-ப.

"பெரிய, மறையார் தருவாய்மையி னுப்."

புற்றர வணிந்து நீறுமெய்ப் பூசி பூதங்கள் சூழ்தர வூரூர்
பெற்றமொன் றேறிப் பெய்பலி கொள்ளும் பிரானவ னுறைவிடம் [வினவிற்
கற்றநால் வேத மங்கமோ ராறுங்கருத்தினு ரருத்தியாற் றெரியு
முற்றபல் புகழோர் சேரமமர்ம் புலியூ ருடையவர் வடதளி யதுவே.

திருநாவுக்கரசுசுவாமிகள்: திருவேகம்பம்.—518.

நல்லானை நல்லான நான்மறையோ டாறங்கம்
வல்லானை வல்லார்கள் மனத்துறையு மைந்தனைச்
சொல்லானைச் சொல்லார்ந்த பொருளானைத் துகளேது
மில்லானை யெம்மானை யென்மனத்தே வைத்தேனே.

விரித்தானை நால்வர்க்கு வெவ்வேறு வேதங்கள்
புரித்தானைப் பதஞ்சந்திப் பொருளுருவாம் புண்ணியனை
தரித்தானைக் கங்கைநீர் தாழ்சடைமேன் மதின்மூன்று
மெரித்தானை யெம்மானை யென்மனத்தே வைத்தேனே.

நமச்சிவாயபதிகம்.—522,

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கல மருமறையா றங்கம்.

திருவையாறு.—525·

"மின்னனை யுருமானைப் வேதத்தின் பொருளானைப்."

திருப்புகலூர்.—574,

"அருவரைத் தாங்கினானு மருமறை யாதியானும்."

தனி.—641.

"விண்ணகத்தான் மிக்க வேதத்துளான்."

ஆவடுதுறை.—838.

"நம்பனை நால்வேதங் கரைகண்டானை."

திருக்கஞ்சனூர்.—900.

"மூவிலைநற்சூலம்......நால்வேத மாறங்க மாயினானை"

சூதசங்கிதை.

கறைகொள்புத் தாதி மார்க்கங்க ளுந்தாங் கண்டிக்க படுவன வல்ல
வறைதருக்கத்தாலொருவனேர்மார்க்கமனுட்டிக்கினவ்வம்மார்க்கத்திற்
குறைபனு குணமா வதிற்றிட மாக வுரைத்திடப் பட்டநம் பரமன்
மறைவரு மருளான் முறைமுறை யுயர்ந்து மறைநல மார்க்கநன்
[கடைவான்.

வேதமார்க் கத்தின் முக்கியமாக விளம்பிடப் பட்டநஞ் சிவனே
நிதகன் முத்தி கொடுப்பவன் கரும காண்டத்திற் செப்பிடப் பட்ட
நாதனுஞ் சிவனன் ஞானத்திற் பத்தி நல்குவான் ஞானகாண்டத்தில்
ஓதிடப் பட்ட சிவன்ஞானமூலமாகவொண்முத்தியைக்கொடுப்பான்.

ஆரண மார்க்க மொன்றி னேனே யுண்டா கிடும்புத்தி முத்திகளும்
பூரண சிவசொரூபத்தும் பர்த சொரூபத்தும் புகல்பிர பஞ்ச
காரணத்துஞ்சேர்க்கதிச்சொரூபத்துங்கரைஞானசொரூபத்தும்வேதச்
சேரண வந்தத் தினுக்குமா றுகச் செப்பிய தென்னெனிற் கேண்மின்

மந்தமார் புத்தி யுடையராய் வல்ல மாயையான் மூடப் பட்ட
பந்தரா யினருக் கனுகுண மாகப் பகர்ந்ததல் லான்மறந் தேனுஞ்
சந்தமார்ந் துயர்ந்த பரமார்த்த மாகச் சாற்றின தில்லையா லுணர்வீர்
சுந்தநாண்மலர்ப்பூங்கருங்குழல்பாகக்கடவுடாள்கருதுமுள்ளகத்தீர்.

பற்பலகூ றுவதென்னே பாரிடத்தில் யாரேனும்
அற்பவுயி ரையுங்கொல்லா தமைதலே பெருந்தவமாஞ்
சொற்படுமு றுதிகடி தூயவுண வான்ஞானம்
பொற்பமுறை யுண்டாகு மெனப்புகலு மறைமுடிவும்.

முறையினுல கத்தொருவர்க் குதிக்குமுழுச் சிவஞான
மறைமுடிவா லுதிப்பதன்றி மற்றென்று லுதியாது
குறைவறுநற் சதுர்த்தசவித் தைகளுநனி கூறுமறை
நிறைவையனு சரித்தலினா னிகரில்பிர மாணமாம்.

ஆரணத்திற் கவிரோத வாகமச்சார் பினுஞானஞ்
சீரணவ வுதிக்குமெனச் செப்புமா லன்மறையு
நாரணனு மலர்மகனு நாடரியா னுபசிவ
பூரணனுக் காளாகிப் பொலிவுற்ற மாதவத்தீர்.

என்று கூறியதனானும் மற்றும் வருவனவற்றானுங் கண்டுகொள்க.

வாயுசங்கிதை: புராணவரலாறு.

பொன்னவிர் சடையோ னன்னவா கனனைப் படைத்துமுன் புரையற வகுத்த, மன்னிடு பதினெண் விஞ்சையு மறிய வழங்கின னன் மற்றவன் விரித்துப், பன்னிய வகையா லெவர்க்குநன் குணர்த லரிதெனப் பால்விடை யண்ணல், கன்னவி றிரடோண் மாயனை யழைத்துச் சுருங்கநீ கழறுதி யென்றான்.

ஸ்ரீ விஷ்ணு புராணம் மூன்றாம் அம்சம் ஆறாம் அத்தியாயம், சாம வேத அதர்வண வேத புராணங்களின் வரலாறு:—

ஆத்துமகோடிகள் அறியவேண்டிய சகல தருமங்களையும் பிரதிபாதிக்கின்ற சாஸ்திரங்களெவையென்றால், முன்சொல்லப்பட்ட இருக்குமுதலான வேதங்கள்நான்கும், அவற்றின் அங்கங்களாகிய சிக்ஷை, வியாகரணம், சந்தசு, நிருத்தம், சோதிடம், கற்பம் என்கிற ஆறும், மீமாம்சையும், நியாயநூலும், இதிகாசபுராணங்களும், தருமசாஸ்திரங்களுமாகிய இப்பதினான்குமாம். இவைகளுக்கு வித்தியாஸ்தானங்களென்றும் பெயர். அன்றியும், ஆயுர்வேதம் என்கிற வைத்தியசாஸ்திரமும், தனுர்வேதமென்கிற ஆயுதசாஸ்தி

மும், காந்தருவவேதமென்கிற சங்கீதசாஸ்திரமும், அர்த்தவேதமென்கிற இராஜநீதி சாஸ்திரமும் உபவித்தைகளென்று சொல்லப்படும். ஆகப்பதினெட்டுவித்தைக ளுண்டென்பார்கள்.

இந்த வித்தைகள் தவிர, வாதிகள் பிரதிவாதிகளுக்குரிய நூல்களையும், பிரதிவாதிகள் வாதிகளுக்குரிய நூல்களையும் எடுத்துக்காட்டுவது மிகவும் விசேடமாம். அது அத்வைதிகள் விசிட்டாத்துவைதிகளுடன் வாதஞ்செய்யும்போது, இராமாநுஜர் முதலியவர்கள் செய்தநூல்களைப் பிரமாணமாக எடுத்துக்காண்பிப்பதும், விசிட்டாத்துவைதிகள் சங்கராசாரியர் முதலியவர்கள் சொல்லிய நூல்களையுமெடுத்துப்பிரமாணமாகக் காண்பிப்பதுமாமென்க.

திருஞானசம்பந்தசுவாமிகள் திருமுதுகுன்றம்—173-ம் ப.

"மெய்த்தாறு......ஒத்தாறு சமயங்கட்கொரு தலைவன்."

திருவைகா—437-ம் ப.

"வேதமொடு வேள்விபலவாயின மிகுத்து விதியாறுசமய
மோதியுமு ணர்ந்துமுள தேவர்தொழ நின்றருள்செய் யொருவனிடமாம்."

திருநாவுக்கரசுசுவாமிகள் தசபுராணம்-525-ம் ப.

காலமு..மூவருருவிற்சாலவுமாகிமிக்கசமயங்களாறி னுருவாகிநின்றதழலோன்

திருமறைக்காடு—549-ம் ப.

"அங்கையிலனலும் வைத்தார் அறுவகைச் சமயம்வைத்தார்."

சுந்தரமூர்த்திசுவாமிகள் திருப்புன்கூர்—987-ம் ப.

"அறிவினன்மிக்க வறுவகைச்சமய மவ்வவர்க்காங்கே யாருள்புரிந்து."

கூர்மபுராணம் : திருக்கலியாணம்.

வேத நூல்க ளவற்றின்வழி விராட்டாஞ் சுவாயம் பூமனுமன்
னேது நூல்கள் வியாத முனி யுரைத்த நூல்க ளவற்றின்வழி
நீதி லருமா மறைக்கிழவர் செப்பு நூல்க ளனைத்துமே
நீறு நூல்க ளிவற்றின்வழி நின்றோர் நெறியி னின்றோரே.

அங்க மாறு மறைநான்கு மீமாஞ் கியமென் றருள்கொழித்துத்
தங்கு நீதி நூலொன்று புராண மொன்று தவறெறிந்து
பொங்கு தரும நூலொன்று புகன்ற வீரேழ் விஞ்சையினை
அங்க ணுலகின் றவனளித்தா னிவற்றை யுணர்ந்தோ ரறி
[வுடையோர்.

என்று கூறியிருக்கின்றவைகளை யுணருமாற்றலின்றி மனங்கொண்டபடிபேசி யெழுதிவிட்டு மேற்கோள்காட்ட விதியின்றி தாழ்வுறுகின்றனர்கள். "தன்குற்றநீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின், என்குற்றமாகு மிறைக்கு." என்னுந் திருக்குறளின்பொருளை யிவர்களறியாது போயினமைக்கு விசனமுறுகின்றேம்.

இன்னுங் கன்மம், பக்தி, ஞானமென்னு மூன்றுகாண்டப் பொருளைக் கூறும் வேதத்திற்கு வேதத்தின் ஞானகாண்டத்தை மாத்திரங்கூறும் ஆகமம் விரித்துரையாகிய பாடியமாவதெப்படி? வேதத்தில் பலகடவுட்குப் பரத்துவங் கூறியிருந்தால் அதன் பாடியமாகிய ஆகமத்திலு மப்படித்தானே கூறியிருக்கவேண்டும். அதனையிவர்கள் யோசியாமல் சிவனொருவனுக்கே பரத்துவங்கூறுவதற்கும் ஆகமததை யருளினனென்று கூறலாமா? கூறவர்தமையின் இவரது சாம்பிரதாயமும் சிவஞானபோதபாடியமும் அப்படித்தானிருக்கும். வேதத்தை ஆராய்ச்சி செய்தோர், பரமசிவனே பரமெனக் கூறியதோடு, இதரதேவதைகள் பரமன்றென நியாயவாயிலாக எவ்வளவோ காட்டியிருக்கவும் பெயர்த்தும் அங்ஙனங்கூறுவது விசாரணையின்மையேயாம். உதாரணம்:—அப்பயதீக்ஷிதசுவாமிகளியற்றிய

சிவதத்துவவிவேகம்: (சிவஞானசுவாமிகள் மொழிபெயர்ப்பு.)

விச்சுவா திகனும் விசுவசே விபனும் விமலன்நீ யேயென மறைக
ணிச்சய மாக முழக்கவு மறியா நீசர்தாம் பிணங்குவ ரந்தோ
மச்சரத்துனக்கேதீங்கிழைத்தவர்தம்வாழ்க்கையும்பயன்படாதலத்
துச்சர்சொற் கேட்டோர்க் கிறுதலே தண்டஞ் சொற்றிடு நூலெலா
[மன்றே.

முளரியோன் முதலாஞ் சுரரெலாம்பூதமுதலவற்றோடுதித்துள்ளோ
ரளவிடுந் தலைமை யாளரென் றவரை யகற்றிமால் விடையவனினையே
வளமுறுமெல்லாத்தலைமையுமுடையோன் வருமுதற்காரணனல்லோ
ருளமுறு தியானப் பொருளெனச் சிகைதேர்ந் துரைப்பவு மயங்
[குவர் சிலரே.

எந்தமதத்தினரும் வேதம் பலபொருள்கொண்டு முடிவதாகச் சொல்வதில்லை. வேதத்திற்கூறிய பொருளொன்றேயென்றும், அப்பொருளே தாங்கொண்ட கடவுளென்றுங் கூறுகின்றனர். யார்யார் என்னபேர் சொல்லிக்கொண்டாலும் அவரவர்க்கும் பரசிவன் ஒருவரே அந்தர்த வடிவமாய்நின்றனுக்கிரகஞ் செய்கின்றமையால், பரமசிவனே பரம்பொருள். சிலாரூபத்தை வணங்குவோர்க்குஞ் சிவன்வந்து அருள்செய்கின்றாரென்னில் பரமவியூகத்திற்சேர்ந்த திரிமூர்த்திகளான நாராயணன் முதலியோரைத் தியானிப்பவர்க்கு அவரிடத்தில் அந்தரியாமியாயிருக்கும் பரமசிவன் அனுக்கிரகஞ்செய்யக் கேட்பானேன்.

வேதத்தில் பலமூர்த்திகள் சொல்லியிருந்தாலும், சச்சிதானந்த நித்திய பரிபூரணப்பொருள் பலவென்று சொல்லவில்லையே. பிரமா, விஷ்ணுமுதலிய தேவதைகளை யவரவர் கருமத்துக்கும் பக்குவத்துக்குமீடாகப் பரம் போலக் கூறியிருந்தாலும், அவர்களுள் சச்சிதானந்த நித்திய நிர்மல நிர்ச்சல நிர்க்குண நிரஞ்சன நிஷ்களப்பொருளான துரியசிவன் ஒருவரேயன்றிப் பலரன்றே. இவர் நூலவிசாரணை யுடையோராதலி னிவர்புத்தியு மப்படித் தானிருக்கும்.

பரமசிவன் ராஜனைப்போன்றவர்; இதரதேவதைகள் மந்திரிப்பிரதானிகளைப் போன்றவர்கள். மந்திரிப்பிரதானிகளிடத்தில் ராஜபுத்தி வைத்தாலும் வைக்கலாம்; ராஜனிடத்தில் மந்திரிப்பிரதானிகள் புத்தி வைக்கப்படாது அங்ஙனமே பிரமாதிதேவதைகளிடத்தில் சாக்ஷாத் பரமசிவபுத்தி வைக்கலாம் பரமசிவனிடத்தில் பிரமாதிகள் புத்திவைக்கலாகாது மந்திரியாதியர்களிடத்தில் ராஜபுத்தி பண்ணுவதுபோல் விஷ்ணுவாதி தேவதைகளிடத்தில் சிவபுத்தி அதாவது பரத்துவபுத்தி வைக்கச்சொல்வதைக்கண்டு, இதரதேவதைகளைப் பரத்துவமாகச் சொல்வதுபோல் மருண்டனரோ? அல்லது வேதத்தினிடத்துள்ள துவேஷபுத்தியால் கூறுகின்றனரோ? அறியேம்! சிவதத்துவ விவேகத்திலும் அரதத்தாசாரியற்றிய சதுர்வேத தாற்பரிய சங்கிரக முதலிய நூற்களிலுங்கண்டு மருளையொழிந்து தெளிவுறுவாராக.

ஈசுரகீதை.

ஏதமுத நாரணனை யென்னிலயல் காணும்
பேதவிழி யாளர்பிற விப்பிணி யறுரே
மாதவனை யானென மனத்தினினை கிற்கும்
போதவிழி யாளர்பரி பூரண மடைந்தார்.

ஆதலி லருச்சிமினிவ் வாதியரி யானைப்
காதலொடு காண்மின்மய லாகியபல் காண்பார்
தீதுதரு மாநரகு சேர்வுறுவர் தீதா
நீதியுறு நீசரிடை யானும்வெளி நில்லேன்.

மருவற் கென்னை மனம்வைத்தோன் மாலா மிவனென் வடிவென்றே
பரவிப் பணிவா னென்றேசெம் பவளத் திருவாய் மலர்ந்தருளி
யரவிற் றுயிலச் சுதனைக மழுந்தத் தழுவ வவ்விடத்தே
காவுற் றருள வதிசயமாய்க் கண்டார் மேனி கண்டிலரால்.

இனி, அது வேறு மேற்கோளென்பது யாங்ஙனமெனின்? இருக்கு, யசுர், சாமம், அதர்வணமென்னு நான்கு வேதங்களும், பாதம், அஸ்தம்,

முகம், ஆக்கிராணம், சேத்திரம், சுரோத்திரம்போற் சந்தசு, கற்ப,வியாகரண சிட்சை, சோதிட, நிருத்தமென்னு மாறையுமங்கமாகவுடைய நூற்றெட்டுப பீடதங்களும் வணங்கும்படியாக மோனவரம்பாகிய ஞானகிரீடத்தைத் தளர் வின்றிச் சிரமேற்கொண்டு பிரமபட்டாபிஷேகத்தி னிலைபெற்றிருப்பதாகிய வேதவொழுக்கமென்னும் வைதிகசைவமானது மிக்கவழகினை யுடைத்தெனவாச்சரியங்கொண்ட தாயுமானவரது கருத்தறியாது முன்னர்த்தமது சரியைக்குத் தாழ்த்தியதைச் சிரமேற்கொண்டது தமது மதநிச்சயந் தெரியாரென்பதை விளக்கிற்று.

திருஞானசம்பந்தசுவாமிகள் : திருவீழிமிழலை—449-ப.

மண்ணின்மறை யோர்மருவு வைதிகமுமாதவமு மற்றுமுலகத்
தெண்ணில்பொரு ளாயவைபடைத்த விமையோர்கள் பெரு
[மான திடமாம்.

திருவாலவாய்—486-ப.

வேதவேள்வியை நிந்தனை செய்துழ, லாதமில்லியமணொடுதேரரை,
வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே, பாதிமாதுட னாய பரமனே,
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென், னாலவாயிலுறையுமெம்மாதியே.
வைதிகத்தின்வழியொழுகாதவக், கைதவமுடைக்காரமண்டேரரை,
யெய்திவாதுசெயத்திருவுள்ளமே, மைதிகழ்தருமாமணிகண்டனே.
(ஞாலநின்புகழே)

'மறைவழக்கமிலாத மாபாவிகள்.'

வேதாரணிய புராணம்—விசுவாமித்திரருக்கு உபதேசித்த சருக்கம்.

பக்திவிகற்பம்.

வழுவா தொழுகும் வைதிகதாந் திரிக மாகும் வழக்கதனை
முழுவாழ் வருள்வோ யுரைத்தியென மொழிவான் மொழியு
[மறைமிருதி
யெழுவா யொழுக்கம் வைதிகமா மீச னுரைத்த வாகமத்தின்
குழுவா யொழுக்கந் தாந்திரிக மவையுந் தெரியக் கூறுதுமால்.

அவற்றுள் வைதிகபத்தி.

ீறு மகத்திற் றிகழ்ந்தனவு நிகழ்த்தும் விரசை நிறைந்தனவும்
கூறு மனற்பேர் முதலாகக் கொண்டே யுத்தா ளனங்குலவப்
பேறுர் திரிபுண் டரமணிதல் பெருமா னெழுத்தஞ் சினைநவிற்ற
லாறு புனைந்தா னருச்சனையை யாற்றல் கண்டி யணிவனவே.

திருவார் கோயில் வலம்வருதல் சிவனைத் துதித்தல் சிவமதத்தி
னொருவா துகந்து பணிந்திடுத லொருவன் காதை யுருகுமன
மருவா வுரைத்தல் கேட்டல்சிவ மருவுந் தீர்த்த மகிழ்ந்தாடல்
பெருவாழ் வளிக்கு மான்பதியிற் பிறங்கல் பணியைப் பேணுதலே.

சீருத் திரத்தைத் தினஞ்செபித்தல் சிவன்ற னடியார் திருப்பூசை
நாரிற் சூழுந் திருமாலை நந்த வனமு நரையானு
மேரிற் றிகழும் பணிபணிவ தீசற் கீயுந் திறமற்றும்
வாரிற் றிகழு முலையுமையாள் பங்கன் பரமாய் மதிப்பதுவே.

அன்பும் பொறையு முயிர்க்கிரங்கு மருளுந் தீமை யகல்வனவு
மின்ப முயிர்கட் கியற்றிமறை யென்று மோதி யிசைப்பனவும்
வன்பான் மாயன் முதற்றேவர் வண்ணம் பழியா வழக்கதுவும்
பொன்பரப் சடையோன் பத்தியெனப் புகழ்வை திகமாய்ப் புகன்
[றனவே.

தாந்திரிகபத்தி.

சமய தீக்கை முதலாகத் தகவிற் சார்ந்து தகுந்தீக்கைக்
கமைய வொழுக்க மதுவாற்றி யன்பாய் பரம னடிக்கமலத்
திமைய மாதி னிருதாளு மின்பார் பூசை யியற்றிபருட்
கமையாற் பரவித்தியானித்துச் செபித்துக்காலங்கருத்துறவே.

வழியா றினையும் போனியினை வகுத்துச் சோதித் தவையாறு
முழியா முப்பத் தாறுகி யுயர்தத் துவமு மவற்றினொடுங்
கழியா வுயிரு மலமாயை கரும மிவற்றைக் கழிப்பனவு
மழியாச் சாதாக் கியமைபஞ் சாகு மகேச மறிவனவும்.

சுத்தி யிவற்றிற் கியற்றுவதுந் துரிய மிறந்த சுடரிவற்றை
வித்திற் பயிர்போல் விளைப்பதுவும் விமல மாய வனுபூதிப்
பத்திக் கடலிற் படிவதுவும் பாகம் படரச் சத்திபதித்
தத்திக் கருளு மதுவுமாற் கறையு முபாதித் திறமூன்றும்.

ஆய்ந்து பதார்த்தத் திறமூன்று மருளா லளிக்குஞ் சிவன்சத்தி
வாய்ந்த சிருட்டி யிவைமுற்று மதித்தே பரம சிவத்தோடுந்
தோர்ந்து மருவ லாகமத்திற் றுணிதாந் திரிக மெனவசிட்ட
னேய்ந்து மொழிக்குச் சிவசிருட்டி யெதுமற் றேதென் றிடவிசைப்
[பான்.

துனிதற் கரிய பரமசிவஞ் சொலின்முத் திரமாஞ் சுடரினுல
கனிநிட் களநிட் களசகள மருளார் சகள மவற்றின்முதற்
பனிநிட் களஞ்சொற் றொடர்பகன்று பரிபூ ரணமாய் நிரஞ்சனமா
யெனுதற் கரிதாய்க் குணங்குறிபொப் பெல்லை விகார மில்லதுவே.

சிவதத் துவமா மதுஞானந் திகழுங் கிரியை யிச்சையினைக்
கவவிற் சகள நிட்களமாங் கருதிற் சாதாக் கியமிதுவே
யுவமைக் கரிய சதாசிவமா யொளியார் பீட லிங்கமதாய்த்
தவமிக் கிலங்கு மைம்முகமுந் தடந்தோள் பத்துஞ் சார்ந்திலங்கும்.

(போ-ரை.) அந்நிட்கள சிவமானது ஞானசத்தி, கிரியா சத்தி, இச்சாசத்திகளோடுகூடிற், சகளநிட்கள சிவமுற்பத்தியாம்; இதுவே சாதாக்கியமாகிய சிவலிங்கவடிவம்; இச்சிவலிங்கமே சதாசிவமெனப்பட்டுப் பீட லிங்காகாரமாய், ஈசானமுதலிய வைந்து திருமுகங்களும், பத்துத் திருக்கரங்களுமாய் விளங்கும், என்பதாம்.

அன்ன வுருவின் மகேச்சுரமா மதுவே சகள மதிற்றோன்றும்
பன்னு மிருபத் தைந்தாய படிவஞ் சத்தி பரித்தவையு
மன்னுஞ் சோம தரனாதி வயங்குஞ் சத்தி யுடன்மலிந்தார்
முன்னு மகேச னம்மிசத்திற் சதமா யிரமே மொழியயுதம்.

(போ-ரை.) அச்சதாசிவத்தினின்றும் சகளமாகிய மகேச்சுரம் உற்பத்தியாகும்; அது சத்திசமேதமாய்ச் சந்திரசேகரர் முதலிய இருபத்தைந்து விக்கிரகபேதமாம். அம்மகேச்சுரனது நூற்றிலொருகூறு உருத்திரனும், ஆயிரத்திலொருகூறு விஷ்ணுவும், பதினாயிரத்திலொருகூறு பிரமாவுமாகத் தோன்றும், என்பதாம்.

நீலக் களனு முருத்திரனு நெடிய மாலு மறையோனுங்
கோலத் துதித்தா ரவர்தம்பாற் குலவுந் தேவ நராதி
சாலத் திகழ்ந்தா ரிவர்பரமன் றனையும் பூசைத்திறஞ்சார்ந்தே
யேலச் சாலோக் கியமாதி யெய்துங் கதியு மீரிரண்டே.

திருமந்திரம்.

வேதாந்தங் கண்டோர் பிரமவித் தியாதார்
நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற யோகிகள்
வேதாந்த மில்லாத சித்தாந்தங் கண்டுளோர்
சாதா ரணமன்ன சைவ ருபாயமே.

நிகண்டு 10-வது ஒலிபற்றிய பெயர்த்தொகுதி.

ஆதிநூ லெழுதாக் கேள்வி யாரண மோத்துச் சாகை
ஏதமில் சுருதி தன்னே டிருக்கிவை யேழும் வேதம்
வேதநூற் பொருளி னுமம் விதித்திடு ஞான பாகை
ஆதியாங் கரும பாகை யருத்தபா கையுமா மென்ப.

மெய்தெரி யார ணந்தான் வேதத்தின் ஞான பாகை
மையிலுட் பொருளி னுமம் மற்றுப நிடத மென்ப
வைதிகம் வேத முற்ற மார்க்கமே பார்க்குங் காலை
ஐயமி லிருக்கி னேடு பௌடிக மாதி யாகும்.

அமிர்தசாரம்—நியமம்.

தவஞ்செபஞ் சந்தோட மாத்திகந் தானஞ்
சிவன்றரு நல்விரதஞ் சித்தாந்தக் கேள்வி
யுவந்த சிவபூசை யொண்மதிநான் பத்து
நிவந்த நியமங்க ளாம்.

பெயாகராதி இரண்டாம் புத்தகம் 252-ம் பக்கம் வேதமார்க்கம்—வைதிகம். 260-ம் பக்கம் வைதிகம்—வேதமார்க்கம். வைதிக—வைதிகசைவத்தோன். வைதிகன்—வேதமுணர்ந்த பிராமணன். வைதிகாசாரம்—வேதவொழுக்கம்.

295-ம் பக்கம் ஆகமம்—தந்திரம், சிரௌதம், நிகமம், ஞானம். 663-ம் பக்கம் சைவர்—சிவசமயத்தார், விசேடதீட்சை பெற்றவர். சைவநூல்—சிவாகமநூல். சைவசாத்திரம்—சிவாகமம். சைவம்—அது உட்சமயம் ஆறினுளொன்று. (சுத்தசாதகம் ஈசனதுரைமுதல் ஆகமம் சுத்தசாதகம் 6-ம் செய்யுள்வரை.)

சைவநன் னெறியுந் தந்திர மவையுந் தற்பான் முகத்தினின் றுதிக்கும், அப்பவை நீக மும்மறை யவையுஞ் சுவாசமற் றதனினின் றுதிக்கும், உப்புமச் சிவாத்து விதநெறி யதுவு முபநிடமும்முளத் துதிக்கும், ஐபமுந் திரிவு மறவிவைக் கருத்த மறைந்திடுந் தத்துவ மசியே.

சிவஞானவள்ளலார்.

சைவஞ் சிவத்தோடு சம்பந்த மானமையாற்
சைவமே யத்துவிதஞ் சாதிக்குஞ்—சைவத்தை
வேறென்று கொள்ளற்க வேறற்ற வேதாந்தக்
கூறென்று கொள்ளுதலே கோள்.

ஆறத்துவாக்களின் விபரம்.

சித்தாந்தப்படவிளக்கம் 4-வது பக்கம் ஞானசூரியனென்னுஞ் சிவசூரியன். அவருக்கு அக்கினியிற் சூடும், பூவின்மணமும், பரிதியிற் கிரணமும் போற் பிரிவற்றுச் சமவாயமாயும், அனந்தசத்தி ரூபையாயுமுள்ள பராசத்தியென்றொரு சத்தியுண்டு. சத்தியென்றது வல்லமையை. (சூரியன், சிவன், கண்சிவன்.)

பராசத்தி = அனுக்கிரகசத்தி, ஆதிசத்தி, திரோதானசத்தி யென்று கூறி, இதற்கு அருட்சத்தி யொன்றுமே மற்றநான்கு கிருத்தியங்களுக்குங் காரணமானதென்றும், பராசத்தியொன்றே வியாபாரபேதத்தா லிவ்வாறு நாமபேதத்தை யடைவதேயன்றி வஸ்துபேத மில்லையென்றதினாலும், பராசத்தி சிவத்தில் சமவாயமென்றபடிச் சிவம் அபின்ன நிமித்தோபாதான காரணமென்பதாயிற்று.

சுத்தாத்துவாக்களாவன :—சுத்தமாயையிலுள்ள கலை, தத்துவம், புவனம், வன்னம், பதம், மந்திரங்களாம்.

மிச்சிராத்துவாக்களாவன :—அசுத்தமாயையிலுள்ள கலாதிகள்.

அசுத்தாத்துவாக்களாவன :— பிரகிருதி மாயையிலுள்ள கலாதிகள். தாத்துவிகமாகிய தத்துவங்கள் சரீராதிகள்போல உடனே யழிவதின்றிப் பிரளயகாலம்வரையு நிலையுறுதலான் தத்துவமெனப்படும்.

தத்துவங்கள் அகக்கருவி முப்பத்தாறும், புறக்கருவி அறுபதும் ஆக 96-மாம். அகக்கருவிகளாவன :— ஆகாயாதி பஞ்சபூதமும், சத்தமுதலிய தன்மாத்திரையைந்தும், வாக்காதி கன்மேந்திரியமைந்தும், சுரோத்திராதி ஞானேந்திரியமைந்தும், அந்தக்கரண சதுட்டயமும், காலமுதலிய வித்தியா தத்துவமேழும், சுத்தவித்தை, ஈஸ்வரம், சாதாக்கியம், விந்து, நாதம் என்னுஞ் சிவதத்துவமைந்தும், ஆக 36-ம். புறக்கருவிகளாவன :—பஞ்சபூத காரியமாகிய 25-ம், வசனாதியைந்தும், வாயு பத்தும், நாடி பத்தும், வாக்கு நான்கும், ஏடணை மூன்றும், குணமூன்றுமென அறுபதுமாம்.

தத்துவங்களின் தோற்றம்:— பரமசிவத்தினருளினாலே குடிலையில் நாதமும், நாதத்தில் விந்தும், விந்துவிலிருந்து அக்ஷரங்களும் தோன்றுமென்பது. வரிவடிவில் புள்ளியிலிருந்தும், ஒலிவடிவில் தொனியின் வட்டத்திலிருந்துஞ் சகலவெழுத்துக்களுந் தோன்றுவதை, "அகரமுதல வெழுத்தெல்லா" மென்னுந் திருக்குறளானும் அறிக. அகரம் = நாதம்.

கலைகளாவன:— முற்கூறிய முப்பத்தாறு தத்துவங்களும் அடங்கிய மாயாகோளமானது நிவிர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியாதீதகலையென ஐந்தாகப் பிரிக்கப்படும்.

பிருதிவிதத்துவ மொன்றைக்கொண்டது நிவிர்த்திகலை, பிரமா—அதிதெய்வம். அப்புதத்துவமுதல் பிரகிருதி குணதத்துவமீறாகவுள்ள தத்துவங்கள் முப்பத்திரண்டுங்கொண்டது பிரதிட்டாகலை. விஷ்ணு—அதிதெய்வம். காலமுதல் மாயையீறாகிய வித்தியாதத்துவ மேழுங்கொண்டது வித்தியாகலை. உருத்திரன் = அதிதெய்வம். சிவதத்துவமைந்தில் சுத்தவித்தை, ஈஸ்வரம், சாதாக்கியமென்னு மூன்றையுங்கொண்டது சாந்திகலை. மகேஸ்வரன்—அதிதெய்வம். சத்தி, சிவம் (விந்து, நாதம்) இரண்டுங்கொண்டது சாந்தியாதீதகலை. சதாசிவம்—அதிதெய்வம்.

புவனங்கள் இருநூற்றிருபத்தினாலும், முப்பத்தாறு தத்துவங்களினுநிற்குமுறையாவன:—பிருதிவிதத்துவத்தில் 108, அப்பு தத்துவத்தில் 8, வாயுவில் 8, ஆகாயத்தில் 8, அகங்காரத்தில் 8, புத்தியில் 8, சித்தத்தில் 8, புருடனில் 6, அராகத்தில் 5, வித்தையில் 2, நியதியில் 2, காலத்தில் 2, மாயையில் 8, சுத்தவித்தையில் 9, ஈஸ்வரத்தில் 8, சாதாக்கியத்தில் 1, விந்துவில் 5, நாதத்தில் 10, ஆக 224 புவனங்கள்.

வன்னம் (அக்கரங்கள்)—முன்னற்கூறியபடி நாதத்தின் காரியங்களாகும். அவை அ முதல் அஃ வரை உயிரெழுத்துப்பதினாறும், க முதல் க்ஷ வரை மெய்யெழுத்து முப்பத்தைந்தும், ஆக ஐம்பத்தொன்று ஆகும். உயிரெழுத்துப்பதினாறும் சாந்தியாதீதகலையிலும், கவ ங என்னுமூன்றுஞ் சாந்திகலையிலும், வ: முதல் ஞ வரை எழும் வித்தியாகலையிலும், ட முதல் ஊ வரை இருபத்தினான்கும் பிரதிட்டாகலையிலும், க்ஷ ஒன்றும் நிவிர்த்திகலையிலும் அடங்கும்.

பதம் 81: ஓம், வ்யோமவ்யாபிநே, வ்யோமரூபாய, ஸர்வவ்யாபிநே, சிவாய, அநந்தாய, அநாதாய, அநாச்ரிதாய, த்ருவாய, சாச்வதாய, யோகபீடஸம்ஸ்திதாய, நித்யயோகிநே, த்யாநஹாராய, ஓம் நமச்சிவாய, ஸர்வப்ரபவே, சிவாய, ஈசானமூர்த்தாய தத்புருஷவக்த்ராய, அகோரஹ்ருதயாய, வாமதேவகுஹ்யாய, ஸத்யோஜாதமூர்த்தயே, ஓம் நமோநம, குஹ்யாதிகுஹ்யாய, கோப்த்ரே, அநிதநாய, சர்வயோகாதிக்ருதாய, ஸர்வவித்யாதிபாய, ஜ்யோதி

ரூபாய, பரமேச்வரபராய, அசேதந அசேதந, வ்யோமிர் வ்யோமிர், வ்யாபிர் வ்யாபிர், அரூபிர் அரூபிர், ப்ரதம ப்ரதம, தேஜஸ்தேஜ:, ஜ்யோதிர்ஜ்யோதி:, அரூப, அநக்நி, அதூம, அபஸ்ம, அநாதே, நாநாநாநா, தூ தூ தூ தூ, ஓம் பூ:, ஓம் புவ:, ஓம் ஸுவ:, அநிதந, நிதந, நித்யோத்பவ, சிவ, சர்வ, பரமாத்மந், மஹேச்வர, மகாதேவ, ஸத்பாவேச்வர, மகாதேஜ:, யோகாதிபதே, முஞ்சமுஞ்ச, ப்ரதமப்ரதம, சர்வசர்வ, பவபவ, பவோத்பவ, ஸத்பூதஸுக ப்ரத, சர்வஸாந்நித்யகர, ப்ரஹ்மவிஷ்ணுருத்ரபர, அநர்ச்சித அநர்ச்சித, அஸம்ஸ்துத அஸம்ஸ்துத, பூர்வஸ்தித பூர்வஸ்தித, ஸாக்ஷி ஸாக்ஷி, துரு துரு, பதங்க பதங்க, பிங்க பிங்க, ஜ்ஞாந ஜ்ஞாந, சப்த சப்த, ஸூக்ஷ்ம ஸூக்ஷ்ம, சிவ, சர்வ, சர்வத, ஓம் நமோநம:, ஓம் சிவாய நமோநம:, ஓம். என்பனவாம்.

இவற்றில் சாந்தியாதீதகலையில், ஓம் என்னும் பதமொன்றும், சாந்திகலையில் வ்யோமவ்யாபிநேமுதல் நித்யயோகிநே யீறுகப் பதம் பதினொன்றும்; வித்யாகலையில் த்யாநஹாராயமுதல் வ்யாபிர்வ்யாபிர் ஈறுகப்பதமிருபதும்; பிரதிட்டாகலையில் அரூபிர் அரூபிர் முதல் மஹேச்வர ஈறுகப் பதமிருபத்தொன்றும்; நிவிர்த்திகலையில் மஹாதேவ முதல் ஓம் ஈறுகப் பதமிருபத்தெட்டும்; ஆம்.

மந்திரம் 11:—மந்திராத்வாவிற்குரிய மந்திரங்களாவன:—சிவ, ஈசான, தத்புருஷ, அகோர, வாமதேவ, ஸத்யோஜாத, அஸ்த்ர, கவச, சிகா, சிரோ, ஹ்ருதய. ஆக பதினொன்றுமாம்.

சாந்தியாதீதகலையில் சிவ, ஈசான, அஸ்த்ர 3-ம்; சாந்திகலையில் தத்புருஷ, கவச 2-ம்; வித்யாகலையில் அகோர, சிகா 2-ம்; பிரதிட்டாகலையில் வாமதேவ, சிரோ 2-ம்; நிவிர்த்திகலையில் ஸத்யோஜாத, ஹ்ருதய 2-ம் ஆம்.

வன்னம், பதம், மந்திரம், இம்மூன்றும் சொற்பிரபஞ்சம். புவனம், தத்வம், கலை, இம்மூன்றும் பொருட்பிரபஞ்சம் என்னப்படும்.

இதுநிற்க, உலகிலுள்ள எவ்வுயிர்களுஞ் சர்வதுக்கநிவர்த்தியு நித்தியானந்தப் பிராப்தியும் பெற விரும்புவதியற்கை. ஆனாலவை பொருளல்லவற்றைப் பொருளெனக்கொள்ளு மயக்கங்காரணமாக வுண்டாங் காமவெகுளியுள்ளவரையிலு முண்டாகா; பொருளைப்பொருளாகவும், பொருளல்லவற்றைப் பொருளல்லவாகவுங்கொள்ளுந் தெளிவுணர் வுதித்துக் காமவெகுளி மயக்கத்தைவிடுத்துப் பிரமஞானம் பெற்றவழியுண்டாம். இதுவே சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகிய மோக்ஷமென்று சொல்லப்படும். இத்தகைய மோக்ஷத்திற்குச் சாதனமாயுள்ளது வேதம். இவ்வேதத்தின் வழிநிற்போர் வைதிகரெனப்படுவார். இவர் சற்பிரமாணமாகக்கொள்வது வேதம் நான்கு. அங்கம் 6, ஸ்மிருதியொன்று (18), புராணமொன்று (18), நியாய

மொன்று, மீமாம்சமொன்று; ஆக பதினான்கு வித்தைகளாம். இந்நூல்கள் கர்மம், பக்தி, ஞானங்களைச் சொல்லுகின்றன. கர்மத்தால் சொர்க்காதி பதவியும், பக்தியா லிஷ்டதேவதா லோகப்பிராப்தியுமுண்டாம். பதப்பிராப்திகளெல்லா மழியுநிலைமைத்தாகலி னதிதீவரமுள்ள முமுட்சுக்களவற்றை விரும்புவதில்லை. இனி, ஞானத்தைப்பற்றியோவெனின்: அது பேதமபேதமென விருவகைப்படும். எங்கெங்கே பேதங் காணப்படுகின்றதோ அங்கங்கு துவிதங் காணப்படுதலாலும், துவிதமுள்ளவிடத்துத் துக்கமுங் காரியமுங் கண்டத்துவமும் நிலையாமையும், அசத்தியத்துவமு மிருத்தலாலுக் துக்கமுள்ளவிடத் தஞ்ஞானமிருத்தலாலும், பேதஞானத்தால் சர்வதுக்கநிவர்த்தியு நித்தியானந்தப் பிராப்தியுமான வீடுண்டாமென்று சொல்லுதல்கூடா; அபேதஞானத்தாலோ மேற்படி குற்றங்கள் யாதுமின்மையின் அதனால் சர்வதுக்க நிவர்த்தியு நித்தியானந்தப் பிராப்தியுமான மோக்ஷமுண்டாமென்று சொல்வதில் யாதொரு ஆக்ஷேபமுமின்று. கர்மமும், பக்தியும், பேதஞானமும் சாக்ஷாத் மோக்ஷத்தைத் தராவாயினும் அபேதஞான முண்டாவதற்குச் சாதனமாயிருக்கும். அவற்றிலும் வீட்டிற்கு நேர்சாதனமான அபேதஞானத்திற்குச் சித்தசுத்தியும், பேதஞானமும், பேதஞானத்திற்குப் பக்தியும், பக்திக்குக் கர்மமுஞ் சாதனமாயிருக்கின்றனவென்க.

திருமந்திரம்—பாயிரம் 3-வது வேதச்சிறப்பு.

வேதத்தை விட்ட வறமில்லை வேதத்தி
னோதத் தகுமற மெல்லா முளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை யோதியே வீடுபெற் றார்களே.

(இ-ள்.) வேதத்துக் கன்னியமாகத் தறவற மொந்தநூலிலுமில்லை. வேதத்தின்கண் ஏனைய மூன்றாச்சிரமத்தார்க்கும் வேண்டிய வறங்கண்முற்றுங் கூறியிருக்கின்றன. சமயவாத தர்க்கங்களை விட்டுவிட்டு அறிவுடையோர்கள் மாட்சிமைபொருந்திய வேதங்களை ஐயந்திரிபறவோதிச் சமாதிகூடி அகண்டேகாரசமாகிய ஐக்கியத்தைப் பெற்றனர்கள் எ-று.

திருநெறி யாவது சித்தசித் தன்றிப்
பெருநெறி யாய பிரானை நினைந்து
குருநெறி யாஞ்சிவ மாநெறி கூடு
மொருநெறி யொன்றாக வேதாந்த மோதுமே.

(இ-ள்.) திருநெறியாவது—அழகிய முத்திமார்க்கமாவது, சித்தசித்தன்றி—அறிவறியாமை (சகலகேவலம்) நீங்கி, பெருநெறியாய பிரானை நினைந்து—சன்மார்க்க நெறியிற்சிக்குஞ் சிவபெருமானை மனதிலபேதமாகத்

றியானித்து, குருநெறியாஞ் சிவமா நெறிகூடு மொருநெறி—சற்குருநாத னது வழிபாட்டாலுஞ் சிவசொரூபமா மார்க்கத்தைப் பொருந்தும்படியான வொப்பற்ற நான்குவேத மகாவாக்கியார்த்த மார்க்கம், ஒன்றாக வேதாந்த மோதும்—ஏகமென்றே வுபநிடதங்களனைத்துஞ் சொல்லும், எ-று.

ஏழாந்தந்திரம் 28-வது—கூடாவொழுக்கம்.

ஒன்றிரண் டாகிநின் றொன்றியொன் றாயினோர்க்
கொன்று மிரண்டு மொருக்காலுங் கூடிடா
வொன்றிரண் டென்றே யுரைதரு வோர்க்கெலா
மொன்றிரண் டாய்நிற்கு மொன்றியொன் றனதே.

(இ-ள்.) ஒன்றிரண்டாகிநின்று — ஆணவத்தாற் றுவிதிகளாகியும், விசிட்டாத்துவிதக ளாகியுநின்று, ஒன்றியொன்றாயினோர்க்கு — ஆணவங் கெடுதற்குரிய சாதன சதுட்டயர்களாய் குருநெறியே சமாதியைப்பொருந்தி யேகமாயினோர்க்கு, ஒன்றுமிரண்டு மொருக்காலுங் கூடிடா—தடாகசல நிரம்பிய கலசத்தை சமுத்திரத்தினு ளமிழ்த்தியதுபோல் ஒன்றிரண்டு ஒன்று மல்ல, விரண்டுமல்ல என்று கூறுந் தாந்திரிகசைவ சித்தாந்தமும், விசிட்டாத்துவிதமு மெப்போதும் பொருந்தாது, ஒன்றிரண்டென்றே யுரைதருவோர்க்கெல்லாம்—தன்னுளேதிரைத்தெழுந் தரங்கவெண்டடங்கடலென்னு மான்றோர் வாக்கியத்தையுங்கடந்து முத்திநிலை யொன்றிரண்டென்றுகூறும் பெத்திகளுக்கெல்லாம் பிராந்தியா லிரண்டாகவே தோன்றும். சமாதியிற் றெளிந்த அத்துவிதிகளுக் கேகமாக விளங்கிய சைதன்யம், எ-று.

உபதேசம் 1-வது.
"வெளியின் வெளிபோய் விரவிய வாறு." என்றும்,

ஒன்பதாந்தந்திரம். 25-வது அணைந்தோர்தன்மை.

ஒழிந்தேன் பிறவி யுறவென்னும் பாசங்
கழிந்தேன் கடவுளு நானுமொன் றானே
னிழிந்தாங் கினிவரு மார்க்கமு வேண்டேன்
செழுஞ்சார் புடைய சிவனைக்கண் டேனே.

(இ-ள்.) செழுஞ்சார்புடைய சிவனைக்கண்டேன்— எவற்றிற்கு மழகிய முதற்காரணமுமாகியபரமசிவத்தைச் சுட்டற்றுநின்று தெரிசித்தேன். (அதனால்) அச்சிவத்திற் கூடஸ்தனுகியநான் ஏகமானேன், இவைசன்மார்க்கநெறியாதலா லினியிங்குத் தாழ்மையாகவரும் தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம் ஆகியசாதனங்களை யிச்சியேன், செனனமரணத்தி னின்றுமுய்ந்தேன், சுற்றமென்றுசொல்லும் பாசத்தையுநீங்கினேன். எ-று.

ஆராலு மென்னை யமட்டவொண் ணாதினிச்
சீரார் பிரான்வந் தென் சிந்தை புகுந்தனன்
சீராடி யங்கே திரிவதல் லாதினி
யார்பாடுஞ் சாரா வறிவறிந் தேனே.

இரண்டாந்தந்திரம் 12-வது திரோபவம்.

மண்ணொன்று தான்பல நற்கல மாயிடு
முண்ணின்ற யோனிக ளெல்லா மொருவனே
கண்ணொன்று தான்பல காணுந் தனைக்காணா
வண்ணலு மவ்வண்ண மாகிநின் றானே.

பெருந்திரட்டு. காரணவியல்பு. போதரத்நாகரம்.

காரணமா மொருபொருளைக் காணவத்தின் காரியமாம் பலவுமவன் கண்டானாது, மோணமா மண்ணொன்றை யுணரவத்தி னிலங்கியகாரியங்களெலா முணர்ந்தாற்போலக், காரணமா யுள்ளசிற் சத்தொன்றத்திற் காரியமா முலகெவையு மாதலாலே, பூரணமா மொன்றுணர வுலகமெல்லாம் புரையறவே யறிவதுமெய்ப் பொருண்மைகாணே.

குறுந்திரட்டு. காரண காரிய மேறின்மை.

யாது மறியலா மொன்றறிய வென்றுமறை
யோது பொருளை வுணரி னலகொல்லா
மாதியா மேது வறிய வறிந்ததாம்
ஏதுவா மண்காண வெக்கடமுங் கண்டாற்போல்.

ஈசனை யொழியவே றில்லை யிச்சகம்
பேசிய வணிகலம் பொன்னிற் பின்னமோ
காசினி யல்லவோ கடாதி நாலலாற்
றாசினை யுண்டெனச் சொல்ல லாகுமோ.

பேர்வேறு பாட்டாலே பேதமுள தென்னிற்
பார்வேறு பட்டதிலைப் பண்ணுகின்ற பேரொழிய
வார்வேறு கண்டார் கடங்க ளகிலமெனும்
பேர்வே றொழியப் பிரமமல தில்லையால்.

உண்டான தொன்றே யுரைப்பதனி லுண்டாமோ
வண்டார் குழன்மலடி மைந்தனெனு வார்த்தையாற்
கண்டோ மெனிலுளது போலே கனவத்தூர்
வெண்டேர் முதலெத் தனைதோன்று மெய்யேபோல்.

திருஞானசம்பதசுவாமிகள்.

எருக்கதம்புலியூா 120-ப.

"விண்ணோர்........பெண்ணணலியாகும் பித்தாபிறைசூடி."

திருப்புறவம் 128-ப.

"வையக நீர்தீ வாயுவும் விண்ணு முதலானான்."

திருமாற்பேறு 149-ப.

"குருந்தவன் குருகவன்கூர்மையவன்பெருந்தகைபெண்ணவனுணுடவன்."

திருவெண்ணி 200-ப.

சோதியை........ஆதியை யாதியு மந்தமு மில்லாத.

திருவாரூர் 402-ப.

அந்த மாயுல காதியு மாயினான்.

திருக்கழிப்பாலை 209-ப.

எளியா யரியாய் நிலநீ ரொடுதீ, வளிகா யமென வெளிமன் னியதூ, வெளியே யுனையே தொழுதுன் னுமவர்க்,களியாய் கழிப்பாலை யமர்ந்தவனே

திருவெண்காடு 243-ப.

மண்ணொடுநீ ரனல்காலோ டாகாய மதியிரவி, யெண்ணில்வரு மியமான னிகபரமு மெண்டிசையும், பெண்ணிணொடாண் பெருமையொடு சிறுமையுமாம் பேராளன், விண்ணவர்கோன் வழிபடவெண் காடிடமா விரும்பினனே.

திருத்தலைச்சங்காடு 253-ப.

நிலநீரோ டாகாச மனல்காலாகி நின்றைந்து.

திருநாரையூர் 478-ப.

மாயவன் சேயவன் தீயாதியவன்.

திருநாவுக்கரசுசுவாமிகள் திருவையாறு 525-ப.

கூன்னானைய் மணியானைய் கருத்தானைய் அறுத்தானை
யெண்ணானை யெழுத்தானை யெழுத்தினுக்கோ ரியல்பானைய்
விண்ணானைய் விண்ணிடையே புரமெரித்த வேதியனே
யண்ணான் வையாறற் காளாய்நா னுய்ந்தேனே.

தசபுராணம் 525-ப.

"காலமு நான்க ளூழி படையாமு னேக வுருவாகி."

திருப்பயற்றூர் 548-ப.

"ஞாயறாய் நமனுமாகி வருணனாய்ச் சோமனாகித்
தீயறா நிருதிவாயுத் திப்பிய சாந்தனாகி."

ஆவியா யவியு மாகி யருக்கமாய்ப் பெருக்க மாகிப்
பாவியர் பாவந் தீர்க்கும் பரமனாய்ப் பிரமனாகிக்
காவியங் கண்ண ளாகிக் கடல்வண்ண னாகி நின்ற
தேவியைப் பாகம் வைத்தார் திருப்பயற் றூர னாரே.

தந்தையாய்த் தாயுமாகி தரணியாய் தரணியுள்ளார்க்
கெந்தையு மென்னநின்ற வேழுலகுட னுமாகி
யெந்தையெம் பிரானேயென்றென் றுள்குவா ருள்ளத்தென்றுஞ்
சிந்தையுஞ் சிவமுமாவார் திருப்பயற் றூரனாரே.

திருப்பழனம் 553-ப.

நீரவன் தீயினோடு நிழலவ னெழிலதாய
பாரவன் விண்ணின்மிக்க பரமவன் பரமயோகி
யாரவ னண்டமிக்க திசையினோ டொளிகளாகிப்
பாரகத் தமுதமானார் பழனத்தெம் பரமனாரே.

திருநெய்த்தானம் 554-ப.

"சோதியாய்ச் சுடருமானார்." "ஆதியா யந்தமானார்."

திருவையாறு 558-ப.

"உமையலா துருவமில்லை யுலகலா துடையதில்லை."

திருக்காஞ்சித் திருமேற்றளி 562-ப.

"ஊனவ ருயிரினோடு முலகங்க ளூழியாகித் தானவர்."

மாயனாய் மாலனாகி மலரவ னாகி மண்ணாய்த்
தேசமாய்த் திசையெட்டாகித் தீர்த்தமாய்த் திரிதர்கின்ற
காயமாய்க் காயத்துள்ளார் காஞ்சிமா நகர்தனுள்ளா
வேயமென் றோளிபாக ரிலங்குமேற் றளியனாரே.

திருவாப்பாடி 567-ப.

கடலக மேழினோடு (1) ஆதியு மறிவுமாகி (2) சிக்தையுக் தெளிவுமாகி (3) உள்ளுமாய்ப் புறமுமாகி வுருவுமா யருவமாகி (4) மயக்கமாய்த் தெளி வமாகி (5) ஆழவுருவமாகி (6).

திருப்புகலூர் 574-ப.

"நீருமாய்த் தீயுமாகி நிலனுமாய் விசும்புமாகி. யேருடைக் கதிர்களாகி."

திருவண்ணுமலை 585-ப.

இரவியு மதியும்விண்ணு மிருநிலம் புனலுங்காற்று
முரகமா புவனமெட்டுத் திசையொளி யுருவமானாய்.

திருவீழிமிழலை 625-ப.

"அலைக்கின்ற நீர்நிலங்காற் றனலம்பர மாகிநின்றீர்."

கோயில் தாண்டகம் 773-ப.

"அருந்தவர்கள்.........மறிகடலுங் குலவரையு மண்ணும் விண்ணுந், திருந்தொளிய தாரகையுந் திசைகளெட்டுந் திரிசுடர்க ளோரிரண்டும் பிறவு மாய, பெருந்தகையை, விரிகின்ற பொருட்கெல்லாம் வித்துமாகி."

திருவீரட்டானம் 779-ப,

"எல்லாஞ் சிவனென்ன நின்றாய்போற்றி."

திருப்புன்கூர் 778-ப.

"பின்னுனு முன்னுனு மானான்றன்னை."

திருவையாறு 826-ப.

"ஓசையொலியெலா மானாய்நீயே." "எல்லாவுலகமு மானாய்நீயே."

திருமழபாடி 828-ப.

"நீராகி நெடுவரைக ளானாய்கண்டாய்."

திருவெண்ணி 857-ப.

"மண்ணிலங்கு நீரனல்கால் வானமாகி."

திருக்கற்குடி 858-ப.

"மண்ணதனி லைந்தை மாநீரி னான்கை."

திருமுதுகுன்றம்—முக்கூடல் 870-ப.

தக்கனது......துறவாதே யாக்கை துறந்தான் றன்னை.-
ஆராத வின்னமுதை.

திருவாலங்காடு 884-ப.

மூன்றாயுலகனைத்து மானார்தாமே. அல்லும் பகலுமாய்.

திருத்தலையாலங்காடு 885-ப.
சிவனாகித் திசைமுகனாய்.

திருப்பாசூர் 891-ப.
விண்ணாகி நிலனாகி விசும்புமாகி.

திருக்கஞ்சனூர் 900-ப.
விண்ணவனை......உருத்திரனை யுமாபதியை யுலகானானை.

நின்ற 905-ப.

இருநிலனாய்த் தீயாகி. மண்ணாகி விண்ணாகி.

சுந்தரமூர்த்திசுவாமிகள்—திருவெண்ணெய்நல்லூர் 915-ப.

ஊனாயுயி ரானாயுட லானாயுல கானாய்
வானாய்நில னானாய்கட லானாய்மலை யானாய்.

திருக்கோத்திட்டையும்—திருக்கோவலூரும் 916-ப.

பாரோடு விண்ணும் பகலுமாகிப் பனிமால் வரையாகிப் பாவையாகி
நீரோடு தீயுநெடுங் காற்று மாகிநெடுவெள் விடையாகி நிழலுமாகி.

திருஅஞ்சைக்களம் 920-ப.
ஆக்குமழிவு மமையநீ யென்பனான்.

திருக்கற்குடி 950-ப.
நிலனே நீர்வளிதீ நெடுவா னகமாகிநின்ற புலனே.

திருக்கடவூர் 951-ப.

மண்ணீர் தீவெளிகால் வருபூதங்க ளாகிமற்றும்
பெண்ணோ டாணலியாய்ப் பிறவாவுரு வானவனே.

திருக்கருப்பறியலூர் 953-ப.

நீற்றுரு மேனியராய் நினைவார்தம் முள்ளத்தே நிறைந்து தோன்றும்
காற்றானைத் தீயானை.

திருக்காணாட்டுமுள்ளூர் 966-ப.

ஒருமேக முகிலாகி யொத்துலகத் தானா யூர்வனவு நிற்பனவு மூழிகளுந் தானாய், பொருமேவு கடலாகிப் பூதங்களைந்தாய்ப், பூளைபுனை கொன்றையொடு புரிசடையி னானைப் புனலாகி யனலாகிப் பூதங்களைந்தாய், காலையின்று நெருநலா யாகாயமாகி ஞாயிறாய் மதியமாய் நின்றவெம் பெருமான்.

இங்ஙனங் கூறிய தேவாரங்களை முதற்சூத்திரம்—36-வது பக்கம் திருவாசகத்தோடு சேர்த்துக்கொள்க.

குமரகுருபரசுவாமிகள்—மதுரைக்கலம்பகம்.

போகமாய் விளைந்தோய் நீ, புவனமாய்ப் பொலிந்தோய் நீ
யேகமா யிருந்தோய் நீ, யெண்ணிறந்து நின்றோய் நீ.

வானுநீ, நிலனுநீ, மதியுநீ, கதிருநீ,
யூனுநீ, யுயிருநீ, யுளதுநீ, யிலதுநீ,

மொழிக்கய லாகிவேத முடிவினின் முடிந்துநின்ற
வழிக்கய லாகார் கூடல் வல்லவாணர் பெருவாழ் வன்னீர்.

இதுவே பொருளென் றெவரெவர் கூறினு மேற்பதெது
வதுவே பொருளென் றறிந்துகொண் டேனப் பொருளெவர்க்கும்
பொதுவேயென் றாலும் பொருந்துமெல் லோர்க்கும்பொதுவினிற்கு
மதுவேய் மலர்ப்பொழி லாரூரி னும்வைகும் வைகலுமே.

சிதம்பர மும்மணிக்கோவை.

சென்றவரைத் தாமாக்குந் தில்லைச்சிற் றம்பலத்து
மன்றவரைத் தாமாக்க வல்லவர்யா—ரென்றுமிவ
ராடப் பதஞ்சலியா ராக்கினு ரென்பிறவி
சாடப் பதஞ்சலியார் தாம்.

பல்லுயிர்த் தொகுதியும் பவக்கட லழுந்த
வல்லல் செய்யு மவாவெனப் படுமவ்
வறுமையி னின்றும் வாங்கி
யறிவின் செல்வ மளித்தரு ளெனக்கே.

சிதம்பர செய்யுட்கோவை.

வானே நிலனே கனலே வளிபுனலே, யூனேயவ் வூனி னுயிரே யுயிர்த்துணையே, யானெறு மேறே யரசே யருட்கடலே.

அருவமு முருவமு மாகி நின்றுமவ், வருவமு முருவமு மகன்று நின்றனே. சொல்லொடு பொருளுமாய்த் தோன்றி நின்றுமச், சொல்லையும் பொருளையுங் துறந்து நின்றனே.

தந்தைநீ, தாயுநீ, தமருநீ, பிறருநீ, சிந்தைநீ, புணர்வுநீ, சிவனீ, யாவுநீ.

அறிவினி லறிபவ ரறிவதை யலதொரு
குறியினி லறிவுறு குறியினை யலே.

பண்டார மும்மணிக்கோவை.

என்வடிவ நின்வடிவாக் கொண்டா யெளியேற்குன்
றன்வடிவ நல்கத் தருங்கண்டாய்—மன்வடிவால்
வெம்பந்த நீக்கும் விமலநீ மெய்ஞ்ஞான
சம்பந்த னென்பதனாற் றான்.

ஒன்றே தன்மை யுனக்குமற் றெமக்கு
மன்றென மொழியினு மாமெனப் படுமே.

குடிலையென்னுந் தடவயனுப்ப, னருள்வித்திட்டுக் கருணைநீர்ப் பாய்ச்சி, வேதமென்னும் பாதபம்வளர்த்தனே, பாதபமதனிற் படு பயன்பலவே, இலைதளிரரும்பு மலர்பிஞ்சருங்காய், கனிவேதாந்தங் கனிரசஞ்சைவமே.

திருமந்திரம்—ஆகமச்சிறப்பு.

அஞ்சன மேனி யரிவையோர் பாகத்தன்
அஞ்சோ டிருபத்து மூன்றுள வாகமம்
அஞ்சலி கூப்பி யறுபத் தறுவரும்
அஞ்சா முகத்தி லருப்பொருள் கேட்டதே.

(இ-ள்.) உமையை இடப்பாகத்தில் வைத்திருக்குஞ் சிவபெருமானது ஈசான்யமுகத்திலிருந்து மிருபத்தெட்டாகமங்களின தரியபொருள்களையு மிருடிகணத்தலைவர்களாகிய அறுபத்தாறு பேர்களுந் தங்கள் தங்கள் சிரசின் மேற் கைகூப்பிநின்று கேட்டுத் தெளிந்தனர்கள். எ-று.

சிவமாம் பரத்தினிற் சத்தி சதாசிவ
முவமா மகேச ருருத்திர தேவர்
தவமால் பிரமீசர் தம்மிற்றாம் பெற்ற
நவவாக முமெங்க ணந்திபெற் றானே.

(இ-ள்) சிருட்டிகாலத்திற் பரமசிவந்தனது சிற்சத்தியினால், சதாசிவ மூர்த்தியை யதிஷ்டித்துநின்று அனுக்கிரகம்பண்ண மகேசன், உருத்திரன், மால், பிரமனிவர்கள் கேட்டுவந்த ஒன்பதாகமங்களையு மொருங்கே நந்திகேசுவரர் பெற்றனர். எ-று.

பெற்றநல் லாகமங் காரணங் காமிக
முற்றநல் வீர முயர்சிந்தம் வாதுளம்
மற்றவ் வியாமள மாகுங்கா லோத்திரந்
துற்றநற் சுப்பிரஞ் சொல்லு மகுடமே.

(இ-ள்.) அவ்வாறுபெற்ற வாகமங்களின் பெயர்:—காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், யாமளம், காலோத்திரத்தைக்கூறுஞ் சிவாகமம், சுப்பிரம், மகுடமென்பனவாம். எ-று.

ஆகமமிருபத்தெட்டாவன:—1. காமிகம், 2. யோகஜம், 3. சிந்தியம்' 4. காரணம், 5. அசிதம், 6. தீத்தம், 7. சூக்கமம், 8. சகத்திரம், 9. அஞ்சுமான், 10. சுப்பிரபேதம், 11. விசயம், 12. நிசுவாசம், 13. சுவாயம்புவம், 14. அநலம், 15. வீரம், 16. ரௌரவம், 17. மகுடம், 18. விமலம், 19. சந்திரஞானம், 20. விமபம், 21. புரோற்கிதம், 22. இலளிதம, 23 சித்தம், 24. சந்தான சர்வோத்தமம், 25. பாரமேச்சுரம், 26. யாமளம், 27. வாதுளம், 28. சிவாகமம்.

அறுபத்தறுவராவன:—அகத்தியன், புலத்தியன், சனகன், சனந்தனன், சனத்தனன், சனற்குமாரன், குசிகன், குற்சன், வான்மீகன், வாமதேவன், வைசம்பாயனன், தும்புரு, வியாதன், வசிட்டன், விசுவாமித்திரன், சித்திரசேனன், யாதுதீரன், கோதமன், கவுதமன், அசிராகன், கௌருகன், காலவாச்சியன், வஞ்சமன், அங்கிசமன், குருசபாலீசன், துர்வாசன், கைப்பியதமன், நாரதன், நாராயணன், பாரத்துவாசன், கபிலன், கன்னன், காசிபன், காவேடன், பராசரன், மார்க்கண்டேயன் முதலியோர்.

அன்ன லருளா லருளுஞ் சிவாகம
மெண்ணிலி கோடி தொகுத்திடு மாயினு
மன்ண லறைந்த வறிவறி யாவிடி
னெண்ணிலி கோடியு நீர்மே லெழுத்தே.

(இ-ள்.) இருபத்தெட்டாகமங்களின் சாரமாகிய காலோத்திர ஞானத்தை உமைக்குச் சிவபெருமான் கிருபையினு லனுக்கிரகஞ்செய்த சிவாகமத்திலளவில்லாத கிரந்தங்களைச் சுருக்கிச் சொல்லியிருக்குமாயினும் அச்சிவபெருமான்சொல்லிய அறிவை யறிந்துகொள்ளவிடி லக்கிரந்தங்களைப் படித்தபோதிலு நீர்மேலெழுத்துக் கொப்பாக அது அவர்க்குப் பயன்படா.

தானுன வேதாந்தந் தானென்னுஞ் சித்தாந்த
மானுத் துரியத் தணுவன் றனைக்கண்டு
தேனுர் பராபரஞ் சேர்சிவ யோகமா
யானு மலமற் றருஞ்சித்தி யாதலே.

(இ-ள்.) நானதுவானேனென்னும் வேதாந்தமும், அது நானேனே னென்னுஞ் சித்தாந்தமு மொன்றாதல் கெடாத துரியத்தி (லகச்சமாதியில்) லணுவுக்குமணுவாயுள்ள கூடஸ்தவறிவைத் தரிசித்து, மானந்தமே வடிவாகி யும், மகத்துக்கு மகத்தாகியு, மெல்லாமாயல்லவுமாயுள்ள பிரமத்தைப் புறச் சமாதியிற் றரிசித்தும், மற்றெவ்வகை யேதுக்களினாலுங் கெடாத பஞ்ச மலங்களையுங்கெடுத்துச் சகசசமாதியி லரியசிவஞானங் கைகூடுதலே யென வறிக. எ-று.

ஆறந்தங்களின் விபரம்.

தானவ னாதஞ் சமாதி தலைப்படில்
ஆன கலாந்தநா தாந்தயோ காந்தமு
மேனைய போதாந்த சித்தாந்த மானது
ஞான மெனஞேய ஞாதுரு வாகுமே.

(க-ரை.) நானதுவானேனென்னும் வேதாந்தம்தவிர மற்றையவந்தங் கள் திரிபுடியுள்ளனவாகுமென்றறிக. எ-று.

நித்தம் பரனோ டுயிரற்று நீண்மனஞ்
சத்த முதலைந்துந் தத்துவத் தானீங்கிச்
சுத்த மசுத்தந் தொடரா வகைநினைந்
தத்தன் பரன்பா லடைதல்சித் தாந்தமே.

(இ-ள்.) சத்தகஞ் சமாதியிலான்மா சிவத்தொடுபொருந்திப், பஞ்ச பூதங்களையு மவற்றின் காரியங்களையும் உண்மைஞானத்தாற் கெடுத்து, சுத்த சகல கேவலமும், அசுத்த சகல கேவலமும், பற்றாவகைநின்று, சோகம் பாவனையர் னினையாது நினைந்து, பரசிவத்தி லொன்றாதலே வாகமசித்தாந்த மாகும். எ-று.

வேதாந்தஞ் சித்தாந்தம் வேறிலா முத்திரை
போதாந்த ஞானம்யோ காந்தம் பொதுஞேய
நாதாந்த மானந்தஞ் சீரோதயமாகு
மூதாந்த முத்திரை மோனத்து மூழ்கவே.

(இ-ள்.) வேதாகம முடிவிரண்டிற்குஞ் சின்முத்திரை யொன்றே, போதாந்த மறிவாய்நிற்றல், யோகாந்த மிரண்டிற்கும்பொது, நாதாந்தங் குறியைப் பற்றிநிற்றல், ஆனந்தஞ்சிறப்பா யுதயமாதற்குரிய முதலிரண்டந் தத்திற்கும் பொதுவாகிய சின்முத்திரை சிவானந்தத் தொன்றுதலேயாகும். எ-று.

வேதாந்தந் தன்னி லுபாதிமே லேழ்விட
நாதாந்த பாசம் விடுநல்ல தொம்பத

மீதாந்த காரணோ பாதியேழ் மெய்ப்பரன்
போதாந்த தற்பதம் போமசி யென்பவே

(இ-ள்.) வேதாந்தத்திற், றொம்பதவாச்சியார்த்தமாகிய சீவன்மே னின்ற காரியோபாதி யேழையும்விட, நாதாந்தமாகிய பாசமற்ற நல்லதொம் பத விலக்கியார்த்தமாகிய கூடஸ்தனும், அதன்மேனின்ற ஈஸ்வரன் காரணோ பாதி யேழையுநீக்கத் தற்பத விலக்கியார்த்தமாகிய பிரமமாம், அசிபதவாச்சி யார்த்தமாகிய கூடஸ்த பிரமத்திற்கு அசிபதவிலச்சியார்த்தத்திற் கடாகாயமு மகாகாயமு முபாதிநீங்கியவிடத் தொன்றானவாறுபோற் பண்டையேகமே யாம். எ-று.

வேதாந்த தொம்பத மேவும் பசுவென்ப
நாதாந்த பாசம் விடநின்ற நன்பதி
போதாந்த தற்பதம் போயிரண் டைக்கியஞ்
சாதா ரணஞ்சிவ சாயுச்சிய மாமே.

(இ-ள்.) வேதாந்தத்தில்: தொம்பத வாச்சியார்த்தமாசப் பொருந்திய சீவன், நாதாந்தத்திற் பாசநீங்க விஞ்சிநின்ற நல்ல கூடஸ்தனென்னும் பெய ரும், தற்பத விலக்கியார்த்தப் பிரமமென்னும் பெயரும்போய், அசிபதவிலக் கியார்த்தத்தி லிரண்டினுக்கு மைக்கியமென்று மியல்பாகப் பெற்றிருத்தலே சீவன்முத்தித் தன்மையெனப்படும். எ-று.

சிவமாதல் வேதாந்த சித்தாந்த மாகு
மவமவ மாகு மவ்வவ் விரண்டுஞ்
சிவமாஞ் சதாசிவன் செய்தொன்று ணு
னவமான வேதாந்த ஞானசித் தாந்தமே.

(இ-ள்.) சிவமே தானுதல் வேதாந்த சித்தாந்தங்களி னுணர்ச்சியின் பயனுகு, மேனைய நான்கந்தங்களையு மவமாமெனவிடுத் தைக்கியமா முறை மையிற் சதாசிவனைப் பொருந்தாது போவானேல், அற்புதமான வேதாந்த சித்தாந்த ஞானங்கண் மிகவும் பயனற்றன வாகுமென்க. எ-று.

சித்தாந்தத் தேசீவன் முத்திசித் தித்தலாற்
சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித் தித்தவர்
சித்தாந்த வேதாந்தஞ் செம்பொரு ளாதலாற்
சித்தாந்த வேதாந்தங் காட்டுஞ் சிவனையே.

(இ-ள்.) சித்தாந்தத்திலுஞ் சீவன்முத்தி கைகூடலா லச்சித்தாந்தத் தில் வேதத்தை யனுசரித்துச் சோகம் பாவனைசெய்து நிற்பவர், சீவன்முத்தி யடைந்தவராவார், சித்தாந்தமு வேதாந்தமுஞ் செஞ்சொலாற் சிவத்திலக்கி யஞ் செப்புவனவாதலால், சித்தாந்தம் வேதாந்த மிரண்டும் பக்குவர்க்குச் சிவத்தை தன்னிலபேதமாகத் தெரிசிப்பிக்கும். எ-று.

சிவனைப் பரமனுட் சிவனுட் காட்டும்
அவமற்ற வேதாந்த சித்தாந்த மானு
னவமுற் றவத்தையின் ஞானஞ் சிவமாம்
தவமிக் குணர்ந்தவர் தத்துவத் தோரே.

(இ-ள்.) குற்றமற்ற வேதாந்த சித்தாந்தமானது அத்துவித சிவத்தைச் சிவேசருக்குள் விட்டுவிடாத விலக்கணையாற் காட்டும், அது மேலான துரியாவத்தையில் அறிவே சிவமென்னும் பொருளது, மிக்க தவப்பேற்றினு லதனை யுணர்ந்தவர்க ளுண்மை ஞானிகளாவார்கள். எ-று.

வேதமோ டாகம மெய்யா மிறைவனு
லோதுஞ் சிறப்பும் பொதுவுமென் றுள்ளன
நாத னுரையவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே.

(இ-ள்.) வேதங்களோடு ஆகமங்களுஞ் சிவபெருமானாற் சொல்லியதே, யவைக ளதிதீவிர பக்குவர்க்குரிய ஞானத்தை யறிஞராற் சொல்லுஞ் சிறப்பென்றும், ஏனைய பக்குவர்க்குரிய சரியை, கிரியை, யோகங்களைப் பொதுவென்றுங் கொண்டுள்ளன, கடவுள் வாக்கியமாகிய வவ்விரண்டினது சித்தாந்தமும், அனுபவஞானிகட் கத்துவிதமேயாகும், அதனைத் தார்க்கிக மாயாவாதிகளாகிய வறிவிலார் துவிதமெனக் கொள்ளாநிற்பர்கள். எ-று.

மன்னிய சோகமா மாமறை யாளர்தஞ்
சென்னிய தான சிவோகமா மீதென்ன
வன்னது சித்தாந்த மாமறை யாய்பொரு
டுன்னிய வாகம நூலெனத் தோன்றுமே.

(இ-ள்.) நிலைபெற்ற சோகம் பாவனையையுடைய(அந்தணர்களினது) வேதாந்திகளினது முடிந்தபொருள் சிவோகமாம், இதுவே நமது முடிபுமெ னக்கொண்ட வனுபவஞ் சித்தாந்தமாகு, மதனாற் பெருமைவாய்ந்த வேதத்தி லுரைப்பத்தெளிந்த மெய்ப்பொருளையே தன்னிடத்திலுமுள்ள வாகமநூலெ னச்சிறப்புற்று விளங்கும். எ-று.

முதலாகும் வேத முழுதா கமமப்
பதிபான வீசன் பகர்ந்த திரண்டு
முதிதான வேத முறைமுறை யாலமர்ந்
ததிகாநி வேதாந்த சித்தாந்த மாகவே.

(இ-ள்.) வேதமுதலிற் றோன்றியதாகுஞ் சிறிதும் வேதத்தோடு முரண்படாதவாகம மதன்பின்னர் தோன்றியதாகு, மிவ்விரண்டையும் பதிப் பொருளாகிய விறைவனே சொல்லியதாகும், புண்ணியர்களிடத்தில் விருப்ப

முள்ள வேதமானது, அவரவரது பக்குவ தாரதம்மியங்களையுணர்ந்து மூன்று காண்டங்களையும் பூருவஞ் சித்தாந்தமென்னு மிரண்டு நியமங்காரணமாக வுணர்த்திநின்று, கடைசியி லெவற்றினு முடிவான வேதாந்த சித்தாந்தமாகவே முடித்துவிடும். எ-று.

இவ்வாறு பிரபல சுருதிகள் கூறுநிற்பவும், அதனை யுணருமாற்றலற்பமுமின்றித் தம்மனம்போனவாறு பிதற்றிக் காலங்கழிக்கும் துவித தாந்திரிக மாயாவாதிகள், "வேதாகமங்களைச் சத்பிரமாணமாகக் கொண்டவரன்றோ வைதிகசைவர், வேதத்தைமாத்திரம் உடன்பாடாகக்கொண்டு ஆகமத்தை நிந்திக்கும் அத்தியாசவாதிக ளெங்ஙனம் வைதிகசைவராவார்?" என்றனர். வேதாகமங்களைச் சத்பிரமாணமாகக் கொள்பவர் வேதாகம சைவரேயன்றி வைதிகசைவராவதெங்ஙனம்? வைதிகசைவர், வைதிக சமஸ்காரம் பெற்று வைதிக அனுட்டானமுள்ளவராய் வேதப்பொருளாகிய சிவனை வணங்குபவராகும். இவரே வேதத்தைச் சத்பிரமாணமாகக் கொள்பவர். இவர் வேதத்துக்கு விரோதமில்லாத வழி. ஆகமம் பிரமாணமென்றும், அதுவும் வேதத்தைச்சார்ந்தே பிரமாணமென்றும், வேதாதிகார மில்லாதவர் பொருட்டே ஆகமம் ஏற்பட்டதென்றும், வேதப்பிரமாணத்துக் காகமப் பிரமாணங் குறைந்ததென்றும், வேதமார்க்கத்தானேயே முத்தியுண்டாமென்றுங் கூறுவர். இது ஆகம தூஷணமன்று. வேதத்தைவிட ஆகமம் மேலென்று சொல்லிக்கொள்பவர், அவ்வாறல்லவென்பாரை ஆகம தூஷணக்காரரென்பர். இதற்குத் துரபிமானமும் அசூயையுமே காரணமன்றி வேறன்று.

வேதப்பிரமாணமே சிறந்ததென்பதற்குப் பிரமாணங்கள்.

திருஞானசம்பந்தசுவாமிகள்.

திருவிடைமருதூர் 160-ப. "மறையவ னுலகவன் மதியவன் மதி புல்கு துறையவன்."

திருநாவுக்கரசுசுவாமிகள்.

திருவேகம்பம் 517-ப. "அண்டமா யாதியா யருமறையோ டைம்பூதப் பிண்டமா யுலகுக்கோர் பெய்பொருளாம் பிஞ்ஞகனை." திருப்புத்தூர் 881-ப. வாராரு முலைமங்கை பங்கன் ......மாமறைக ளாயவன்காண்." திருப்பயற்றூர் 548-ம். "மூவகை......நான்மறை ஞானமெல்லா மாவகை யாவர் போலும்." திருவாப்பாடி 567-ப. "எண்ணுடை யிருக்குமாகி" திருவீரட்டானம் 776-ப. "மந்திரமு மறைப்பொருளு மானான்றன்னை." திருப்பாசூர் 891-ப. "வேதமோர் நான்கா யாறங்கமாகி." திருச்செங்காட்டங்குடி 892-ப. "பேணிய வந்தணர்க்கு மறைப்பொருளை." கழிப்பாலை 790-ப. "விண்ணுணை விரும்பிவந்த வேதத்தாய்." ஸ்ரீ கைலாசம் 851-ப. "வேற

ருகி......ஆறங்க நால்வேத மானாய்போற்றி. திருச்சிவபுரம் "வானவன் காண்......வடமொழியுந் தென்றமிழு மலைறகனைந்த மானவன்காண்." "கலையாரு நூலங்க மாயினான்காண்."

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

திருக்கோலக்கா 996-ப. "அங்கமாறுமா மறையொரு நான்கு மாயினம் பனே." ஆமாத்தூர் 974-ப. "பொன்னவன்......வேதத்தி னுட்பொரு ளாகிய வன்னவன்." திருக்கானப்பேர் 1024-ப. "தொண்டர் தமக்கெ ளிய சோதியை வேதியனை தூயமறைப் பொருளாய நீதியை."

சூதசங்கிதை—மோசனையுரைத்த அத்யாயம்

எல்லாப் பிரமா ணங்களுக்கு மியைமுக் கியமாம் பிரமாணம்
வல்லா ருரைக்கும் வேதமே மற்றை யதற்குத் தன்னாலும்
புல்லா நிற்கும் பிறவாலும் பொருந்து வாதை சற்றுமில்லை
யல்லாப் பிரத்தி யக்கமுத லான பிரமா ணங்களுக்கு.

ஒழியா மாயை யால்வாதை யுண்டு மறைக்கு விரோதமுறு
மொழியார் தருநற் புராணங்கள் முற்றும் பிரமா ணங்களே
கழியா மறைமு லகமாகக் கசட்டு நூல்கள் யாவுமிகு
பழியார் நூல்கள் பிரமாணப் படாது படிமுற் றளந்தோயே.

பிரமகீதை: சாந்தோக்கியவுபநிடதம்—ஆறுமத்யாயம்.

சத்திய மாகி வேத மொன்றுமே யளவை யாகும்
இத்தன்மைப் பொருளை யெல்லா வுலகரு மறியும் வண்ணம்
நித்தரா மன்ப ரேத்த நிறைந்தமெய்க் கருணை யீசன்
மெய்த்தகு பொருளீ தென்றே விளம்பிடல் செய்ய லுற்றான்.

திருவிளையாடற்புராணம்—உலவாக்கிழியருளிய படலம்.

மறையே நமது பீடிகையா மறையே நமது பாதுகையா
மறையே நமது வாகனமா மறையே நமது நூபுரமா
மறையே நமது கோவணமா மறையே நமது விழியாகு
மறையே நமது மொழியாகு மறையே நமது வடிவாகும்.

வேதந் தானே நமதாணைச் சத்தி வடிவாய் விதிவிலக்காய்
போதங் கொளுத்தி நிலைநிறுத்திப் போகங் கொடுத்துப் பல்லுயிர்க்
பேதஞ் செய்யும் பிணியவிழ்த்தெம் பிரியா வீடு தருவதுதேன்[கும்
நாதஞ் செய்யுந் தார்வேந்தே நமது செங்கோ லதுவாகும்.

வைதிகத்தின் சிறப்பு—ஷை புராணம்.

மறைவழி மதங்கட் கெல்லா மறைபிர மாணம் பின்சென்
றறைதரு மிருதி யெல்லா மவைக்கனு குணமா மின்ன
முறையினுன் மார்த்த மென்று மொழிவதம் மார்த்தஞ்சேர்ந்த
துறைகள் வைதிகமா மேலாச் சொல்வதிச் சுத்த மார்க்கம்.

வைதிகமார்க்கப் பிரவிர்த்தியில்லார்க் காகமஞ் சொல்லப்பட்டதென்பதற்கு.

சூதசங்கிதை—சருவவேதாந்த சங்கிரகம்.

இத்தகுவை திகமார்க்கப் பிரவர்த்தி யில்லாருக்
கத்தனு ரணத்தில்வன்னஞ் தருமமாச் சிரமநல
மொத்தபூ சாதியெலா முரைத்தபடி பற்பலவுஞ்
சித்தநில வாகமத்துஞ் செப்பியிருக் கின்றனனுல்.

வேதவிதியை ஆகமிகள் தழுவவேண்டும்.

ஆகமவிதியை வைதிகர்தழுவ வேண்டுவதின்றென்பதற்கு ஷை.

வேதவிதி யாகமநல் விதியுடையோ ரனுசரிப்பா
ரேதமிலா கமவிதிவை திகர்தழுவ வேண்டுவதின்
ருதாவி னிவைபனைத்து மறிமினோ வென்றுரைத்துச்
சூதமுனி வணங்குபுதன் தூயகுர வனைநினைந்தான்.

மந்தமார் புத்தி யுடையராய் வல்ல மாயையால் மூடிடப் பட்ட
பந்தரா யினருக் கனுகுண மாகப் பகர்ந்ததல் லால்மறந் தேனுஞ்
சந்தமார்ந் துயர்ந்த பரமார்த்த மாகச் சாற்றின தில்லையாலுணர்வீர்
கந்தநாண் மலர்ப்பூங் குழலுமைபாகக்கடவுடாள்கருதுமுள்ளகத்தீர்.

கூர்மபுராணம்.— திருக்கலியாணம்.

அருமா மறைகண் முழுவதுமென் சத்தி யாகு மாங்கவைகள்
திருமா லுந்தித் தடம்பூத்த செல்வன் முன்னைப் படைப்பதனி
லொருநான் மறையாம் பெயரோடு நடக்கு மன்னூல்வழியொழுகார்
மருவார் முத்தி வீடதனின் மம்ம ருறுநூல் வலைப்பட்டே.

எது போது? எது சிறப்பு?

துவிததாந்திரிக மாயாவாதசைவர்கள்: வேதத்தைப் பொதுவென்றும் ஆகமத்தைச் சிறப்பென்றுங் கூறுவர். அங்ஙனமாயின், பொது பொதுவாயே யிருக்கவேண்டுஞ் சிறப்பாகப்படாது. வேதம் பொதுவென்ப தன்மையானல், பொதுவில் யாவருமே பிரமாணமாகக் கொள்ளவேண்டும. பௌத்தர், சமணர், பாரவஸீகர், மகம்மதியர், கிறிஸ்தவர், யூதர், இவர் முதலியவர்

அவ்வாறு கொள்வதில்லை. உலகிலுள்ள 150 கோடிச் சனங்களில் வேதப் பிரமாணத்தார் 17 கோடிச் சனங்கள்தான். இவர்கள்தவிர மற்றவரங்கீகரியாமை மாத்திரமல்ல; வெறுத்திகழ்தலுஞ் செய்கின்றார்கள். ஆதலால், வேதம் ஆரியர்களுக்கு மாத்திரஞ் சிறப்பாயிருக்கின்றது; அவருள்ளும் அந்தணர்க்குமாத்திரஞ் சிறப்பாயிருக்கின்றது; அதனால் சிறப்பென்றே சொல்லலாமெனி லதுவே பொதுவுஞ் சிறப்புமாயிருக்கின்றது. எங்ஙனமெனில், அவ்வேதம் பூர்வகாண்டம், உத்தரகாண்டமென் றிருபகுதியாகி, யவற்றி லுத்தரகாண்டஞ் சிறப்பாயிருக்கின்றது. இதிலும் சிரவண, மனன, நிதித்தி, சமாதி, சாக்ஷாத்காரமெனப்படுவதில் சாக்ஷாத்காரமே சிறப்பானது; இதிலும் வரிட்டபதமே சிறப்பானது. இவ்வகையாக மாத்திரமன்று; இன்னும் வேறு பலவகையாகவும் பொதுச்சிறப்புச் சொல்லலாம். ஆதலால், வேதத்தைப் பொதுவென்றும், ஆகமத்தைச் சிறப்பென்றுங் கூறுவது தகுதியன்று.

இன்னும், ஆகமத்திலுஞ் சைவாகமம், வைணவாகமம், சாத்தேயவாகமம், இரணியகருப்பவாகமம் முதலிய பலவாகமங்களுள்ளன. அவற்றுள் யாவுஞ் சிறப்பாமா? ஒவ்வோராகமத்தினருந் தங்கள்தங்களாகமமே சிறப்பென்றுதான் கூறுகின்றார்கள். அவற்றுள் பொதுவெது? சிறப்பெது? சைவாகமத்தர் தங்களாகமமே சிறப்பென வைத்துக்கொண்டாலு மதிலும் பொதுச் சிறப்பில்லாமற் போகவில்லை. சைவாகமத்தில் வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவமென் றறுவிதபேதமுண்டு. அவற்றிற் சைவமே சிறந்ததென் றறுவருளொருவரான இவர் கூறுகின்றார். இத்தச் சைவர்க்குரிய காமிகமுதலிய இருபத்தெட்டாகமங்களில் வீரசைவ ஆகமமுமுள்ளன. அதை இந்தச் சைவர்கள் சாமானியமெனக் கொள்ளுகின்றார்கள். அதுபோக மற்றைய வாகமங்களைச் சிறப்பாகக் கொள்வோமெனின், அவைகளினுஞ் சரியை, கிரியை, யோகம், ஞானமென நான்கு பாதங்களுள்ளன. அவைகளில், ஞானமே சிறப்புடையது. அதுவு மபரஞானம், பரஞானமென் றிருவகைத்தாம். அவற்றுள் பரஞானமே சிறப்புடையது. மற்றொருவகையாகச் சிரவணாதிகளுங் கூறலாம். இவ்வாறு ஆகமங்களிலும் பொதுவுஞ் சிறப்பு மிருக்கின்றன. எது சிறப்போ, அது மற்றொன்றினுக்குப் பொதுவாயிருக்கின்றது. இந்த நியாயப்படி வேதத்திலு மாகமத்திலும் பொதுவுஞ் சிறப்பு மிருக்கின்றதை யூகித்துணர்தல் வேண்டும்.

சிலநூல்களி லாகமஞ் சிறப்பென்று கூறுகின்றதேயெனி னதிற் பற்றுண்டாவதற் கவ்வாறு கூறும். ஒவ்வொரு தலபுராணமுந் தான்தானே சிறப்பென்று கூறுவதுபோலவாம். அத்தலத்திற் பத்திசிரத்தை யுண்டாவதற் கததுவே சிறப்பென்று கூறினு மெல்லாவற்றினு முத்தமமான தலமிதுவெனக் கணிக்கின்றார்க ளத்துடனே தாரதம்மியமுஞ் செய்கின்றார்கள். சிறப்பல்லதைச் சிறப்பென்று சொல்வது பொய்யல்ல; அர்த்தவாதமாகும்.

அப்படியே வேதமும் பற்பல வாகமங்களு மதுவதுவே சிறப்பென்று கூறினும், அதது சிறப்பாகாமல் வேதமொன்றே சிறப்புடையதாகும். அவரவருந் தந்த யாகமங்களைச் சிறப்பெனநம்பி வழிபட்டால மதனாற் பயனுண்டு. ஆனாலதைக்கொண்டு வேதத்தோ டெதிர்த்துப் போர்செய்யப் போவதுதான் தகுதியன்று. இது வரங் கொடுத்தவன் றலையிற் கைவைக்கப் போனவன் போலாம். இன்னும் வேதந் தானே சுதந்தரப் பிரமாணம்; ஆகமங்கள் வேதத்தைச்சார்ந்தே பிரமாணங்களாம்; தாமே சுதந்தரப் பிரமாணங்களல்ல. எங்கேயெங்கே வேதவிரோதங்காணப்படுகிறதோ அங்கங்கே அப்பிரமாணமாம். அப்பிரமாணமாயினு மதுவேறோ ரதிகாரிகளுக் குபகாரமாம். அவ்வாறாகமத்துக்கு வேதம் விரோதப்படின், வேதமப்பிரமாணமென்றல் பொருந்தாது பல ஆகமிகளுக்குள் விவாதம்நேரிட்டு முரண்பட்டவிடத்து வேதத்தைக்கொண்டே தங்கள் முரணைத் தீர்த்துக்கொள்ளவேண்டும். ஒருவ ராகமத்தை மற்றொருவர் பிரமாணமாகக்கொள்ளார். அவ்வாறு வேதத்தைச் சொல்ல மாட்டார்கள், சொல்வார்களேல், பௌத்தராதியோர்போல் வேதபாகியராய்ப் போவார்கள். ஆகமத்தை யொத்துக்கொள்ளாமையா லாகம பாகியராமென்றல் பொருந்தாது. அதற்காக வெவருஞ் சிந்தைகொள்ளார். இதனாலாகமஞ் சிறப்பல்ல வென்பதாயிற்று.

முகவுரை முற்றிற்று.

உ

ஓம் தத் சத்.

பரப்பிரஹ்மணேநம:

சிவஞானபோதம்.

தற்சிறப்புப்பாயிரம்.

கணபதி காப்பு.

வேத முடிவிளக்கை மேவச் சிவஞான
போதங் கருணை புரியுமுமை—நாதன்
கரியா னனத்தான் கருதுபுகழ் பெற்ற
கரியா னனத்தான் கழல்.

கடவுள் வணக்கம்.

பெருந்திரட்டு.

எப்பொரு ளறிந்தா ரெல்லாப் பொருள்களு மறிந்தா ராவ
ரெப்பொருள் கண்டார் பின்னை யாவையுங் காணு ராவ
ரெப்பொருள் பெற்றோர் வேறோர் பொருள்பெற விரும்பா ரந்தச்
செப்பரு மனந்தா னந்தச் சிவப்பிர காசம் வாழி.

திருக்குத்திரிசிய விவேகம்.

சிதம்பர மன்றிப் பதிபசு பாசஞ் சிறிதுமில்லை
சிதம்பர மாக முடிவதென் ஞுப்தலிற் றேர்ந்தவர்க்குச்
சிதம்பர மன்றி யிடமே தெமக்குள சிந்தனைக்குச்
சிதம்பர மேபர தெய்வந் துணையெனத் தேர்ந்தனமே.

பேரொளி விளக்கம்.

மத்திமமாம் பகல்வெயிலிற் புனல்போன் ஞால
மலர்ந்துளதாம் யாதொன்றை யறியா ராணுற்
றொத்தலர்மா லையினுரகம் போல ஞாலந்
தோன்றுதாம் யாதொன்றை யறிவா ராணு
லத்திகழும் பரஞ்சுடரைத் தன்னைத் தானே
யளந்தறியும் பேரறிவை யழியா தான
நித்தமெனு மொருபொருளை நீங்கா வின்ப
நிறைகின்ற தற்பரத்தை நினைக்கின் றேனே.

பரமார்த்த தரிசனம்.

ஓமென்கின்ற தனிபெழுத்து முரைத்தற்கரிய தற்பதமுந்
தாமங்கமழுர் தார்மார்பா சத்தென்கின்ற தனிப்பதமு
மாமென்கின்ற விவைமூன்று மறிவின்பெயர்மற் றிவற்றாலே
யாமுன்புணரு மறைமறையோர் யாகந்தோன்றிற் றெனவறிவாய்.

(பொ-ரை.) மணிவடமும், மணம்பொருந்திய பூமாலையுமணிந்துள்ள மார்பையுடைய அருச்சுனு! ஓமென்னும் ஏகாட்சரமும், ஸ்துதித்தற்கரிய தத் என்னும் பதமும், சத் என்று கூறுகின்ற ஒப்பற்ற பதமும் ஆகுமென்று சொல்லப்பட்ட இம்முப்பதங்களும், அறிவின் பெயர் — பரப்பிரமத்தின்

நாமங்களாம்; இந்நாமங்களாலேயே பிராமணர் முதலிய கர்த்தாவும், நாம் முன்னமே அறியாநிற்கும் காணரூபமான வேதமும், கர்மரூபமான யக்ஞ மும், தோன்றிற்று—சிருஷ்டியி னாதிகாலத்தில் பிரமாவின லுற்பந்நமாயின வென்றறிவாய். எ-று.

அகார, உகார, மகாரமென்னு மிம்மூன் றவயவங்களையுடைய பிரணவ மானது ஒரே நாமமாய்ப் பிரமத்திற் கெப்படியுள்ளதோ, அப்படியே ஓம், தத், சத் என்னு மூன்றவயவங்களு மொரே நாமமாய்ப் பரப்பிரமத்திற்கு வேதாந்த முணர்ந்த மகரிஷிகளால் பூர்வம் ஸ்மரணஞ் செய்யப்பட்டிருக் கிறது; ஆதலால், இக்காலத்து மப்பிரம பதத்தின் நாமம் அவசியமாக ஸ்மர ணஞ்செய்து வருகின்றார்கள். இவ்வதிகாரிகட்கு யக்ஞம், தானம், தவமுத லிய கர்மங்களில் விகுணத்தன்மையென்னுந் தோஷமுண்டாகமாட்டாது; இதனை ஸ்மிருதியாதியிலுங் கூறியிருக்கின்றது. ஸ்மிருதி வசனம்:— யக்ஞமுதலிய கர்மங்களைச் செய்யாநிற்கும் புருஷருக்குப் பிரமாத வசத்தால் அவ்வெக்ஞ முதலிய கர்மங்களில் மந்திராதி ரூபாங்கங்கள் பங்கமாயின், அம் மந்திராதி ரூபாங்கங்கள் விஷ்ணுபகவானது ஸ்மரணத்தினாலேயே பரிபூரண மாய்விடுமென்பது.

திருஞானசம்மந்தசுவாமிகள் 232-ப.

தாமென்று மனந்தளராத் தகுதியரா யுலகத்துக்
காமென்று சரண்புகுந்தார் தமைக்காக்குங் கருணையின
னோமென்று மறைபயில்வார் பிரமபுரத் துறைகின்ற
காமன்ற னுடலெரியக் கனல்சேர்ந்த கண்ணானே.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருமழபாடி 829-ப. ஒரு சுடராய் ....ஓங் காரத் துட்பொருளாய் நின்றான் கண்டாய். திருவலிவலம் 841-ப. "உய்த் தவன்கா ணுடறனக்கோ ருயிரானான்காண் ஓங்காரத் தொருவன்கா ணுலகுக் கெல்லாம், வித்தவன்காண்." திருக்கீழ்வேளூர் 869-ப. "உளரொளியை யுள்ளத்தி னுள்ளேநின்ற வோங்காரத் துறுபொருள தாயினானை." திருவா லம்பொழில் 895-ப. "உருமூன்றா யுணர்வின்கண் ஒன்றானானை யோங்கார மெய்ப்பொருளை."

சுந்தரமூர்த்திசுவாமிகள்—திருவலிவலம் 1001-ப. "ஊனங்கத் துயிர்ப்பா யுயிர்க்கெல்லா மோங்காரத் துருவாகி நின்றானை." என்றுங் கூறியுள்ளார்கள் ஆதலால் வேதமறிந்த பெரியோரும் எந்தெந்த வைதிக கர்மங்களை ஆரம்பஞ் செய்வரோ, அந்தந்தக் கர்மங்களி னாரம்பத்தி லிந்தநாமத்தை ஸ்மரணஞ்செய் தே அந்தந்தக் கர்மங்களைச் செய்கின்றனர். இதனால் சிஷ்டாசாரரூபப் பிர மாணத்தாலும், அந்த நாமஸ்மரணத்திற்கு விகுணதை யென்னுந் தோஷ நிவிர்த்தி ரூபமான பலம் சித்தமா யுள்ளதேயாம்.

"மறையோர்" என்னுமொழி பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் என்னு மூன்று வருணத்தினர்க்கு முபலட்சணம்.

ஓமென் றுரைத்தே வினைசெய்வார் வீடுற் றவர்வீ டுறுமவர்க
டாமுன் புரைத்த தற்பதத்தை யுரைத்தே செய்வர் சத்தென்றே
யாமென் கின்ற யாகமுதன் மூன்றிற் றிதியு மவற்றின முங்
காமர் வினையின் மேலுமது கழறு கிற்பார் கதிர்வேலோய்.

(பொ-ரை.) ஓமென்னுஞ் சப்தத்தை உச்சாரணஞ்செய்தே, மோட்சமடைந்த அறிஞர்கள் எக்ஞம், தவம், தானரூபமான கிரிகைகளை நிரந்தரஞ் செய்யாநிற்பர். மோட்ச மடையும்படியான யோக்கியதையுடைய முமுட்சுக்கள் முற்கூறிய தற்பதத்தை உச்சாரணஞ்செய்தே (வினை) செய்வர்—(பலத்தை யிச்சியாமல் நாநாப் பிரகாரமான) எக்ஞம், தவம், தானரூபமான கிரியைகளைச் செய்யாநிற்பர். எக்ஞத்திலும், தவத்திலும், தானத்திலுந் தாற்பரியமான அவஸ்தானமும், அவ்வெக்ஞாதிகளின் அனுகூலமான கர்மங்களும், சத்து என்றே ஆம் என்கின்ற—சத்தென்றே ஆகுமெனக் கூறப்படுகின்றனவாம்; (அன்றியும்,) காமர்வினையின்மேலும்—விவாகமுதலிய மங்கள கர்மங்களிலும், (சத்பாவத்திலும், சாதுபாவத்திலும்) அது கழறுகிற்பார்—சத்தென்னு மந்நாமத்தைப் பிரயோகிப்பர்; கதிர்விட்டிலங்காநின்ற வேலையுடைய அருச்சுனா! என்று கூறியவாற்றால் ஓம், தத், சத் என்னும் பிரமத்தினுடைய நாமத்தின் ஓங்காராதி யவயவத்தி லொவ்வொன்றிற்கு மிவ்வாறான மஹாத்மிய முண்டென்றா லவ்வோங்கார முதலிய மூன்றவயவங்களின் சமுதாயரூபமான இந்நாமத்திற்கு அளவிறந்த மஹாத்மிய முண்டெனல் பெற்றாம்.

காதலா விந்தப் பதங்கண்மூன் றினையுங் கற்றுணர்ந் தவர்கடங்
கருத்தா, லோதலாம் வகையா லுரைத்தலாற் றவமுந் தானமு
முதலிய வொழிபா, மாதலா லிந்தப் பதங்களை யுரைத்தே வினை
செயத் தகுவதென் றுரைத்தான், றீதிலா வுலகந் தன்னுளே
யுதிப்பத் தேவகி திருவயிற் றுதித்தோன்.

(பொ-ரை.) ஞானநூற் பொருள்களை கற்றுணர்ந்த அதிகாரிகள் சிரத்தையோடு ஓம் தத் சத் என்னு மிம்மூன்று பதங்களையு மவற்றின் பொருளோடும், உச்சரிக்குங் காரணத்தோடு முச்சரித்தலால் எக்ஞம், தவம், தானங்களை அசத்தாகவிடார்; (பின்னையோ பிரமத்தின் அந்த நாமோச்சாரண மான்மியத்தாலங்க வைகல்ப தோஷ நீங்குதலின், சாத்துவிக சகுணங்களாகவே அவ்வெக்ஞ, தவ, தானங்களைப்பெறுவர்.) ஆகலால், பிரமத்தின் நாமங்களான இப்பதங்களை யுச்சரித்தே, தத்தம் வருணத்திற்குரிய கர்மங்களைச் செயத்தக்கதென்று அருளிச்செய்தனன். குற்றமற்ற உலகம் சச்சிதாநந்த தான் மகமான தன்னிடத்திலுதிக்க (தான் ஒரு)சீமானான வசுதேவன் மனைவியின் வயிற்றுதித்தவனாகிய ஸ்ரீபகவான்.

மேற்கூறியவாற்றால் சிரத்தையில்லாமற் செய்யும் எக்ஞம், தவம், தானமுத லியவை இகபரங்களின் பயன்களைப் பயவாவென்பது பெறப்படுகின்றது. இவ்வத்தியாயத்தில் ஆலசியாத தோஷங்களால் சாஸ்திரவிதியைப் பரித்தியாகஞ் செய்து, பிதா, பிதாமகன் முதலிய விருத்த புருஷர்களின் வியவகார மாத்திரத்தால் எக்ஞமுதலிய கர்மங்களிற் பிரவிர்த்தியா நிற்கும் புருஷரிடத்துச் சாஸ்திர விதியின் பரித்தியாக ரூபமான அசுர தர்மமும், சிரத்தா பூர்வக கர்மானுஷ்டான ரூபமான தேவதர்மமுங் காணப்படுதலின் அப்புருஷர் அசுரரா? அல்லது தேவரா? என்றிவ்வாறான அர்ச்சுனன் சமுசயத்திற்கு விஷயபூதரான புருஷருள்ளே யாவர் இராஜஸ, தாமஸ சிரத்தா பூர்வகமான இராஜஸ, தாமஸரூப எக்ஞ முதலிய கர்மங்களையே செய்கின்றனரோ, அவர் அசுரர். எ-ம். இப்படிப்பட்ட அவர் சாஸ்திரங்களிற் பிரதிபாதிக்கின்ற ஞானசாதனங்களின் அதிகாரிகளல்லர். எ-ம். யாவர் சாத்துவிக சிரத்தாபூர்வகமாகச் சாத்துவிக எக்ஞமுதலியவற்றைச் செய்கின்றனரோ, அப்புருஷர் தேவர் எ-ம். அவர் சாஸ்திரங்களிற் பிரதிபாதிக்கின்ற ஞானசாதனங்களின் அதிகாரிகளாவர் எ-ம். இவ்வாறான நிர்ணயம் ஸ்ரீ பகவானால் அருளிச்செய்யப்பட்ட தென்றறிக.

வினாவிளக்கம்.

சுருதி யந்தமா வாக்கிய மதுதுணி பொருளையே சுடர்கின்ற
பெருக வாந்தர வாக்கிய மவையெலாம் பேசிய வகைத்தானுக்
கிரம தொன்றிட வருளிய வகையெனத் திகழுமோங் காரத்தின்
வரம தொன்றிய பரிசையு மழகுற மதியிலேற் கருளெந்தாய்,

குறுந்திரட்டு.

ஆதி யகார முகார மகார
மேதக வோமென வேதம தோது
மூதறி வோர்சக மூவித மாகு
மாதலி லோமய மாமென வுற்றார்,

ஞால மமைத்தவ னாரண னீசன்
கால மவத்தைக ணற்குணம் வேதஞ்
சாலுல குற்ற சமத்தமு மோமெனு
மூல வெழுத்தொரு மூன்றி னடங்கும்.

அகாமுக ரத்தி னுகரமக ரத்தின் மகாமுத னாத மதனி
லகமுறவொ டுக்கி யதுதனை யவிச்சை யதிலற வொடுக்கி யதன்மே
லகமெனவு தித்த புருடனி லொடுக்கி யவனையழி வற்ற பிரமசிற்
சுகவடிவெ னத்த னுளமனு பவத்தி லறிபொழுது சுத்த சொரூபம்

திருமந்திரம்.

ஓமெனு மோங்காரத் துள்ளே யொருமொழி
யோமெனு மோங்காரத் துள்ளே யுருவரு
வோமெனு மோங்காரத் துள்ளே பலபேத
மோமெனு மோங்கார மொண்முத்தி சித்தியே.

ஓங்காரத் துள்ளே யுதித்தவைம் பூதங்க
ளோங்காரத் துள்ளே யுதித்த சராசர
மோங்காரா தீதத் துயிர்மூன்று முற்றன
வோங்காரஞ் சீவ பரசிவ ரூபமே.

"வருக்கஞ் சுகமாம் பிரமமு மாகு, மருக்கஞ் சராசர மாகு முலகிற், றருக்கிய வாதார மெல்லாந்தன் மேனி, சுருக்கமின் ஞானந் தொகுத்துணர்ந் தோர்க்கே.

ஓம் சிவகுரவே நம:

ஆனந்த நித்திய மும்பிர காச வியர்பகமு
மானநா மம்ரூபக் காதாரம் புத்தி யறிகிலது
மானநற் புத்தி யறிவதுஞ் சுத்த மபாரமெனு
ஞான வியறன் னுருவா முருகனை நாடுதுமே.

ஒவ்வோரு விசேஷணத்தின் பிரயோசனம்.

விடயஞ் சுகமெனி னித்திய மாகா விண்காலந்
தொடர்நித் தியமெனி னப்பிர காசஞ் சுடர்தீயும்
விடல்வியா பகமல சி(ன்)னம்பிர கிருதி விண்சீவ
னடர்பெய ருருவக் காதா ரம்மல வதுரச்சேல்.

படவா விரச்சுச் சுயம்பிர காசம் பண்ணுதா
லடர்பல மறியா தறியும் விருத்தி வியாப்தியினில்
சுடரெனி னுன்மா வவித்தை மலத்தாற் சுத்தமுரு
தடர்பின் வஸ்துப் பரிச்சின மறையி னபாரமதோ.

1. (வி-ம்.) பிரம்ம லக்ஷணத்திற்கு அதிவியாப்திதோஷம் வாராமல் விஷயானந்தமு நியாயவாதிகளி னாத்மாவி னானந்தகுணமு மநித்தியமெனீக்குதற்கு ஆனந்தத்துட னித்தியகுணஞ் சேர்க்கப்பட்டது.

2. நியாய மதத்தில் ஆகாசாதிகள் நித்தியஞ் சடமென்பதை நீக்கற்குப் பிரகாசம் சேர்க்கப்பட்டது.

3. சூரியாதிகளுடைய பிரகாசத்திலும், நியாய மதப்படி ஆத்மாவின் ஞானகுணத்திலும், க்ஷணிக விஞ்ஞானிகள்ரூப ஆத்மாவி னிடத்திலுமாகிய மூன்றையு நீக்க வியாபகஞ் சேர்க்கப்பட்டது.

4. நாமரூபவாதாரம் ஆகாசாதிகளிடத்திலும், நியாயப் பிரபாகர மதங்களின்படி ஆத்மாவி னிடத்திலும், சாங்கிய மதப்படி பிரகிருதியி னிடத்திலும் வியாபகமென்றூலு நாமரூபத்துக் காதாரமெனக் கூடாமையா லதுவுஞ் சேர்க்கப்பட்டது.

5. பிரமத்தைக் கேவல நாமரூபத்துக் காதாரமாகச் சொல்லும்பக்ஷத்தில் பிராதிபாஸிக சர்ப்பத்தின் நாமரூபங்களுக்கு ரஜ்ஜு ஆதாரமாகிறபடியினு லந்த அதிவியாப்திதோஷத்தை நீக்க சுயம்பிரகாசஞ் சேர்க்கப்பட்டது. மற்றெந்த மதத்திலு நாமரூபங்களுக் காதாரமென்கிற லக்ஷண மெந்தப் பதார்த்தத்துடனும் பிரமத்துக் கதிவியாப்திதோஷ முண்டாகாவிட்டாலும், வேதாந்தத்தி விரச்சுவாதிஸ்தலங்களிற் கல்பிக்கப்பட்ட சர்ப்பாதிகளுடைய நாமரூபங்களுக் காதார விரச்சுவி னுபஹித சைதன்னியமே யங்கீகரித்து விரச்சு முதலியதை யங்கீகரிக்காவிடினு மிரச்சுவாதியை நாமரூபத்துக் காதாரமென விவ்விடத்துக் கூறியது ஸ்தூல திருஷ்டி மாத்திரத்தாலென்க.

6. உபாசகர்களுடைய மதங்களி லாத்மா சுயம்பிரகாச மவித்தியாமல சகிதமென்றலி னவற்றைநீக்கச் சுத்தமெனச் சேர்க்கப்பட்டது.

7. சாங்கிய மதத்தி லாத்மா சுத்தமென்றுந் தேசகால பரிச்சேத மில்லாததென்றும், வஸ்து பரிச்சின்ன முண்டென்றுங் கொண்டமையி னவைகளைநீக்க அபாரஞ் சேர்க்கப்பட்டது.

8. புத்தி பிர்மத்தைப் பிரகாசிப்பிக்கவில்லை. பிர்மம் புத்தியைப் பிரகாசிப்பிக்கிறது. சப்தத்தினுடைய சக்திவிருத்தியினு லறிகிறதில்லையானுலுஞ் சப்தத்தி னிலக்ஷணவிருத்தியாற் புத்தி பிரமத்தை யறிகின்றது. மலவிக்ஷேபங்களுடன்கூடிய புத்தியறியாது, நிர்மலமானபுத்தி யறியு மிவைமுறையே பலவியாப்தி, விருத்திவியாப்தி யெனப்படும். விருத்திவியாப்தியானது தீபம் அன்னிய பதார்த்தங்களைப் பிரகாசிப்பிக்கிறதுபோல் பிர்ம்மத்தைப் பிரகாசிப்பிக்க ஸமர்த்தமன்று. ஆனுலு மிருட்டிற் கடத்தினுன் மூடப்பட்டிருக்கு மிரத்தினமானது கடமுடைந்தவழி பிரகாசிப்பதுபோல அகம் பிர்ம்மாஸ்மி என்கிற விர்த்தியினுல் பிர்ம்மத்தி னுவரணரூபமான அஞ்ஞானத்தை நிவர்த்திசெய்வதே பிர்ம்மப்பிரகாச முண்டாவதாகச் சொல்லப்படுகிறது. பிர்ம்மந்தான் பிரகாசிப்பதில் புத்திமுதலிய வேறுபிரகாசங்களை யபேக்ஷிக்காமலும் எல்லாவற்றையும் பிரகாசிப்பிக்கிறதாயு மிருப்பதாலது சுயம்பிரகாசமாயுந் தேசகால வஸ்துக்களா லந்தமில்லாத வபாரமாயு மிருக்கின்றது.

ஷை 7-வது பாரம்—அந்தம். அவ்வந்தம் தேசகால வஸ்துவென மூன்ரும்; அவை மூன்றுமில்லாத பிரம்ம பபாரமெனப்படும்.

1. தேசம்—எது எல்லாவிடங்களிலும் வியாபிக்காம லோரிடத்தின்மட்டு மிருக்கிறதோ, அதற்குத் தேசத்தா லந்தமுண்டு. உதாரணம்:—கடம்போல் பிர்ம்மம் ஓரிடத்திலின்றி யெங்கும் வியாபித்திருக்கிறபடியாலும், சர்வதேசமும் பிர்ம்மத்தில் மாயையாற் கல்பிக்கப்பட்டிருக்கிறபடியாலும் பிர்ம்மத்துக்குத் தேசத்தா லந்தமில்லை.

2. காலம்—எதற்கு ஜன்மத்துக்கு முன்னும் நாசத்துக்குப் பின்னு மபாவ முண்டோ வதற்குக் காலத்தா லந்தமுண்டு. உதாரணம்:—ஆகாசம்போல் பிர்ம்மத்துக் குற்பத்திநாச மில்லாதபடியால் பிர்ம்ம நித்தியம். ஆகையாலதற்குக் காலத்தா லந்தமில்லை.

3. வஸ்து—எதுவெதற்கு வேறுபடுகிறதோ அதனாலதற்கு அந்தமுண்டு. கடம் வஸ்திரத்துக்கு வேறுபடுவதாற் கடத்துக்கு வஸ்திரத்தா லந்தமுண்டு. பிர்ம்மத்திற் சடசேதனரூப வஸ்துக்களெல்லாங் கல்பிதங்கள். மண்ணில் கல்பிதமான கடம் மண்ரூபமா யிருப்பதுபோல் பிர்ம்மத்தில் கல்பிக்கப்பட்டவைகளெல்லாம் பிர்ம்மரூபமே. ஆகையால் பிர்ம்ம மெல்லாவற்றிற்கு மாத்மாவாயிருக்கிறது. இப்படியிருப்பதாற் பிர்ம்ம மெதற்கும் வேறுபடுகிறதில்லை. வேறுபடாமையால் எந்தவஸ்துவாலும் பிர்ம்மத்துக் கந்தமில்லையாகையால் பிர்ம்ம மபாரமாம்.

(க-து.) சுகமாயும், நித்தியமாயும், பிரகாசமாயும், வியாபகமாயும், நாமரூபங்களுக் காதாரமாயும், புத்தியறியாது மறிவதும், சுத்தமாயும், அபாரமாயு மெதுவிருக்கிறதோ வதுதான் நான். மகாவாக்கியத்தின் தாற்பரியமான தன்னைக் காட்டிலும் வேருகாத பரமாத்மாவே தனது சொரூபமென்பதாம்.

ஞான சூரியன்.

என்றுமோர் தன்மை யாகு மெழிலறி வுருவ தாகிப்
பொன்றுபூ தாதி யுந்தா னுகியே புரையொன் றின்றி
நின்றபே ரின்ப நாத னிலவுநா மகட்குக் கேள்வன்
பொன்றிகழ் தாம ரைத்தாள் பொலிவுறச் சென்னி வைப்பாம்

அறிஞரைப் புகழ்ந்தவை யடக்கம்.

அவிரோதபோதம்

நற்பொரு ளெங்குங் கொண்டு நன்றலா தெங்கு நீக்கி
யற்புத வண்டே யென்ன வரும்பயன் கொள்வ தன்றித்
தற்பொரு ளென்று மற்றைத் தமதலாப் பொருள தென்றும்
பற்பல கூறிக் காதும் பரிசது பெரியோர்க் கின்றே.

எடுத்தவெம் மதமெனு நூல்க ளியாவையுந் தமதா யாக்கு
வடித்தநற் பொருளை கொண்டு வளம்பட மகிழ்வ தல்லாற்
படித்தொரு பொருளைப் பற்றிப் பாங்கின லதிலோ தூங்கிப்
பிடித்தது பிடித்துக் காதும் பேதமை பெரியோர்க் கின்றே.

குரு வணக்கம்.

ஆய்தலிற் றேர்ந்த தறிவன்றோ நீயதுகாண்
ஒய்விடம் வேறன் றுணர்த்தினன்—மாய்விலாச்
சென்னைசச்சி தானந்த சிமான் குரவன்ற
னன்மலர்த்தா ளென்மகுட நாடு.

தத்துவமசி வாக்கியார்த்தம்.

துவிதம்.

தஇவ—துவம், தத்துவம்.
தத்—பரம், இவ—போல,
துவம்—நீ, அசி—ஆனுய்.

(க-து.) பரத்தைப்போல் நீயானுய்.

உதாரணம்:—மதிமுகம், பவளவாய் என்பவற்றில் போலவென்னும் உவமையுருபு தொக்கு நின்றாற்போலும்.

விசிட்டாத்துவிதம்.

தத்துவமசி.

விசிட்டம்—கூடியிருக்கிற, துவிதம். தஸ்யபாவம்—தத்வம், தஸ்ய—பரத்தின், பாவம்—தர்மமாக, துவம்—நீ, அசி—ஆனுய்.

(க-து.) பரவஸ்துவின் தர்மமாக நீயானுய்.

உதாரணம்:—பிராமணத்துவம், சூத்திரத்துவம், சந்நியாசத்துவம் என்பவற்றில் துவமென்பது தர்மத்தை விளக்கிநின்றாற்போலும்.

அத்துவிதம்.

தத்துவமசி.

தத்—துவம்—அசி யெனப்பிரித்து, நேரேயேனும், துவம்—தத்—அசி யென மாற்றியேனுங் கொள்ளினும் பதப்பொருள் அது நீயானுயெனவும், நீயதுவானு யெனவுமமையும். அமையவே, யது

வேடீ நீயேயதுவெனத் தேற்றப்பொருள் கோடற்குத் தொக்குநின்றது ஏகாரமெனப்பெறும்.

உதாரணம் :—வேடதாரியொருவன் தான்கொண்ட வேடமாகிய பிராமணத்துவமும், வெட்டியாரத்துவமும் அவனையன்றி வேறில்லாமையால், அவ்வேடங்காரணமாகப் பிராமணன் வெட்டியா னென்புழிப் பிராமணனே வெட்டியான், வெட்டியானே பிராமணனெனப் பொருள்படுதற்குத் தேற்றேகாரந் தொக்குநின்றாற்போலும்.

திருமந்திரம்.

நீயது வானு பெனநின்ற பேருரை
யாயது நானுனே னென்னச் சமைந்தறச்
சேய சிவமாக்குஞ் சீர்நந்தி பேரரு
ளாயது வாயனந் தானந்தி யாமே.

ஆகிய வச்சோயந் தேவதத் தன்னிடத்
தாகிய விட்டு விடாத விலக்கணைத்
தாகுப சாந்தமே தொந்தத் தசியென்ப
வாகிய சீவன் பரன்சிவ னாமே.

இன்னும் அவனே தானேயாகிய வந்நெறியென்னும் 10-ஞ்சூத்திரத்தினுனுமதனதுரையானுங் கண்டுகொள்க.

அவாதரிகை.

இதுகாறுங் கூறிவந்த நியாயம்பற்றி யினியிச் சிவஞானபோதத்திற்குஅத்துவிதபரமாக வேதாந்த தீபிகையென்னும் ஒருரையியற்றப் புகுவதின் காரணமுணர்த்தல்.

நேரிசை யாசிரியப்பா.

பூமேவு தேவும் பொறிவாழு மார்பனும்
பாமேவு வேதமும் பண்ணவரும் போற்றுகின்ற

திருப்பெருந் துறையிற் சிவபெரு மான்முன்
அருப்பொரு ணிறைந்த வாகம சாரமாஞ்

சிவஞான போதத்தைச் செப்பக் கேட்ட
தவமநிறை மாணிக்க வாசக ரெங்கோன்

அவையே தானே யாயென்ற வதற்குச்
சிவமணங் கமழுந் திருவா சகந்தனி

வின்றெனக் கருளி யென்னும் பாவினி
லொன்றுநீ யல்லை யன்றியொன் றில்லென
வன்னூன் மொழிபெயர்த் தருளிய சைவ
வெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவ
ராக்கொடு சேர்த்தி யணைத்தவக் கற்போ
னுருக்கி யுடன்கியைந் தோதின ருதாரணம்
வித்துண்டா மூல முளைத்தவா தாரகமா
மத்தன்று ணிற்றன் மண்குளிர்ந் தறைந்தனர்
வேதாந்த மெய்ப்பொருண் மேவலின் மூலஞ்
சாதா ரணமாஞ் சைவதாந் திரிகனுந்
திருத்துறை மன்னு மருணந்தி தேவர்
கருத்தமுற் றதனை மாற்றக் கருதிச்
சிவஞான சித்திநூற் செப்பினர் வழிபோல்
தவமிலர் பலரைச் சந்ததிகொளற்கு
ஊனக்கண் சூத்திரத் தாத்தினைத் தேர்ந்தென
ஈனப் பாச மிரித்திடென் றியம்பிட
மண்ணின் னரசயன் மாலார் வாழ்வு
மெண்டரு பூத யோனிக ளியாவுங்
கண்ட சாலங் கனுக்கமு திரத
முண்டுபோ லின்று முலகென வோதினர்
முற்று மொழிக்கா வழியென முனிந்து
கொற்றவன் குடிவந் துற்ற வுமாபதி
கனவின் பயனு நனவின் பயனும்
வினையின் பயனவை பொய்யா காதென
முடுக்கியு மொடுக்கியு முதல்வழி நூலினைத்
தொடுத்துப் புடைநூல் சொல்லின ரெட்டே
யின்னும் பலபுடை நூல்க ளிவர்க்குள
வன்னூ லொழிந்துவே தாகம முங்கொளா
ரின்னூற் களிலே நம்நூ லெதுவெனி
லென்றூ லிதுவென வியம்பவு மாட்டா

ரின்னோர் நூலை யியம்புவ தென்னே
முன்னூற் பொருட்கொளா மூட நூல்க
ளுலண்டு சிலந்தி யுடுக்கொணுக் கந்தை நூல்
கலைபயி றெளிவு கட்டுரை யிலார் நூல்
அலைபேய்த் தேர்போ லாம்பொய் மதநூ
னலனறி யாது ஞான மிழக்குநூ
லெல்லா மாகியு மல்லவா மிறையென
நல்லன நூல்க ளுட்டுவ தறியார்
கானனீ ருவமை கழறுமின் னூற்கலா
தீனநூற் கற்றே யிழுக்குடைத் தாகுவர்
நீரி லெழுத்து நிகழ்களுப் பேய்த்தே
ரோரி னிவையின் ருமாற் கொப்பென
நிகழெனு மடையா னுண்மை யெனுமிவர்
பகலை யிரவெனும் பாதகர்க் குபர்வோ
ரிறைவனை யும்மிறை யெனுநூற் கருத்துட்
சிறையுல வும்புனற் செய்தியிற் றேன்றும்
அறைபேய்த் தேர்போ லாம்பொய் மதங்களாந்
துறைபல போக்குந் துகடீர் நூலெனல்
பாற்கடன் முற்றும் பருகிய பூனையும்
வேற்கொடு மலடியின் மைந்தன் வெட்டனே
ரிந்திர புரோகித னியம்புநூன் முடிவைத்
தந்திரச் சைவநூல் சாற்றுதற் கெளிதோ
சுந்தரா பரவைச் சுகமெய்ப் படியென
அந்தணன் படுப்பா னறிவை நீயெனல்
வேட்கை விடுநெறி வேதாந்த மாதலால்
வாழ்க்கைப் புலன்வழி மாற்றிச்சித் தாந்தத்து
வேட்கை விடுமிக்க வேதாந்தி பாதமே
தாழ்க்குந் தலையினேன் சற்சீட னுமெனுந்
திருமூலன் றிருவடி சென்னிமேற் சேர்த்துமெய்
யொருமைவே தாந்தசி பிகையுரை யோதுவன்

வழிபுடை நூல்போன் மதிச்துரை செய்துபின்
னழிபுரை யதனையே முதனூற் காக்கும்

கொடுங்கோன் மன்னிகர் கூட்ட
விடும்பைச் சமய விருளிரிந் திடவே.

"திருவாசகத்தி லொன்று நீயல்லை யன்றியொன்றில்லை." யென வஸ்து சித்தாந்தம் நாட்டியதை மறுக்காதேற்றற் குதாரணம் வருமாறு :—

பெருந்திரட்டு 315-வது ப. ஞானசித்தி.

வாக்கினன் மனத்தான் மதிக்கொணுப் பொருளை மதிவகுப் புக்குளால் வருந்தி, நோக்குமா முயல்வர் முயலுகின் ருலென் னோக்கிட லாகுமா றுண்டோ, தாக்கிலா தெங்கு மியாவையுந் தாணுய்த் தானவை யொன்றலாப் பொருளை, நீக்கிலா ஞான விழி யிஞ லங்கைக் கனியெனக் காணலா நேரே.

திருஞானசம்பந்தசுவாமிகள்—திருமுதுகுன்றம்.

தேவராயு மசுரராயுஞ் சித்தர் செழுமறைசேர்
நாவராயு நண்ணுபாரும் விண்ணெரி கால்நீரு
மேவராய விரைமல ரோன்செங் கண்மா லீசனெனு
மூவராய முதல்வ னொருவன் மேயது முதுகுன்றே.

பற்று மாகி வானு ளோர்க்குப் பல்கதி ரோன்மதிபா
ரெற்று நீர்தீக் காலு மேலை விண்ணிய மானனொடு
மற்று மாதோர் பல்லுயி ராகி மாலய னும்மறைகள்
முற்று மாகி வேறு மானன் மேயது முதுகுன்றே.

திருக்கழுமலம் 171-ம் ப. "புவிமுதலைம் பூதமாய்ப் புலனைந்தாய் நிலனைந் தாய்க் கரணநான்கா, யவையவைசேர் பயனுருவா யல்லவுரு வாய்நின்ரு னமருங் கோயில்."

திருநாவுக்கரசு சுவாமிகள். திருவோற்றியூர் 837-ப.

மண்ணல்லை விண்ணல்லை வலைய மல்லை மலையல்லை கடலல்லை வாயுவல்லை யெண்ணல்லை யெழுத்தல்லை யெரியு மல்லை யிரவல்லை பகலல்லை யாவுமல்லை, பெண்ணல்லை யாணல்லை பேடுமல்லை பிறி தல்லை யானுயும் பெரியாய் நீயே, யுண்ணல்லை நல்லார்க்குத் தீயை யல்லை யுணர்வரிய வொற்றியூ ருடையகோவே.

என்னுந் தேவாரங்களை யிரண்டாஞ் சூத்திரம் 47-வது பக்கம் திருவாசகத்தோடு சேர்த்துக்கொள்க.

ஆலிங்கனசுக முத்தியென்றது கவுணம்.)

வினா :—பிரகஸ்பதிபகவான் இந்திரனுக்கு ஆலிங்கனசுகமே முத்தியென்றதென்னை ?

விடை :—சுகிப்பானைக்கண்டு சுகிப்பது அரிதரிதெனக் கருதியென்க.

வினா :—இவ்வாலிங்கனசுகம் எளிதாயினும் ஆன்மாக்களைக் கெடுக்கத்தக்கதன்றோ ?

விடை :—இம்மயக்கத்தாருக் கிதுவே முத்திசுகமெனக் கவுணமாகக் கூறினதேயன்றி முக்கியமன்றென்க.

வினா :—அஃதெங்ஙனம் ?

விடை :—அம்மதனநூலிற் கூறியவண்ணம் விதிவழுவாமல் தாடனஞ், சும்பனம், நகக்குறி, பற்குறி முதலியவைகளையும், புணரத்தக மாதர்களையும், அமிர்த தாரணையையும், காலத்தையும், அகற்றரிய அவுடத்தையும் அறிந்து இடைவிடா தாலிங்கனஞ் செய்யவல்லவராயின், அவர்க்கு அம்மாதருடலம் இன்பக் கட்டியாகத் தோற்றும். தோற்றினும், பின்னர் வரவர அவ்வுடலம் பூச்சிப் புழுக்கட்டும், மலமூத்திரங்கட்டுஞ் சீ இரத்தங்கட்டும், ஈரல் மாமிசங்கட்டும் இடமாகத் தோல்மூடிய என்புக்கூடன்றிச் சுகவாழ்வுக் கிருப்பிட மன்றெனத்திடமவரவர் புத்திநுட்பத்தளவாய்ச் சிறிது சிறிதாகப்பெருகும்; அது பெருகப் பெருக அருவருப்பு மவ்வாறேபெருகும்; அது பெருகப்பெருகச் சுகநிலைதான் எங்ஙனே எங்ஙனேயென விசாரிக்கும் விசாரம் வரும்; அதுவர ஆராமையு மவ்வாறே பெருகுமென்பதும். அவ்விதிப்படி செய்யாது மிருகங்களைப்போற் புணரின், மோகம் மிதமின்றிப் பெருகுமென்பதும் அந்நூற் கருத்தாதலின் முக்கிய மன்றென்க.

இவ்வுரைக்கு வேதாந்த தீபிகையென்று பெயர்கொடுத்ததின்காரணம்

பிரத்தியட்சத்தாலும், அனுமானத்தாலும் எவரும் எளிதிலறிய முடியாத வஸ்துவைத் தெளிவாய்க்காட்டும் சொல்மயக் கருவியாயுள்ளது வேதம். எனவே, சோதிட்டோமம் முதலியன சுவர்க்காதி சுகங்களைத்தரும். கள் குடித்தல் முதலியன பெரும்பாதகத்தை யுண்டாக்கு மென்பதாதி ரகசியங்கள் பிரத்தியட்ச வனுமானங்களால் எளிதிலறிப்படா ; ஆகவே, அவற்றைக் காட்டுவது வேதமென்பதாயிற்று. அவ்வேதம் அவித்தியா வசப்பட்ட சீவர்களின் அறிவாற்றலுக்கு எளிதிலெட்டாத விஷயங்களைத் தெரிவிக்கும் பெருங்கருவியாய்நின்று கருமம், ஞானங்களைக்காட்டுந் தொழிலால் சங்கிதைகள், உபநிடதங்களென இருபாற்படும். அவற்றுள் வேதோக்த கருமாதிகாரியான மனிதாதியோர் குழவிப்

பருவம்நீங்கிய சிறுபருவந்தொடங்கி அநுஷ்டிக்கவேண்டிய கருமங்களைச்சொல்லும் கருமகாண்டங்கள் சங்கிதைகளாம்; அவற்றின் கருத்தை விளக்குநூல் பூர்வமீமாம்சையாம்.

பலனைவிரும்பாத கருமானுஷ்டானத்தினுல் ஏகாக்கிரமுண்டாய் அதனுற் சாதன சதுட்டய முற்றோருள்ள முமுட்சுவிற்கு ஆத்மாநாத்ம விசாரணையைப் போதிப்பது உபநிஷத்துகளாம். இவ்வுபநிஷத்துகள் வேதத்தி னிறுதியில் படிக்கப்படுவதால் வேதாந்தங்களென்றுஞ் சொல்லப்படும். அவ்வேத வுபநிஷத்துகளின் பொருளை விளக்குவது உத்தரமீமாம்சையாம். ஆதலால் அதனையும் வேதாந்தமென வழங்குவது ஆன்றோர்களினது வழக்கம். அவ்வேதாந்தத்தின் பொருள் ஆசிரியனது அருளில்லார்க்கு விளங்காது. விளங்காதாகவே, அதனை அநாசிரியன்பால் கேட்போருக்குப் பண்டைத் தீவினைவயத்தாற் றோன்றும் விபரீத சங்கைகளாகிற இருட்டைப்பகற்றி, பொருளுண்மையை விளக்குவதால் இவ்வுரைக்கு "வேதாந்த தீபிகை" யென்று பெயர்தரப்பட்டதென்க.

இருளைப்போக்குவதில் சூரியன், சந்திரன் முதலிய பெரிய தேசுக்களிருக்க அவற்றின் பெயரையமைத்து வேதாந்த சூரியன் என்பதாதியாகக் கூறாது, வேதாந்த தீபிகையெனப் பெயர்தந்தது யாதுகாரணம் பற்றியெனின், நூலின் அளவுகுறைந் திருக்குந் தன்மைபற்றியாமென்க. மேலும் சூரியன்முதலிய தேசுக்களைப்போன்று பிரம்ம சூத்திராதி பாஷியாதிகள் பலவுள்ளன. அவை யெவர்க்கும் எளிதிலெட்டா; அன்றிக் கருதியபோதெல்லாங் கைகூடா. அன்றி எந்தெந்த விடங்களில் இருளிருக்குமோ, அந்தந்த விடங்களிலெல்லாம் சூரியன் முதலிய வொளிப்பொருள்களைச் செலுத்தச் சாத்தியப்படாது. படாதாகவே, எளிதில் நினைத்தபோது எவ்விடத்துஞ் சூக்குமமாய்த் தேயுவைத் தீபமாக வினியோகித்து அவ்விடத்துள்ள விருளைப்போக்குவதுபோல, ஜன்மாந்திர தீவினைப் பயனுல் கட்டுப்பட்டவர்களது அகவிருளைச் சுருதியுக்தி யனுபவத்தால்விலக்கி, அங்கு புதைந்துகிடக்கும் ஆன்ம (பிரஹ்ம) சொரூபமாய வேதாந்த மெய்ப்பொருளை விளக்கும் உரை வேதாந்த தீபிகையா மென்றறிக.

இந்நூற்கதிகாரியினிலக்கணமும், அவ்வதிகாரிக்குச் சிவஞானபோத மென்றதின் பொருளும், அப்பொருள் வேதாந்த சித்தாந்தமாகிய சமரச சன்மார்க்க முத்திநிலையென்பதையு முதாரண முகத்தானே யுணர்த்துகின்றது.

குமாரதேவர் விஞ்ஞானசாரம் அதிகாரியினிலக்கணம்.

கந்தை தனது சுதர்கையின்முன் றந்த பொருளைத் தானேபின்
சிந்தை மகிழ்ச்சி யுடனிறக்குஞ் செய்தி போல மூவடிவாய்
வந்த சிவரே பிரப்பாக வாங்குந் தனது மாயையினை
இந்த வகையை யுணர்ந்தீயி னிரியும் வினைக ளென்றறிவாய்.

மூன்று வடிவாய் மும்மலத்தை மூன்று பங்காய்த் தான்கொண்டு
மூன்றுங் கெடுத்து நமதுடைய மூன்று பொருளும் பங்காக்கி
மூன்று வடிவுங் கைக்கொளவே மூன்று முதலு மானசத்தே
மூன்று வடிவா மெனப்பொருள்கண் மூன்று மீந்தே பணிபுரிக.

இந்தத் திறனிற் பணிவிடைக ளியற்றி வினைகள் சமமாகில்
அந்தத் தடங்க ளொத்துநிற்கு மந்தத் தராசி னுவேபோல்
புந்திக் கிலேச மேயின்றிப் போதஞ் செவிதாம் வினைகள்கெடும்
சந்திப் பதுவா மப்பொழுதே சத்திநி பாதந் தான்பிறத்தல்.

சத்திநி பாதந் தான்பிறந்து சாற்று மந்தக் கரணங்கள்
சுத்திய தாகி னவ்விடத்திற் றோன்று நான்கு சாதனமும்
எத்திற் றானும் வேறொன்று லெய்தா தெய்திற் றுபினும்பின்
குத்தி மாகிப் போமெனவே கொள்ளார் மேலோ ரீதன்றி.

இந்த நான்கு சாதனமு மில்லா தவர்கட் கொருக்காலும்
அந்த ஞானம் வெளியாகா தங்கி நயனத் தொடுதோன்றிப்
பந்த மறவே யுரைத்திடினும் பாழுக் கிறைத்த நீராக்கும்
முந்த நான்கு சாதனமு முத்தி யடைவோர்க் குறவேண்டும்.

சத்யா சத்ய வத்துவினைத் தகவே பிரித்துத் தானறியில்
கொத்தாய் மற்றை யம்மூன்றுங் கூட வுடன்வந் தவனையுறும்
அத்தா லதுநீ யென்றுரைக்கு மமல வாக்கி யப்படியே
ஒத்தாற் பிரமந் தானேயே யுணருங் குருவி னருளாலே.

சிவம், ஞானம், போதமென்பதின் பொருளுணர்த்தல்.
திருவாதவூரர் புராணம்—திருப்பெருந்துறைச் சருக்கம்.

அண்டமெலாங் கடந்தபொருள் பகரு நூலி னளவுரைப்பார்
தெளிந்தயர்வா ராய்வா ராகித்
தொண்டுபடு மடியார்க ளூற்றென் பான்மேற் றெண்ணூற்
றென் பானென்னுந் தொகுதி சூழ
வொண்டொடியா ளங்கிருப்ப விருப்பா லெய்தி யுடனு
ரைத்துச் சிவஞான முணர்வா ரன்பு
மண்டியகெஞ் சினில்வணங்கி வணங்கார் போல மந்தி
ரிபார் மேன்மையுடன் வந்து நின்றார்.

(இ-ள்.) அண்டங்களெல்லாங் கடந்த பொருளாகிய கடவுளாற் சொல்லப்பட்ட வேதாகமங்களுடைய அளவைகளைச் சொல்லுவாரும், அவைகளைத் தெளிந்து ஆராமைப்படுவோரும், ஆராய்வாருமாகி யடிமைப்படு மடியார்கள் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றென்பது பெயர்கள் சூழும்படி உமாதேவியை யொரு பாகத்திலேயுடைய பரமசிவன் எழுந்தருளியிருக்க, விருப்பத்துடனே யவ்விடத்திலடைந் தன்புபெருகிய மனத்தால் வணங்கிக் காயத்தால் வணங்காதவர்போல மேன்மையுடனே வந்துநின்றார்; உடனே சிவஞானத்தைப் பெறுவாராகிய மாணிக்கவாசகர். எ-று.

உருத்திராக் கிருமணியை யிலங்கு காதி லொண்சிரத்திற் கந்
 ரத்தி லொளிகொண் மார்பிற்
கரத்திலணிந் திலகுதிரு முண்ட மங்கி கண்கரந்த நண்ணு
 தன்மேற் கவினச் சாத்தித்
திருத்திகழும் வேதியனா ரம்பொன் மேனி திகழ்வதுகண் டக
 மகிழ்வார் செங்கை மீது
பொருத்தமுறும் புத்தகமே தையா வென்னப் பொய்மை
 யிலாச் சிவஞான போதமென்றார்.

(இ-ள்.) அழகிய உருத்திராட்சத்தைப் பிரகாசியாநின்ற செவியிலும் ஒளியையுடைய சிரசிலும், கண்டத்திலும், விளங்குகின்ற மார்பிலும், கையிலு மணிந் தொளியையுடைய விபூதியைத் திரிபுண்டரமாக அக்கினிக் கண்ணையொளித்த நல்லநெற்றியிலே யழகுபெறத் தரித்துச் சிறப்புப்பொருந்திய வேதியருடையஅழகிய பொன்னையொத்த திருமேனி பிரகாசிப்பதைக்கண்டு மனமகிழ்ச்சியுறுவாராகிய மாணிக்கவாசகரானவ ரவரைநோக்கி, ஐயா! சிவந்த திருக்கரத்திலே பொருந்தியிருக்கின்ற புத்தகம் என்னவென்று கேட்க, வப்பெரியவர் மெய்மையான சிவஞானபோதமென் றருளிச்செய்தார். எ-று.

என்றலுமே சிவமேது ஞான மேதிங் கிலங்கிவிடும் போத
 மே தியம்பு வீரேல்
அன்றுவட நீழலில்வந் திருந்தா ரீரே யடியேனு முமக்
 கடிமை யாவே னென்ன
நின்றசிவ மொன்றதனைத் தேர்தல் ஞான நிகழ்போதந் தேர்ந்த
 தனைத் தெளித லாமென்
றென்றியநற் பொருள்வினவி நிற்பார் சிந்தை யுருகும்வகை
 யுரைசெய்தா ருவமை யில்லார்.

(இ-ள்.) சிவஞானபோதமென் றவரருளிச்செய்த வுடனே, சிவமாவதென்ன? ஞானமாவதென்ன? விளங்குகின்ற போதமாவதென்ன? இவற்றைச் சொல்லுவீரேயானா லந்நாளில் கல்லாலவிருட்சத்தின்கீ ழெழுந்தருளி யிருந்தவர் நீரே, யடியேனுமுமக் கடிமையாவேனென்று சொல்லச், சிவமென்ற தொப்பற்ற

மெய்ப்பொருள், ஞானமென்றதனைத்தெரிதல், போதமென்றது தெரிந்ததைத் தெளிதலாமென்று பொருந்திய விந்த மேலானபொருளை வினவுகின்ற திருவாதவூரருடைய மனமுருகும்படி யருளிச்செய்தார் தமக்கு நிகரில்லாத குருமூர்த்தமாய்வந்த பரமசிவன். எ-று.

சிவஞானமென்றது:—பரஞானமா மஃது திருவடிஞானம், அருண்ஞானம், பதிஞானம், அத்துவிதஞானம், சுத்தஞானம், சன்மார்க்க ஞானம், தத்துவஞானம், மெய்ஞ்ஞானம், உண்மைஞானம், அபரோக்ஷஞானம், பரமஞான முதலிய பல பெயர்பெறும்.

அபரஞானம் :—சரியை, கிரியை, யோகமெனப்படும் பரோக்ஷஞானமாம். சிவஞானபோதமென்றது :—ஞானத்திற் சரியையாதி நான்குமாகிய சிரவண, மனன, நிதித்தியாசன, சமாதிகாரணமாகச் சாக்ஷாத்காரத்தைக் கொடுக்கு நூலெனப்படும். இதனை யடியில்வரும் திருக்குறலானு முணர்க.

36-ஆம் அதிகாரம்—மெய்யுணர்தல்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

(இ-ள்.) யாதொருபொருள் யாதோ ரியல்புடைத்தாய்த் தோன்றினும் (அத்தோன்றியவிதத்தைக் கண்டுவிடாமல்) தோன்றிய அப்பொருளிடத்திருந்தும் மெய்யாகிய பொருளைக்காண்பது மெய்யுணர்வு. எ-று.

(க-ரை.) எந்தப் பொருளிடத்தும் உண்மைப்பொருளை யறிவதே யறிவென்பதாம்.

(வி-ரை.) சராசரமாகிய பொருள்களிலெல்லாம் உலகத்தார் கற்பித்துக் கொண்டு வழங்குகின்ற கற்பனைகளைக் கழித்துநின்ற உண்மையைக் காண்பதே மெய்யுணர்வென்றபடியாயிற்று. அஃதாவது, அரசன் சேரமானென்றவிடத்தே யரசனென்ப தோர்சாதியும், சேரமானென்ப தோர்குடியு மொருவனிடத்தே கற்பனையாதலால், அக்கற்பனையைவிட்டு அவனை நிலமுதலுயி ரீறாகிய தத்துவங்களின் கூட்டமென்று அறிந்து, அத்தத்துவங்களை நிலமுதலாக அதனதன் காரணங்களு ளொடுக்கிக்கொண்டுபோய் முடிவிலே காரணகாரிய மிரண்டுமில்லாமனிற்பதனையறிதலாம். (இதனல் மெய்யுணர்வினது இலக்கணஞ் சொல்லப்பட்டது.)

இதன்விரிவை ஷை திருக்குறளில் ஞானம் என்னும் வீட்டுநெறிப்பாலில் மெய்யுணர்தலினனும், பரிமேலழகருரையானுங் கண்டுகொள்க.

தற்சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

உ

பொதுப்பாயிரம்.

அவதாரிகை.

இராகத்துவேஷாதி குணங்களும், மங்களாசரணைமுதல் அனுபந்த சதுஷ்டய மீருகிய நான்கினிலக்கணங்களு முணர்த்தல்.

இராகத்துவேஷாதி பதின்மூன்று குணங்கள்.

பரஸ்திரீகமனம் பண்ணு மிராகத்தா னேரிடுந் துன்பமுணர்த்தல்.

அறம்புகழ் கேண்மை யரசு மிழந்தறி வேதுமின்றி
சிறந்த திலோத்தமை சீதையாற் சுந்தோப சுந்தரு
மிறந்தா ரிராவண னும்மிறந் தானவ் விராகத்தினை
யிறந்துநின் பொன்னடி யெய்தச்செய் யானையெழின்முகனே. 1

பதிலபகாரம்பண்ண நினைக்குந் துவேஷத்தின் பலன்.

எழிலா ழிபனு லிறக்கத் தமய னிரண்யகசு
ஒழியாத் துவேஷத்தை யுற்றழிந் தான்றன் னுறவினொடு
மிழியப காரக் கெதிரப காரஞ்செய் யெண்ணமின்றிப்
பொழியா முகவனின் பொன்னடி காணும் புலனருளே. 2

புத்திரகளத்திர தனதான்யாதிகளை மேன்மேலிச்சிக்குங் காமத்தின் பலன்.

புலனழி காமத்தாற் புத்திரர் தானியம் பூமிதனம்
கலனுர் களத்திர மேன்மேற் கருதி நரகசுரன்
பலனவின் மாதர் பதினு யிரஞ்சிறை யிட்டிலட்சம்
நலனிறை முன்னரே நாரா யணனு னசித்தனனே. 3

தன்காரியத்தில் விக்கினம் பண்ணினவனிடத்தி லுண்டாங் குரோதத்தின்பலன்

தனக்கூண் டடுக்கப் பகாசூரன் வீமனைத் தான்சினந்து
தனக்குற வாதியுந் தானு மடிந்த குரோதத்தையென்
றனக்கடை யாதரு டந்திடு வாய்தந்தி மாமுகவன்
றனக்குச் சகோதர சண்முக வாநின் சரண்சரணே. 4

ஒருவர்க் கொருகாசுங்கொடாத லோபத்தின் பலன்.

சரணத் திடாதுலோ பத்துரி யோதனன் சரம்படிய
மரணத்திட் டான்வாழ்வு வல்லுகிர்ச் சிங்கம்போ லவர்கட்குஞ்
சரணத்து லோபத்தைக் கன்ன னறியாது கண்ணனருண்
மரணத்தும் பெற்றநல் வாழ்வருள் வாய்மயில் வாகனனே. 5

தான்சம்பாதித்த தனமாதியில் பிரியமோதப் பிரமோதமாய்வரும்
போகத்தின் பலன்.

கனம்வன்ன ராமன்றன் மாதுர்சொற் காத்திடக் கானடையத்
தனமாதி யின்மகன் மோகத்தான் மாண்டான் றசரதனும்
மனமாயா மோகத்தை மாற்றிப் பரதன் மனமடைய
வனமயில் வீரன் மலரடி யேத்தி வணங்குவனே. 6

ஐஸ்வரிய கெர்வத்தால் கிருத்தியா கிருத்தியந் தெரியாதுவரும் மதத்தின் பலன்.

வன்மனக் கார்த்தவீர் யார்ச்சுன னாதர் வந்தவுடன்
தன்னைஸ் வரிய மதத்தான் மதியாமை தானறிந்து
கொன்றான் பரசுரா மன்னென் றறிந்தக் குணம்விடற்கு
வென்றூரு கையநின் மெய்யடி யார்தொண்டு வேண்டுவனே. 7

மற்றையர் சுகங்காணச்சகியாத மச்சரத்தின் பலன்.

வேண்டேன் பிறர்சுகம் வேண்டாத மச்சரம் வேண்டிமுன்னாண்
மாண்டான் சிசுபாலன் மாதரு மன்ராஜ சூமகத்தில்
வேண்டக்கண் ணன்கிர தாம்பூலம் வாங்க வெதும்பிமன
மீண்டுதன் றுக்கம் பிறர்க்கு வரவெண்ணு மீரிசையே. 8

தனக்குவந்த துக்கம் பிறர்க்கும் வரவேண்டுமென்றும், தன்சுகம் பிறர்க்கு வாராதென்று நினைக்கும் ஈரிசையசூசையாகிய விரண்டின் பலன்.

ஈரிசை யைபரு ணட்சத னெண்ணிப்பின் வாணனுடன்
போரிட்டு மாய்ந்தனன் பொல்லா வசூயைப் பவுண்டரிகன்
பேரிரு வர்க்கும் பெறவாசு தேவனைக் கண்ணனுடன்
போரிட்டு மாய்ந்ததாற் போற்றுவன் றன்னிற் பிறர்சுகமே. 9

தான்செய்த யாகாதியைப் பலரும்மெச்ச நினைக்கும் டம்பத்தின் பலன்.

தன்யாக முந்தரு மம்யாரு மெச்சிடத் தானினைந்து
முன்னு ணபூருவ மன்னன் மொழியத்தூர் வாசரிஷி
என்னே யிதுடம்ப யாக மெனமுனிந் திடழிந்தான்
சின்மயி லோய்டம்பஞ் சேராத புத்தித் திடமருளே. 10

புத்திராதிசம்பத்துகளில் தனக்கு சமானமில்லையென்னுந் தர்ப்பத்தின் பலன்.

புத்திர மித்திரர் பொன்னு திபல போக்கியமுஞ்
சத்திய லோகத்துந் தன்போ லில்லையெனுந் தர்ப்பத்தினு
லெத்தே வருக்குஞ் சதகண்ட ராவண னின்னல்செயச்
சித்குண நாரதன் சீதையாற் கொன்றிடச் செய்தனனே. 11

அடா என்னையறியாயா? நான்பிடித்தகாரியம் விடுவேனு? நீயா வெனக்கு புத்திசொல்லுகிறவனென்றுவரும் அகங்காரத்தின் பலன்.

செய்தல் விடாவகங் காரப்போர் செய்மது கைடவரை
அய்தவாண் டின்பின் னரிவரங் கேண்மின் னளிப்பலென
ஓய்நீயே கேளென வுத்தமன் கேட்ப வுடலும்விட்டார்
மெய்ஞ்ஞானம் பெற்றிவை மேவா வகையருள் வேலவனே, 12

இச்சை, பக்தி, சிரத்தை.

நரகஞ் சரீரமே நல்லறி வாளர்க்கு ஞானமிலார்
பரம சுகமெனப் பற்றுவ ரப்பதின் மூன்றினுடன்
நிரவய மாதற்கு நீக்கல் பசிதாக நீர்மலமாஞ்
சிரத்தையு நின்னடிப் பத்தியுந் தந்தருள் சேவலனே. 13

மங்களாசரனை, யுரையிலக்கணம், அன்னுவயவிலக்கண, மனுபந்தசதுஷ்டய மென்னுமிந்நான்கு மெல்லா நூன்முகத்து முரைக்கவேண்டுவதாதலி, னிந் நான்முகத்தும் பொதுப்படவுணர்த்துகின்றது.

1. மங்களாசாரனை:—வஸ்துநிர்த்தேசம், வஸ்துவாழ்த்து, வஸ்துவணக்க மெனமூவிதமாகும். இவற்றிற்குமுறையே உதாரணம் மாமுகன், சரணம், தலையிற்கொள்ளுதல்.

2. உரையிலக்கணம்:—இலக்கணங்கள் வழுவின்றியமையப்பெற்ற பதமும், பதப்பொருளும், பதசாரமும், அறிந்துகொள்வான்வேண்டி வினவுதலும், தக்கவிடைகொடுத்தலுமாகிய இவ்வைந்தும் வியாக்கியானங்களினிலக்கணமெனப்படும்.

3. அன்னுவயவிலக்கணம்:—இல்லாதவிடத்துக் கோவையாகச்சொல்லப்படும் விசேடணமும், விசேடியமும், கருத்தா (எழுவாய்)வும், கரும (செய்யப்படுபொருள்)மும், கிரியை (பயனிலை)யுமாகியவைந்து மன்னுவயவிலக்கணமெனப்படும்.

4. அநுபந்தசதுட்டயம்:—ஒர்நூலுக்கியைந்த விஷயமும், சம்பந்தமும், பயனும், அதிகாரிகளுமாகியநான்கு மநுபந்தசதுட்டயமெனப்படும்.

விசேஷண விசேஷியமாவது :—சச்சிதானந்தமுதலிய விலக்கணங்களமைதற்கியைந்த விலக்கியம். எனவே, இலக்கியத்தினமைதி யிலக்கணமென்ருயிற்று. இங்கேயிலக்கியமெனல் பாவஸ்துவை. மோதிரத்திற்கு விரலென்ருற்போல, சச்சிதானந்தமுதலிய விலக்கணங்கட்குப் பாவஸ்து விலக்கியமெனக்கோடல் மதத்தர்கள்சம்மதம். விரலுக்கு மோதிரமென்ருற்போல, பாவஸ்துவாகிய விலக்கியங்கண்டதற்கியைந்த விலக்கணங்கோடல் வேதாந்திசம்மதம். அநுபந்தம் கூடிநிற்றல். அநு உபசர்க்கம். விடயமாவது சீவேசுவராதேகத்துவம், சம்பந்தமாவது பரமசிவத்தோடு வேதாந்தநூற்கு முரணுருதறையப்படுதலைக் கூறுந்தன்மையாம், பயனாவது சகலதுன்பங்களையுமொழித்து நித்தியானந்தபதத்தையடைதலாம், அதிகாரியாவது சாதனசதுட்டயமுடையவனும்.

1. **விஷயம்** :—சீவப்பிரஹ்ம வபேதமாகியவைக்கியம்.

2. **சம்பந்தம்**:—சம்பந்திகளின்வேரு யிருபொருள்களினுமுள்ளதாயொன்றையொன்று பற்றியுள்ளவிணக்கம். அல்லதொற்றுமையென்னு முணர்ச்சியைத்தருவது. அவையும் பிரதிபாதகப் பிரதிபாத்திய பாவசம்பந்தம், ஜனகஜந்நியபாவ சம்பந்தம், கர்த்திரு கர்த்தவ்வியபாவ சம்பந்தம், பிராபகப் பிராப்பியபாவ சம்பந்தமென நான்குவிதமாயுமிருக்கும்.

1. **சாத்திரத்துக்கும் விஷயத்துக்குமுள்ளது பிரதிபாதகப் பிரதிபாத்தியபாவசம்பந்தம்** :—சொல்லுகிறது பிரதிபாதகம் சொல்லப்படுகிறது பிரதிபாத்தியமாதலின் விஷயத்தை விளங்கச்சொல்லுகிற சாத்திரம்பிரதிபாதகம், சொல்லப்படுகிறவிஷயம் பிரதிபாத்தியமாம்.

2. **சாத்திரத்துக்கும் ஞானத்துக்குமுள்ளது ஜனகஜந்நியபாவசம்பந்தம்** :—உற்பத்திசெய்கிறதுஜனகம் உற்பத்தியாகிறது ஜந்நியமாதலின் சாத்திரம் விசாரமூலமாக ஞானத்தையுற்பத்தி செய்கின்றமையால் ஜனகம்; ஞானம் விசாரமூலமாக உற்பத்தியாகின்றமையால் ஜந்நியமாம்.

3. **அதிகாரிக்கும் விஷயத்துக்குமுள்ளது கர்த்திரு கர்த்தவ்வியபாவ சம்பந்தம்** :—செய்கிறவன் கர்த்திரு செய்யத்தக்கது கர்த்தவ்வியமாதலின் விசாரஞ்செய்யுமதிகாரி கர்த்திரு; செய்யத்தக்கவிசாரங் கர்த்தவ்வியமாம்.

4. **அதிகாரிக்கும் பலத்துக்குமுள்ளது பிராபகப் பிராப்பியபாவ சம்பந்தம்** :—அடைகிறவன் பிராபகன் அடையப்படுகிறது பிராப்பியமாதலின் பலத்தையடைகிறவதிகாரி பிராபகன்; அடையப்படுகிறபலம் பிராப்பியமாம். இன்னும் வேருசம்பந்தங்களுமுள.

எந்தவஸ்துவுக் கெதனுடன்சம்பந்தமுளதோ அந்தவஸ்துவுக் கதுவிஷயத்தி லுபயோகமுண்டு. எந்தவஸ்துவுக்கெதனுடன் சம்பந்தமில்லையோ அந்தவஸ்துவுக் கதுவிஷயத்தி லுபயோகமுண்டாகிறதில்லை: குலாலாதிகளுக்குக் கடவிஷயத்திற் சம்பந்தமுண்டு ஆதலின் குலாலாதிகள் கடவிஷயத்தி லுபயோகப்படு

கின்றன; கண்ணுக்குக் காற்குகாயத்துடனுஞ் சம்பந்தமின்று ஆதலின் கண்ணானது காற்குகாபவிஷயத்தி லுபயோகப்படுகிறதில்லே. இங்ஙனஞ் சாத்திரத்துக்கும் பிரஹ்மத்துக்கும் பரஸ்பாசம்பந்த மில்லேயாயின் பிரஹ்மவிஷயத்தில் சாத்திர முபயோகப்பட மாட்டாது; அங்ஙனமே சாத்திரவிஷயத்தில் பிரஹ்மத்தி லுபயோகஞ் சித்திக்கமாட்டாது. பாஸ்பர வுபயோக நிச்சயவேதுவாகக் கூறியிருப்பதால் வியர்த்தமல்ல.

3. பிரயோசனம்; பரமம், அவாந்தரமென விருவகையாம்:— வாழைக்கண் வைத்தவனுக்கு வாழைக்கனி பரமப்பிரயோசனமும், அதனைத்தாத் தக்க தண்டுஇலே நாருருவமாகியமரம் அவாந்தாப் பிரயோசனமு மாவதுபோல; துக்கநிவர்த்தி சுகப்பிராப்திமயமாகிய மோக்ஷம் பாமப்பிரயோசனமும் பாமாத்மவைக்கியஞானம் அவாந்தாப் பிரயோசனமுமாம்.

அற்றேல் அனர்த்தநிவிருத்தி, பரமாநந்தப் பிராப்தியாகியவிரண்டில் அனர்த்தத்தின் நிவிருத்தியென்ப தபாவரூபமாம். பாமானந்தப் பிராப்தியென்பதுபாவரூபமாம். அபாவமும் பாவமு மொன்றற்கொன்று விரோதிகளானமையாலிரண்டுஞ்சேர்ந்து மோக்ஷமாக வொரேயிடத்தி லொரேகாலத்தி லிராதாதலின் சாத்திரத்திற்குச்சொன்ன பிரயோசனஞ் சித்தியாதெனின். சர்ப்பநிவிருத்தி யதிஷ்டான இரச்சுரூபமாகவே சித்திக்கின்றமையால் அது பாவரூபமே யாவதுபோலக் காரணசகிதசகத்து நிவிருத்தியு மதிஷ்டானப் பிரஹ்மமே யாமெனச்சுருதிகள் கூறுகின்றமையா லனர்த்தநிவிருத்தியும் பாவரூபமாகிய பிரஹ்மமேயாம். ஆதலினது பிரஹ்மத்தோடு விரோதமின்றி யபேதமாகிச் சாத்திரத்திற்குப் பிரயோசனமாகச் சித்திக்கும்.

இஃதன்றி யொரேவஸ்துவின் பாவரூபமு மபாவரூபமு மொரேயிடத்தி லொரேகாலத்திற் பிரதீதியாகுமென்பது விரோதமேயன்றி யொன்றின்பாவரூபமு மற்றொன்றினபாவரூபமு மொரேயிடத்தி லொரேகாலத்திற் பிரதீதியாகுமென்பது விரோதமன்றாகும். எங்ஙனமெனின் கடம்படமன்றென வந்நியோந்நியாபாவம் நிகழுமிடத்திற் கடத்தின்பாவரூபமும் படத்தினபாவரூபமு மொரேயிடத்தி லொரேகாலத்திற் பிரதீதியாகின்றன இங்ஙமே சுழுத்தியிற் சுகத்தின் பாவரூபமுந் துக்கத்தினபாவரூபமு மொரேயிடத்தி லொரேகாலத்திற் பிரதீதியாவது சருவசீவர்களி னநுபவமாகவிருக்கின்றது. ஆதலின் பாமானந்தப்பிராப்தியு மனர்த்தத்தி நிவிருத்தியுமாகிய பிரயோசனஞ் சித்திக்குமென்பதற் கையமின்றென்க.

சகத்துநிவிருத்தி யதிட்டானப்பிரஹ்ம
மென்பதற்குப் பிரமாணம்வருமாறு ரிபுகீதை ௩௯-வது அத்தியாயம்.

அாவுமுதற் பலவிதமாய்த் தோன்றினுலு மதிட்டான
விரச்சுவினே யாய்ந்தறிந்தால்

பருள்வடிவா மரவுமுத லனைத்துமந்த மாசற்ற
விரச்சுவடி வாவதேபோல்
விரவுசக முதலியவாய்த் தோன்றினும் விமலவதிட்
டானபரப் பிரமந்தன்னை
யருமையுட னன்றாக வாய்ந்தறிந்தா லவையாவு
மகண்டபரப் பிரமமாமே.

குமாரதேவர்—அத்துவிதவுண்மை.

பழுதை யதனிற் றோன்றியிடும் பாம்பை யுள்ள படிநோக்கில்
பழுதை யாயே தோன்றியிடும் பாம்பு மதுவாய் விடுமஃதின்
பழுதில் சிவத்திற் றோன்றியிடும் பன்மை யுலகை நோக்கிபிடின்
பழுதில் சிவமே யாய்த்தோன்றும் பன்மை யுலகு மதுவாய்ப்போம்.

தோன்றி விளங்கும் பொருளெல்லாங் வதால்வே தாந்த விசாரணையில்
ஊன்றி நோக்கி யனுதினமும் யூக மதனிற் பரிசயித்தால்
தோன்றி விளங்கு மறிவொன்றே சொன்மாத் திரமாய் விடுமுலகம்
ஊன்றி நோக்கா தவர்கட்கே யுளது போலத் தோன்றியிடும்.

ஏக மாகி நின்மலமா யிருக்கு நமக்கிப் பந்தமெனும்
மோகம் வந்த தேதென்று முன்பின் பாரா திப்பந்தம்
போக வழியே தெனநாடிப் பொருந்தும் வேத விசாரணையால்
யூக மதனிற் சிதைக்கினதி னுள்ள வியல்பு பின்றோன்றும்.

ஊனும் போக மெமதென்றே யுன்னல் விசார மிலாமையினல்
நீநா னவைக ளிவைகளென நிலைபோல் விளங்கி யிடுமிந்த
நானு விதமாஞ் சகமுழுது நாமே யன்றி வேறில்லை
தானாய் நோக்கிற் றானாகுஞ் சகமாய் நோக்கிற் சகமாகும்.

மாயை யெனுமிவ் வுரைக்கருத்த மதிக்கின் யாதொன் றிலாததுவே
மாயை யெனவிப் படியிருக்க மதிப்ப ரதனை யிருவகையாய்
மாயை மெய்யென் றுரைத்திடுவர் மயக்கப் பட்டுத் தனைமறந்தோர்
மாயை பொய்யென் றுரைத்திடுவர் மயக்க நீங்கித் தனையறிந்தோர்.

4. அதிகாரி :—மலம், விக்ஷேபம், ஆவரணமென்னு மூன்றுதோடங்களில் ஆவரணதோடமாத்திர முள்ளவனுயுஞ் சாதனசதுட்டயசகிதனுகியும் யுத்திசாமர்த்திய புத்திமானுயுமிருப்பவன்; இவன் சாத்திரவிசாரமூலமாக வாத்மஞானத்திற்கு பாத்மஞானமூலமாக மோக்ஷத்திற்கும் அதிகாரியாவதா லதிகாரியாம்.

1. **மலதோடமாவது** :—தான் பூர்வசன்மங்களிற் செய்த நிஷித்தகன்ம பலமாகச் சித்தத்திற் பொருந்தியுள்ள பாவ சமஸ்காரமாகிய அசுபவாசனைகளாம்.

அம்மலதோடம் வேதயுக்தமான கன்மகாண்டங்களிற்கூறிய நிஷ்காமகன்மம், சகலசீவர்களிடத்தினும் வைக்கப்பட்டதயை, ஈசுரநாம உச்சாரணமாகிய சாதனங் களா னிவிருத்தியாகுமெனவறிக.

2. **விக்ஷேபதோடமாவது** :— சித்தவிருத்தி சிரவணாதிகளிலேனு,மாத் மசொரூபத்திலேனு நிலைபெறுமலந்நியவிடயங்களைப்பற்றி நாநாவிதமாய்ச்சலித் தல்.

அவ்விக்ஷேபம் வேதயுக்தமான உபாசனாகாண்டத்திற்கூறிய ஈசுவரத்தியா னங், குருத்தியான, மஜபாமந்திரம், மகாவாக்கியம், பிரணவம், ஈசுவரநாமோச்சார ணமாகிய சாதனங்களா னிவிருத்தியாகும். அஜபாமந்திரம் வாக்கினாற்செபிக்கப் படாமற் சுவாசம் வெளிப்படும்போது ஸோஎன்னு மொலியோடு முட்செல்லும் போது ஹ ஃஎன்னு மொலியோடுந் தானேயுதயமாகிக்கொண்டிருப்பது மகாவாக் கியப்பொருளையுடையதுங் குருமுன்னிலையிற் றெளிந்துகோடற் பாலதுமாகும். இதனைச்சோபாதிக அஜபாகாயத்திரி யெனவுங்கூறுவர்.

3. **ஆவரணதோடமாவது** :—உருவவிஷயங்களையந்தகாரமுஞ் சூரியனை மேகமுஞ் சலத்தைப்பாசியு மறைத்திருப்பதுபோலச் சுயம்பிரகாசமாகிய ஆத் மாவை யறியக்கூடாதவண்ண மறைத்திருப்பது.

அவ்வாவரணம், அந்தகாரஞ் சூரியோதயத்தால் நிவிருத்தியாவதுபோல, ஞானோதயத்தா னிவிருத்தியாகும்.

1. **நித்தியாநித்திய வஸ்துவிவேகமெனல்** :—ஆன்மாவே நித்தியமெ னவு மவ்வான்மாவா லறியப்பட்ட தேகமுதலிய விடயமனைத்து மநித்தியமென வும் பிறித்தறிதல்.

2. **இகமுத்திரார்த்த பலபோக விராகமெனல்** :—இம்மைக்கண்ணு மறுமைக்கண்ணு மெய்தற்பாலவாநின்றுள்ள விடயபோகமனைத்துங் கணத்தி னில்லாதழியுமென்று மவைதுன்பங்கட் கிடையவனவென்றுங்கண்டு மனம்பற்றற விடுதலெனப்படுவதாகும்.

3. **சமாதிசட்க சம்பத்தியாவது** :—சமை, தமை, திதீக்ஷை, உபரதி, சிரத்தை, சமாதியென்பனவாம்.

(1) அவற்றுள்சமையெனல் :—மனமாதிய வகக்கரணங்களை யடக்குதலும் (2) தமையெனல் :—இருவகையிந்திரியங்களையும் விடயப்பராக்கிற் செல்லாத டக்குதலும். (3) திதீக்ஷையெனல் :—காமக்குரோதாதிகளை மேலெழவொட்டாது, தணியச்செய்தலும். (4) உபரதியெனல் :—சரியை, கிரியை, யோகங்களுக்கி யைந்த சகலசேஷ்டைகளையுஞ் சுமையாகவே கண்டுவிடுதலும். (5) சிரத்தை யெனல் :—சுருதியையுங் குருவையு முண்மைமொழித்துணிவினால் மெய்யாக நம்புதலும். (6) சமாதியெனல் :—குருவுபதேசத்தை மனதிலையந்திரிபறக் கோடலுமாம்.

4. முமுட்சத்துவம்யாதெனில் :—சிலதினவுபவாசத்தாற் பசியதிகரித்த வன் ஸ்திரீயையும் நடனகீதமாதிகளையும் விரும்பாம லன்னத்தைமாத்திரமும், சிரோமத்தில் நெருப்புப்பற்றப்பெற்றவன் சேற்றையும் பனித்துளியையும்விரும்பாம லிறங்குதுறையி லமிழ்த்தத்தக்க தடாகசலத்தைமாத்திரமும் விரும்புவதுபோலத் தாபத்திரயதுக்கங்களை நிவிருத்திக்கும்பொருட் டநித்தியமாகிய சாலோகாதிபதமோக்ஷங்களைத் தாத்தக்க கன்மம், பக்தி, யுபாசனையாதிகளை விரும்பாமல் நித்தியமாகிய ஐக்கியமோக்ஷத்தைமாத்திரமதிதீவிரமாக விரும்புதலாம். ஆதலி னிந்தநான்குசாதனமு முடையவனே யதிகாரியெனப்படும்.

இனிமாணாக்கன் றனதாசிரியருக் கன்புசெய்யுநிலைமை ஆத்தம், அங்கம், தானம், சற்பாவமெனநான்காம். அவற்றுள் ஆத்தமெனல் ; ஆசிரியனுக் கவரிட்டப்படிசெய்யுங் கிர்த்தியங்களாம், அங்கமெனல் ; மேலாயகுருபரனது பாதசிசுருஷைசெய்தலாம், தானமெனல் ; மிக்கவருளையுடைய குருபரனுக்குரித்தாயுள்ள வீடுநிலம்முதலியவற்றை விக்கினம்வாராதுகாத்தலாம், சற்பாவமெனல் ; உண்மையாகக்கண்ட சிவவடிவமென்று நம்புவதாம்.

எவருமதிக்கத்தக்க கருமகாண்டம், பத்திகாண்டம், மேலாயஞானகாண்டமெனக்கூறு மிம்மூவகையா லதிகாரிகளும் மூவகையாவர். இவரன்றி வேறதிகாரிகளுமுளர்.

உடம்பையு மதுகாரணமாகவருங் குடும்பத்தையும் யானெனதென்னு மயக்கமுள்ளோன் கருமகாண்டியெனப்படும் ; தனதுசற்கருமங்காரணமாக வியற்றப்படுங் கிரியைகளனைத்துந் தனதெனக்கொள்ளாது ஸ்திரமாகநின்று ஈசுரார்ப்பணஞ்செய்பவனே பத்திகாண்டியெனப்படும் ; தனதுதிரிகரணங்களாலு மியற்றப்படுங் கருமமனைத்தினுக்கு முடன்படாம லவற்றிற்கு சாட்சி தானென்றிருப்பவனே யறியாமைகடந்த நல்லஞானகாண்டியெனப்படும். இன்னும் வேறுமுளரென்ற கருமி, முமுட்சு, அப்பியாசி, அனுபவி, ஆரூடனென்னுமைவருள், மூடத்தோடு தன்சாதிக்குரிய கர்மானுஷ்டானத்தையே விடாதுபற்றி யினிவரும்நூறு பிறப்பினுள் சீவன்முத்தனாகத் தக்கவனே ஒள்ளியகருமி யெனப்படுவான் ; இந்த்ப்பெரிதாகியவுலகஞ் சத்தியமெனக்கருதி யியற்றும் புறக்கருமங்களுக்கு மாறாய ஞானவிசாரஞ்செய்யுஞ் சிந்தையுடையவனாய் இனிமூன்றுஜனனத்திற் சீவன் முத்தனாகத்தக்கவனே மதித்தற்கரிய முமுட்சுஎனப்படுவான் ; உலகங்கனவெனக்கண்டு தனதுள்ளம் ஆத்மானுஷ்டானத்திற்பொருந்தி, யினிவருமிரண்டு ஜன்மத்திற் சீவன்முத்தனாகத் தக்கவனே யப்பியாசியெனப்படுவான் ; தனதுவீட்டைப்பற்றியும், உலகத்தைப்பற்றியு மியற்றும்விவகாரஞ் சற்றுந்தனது நினைவிற்றாக்காது சுயம்பிரகாசநாட்ட மேலிடத்தக்க விவேகத்தையடைந்து, ஓர்பிறப்பிற்றானே சீவன்முத்தனாகத்தக்கவ னனுபவியெனப்படுவான் ; உலகிருப்புச் சற்றுந்தோன்றாது தன்பால்விளங்கும் மெய்ஞ்ஞானத்தா லுண்மைமுத்தனாக விளங்குபவன்யாவனோ, அவனே யாரூடனெனப்படுவான்.

இவரன்றியும் விவேகத்தினாலேனும், விரத்தியாலேனுந், தெய்வகதியாலேனும் ஐக்கியமுத்தியைப்பெறு மூவதிகாரிகளுள ரவருள் சோதனைஞாயம்பொருத்

தமென்னு மிம்மூன்றுமுகத்தா லேயந்திரிபறச் சுருதியுத்தி தெளிந்தவிடத் தாசிரியன தருட்கண்படத் தனதெதார்த்தம் விளங்கலை விவேகத்தாலெனவும்; விரத்தி மேலுற்றுழி யாசிரியனுபதேசித்த அக்கணத்திற் றனதெதார்த்தம் விளங்கலை விரத்தியாலெனவும்; யாதோர்முன்னிலை குருவின்றி யறிவுக்கறிவா விளங்கலைத் தெய்வகதியாலெனவுமாம்.

மாணுக்கன் அதிகாரபேதத்தா லாசிரியரும் போதகன், வேதகன், நிகிதன், காமியன், சூசகன், வாசகன், காரகன், விகிதனென் றெண்வகையினராகும். அவருண் முதனூலான மகாவாக்கியத்திலுள்ள சிறந்தஅர்த்தங்களை யையந்திரிபுறுது கூறுபவன், போதகாசிரியனும்; தத்துவங்க ளனைத்தையுங்களைந்து உண்மை ஞானத்தை விளக்கிவிப்பவன், வேதகாசிரியனும்; வசியமுதலிய அஷ்டகருமங் களா லிம்மைக்கியைந்த இன்பமு மறுமைக்கியைந்த துன்பமுங்கொடுப்பவன், நிகிதாசிரியனும்; காமியார்த்தத்துக்கியைந்த அறநெறியை யதினின்றுஞ்சற்றும் வழுவுறுதுநிற்கப் போதித்து, இம்மைமறுமை யிரண்டிடத்துஞ் சுகபோகங் குறையாதருள்பவன், காமிகாசிரியனும்; தனது விவேகத்திஞற் சமைதமைமுதலிய சட்குணங்களையு மொருங்கேவரச்செய்பவன், சூசகாசிரியனும்; கருத்துப்பொருள் காட்சிப்பொருளாகின்றுள்ள விடயமனைத்தும் அதிஷ்டானமன்றுதலால் மித்தையேயெனக்காட்டி, ஆரோபமெனற்குச் சற்றுமுடன்படாத ஆன்மசைதன்யத்தில் நேரே பிரியம்விளையச்செய்வோன், வாசகாசிரியனும்; இவ்வுமாறு சீவேசுவர ஐக்கியஞானத்தை யினையதெனவிளக்குவிப்போன் காரகாசிரியனும்; குற்றமற்றதாயு மென்றுநிலைபேறுடையதாயுமிருக்கின்ற முத்தியையருளத்தக்கவன், விகிதாசிரியனும்.

வசியாதி: வசியம், மோகனம், தம்பனம், ஆகருஷ்ணம், உச்சாடனம், வித்துவேஷணம், பேதனம், மாரணமெனஎட்டாம். அவற்றுள்ராஜவசியம், ஜனவசியம், ஸ்திரீவசியமுதலியவற்றை வசியமெனவும்; சுழுத்தி, விடம், மூர்ச்சைமுதலியமாயங்களைச்செய்தல் மோகனமெனவும்; அக்கினிஸ்தம்பம், ஜலஸ்தம்பம், சிம்மஸ்தம்பம், இந்திரியஸ்தம்பம், கட்கஸ்தம்பம், கதிஸ்தம்பம், ரூபஸ்தம்பம் முதலியவைகளைச்செய்வது ஸ்தம்பனமெனவும்; வஸ்திராபரண வாகன வனிதாதி வஸ்துக்களை நிசஸ்தானத்தி லிருந்து வாச்செய்வது ஆகருஷ்ணமெனவும்; பூர்வசுகாசரித நிரசனாத்மகஞ்செய்த லுச்சாடனமெனவும், பிராணசிநேகரீங்க அன்னியோன்னிய விரோதகாரணஞ்செய்தல் வித்துவேஷணமெனவும்; பாதுகாசித்தி, யஞ்சனசித்தி, குளிகாசித்தி, மூலிகாசித்தி, ரஸவாதமுதலிய சித்திகளைச்செய்தல் பேதனமெனவும்; அபிசார கன்மஜனித வியாதியாதிகளி லிருந்தகால மிருந்து மிருத்துவாச்செய்வது மாரணமெனவுங்கொள்க.

முன்னர்க்கூறிய சீடர்களுக்கு ளதிதீவரனுகியவொருவன் தாபத்திரயாக்கினி மேலிட்டா லீடணத்திரயத்தைக்கடந்து; எல்லாரிடத்தும் வழங்கப்படு நானென்பவன்யாவன். இன்னனுக்கிப்பவம் வந்தவாறெங்ஙனம்? யாதுகாரணத்தால்நசிப்பது; என்றுராச்சியுடையோனுய்த் தனதுகையிற் றூயமலர்கொண்டுசென்று சற்குரு வினையனெனக்கண்டடைந்து அவாதுசன்னிதியிற் பணிந்தெழுந்து

அன்பாற்றன துபயகரங்களையுஞ் சிரமேற்குவித்துநின்று நாவாரத்துதித்து அருளேவடிவா நின்றுள்ளகுருவே ! எனதுபாசநாச மெங்ஙனமெய்துமென இரந்து கேட்டல் மாணுக்கனது நெறியாநின்றுள்ள வுபசன்னத்துவ மெனப்படும்.

அங்ஙனம் வினவியமாணுக்கனது பக்குவமுணர்ந் தருளானோக்கி நீயாதொன்றிற்குமஞ்சாதே ; யாம்விளக்குவதைக் கடைப்பிடிதியென்று தனதபயாஸ்தத்தை யவனதுசிரசில்வைத்துச் சுருதியினாலும், யுத்தியினாலும் அவனுக்கனந்தஜன்மமாநின்றுள்ள அநாத்மபுத்தியை யொருங்கேயொழித்து, தாதான்மியவாக்கியத்தினு வினையதென் றெட்டியறிதர்கரிய தத்துவக்குழாங்களுள் யாதொன்றுமியல்லை, பிரஹ்மசொரூபமேநீயென் றெதார்த்தநிலையை விளங்கவுணர்த்த லாசிரியனதுபதேச மெனப்படுவதாம்.

அவ்வுபதேசமும் உத்தேசம், இலக்கணம், சோதனையெனமூன்றுவகையாம் ஆசிரியர் நீபிரமமென லுத்தேசமெனவும் ; அதற்குரிய நிலைகளைச்சொல்ல விலக்கணமெனவும் ; அப்பிரமம்நீயெனவிளக்கி யவ்விலக்கனங்களையு மொக்கக்காட்டல் பரிட்சையெனவுங்கொள்க.

அங்ஙனமாய பரம்வபாருளை யுணர்ந்தடைதற்குப் பிரமாணங்ங்ள் : பிரத்தியட்சம், அனுமானம், வேதம், உவமானம், அருத்தாபத்தி, அபாவம், சம்பவம், ஐதிகமெனஎண்வகைப்படும். இதனைமூன்ருஞ்சூத்திரவுரையில் விளக்குதும்.

திருமந்திரம்—ஏழாந்தந்திரம் உஎ-வது சற்குருநெறி.

தாடந் தளிக்குந் தலைவனே சற்குரு
தாடந்து கன்னை யறியத் தரவல்லோன்
ருடந்து தத்துவா தீதத்துச் சார்சிவன்
ருடந்து பாசந் தணிக்கு மவன்சத்தே.

(இ-ள்.) திருவடிதீட்சைபண்ணி ஞானோபதேசஞ்செய்யுந்தலைவனே சற்குருநாதன், சாதனமாகிய திறவுகோலைத்தந்து தன்னைத்தானறியும்படிசெய்த ஆசிரியனது திருவடிகட் கடிமையாகித், தத்துவாதீதமாகிய துரியத்திற்பொருந்திபசிவனைச் சிவத்துக்குணவாக்கிப் பஞ்சமலங்களையுங் கெடுக்கவல்லவனே சீவன்முத்தனுவான்.

பாசத்தை நீக்கிப் பரனோடு தன்னையு
நேசத்து நாடி மலமற நீக்குவோ
ராசற்ற சற்குரு வாவோ ரறிவற்றுப்
பூசற் கிரங்குவோர் போதக் குருவன்றே.

(இ-ள்.) இருவகைப் பற்றுக்களையுமொழித்து, சிவத்தோடு சேடனதறிவை யேகமாகும்படி கிருபாநோக்கம்வைத்துப் பஞ்சமலங்களையுமொருங்கே நாசஞ்செய்யத்தக்கவரே குற்றமற்றசற்குருநாத னெனப்படுவோர், ஞானஞ்சிறிது மில்லாதவர்களாய் வயிறுவளர்த்தற்குந் தன்னைப்பிற ரருளுடையாரென பெச்சுதற்பொருட்டு மானந்தபாஷ்பம்போ லழுதுகாட்டுவோர் ஞானசிரியரல்லவாகும். (எ-று.)

குருவென் பவனே வேதாக மங்கூறும்
பரவின் னாகிச் சிவயோகம பாவித்
தொருசிந்தை யின்றி யுயர்பாச நீக்கி
வருநல் குரவன்பால் வைக்கலு மாமே.

(இ-ள்.) ஆரூடனல்ல தனுபவியென்னு ஞானசிரியனே வேதாகமங்களின்பொருளை யையந்திரிபறவுணர்த்தும் (அங்ஙனமின்றேனும்) பிரமானந்தசுகத்தை யுடையோனாகியும் யாதோர்விகற்பசிந்தையுமின்றிச் சிவயோகத்திற்சந்ததஞ் சிந்தையுடையோனாகியும் மேலுமேலுமுயர்வதான பஞ்சமலங்களையுங் கெடுத்துவரு மப்பிபாசஞானிகளிடத்து மன்புவைத்துக் கேட்டலுமாம். (எ-று.)

அசத்தொடு சத்து மசத்சத்து நீங்க
விசைத்திடு பாசப்பற் றீங்கறு மாறே
யசைத்திரு மாயை யணுத்தானு மாங்கே
யிசைத்தானு மொன்றறி விப்போ னிறையே.

(இ-ள்.) அகம்புறமெனச்சொல்லப்பட்ட இருவகைப்பற்றுக்களு மீங்கொழிந்துபோம்படி, சுத்தமசுத்தமாகிய இருமாயையு மணுத்துணையுமில்லாமற் கெடுத்து, அதுபோல; அறிவு, அறியாமை, அறிவறியாமையுமாகிய சீவத்வத்தையு மொழிந்துபோம்படிசொல்லி, ஒப்பற்ற ஏகசைதன்னியவைக்கியத்தைத் தெரிவிப்போனே குருவாகியசிவமாம். (எ-று.)

ஏறு நெறியே மலத்தை யெரித்தலா
லீறி லுரையா லிருளை யறுத்தலான்
மாறிற் பசுபாசம் வாட்டலால் வீடுக
கூறு கரனே குருவா மியம்பிலே.

(இ-ள்.) ஐயந்திரிபற்றதன துபதேசமொழியால், அகச்சமாதியின்கண் கன்மமலத்தை நீறுபடுத்தலாலும், புறச்சமாதியின்கண் மாயையிருளை வேறுத்தலாலும், வேறெந்த வேதுக்களானுங்கெடாத மூலாஞ்ஞானத்தை ஸ்திரஞானத்தானசிக்கச்செய்தலாலும், பந்தமோக்ஷங் கற்பிதமாகும்படிசொல்லி யுணர்த்துவிக்கு மேலோனே சற்குருநாதனுஞ் சொல்லுமிடத்து. (எ-று.)

மேற்படி தந்திரம் உகூ-வது அசற்குருநெறி.

உணர்வொன் றிலாமூட னுண்மையோ ராதோன்
கணுவின்றி வேதா கமநெறி காணான்
பணிவொன் றிலாதோன் பரநிந்தை செய்வோன்
அணுவின் குணத்தோ னசற்குரு வாமே.

(இ-ள்.) அறிவு சிறிதுமில்லாத சடனும், முதற்காரண காரியமுகத்தாற் பதிபசுபாசங்களி னுண்மையை யறியாதவனும், துவிதமின்றி வேதாகமங்கள் கூறுமார்க்கத்தைத் தெரியாதவனும், ஞானிகளிடத்தில் வணக்கஞ்சிறிது மில்லாதிருப்பவனுந், தெய்வநிந்தை செய்பவனும், மற்றுங்கொலைமுதலிய இழிகுணங்களையுடையவனு, மசிரியனாகும். (எ-று.)

ஆமா றறியாதோன் மூட னதிமூடன்
காமாதி நீங்காக் கலதி கலதிகட்
காமா றசத்தறி விப்போ னறிவிலோன்
கோமா னலனசத் தாகுங் குரவனே.

(இ-ள்.) சிவபேதங்களளவின்மையின் வேதாகமங்க ளவரவர்பக்குவ நிலைக்குத்தக்கவாறு கூறுவதையறியாதவ னறிவீனன், மிக்கவறிவிலான், காமாதியறு பகையையும் விட்டுநீங்காத மூதேவிப் பையல்களுக்குத் தக்கபடி பாசத்துக்குட்பட்டஞானத்தைப் பதிஞானமெனப் போதிப்போ, னுண்மைஞானமில்லாதவன் ஆசிரியனல்லன், தீமையேசெறிந்துள்ள வனாசிரியனேயாகும். (எ-று.)

குருடர்க்குக் கோல்காட்டிச் செல்லுங் குருடர்
முரணும் பழங்குழி வீழ்வர்கண் முன்பின்
குருடரும் வீழ்வர்கண் மூன்பின் னறவே
குருடரும் வீழ்வார் குருடரோ டாகியே.

(இ-ள்.) அந்தகனுக்குக் கோல்கொடுத்து வழிகாட்டிப்போகும்அந்தனு மக்கோலைப்பிடித்துச்சென்ற ஆதனுமாகியவிருவரும் வாயிடிந்தபாழ்ங்கிணற்றில் முன்னும்பின்னு முறையாகவிழுவர்கள், பக்கத்தினின்றவர்களொருவருங் கூட விழமாட்டார்கள். (அங்ஙனமின்றி) அனாசிரியக்குருடனு மபக்குவப் பொட்டையனுமாகிய விருவரும், முன்பின்னென்னு முறைபிறழ்ந்து நரகமாகியகுழியில் வீழ்வார்கள் அவர்களைப்பாத்து மற்றைய வபக்குவர்களு மவ்வாறேவிழுவார்கள். (எ-று.)

மனத்தி லெழுந்ததோர் மாயக்கண் ணாடி
நினைப்பி னதனி னிழலையுங் காணார்
வினைப்பயன் போக விளக்கியுங் கொள்ளார்
புறக்கடை யிச்சித்துப் போகின்ற வாறே.

(இ-ள்.) மனத்தின்கணுண்டாகிய சொப்பனமு மாடிநிழலையும்போன்று, சாக்கிரநினைப்பி லறிவாகியதனது சாயையாகிய விவர்த்ததத்துவக் குழாங்களைன்னு மாயையையு மறியமாட்டார்கள். பாவிக ளற்பர்களது வாயிறூறுஞ்சென்றிரப்பதுபோன் றநாசிரியரையே யடைவார்கள். இஃதென்னே! (எ-று.)

மன்னு மலமைந்து மாற்றும் வகையோரான்
றுன்னிய காமாதி தோயுந் தொழினீங்கான்
பின்னிய பொய்யன் பிறப்பிறப் பஞ்சாதான்
அன்னிய னவ னசற்சீட னாமே.

(இ-ள்.) அநாதிகற்பிதமாகப்பொருந்திய பஞ்சமலங்களையு மொழிக்குநெறியை யாராய்ந்தறியாதவனும், நெருங்கியகாமமுதலிய தீயவிஷயங்களின்மூழ்குந் தொழிலினின்றுநீங்காதவனும், மித்திரபேதப்பொய்யனுச் சனனமாணத்திற் கஞ்சாதவனுமிருப்போன் முத்திக்குவேறானவன் சற்சீடனுமாகான். (எ-று.)

தொழிலறி வாளர் சுருதிகண் ணாகப்
பழுதறி யாத பரம குருவை
வழியறி வார்நல் வழியறி வாள
ரழிவறி வார்மற் றை யல்லா தவரே.

(இ-ள்.) அட்டாங்கயோகத்தி னெறிவந்தவறிவுளோர் ஞானசாத்திரத்தின் கண் பக்தி, சிரத்தையுடையோராய், இயல்பாகவே தம்மாட்டுக்குற்றமில்லாத பரமாசிரியரைவழிபட் டதன்பொருளை யாராய்ந்துதெளிவார்கள், அதனாற் பேரின்ப முத்தியைப் பெறுவார்கள். ஏனையோ ரநாசிரியனு னரகமார்க்கத்தையே யறிவார்கள். (எ-று.)

ஆசிரியனையடைந்து விண்ணப்பித்தல்.

பதைத்தொழிந் தேன்பர மாவுன்னை நாடி
யதைத்தொழிந் தேனினி யாருடன் கூடேன்
சிதைத்தடி யேன்வினை சிந்தனை தீர
வுதைத்துடை யாயுகந் தாண்டரு ளாயே.

(இ-ள்.) எனதுபரமாசிரியரே தாபத்திரயாக்கினியால் வதையுண்டு அதனாலீடணாத்திரயத்தை விட்டொழிந்து தேவரீரைத் தேடியலைந்துகண்டதினாற் சகலதுயரங்களு நீங்கினேன்; அடியேனினித் தாய்தந்தையரையுஞ் சதமென வெண்ணிச் சேரமாட்டே னடியேனதிருவினைகளையு நாசஞ்செய்து எனதுமனோ சங்கற்பமு நாசமாம்படி திருவடியாற்றீண்டி ஆண்டவனே யென்னைவிரும்பி யடிமைகொள்ளவேண்டும். (எ-று.)

உபதேசம்பெறுமுறைமை.

சோதி விசாகந் தொடர்ந்திரு தேணாண்டு
வோதிய நாளே யுணர்வது தானென்று
நீதியு ணீர்மை நினைந்தவர்க் கல்லது
வாதியு மேதூ மறியகி லானே.

(இ-ள்.) சுவாதிநட்சத்திரம், பெருமைபொருந்தியவிருச்சிக, கடகலக்கினங்கள்; திங்கள், புதன், வியாழன், வெள்ளியாகிய சுபவாரங்களிலும்; ஞானாசிரியனது உபதேசமொழியால் அறிவுவடிவமே தானென்றுணர்ந்து; பின்றன் தலைவனாகிய பிரமத்தினது நிலையையநுபூதியி லுணர்ந்தவர்க்கல்லது, ஏனையவர்க்கெவ்வகையேதுக்களினாலு மறியப்படமாட்டாது. (எ-று.)

சீராரு ஞானத்தி னிச்சை செலச்செல்ல
வாராத காதற் குருபரன் பாலாகச்
சாராத சாதன நான்குந்தன் பாலுற்றோ
ராரயு ஞானத்த னுமடி வைகக்கவே.

(இ-ள்.) சிறப்புப்பொருந்திய ஞானத்திலாசையானது பற்றப்பற்ற நிறைந்தஅன்பானது சற்குருநாதனிடத்திலும், அபக்குவர்க்குப் பொருந்தாத நித்தியாநித்தியவஸ்துவிவேகமுதலிய நான்கு சாதனங்களைத் தன்னிடத்திற் பொருந்தினேன் ஞானவாராய்ச்சிக்குரியவனு மதனாற்றிருவடிஞானத்தி லவனைவைக்கத்தக்கது. (எ-று.)

உபதேசஞ்செய்யுமுறை.

உணர்ந்து மதிபக் குவர்க்குமே யுணர்த்தி
யினைக்கிய பாரபரத் தெல்லையு ளிட்டுக்
குணக்கொடு தெற்குத் தாபச் சிமங்கொண்டு
வுணர்த்துமின் ஞவுடை யான்றன்னை யுன்னியே.

(இ-ள்.) உணர்க்கக்க அதிதீவிரபக்குவர்க்கே நூற்பொருளைத்தெரிவித்துச், சகலகேவலங்கள் பற்றாதவிடத்தில்வைத்துக், கிழக்குத், தெற்கு, வடக்கு, மேற்குமுகங்களி லொன்றிலிருந்துகொண்டு சிவபெருமானையபரோட்சமாக நினைந்திருந் துபதேசம்புரியுங்கள். (எ-று.)

இறைபடி தாழ்ந்தை வணக்கமு மெய்திக்
குறையது கூறிக் குணங்கொண்டு போற்றச்
சிறையுட னீயறக் காட்டிச் சிவத்தோ
டறிவுக் கறிவிப்போன் சன்மார்க்கி யாமே.

(இ-ள்.) சற்குருநாதனது திருவடியில்வீழ்ந்து ஐந்துவகைவணக்கமுஞ்செய்து தனதுகுறைபாட்டைச்சொல்லிப் பின்னாவாது பெருமைகளைப் புகழ்ந்து துதிக்கப் பஞ்சகோசங்களையு நீயல்லவென நியதிபண்ணிக்காட்டிச் சீடனதறிவுக்குச் சிவத்தோடபேதந் தெரிவிப்போன் சன்மார்க்கருவாகும். (எ-று.)

வேட்கை விடுநெறி வேதாந்த மாதலால்
வாழ்க்கைப் புலன்வழி மாற்றிச்சித் தாந்தத்து
வேட்கை விடுமிக்க வேதாந்தி பாதமே
தாழ்க்குந் தலையினோன் சற்சீட ஞமே.

(இ-ள்.) இருவகைப்பற்றுக்களையு மொருங்கேவிட்டொழியுமார்க்கம் வேதாந்தமாதலால், அப்பற்றுக்களைவிட்டொழிந்து, விட்டபொருளின்மேற் புலன்வழிச்செல்லு மனத்தைத்தடுத்து, அசுத்தசைவம், மார்க்கசைவசித்தாந்தங்களில் விருப்பத்தைவிட்டுவிட்டு, சிரேஷ்டமாகிய சுத்தசைவங், கடுஞ்சுத்தசைவசித்தாந்தியுமாகிய வேதாந்தியின்பாதத்தில் நமஸ்கரித்து அடிமையாகத்தக்கவனே சற்சீடனாகும். (எ-று.)

சற்குணம் வாய்மை தயாவிவே கந்தன்மை
சற்குரு பாதமே சாயைபோ னீங்காமை
சிற்பர ஞானந் தெளியத் தெளிவோர்த
லற்புத மேதோன்றல் ஆகுஞசற் சீடனே.

(இ-ள்.) நல்லசத்துவகுணமும், உண்மைபேசுதலும், சீவகாருண்ணியமும், நித்தியாநித்தியவிவேகமும், பொறுமையும், உடையவனுய் சற்குருபாதமே புணையாகப்பற்றி அவரதுநிழல்போ னீங்காதுநின்று, பிரமஞானத்தை யாராய்ந்து தெளிந் தபரோக்ஷஞானம்பெறுதலு மதன்பின்றடையற்ற வானந்தமுதித்தலுமாகுஞ்சற்சீடனே. (எ-று.)

போதுப்பாயிரம் முற்றிற்று.

உ

॥ ஶ்ரீ குருப்யோ நம꞉ ॥

ஶ்ரீ ஶிவஜ்ஞாநபோதாய꞉ ॥

ஸ்ரீ அகண்டபரிபூரண ஸச்சிதாநந்த பிரமமே முமுக்ஷுக்கள் உய்யுமாறு ஐக்கிய ஞானத்தை அளிக்க, ஸ்ரீ மாணிக்கவாசகரென்னும் ஸாதனசதுஷ்டய ஸம்பன்னரான சிஷ்யசிகாமணியைமுன்னிட்டு ஷோடசாந்த ஸ்தானமாகிய திருப்பெருந்துறையில் ஸ்ரீ குருமூர்த்தியாய் எழுந்து உபதேசித்த அத்வைத கிரந்தமாகிய சிவஞானபோதமென்னும் உத்தமோத்தம சாஸ்திரத்திற்கு இத்தமிழ் நாட்டார் எளிதில் அறியுமாறு தமிழ் வியாக்யானம் செய்யப்படுகிறது.

முதல்சூத்திர அவதாரிகை.

ஏனையோருக்கும் தாம் பிரத்யக்ஷமாய்க் காணுமுலகு தானாகவுண்டானதா? வேறு கர்த்தா வுளனா? உளனேல், யாவன்? எப்படி கர்த்ருத்துவம் ஸித்திக்கும் என்ற பாவம் ஸஹஜமாய் உண்டாகக்கூடியதல்லவா? அந்த ஸம்ருதிக்கு இவ்வனைத்து ஜகத்துக்கும் ஒரே கர்த்தா. அவன் உபாதானகாரணமுமம, நிமித்தகாரணமுமாவான் என்று முதல் சூத்திரம் பிரதிபாதிக்கிறது.

முதல் சூத்திரம்.

ஸ்த்ரீபும்நபும்ஸகாதித்வாஜ்ஜகத꞉ கார்யதர்ஶநாத் ।
அஸ்தி கர்தா ஸ ஹ்ருத்வைதத் ஸ்ருஜத்யஸ்மாத் ப்ரபுர்ஹர꞉ ॥

(இ-ள்.) ஜகத꞉ — உலகத்திற்கு, கர்தா — கர்த்தாவானவன், அஸ்தி — இருக்கிறான். குத꞉ — ஏனெனில், ஸ்த்ரீபும்நபும்ஸகாதித்வாத் — ஆண், பெண், அலியென்னும் (ஆக்ஷேபத்தினாலே) மற்றுமுள்ள, கார்யதர்ஶநாத் — காரியம் காணப்படுவதால், ஸ꞉ — அந்த ஜகத் காரணன், ஏதத் — இந்த பிரத்தியட்ச உலகத்தை, ஸ்ருஜதி — சிருஷ்டிக்கிறான். இதிலேயே ரக்ஷணையும் அடக்கம். ஹ்ருத்வா — அழித்தும், என்பதினால் பிறகும் படைக்கிறான் என்பது தெளிவாய்

விளங்குகிறது. (ஆனதால்) படைக்குங் கர்த்தா வொருவனே; படைக்கப்பட்ட வுலகம் பலதடவை படைக்கப்பெற்றன. படைப்போனுன ஏகன் எக்கருவியைக்கொண்டு படைத்தானெனிலோ, தனது சதம்சத்தில் உலக ஸாமக்கிரியையாயும், தனது சிதம்சத்தினுல் படைப்போனுயும் ஆகிக்கொண்டான். உலகின்கண் படைக்கும் வஸ்து வேறு, படைப்போன் வேறு என்பதைத்தான் காண்கிறோம். இரண்டும் ஒன்றுக்கே ஸம்பவிக்குமா? இது அஸித்தமாமெனிலோ, அற்றன்று. (நாம் கண்ணுரக் காண்கின்றோம்) ஒரே கர்த்தாதானே உபாதான காரணமாயும், நிமித்தகாரணமாயுமாவதை ஊர்ணநாபி — ஆவது சிலந்திப்பூச்சி, தானே நூலாக ஆகிக்கொண்டும், தனக்கு இருப்பிடத்தைக்கட்டுந் தொழிலாளியாகவும் ஆகிறதை நிதர்சனமாகப் பார்க்கின்றோமாதலால், இவ்வரிய சின்ன ஜந்துவுக்கு இருக்கும் திறமை பரமாத்மாவுக்கு இருக்கலாகாதா? அந்தோ! இஃதென்ன வாச்சரியம். அன்றியும் நியாயமதத்தில் ஆத்மகுணமாகிற ஞானத்திற்கு ஸம்யோகமே உபாதானகாரணமாயும், நிமித்தகாரணமாயும் ஆகும் என்கிறார். ஜடமாகிய ஸம்யோகமே இருவகைக் காரணமும் ஆகுமேயானுல் சுத்த சைதன்யமான பரமாத்மாவுக்கு இச்சக்தி வாய்க்காதா? அன்றியும், சுருதியில் ஊர்ஸ்ரமூதாமி ஜாயெயமு—இந்த பூதங்களாக ஆவேன் என்று இச்சித்தான் என்பதினுல் உலகுக்கு உபாதான காரணம் பரமனே என்றுநன்கு ஸித்தித்தது. சுஷ்டாசு—இப்படிப் படைத்தளித்தழிக்கும் காரணத்தினுல், வு ஹ:—ஸர்வ வியாபகனுன பரமன், ஹரஃ — ஹரன் என்னும் ஈச்வரத்தன்மையை வஹிக்கிறுன், எ-று. ஆதலால், பிரம்மசைதன்யமே மாயாப்பிரதிபிம்ப ஈசுவரத்தன்மையையடைந்து உலகுக்கு உபாதான காரணமாகவும், நிமித்த காரணமாகவுமாகிறதென இச்சூத்திரம் விளம்பிற்று.

அவதாரிகை.

ஹரனெனச் சொல்லப்படும் கற்பித ஈச்வரத் தன்மையையடைந்த பரமன் தனது கற்பனைக்கிடமான மாயையைத் தன்வசமாய்க்கொண்டு ஜீவர்களுடைய கருமபரிபாகத்திற்கேற்ப வாஸ்தவாபேதமாயும் கற்பனுபேதமாயுமுள்ள சிருஷ்டியைச் செய்தானென இந்த விரண்டாம் சூத்திரம் விளக்குகின்றது.

இரண்டாஞ் சூத்திரம்

கரோதிஸம்ஸ்ருதிம் ...

(இ-ள்.) வ்யாப்தித:—வியாப்தி ஞானத்தினாலே, ... இதி—எங்கு கார்யரூபமான புகையுளதோ, அங்கு காரணரூபமான அக்கினியுளதென்பதுபோல், கார்யமாய பிரபஞ்சத்திற்கு காரணனான சேதனன் உளன் என்னும் வியாப்தியினாலே, ...—அதிஷ்டானமான தன்னிற்காணும் ஆரோபித ஜகத்திற்குவேறாகாத ...—கர்த்தாவான பரமன், ...—வேறாய் இருப்பவன் போல் தோன்றிக்கொண்டு, ...—அபின்னமான, ஆஜ்ஞயா—சக்தியினாலே, ...—ஜீவர்களுக்கு, ...—அவரவர்களுடைய பரிபாககர்மாவையனுசரித்து, ஸம்ஸ்ருதிம்—ஜனனமரணரூபமான சம்ஸாரத்தை, கரோதி—செய்கிறான். எ-று. ஆனல் சிருஷ்டிக்குமுன் ஜகத்து எப்படியிருந்தது. (ஸதேவ ...)—இந்த ஜகத்து சிருஷ்டிக்குமுன் ஸத்தாகவே இருந்தது. ஆவது, அதிஷ்டானமாகவே இருந்தது. ஆரோபிதத்திற்கு அதிஷ்டானத்தைக் காட்டிலும் முக்காலத்திலும் இருப்புக்கிடமில்லாததினால், ...—இரண்டு என்பதில்நின்றே பயமுண்டாகிறது. ...—என்பதால் இந்த இரண்டும் மாயாமாத்திரம் (கல்பனமாத்திரம்) வாஸ்தவத்திலில்லை. ஜீவத்வம் ...—ஜீவத்தன்மையும், கயிற்றின் பாம்பின் ஞானம்போல் அறியத்தகுந்தது ஜீவத்தன்மையும் என்றதினால் ஈச்வரத்தன்மையும் என்றது விளங்குகின்றதல்லவா? ஆதலால அதிஷ்டானத்தினால் அனன்யனும், ஆரோபிதத்துக் கன்யமாயும் ஆனனென்றே இரண்டாஞ் சூத்திரம் பிரதிபாதித்தது

அவதாரிகை.

தேஹேந்திரிய அந்தக்கரணாதி வியதிரிக்தமான ஆத்மாவுளனென்றும், அவ்வாத்மா அதிஸூக்ஷ்மமாதலால் அனுபவவேத்யமன்றி பாஹ்ய திருஷ்டிக்குக் காணப்படாதவனும், அதனாலேயே

அணுவென சுருதியில் பிரதிபாதிக்கப்பட்டவனும், அவஸ்தா ஸாக்ஷியாயும் இருக்கிறனென்றும் இச்சூத்திரம் உரைக்கின்றது.

மூன்ருஞ் சூத்திரம்.

நேதிதோ மமதோத்ரேகாத் அக்ஷோபரதிபோதத: |
ஸ்வாபே நிர்மநஸ்கமதோ போதே போத்ருத்வாத் ஸ்யாதணுஸ்தநௌ ||

(இ-ள்.) நேதிதஃ—இதுவல்ல, இதுவல்லவென்று தேஹேந்திரியாந்தக்கரணங்களை நீக்கினதாலும், மமதோத்ரேகாத்—சரீராதிகளில் எனதெனப்பாவிக்கும் ஆதிக்கத்தை யுடையதாலும், அக்ஷோபரதி போததஃ—இந்திரியங்கள் ஒடுங்கி மனமாத்திரத்தின் சேஷ்டையிலும், சாக்ஷியாய் அறிகின்றதாலும, ஸ்வாபே—ஸுஷுப்தியில், நிர்மநஸ்கமதஃ—ஸுகதுக்காதி விஷயத்தை அடைவிக்கும் ஸாதனமான மனதில்லாதபோதும் ஸுகமாயிருந்தேனென்றும், அதையன்றி வேறொன்றும் அறிந்திலேன்என்பதாலும், போதே—ஜாக்கிரதாவஸ்தையில், போத்ருத்வாத்—ஸர்வவிஷயங்களையும் அறியும் தன்மை யிருப்பதாலும், தநௌ—சரீரத்தில், அணுஃ—சாக்ஷிமாத்திரமான ஆத்மா அணுவாக ஸ்யாத்—இருக்கிறன். எ-று. அணோரணீயாந் மஹதோமஹீயாந் — அணுவைக்காட்டிலும் சிறியதாயும், பெரியதைக்காட்டிலு மிகப்பெரியதாயும் ஆத்மா உளனெனச் சுருதி அறைகிறது. நேதி நேதி—இதுவல்ல, இதுவல்லவென கார்யபிரபஞ்சமான ஜகதாதியையும், காரணப்பிரபஞ்சமான அவித்யாதியையும் களைந்து ஸர்வாதிஷ்டானமான ஆத்மாமட்டுமே மிஞ்சினதாகவறிதல் எங்ஙனமெனில், பாஹ்யாதிகளான கிருஹக்ஷேத்திர ஆராமாதிகளைகுறித்து மமதாகாரமும், அதைக்காட்டிலும் தாரபுத்திராதிகளிடத்தில் மமதாபிமானமும், அதைக்காட்டிலும் தேஹத்தினிடத்தில் அஹந்தாபிமானமும், ரோகாதிகள் வருமிடத்து என் உடம்பு அனுகூலமில்லையென்றும் வியவஹரித்தலாலும், ஸுஷுப்தியில் உடம்பிருந்தும் அதையறியாமல் ஆனந்தமாயிருத்தலாலும், நேதி வாக்யத்தினாலே உடம்பு ஆத்மாவன்று. இந்திரியங்கள் ஆத்மாவாமென சொல்லுமிடத்து என்கண் உபாதியடைந்தது, என்பதால் மமதைக்கு விஷயமான இந்திரியம் ஆத்மாவாகா.

றொன்றின் விஷயம் ஒன்றறியாததினாலும், ஸ்வப்னத்தில் இந்திரிய ஞானமில்லாததினாலும் ஆத்மாவாகா. ஆனால் இந்திரிய ஞானவிஷயங்களை ஸமுதாயமாயறியும் மனது ஆத்மாவாகலாமேயெனின், ஸுஷுப்தியில் மனம் ஒடுங்கித் தன்ஸ்வரூபமான சங்கற்பாதிகளை இழத்தலால் ஆத்மாவன்று என்பது ஸித்தம், ஸுஷுப்தியில் விளங்கா அக்ஞானமே ஆத்மாவெனின், ஆத்மா அக்ஞனன்றே. அறியாமையை ஸ்வரூபமாகவுடைய அக்ஞானம் ஆத்மாவாகுமா? இருட்டிற்கு பிரகாசம் எங்குளது? ஆதலால் மூன்றவத்தைக்கும் சேதனனே ஆத்மாவென இச்சூத்திரம் உணர்த்திற்று.

அவதாரிகை.

அவஸ்தாத்ரய ஸாக்ஷியாகிய கூடஸ்தாத்மா அந்தக்கரண விசிஷ்டத்வத்தை அடைந்து, அவ்வந்தக்கரண தர்மத்தையே அவித்யா மலபந்தத்தால் தனதெனப்பாவித்து ஸ்வதந்திரமான தான் துஷ்ட மந்திரியின் ஸங்கத்தையடைந்த அரசனைப்போல் பாதந்திரமடைந்து ஜனனமரணமில்லாததன்னை அதையுடையது போலாக்கிப் பஞ்சாவஸ்தையிலும் உழலுகின்றானென இச்சூத்திரம்விளம்புகிறது.

நான்காம் சூத்திரம்.

ஆத்மாந்தஃகரணாதந்யோ ஹ்யந்விதோ மந்த்ரிபூபவத் |
அவஸ்தாபஞ்சகஸ்தஸ்மாந் மலருத்த ஸ்வத்ருக் க்ரியஃ ||

(இள்.) ஆத்மா—அந்தக்கரண விசிஷ்ட ஆத்மா ஆவது (பிரமாதா) அந்தஃகரணாத்—அந்தக்கரணத்தினின்றும், அந்யஃ அபி—வேறாயினும், மந்த்ரிபூபவத்—மந்திரியும் அரசனும்போல, அந்விதஃ—சேர்ந்தனாய்க்கொண்டும், மலருத்த ஸ்வத்ருக்க்ரியஃ—ஆணவாதி மலத்தினால் தடுக்கப்பட்ட ஞானகார்பத்தை யுடையவனாகவும், அவஸ்தாபஞ்சகஸ்தஃ—ஜாக்ராதி ஐந்தவஸ்தையிலுமிருப்பவனாகவும், ஸ்யாத்—ஆவான். எ-று. ஆத்மா அந்தக்கரண பிரதிபிம்பனாய் விசிஷ்டத்தன்மையை யடைந்து அந்தக்கரண தர்மமாகிய ஸுகதுக்காதிகளைத் தனதென வாரோபித்துக்கொண்டு நல்ல ஸ்வபாவமுள்ளவனும், ஸ்வதந்திரமுடையவனுமான அரசன் துஷ்டமந்திரியின் சங்கத்தையடைந்து அவன் குணத்தையே தனதாய்க்கொண்டு, அம்மந்

திரியினுடைய சோகாதிகளைத் தானுமனுபவிக்கின்றவன்போ லாகிருன். ஸ்வதஸ்ஸித்தமாய் ஞானுகாரமான ஆத்மா அவித்யாந்தக்ரண ஸம்மந்தத்தினுல் ஜனனமரணுதி பந்தத்தை யடைந்தவன்போல ஆகிறுன் ஆதலால் வஸ்துத:— ஆத்மாவுக்கு பந்தமில்லை ஆரோபத்தினுலேயே பந்தியாகிருனென்று இந்தச்சூத்திரம் விளக்கிற்று.

அவதாரிகை.

விசேடணமா மந்தகரண ஸம்பந்தத்தையடைந்த விசிஷ்டனுன ஜீவன், கூடஸ்தனுன அதிஷ்டான சைதன்யத்தினுலேயே இந்திரிய வாயிலாக விஷயங்களை யறிகிறுனென்றும், விசேஷணும்சம் உள்ள வரையில் பத்தனென்று ஸாக்ஷியினுல் அறியப்பட்டவனென்றும், ஸாக்ஷியின் ஸந்நிதானத்தில் காந்தத்தின்முன் இரும்புபோலச்சேஷ்டிக்கிருனென்றும, விசிஷ்டாம்ச மாத்திரமாய் விசேஷணும்சமில்லாதபோதே தான் கூடஸ்தனுப் ஆவானென்றும் இச்சூத்திரம் திடமாய்க் கூறுகின்றது.

ஐந்தாம் சூத்திரம்.

விடிக்ஷ்ர்க்ஷாணிவ ைஸாயே-ாநு நூஹயஂ ஸொவிஶஂ ஹாநா।
கஷிகாரிஸ்ரிவஸெூஙு காஞெஃவொாவகு ஷதஂ நயெசு॥

(இள்) சக்ஷூாணி—கண்முதலான இந்திரியங்கள், சுமு ா்நு—ரூபாதி விஷயங்களை, வ ஂஸா— அந்தக்கரண விசிஷ்டசேதனனுன ப்ரமாதாவினுலே, விடிக்ஷி— அறிகின்றன. ஸொவி— அந்த ஜீவனும், ஷயஂ—விசேஷாம்சத்தோடு கூடினதானுகவே, ந— அறிகிறதில்லை. ஶஂவ நா—ஶஂ—சுகத்தை, ஹ ஃ—கொடுப்பவன் ஆவது, ஸூரியன் தானும்பிரகாசித்துக்கொண்டு உலகத்தையும் பிரகாசப்படுத்துவதுபோல் தானும்ஸுகஸ்வரூபமாயிருந்துகொண்டு உலகத்தையும்பிரகாசப்படுத்துவதுபோல் தானும் ஸுகஸ்வரூபமாயிருந்துகொண்டு தன்னையடுத்த அந்தக்கரண இந்திரிய விஷயாதிகளை பிரகாசப்படுத்துவதான கூடஸ்தனுன ஸாக்ஷிசேதனத்தினுலே, ந ஃ சு— தூண்டப்பட்டு அறிகிறுன் தசு— அந்த அந்தக்கரணத்தினுலே, ஸி — ஸாக்ஷி சைதன்யமானது, விகாரிவெஷ—விகாரியாவனேயெனில், ந— இல்லை (விகாரியாகமாட்டான்) ஸஃ— அந்தக் கூடஸ்தன், தஂ— அந்த அந்தக்கரண விசிஷ்டனை, காஞெஃ—காந்தமானது, ஷ

ஶக்த்யா—தன்னுடைய சக்தியினால், அயோவத்—இரும்பினைச்சேஷ்டிக்கச்செய்வதுபோல, சேஷ்டிக்கச்செய்கின்றான். எ-று. ஆதலால் விசிஷ்டாம்சமே கூடஸ்தனென்றும், நித்யமுக்தனென்றும், விசேஷணம்சமே அவித்தையென்றும் பந்தமென்றும், நாசமுடைத்தென்றும் இச்சூத்திரம் கூறிற்று.

அவதாரிகை.

இந்த ஜீவஸாக்ஷியாகிற ஆத்மா காணக்கூடியவனா? காணக்கூடாதவனா? காணும் பொருளானால் ஜடமாகும். காணப்பொருளானால் அஸத்தாகும். எனில், ஆத்மா காணும் ஜகத்துமல்ல; காணாச்சூன்யமுமல்ல. ஸச்சிதானந்த அதிஷ்டானமே ஆகுமென இச்சூத்திரம் தெரிவிக்கின்றது.

ஆறுஞ் சூத்திரம்.

அத்ருஶ்யம் சேதஸத்ஸூர்யவத் த்ருஶ்யம் சேஜ்ஜடிமாஹவேத் ।
ஶம்போஸ்தத்வ்யதிரேகேண ஜ்ஞேயம் ரூபம் விதுர்புதா: ॥

(இ-ள்.) ஶம்போ:---பிர்மசைதன்யத்தினுடைய (ஆவது) கூடஸ்தசைதன்யத்தினுடைய, ரூபம்—வடிவானது, அத்ருஶ்யம் சேத்—காணக்கூடாததானால், அஸத்ஸூர்யவத்—முயற்கொம்புபோல் இல்லாததாகும், த்ருஶ்யம் சேத்—காணப்படுமெனின், ஜடிமாஹவேத்—அறியாமையையுடைய ஜகத்தாகும். தத்வ்யதிரேகேண—அந்த திருசிய திருசியத்துக்குவேறான ஸச்சிதானந்தமாகவே, ஜ்ஞேயமிதி—அறியத்தகுந்ததென, புதா:—விவேகிகள், விது:—அறிகிறார்கள், எ-று. த்ரிகாலத்திலும் பாதிக்கப்படாததெதுவோ, அதுவே பிரகாசமானது: நித்யமாயும், பிரகாசமாயுமுளதே. அதிகப் பிரியத்துக்கு விஷயமானது திரிசியமான ஜகத்து ஸதம்சமாய்த் தோன்றினும் பிரளயத்தில் நாசமடைதலாலும், உத்பத்திக்குமுன் இல்லாததினாலும், மத்தியில் மாத்திரம் தோன்றுவதாலும் ஸத்தல்ல. சித்தல்லவென்பது எல்லோரும் ஸர்வஸாதாரணமாய் அறிந்ததே ஒருகாலத்தில் பிரியமுள்ளது. மற்றொரு காலத்தில் பிரியமில்லாமற் போவதால் பிர்மாநந்தமல்ல அதனால் திரிசியத்திற்கு வேறுயென்றும், ஸுஷுப்தியில் அனுபவித்த சுகத்தில் ப்ரீதியும், அறியாமையில் அப்ரீதியும் எல்லோர்க்கும் உளதே. ஆதலால், திரிசி

யத்துக்கும், சூன்யமான வறியாமைக்கும் வேறென்றும், ஸச்சிதானந்த லக்ஷணமுடையதென்றும் ஆத்மாவை விளக்கிற்று இச்சூத்திரம்.

அவதாரிகை.

அப்ரகாசமான பிரபஞ்சம் முக்தியடையாது, பிரகாசமான ஆத்மா நித்யமுக்தனாதலால், பந்தமுத்தி யாவர்க்காகுமெனிலோ, தேகாத்மபாவம் உள்ளவரையில் ஜீவன் பந்தனாகிறானென்றும், ஜடபாவமிருக்கிறது போலவென்றும், கூடஸ்த சைதன்யமே தானெனும் பாவமுள்ளபோது முக்தனென்றும், சுத்தசேதனனுவானென்றும், ஜீவனுடைய அஞ்ஞானாதி ஏழவத்தைகளில் ஐந்தாமவத்தையில் ஜடசேதனமிரண்டையு மறிவதால் அவனே முக்தனென்றும், அவனே யத்வைத ஸ்வரூபத்தை யடைவனென்றுமிந்த ஏழாஞ் சூத்திரம் விளம்புகின்றது.

ஏழாஞ் சூத்திரம்.

நாவித்³ரசித்ஸந்நிதௌ கிந்து நவித்தஉபே உபேஹஇ த்ரிய꞉ ।
ப்ரபஞ்சசிவயோர்வேத்தா யஸ்ஸஆத்மா தயோ꞉ ப்ருதக் ॥

(இ-ள்.) அசித்—அப்ரகாசமான பிரபஞ்சம், சித்ஸந்நிதௌ—பிரகாசமான சுத்தசேதனத்தின்முன் (கூடஸ்தன்முன்) ந—இல்லை. தே—அந்த, உபே—ஜடசேதனமிரண்டும், த்ரிய꞉—ஒன்றுக்கொன்று, நவித꞉—அறிந்துகொள்ளுகிறதில்லை. ப்ரபஞ்சசிவயோ꞉—ஜடசேதனங்களான பிரபஞ்ச கூடஸ்தர்களை, வேத்தா—அறிந்தவன், ய—எவனோ, ஸ꞉—அந்த, ஆத்மா—ஆத்மாவானவன் (ஜீவன்), தயோ꞉—அவ்விரண்டிற்கும், ப்ருதக்—வேறானவன், எ-று கூடஸ்தாத்மா நித்யமுத்தன். அதனால் (சிவனெனும்) மங்களகரனெனப்படுகின்றவனுப் பிரகாசமுடையவன்—சகத்து அப்ரகாசமுடையது. சூரியன்முன் இருள் நில்லாததுபோல் சித்தின்முன் ஜடப்ரபஞ்சம் நில்லாது. சித்தைக்காட்டிலு மன்னியமில்லாததால், சித்தன்றி ஜடமேயில்லையல்லவா? ஆனதால் ஜடமுளதென சித்தெப்படி யறியக்கூடும்? அறியலாகா பிரமாதா தன்னுடைய ஐந்தவஸ்தையாகிற அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தில் தான் ஜடமல்லவென்றும், சித்தே தானென்றும் அறிவதால் அவனுக்கே பந்தநிவிருத்தி ஸுகப்ராப்தியாகிய மோக்ஷமென்று இச்சூத்திரம் கூறியவாறு காண்க.

அவதாரிகை.

தேகாத்மபாவத்தில் பந்தப்பட்ட ஜீவன் எப்படி முக்தியடைவன் எனச் சங்கையுளதேல், ஸத்குரு கடாக்ஷத்தாலும், மஹாவாக்ய உபதேசத்தாலும் அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தை யடைகிருனென இச்சூத்திரம் கூறுகின்றது.

எட்டாம் சூத்திரம்.

ஶ்ரித்வா ஸஹேந்த்ரியவ்யாதைஸ்த்வாம் ந வேத்ஸீதி போதித: |
முக்த்வா தாந் குருணாநந்யோ தந்ய: ப்ராப்நோதி தத்பதம் ||

(இ-ள்.) தந்ய:—அநேககோடி ஜன்மார்ஜித புண்ணியமுடைய பாக்யவான், குருணா=பரமேசுவரனான ஸத்குருவினால், இந்த்ரிய வ்யாதை: ஸஹ = புறக்காரணங்களான வேடர்களோடுகூட, ஶ்ரித்வா—சேர்ந்திருந்து, த்வாம்=உன்னை, ந வேத்ஸி=உன்னுடைய நிஜரூபத்தை நீ சிவமென்று யறிந்தாயில்லை, இதி=என்று, போதித:=உபதேசிக்கப்பட்டவனுய்க்கொண்டு, தாந்=இவ்விந்திரிய வேடர்களை, முக்த்வா=குருகிருபைபால்விட்டு, அநந்ய:=பிரம் ஹாபின்னனுய், தத்பதம்=தத்பதயான ஸ்வரூபஸ்திதியை, ப்ராப்நோதி=அடைகின்றுன். எ-று.

பஹூநாம் ஜந்மநாமந்தே மோக்ஷேச்சா ஜாயதே ந்ருணாம் |
ததா ஸத்குருஸம்ப்ராப்த்யா ப்ராப்நோதி பவமோக்ஷணம் ||

அநேக ஜன்மத்தில் ஷத்கருமங்களைச்செய்து புண்ணிய மிகுதியாகிய நிஷ்காமியத்தால் அச்சுருதவானுக்குக் கடைசி ஜன்மம் ஆதலினுல் மோக்ஷேச்சையுண்டாகும். அப்பொழுது ஈச்வரனே பூரணதயையினுல் ஸ்ரீ குருமூர்த்தியாய் வர அவரையடைந்து சேவித்து அவர் உபதேசத்தினுல் பந்தநிவிருத்தியாகி மோக்ஷத்தை யடைகின்றுன்.

ஏவம் ஸம்ஸாரதாபீதம் அநுக்ருஹ்ணாதி சேஶ்வர: |
தத்ப்ராப்த்யா ச மஹாநேநாஸாரேண காருண்யாத்ஶிவா ||

இவ்விதம் ஸம்ஸாரத்தினாலே பயமடைந்த அதிகாரியை அவன் யோக்கியதைகளை அனுசரித்து ஈசுவரன் அனுக்கிரக பூர்வமான கடாக்ஷத்தினாலே அனுக்கிரஹிக்கிறார். ஆசார்யவாந் புருஷோ வேத — ஆசார்யனையுடைய புருஷன் தன் களங்கமற்ற ஸ்வரூபத்தை யறிகிறான். தத்விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத் ஸமித்பாணி: ஶ்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம் — அந்த ஸ்வரூபஞான சாக்ஷாத்காரத்தின்பொருட்டு சிஷ்யன்கையில் ஸமித்தையுடையவனாய் பிரமநிஷ்டனான ஸத்குருவை அடையவேண்டும். ஸ வா ஏஷ மஹாநஜ ஆத்மாऽஜரோऽமரோऽம்ருதோऽபய: — அந்த சச்சிதானந்த லக்ஷணமுடைய இந்த அதுவேயான இந்த ஆத்மா கிழத்தனமில்லாதவனும், அமிருதமயமாயும், பயமில்லாதவனும் இருக்கிறான். ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி — சிஷ்யன் பிர்மத்தையறிந்த மட்டிலேயே பிர்மமாகவேயாகிறான். தத்த்வமஸி த்வம் ததஸி த்வம் ப்ரஹ்மாஸி — அது நீயாயிருக்கிறாய் நீ யதுவாயிருக்கிறாய் நீ பிர்மமாயிருக்கிறாயென்கிற மகாவாக்கிய லக்ஷணாவிர்த்தியினாலே குருவினால் உபதேசிக்கப்பட்டு தன்னுடைய சாக்ஷாத்காரத்தைத் தானேயடைகின்றான் என்று இச்சூத்திரம் கூறிற்று.

அவதாரிகை.

ஆசாரியனால் சொரூப சித்தியை உபதேசிக்கப்பெற்ற சிஷ்யன் சந்தேக விபரீதமன்றியில் திடமாயிருக்கும் மார்க்கத்திற்கு உபாயம் இச்சூத்திரம் கூறுகின்றது.

ஒன்பதாஞ் சூத்திரம்.

விஜ்ஞாநத்ருஶாத்மநி த்ருஷ்ட்வேஶம் தத்ப்ரஸாதத: ஶ்ரீவிகாஶ: |
த்யாத்வா ஶிவபஞ்சாக்ஷரீம் த்யாயேச்ச ஸதாக்ஷரீம் ஸுதீ: ||

(இ-ள்.) ஸுதீ:—நல்ல புத்தியுள்ளவன், விஜ்ஞாந—அஞ்ஞானத்தினால் அறியப்படாத ஸ்வரூபத்தை ஐக்யவிருத்தியாகிய ஞானக்கண்ணினால், ஆத்மநி—ஆத்மாவாகிய தன்னிடத்தில், ஈஶம்—ஸச்சிதானந்த கனத்தை, த்ருஷ்ட்வா—அநந்யமாயறிந்து, ஶ்ரீவி

காம் — கானல் ஜலம்போன்ற பிரமமாகிற (பொய்ப்பொருளாகிய,) வ்யாப்திம் — எண்ணத்தை (ஆரோபிதத்தை), த்யக்த்வா — விட்டு, ஸர்வாக்ஷீம் ஶிவஸ்வரூபாம் — கூடஸ்தாத்மாவாகிய சிவஸ்வரூபத்தை, லப்த்வா — அடைந்து, ஸர்வாக்ஷீம் — ஐந்துகோசத்திலும் பிரகாசியா நின்று நாசமில்லாத (ஸ்வரூபத்தை), த்யாயேத் — நிதித்யாஸனஞ் செய்யவேண்டும். எ-று. ஸ்ரீ ஸத்குருவிடம் சிரவணஞ்செய்து தனது யுக்தியினுலும், சாஸ்திரயுக்தியினுலும் மனனஞ்செய்து, உபாதியென்கிற ஆவரணம்ச முற்றுமொழிய நானே பிர்மமென நிதித்யாசனஞ் செய்வதே திடஞானத்திற் குபாயமென இச்சூத்திரம் கூறிற்று.

ஸம்ஸாரகாரணம் மாயா ஸதா ஸத்விலக்ஷணா ।
ப்ரதீத்யைவ து ஸத்வம் தஸ்யா நைவ ப்ரமாணத: ॥

ஸம்ஸார காரணம் மாயை. அவள் எப்பொழுதும் ஸத்துக்கு விலக்ஷணமானவள். அவளிருப்புத்தன்மை தோற்றமாத்திரமே யன்றி வாஸ்தவத்தில் இல்லவேயில்லை என்றும்'

ஸங்கோசவிகாஸாத்மக மஹாமாயாவிலாஸாத்மகம் ।
ஸர்வாவித்யா விலயாவ பாவ: ॥

சுருங்குதல், விரிதல் மகாமாயாவிலாஸமே ஸமஸ்த அவித்யா பிரபஞ்சத் தோற்றத்திற்கு ஹேது, வாஸ்தவத்தில் கொஞ்சமேனு மில்லை என்று மனனஞ்செய்து உபாதி என்கிற ஆவரணம்சம் முற்றிலுமொழிய நானே பிர்மமென நிதித்யாஸனத்தி லிருத்தல் வேண்டும் எனவும், நிதித்யாஸனமே திடஞானத்திற்கு உபாயமெனவும் இச்சூத்திரம் உரைத்தது.

அவதாரிகை.

இப்படி ஸ்வரூப ஸித்தியை அடைந்த ஜீவன்முக்தனுடைய ஸ்திதியை இச்சூத்திரம் கூறுகின்றது.

பத்தாஞ் சூத்திரம்

ஶிவேநைக்யம் கத: ஸித்த: தததீநப்ரவ்ருத்திக: ।
மலமாயாத்யஸம்ஸ்ப்ருஷ்ட: பவதி ஸ்வாநுபூதிமான் ॥

(இ-ள்.) வி஢ஃ — லக்ஷணவிருத்தியினல் ஸ்வரூப ஸித்தி யை யடைந்தவன், ஶிவெந — கூடஸ்த சைதன்யத்தோடு, வௌக்யம் — லயத்தை (ஆவது ஏகத்வத்தை), ம தஃ — அடைந்தவனுப்கொண்டும், தஷயிந லவ்ருத்திகஃ — தனது விசேஷணும்சமான அந்தக்கரணத்தின் தர்மத்தை முற்றிலும் ஒழித்து கூடஸ்த சேதனத்தின் ஆதீனமாகிற பிர்மாகார விருத்தியினே யுடையனுப்கொண்டும், ஜோராயாஷ்ரு ஸஷஃ — மலமாயை முதலியவைகளாலே பற்றப் படாதவனுப்கொண்டும், ஸா நஂஹூதிராநு — அபரோக்ஷ ஸா க்ஷாத்கார ஸ்திதியை யுடையவனுக, ஹவதி — ஆகிறன். ஏ-று.

யஸிநுஸவ்ராணி ஹூதாநூா தைவா ஹூஜாநதஃ ।
தத்ர கொமொஹஃ கஃ ஶொகஃ வகதுஃ நுவஶ்ரதஃ ॥

எவ்விடத்திலெல்லா பூதங்களு மாத்மாவாகவே ஆனதென் றெவனன்று யறிந்தவனுப்கொண்டு ஒன்றுய்க் காண்கின்றனோ, அவனுக்கங்கு அறிவின்மையேது, துக்கமேது. யமொஷகெ ஶுஜெ ஶுஜோஸிக்தம் தாஷ்ருமெவ ஹவதி — சுத்த ஜலத்தில் சுத்தஜலம் சேர்ந்தாற்போல் சச்சிதானந்த லக்ஷணமுடைய கூடஸ்த சைதன்யத்தில் பாகத்யாக லக்ஷணையினல் ஸச்சிதானந்த லக்ஷண முடைய விசிஷ்ட சேதனத்தைக்யமாகும்.

யமாஜலெஜலஂக்ஷிவஂக்ஷீரெக்ஷீரஂவ்ருதெவ்ருதம் ।
ஃவிஶெஷொஹவெத்தஜ்ஜீவாத்தவரமாத்தநொஃ ॥

ஜலத்தில் ஜலமும், பாலில் பாலும், நெய்யில் நெய்யும் எப்படி வேறுபடாதோ, அப்படியே ஜீவாத்மா பரமாத்மாக்களுக்கு வேற் றுமை யின்மையாகிறது.

ஷ்ராரஹஂஹோ ஹதொநஶெஷ்ருஃ ஶெஷஂஜ்ஞாநேநதஹ்ஷ்ருதெ ।
உதாஂஷிதயஂகஃ தஜ்ஜெஷ ஷ்ரியவாதிநாஂ ॥

அப்படி ஜீவன்முக்தியடைந்த மஹானுக்கு பிராரப்த கர்மா மட்டும் அனுபவிப்பதினலேயே நாசமடையும், மற்றவை ஸஞ்சிதம் ஞானத்தால் தஹிக்கப்படும் ஆகாமியம், புண்ணியகர்மா பூஜிக்கின்ற

வனேயும் பாவகர்மா நாஷிக்கின்றவனேயும் அடையும். ஆதலால் ஸ்வரூப லயமடைந்த ஜீவன்முக்தனுக்கு எவ்வித கர்மமும் துக்க ஸங்கமும் ஒட்டாது என்று இந்த சூத்திரம் பகர்ந்தது.

அவதாரிகை.

ஜீவன்முக்த தெசையைத் தெளிவுறவுரைத்து அம்முக்தனிடத்தும் அனுபவித்தே நசிக்கக்கூடிய பிராரப்த விஷயங்களை அனுபவிக்கும்போதும் ஸ்வாநுபூதிநிலை குலையாதிருக்குமாறு இச்சூத்திர முணர்த்துகிறது.

பதினேராஞ் சூத்திரம்.

𑌦𑍃𑌶𑍋𑌰𑍍𑌦𑌰𑍍𑌶𑌯𑌿𑌤𑌾 𑌵𑌾𑌽𑌤𑍍𑌮𑌾 𑌤𑌸𑍍𑌯 𑌦𑌰𑍍𑌶𑌯𑌿𑌤𑌾 𑌶𑌿𑌵𑌃 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌪𑌰𑌾𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑌾𑌤𑍍𑌮𑍋𑌪𑌕𑌾𑌰𑌕𑍇 ॥

(இ-ள்.) 𑌦𑍃𑌶𑍋𑌃 — கண்களுக்கு, 𑌦𑌰𑍍𑌶𑌯𑌿𑌤𑌾 — காணுந் தன்மையைக் காட்டிக்கொடுத்தவன், 𑌆𑌤𑍍𑌮𑌾 — பிரமாதிரு சைதன்யமே, 𑌤𑌸𑍍𑌯 — அந்த பிரமாதாவுக்கு, 𑌦𑌰𑍍𑌶𑌯𑌿𑌤𑌾 — ஸர்வத்தையும் காட்டுகிற கூடஸ்த சேதனனே, 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 — ஆகையினாலே, 𑌆𑌤𑍍𑌮𑍋𑌪𑌕𑌾𑌰𑌕𑍇 — ஸர்வஞானத்தையும் அளித்து உபகரிப்பவனான, 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 — அந்த கூடஸ்தனிடத்தில், 𑌪𑌰𑌾𑌂 — மேன்மையான, 𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 — ஐக்யத்தை, (𑌸𑍍𑌵𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌨𑍁𑌸𑌂𑌧𑌾𑌨𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑌿𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 — தன்னுடைய ஸ்வரூபானுஸந்தானமே பக்தியெனப்படுவதால்) அப்பேர்ப்பட்ட ஐக்யமான பக்தியை, 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 — செய்யவேணும், எ-று. ஆதலால் பிராரப்தவசத்தால் விஷயங்கள் தோன்றினாலும் விஷயத்தையும், விஷயத்தையறியு மந்தக்கரண சேதனத்தையும் அதிஷ்டான சேதனத்திற்கு அன்யமில்லையென்றும், அவ்வதிஷ்டான சேதனனே நானென்றும் திடபாவம் செய்யவேண்டுமென விச்சூத்திர முணர்த்திற்று.

அவதாரிகை.

முன் பதினொரு சூத்திரத்தில் சொன்னவற்றையே சுருக்கி ஞானத்தால் மோக்ஷத்தைப் பெறுமுபாயமும் ஞானஸாதனத்தையும் கூறுகின்றது.

பன்னிரண்டாஞ் சூத்திரம்.

உ-ெெக்ஷ்ரு ப்ராவருஸதஃ தெஷாஂஹஜெஷெஷஂஸிவாஸயஂ।
ஸவஂவிஜ்ஞாஸு ஸிவஜ்ஞாநபொயெ ெஸவாய-ுநிண-யஂ ॥

(க-ரை.) உ-ெெக்ஷ்ரு—முக்தியின்பொருட்டு, ஸதஃ—ஸ்வாநு பூதியடைந்த ஸத்துக்களை, ப்ராவரு—அடைந்து, தெஷாஂ—அவர் களுடைய, வெஷ—நடையுடை பாவனையையும், ஸிவாஸயஂ—அவர் கள் உபதேசித்தினல் அடைவிக்கும் ஜீவன்முக்தியையும், ஹஜெஸ —அடைவன். ஸவஂ—இந்தப்படி, ஸிவஜ்ஞாநபொயெ—சிவ ஞானபோதமென்னும் இந்த வத்வைத கிரந்தத்தில், ெஸவாய-ு நிண-யஂ—மோக்ஷமாகிற வஸ்து தத்துவநிர்ணயத்தை, விஜ்ஞாஸு —அறியக்கடவன். எ-று. ஜிக்ஞாஸுவானவன் சமதமாதி ஸாத னத்தை யடைந்து தலையிற்றீப்பத்தினவன்போல் தாபத்ரயாக்கினிக் குப் பயந்து, ஸ்ரீ குருநாதனென்னும் கங்கையையடைந்து அவனுப தேசமென்கிற பிரவாஹத்தில் மூழ்கி, மோக்ஷமென்னும் ஆனந்தத் தினல் உள்ளும் புறமும் குளிர்ந்தவனுய் ஆவானென இவ்வத்வைத சிந்தாமணியான சிவஞானபோதமெனும் அரியநூல் நன்கு விளக் கிற்று.

சிவஞானபோத வியாக்யானம் முற்றிற்று.

இந்த ஸம்ஸ்கிருத ஸூத்திரத்திற்கு திருவைபாற்றிலிருக் கும் லக்ஷ்மணானந்தத்தினல் இவ்வுரை யியற்றியது.

கலி விருத்தம்,

எந்தை யேவடி வெனும்லக்ஷ யானந்தம்
அந்த வேதத்திேறுடற வாகமந்
தந்தனருரை சார்ந்தவர் யாவரும்
பெந்த நீங்கிப் பிர்ம்மானந்த மெய்தவே.

உ

சிவமயம்.

ஸ்ரீ சிவஞானபோத மூலமும் வேதாந்த தீபிகை யென்னு முரையும்.

முதற்சூத்திரம்.

அவதாரிகை.

பரசிவம் பிரமமென்னு மொப்பற்ற வேகசைதன்னிய வியாபகத்திற் சகசீவபரமென்னுங் கற்பனை (அத்தியாரோப அபவாத) கிரமமாகச் சீவர்கள் தங்கள் சஞ்சிதமுதலிய மூன்று வினைகளால் முறையே சிருட்டி, திதி, சங்காரத்தை யடைந்து திதிகாலத்துப் பஞ்சமலங்கள் நீங்கப்பெறுமையின் மீளவு முண்டாம். இவற்றிற்குச் சிவன் அபின்ன நிமித்த உபாதான காரணமாமென்றறிஞர் கூறுவரென, இச்சூத்திர முணர்த்துகின்றது.

முதற்சூத்திரம்.

அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதா
மந்த மாதி யென்மனார் புலவர்.

(இதன்பொருள்) அவன் அவள் அது எனும் அவை (ஆதிமத்தியாந்த ரகிதமாயும் சுசாதி விசாதி சுவகத பேதமற்றதாயும், காரணகாரிய மில்லாததாயு மிருக்கின்ற பிரஹ்ம பூரணத்திற் கற்பிதமாக) அவனவளென்று சுட்டப்பட்ட உயர்திணையும், அதுவென்று சுட்டப்பட்ட அஃறிணையுமாகிய இருகூற்றுப் பிரபஞ்சம், மூவினைமையின்—காமவெகுளி மயக்கங்களா லுண்டாம் ஆகாமிய முதலிய மூன்று வினைகளின் காலபாகத்தால், தோற்றிய திதியே யொடுங்கி—முதற்கடவுளினது பஞ்சகிர்த்தியங்களி லுற்பத்தியான கிரமமாகவே லயத்தையடைந்து, மலத்துளதாம்—திதிகாலத்து மலதோடம் நீங்கப்பெறாத சீவர் அவை நீங்குமளவும் மீளவுமுண்டாம், அந்தமாதி யென்மனார் புலவர்—(பிரபஞ்சமெல்லாங் கானனீராதிபோற் கற்பிதமாகப் பிரஹ்மத்திற் றோன்றி லயமாதலின் அவற்றிற்குப் பிரஹ்மம் காரணமாம். காரணத்தையின்றிக் காரியமின்மையின்) இவற்றை விவர்த்த உபாதான காரணமாமென்றறிவுநூ லுணர்ந்த சத்துக்கள் கூறுப என்றவாறு.

(பதசாரம்) மக்கள் தேவர் நரக ருயர்திணை; மற்றுயி ருள்ளவு மில்லவு மஃறிணை. சுட்டற்ற தன்னைத்தான் சுட்டுதலே அஞ்ஞான சந்தேக விபரீத மென்பார், அவனவளதுவெனுமவை யெனவும், தாந்தாமுன் செய்தவினை தாமே யனுபவிப்பாரென்பார் மூவினைமையினெனவும், அவித்தியா சம்பந்த மான சீவர்க ளதினின்றுநீங்கி முத்தியடையுமளவுக் தனுகரணபுவனபோகங் களைக் கற்பிதமாக உண்டாக்கி யச்சீவர்களி னிருவினைப் பயனை ருசிப்பித்துப் புசிப்பித்து நசிப்பிக்குநிமித்தஞ் சிருட்டியாதி நடக்குமென்பார், தோற்றிய திதியே யெனவும்,

திதிகாலத்துப் பஞ்சமலங்கள் நீங்கப்பெறாத சீவர் சங்காரத்தொடுங்கி மீளவுந் தோன்றுவாரென்பார், ஒடுங்கி மலத்துளதாமெனவும், பிரபஞ்சத்திற் குச் சிவன் நிமித்தகாரணமாவதோடு முதற்காரணமாகவு மிருக்கின்றாரென் பார், அந்தமாதியெனவும், இவ்வாறு கூறுதல் வேதாகம சம்மதமென்பார் என்மனார்புலவர் எனவுங் கூறினர்.

"பிரகர்ஷேண விவிதேந பவதீதி பிரபுகு" என்னும் விற்பத்தியால் பிரபு என்னுஞ் சொல் உபாதானமென்பதனையே அறிவிக்கின்றது. அது பற்றியே அந்தமாதியென்று மொழிபெயர்த்தனர். இவ்வாறு கொள்ளாக்கால், இது இறைவனது தடத்தலக்கணமாதலமையாது. 'எது எதனினின்றுண் டாகி, எதன்கண் நிலைபெற்று, எதன்கண் ஒடுங்குகின்றதோ அதற்கு அதுவே முதற்காரணமாம்' என்னும் நியாயத்தால் உலகொடுங்கியவிடமான பிரஹ் மமே நிமித்தகாரணமாவதுடன் முதற்காரணமுமா மென்பது தோன்ற மெய் கண்டதேவரும் கருத்துரையில் "சங்காரகாரணனாயுள்ள முதலையே முதலாக வுடைத் திவ்வுலகம்" என்றும், "உலகந் தானொடுங்குதற்கு நிலைக்களமான சங்கார கருத்தாவினின்றன்றி யுளதாகாது" என்று சிவஞானசுவாமிகளும், உரைத்தமை காண்க.

சமஸ்கிருத வியாக்கியான மியற்றியருளிய சதாசிவ சிவாசாரியாரும் தமதுரையில் இவ்வாறு கர்த்தா ஒருவனாயினும் சக்திவாயிலாக அனேகனாகி சுத்தாசுத்த மாயாவிசிஷ்டத்தன்மையால் அபின்ந நிமித்த உபாதானகனாய்ப் பிரபஞ்சத்தின் உற்பத்தி முதலியவற்றைச் செய்கின்றான்; அவ்வாறே, தேவி காலோத்தரத்தில் "ஸ்திரசங்கமங்களான பூதங்கள் யான், அந்யமானவை எவையோ அவையாவும் யானே; சராசரத்தின் நாசம் யானே; பிதாவும், மாதாவும், பிதாமகனும் நானே; என்று கூறப்பட்டுள்ளது" என்று எழுதி யிருக்கின்றனர்.

திருக்களிற்றுப்படியார் 64-ம் செய்யுள் "சிவன் முதலேயன்றிமுதலில்லை" என்று கூறுவதுமன்றி, நீலகண்டசிவாசாரியாரும் தமது பாஷியத்தில் முதலாவது அத்தியாயம் இரண்டாவதுபாதம் 23-வது சூத்திரத்தில் பரம சிவன் பிரபஞ்சத்திற்கு நிமித்தமு முபாதானமுமான காரணமென்றும், 4-வது பாதம் 23-வது சூத்திரத்தில் சாந்தோக்கிய உபநிஷத்தை யனுசரித்து மண்

குடம்போல உலகிற்கு சிவன் உபாதானகாரணமென்றுங் கூறியதுமன்றிக் குலாலனைப்போலச் சிவனை நிமித்தகாரணமென்று கூறுவதைக் கண்டித்திருக்கின்றார். பின்னர் 2-வது அத்தியாயம் ஒன்றாவதுபாதம் 14-வது சூத்திரத்தில் சடசீவர்களான இருபொருளும் சிவனைத்தவிர இல்லையென்றும், 19-வது சூத்திரத்தில் வஸ்திரத்துக்கு நூல் காரணமாவதுபோல, உலகிற்குச் சிவன் காரணமென்றுங்கூறி, 2-வது அத்தியாயம், 2-வது பாதம், 37-வது சூத்திரத்தில் சில சிவாகமநிஷ்டர் ஆகமங்களின் உட்பொருளை யறியாமல் உலகிற்குச் சிவனைக் கேவல நிமித்தகாரணஞ் சொல்லுகிறார்களெனப் பீடிகைபோட்டு ஆகமங்களுக்கு வேதத்தைதயனுசரித்து அபின்ன நிமித்த உபாதானவாதமே கூறவேண்டுமென்று முடித்தனர். அன்றியும் அவர் பலவிடங்களில் கேவலம் நிமித்தகாரணத்தை மறுத்துமிருக்கின்றனர். மேற்காட்டிப்போந்தவைகளால், கடத்துக்கு மண்ணும், ஆடைக்கு நூலும்போல, உலகிற்குச் சிவன் அபின்ன நிமித்த உபாதான காரணமா மென்பது பெறப்பட்டது.

அன்றியும், மனதால் விளையும் பந்தமகலாக்காறுந் தூலதேகம் வந்துவந்து அழிதல் எல்லையின்றாம், அதனுலிம்மூவாது கிருத்தியந் தூலதனுபற்றி நிகழுகின்றது. அன்றேல், சூக்குமதனுபற்றியெனச் சுருதி யுத்தி யனுபவ மிருச்க வேண்டும்; அங்ஙனமின்றே. ஆதலின், பந்தவிளைவுபற்றி மனதெனலுளவாகவும், நாசம்பற்றி யிலதாகவுங்கோட லெவர்க்குமுடம்பாடாம். மனோவிளைவு மகேசுரனுக்கும், மனோநாசஞ் சதாசிவனுக்கு மியல்பாயெய்தி யிருப்பதால் அதனைக் குறிப்பிற்காணத் தோன்றியதுதியே ஒடுங்கி மலத்துளதாமெனக் கூறினாரெனினுமாம்.

இனி இதற்கியைய, பிரபுலிங்கலீலை, பாசிவம் பிரமமென்னுங் கவி முதல் மூன்று கவியினந்தர்ப்பாவம், சகுணநிற்குணங்கழன்ற தானென்னு நிலை தனக்கதோமுகத்ததாய் நிர்க்குணம் வாய்த்தவவசாத்துப் பாசிவம் பிரமமெனவும், அந்தத் தானென்னுநிலையே தனக்கதோமுகத்ததாய் சகுணம் வாய்த்த வவசாத்து அறிவானந்த வைக்கியமெனப்படலாற் சதாசிவமெனவும், அவ்வைக்கியம் வாய்த்தல் சுத்தஞானத்தாதலின் ஞானசத்தியெனவும், இங்ஙனமாகநில்லா ததோமுகத்ததா யறிவானந்தமேகமெனற் கிடையூறுவாய்த்த வவசாத்து, அந்தத் தானென்னுநிலை மகேசுரனெனவும், அங்ஙனம் பேதமுறச்செய்த சத்தி யிச்சாசத்தி யெனவும், அந்தத் தானென்னுநிலை இங்ஙனமாக நில்லாதிதனிலு மதோமுகத்ததா யறிவுதானெனலை மறந்தவவசாத்து உருத்திரனெனவும், இங்ஙனமாக மாறச்செய்தது கிரியாசத்தியெனவும், இந்தத் தானென்னுநிலை இதனிலுமதோமுகத்ததா யயல்தானென்னும் பிராந்தியை யாதோர் விக்கினமு மெய்தாது காக்கும் அவசாத்து, விஷ்ணுவெனவும், இங்ஙனங் காத்தற் கியைந்த சத்திக்கு இலக்குமி யெனவும், இவ்வண்ணங் கீழ்ப்பட் டிதுவாகக் காணப்பட்ட இந்தத் தானென்னுநிலை, இதனினுமதோமுகத்ததாய் அயல்தானென்னும் பிராந்தியைத் தூலமாகச்செய்யுமவசாத்

துப் பிரமனெனவும், அங்ஙனமாதற்கியைந்த சத்தியைச் சரஸ்வதியெனவும், கொள்க. இவையனைத்தும் நினைவுமாத்திரையினுமாலென்றதனாற் கற்பித மெனவும் உபக்கிரம சிருட்டியெனவும் எண்ணற்கிடம்பெற்றும்.

காலபரிபாகத்தாற் சிருட்டியாதி நடக்குமென்பதற்கு
உதாரணங்கள் வருவாறு.—

பிரமகீதை.

(சாந்தோக்கிய வுபநிடத தாற்பரிய முரைக்கு மத்தியாயம்.)

காலமுங் கன்மந்தானும் பரிபாக மானவாறே
ஞாலமுண் டாகநல்ல குணத்தினைக் கலந்துநிற்கும்
பாலதொன் றில்லாவிந்தச் சத்திமான் படைத்தற்காக
வேலவே யெல்லாமாவோ மென்றுகொண் டிசைந்துபார்த்தான்.

குமாரதேவர் விஞ்ஞானசாரம்.

நிமலமாம் பிரம வனுபவ முரைக்கே னின்றது சிருட்டிமுன் னுனைய்
நிமலமா மெனது நிலையினி னின்றே நினைவெனு மாயையிற் பாய்ந்து
நிமலமாம் பரமா யுயிர்களா யுலகாய் நிலையது போலவே விரிந்து
நிமலமா மென்க ணப்படி யொடுங்கி நின்றிடு வேனிது நிசமே.

உதாரணம் திருமந்திரம்.

தானே படைத்திடுந் தானே காத்திடுந்
தானே துடைத்திடுந் தானே மறைத்திடுந்
தானே யிவைசெய்து தான்முத்தி தந்திடுந்
தானே வியாபித் தலைவனு மாமே.

பெற்றமு மானு மழுவும் பிறிவற்ற
தற்பரன் கற்பனை யாகுஞ் சராசரத்
தற்றமு நல்கி யடியேன் சிரந்தனி
னற்பதமு மளித்தா னெங்க ணந்தியே.

திருக்களிற்றுப்படியார் 88-வது செய்யுள்.

அவனே யவனி முதலாயி னானு
மவனே யறிவாய்நின் றானு—மவனேகா
ணாணாகிப் பெண்ணா யலியாகி நின்றானுங்
காணாமை நின்றானுங் கண்டு.

தாயுமானர்.

காணுங் கண்ணிற் கலந்தகல் ணேயுனேச்
சேணும் பாருந் திரிபவர் காண்பரோ
வாணும் பெண்ணு மதுவெனும் பான்மையும்
பூணுங் கோலம் பொருந்தியு ணிற்கவே.

திருவாசகம்.

அண்ணு மலேயா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணேர் முடியின் மணித்தொகைவீ றற்ருற்போற்
கண்ணு ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணு ரொளி மழுங்கித் தாரகைகடாமகலப்
பெண்ணுகி யாணு யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணுகி மண்ணுகி யித்தனேயும் வேருகிக்
கண்ணு ரமுதமுமாய் நின்ருன் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

திருவாய்மொழி.

பாருருவி னீரெரிகால் விசும்புமாகிப் பல்வேறு சமயமுமாய்ப் பரந்துநின்ற, ஏருருவின்மூவருமேயென்னநின்றவிமையவர்தந்திருவுருவேறெண்ணும்போது, ஓருருவம்பொன்னுருவமொன்றுசெந்தீயொன்றுமாகடலுருவமொத்துநின்ற, மூவுருவுங்கண்டபோதொன்ருஞ்சோதிமுகிலுருவமெம்மடிகளுருவந்தானே.

இந்திரற்கும்பிரமற்குமுதல்வன்றன்னேயிருநிலங்கால்தீநீர்விண்பூதமைந்தாய், செந்திறத்ததமிழோசைவடசொல்லாகித்திசைநான்குமாய்த்திங்களுஞயிருகி, அந்தரத்தில்தேவர்க்குமறியலாகாவந்தணனேயந்தணர்மாட்டந்திவைத்த, மந்திரத்தைமந்திரத்தால்மறவாதென்றும்வாழ்த்துதியேல்வாழலாமடநேஞ்சமே.

தன்னுளே திரைத்தெழுந் தரங்கவெண் டடங்கடல்
தன்னுளே திரைத்தெழுந் தடங்குகின்ற தன்மைபோல்
நின்னுளே பிறந்திறந்து நிற்பவுந் திரிபவும்
நின்னுளே யடங்குகின்ற நீர்மைநின்க ணின்றதே.

சீர்மைகொள் வீடு சுவர்க்க நரகீறு
ஈர்மைகொள் தேவர் நடுவாய்மற் றெப்பொருட்கும்

வேர்முதலாய் வித்தாய்ப் பரந்து தனிநின்ற
கார்முகில்போல் வண்ணனென் கண்ணனைநான் கண்டேனே.

ஈர்மை—அன்பு, வேர்முதல்—அநாதிகாரணம், வித்து—உபா தானநிமித்தகாரணம், தனிநின்ற—பிரிந்துநின்ற.

தாயுமானுர்.

ஆக்குவை மாயைபாவு கொடியினி லவற்றைமாள
நீக்குவை நீக்கமில்லா நினைப்பொடு மறப்புமாற்றிப்
போக்கொடு வரவுமின்றிப் புனிதநல் லருளானந்தந்
தாக்கவுஞ் செய்வாயன்றோ சச்சிதா னந்தவாழ்வே.

ஆனந்தமானபரம்.

"வானாதிபூதமா யகிலாண்டகோடியாய் மலைபாகி வளைகடலுமாய்
மதியாகி யிரவியாய் மற்றுளவெலாமாகி வான்கருணைவெள்ளமாகி
நானாகி நின்றவனை நீயாகிநின்றிடவு நானென்பதற்றிடாதே
நானா னெனக்குளறி நானுவிகாரியாய் நானறிந்தறியாமையாய்."

அவனே பரமு மவனே குருவு
அவனே யகில மனைத்தும்—அவனேதா
மானவரே சொன்னா ரவரே குருவெனக்கு
நானவனாய் நிற்பதெந்த நாள்.

பட்டணத்துப்பிள்ளை.

மையாடு கண்ணியு மைந்தரும் வாழ்வு மனையுஞ்செந்தீ
ஐயாநின் மாயை யுருவெளித் தோற்ற மகிலத்துள்ளே
மெய்யா யிருந்தது நாட்செல நாட்செல வெட்டவெறும்
பொய்யாப் பழங்கதை யாய்க்கன வாய்மெல்லப் போனதுவே.

"மாயப் பேய்த்தேர் போன்று நீப்பரு முறக்கத்துக், கனவே போன்று நனவுபெயர்பெற்ற மாய வாழ்க்கையை மதித்து."

போதரத்நாகரம்.

காயநீர்க் குமிழி யதினுறு மின்பங் கானலிற் புனலது தனக்கிங்
காயவத் துயர மளவில பதுநீ யாய்வுறா மையினழிந் தற்றாய்
நீயினிக் கவலை மயல்களைத் தவிர்ந்து நெஞ்சமே வந்தெனக் குடன்பட்
டாயவச் சொரூபற் கன்பதே புரியி லரியதே தார்நமக் கெதிரே.

ஈசுரகீதை.

நன்றாய் ஞான கனமாகி நாளு வெல்லாம் பிறப்பிடமா
யொன்றாய்வேறோர்பொருளின்றி யொளியாயொன்றேடுவமிப்ப
தன்றா யகில சராசரங்கட் காதாரந் தானு மென்றும்
பொன்றா தததுவா யவிகாரப் பொருளாய்ப் புலனாய்ப் புணர்ப்பரிதாய்
இரண்டா வதிலா தளவைகளா லெட்டாததுவா யெங்கெங்குஞ்
சிரங்கால் கைகண் முகமுடைத்தாய்த் தெரியப்படாதாய்த்திரமாகி
யிரும்பார் நீர்தீ கால்வான மெல்லா மிருத்தற் கிடமாகும்
பரந்தா னுணர்ந்தோர் நிர்க்குணமாம் பரமவ்யோம மென்பர்களால்.

மற்றும் வருவனவற்றாற் காண்க.

1. யுகம் நான்கின் பெயர்.—
கிரேதந் திரேதந் துவாபரங் கலியிவை
ஒருநான் கென்ப வுகத்தின் பெயரே.

2. யுகம் ஒவ்வொன்றிற்கு வருடமேற்பட்ட விதிகளாவன.—
மாந்தரி னியல்பாய் வயங்குஞ் சுவாசம்
நாள்தனக் கெழுமூன் றாயிரத் தறுநூ
றாகு மதனை யெண்பா னறுபான்
நாற்பா னிருபான் முறையே தனித்தனி
பெருக்கி லொவ்வோர் யுகம் பிறங்கு மாண்டுகள்.

அவற்றுள்,

(1) கிரேதாயுகத்துக்கு வருடங்களாவன:—
கிருத யுகம் பதி னேழிலக்கத்து
இருபத் தெண்ணா யிரமாண் டென்ப.

(2) திரேதா யுகத்துக்கு வருடங்களாவன:—
திரேதா யுகம்பன் னிரண்டிலக் கத்துடன்
றெண்ணூற் றாறா யிரமென மொழிப.

(3) துவாபர யுகத்துக்கு வருடங்களாவன:—
துவாபர யுகந்தா னெட்டிலக் கத்தோ
டறுபத்து நான்கா யிரமென வறைகுவர்.

(4) கலியுகத்துக்கு வருடங்களாவன:—
கலியுக மாவது நாலிலக்கத்து
முப்பத் திரா யிரமென மொழிகுவர்.

இவையே சதுர்யுக மென்னப் படுமே.

3. இப்படியோர் சதுர் யுகமிரண் டாயிரஞ்
சதுமுகப் பிரமன் றனக்கொரு நாளே
இவன்பக லொன்றிற் பதினு லிந்திரர்
பதம்பெறு பட்டமாம் பார்தனிற் புகன்றனர்
வயதொரு நூறும் வாழ்ந்த பிர்மா
கோடி யவியின் விண்டுவுக் கொருநாள்
விண்டு வொருகோடி விளியுங் காலே
அரன்மனை யாள்குழ லவிழ்ந்து முடிக்கும்
போதிவை யென்றே புகன்றனர் புலவர்.

இனிப் பிரளயங்களின் முறையைச் சிறிதாராய்வாம். அவையாவன.—நித்தியப்பிரளயம், அவாந்தரப்பிரளயம், தினப்பிரளயம், பிரமப்பிரளயம், அத்தியந்தப்பிரளயம் என்று ஐந்துவகைப்படும்.

இவற்றுள் சமஸ்தபிராணிகளுடைய சுழுத்தியே நித்தியப்பிரளயம், கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகமாகிய அவ்வவ் வாதிபத்தியம் வருகிறமட்டும் அவாந்திரப்பிரளயமென்று சொல்லப்படும். பிரமதேவருடைய மத்தியானகாலத்தில் பதினுன்கு அவாந்திரப்பிரளயம்வரும். அவைகளுக்கு நைமித்தியப்பிரளயமென்றும், மன்வாந்தரப்பிரளயமென்றும் சொல்லப்படும். அதற்குள் யுகப்பிரளய மந்தர்ப்பூதம். பிரமதேவருடைய சுழுத்தியே தினப்பிரளயம். பிரமதேவருடைய நாச வவஸ்தையில் ஆகாசாதிப் பிரபஞ்சங்கள் சர்வாத்மனு யில்லாமல் அஞ்ஞானமாத்திர மிஞ்சியிருப்பது பிரமப்பிரளயம். அதற்கு மகாப்பிரளயமென்றும், பிராகிருதப்பிரளயமென்றும், மகா சுழுத்தி யென்றும் மூன்றுபெயர். முத்திநிலையில் அஞ்ஞானமு மதன்காரியமுஞ் சர்வாத்மனு யில்லாதிருப்பது அத்தியந்தப்பிரளயம்.

இப்படிப் பஞ்சப்பிரளயங்களையும் ஸ்ரீ சற்குரு முன்னிலையில் விசாரித்து இவைகளுக்கெல்லாம் ஆதாரமாய் அனுகூதனுய் அசங்கனுயிராநின்ற ஆத்மாவே நானென் றெவ னறிகிறுனே அவனே சீவன்முத்தனென்று சுருதி, ஸ்மிருதி, இதிகாச புராணுகமாதிகளிற் சொல்லப்பட்டிருக்கின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

அத்தியந்தப்பிரளயத்துக்கு உதாரணம்:—

பாகவதம்.

நடையறுந் தொடைய லொன்றே நாகமாய் விளைந்த வாபோற்
றடையுறு மாயை நீக்கித் தற்பர மாவ ராய்ந்தோர்
விடலரு ஞான யோக வித்தக விவேகத் திவ்வா
றடைதரும் பிரள யப்பே ராத்தியந் திகமென் றாகும்.

மேற்கூறிய ஈசனது அபிமான நிலைகளை யித்தகையதென விளக்கத் திருஷ்டாந்த முணர்த்துகின்றது.

சித்திரப்படமானது சித்திரமாகவோர் விகாரப்பொருளோடும் அமையாது தனித்து விளங்குமிடத்துத் தவுதபடமெனவும், பசைக்கூழ் தடவ அதனாற் கடிதபடமெனவும், நீலநிறத்தைத் தடவ அதனா லிலாஞ்சனபடமெனவும், வரிசை வரிசையாகச் சித்திரம் வரையப்பட்டு அதனா லிரஞ்சிதபடமெனவும், பெயர் பெறுமாறு போன்று, பிரமசைதன்னியமும் மாயையைக் காரணமாகக் கொள்வதனாற் சான்றோர்களால் அமைத்து வைத்த காரியமாகிய பாஞ்சபூத பௌதிகங்களைச் சற்றுந் தன்பாலில்லாது கடந்து நிற்கும் அவசர நிலையில் சித்தென்னும் நாமந் தரிக்கப்பெற்றுச் சதோதயமாக விளங்கும். அங்ஙனம் வயங்கும் பிரமம் சமஸ்தத்திற்குங் காரணமா நின்றுள்ள மாயையோடு சம்பந்தித்து அந்தரியாமி யென்னும் பெயரையுடையதாயும், மாயையினது காரியமாகப் பலவாறாக நின்றுள்ள சூக்கும வுடலோடு சார்ந்து இரணியகருப்பனென்னும் பெயரையுடையதாயும், குறைவிலாத தூல சரீரத்தைச் சார்ந்து விராட்டென்னும் பெயரையுடையதாயும் நிற்குமென்று நீயறிதி.

இலாஞ்சனையெனல் உருவமைத்தற்கியைந்த அடையாளச்சின்னமெனவும், இரஞ்சிதமெனல் சித்திரங்களை நிறைய வரைந்து மகிழ்தலெனவுங்கொள்க. கொள்ளவே சித்திற்குப் படமும், ஈசனுக்கு வெளுத்த படமும், அந்தரியாமிக்குக் கடித படமும், இரணியகருப்பனுக்கு இலாஞ்சன படமும், விராட்டிற்கு இரஞ்சித படமுமென வுவமித்ததாகப் பெற்றாம். படமானது வெளுத்தவிடத்துத் தவுதமெனவும், துவரிட்டுக் கொட்டிய விடத்துக் கடிதமெனவும், ஓர் வர்ணத்தி லுருக்கள் தோன்ற அச்சுக்கட்டினவிடத்து இலாஞ்சனை யெனவும், மனரம்மிதமாகப் பலவித வர்ணங்கள் இடமறிந் தமைத்தவிடத்து இரஞ்சிதமெனவும் பெயர் பெறுமாறு காண்க. இந்நால்விதக் கற்பிதங்கட்கும் ஆதாரஞ் சுபாவ பட மெங்ஙனமோ அதுபோல விராட்டாதி நால்விதக் கற்பிதங்கட்கும் ஆதாரம் சுயம் பிரமமெனக் காண்க. பிறவிகளுஞ் சுக துக்கங்களு மெங்ஙன மெங்ஙனமாக வந்து மாறினும் தா னங்ஙன மங்ஙனமாவதுபோற் காணப்படினுந் தன்பாற் போக்கு வரத்தாகிய சலனந் தினைத்துணையு மின்மையால் பிரமமும் மாயை வைத்த காரியங்கள் கடந்துறு நிலையில் சித்தெனும் பெயர் புனைந்து வயங்குமென்றார்.

மாயையைக் காரணவுடம்பெனக் கொள்க. சமட்டி சூக்கும வுடலெனல் அபஞ்சீகிருத பஞ்ச மகா பூதத்தை. பிரமமுஞ் சித்தெனும் பெயர் புனைந்து அந்தரியாமியாய்ப் பொன்கருப்ப னென்றாகி விராட்டாய் நிற்குமென முடித்துக் கொள்க.

சதோதயமாக விளங்காநின்ற பிரமசைதன்யஞ் சித்திரப்படம்போ லிருக்குமாயின் அப்போது சித்திரமெனப்படுவது யாதென்று மாணக்கனே நீ கேட்பையாயின் பிரமன் முதலிய சித்துப்பொருள்களும், பர்வதமுதல்

பெரியவுலகமிறவாக்கிடந்த சடப்பொருள்களுஞ் சித்திரமெனப்படுமென் றறிஞர் கூறாநிற்பர். பரம்பொருளா நின்றுள்ள வொரு பிரமத்தில் சட சித்து சம்பந்தமாயுள்ள பெரிய வுலகங் காணப்படுங் காட்சி யெவ்வா றிருக்கின்றதெனக் கேட்கில், சித்திரப்படத்திற் பலவேறுவகை நிறத்ததாய் வரையப்பெற்ற வஸ்திரப் போலியானது குளிர் முதலியவற்றை நீக்கற்கு வலியுள்ளன வல்லவாகும். ஓர் வடிவாகக் காணப்பட்டு நின்று குளிர் முதலானவைகளை நீக்கத்தக்க மெய்யான அழகிய வஸ்திரத்தைப்போல, அவாக்க ளனைத்தையும் ஒருங்கே யகற்றற் கியைந்து இங்கு சத்து முதலிய பஞ்ச இலக்கணமும் அழகுபெறுமாறு நிற்கு மியல்பினதாகிய வோர் பிரமமானதிருக்கும். அதற்கியைந்த இலக்கணம் அமையுமாறு வரைந்த சித்திர மெங்ஙனமோ, அங்ஙனமே அந்தப் பிரமத்தி லிவ்வுலக மிருக்கும். எவ்விடத்திலுந் தன்னைத்தானையந்திரிபற விசாரித்துத் தெளியி னிங்ஙனமாய நிலை யெவர்க்கும் விளங்கா நிற்கும். சடமுஞ் சித்து மிசிரிம்பித்திருத்தலின் சடாசடமா முலகெனப்பட்டது. உலகத்தைத் தோற்றமென்றது தனக்கெனச் சொரூபமொன் றின்மைபற்றி. துகிற்போலி பயன்படுமேல் சராசரத் தோற்றம் பயன்படும். படத்தையன்றித் துகிற்போலி யுளதேல் சைதன்னிய வியாபகத்தையன்றி யுலகத் தோற்றமென லுளதாகும். என்றுமின்மையின் இவ்வுவமை பொருந்துமெனற் கையமென்னை? இன்றாதலா லேற்றற்பாலதெனக. பட நாட்டத்திற் சித்திரமின்றாதல்போல ஞப்தி நாட்டத்தில் உலக மெங்ஙனந் தோன்றும்? சித்திரத்திற்குப் படமாதாரமா யிருப்பதுபோலச் சகத்துக்கு ஞப்தியாதாரமா யிருத்தலின், வேறு பொருளெனக் கோடற்க. கொள்ளின் துக்காபாவத்துக்கிடமின்று.

உலகத்தோற்றந் துகிற்போலியெனல் ஒக்கும். பிரமத்திற்குஞ் சகத்திற்குமுள்ள நிலையினையதெனக் காட்ட இவ்வுவமை கூறியது வேறிடத்தன்று, தன்னிடத்திலுமென்பார் தேர்வுறிற் றன்னைத் திரிபற வெங்குந் திகழுமிந் நிலைய தென்றார். வரைந்தது தன்னில் தானேயன்றி பிறரா லன்றெனற் கபவாத நாட்டத்தாற் றெளிக. அஃதின்றே லெவர்க்கு மரிது. அதனாற்றான் மதத்தரை யானைகண்ட குருடரெனச் சத்துக்கள் கூறாநிற்பர். வஸ்து மாறின்றி நிற்பதால் ஓர் வடிவாகி யென்றார்.

நால்வகை யோனி யெழுவகைத் தோற்ற மெண்பத்துநான்குலெட்சம்
சீவராசி பேத முணர்த்தல்.

அமுதசாரம்.

ஞானனந் தச்சுடராய் நன்றாகி யொன்றான
தானா கியபடத்திற் றான்றன்னா—னானவா
யார்த்த கடலுலக மாமோ வியமெழுதிப்
பார்த்து மகிழ்ந்தான் பரன்.

நானிலநீர் பைமுட்டை நால்வகை யோனிசுரர்
மானிடநீர் வாழ்பறவை மாகிருமி—ஞானமிலா
மண்பட்ட தாபரமென் றேழாய் வரும்பவநூ
றெண்பத்து நான்கா யிரம்.

ஊர்வ பதினொன்று மொன்பான மானுடவர்
நீர்பறவை நாற்காலி நேர்பத்தாஞ்—சீர்திகழு
மூவாறுந் தாபரங்கண் முப்பத்து மும்மையோ
ராவா ரொருபதா றும்.

ஆன கடங்க ளளவிலவற் றுட்புகுந்து
வானகந் தானின்ற வாறொக்கும்—யோ னிகளெண்
பத்துநான் காயிரநூ றாகப் படைத்தவற்று
ணித்தனர் நின்ற நிலை.

மூவினைமையிற் றோற்றி நின்றுழல்தற் குதாரணம்.—

பாரதம்.

தாயரொடு தந்தையர்க டாரமொடு தனையோர்
தூய துணை வோர்களொடு சுற்றமென நின்றோர்
மாயையெனும் வல்லப மயக்குறு மயக்கா
லாயவுற வல்லதவ ரார்முடிவில் யார்யார்.

வந்துபிற வாதமனை யில்லைமுலை மாறித்
தந்துபரி யாமலொழி தாயர்களு மில்லை
புந்தியுணர் வற்றவர் புலம்புறுவ தல்லா
லிந்தவுல கத்தறிஞர் யாதினு மயங்கார்.

உம்மையினும் யாருற வுணர்ந்தில மினிப்போ
மம்மையினும் யாவருற வாவரென வறியே
மிம்மையி னிகழ்ந்தவுற வித்தனை யிரங்கன்
மும்மையு முணர்ந்துவரு மூதறிவி னீரே.

மூவினைமையிற் றோற்றிய திதியேயொடுங்கி மலத்துளதாம் என்பதற்குதாரணம்.—

திருமந்திரம்.

மாறு மலமைந்தான் மன்னு மவத்தையின்
வேறாய மாயா தநுகர ணாதிக்கிங்

கிருகா தேயெவ் வுயிரும் பிறந்திறந்
தாருத வல்வினை யாலடி யுண்ணுமே.

தன்னை யறியா துடலைமுன் றனென்றான்
தன்னைமுன் கண்டான் றுரியந் தனைக்கண்டான்
உன்னுந் துரியமு மீசனோ டொன்றாக்காற்
பின்னையும் வந்து பிறந்திடுந் தானே.

தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமற் றானே கெடுகின்றான்
தன்னை யறியு மறிவை யறிந்தபின்
தன்னையே யர்ச்சிக்கத் தானிருந் தானே.

முன்னை முதல்வினை யாட்டத்து முன்வந்தோர்
பின்னைப் பெருமலம் வந்தவர் பேர்த்திட்டுத்
தன்னைத் தெரிந்துதன் பண்டைத் தலைவன்றாண்
மன்னிச் சிவமாக வாரா பிறப்பே.

தானே தனக்குப் பகைவனு நட்டானுந்
தானே தனக்கு மறுமையு மிம்மையும்
தானே தான்செய்த வினைப்பயன் றுய்ப்பானுந்
தானே தனக்குத் தலைவனு மாமே.

மற்றும் வருவனவற்றாற் காண்க.

இனி மேற்கூறிய ஈசனது சட்வித குணங்களும் சாமர்த்தியங்களும் பஞ்சகிருத்தியங்களும் உணர்த்துகின்றது.

உதாரணம் வேதாந்தசூடாமணி 47-வது செ.

இத்திறத்தீசன்முக்கியகுணங்களெலாமறிதன்முதலனவாங்
கத்திருத்துவமோடகத்திருத்துவம்பினந்நிதாகத்திருத்துவமே
யத்தன்மெய்ப்பிரபுத்துவவலியாக்களித்தல்போக்குதல்சமனந்தா
னெய்த்திடலகற்றுமனுப்பிரவேச மென்பனவீசனைந்தொழிலே.

(பொருள்) இத்தகைத்தாய நிலையினையுடைய ஈசனது முக்கிய குணங்களாவன சர்வக்ஞத்துவ முதலியனவாம். அவை கர்த்திருத்துவமும் அகர்த்திருத்துவமும், பின்னர் அந்நிதாகர்த்திருத்துவமும் ஈசனது மெய்ம்மையான பிரபுத்துவ வலிகளாம். சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்பவைகளீசனது பஞ்சகிருத்தியங்கள். எலாமறிதல் முதலியனவென்றதனுல் சர்வஞ்ஞத்துவம், சர்வேசுவரத்துவம், சர்வநியந்தாத்துவம், சர்வாந்தரியாமித்துவம், சர்வாத்மகத்துவம், சர்வசத்திதத்துவம் முதலியவைகளைக்கொள்க.

சருவக்ஞத்துவமாவது:- ஜீவர்கள் மன மொழி மெய்களாற் செய்யப்படும் நல்வினை தீவினையாதிகளனைத்தையும் ஏககாலத்தி லறியுந்தன்மை. சர்வேசுரத்துவமாவது:— இயற்கைஞானம், பேரருள், முடிவிலாற்றல், வரம்பிலின்பம், வரம்பில்காட்சி, முதலின்மை, அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவங்களோடு, தூயவுடம்பு, மக்கள், பொன், மணி, அடிமை, வாகனங்களாதிய சகல ஐசுவரியங்களு முளவாந் தன்மை. சர்வநியந்தரத்துவமாவது:- சமுத்திரம் அணைகடவாதிருக்கவும், சோமன் சூரியன் கிரகம் நக்ஷத்திரம் வாடை தென்றல் முதலியன கிரமந் தவருது செல்லவும் நியமிக்குந்தன்மை. சருவாந்தரியாமித்துவமாவது:- ஜீவர்களுடைய அந்தக்கரணங்களி னுள்ளிருந்து அவரவர்கள் கன்ம தாரதன்மியத்துக்குத் தக்கதாகச் சுக துக்காதி போகங்களை யனுபவிக்கும்படி சூத்திர தாரி பாவையை யசைப்பதுபோல அசைப்பிக்கும் பிரேரகத்துவம். (சர்வாத்மத்துவம்) அல்லது சருவகாரணத்துவமாவது:- சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அனுக்கிரகமென்னும் ஐந்திற்குங் காரணத்தன்மை அல்லது உபாதானம் நிமித்தமென்னு மிரண்டிற்குங் காரணத்தன்மை. சருவசத்தித்துவமாவது:— இச்சா ஞானக் கிரியைகள் முதலிய சர்வசத்திகளையுடைய தன்மையுமாம்.

விசேடம்—கர்த்திருத்துவமென்பது ஒன்றின் உபாதான இச்சா ஞானக் கிரியையுடையதன்மை. அகர்த்திருத்துவமென்பது அத்தன்மை நீங்கி நிற்றல். அந்நிதாகர்த்திருத்துவமென்பது ஒன்றை மற்றொன்றாக்குந் தன்மை. பிரபுத்துவமென்பது விபுத் தன்மை யெனக் கொள்க.

பதசாரம்—சமனம் திரோபவலம் எய்த்திடலகற்றும் அனுப்பிரவேசம் :- பிறவிதோறும் எய்திடும் இளைப்பை யாற்றும் அனுக்கிரகமென்பது சூக்குமப் பொருள்.

அன்றியும், அவித்தியாசம்பந்தமான ஆத்மாக்களை அதினின்றும் நீக்கி முத்தியை யடைவிக்கு நிமித்தம் தனு கரண புவன போகங்களைக் கற்பிதமாக வுண்டாக்கி அச் சீவர்களின் இருவினைகளை ருசிப்பித்துப் புசிப்பித்து நசிப்பிக்கு நிமித்தஞ் சிருட்டிமுதன் முத்திபரியந்தம் உயிர்க்குயிராயிருந் தசைப்பித்துக்கொண்டிருந்த தனது சாமர்த்தியமே கர்த்திருத்துவமும் இவைகளிற் கூடிக் கன்மானுசாரமாக ஆத்மாக்கள் பிரவிர்த்திக்கும்படி பிரேரகஞ் செய்தும் அவற்றிற் பற்றின்றித் தனியே தானிருத்தலே அகர்த்திருத்துவமும் சிற்சத்தியின் நியமப்படி வழுவாமல் செய்யும் முறையின்றிக் கடத்தைப் படமாகச் செய்வதுபோல, ஒன்றை மற்றொன்றாகச் செய்யுஞ் சாமர்த்தியமே அந்நிதாகர்த்திருத்துவமுமாமெனினுமமையும்.

வினு:—இங்ஙனங் கூறிய குணங்களா லுண்டாகும் இருவினைகள் அவ் வீசனைச் சாராவோ?

விடை:—சூரிய சன்னிதானத்தில் நடைபெறும் இருவினைகள் அவனைச் சாராவாறுபோல ஈசன் அனைத்தையுஞ் செய்துஞ் செய்யாதவனாதலின் இவனையுஞ் சாராவென்க.

வேதாந்த சூடாமணி.

நியமசத்தியினற்போகபோத்திருவைநியமஞ்செய்துருத்திரவுருவான்
மயமுறு மாயா காரியஞ் சிதைத்து வந்தரு ளாரிய வுருவாய்
அயர்வுறுசிவன்றன்னையேதன்னே டயிக்கியமாக்குவனெனவறிக
வுயர்வுறுசமட்டிவியட்டியென்பவற்று ளுயிரிறை கட்குறும்பேதம்.

(இ-ரை)நியாமகசத்தியினற்போகத்திற்குரிய சீவர்களை நியமப்படி படைத்தளித்து உருத்திர சொரூபத்தினல் மாயாமயமாநின்றுள்ள அதனது காரியங்களை யழித்து பின்னர் குருமூர்த்தமாக எழுந்தருளி வந்து அனந்த பிறவிகளால் எய்ப்புற்ற மாணுக்கனது உயிரைத் தனது எதார்த்த வடிவத்தோடு ஏகமாக்கும்படி செய்வனென் றறிதி. இங்ஙனங் கூறிய உயிர்கட்கும் பரமனுக்கும் வந்த பேதம் மேலாய சமட்டி வியட்டியா லென வறிதி.

சோதனை ஞாயங்களா லாராயுமிடத்து எவற்றிற்குந் தனக்கெனச் சொரூபமின்றாய் முடிதலானும் மெய்போலக் காணப்படுவன அனைத்தும் ஒன்றன் கூட்டம பலவினீட்டம் திரிபினுக்கமாதலின் ஒன்றுநிற்றலானும் "மயமுறு மாயாகாரிய" மென்றாரென்க.

ஏனைய உயிர்களை யன்றென மறுக்க அயர்வுறென்றடை கொடுத்து ஒருமையிற் கூறப்பட்டது. நியமசத்தி யின்றியவிடத்து அரசிலாநகர் போல் வதினானும் அவரவர்வினைக்களவாத் தனுவாதிகளைக் கொடுப்பித்துப் புசிப்பித்துத் தொலைப்பித்துக் கோடலினானும் இக்கருத்துப்பற்றி நியமசத்தி யென்றார். பிரமத்திற்குச் சூரியனையும் மாயைக்கு வருஷகிரண சலத்தையும் சீவேசுரர்களுக்குப் பிரதிவிம்பத்தையும் இரட்சித்தலுக்கு இமகிரணத்தையும் சங்கரித்தலுக்கு உஷ்ணகிரணத்தையும் திரோபவித்தற்கு மேககிரணத்தையும் அனுக்கிரகித்தற்கு பிரதிவிம்பத்தைத் தன்னிடத்திற் சேர்த்துக்கொள்ளுதலையும் உவமித்ததென்க.

வினு:—இவ்வுவமைப்படி பஞ்சகிருத்தியத்திற் குவமேயம் யாது?

விடை:—போற்றிறை யென்பது பிரமமெனவும், மாயாசத்தியோடொன்றி யென்பது மாயாப்பிரதிபலன ஞன வீசனெனவும் சிற்பிரதான மதனுலென்பது தனது காரணம் மறைவுபடாமல் அறிவுமேலிட்டிருத்தலெனவும், நிமித்தகாரணனென்பது தனது காரணத்தை மறந்த சீவர்கட் கது வெளிப்படு நிமித்தந் தனுகரணங்களைக் கொடுப்பதற்பொருட்டு நோக்கிச் சிருட்டிக்கும் பிரமனெனவும், சடப்பிரதானமென்பது தானுண்டாதற் கேதுவாயிருந்த மாயை மேலிட்டிருத்தலெனவும், ஆற்றுபாதானகாரணமென்பது அம்மாயா சம்பந்தத்திற்றுனே யுபாதானகாரணமெனவும் புத்தியாதிகளிற்றோற்றுபு சீவரூப மென்பது அவித்தியாபுத்தியிற் றோற்றிய சீவர்களெனவும், நியமசத்தியினற் போகபோத்திருவை நியமஞ்செய்தென்பது நியமப்படி சீவர்களை விஷ்ணுருபமா நின்று இரட்சித்தலெனவும், உருத்திரவுருவான் மாயாகாரியஞ் சிதைத்தென்பது வித்தை யவித்தை முதலிய தோற்றங்களை யுருத்திரரூப

மாய்க் கெடுத்தல் சங்கரித்தலெனவும் இவைகளொன்றுந் தோன்றாதடங்கிநிற்றல், மகேசுரரூபமாய் மறைப்பித்தலெனவும், வந்தருளாரியவுருவென்பது கற்பனையிறந்தவிடத்துண்டாகிய சுகபோதமெனவும், சீவன்றன்னையே தன்னோடையிக்கிய மாக்குவனென்பது பிரமத்தோடு தன்னுடன்கூடச் சதாசிவவுருவாய் அயிக்கியமாக்குவனெனவுங் கொள்க.

சீவேசுரர்களுக்குத் தனுவாதிய தோற்றம் சிருட்டி, அவற்றை யிரட்சித்தல் திதி, அவற்றைக் கெடுத்தல் சங்காரம், அவ்விஷயநீக்கந் திரோபவம், அவர்களுக்குத் தற்சொரூபம் வெளிப்படுத்தல் அனுக்கிரகம். இவற்றில் மூன்று தேகத்திற்கும், இரண்டு தேகிக்குமாக ஐந்தும் பஞ்சகிருத்திய மெனக்கொள்க.

உதாரணம் சிவஞானவள்ளல்.

சிருட்டி திதி சங்காரந் திரோபாவ ஞான
வருட்டிறத்தோ டைந்தொழில்க ளாம்.
தேகத்தின் முன்மூன்றுஞ் சீவன்பான் மற்றிரண்டு
மாகத்தான் செய்வா னரன்.

வினா:—அற்றேல் இச்சிவ சீவர்கள் உபாதியோடுங் கூடினவரென முற்கூறி யிங்ஙனந் தன்னோ டயிக்கியமாக்கிக் கொள்வனென்ற தென்னை?

விடை:—அவ்வீசனுக் கதிஷ்டானமான பிரமமும் சீவனுக்கதிட்டானமான கூடஸ்தனும் ஏகமாய்க் கலத்தலினா லென்க.

வினா:—அற்றேல் அவையே சுயஞ் சித்தாகாவோ?

விடை:—அங்ஙனங் கலப்பதோ ருபாதியாதலி னாகாவென்க.

இதுகாறும் பிரமசந்நிதியில் மாயாப்பிரதிவிம்பரான வீசுரன் அவித்தியாப் பிரதிபலனரான சீவர்களை முன்னிட்டு அவர்கள் தமது யதார்த்த ஸ்வரூபத்தை யடையும் பொருட்டு பஞ்ச கிருத்தியஞ் செய்யுங் கிரம முணர்த்திய தென்க.

இனி நிமித்தோபாதானகாரணம் பிரஹ்மமெனற்கு உதாரணம்.

திருவாசகம்.

'ஆதியு மந்தமு மில்லா வரும் பெருஞ் சோதியை'
'ஆதியு மந்தமு மாயினார்க்கு ஆடப்பொற் சுண்ண மிடித்து நாமே'
'அத்தனே யண்ட ரண்டமாய் நின்ற வாதியே' என்றும்

அமுதசாரம்.

அணுவென்பர் மாமாயை யென்ப ரணுவின்
புணர்வென்பர் பூதமே யென்பர்—குணமென்பர்
எவ்வேது வும்மோ துகவிதற்கோ ரேதுவென்று
வவ்வேது வேயேது வாம்.

தாயுமானுர்.

உற்று ணர்ந்தெலா நீயல தில்லையென் றுனையே
பற்று கின்றனர் எந்தைநின் னடியர்யான் பாவி
முற்று மாயமாஞ் சகத்தையே மெய்யென முதரு
னற்றி ருந்திடத் தொழில்செய்வான் றனைநிக ரானேன்.

ஒன்றிரண்டாய் விவகரிக்கும் விவகாரங் கடந்தேழாம் யோக பூமி
நின்றுதெளிந்தவர்பேசாமௌனநியாயத்தைநிறைநிறைவைத்தன்னை
யன்றியொரு பொருளிலதா யெப்பொருட்குந் தான்முதலா யசல மாகி
யென்றுமுள்ள வின்பத்தைத் தண்ணென்ற சாந்தபத வியற்கை தன்
[னை.

சூதசங்கிதை ஞானி பணிவிடைப்பேறு.

வானே வளியே யொளியே யறலே மண்ணேமற்
றானே யுயிரே கதிரே மதியென் றேரெண்மெய்
நானே யுடைய னென்பாய் மறையு நவில்கிற்கு
மானே றுடையா யடியேன் வேறே வருளாயே.

ஷை தைத்திரிய உபநிடத தாற்பரிய முரைத்தவிடம்.

பிரமன் முதற்று பாமீறுப் பேசா நின்ற வுலகமெலாம்
பரவு மந்தப் பரசிவனே பண்பா ரந்தப் பரசிவன்றன்
சொருப ஞான முள்ளோனே துலங்கு சீவன் முத்தனுங்
கரும மாதி களாற்சீவன் முத்த னுகான்கடைப்பிடிமின்.

கூர்மபுராணம் விசுவரூப அத்தியாயம்.

அணுவா பெவைக்கு மணுவா யிருத்தி யகிலக்கண் முடி பொளிருந்
தணியாத வண்ட வுருவா யிருத்தி தருபஞ்ச பூத மதிவான்
மணியா மருக்க னுபர்சோம யாசி வடிவா யிருத்தி மறையுங்
கணியா திருத்தி நினையார் கணிப்பர் களைகண்ண தாய பெரியோய்.

வாயுசங்கிதை பரசிவப்பிரபாவம்.

நிற்பன நடப்பன யாவு நேர்ந்திடிற்
பொற்புறு சடையவ னுருவம் போலுமால்
அற்புதப் படிவிவ்வா றமர்வ னென்றதைச்
சொற்படு பசுக்கடாந் தோன்ற வோர்ந்திடா.

இலிங்கபுராணம் பதிபசுபாசமுரைத்த அத்தியாயம்.

பதியாகியுறைபவனேமாயையெனும்பாசத்தாற்பசுக்களாகி
வதியாநிற்பனவெவையுங்கட்டிடுவன்முகைவிரிநாண்மலர்கடுவித் [ய
துதியாமெய்ஞ்ஞானத்தால்தொழுதிடிலத்தொடர்ச்சியினையகற்றித்தூ
கதிமேவியமர்ந்துறையக்கண்ணிரங்கிக்கருணைபொழிந்திடுவன்றானே.

ஷை நான்முகனு மாயனுந் துதித்த அத்தியாயம்.

நினைப்புமாய் மறப்புமாகி நினைவினுக் கெட்டா தொன்றாய்
அனைத்துமாய் நின்றாய்போற்றி யருமறைக்கொழுந்தே போற்றி
கனைத்துவண் டிமிரவிள்ளுங் கடுக்கையங் கண்ணி யோடு
புனிற்றுவெண் டிங்கட்கண்ணி புனைந்தசெஞ் சடையாய் போற்றி.

ஷை சத்தசத்து முதலானவை யுரைத்த அத்தியாயம்.

யோகசிகோபநிஷத் 4-வது அத்தியாயம்.

பிரபஞ்சத்திற்கு உபாதானகாரணம் பிரமத்தைத் தவிர வேறில்லை. ஆகாசத்தில் நீலத்தன்மையும் பாலைநிலத்தில் ஜலத்தோற்றமும் கட்டையிற் புருஷனென்கிற பிராந்தியும்போலச் சிதாத்மாவிடத்தில் பிரபஞ்சந் தோற்றுகின்றது. வேதாளமென்பதும், கந்தர்வநகரமென்பதும், ஆகாசத்தி லிரண்டு சந்திரனும் எப்படி யில்லையோ அப்படியே; சத்தியமான பிரமத்தினிடத்தில் ஜகத்தினிருப்பு.

பிரமகீதை சாந்தோக்கிய உபநிடத தாற்பரிய முரைத்த அத்தியாயம்.

காரண மதனு லன்றிக் காரிய முளவாய்த் தோன்றா
காரண மொழிய வேறு காரிய மின்மை யாலே
காரிய மனைத்தி னுக்குங் காரண மதுவே யுண்மை
யோர்தர விரண்டும் வேறென் றியம்பிட வியல்பின் றாமால்.

அப்பைய தீக்ஷித சுவாமிகள் இயற்றிய சிவதத்துவ விவேகம்.

(சிவஞானசுவாமிகள் மொழிபெயர்ப்பு.)

விச்சு வாதிகனும் விசுவ சேவியனும் விமல னீயேயென மறைகணிச்சய மாக முழக்கவு மறியா நீசர்தாம் பிணங்குவ ரந்தோ, மச்சரத் தனக்கே தீங்கிழைத் தவர்தம் வாழ்க்கையும் பயன்படா தாலத், துச்சர்சொற் கேட்டோர்க் கிறுதிலை தண்டஞ் சொற்றிடு நூலெல்லாமன்றே.

முளரியோன் முதலாஞ் சுரரெலாம் பூத முதலவற் றேடுதித் துள்ளோ, ரளவிடுந் தலைமை யாளரென் றவரை யகற்றிமால் விடை யவ நினையே, வளமுறு மெல்லாத் தலைமையு முடையோன் வருமு தற் காரண னல்லோ, ருளமுறு தியானப் பொருளெனச் சிகைதேர்ந் துரைப்பவு மயங்குவர் சிலரே.

பகவற்கீதை 2-வது சாங்கியயோக அத்தியாயம்.

மண்ணி னுய விகாரமுமம் மண்ணே யந்த மண்ணெழித்துப்
பண்ணி னுரும் பிறரில்லை பண்ணப் பட்ட பலபொருள்க
ளெண்ணி னுகு வதன்முன்பு மிறந்த பொழுது நிகழ்விடத்துங்
கண்ணி னுடி மண்ணெழியக் கண்டா ருளரோ கட்டுரைப்பாய்.

திருக்குவி னின்றுந் திரிசியந் தோற்றற் கேதுவாய மாயாசத்தியி னிலக் கண மினையவென வுபமான பூர்வக மாக வுணர்த்துகின்றது.

பூரண சந்திரனை யநாதி தொட்டு விடாதடைந் தந்தச் சந்திரனை முழுது மறைக்க வலியின்றி யந்தச் சந்திரனல் தனதழகிய நிலைமையினை விளக்கு வித்துக் கொள்ளுங் களங்க மெங்ஙனமோ அதுபோல, என்னையா னறிந் திலனெனக் கூறற் கியைந்த பிரத்தியட்சமாக நின்றுள்ள உலக விவகா ரத்தினல், அநாதிதொட் டுயிரை யடைந்து அதனை மறைத்தற்குச் சற்றும் வலியின்றி, எப்போதும் அந்த வுயிராகிய வுணர்வால் அறியப்பெற்று, அக்கினி யினது உஷ்ணத்தைத் தம்பிக்கச்செய்யும் மந்திரசத்தி யெங்ஙனமோ அது போலநின்று, சதோதய மாக விளங்கும் ஆத்ம சொருபமு மாகாமல் அதற்கு வேறு பொருளாக நின்று தோற்றுமலும் உள்ளத்திற் கோடற் கியைந்த ஆகாய முதலிய தனது காரியங்களை வேறுகத் தோன்றவொட்டாது தன்பா லடக்கி நின்று எவர்க்கும் விளக்கமா நின்றுள்ள கடனுகடன சாமர்த்திய முடைய ளாயுங் காணப்பட்டு, நாற்கதிக ளாக நின்றுள்ள வளங்களைத் தருதற் குக் காரணமாக நிற்பது யாதோ அதுவே திரிசிய மெனத்தக்க மாயா சத்தி யாம்.

இங்கு இந்துபோல்வது ஆன்மா வாதலால் உயிர் எனலை யான்மா வெனக. அவ்வான்மா சச்சிதானந்தமெனற் கியையு மாதலின் அதனைப் பிரமமென வொக்கும். இந்து அனல் இவ்விரண்டும் பிரமத்திற்கும்; களங்கம் மந்திர மிரண்டும் மாயாசத்திக்கு முவமை கூறிய வாறு காண்க. ஆகாய முதலிய வென்றதனல் எனை நான்கு பூதத்தையு மண்டபிண்டங்களையும் கொள்க. மந்திர சத்தி யக்கினியி னுஷ்ணத்தை முழுதும் ஸ்தம்பனஞ் செய்யின் அக் கினியோ ராதாரத்தைப் பற்றிப் பிரகாசிப்பது கூடாது. அங்ஙன மின்றிப் பிரகாசித்தலின் அச்சத்தியை யுடைய மாந்திரிகனுக்கு மாத்திரங் கற்பனை யாகக் கிஞ்சித்துத் தோற்றினதே யன்றி வேறின்று. அவ்வக்கினி சுபாவ

மாய்ப் பிரகா சித்துக்கொண் டிருப்பதுபோல மாயாசத்தி பிரம சுபாவமான சிற்சத்தியை முழுது மறைக்கின் பிரம ஞானம் பிரகாசிப்பது கூடாமையின் அங்ஙனமின்றிச் சொரூபமுதல் ஸ்தம்ப மீறுய யாவினிடத்தும் பூரணமாய்ப் பிரகாசித்தலின் அம் மாயாசத்தியை யுடையவனுக்கே கிஞ்சித்துக் கற்பிதமாய் மறைந்தது போலத் தோன்றினதே யன்றி பிரமம் சுபாவமாய்ப் பிரகாசித்துக் கொண் டிருக்குமெனக் கொள்க.

பூச்சாயை யானது சொப்பிர காசமாய் விளங்கும் சந்திர னிடத்திற் ருேற்றி, அதனை மறையாமற் ருன் விளங்குவது போல, பிரமப் பிரகாசத்திற் சங்கற்ப ரூபமான மாயையானது அதனை மறைக்காமல் அதனிடமாய் விளங்கிக்கொண்டிருக்கும். கண்ணைப்போல அனைத்தையு மறிகின்ற சித்தாகிய அறிவு தன்னைத் தானென அறியாததே யறியாமை. அவ்வறியாமை யறிவினிடத் திருந்து அதனை மறையாம லதனுற் ருன் விளங்கு கின்றது. அக்கினியினது உஷ்ணத்தை மந்திர சத்தியினு லதனுள் அடக்குவது போலப் பிரம சுபாவமான சிற்சத்தியை யதனு ளடக்கும் அம்மாயை யப்பிரமமு மாகாது. அதற்கு வேறு மாகாது. பிரமத்திற் கெதிரிட்ட சங்கற்பமாகிய கண்ணுடியில் இயல்பாய்த் தோற்றுகின்ற அப்பிரமச் சாயை கண்ணுடியா லுண்டாக்கித் தோற்றுகின்ற தென்றது போல மாயையாற் சகலமுந் தோன்றும். இங்ஙனங் கூடாத காரியங்களை கூட்டுவிப்பதாகக் காட்டும் வல்லபமுடைய அகடித கடனு சாமர்த்தியமுள்ள மாயையே சகல வனர்த்தங்களுக்குங் காரணம். ஆனதால் திரிசியம்.

வினு:—அதிரிஸ்ய மான மாயா சத்தியைத் திரிஸ்ய மென்ற தென்னை ?

விடை:—வித்துவானது சத்தி அவன் வித்தை செய்யுங் காரியத்திற் றெரிவது போலப் பிரமத்தினது மாயாசத்தி பிரபஞ்ச ரூபத்திற் காட்டு நிமித்தந் திரிசியமா, மாயாசத்தி யென்ருரென்க. இன்னும் பூச்சாயா களங்கமானது கலாநிதியி னிடத்தி லிருப்பதுபோலத் தோற்றி யதனை மறையாமல் அதனுற் ருன் விளங்குவது போல் அதீதப் பிரம ஸ்புரணம் அவ்வதீத மாகவே விளங்க, அதை யறியே னென்ற அறிவி னறியாமை யவ்வறிவு மாகாமல் அதற்கு வேறு மாகாமல் அவ்வறிவினிடத் திருப்பதுபோலத் தோற்றி யவ்வறிவை மறையாமல் அதனுற் ருன் விளங்குவ தன்றியுந் தான் வெளிப்படாது தனக் காதாரமான திருக்குவின் சத்தியைக் கொண்டு ஆக முதலிய திரிசியங்க ளென்னும் பொய்ப்பொருள்களை மெய்போலத் தோற்றுவிக்கும் மாயாசத்தி யொன்றுண்டென் றவாந்தர மாகச் சுருதி யங்கீ கரித்த தென்க.

வினு:—அற்றேல் முன் சுத்தப் பிரமத்திற்குச் சுவகதாதி பேத மின்றென்று கூறிய சுருதி இவண் இங்ஙன மங்கீகரித்த தென்னை ?

விடை:—இம்மாயா காரியங்களி னிற்பவர்கள் அவற்றினின்று நீங்கும் நிமித்தம் அதை விசாரித்து என்று மின்றென்பது தோன்றற் கென்க. அங்ஙனமாயின் வேதாந்தி யொருவனிற்க ஏனையோர் யாவரும் இம்மா

யையை நித்தியமெனக் கூறுவ தென்னை? இம்மாயையின் உண்மை வெளிப்படாமையினு லென்க. அற்றேலிம் மாயையி னுண்மைதான் யாதோ? தனக்கென ஒருருவ மில்லாமையே யாமென்க. மாயையி னுண்மை தெரியாத மதங்க ளதற்கதீதமான முத்தியி னிலக்கணங் கூறுவ தென்னை? மதங்கள் மாயைக் குட்பட்ட பதமுத்தியைக் கூறுவதே யன்றி, யதற்கதீதமான பாமுத்தியைக் கூறுவ தன்றென்க. மதங்க ளற்பப் பிரயோசனமான பதமுத்திகளை முக்கியமாகக் கூறுதற்கு வேதஞ் சம்மதித்த தென்னை? யாதுமின்றிய ஆதுலர்க்கு யாதேனு முள்ளவன் ஆக்கவா னென்பது லவுகீக சம்மத மாதல் போல சுகமென்ப தொன்று மின்றிய பேதைகட்குக் கிஞ்சித்து சுகத்தைக் கொடுக்கும் பதமுத்திகளைக் கூறுதலும், சக்கிர வர்த்திச் செல்வமுள்ள பெருமன்னனுக்கோர் தேசாதி பதியான குறுநில மன்னன் தாரித்திர னென்பதுபோல, பாமுத்தியான மோக்ஷ சாம்பிராச்சியம் பெற்ற மக தைசுவரிய வானுக்கு இப் பத முத்தி யான சொற்ப ஐசுவரியவான் தாரித்திரனெனக் கூறுதலும் வேத சம்மத மென்க.

அக்கினி பிரகாசத்தோடு கூடியிருக்க அதன் குணமான உஷ்ணத்தைத் தன்வய மாக்கிக் கொள்ளும் மந்திர சத்தியைப் போல, பிரமம் தனதருளோடும் பிரகாசித்திருக்க அதனுல்லாச மான சித்து விலாசத்தைத் தன்வச மாக்கிக் கொண் டிருத்தலும், பிரமத்தைத் தவிரத் தானொரு பொருளுங் தனக்கோர் சுதந்தரமுமின்றி, அதன் பிரதிபலனச் சாயை யாகிய சிவேசுர சகத்திற்குக் காரணமாயு மிருக்கின்ற மாயா சத்தியி னியல்பை விளங்கக் கூறிய தென்க.

சத்து முதலிய பஞ்ச இலக்கணங்களால் திருக்கை விளக்கிய வாறு போன்று அசத்து முதலிய பஞ்ச இலக்கணங்களால் மாயா சத்தி யினையதென வுணர்த்துகின்றது.

அத்தகைய தாகிய வோர் மாயா சத்தியி னிலக்கண மாவன அசத்து, சடம், துக்கம், அநித்தம், கண்டம் என்னு மிவையைந்தாம். இவற்று ளசத்தெனல் முயற்கோடு முதலிய போல்வதாம்; சடமெனல் உருவா நின்றுள்ள கல்முதலியவை போல்வதாம்; துக்கமெனல் புத்தியைவந் தடையும் கோர விருத்தி மூட விருத்திகளின் றன்மையாம்; அநித்தமெனல் முன்னர்க் கூறிய மெய்யல்லாத பிராக பாவ முதலியவை போல்வதாம்; கண்டமெனல் கால பரிச்சேத முதலிய வற்றை யேற்பது போல்வதாம்.

இத்திரிசியத்தை யுற்று விசாரணை செய்து பார்க்கு மிடத்து இல்லாமையால் அசத்தும், தனக்கெனவோ ரறிவின்மையிற் சடமும், இன்பம் போலத் தோற்றி யழிதலிற் றுக்கமும், இருப்பது போலத் தோற்றி யழிதலி னநித்தமும், பின்ன மயமா யிருத்தலிற் கண்டமு மாமென்க.

வினு:—இவ்வைந்து தன்மையும் மாயைக்கே யென்ருல் அதன் காரிய மாய சகத்திற் கின்றோ?

விடை:—காரணத நந்தியக் காரிய மென்ற நியாயத்தாற் காரணத்தி லுள்ளது காரியத்திற்கு முண்டெனக் கொள்க.

இம்மாயை யநாதியே மித்தையென்பது தோன்ற அசத்தாதி யைந்திலக் கண முணர்த்திய தென்பது கருத்து.

கணித்தற் கரிய சுருதி சம்பந்தம், யுத்தி சமபந்தம், உலோக சம்பந்த மென வழங்கிவரு ஞானங்கள் முறையே யம்மாயைக் குண்டாகு மியல்பைக் கூறுமிடத்து. மாயாசத்தி யானது ஆகாய தாமரை போல்வதின் துச்ச மென வும், சுத்திகா ரசிதம் போல்வதின் அநிர்வாச்சிய மெனவும், ஆன்மா வைப் போ னிரந்தா மாகக் காணப் படுதலின் நித்த மெனவும் பெயர்பெறும். மாயை சுருதி சம்பந்தமாய் விசாரிக்கின் ககன குசுமம்போ லின்மையாற் றுச்சம், உத்தி சம்பந்தமாய் விசாரிக்கின் சுத்திகா ரசிதம்போ லுண்டின் றென்னு தாதலின் அநிர்வாச்சியம், உலக சம்பந்தமாய் விசாரிக்கின் ஆத்மா வைப்போ லுள்ளதாகத் தோற்றலின் நித்திய மெனவுங் கூறுவர்.

இங்ஙன மாக வன்றியும் யாவர துள்ளத்தினுந் தங்கி யிருப்பதால் தமம், மாயை, மோகம், அவித்தை, பொய்யுருவியெனப் பெயர்பெறும் இவ்வைந் தையும் மாயா பஞ்சகமென் றறிஞர் கூறுவர்.

இம்மாயை யிரவியை யெழிலி மறைத்தது போல ஆத்ம ஞானத்தை யேக தேசத்தின் மறைத்தது போலத தோற்று விக்கும் அந்தகார மாத லின் தமமெனவும், தன்னை மறந்த விடத்துப் பிரபஞ்ச மாகத் தோற்று வித்தற் கேது வாகலின் மாயை யெனவும், குற்றியை மகனென்றது போலச் சிவத்தைச் சகமாகத் தோற்று வித்தலின் மோக மெனவும், தன்னை யறியே னென்ற தன்மை யறிவா யிருந்தும் அதனைத் தோற்றுமற் கெடுத்த லின் அவித்தை யெனவும், இங்ஙனஞ் செய்வதற் கேதுவான வுருவந் தனக் கென வொன்றின்மையின் பொய்யுருவி யெனவுமாம். அசத்து, துச்சம், பொய யுருவி யென்பன வொருபொருட் கிளவி யாயினுங் கிஞ்சித்து தாரதம்மிய மிருத்தலி னவைதோன்ற ஆங்காங்கு கூறினர். வடநூலார் அநிர்தாத்மிகை யெனவுங் கூறுப.

இந்துவினை யென்ற விடத்து மறையா தென்ற மாயை இங்ஙன மறைத்த தென்றது. சந்திர னுருவங் களங்கத்தி னளவெவ் வளவோ அவ்வளவு மறை பட்ட தாகத் தோற்றல் போல ஆத்ம ஞான வியாபகத்தி லேகதேசமான மாயை யெவ்வளவோ அவ்வள்வு மறைபட்டது போலத் தோன்றினதே யன்றி வே றின் றென்க.

மாயையின் சங்கோச விகாச தருமம் உணர்த்து கின்றது. படமானது தான் விரிந்து தன்பாலடங்கிய பலவேறு விகற்ப சித்திரங்களை விளங்கக் காட்டி மீண்டுங் குவிந்தொடுக்கிக் காட்டும்வித மெங்ஙனமோ வதுபோல, இன்பம் போ லக் காட்டித் துன்பத்தைத் தரற்பால தாகிய மாயா சத்தியும் தனது விகாச தரு மத்தினால் விரிந்து சமஸ்த வுலகங் களையுங் காட்டி, அவ்வுலகங்களைத் தனது சங்

கோச தருமத்தினு லொடுக்கிக் காட்டும். வன்னங்களாற் கற்பிதமா யமைத்த சித்திரங்களே விகசிதமாய் விளங்கல் போல, சுயஞ்சித்திற் கற்பிக்கப் பட்ட சராசரங்களே விகசித்தலின், ஈண்டு மாயைக்குச் சித்திரப் படத்தை யுவமித்தா ரென்க. இச்சகமாகிய காரியந் தோற்றற்கு இம்மாயை யொருபுடை காரண மாதலின் அதன் விரிவு ஒடுக்கமே சகத்தி னுதிப்பு மொடுக்கமு மாமென்க.

இவையன்றியு மாயைக்கு இயல்பாக நின்றுள்ள குணங்கள் சுதந்திரத்துவ ஈனமெனவும், சுதந்திரத்துவ மெனவு மிரண்டுள்ளனவாம். தனக்கெனச் சொருபமொன் றின்றிப் பிரமத்தைத் தவிரத் தனக்கெனவோர் செயலில் லாமையாற்சுதந்திர மின்மையும் பிரமத்தி னிடத்தில் அறியா மையினின் றுய்தற் கிடம்பெருத சீவன் முதலியவைகளை அப் பிரம சத்தையைக் கொண் டே கற்பித்தலிற் சுதந்திரமும் உளவென்க.

முன்னர் பொய்யென்ற மாயையின் விருத்தித்திரய முணர்த்து கின் றது. ஐம்புல வுணர்வின்றிய கனவின்கட் டோன்றிய யானை முதலிய வைக ளெங்ஙனமோ; அதுபோலச் சக சீவ பரம் மாயையின்கட் டோன்றிய வைகளை யையந்திரிபற விசாரிக்கிற் சற்று மிலதாக அழியும். சுத்த சத்துவ வடிவமான மாயையும், அசுத்த சத்துவ வடிவமான அவித்தையும், தமப் பிரதான வடிவமான மூலப் பிரகிருதியு மெனக் கூறிய மூன்று விருத்தி களை யும் மாயாசத்தி யான துடையதாகும். மாயையின் சத்துவத்தில் மூன்றும், ரஜசில் மூன்றும், தமசில் மூன்றுமாக ஒன்பதாய் விரிந்தது விருத்தி யென்க.

மூலாங் காரத்தின் சத்துவத்திற் கரணம் நான்கும, ஞானேந்திரியம் ஐந்தும் ஆக வொன்பதும், இராஜசின் வாயு வைந்தும், கன்மேந்திரிய மைந் தும் ஆகப் பத்தும், தமசின் பூத மைந்தும் இவ்விருபத்தி னன்கின் முதன் மையான மனமும், இவற்றைத் தானென் றபிமானித் திருக்கும் அகங்கார மும், அதற் காதார மான சீவனும், அதற்கு வியாபக மான ஈசனும், இவ் விரண்டிற்கும் அதிஷ்டான மான கூடஸ்தனும் பிரமமு மாக இருபத் தொன் பதுந் தத்துவமா மென்க.

இங்ஙன மாயின் ஏனைய நூல்களிற் சத்துவத்திற் பத்தும், இராஜசிற் பத்தும், தமசிற் பதினொன்றும், இவைகட்குக் காரணமான அவித்தை, வித் தை, சீவன், ஈசன், பிரமம் ஐந்து மாக முப்பத் தாறெனக் கூறிய தென்னை?

இங்ஙனம் சத்துவத்தி னுதித்த பத்தில் முன்னுதித்த ஞானமொன்றை யகங்காரத்தி லடக்கி, யொன்ப தெனவும், இராஜசி லுதித்த பத்தும் பத்தே யெனவும், தமசி லுதித்த பதினொன்றில் அஸ்தி, மாமிசம், சருமம், நரம்பு, உரோமம், மச்சையென்கின்ற ஆறையும் இவற்றின் காரணமான தூல பஞ்ச பூதத்திலடக்கியும், முன்னீக்கிய ஞானத்தை யகங்கா ரான்மா வெனச் சேர்த் தும், அவித்தை வித்தை யிரண்டையுஞ் சீவேசு வரரி லடக்கியும், பிரமத் தைக் கூடஸ்தரென விரித்தும் ஆக இருபத் தொன்பதெனக் கூறிய தென்க.

பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன் என்னும் வாயு வைந்தும் நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சய னென்னும் வாயு வைந்தும், வயிரம்பன், முக்கியன், பிரபஞ்சனன், அந்தரியாமி, மகாப்பிராணன் என்னும் வாயு வைந்தும் ஆகிய பதினைந்தையும் ஐந்தெனக் கூட்டிய தென்னை? நாகன் முதலிய புறவாயுக்களைந்தையும் பிராணாதி யைந்திலும், வயிரம்பன் முதலிய வாயுக்களைந்தையும் சீவனிலு மடக்கியதாலென்க. வயிரம்ப னாதிய வாயுக்களைச் சீவனி லடக்கிய தென்னை? இவ்வைந்தும் விராட்புருடனது பஞ்ச வாயுக்க ளாதலின் சீவ சம்பந்தமா யிருந்த தென்க. தத்துவங்க ளடங்கிய சுழுத்தியி னிடத்துள்ள சீவனிடத் திருப்ப தெங்ஙனம்? இருபத்து நான்கு தத்துவங்க ளொடுங்கிய சுழுத்தி யவத்தையிற் பிராண னசைதல் அனுபவ மிருத்தலி னானும் பிராணனு மல்லவென்ற சசிவன்ன போதக் கவியினானு மிருக்கின்ற தெனக்காண்க. அங்ஙனமாயி னிச்சீவ னிடத் திவ்வாயு எங்ஙன மிருக்கின்றது? சீவனுக்குச் சங்கற்ப ரூபமான அந்தக் கரணங்களை யசைப்பித்தலின் அவனது சீவ சத்தியா யிருக்கின்ற தென்க. இதனா லிப்பிராண னன்றென்பது தோன்ற மகாப் பிராணனென நாமம் வந்தது. முற்கூறிய சீவர்கட் கவித்தையி னீக்கமும் வித்தையி னாக்கமு முண்டாகு நிமித்த மதற்குச் சாதனமாகக் காலமுதற் பௌதிக மீறாய தத்துவங்க ளீசுரனது கிருபா திருஷ்டியினா லுண்டாயிற்று. அந்த மாயா காரியத் தோற்றங் கிரம சிருஷ்டி யுகபற் சிருஷ்டியென விருவகையா நிற்கும். பிரகிருதி முதற் பிருதிவி பரியந்தம் ஒன்றன் பின்னொன் றடைவாக வுதித்தல் கிரம சிருஷ்டியும் ஒருங்கே யுதித்த லுகபற் சிருட்டியு மாமென்க. இவ்விருவகை சிருட்டியும் வேத சம்மத மாதலா லெமக்கு முடன்பாடாகும். பரிசுத்தப் பிரம மெனப்படும் நிர்விகார சிவத்தினால் மாயா காரியங்க ளாயும் சடரூப மாகவுமுள்ள சகமாதி மூன்றும் பிரிவுக ளெங்ஙனந் தாபப்பட்டன வென்னில், புடைபெயர்ச்சி யின்றிய சூரிய காந்தக் கல்லில் இச்சா எத்தனமின்றி யுதித்த பூத சூரியனால் அக்கினி சனிக்குமாறு போன்று பரம சிவத்தினால் மூலப் பகுதியி னிடத்தில் மகதத்துவ முதல் உலகீறாய காரியங்கள் சனித்தற்கு யாதொரு தடையு மில்லை யென்று சத்துக்கள் கூறு நிற்பர்.

மாயா காரியங்கள் தோற்றுதல் நான்கு வகைப்படும். அவைகள் விருத்தி, பரிணமம், ஆரம்பம், விவர்த்த மெனப்படும். விரிந்த வஸ்திரமே வீடுருவமா நிற்றல் விருத்தி திட்டாந்தம், பாலே தயிர்வடிவமா நிற்றல் பரிணம திட்டாந்தம், நூலே வஸ்திர ரூபமா நிற்றல் ஆரம்ப திட்டாந்தம். பிராந்தியினால் நடுங்கு விக்கும் ரச்சு சர்ப்பமும், கந்தர்வ நகரமும் கட்டையிற் கள்ளனும், சொப்பனமும், இந்திரசாலமும், கிளிஞ்சலில் வெள்ளியும் ஆகிய இவை முதலிய வைகள், மெய்ப்பொரு ளாகிய பிரமத்தில் அதுவே மாறாகத் திரிந்துள்ள பொய்யாகிய சகத்து கற்பித மெனற்குக் கூறிய விவர்த்த வுவமம் ஆம்.

சுத்த மாயையிற் றோற்றிய ஈசனுக்குச் சூரியனையும், மூலப்பகுதிக்குச் சூரிய காந்தக் கண்ணாடியும், சகத்திற் கழலையு முவமித்த தென்க. மாயைக்

குரிய ஒன்பதுவிதத் தன்மையை யுணர்த்தி அனிர்வாச்சிய மெனல்:—பிரம விசாரத்தின்கண் ஆத்மதரிசன நிமித்தம் அநாத்ம நியதி களையும்போது திரிசிய மனைத்தும் வேறுபட்டிருத்தலிற் பின்னமாம். பின்னமெனின் பிரமத்துக் கன்னியமாக இருக்க வேண்டும். மண்ணுக்கும் சித்திரிகனுக்கும் வேறாகாத கடசத்தியும் சித்திரிகசத்தியும்போ லங்கிய மாகாமையின் கூடாது. சமாதி யின்கண் ணின்றெழுந்த தனதறிவிற்கு அத்திரிசியங்கள் தனதுருவாக விளங் கலின் அபின்னமாம். அபின்ன மெனின். வேப்பிலைக்குக் கசப்பும் கனிக்கு மதுரமும்போ லொன்றாய்ச், சுருதிகள் கூறிய பிரம விலக்கணத்திற்கு மூர ணும் அன்றியும் 'சிவ சேரன மறைத்' தென்பதில் மாயா பஞ்சக இலக்கண முரைத்தலி னாலுங் கூடாது. சாதனத்தில் வேறாகவும், சாத்தியத்தில் ஒன் றாகவு மிருத்தலிற் பின்னாபின்னமாம்; பின்னா பின்னமெனின், எதிர்மறை இலக்கண மாகிய, பேதமும் அபேதமு மொன்றா யிருத்தல், தூரமும் சமீ பமு மொன்றெனல்போல் விரோத மானமையின் கூடாது. சமாதியி னின் றெழுந்த அவ்வறிவிற்கு அத்திரிசியங்க ளறிவாய் நிற்றலின். சத்துமாம்; சத் தெனின், முக்காலத்தினு முள்ளதா யிருத்தல் வேண்டும். அங்ஙனமின்றிப் பிரம ஞானத்தால் நாச மடைதலின் கூடாது. திரிசிய மனைத்துஞ் சமாதியி னில்லாமையின், அசத்துமாம்; அசத்தெனின் வந்தியா சுதன்போல் தோற் றாமற் போக வேண்டும், அங்ஙனமின்றிப் பிரபஞ்ச மாகத் தோற்றலின் கூடாது. கற்பனையிற் சத்தும் யதார்த்தத்தி லசத்துமா யிருத்தலின். சதசத் தாம்; சதசத்தெனின், சத்து, உள்ளது; அசத்து இல்லது; எதிர்மறை யிலக்கண முடைய இவ்விரண்டு மொன்றெனல் இரவும் பகலும் ஒன்றெனல் போல்வதின் கூடாது. அது அவயவ மாகத் தோற்றலிற் சாவயவ மெனின், அவயவ சகிதமா யிருக்க வேண்டும் அங்ஙனமின்றி, கந்தருவ சைனியங்களைத் தோற்றுவிக்கும் சத்திக்கு வித்துவானைத் தவிர வடிவ மில்லாமைபோல் பிர பஞ் சத்தைத் தோற்று விக்குஞ் சத்திக்குப் பிரமத்தைத் தவிர வடிவ மில்லா மையாற் கூடாது. அங்ஙன மதற்கோ ருருவ மின்மையின், நிரவயவ மாம்; நிரவயவ மெனின், அவயவ சகிதமாகத்தோன்றா திருக்க வேண்டும். அவயவ சகிதப் பிரபஞ்சமாகத் தோற்று கின்றமையின் கூடாது. சகசத்திற் கண்டே கல்லா னது போல் பிரமமே யாவுமாக விளங்கலிற் சாவயவநிரவயவமாம்; சாவ யவநிரவயவ மெனின், எதிர்மறை யிலக்கண மிரண்டு முள்ளது மாயையெனல் விரோத மாதலிற் கூடாது. ஆதலின் முற்கூறிய நவவித விலக்கணங்களில் யாதேனும் ஓரிலக்கண முடையதென்று வசனித் தற்குக் கூடாமையின் அனிர் வசனிய மாம். (உ-ம்) விஞ்ஞான சாரம். "அலைவில்சிற் சொரூப மஃது மல் லாதா யதைவிட வேறுமல் லாதாய், அலைவுசெய் யஞ்ஞா னத்திசை சத்தா யஃதகன் றிடும்பொழு தசத்தாய், அலைவின்றித் தேறி னெக்காலு மிலதா யனுதியா யனிர்வச னமதாய், அலைவுறு மாயை யுடையமா யாவி யானோ னாகிய சோகம்." "பரசொரூ பத்துக் கபினமும் பகர்பினு பின்னமு மலதாய், நிரவய மலதாய்ச் சாவய மலதாய் நிரவய சாவய மலதாய்த், திரசத்தை

யசத்தைச் சதசத்தை யலதாய்ச் செப்பிய வனிர்வச னமதாய், பாப்பிர கிருதி தமசெனு மகிமை பண்டையி லுடையவிச் சோகம்."

பதிபசு பாசங்களிற் பதி அனாதி நித்திய மென்ப துண்மைதான். பதியை ஈஸ்வரனாக வைத்தா லநிர்வசனீய மாக அனாதியாம்; பசு பாசங்கள் அனாதி யென்பது முண்மைதான். அது சத்தாகவா? அசத் தாகவா? சதசத் தாகவா? அநிர்வசனீய மாகவா? அனாதி யென்பதை நாமும் ஒப்புக் கொள்ளுகின்றோம். ஆனால் இவரைப் போலச் சத்தாக வொப்புக் கொள்வ தில்லை. அநிர் வசனீய மாக வொப்புக் கொள்கின்றோம்.

இவ்வாறே சர்வசா ரோபநிஷத் தானது: சத்துமல்ல, அசத்து மல்ல, சதசத்து மல்ல, அநிர்வசனீய மென்று கூறுகின்றது. இவ்வநிர்வச னீயத்தின் றன்மையை உவமான வாயிலாக நிரூபிப்பாம்.

கயிற்றிற் காணப்படும் அரவு சத்தா, அசத்தா, சதசத்தா வென விசாரிப்புழி மூன்று மல்லாத அநிர்வச னீயமென் றேற்படும். எங்ஙன மெனின் அரவு சத்தானால் தெளிந்த போ திருத்தல் வேண்டும். இல்லா திருத்தல் காட்சிப் பிரமாணம். அசத் தெனின் மலடி புத்திரனைப்போல் தோன்றா திருத்தல் வேண்டும். தோற்றிக் கொண்டு பயகம்ப னாதிகளை யுண்டாக் குவதால் இல்லை யென்றுஞ் சொல்லப் படாது. சதசத் தென்று சொல்லலாமெனின் மேலே காட்டிய இருவகைக் குற்றங்களும் உண்டாகும். இம்மூன்றினிடத்துந் தோஷ மிருப்பதால் சதசத் விலட்சண அநிர்வசனீய மென்று சொல்வதே நியாய மாகும். மாயை யென்ப தெப்படிச் சம்பாவித மெனில், காரியப்பொரு ளுண்டாதற் கியைந்த சத்தி காரணத் தின்கண் சம்பாவித மாதல் போலவாம் என்றறிக.

உதாரணம் திருமந்திரம்.

பதிபல வாவது பண்டிவ் வுலகம்
விதிபல செய்தொன்று மெய்ம்மை யுணரார்
துதிபல தோத்திரஞ் சொல்லவல் லாரு
மதியிலர் நெஞ்சினுள் வாடுகின் றாரே.

பதிபசு பாச மெனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாச மனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசநில் லாதே.

வேதாரணிய புராணம் வருணச்சருக்கம்.

பிறப் புநா தியா மிறப்பொடு துன்பமும் பிணியு
மறப்பு மீசனும் வையமு னாதியா மற்று

பிறப்ப மாழ்கியே யிந்தியப் பந்தனைக் கிரந்தித்
துறப்பி லார்பவத் துன்பசா கரத்திடைத் தோய்வார்.
சுருதி யுண்மையைக் கேள்வியே முதலிய துணிவாற்
கருதி வேறறக் காண்பது ஞானமஞ் ஞானம்
பருதி முன்னிருட் பாற்படும் பகைநய நட்பு
மிருதி வாழ்வுதுன் பின்பொடு மமதைபோய் விடுமே.

தத்துவஞான தீபிகை.

உருவமொடு நாமமய மாமுலகந் தோன்று
உண்மையறி வாநந்த வத்துவித நிலையைத்
தெரிவதறத் தெரியினது சொரூபநிலை யென்றும்
செகமதெனத் தெரியினது சீவனிலை யென்றும்
கரிசுறவவ் வுலகிடைவே றறவழுந்தி னதுவே
கழறுசக நிலையென்றுங் களங்கமற வுணர்ந்தோர்
பெரியசொரூ பாநந்த நிலையினைவிட் டகலார்
பேசியமற் றிரண்டினையும் பெத்தமெனத் தவிர்ப்பார். ௫

சகமுயிர்தற் பரமெனுமுப் பொருளொருதன் மயமாய்ச்
சார்ந்திடுமத் துவிதநிலை பிரமநிலை யாகும்
விகலமுறு மவைவெவ்வே றுயமைத னுப்பண்
விளங்கிடு சிதாபாச னிலையாமம் மூன்றும்
மிகவொருமித் தேயறியப் படுபொருளாய்த் தோன்றல்
வியனுலக நிலையாமென் றுணர்பவர்சற் றேனும்
தகவறவே முதனிலைவிட் டிருநிலைகள் சாரார்
சார்வரெனின் சார்வரொரு தத்துவமுத் திணையயே. ௬

நனவுகன வொடுசுழுத்தி யவத்தைகண் மூன் றனையும்
நனுகலறப் பூரணசின் மாத்திரமாய் நிற்றல்
இனமறுநற் சிவநிலையா மவத்தைகளிற் றோன்றும்
இன்பொடுதுன் பங்களைநன் கறுபவியாய் நிற்றல்
தனைநிகராஞ் சிவனிலை யாமவத்தை மயமாய்ச்
சார்தலது சகநிலையா மெனவுணருந் தக்கார்
வினையகலுந் துரியமெனும் பதமதனை விடுத்தே
வேறுபதங் களையணுக விணாரினே முபலார். ௭

சத்தொடுசித் தானந்த பூரணமாஞ் சிவமே
தானெனநன் கறிதலொரு தனிப்பிரம நிலையாம்

சித்தநூறன் தன்மைக்குச் சிறிதுண்டேன் றுணர்தல்
சிவனிலை யாமொன்றுந் தெரியாமன் முற்றும்
மித்தைவடி வாமுடனு மென்றுணர்த லறிஞர்
வியக்குமொரு சகநிலையா மெனக்குருவா லையக்
கொத்தறவே யுணருமவர் பரநிலைவிட் டுலகர்
கூடுமய னிலைகளையுட் கொள்ளுவரோ மறந்தும். அ

அறிவாகுந் தனில்வேறற் றமர்சுகமா நிலையே
அரியசிவா நந்தநிலை யாகுநம துருவம்
செறிவாகா வறிவெனவே தெரிகின்ற நிலையே
சிவனிலை யாமறிவி றேகமுத லாகும்
குறிதானென் றுணர்நிலையே சகநிலையா மெனவே
குருபரனுற் றெளிதருநற் புண்ணியர்க ணல்ல
நெறியாகுஞ் சுகநிலைவிட் டேகுவரோ மற்றை
நிலைகளிலன் னவைதுன்ப நிலையாமா தவினே. கூ

சூத சங்கிதை, அநித்திய, நித்திய வஸ்து விசாரம்.

விளம்புத லுற்ற வநித்திய வத்து விசாரத்தால்
உளம்பயி லச்சமு சார விராகம துண்டாகும்
இளம்பிறை சூடி தனக்கய லாஞ்சட மெல்லாநால்
வளம்புனை வோர்கள் அநித்திய மென்று வகுப்பாரால்.

சுத்தமாய் நிரஞ்சனமா யவிகார மாயொளிர்சிற் சொரூப மேயாய்
உத்தமமாய்ச் சருவசான் றுய்விளங்கும் பரமசிவ மொன்றே யென்றும்
எத்தகையோ ரும்புகழு நித்தியவத் துயர்மறையு மிவ்வா றேதும்
ஒத்தசட மநித்தியமல் லாதுசித்துக் கநித்தியம்வந் துறுத லின்றே.

மிக்ககடா திப்பிரத்தி யேயத்தந் தக்காண விருத்தி யாலே
தக்கநித்தியவத்துவந்தான் றோன்றுகின்றதேதவிரத்தனியாய்நின்ற
முக்கணுடையெம்பெருமாற்காளாயபெருந்தவத்துமுனிவீர்மேலாம்
எக்கலைஞரும்புகல்வார் பரமார்த்த மாகவிலை யென்று மாதோ.

இலயித்த தன்னி லென்னும் உதாரண வெண்பாவில் பாண்டிப் பெருமாள் "இல்லதற்குத் தோற்ற மில்லை யாதலானும், உள்ளது தோற்றுவிக்க வேண்டா வாதலானும், உள்ளது மில்லதுமா யிருப்பது தோன்றுமென உரைகூறிச் சித்தியார் க-ம் சூத்திரத்தில் 5—செ. 6—செ.

சார்பினிற் றோற்று மெல்லாந் தருபவ னில்லை யென்னிற்
றேரினில் லதற்கோ தோற்ற முள்ளதற் கோநீ செப்பா

யோரினில் லதுவுந் தோன்று துள்ளதே லுதிக்க வேண்டாஞ்
சோர்விலா திரண்டு மன்றி நிற்பது தோன்று மன்றே.
உள்ளது மில்லது மின்றி நின்றதொன் றுளதே லுண்டா
மில்லதே யில்லையாகுந் தோற்றமு மிசையா தாகும்
உள்ளகா ரணத்தி லுண்டாங் காரிய முதிக்கு மண்ணி
லில்லாதாம் படம்கடாதி யெழிதரு மியற்று வானல்.

என்னும் அநிர்வசனீயப் பொருடோன்று மிச்செய்யுட்களை மேற்கோளாக வெடுத்துக் கூறினர்.

இலயித்த வென்னும் ஷை வெண்பாவிற்கு சிவஞான முனிவர், இல்ல தற்குத் தோற்ற மின்மையின் உலகம் உள்ளதெனவும் இதனனே இல்லது முள்ளது மல்லாத பொருடோன்று மென்னுஞ் சூனிய வாதிகளும், இல்லது முள்ளதுமாய பொருடோன்று மென்னும் அநேகாந்த வாதிகளும் மறுக்கப் பட்டவா றறிக வென்றார். இது இவர்பேரில் குற்றமில்லை. இவர் சார்பின ராகிய மெய்கண்ட தேவர் ஷை முதற்சூத்திர மிரண்டா மதிகரணத்தில் எழு திய மேற்கோளையும் எதுவையும் மெய்யென நம்பி எழுதி விட்டார், பாவம். அதிலுள்ள மேற்கோளும், எதுவும் வருமாறு.—

மேற்கோள். "இனி உலகம் உள்ள தென்றது"
எது. "இல்லதற்குத் தோற்ற மின்மையின்"

"இல்லதற்குத் தோற்ற மின்மையின், என்ற எதுவால், உள்ளதற்கே தோற்ற முண்டா கின்றது" என்பது. அங்ஙன மாயின், ஷை வாக்கியம், கயிற்றரவு முதலிய வற்றில் விபசரிக் கின்றது ; கயிற்றரவு முதலியவைகளுக்கு தோற்ற மிருப்பதா லென்க. இன்மை நான்கு வகைப்படும். (1) சொல்மாத் திரையா யுள்ளது, இதற் குவமானம் வான்மலர், மலடிமகனும். (2) (3) சொல்லுந் தோற்றமு மாம். இதில் ஒன்று காரணத்தை நோக்கிய போது, காரியந் தோன்று திருத்தலும், மற்றொன்று தோற்றுதலு மாம். முன்னை யதற் குவமானம் கயிற்றரவும், பின்னையதற் குவமானம் கான னீருமாம். (4) சொல்லுந் தோற்றமும் பொருளுமா யிருப்பது. இதற் குவமானம் சொப் பன வுலகு. பேதத்தோடுங் கூடிய இந்நான்கு இல்பொருளில் (1) வான் மலர், மலடிமகனுகிய இருபொருள்கள் தவிர மற்றவை தோன்றுகின்றன. இது யாவருக்கும், பிரத்தி யக்ஷாநுபவம். இங்ஙனமாக "இல்லதற்குத் தோற்ற மின்மையின்" என்றது எங்ஙனம் பொருந்தும். இன்மைப் பொரு ளில் மேற் கண்டவாறு (1) தோன்றாமையும், (2, 3, 4,) தோன்றுதலு மிருக் கிற போது "எல்லசெட்டி லக்க எகலக்க" என்றவாறு எல்லாவற்றையுஞ் சேர்த்து "இல்லதற்குத் தோற்ற மின்மையின்" என எவ்வாறு கூறலாம்.

யசுர்வேதத்தில் சர்வசா ரோபநிஷத்.

மித்தை எது? இல்லாத பிரபஞ்சத்தை ப்ரம்மத்தி லாரோ பிப்பது. மாயை யென்பது யாது? அநாத் மாவுக்கு மூலமான தெதுவோ அதுதான்

மாயை......அந்த மாயையானவள் அநாதி, முடிவை யுடையவள்......இருக்கின்றவளு மல்ல, இல்லாதவளு மல்ல, அவ்விரண்டுங் கலந்தவளு மல்ல, அநிர்வச னீயமாய் வாக்குக் கெட்டாதவள் (பிரம்மமாகிய) அதிஷ்டா னத்திலேயே யில்லாதவள்......எவள் வாஸ்தவத்தி லில்லையோ அவள்தான் மாயை. அவள் சுவரூபம் அஞ்ஞானம். அதுவேதான் மூலப் பிரகிருதி......ஜகதா காரமாய் பரிணமித் திருப்பவள்.

சுக்கில யசுர் வேதத்தில் நிராலம் போபநிஷத்.

இரண்டாவ தற்றதாயும் எங்கும் தொடர்ச்சியா யுள்ளதாயும் சகல சுவரூபமாயு மிருக்கிற பிரம்மத்தி னிடத்திலேயே தேவ, மிருக, நர, ஸ்தாவர, ஸ்திரீ, புருஷ, வருணாச்சிரம, பந்த மோக்ஷ உபாதி (கற்பிதமான வேஷம் அல்லது கற்பிதமான தடை) யாக விருக்கிற பலதேக பேதங்களி னாலே கயிற்றிற் பாம்பென்கிற பிரமைபோல் கற்பிதமா யிருக்கிற ஞானமே யஞ்ஞானம்.

சூத சங்கிதை சத்தா விசாரம்.

அத்தகுசத்தாவாகியபிரமமம்மமண்கடாதியானூற்போல்
சுத்தமாமுனிவீர்பற்பலவானசொரூபங்களாய்ப்பரிணமிக்கும் [ய்
உத்தமப்பிரமம்மூலகமாய்த்தோன்றலொளிதருசுத்திவெண்பொன்னு
வித்தகமுறத்தோன்றிடுதலேபோலும்வேதமுமிங்ஙனமுரைக்கும்.

நிருமல சிவன்றன் மாயையாற் கனாப்போ னிருமிக்கப் பட்டனவெல்லாம், மருவுகா ரியங்கா ரணத்திற்கு வேறு காமையின் மாயையாருபந்தான், பெருகுமா யையுமற் றதிட்டான மாகும் பிரமத்தின் வேறன தன்று, குருபா னருள்கைக் கொண்டுமுக் குறும்புங் கொன்றுயர்ந் தோங்கிய முனிவீர்.

பிரமகீதை கேனோப நிடதம்.

எப்பொருளு மாயையினா லெனச்சிலவ ரியம்புவர்கள்
மெய்ப்பரமன் றனையொழிய வேறொருமா யையுமில்லை
ஒப்பரிய பரனொழிய வொருமாயை யுண்டாகில்
அப்பரமன் றன்பெருமைக் கதுநேரே யழிவன்றோ.

சிவானந்தமாலை.

எங்குஞ் சிவமொழிய வில்லையவன் றன்னுணை
யங்கந் திரள்கருவி யாணவமாம்—பொங்குமிருண்
மைசெய்த மாமாயை மாயைவினை மற்றனைத்தும்
பொய்பொய்பொய் பொய்பொய்பொய் பொய்.

என்னுஞ் சத்தப் பிரமாணமும் இதனை (உலகஞ் சத்தன் றென்பதை) நன்கு வலியுறுத்தும். மேலும் காரணத்தைத் தவிரக் காரியத்திற்குப் பொருளில்லை யென்பது மண்ணைத்தவிரக் கடமும் பொன்னைத்தவிரப் பணியும் இல்லை யென்பதனால் விளக்கமாம்.

"உலகம் காரியமென்பது பிரதிஞ்ஞை. அவயவப் பாகுபா டுடையதா யிருத்தலினு லென்பது ஏது. யாது யாது அவயவப் பாகுபா டுடையது. அது அது காரியம். கடபடம்போ லென்பது உதாரணம்." என்னும் அநுமானப் பிரமாணத்தி னாலும், பூருபட்சி யாருக்குப் பிரமாணமா யுள்ள சிவஞான சித்தி 1-சூ. 13-வது பாட்டில், காரிய மென்ப தென்னை காரண வனுவை யென்னிற், காரியம் அவயவத்தாற் கண்டனங் கடாதி போல, என்று கூறுவதினாலும் காரிய மாகிய உலகம் அசத்தே யாம், ஆகவே, காரியமாய்த் தனக்கெனப் பொருளின்றிய வுலகைச் சத்தென்பார் பிராந்தரே யாம். மேலும் இந்நூல் ஏழாவது சூத்திரத்தின்படி அசத்தாய்ப்போ முலகைச் சத்தெனக் கொண்டு அதற் குவமானம் கானனி ரென்றும், சாதாரண தருமம் நின்றுழி நில்லாது பெயருந் தன்மை என்றுங் கூறுதல் பதார்த்த விசார மின்மையாம். எவ்வாற்றானும் தனக்கெனப் பொருளின்றிய வுலகைச் சத்தாய் நின்றுழி நில்லாது பெயருந் தன்மை யுடையதென்பது கயிற்றரவு சத்தாய் நின்றுழி நில்லாது பெயருந் தன்மை யுடையதென்று கூறுவார் கூற்றிற் கினமாய்ப் பிறழ்ச்சியினின்ற தென்க. கானல் ஸ்தானத்தில் பிரமத்தையும், நீர்ஸ்தானத்தில் உலகையும் வைத்து, கானலில் நீர் எங்ஙனங் கற்பிதத் தோற்றமா யிருக்கின்றதோ அங்ஙனமே பிரமத்தில் உலகு கற்பிதத் தோற்றமா யிருக்கிற தென்று கொண்டால் மேற்கண்ட குற்றங்கள் நிகழா.

பரிபூரணப் பிரமத்தில் உலகு கற்பிதத் தோற்றமா யிருக்கின்ற தென்பதற்குப் பிரமாணங்கள் வருமாறு.—

சூத சங்கிதை வேதாந்தம்.

சாற்றுமா யாநிவர்த்தி தானதிட் டான மாய
தோற்றுசை தன்னி யத்தின் சொரூபயா னதுமற் றின்ப
மாற்றுமந் நிவிர்த்தி தானு பாவமா மனைய மாயை
மாற்றருஞ் சதசத் திற்குப் பின்னமாய் வயங்கு மாலோ.

பிரமகீதை ஐதரேய உபநிடதம்.

வேதமோ தியதே யெப்பொருள் மற்றைப் பொருளெலா மித்தையே வேதம், ஓதமே வுற்ற பொருளிரு வகைபா மிதனிலொன் றென்றுமுன் மையதாய்ப், போதவா நந்த மாகிய சிவனாம் பொருளது மறறதப் பொருளில், ஏதமே வாமற் கற்பித மாகு மற்றதனியல்பையு மிசைப்பாம்.

இச் சத்பிரமாணங்களுக் கிணங்க உலகம் கானல்நீர் போன்றதெனக் கூறியவர்களை சிவஞான சித்தி நிந்தித்தது; தன்னை நிந்தித்துக் கொண்டதோடு, வேத முதலிய வற்றையும், இச் சிவஞான போதத்தையும், "பூத்தாரும் பொய்கை புனலிதுவே யெனக்கருதிப், பேய்த்தேர் முகக்குறும் பேதை குண மாகாமே, தீர்த்தா" யென்று கூறிய மாணிக்க வாசக சுவாமிகளையும், அவர்போன் றாரையு நிந்தித்த தாமென்க.

சிவஞான போதம் "ஊராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவ," என்று பாசத் (மாயை) திற்குக் கானனீ ருவமைகூறிற்று, ஷ சிவஞான சித்தியோ; "பாச ஞானத்தானு மென்னுஞ் செய்யுளி லாசைதரு வுலகமெலா மலகைத் தேரா மென்றறிந் தகல" என்று உலகிற்குக் கானனீரை யுவமை கூறிற்று. முதனூலான சிவஞான போதம் பாசத்திற்குக் கானனீரை யுவமை கூறினல், பெயர் மாத்திரையில் வழிநூ லான ஷ சிவஞான சித்தி பாச காரிய மாகிய உலகிற்கு அதனை யாக்கிக் கொண்டது, மலைவா மன்றிப் பின்பு யாதாம்?

வித்துண்டா மூல முளைத்தவா தாரகமா
மத்தன்று ணிற்ற லவர்வினையால்—வித்தகமாம்
வேட்டுவனு மப்புமுப்போல் வேண்டுருவைத் தான்கொடுத்து
கூட்டரனே மண்போற் குளிர்ந்து.

என்னும் வெண்பாவில், இவர் கொள்கை நிலஸ் தானத்தில் பிர்மமும், வித்து ஸ்தானத்தில் மாயையும், அங்குர ஸ்தானத்தில் உலகமுமாம். நிலத்தைக் குளிரச் செய்ய நீரிருப்பது போன்று பிர்மத்தைக் குளிரச் செய்ய வொன்று வேண்டும்? நீர் ஸ்தானத்தில் பிர்மத்தின்கண் ணுள்ள சிற்சத்தியைக் கூறுவா மெனின்: நிலமு நீரும் பின்ன மானமை போன்று பிர்மமுஞ் சிற்சத்தியும் பின்ன மாதல் வேண்டும். அங்ஙனம் பின்ன மாமா? நிலமும் வித்தும் பின்ன மென்பது நிதரிசனமாம். அங்ஙனமே பிர்மமும் மாயையும்பின்னமா? அபின்னமா? என்புழிப் பின்ன மென்றே சொல்ல வேண்டும். சொல்லுங்கால் பிரஹ்மம் அபரி பூரணப் பொருளாகும்.

இனிவித்து அங்குர மாகுங்கால் வித்துக் கெட்டே அங்குர மாதல் கண்கூடு. அங்ஙனம் மாயை கெட்டே உலகாக வேண்டும். அங்குரமா யிருக்கும் போது வித்தில்லை அங்ஙனமே, உலகா யிருக்கும் போது மாயை யில்லை என்றாகி, இப்போ துள்ளது பிரமமும் உலகமுமே யாயிற்று. அதனால் மாயை யென்னு மொருபொருள் போகவே போயிற்று. அதைச் சத்தென்றும், நித்திய மென்றுங் கொண்ட இவரது செவிக்கு இல்லையெனக் கேட்பது நாராசங் காய்ச்சி விட்டது போல்தா னிருக்கும்.

அங்குர மாயபோது வித்தில்லை யெனினும் பிறகு விருக்ஷமாய் வித்தை யீனு மெனின், அங்ஙனமே இப்போ துள்ளவுலகு இனி மாயையை யீனு மென்று சொல்ல வேண்டும் இது விந்தையினும் விந்தை, இதுநிற்க, மாயை

யைப் பிரமத்துக்குப் பரிக்கிரக சத்தியென்று கூறுவது இப்பூர்வ பக்ஷியார்களது கொள்கை ; சத்தியென்பது சாமர்த்தியம் ; என்பது அச்சொல்லி ஞனே விளங்கும். மனிதனது சத்தி யெனின், மனிதனைவிடச் சத்தியொரு பொருளா. அன்று, அங்ஙனமே, நிலத்துக்கு வித்து சத்தியாமா? ஆகாது; பொருளாயிற்றே, பொருளுவ மானத்தை, சத்தி யுவமேயத்துக்கு ஆக்கலாமா? மாயையைப் பொருளாகக் கொள்ளிற் சத்தி யென்பானேன் ? இனிப் பொருளாக வைத்துப் பார்ப்போம், பிரமமும் மாயையும் பின்னமா ? அபின்னமா ? பின்னமெனிற், பிரமம் அபரிபூரண மாகும். அபின்னமெனிற், சினை, குணம், தொழில்களி லொன்றி லமைத்துத் தானே சொல்ல வேண்டும். அங்ஙன மாயின், பிரமமே மாயையாக வேண்டும். ஆயின் பிரமத்துக் குள்ள, ஞானம், சுகம், நிர்மலத்துவம், நிர்விகாரத்துவம், முதலிய விசேடங்கள் போய், மாயைக் குள்ள சடமுதலிய விசேடங்க ளெல்லா முண்டாம். அன்றியும், சுருதி யாதி கட்கு முரணுக இரண்டும் ஒன்றுபடுவ தெங்ஙன மமையும்? வித்திலிருந் துண்டான அங்குரம் நிலத்தின்மேல் முளைக்கின்றது. அதுபோல, மாயையிலிருந் துண்டான உலகம் பிரம மில்லா விடத்திலே உண்டாகவேண்டும். உண்டாமேல், பிரஹ்மம் பூரண மென்னுஞ் சுருதி யாதிகட்கு விரோதமாம். இன்னும் சிவஞான சித்தியார் பாற்கரியன் மத மறுதலையானும். ஷி க-சு. 33-வது செய்யுளானும் மலவுபடுந் தன்மையைக் காட்டுதும். அதுவருமாறு, ஒடுங்குங் காலத்திலும் பிரமத்திலே யொடுங்கித்தோன்றுங் காலத்திலும் பிரமத்திலே தோன்று மென்னில், இப்படித் தோன்றி யொடுங்குவ தாகிய பிரபஞ்சம் பிரமத்தி லபேதமாயின் பிரமமும் அசேதனமாக வேண்டும், ஆகையால், அகம்பிரம மென்கிற உன்னுடனே பிரபஞ்சமுந், தோன்றுகையு மொடுங்குகையுஞ் செய்கையில் மெய்யன்று ஜடமென்றே சொல்லுதலை மெய்யாக வுடைத்து, என்க வென்றும்

பாற்கரியன் மத மறுதலைச் செய்யுள்.

வித் தெழுந்து மரமாய் விளைந்தமை விளம்பி னுயுவமை வேறுநீ
நித்த மென்றவுரை பொய்த்து நீடுசட மாயெழுந் தழியு நின்பரம்
மொத்தெ ழும்பொழுது வித்தி னுக்கவனி யுண்டு தாரக முனக்கெனு
பித்த னென்றுல குரைத்தி டும்பிரம மாபி னுபிவை பிதற்றிலே.

(இ-ள்.) மரங் கெட்ட விடத்து வித்திலே நின்று மரமுண் டானாற்போல பிரபஞ்ச மழிந்த விடத்தும் பிரமத்திலே நின்று பிரபஞ்ச முண்டா மென்று உவமை கூறினுய், அங்ஙன மாயின், அந்த வித்து மரத்திலே யுள்ளதுமாய்ப், பின்பு தானே பரிணமிக்குங் காலத்து மரந்தோன்றத் தான்கெட்டுத் தோன்றின தற்குப் பரிணும முண்டாய், அந்தமரம் மீளவும் வித்தை யுண்டாக்கினுற்போல, பிரமமும் பிரபஞ்சத்துக்கு வேருய் நித்தமாய் நிற்குமென்ற வுரையும் பொய்யாய்ப் பிரமமும் பிரபஞ்சத்தை யுண்டாக்கியும், பிரபஞ்சமும் பிரமத்தை யுண்டாக்கியும் சடத்தின் பகுதியாய்த் தோன்றிக் கெடும், நின்பிரமம். அதுவுமன்றி அந்தவித்து மரமாம் பொழுது பூமி தரிப்பாகத் தோன்றும் அது

போல உன்னுடைய பிரமம் பிரபஞ்சமாம்பொழுது, தரிப்பது யாது, பிரமமாயினும், இப்படி மயங்கக் கூறுவையாயின் உன்னைப் பேயனென்று மிக்கோர் சொல்லா நிற்பார் என்க. வென்றுங் கூறியதற்கு மூலமாய்,

சிவஞானசித்தியார் க-சூ. 32-வது செய்யுளில்

(உயிரவை யொடுங்கிப் பின்னு முதிப்பதென் னரன்பா லென்னில்)

உலகினை யிறந்து நின்ற தரனுரு வென்ப தோரா
ருலகவ னுருவிற் றோன்றி யொடுங்கிடு மென்று மோரா
ருலகினுக் குயிரு மாகி யுலகுமாய் நின்ற தோரா
ருலகினி லொருவ னென்ப ருருவினை யுணரா ரெல்லாம்.

(இ—ள்.) சிந்திதனாயினும் அசிந்திதனே யென்பதற்கு உருத்திரன் உருவம் உலகினைக் கடந்து நிற்றலான், வேதத்துள், உருத்திரன், விச்சுவாதிகனென்று கூறுஞ் சுருதியினையு முணரார், அவன் றிருவுருவில் உலகந் தோன்றியொடுங்கு மாதலான் விச்சுவ காரண னென்று கூறுஞ் சுருதியினையு முணரார், உலகிற்கு உயிராய் நிற்றலால் விச்சு வத்திற்கு அந்தரி யாமியென்று கூறுஞ் சுருதியினையு முணரார், உலகமாய் நிற்றலான் விச்சுவ ரூபியென்று கூறுஞ் சுருதியினையு முணரார், திருமேனியின் இயல்பு உணரா ரெல்லாம் அச்சிவபிரானை உலகத்தி லுள்ளார் கூறுங் கடவுளரில் ஒருவ னென்பர். என்க. வென்றும், மாயையிற் றோற்றி யொடுங்கியதுமா மென்பது, கிழங்கினின்றுந் தோன்றிய தாமரையைப் பங்கய மென்பதனானு மறிக. என்று உரையாசிரியர் கூறியுள்ளார்.

கிழங்கிலே நின்றும் பிறக்குந் தாமரையைச் சேற்றிலே நின்றும் பிறந்ததென்று பொருள்படப் பங்கஜ மென்று கூறுதலின் கிழங்கு மாயையும், சேறு பிரமமும், தாமரை யுலகமு மாயிற்றே? சேறில்லா விடத்துக் கிழங்கும், கிழங்கில்லா விடத்துத் தாமரையு மிருப்பது போன்று; பிரமமில்லா விடத்து மாயையும், மாயை யில்லா விடத்து உலகமு மிருந்தா லன்றோ இவ்வா துபமானம் மணம்பெறும். பிரமம் பரிபூரண மென்றுரைத்து அதனிடத்தில் மாயையானது சேற்றின்கண் கிழங்கைப் போல வேறு யிருக்குமென் றுரைத்தல் அசம்பவ மென்க.

திருக்குத்திரிசிய விவேகம்.

(அ-கை.) தனதுண்மை நிலை யிஃதென விசாரித்துத் தெளியா தார்க்கு வாயேனென அவரை யிகழ்ந்து கூறல்.

கடவுளே யுண்மையெனக் கட்டுரைப்ப தன்றிக்
கடபடமெய் யாமயக்கைக் காணார்—உடலளவே
நானென்னுர் வைதுணரார் நாட்டம்வா யென்னிருந்து
மானிடரா யிவ்வுலகில் வந்து.

(இ-ள்.) கடவுளே யுண்மையான வஸ்துவெனத் திரமாகச் சாதிப்பதே யல்லால் கடபட மாகிய விடயங்கள் தனது கற்பித மெனவும், அன்னிய மெனவு மவற்றின் மயக்கை யுய்த்துணர்ந்து தெளியாதா ரிவ்வுலகின்கண் மானிடராக வந்து, உடலளவே நானென்னுது சைதன்னிய வளவே தானெனத் திடக்ஞானப் பிரத்தியக்ஷ முடைய மகான்களைக் கண்டபடி வைது, கண் வாய் முதலிய வுணர்தற் கருவிகள் யாதிருந்து முணரத் தக்கவைகளை யுணரார் ; இவரிருந்தும் யாது பயன் ? எ-று.

எனவே மானிட விலங்கின ரென்ப தாயிற்று. என்னை ? மானிட வடிவத்தா லொத்துள ராயினுந் தன்னை யுணரா மையால் விலங்கின ரென்றும். இவரிருந்தும் யாது பயனென்றது நடைவாய்ப் பிணமாதலைப் பற்றி யென்க. இதனு லிவரைக் காணவுங் கருதவுங் கூடா தாயிற்று.

(அ-கை.) எவற்றினுந் தீர்ந்தநிலையைப் பிரதிவா திப்பது வேதாந்த மாதலால் அதனை யுள்ளவாறு விசாரித்துத் தெளிந்த வேதாந்தியின் மகிமையை வியந்து புகழ்தல்.

எல்லாஞ் சிவமெனற்கு மெல்லாநா னென்றற்கு
மெல்லா மலவெனற்கு மீங்கெவரின்—வல்லான்கேள்
வேதாந்தப் போலியல வேதாந்தி யேகண்டாய்
போதாந்த முங்கழலப் புக்கு.

(இ-ள்.) உபநிடதார்த் தத்தை மெய்ப்பட எவர்க்கும் புலப்படுத்துவான் வேண்டிச் சர்வமும் பிரம மென்றற்குஞ், சர்வமு நானே யென்றற்குஞ், சர்வமு மல்ல வென்றற்கும், ஞானந்தா தீதமுங் கற்பித மெனக் கழல வெருவாமல் வெளிப்பட்டு இங்கெவரினு மிக்க வல்லவ னுவானைக் கேளுதி ; வேதாந்தப் போலியாவா ரல்லர். மெய்யுணர் வுணர்ந்த வேதாந்தியே யெனக் காணுதி எ—று.

அநிர்தசட துக்கமா யுள்ள வற்றை யெல்லா மபேத காரண காரிய வாதத்தால் வஸ்து பரிசோதனை செய்யு மிடத்துப் பூர்வபட்ச சித்தாந்த மாக்கி யவற்றின் முடிவிலு மிடையிலு முதலிலு மவற்றைச் சின்மாத்திர மாக்கிக் காட்டுதலி னெல்லாஞ் சிவமெனற் கெனவும் ; தன்னை யன்றி யறிவு மறிவை யன்றிச் சங்கற்பமுஞ், சங்கற்ப மன்றிச் சமஷ்டி வியஷ்டி தோற்றமு மத்தோற்றத்தை யன்றி யெழுவகைப் பிறப்பு, மவ்வெழுவகைப் பிறப்பை யன்றி ஊர்வன நடப்பன பறப்பன இருப்பனவும் ; இவற்றை யன்றி யாண் பெண்ணலி யென்பனவு மிவற்றை யன்றிக் காம வெகுளி மயக்கமு, மிவற்றை யன்றி மனைவி யாதிகளுங் கிரகக்கிரா மாதிகளுந் தனதானி யாதிகளுஞ் சுகதுக்காதிகளு மில்லை யாதலி னிவையாவுந் தனது சொருப மெனவு, மன்றெனத் தடுக்கி லாமெனவுஞ் சுருதியாதிகளால் வைப்புறுத்தத் தகும் ஞானனுபவத்திராணி இருத்தல் பற்றி எல்லாநா னென்றற் கெனவும், பொன்னு லாய பணி

யனைத்தும் பொன்னையினுங் கற்பித வடிவங்கள் பொன்னின் யதார்த்த வடிவன் றாதல்போல ஞெப்தி பிரியத்தா லாய செக முதலியவை ஞெப்தி பிரியமய மாயினும் மண்ணாதி பிரகிருதி யீறா யுள்ள விகார வடிவங்கள் சைதன்னிய வடிவாகா வாதலி னெல்லா மலவெனற் கெனவுஞ், சுருதி யுத்தி யனுபவத் துக்கு முரணாக நடிக்கும் வேதாந்திகளை வேதாந்தப் போலி யெனவும், ஞானேதய மானந்த மாநந்தா தீதஞ் சர்வசாட்சி யென்னு மனுபவ மொன்றன்பின் னென்றாக வுதித்த பின்ன ரிங்ஙனமா யிப்போ திருக்கின்றோ மென்னு நிலையும் வாசனை யாதலி னதுவு நசிக்கவேண்டுவதுபற்றி போதாந்த முங்கழல வென வுங் கூறிய வாறு காண்க. இதனு லனுபவமொன் றில்லாத வேதாந்திக ளெல்லாம் போலி வேதாந்திக ளெனவும், தன்னனுபவத்தைச் சுருதி யுத்திகளிற் காட்ட வல்லவன் யதார்த்த வேதாந்தி யெனவும் பொருள்படு மாறு காண்க.

சுக்கில யசுர்வேதம் பைங்களோபநிஷத் க-வது அத்தியாயம்.

"அதினிடத்தில் மருபூமியில் (பாலைநிலத்தில்) ஜலம், கிளிஞ்சலில் வெள்ளி, கட்டையில் புருஷன், ஸ்படிகத்தில் வர்ணமுதலிய வைபோல் சிவப்பு வெளுப்பு கறுப்பு இந்தக் குணமய மானது மேற்றக் குறைவன்றி யொவ்வொன்றும் சமமா யிருக்கிற குண சுவரூப மயமானதும் வாக்குக் கெட்டா ததுமாகிய (என்றால் மித்தையா யானது மாகிய) மூலப் பிரகிருதி யிருந்தது." என்றும்.

ஷை வேதம் நிராலம் போபநிஷத்.

இரண்டாவ தற்றதாயு மெங்குந் தொடர்ச்சி யுள்ளதாயுஞ் சகல சுவரூப மாயு மிருக்கிற பிரமத்தி னிடத்திலே தேவ மிருக நர ஸ்தாவர ஸ்திரீ புருஷ வருணா சிரம பந்த மோக்ஷ உபாதி கற்பிதமான வேஷ மல்லது (கற்பிதமான) தடையாக விருக்கிற பல தேக பேதங்களி னாலே கயிற்றிற் பாம் பென்கிற பிரமையைப்போல்; கற்பிதமா யிருக்கிற ஞானமே அஞ்ஞானம்" என்றும்.

ருக்வேதம் ஆத்மபோதோபநிஷத்.

"பழுதையிற் பாம்பு முதலியனபோல் (பழுதையிற் பாம்பு என்கிற பிரமைக்குக் காரணம் பழுதைபோல) பிரபஞ்சத்திற் காதார ரூபமாய்ப் பிரம்ம சத்து மாத்திரமே சூழ்ந்துகொண் டிருக்கிறது. ஆகையால், ஜகத் தில்லை. என்றும், கயிற்றிற் பாம்பு முக்காலத்திலு மெப்படி யில்லையோ அப்படி அகங்காராதி தேகம் வரையிலுள்ள ஜகத்தானது அத்வயனா யிருக்கிற என்னிடத்தில்லை" என்றும்.

யஜுர்வேதம் வராகோபநிஷத் மூன்றாவது அத்தியாயம்.

"கிளிஞ்சலில் வெள்ளி எப்படி (அஞ்ஞானத்தினால்) கற்பிக்கப் படுகிறதோ, அப்படிப்போல, என்னிடத்தி லேயே மாயா மயமான மகதாதி ஜகத்தானது மாயையினாலே கற்பிக்கப் படுகிறது" என்றும் கூறுப,

விசார சந்திரோதயம் பிரபஞ்ச மித்தியா வர்ணநம்.

வினா :— பிராந்தி யாகிய சமுசாரம் எத்தனை வகைப்படும்?

விடை :—பேதப் பிராந்தி, கர்த்திருத்வ போக்த்ருத்வப் பிராந்தி, சங்கப் பிராந்தி, விகாரப் பிராந்தி, பிரமத்திற்குப் பின்னமாகிய ஜகத்தின் சத்தியத் துவப் பிராந்தி என்றைந்து விதமாம். பிம்பப் பிரதிபிம்ப திருஷ்டாந்தத் தால், பேதப் பிராந்தியும், ஸ்படிகத்தில் செங்கிற மாதி தோற்றுந் திருஷ்டாந் தத்தால், கருத்திருத்வ போக்த்ருத்வப் பிராந்தியும், கடாகாச திருஷ்டாந் தத் தால் சங்கப் பிராந்தியும், ரச்சுவில் கற்பித மாகிய சர்ப்ப திருஷ்டாந் தத்தால் விகாரப் பிராந்தியும், கனகத்திற் குண்டலந் தோன்றும் திருஷ்டாந் தத்தால் பிரமத்துக்குப் பின்னமாகிய ஜகத்தின் சத்தியத்துவப் பிராந்தியும், போம். இதை, வாசுதேவ மனனம் பஞ்சப் பிரமை நிரூப கத்திலும் காண்க.

சுருதிப் பிரமாணம் அந்ந பூரணோபநிஷத் முதலத்தி யாயம்.

ஜீவே சுரர்கள் வேறு வேறு ரூப மென்பது முதலாவது பிரமை. கர்த் ருத்வ குணமானது வாஸ்தவமாய் ஆத்மா விடத்தி லுள்ள தென்பது இரண் டாவது பிரமை. சரீரத்துடன் கூடி யிருக்கிற ஜீவன் அதி லொட்டி யிருக் கிறா னென்பது மூன்றாவது பிரமை, ஜகத்காரண ரூபனுக்கு விகாரித்வம் சொல்லுவது நான்காவது பிரமை, காரணத்தைக் காட்டிலும் ஜகத் வேறென் றும் ஜகத் ஸத்திய மென்றுங் கொள்வது ஐந்தாவது பிரமை. இந்த ஐந்து பிரமைகளும் எப்போது நிவர்த்தி யாகு மென்றால், பிம்பப் பிரதிபிம்ப தரி சனத்தி னாலே பேதப் பிரமையும், ஸ்படிகத்தில் சிவப்பாதியைப் பார்த்ததி னாலே கர்த்ருத்வம் வாஸ்தவ மென்கிற பிராந்தியும், கடாகாச மடாகாச தரி சனத்தி னாலே ஒட்டி யிருக்கிற தென்கிற பிரமையும், கயிற்றில் பாம்பைப் பார்த்ததினால் காரணத்தைக் காட்டிலும் ஜகத் வேறு சத்திய மென்கிற பிரமை யும், தங்கக் கிண்ணப் பார்வையி னாலே விகாரத்வப் பிரமையும், நிவர்த்தி யாயிற்று.

திருவாசகம்.

“ வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.”

நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகே ழெனத்திசை பத்தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ,

என்று கூறியதும் இக்கருத்துப் பற்றியே யன்றோ? இவ்வாறு யாவும் பிரமமென ஆரோபம் பற்றிக் கூறினும், அதிஷ்டானம் பற்றி "நிரந்தரவா காயம் நீர்நிலக் தீகா லாய்" என்னும் ஆரோபத்தை மறுக்க, உடனே "அவை யல்லையாய் ஆங்கே கரந்ததோ ருருவே" என்றுங் கூறி யிருக்கின்றமையுங் காண்க.

வேதாரணிய புராணம் குளகேசச் சருக்கம்.

ஆனந்த வுருவ மாகி யமலமா யறிவு மாகி
வானந்த மாய வெல்லா வுலகுமாய் மதித்த லோடுந்
தானந்த மின்றிச் சத்தாய்த் தற்பரந் தானு யின்ப
மோனந்த நிலைமை யாகு முதல்வனே போற்றி போற்றி.

அலகி றந்தபல் விகற்பமு மீசனு மாவியு மயன்மாலு
மிலகு மந்தரி யாமியு முலகுரு விறைவனும் பதமூன்றிற்
குலவு மப்பயன் கொண்டிடு முபாதியிற் குறித்தமூர்த் திகண்மற்றும்
பலவு மாயுளம் பற்றறும் பிரமமாம் பரமநிற் பணிவாமே.

கனவி னுற்றிடும் பொருளெலா மோர்ந்திடிற் காண்பவன் றனேயா
மனவி கற்பமா மிவையெலா நீயலான் மற்றிலை மறைதேடு
மனக மாயுள தாய்ச்சிதா னந்தமா யகண்டமா யருண்மேவித்
தனது தாளுறு மன்பருக் கின்பமாந் தலைவநிற் பணிவாமே.

கால தேசமும் பொருள்களும் வரையறை காண்பதற் கரிதாகி
மூல மாகியவ் வியத்தமாய்ப் புருடனாய் முழுமுத றனேயா
யேல வித்திற மிதுவென வுணர்வுறு தெல்லையற் றெனையாள்வான்
ஞால மார்மறை வனத்தமர்ந் தருள்செயு நாதநிற் பணிவாமே.

ஷை பிரவரச் சருக்கம்.

நிறை சராசர மனைத்தினு நீங்கிடா நிலைபாற்
குறை விலாதவை குலவிடுந் தொழிலொடு குணமா
யிறையு நீயல தில்லையா னின்னிலை யேய்ந்து
மறையு மாற்றறு மெனிலெவர் நின்புகழ் வகுப்பார்.

முதற்சூத்திரம் முற்றிற்று.

இரண்டாஞ் சூத்திரம்.

அவதாரிகை.

கற்பிதபேத வாஸ்தவ அபேதமா மக்கடவு ளெல்லாமாகியு மல்லவாகியு மிருந்துகொண்டு தனது சிற்சத்தியினால் சீவர்களை வினைக்கீடாகப் பொன்றுடு நாகுதரை போக்குவரவு புரிவிக்குமென விச்சூத்திர முணர்த்துகின்றது.

இரண்டாஞ் சூத்திரம்.

அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்க மின்றி நிற்கு மன்றே.

(இ—ள்.) அவையேயாய்—அப்பரவஸ்து (அவனவளதுவென்னும்) எல்லாமாகியும், தானேயாய்—அவை யல்லவாகியும், இருவினையிற் போக்குவரவு புரியவாணையின்—தனது சிற்சத்தியால் சீவர்கடா மியற்றிய விருவினைக்கீடாக விறந்துபிறந்து வரவும், நீக்கமின்றி நிற்கும்—அங்கிங்கெனுதபடி யெங்கும் பிரகாசமா யானந்தபூர்த்தியாகி யருளொடு நிறைந்துநிற்கும் எ—று. அன்றே அசை.

பதசாரம்.

பிரம சங்கற்பத்திற் ரோற்றிய சமஸ்த கற்பிதங்களும் பிரமமுமாகாது பிரமத்துக் கன்னியமு மாகாதென்பார் அவையே தானே யாயெனவும்,

சீவகற்பனை முன்னிட்டன்றி யீஸ்வரகற்பனை விளங்காதென்பார் இருவினையிற் போக்கு வரவு புரியவெனவும்,

பிரமசந்நிதியில் மாயாப் பிரதிவிம்பரான வீஸ்வரன், அவித்தியாப் பிரதிவிம்பர்களான சீவர்களை முன்னிட்டு அவர்கள் தமது யதார்த்த ஸ்வரூபத்தை யடையும் பொருட்டும் பஞ்சகிருத்திய மியற்றுமென்பார்; ஆணையி னீக்க மின்றி நிற்குமெனவுங் கூறினர்.

பரவஸ்து வெல்லாமா யல்லவுமா யிருக்குமென்பதையு மினைத்துஞ் சிற்சத்திநியமத்தினுல் தத்தமியல்பைவிட்டு மாறுதென்பதையு மிச்சூத்திர முணர்த்திற்று என்க.

அத்தியாரோப அபவாத யுத்தி.

மேற்கூறிய பிரமத்தில் அவாந்தரமாகத் தோற்றலை அத்தியாரோப மெனவும், அதினிவிர்த்தியை அபவாதமெனவு மவ்வவற்றிற்குரிய இலக்கணங்களால் விளக்குதல்.

அத்தியாரோப மெனவும், அபவாதமெனவுஞ் சத்துக்கள் யுத்தி யிரண்டெனக் கூறுவர். அவற்றுள் கற்பிதமான அத்தியாரோப மெனப்படுவ துள்ள

கிளிஞ்சலி லில்லாத வெள்ளி யுள்ளதாகக் கற்பித்தல்போல அதிஷ்டானமாகக் கூறும் பிரமசைதன்யத்தி லில்லாதவுலகத்தை யுள்ளதாகக் கற்பித்துக் கூறுத லாம்.

அபவாத மெனப்படுவது:— இஃதெத்தன்மைத்தாமென விசாரிப்புழி வெள்ளியெனல் சற்றுமின்றிக் கிளிஞ்சலே யுள்ளதெனத் தெளிந்தாற்போலச் சுருதியுத்தியநுபவங் காரணமாக வோர்ந்து சைதன்யம்மெய், உலகம்பொய் யென் றையந்திரிபறத் தெளிதலாம் என்க. அறிவு, தன்னைச் சகசீவபரமாகக் கோட லறியாமைபற்றி யாதலால் அத்தியாரோபமெனவும், இங்ஙனங்கொண்ட சகசீவபரத்தை யதோமுகமாதி ஊர்த்தமுக மிறுவாக விசாரிப்புழித் தான்மாத் திரம் விளங்கல் விசாரத் தெளிவுபற்றி யாதலால் அபவாதமெனவுங் கொள்க. நான்குகாலத்து முள்ளது கிளிஞ்சல்போலப் பிரமமு நான்குகாலத்து முள்ள தென்புழி யிடையில் மூடமுந், தெளிவு மெய்தியதால் வந்தபயன் விவர்த்த மெனக் காட்டத் தாஷ்டாந்திரத்தைத் திருஷ்டாந்திரத்தால் விளக்கியதென வறிக.

இங்ஙன மெய்யாக விளங்கப்பெற்ற சைதன்யப்பொருளை யறிதற்கியை ந்த அதத்துவா விருத்தி, தடத்தம், சொரூபமென்னு மூன்றிலக்கணை யுள் ளன. அவற்றுள்:— தூலதேகமுதற் பிரகிருதி யிறுவாகத் தத்துவங்களை யொவ் வொன்றாக நியதிசெய்து கொண்டுபோ யங்ஙன நியதிசெய்தற் குடன்படாது நின்ற ஆத்மாஇனையதென விளக்குவித்தல் அதத்துவாவிருத்தி யிலக்கணையாம்.

இம்மரத்தின துயர்வான கிளையினுச்சியில் மூன்றாம்பிறை யிருக்கின்ற தெனக் காட்டுமாறு போன்று பூதமுதற் சகமிறுவாக் கிடந்துள்ள நிலைகளைக் காரணமாகக்கொண் டறிவுவிளங்கக் காட்டல் தடத்தலக்கணை யெனப்படும்.

சிறந்த சூரியன் பிரகாச கிரணவடிவ னென்றாற்போல ஆன்மாவின் நிச வடிவஞ் சொப்பிரகாசமாகிய இந்நிலையதென விளக்கிக்காட்டல் சொரூபலக் கணை யெனவுமாம். ஆதலின் நீ பிரம சொரூபமே யாம். உனது நிசவடிவம்: சத்து, சித்து, ஆனந்தம், நித்தியம், பூரணமாக விளங்குவதா லதனை நீ சமாதி யிடமாகச் சிந்தித்தறிந்து கொள்ளுதி யென்றவாறாயிற்று.

ஆரோப மத்தியாச மென்னுஞ் செய்யுளில்; பழுதைப்பாம்பு, தறிபுமான், கானனீர் முதலிய இத்தத் திருஷ்டாந்தத்தை யேற்றற்கு இயைந்த தாஷ்டாந் தம் இனையதென இக்கவியிற் கூறுகின்றார்.

கைவல்யம்.

இப்படிப் போல நாம ரூபங்க ளிரண்டு மின்றி
யொப்பமா யிரண்டற் றொன்றா யுணர்வொளி நிறைவாய் நிற்கு
மப்பிர மத்திற் றோன்று மைம்பூத விகார மெல்லாஞ்
செப்பிய கற்பி தத்தாற் செனித்தவென் றறிந்து கொள்ளே.

(இ-ள்.) இப்படிப்போல நாமரூபங்க ளிரண்டுமின்றி எ-து. யாம்கூறிய இத்திருஷ்டாந்தம்போல நாமரூபங்கள் இரண்டுமில்லாமல், ஒப்பமா யிரண் டற் றொன்ரு யுணர்வொளி நிறைவாய் நிற்கும் எ-து. எங்கு மொருதன்மைத் தாயும், இரண்டென்னுங் காரணகாரியப் பாகுபாடின்றி ஏகசொரூபமாயும், எங்குநிறைந்துள்ள ஞானப்பிரகாசமாயு மிருப்பது எந்தப்பிரமமோ? அப்பிர மத்திற்றோன் று மைம்பூத விகாரமெல்லாம் எ-து. அந்தப் பிரமத்தினிடத்தில் மெய்போலத் தோற்றும் பஞ்சபூதமும் அவற்றின் விகாரமுமாகிய அண்டா ண்டகோடி சராசரங்க ளனைத்தும், செப்பியகற்பிதத்தாற் செனித்தவென் றறிந்துகொள் எ-து. முன்சொல்லிய கற்பிதத்தினுல் உதித்தனவென்று அறி ந்துகொள் எ-து. சுயம்பாகப் பழுதையில் பாம்பென்னு நாமரூபம் எங்ஙன மின்றோ? அதுபோன்று சைதன்யமிருத்தலின் நாமரூபங்க ளிரண்டுமின்றி யெனவும், பாம்பென்னும் பிராந்தி தோன்றியவிடத்தும் மறைந்தவிடத்தும் பழுதை அங்ஙனமாகாது ஒருதன்மைத் தாக நின்றவாறு போன்று, விசார ணைக்குமுன் னுள்ளதாயும், விசாரணைக்குப்பின் இல்லாததாயுந் தோன்றுஞ் சகசீவபரம்போ லாகாது, ஒருதன்மைத்தாகச் சைதன்ய மென்றும்விளங்கலின் ஒப்பமாயெனவும் கூறினர். பிராந்திபாம்பாற் பழுதைகாரணமும், பாம்பு காரியமு மாயிற்று. மெய்யாக பாம்பு காரியமாயிற் பழுதையும், மெய்யாகக் காரணமாகலாம். இங்ஙனமின்றே லிங்ஙனமுமின்ரும். ஆக்வே காரண காரி யத்துவிதம் பழுதைக்கு இன்மையாய வாறுபோன்று, பிராந்தி சகசீவபரத் தால் சைதன்யங் காரணமுஞ் சகசீவபரங் காரியமுமாயின. மெய்யாகச் சகசீவ பரங் காரியமாயின், மெய்யாகச் சைதன்யமுங் காரணமாகலாம். அங்ஙன மின்றேல் இங்ஙனமுமின்ரும். ஆகவே காரணகாரியத்துவிதம் சைதன்யத்துக் கின்மையால் இரண்டற்றெனவும் பழுதைக்குக் காரணகாரியப்பிராந்தி வந்த போதும் அது துவிதமாகவில்லை; நீங்கியபோது மேகமாகவில்லை. இரண்டு காலத்தும் பழுதை இருந்தபடி யிருக்குமாறு போன்ற சைதன்னியத்துக்குக் காரணகாரியப் பிராந்தி வந்தபோதும் அது துவிதமாகவில்லை நீங்கியபோதும் எகமாகவில்லை. இரண்டுகாலத்தும் சைதன்ய மிருந்தபடி யிருத்தலால் ஒன்று யெனவும், இங்ஙனமாய வஸ்து தன்னுருவாக முயல்வார்க்கு இலக்காக நிற் குங் குறியெனத் தோன்ற உணர்வொளி நிறைவாய் நிற்குமெனவுங் கூறினர். இங்ஙன நிற்பது எந்தப்பிரமமோ வென்றது எஞ்சிநின்றது. பாம்புகள்ளன் முதலியபிராந்தி தோற்றற்கு ஆதாரம் பழுதை கட்டைமுதலியவை யாயினுற் போலச் சகமுதலிய திரிபதார்த்த ப்ராந்தி தோற்றற்குப் பிரமமென்பது ஆதா ரமெனவிளங்க, அப்பிர மத்திற் றோன்றுமைம்பூத விகாரமெல்லாஞ் செப்பிய கற்பிதத்தாற் செனித்தவென்றும், சமஸ்தமும் உண்மையெனக் கோடலைத் தவிர்தற்குக் கற்பிதத்தால் செனித்தவென் றறிந்துகொள்ளே யென்றுங் கூறி னர். இத்திரி பதார்த்தமும் சோதனையில் ஆம்உண்டெனற் கியைந்து உறுதி யாக நில்லாது அல்ல வில்லை யெனற்கே இயைந் துறுதியாக நிற்பதென்னை? ஆதலின் இவ்வுதாரண மனைத்தும் ஐயமின்றி யேற்றற் பாலதென வுணர்க.

(க-து.) தாஷ்டாந்தத்தினிலே திருஷ்டாந்தத்தினால் விளங்கக்கூறியதென்பது, நாமரூபங்க ளிரண்டுமின்றி யென்பதற்கு அவாங்மனோ கோசாப் பிரமமெனப் பொருள்கொள்ளினு மமையும், அப்பிரமத்திற் றோற்றுமென் பதை ஏழாம் வேற்றுமை யிடப்பொருளாக்கி யுரைகூறியதுமன்றி ஐந்தாம் வேற்றுமை நீங்கற்பொருளாகவேனும், ஏதுப்பொருளாக வேனு முரை கூறினு மமையும். ஐந்தாம் வேற்றுமையிற் கோடல் அலே, திவலே, நுரைகடலி லுதித்தொடுங்கு மாபோ லென்னலேயும் ஏதுப்பொருளாக வமைவது அந்தப் பிரமம் இங்ஙன மாகுகவெனச் சங்கற்பிக்க அந்தப் பிரமசங்கற்பத்தா லுதித்த வெனக் கோடலேயுமென்க. இவை உகபத்சிருட்டி என்னப்படும் இது வேதாந்தி சம்மதம் இதனையே சிவஞானமுனிவரும் பின்பற்றினர் என்பதை அவருரையானுங் காட்டுதும். நோக்காது நோக்கிஎன்னும் 4-வது வெண்பாவுரையில் இஃதிவ்வா றாகவென் றெண்ணுத லாகிய சங்கற்ப மாத்திரையாற் செய்வதூஉம் கரணத்தாற் செய்வதூஉமென வினைமுதல் இருவகைப்படு மென்பதூஉம்; கரணத்தானன்றிச் செய்யமாட்டாத குயவன் முதலியோர் சங்கற்ப மாத்திரையாற் செய்யு முதல்வனுக்கு வினைமுதலாதற் பொதுமைபற்றி ஒருபுடை யுவமையாதலன்றி முற்றுவமையாதல் செல்லாமையானும், சங்கற்ப மாத்திரையாற் செய்யுஞ் செய்திக்குக் கட்டுண்டன் முதலிய குற்றங்கள் பகைப் பொருளாகலானும், அவையாண் டுளவாதற்கோ ரியைபின் றென்பதூஉம் கூறி ஏதுவை வலியுறுத்தவாறு காண்க. என்றனர்.

திருக்குத்திரிசியவிவேகம்.

கடபடத்தைப் போலறிவு காணுலக மென்பர்
கடபடத்தி னுண்மைதனைக் காட்டக்—கடபடத்தை
வேறுபடக் காட்டுதல்போல் வேறுபடக் காட்டுகினு
மாறுபடா தென்றே மதி.

(எ-து.) மண்ணுங் கடமும்போலும் நூலும் வஸ்திரமும்போலும் அறிவும் பிரத்தியட்சமாகக் காணப்படுஞ் சகத்தும் இருக்குமென்று அறிஞர் சொல்லுவர்; அங்ஙன மிருக்கக் கடபடத்தில் உண்மையாயுள்ளவை மண்ணும் நூலு மாதலால் அவற்றின் உண்மையை யெடுத்துக்காட்ட வேறுபடுத்தக் கூடாத அவ்வவற்றின் காரியமாகிய கடபடங்களை வேறுபடுத்திக் கூறுமாறு போல் அறிவு சகத்தென்ப வற்றில் உண்மையா யுள்ளது அறிவாதலால் அவ் வறிவி னுண்மையை யெடுத்துக்காட்ட அஞ்ஞானத்தால் வேறுபடுத்தக் கூடாத அறிவினது காரியமாகிய சகத்தை ஞானத்தால் வேறுபடுத்திக் கூறினும் அக்கடபடங்கள் அவற்றின் காரணங்களுக்கு வேறுபடா வாறுபோலச் சகத்தானது தனக்குக் காரணமாயுள்ள அறிவினின்றும் வேறுபடாதென நீ மதித்தறிவாய் எ-று. சகத்துங் கடவுளும் நிமித்தகாரண காரியமெனத் தெரிந்தார்போற் கூறுஞ் சமயவாதிகளை மறுத்து அறிவுஞ் சகத்தும் முதற்காரண

காரியமென நியாயத்தால் தீர்மானித்த தென்றுணர்த்தக் கடபடத்தைப்போல் அறிவு காணுலக மென்றவா ருயிற்று. என்னை? கடவுளுக்குச் சகத்து வேறி டத்ததாமெனில் பரிபூரணத்திற்குத் தோடமும், கடவுளுக்குள் சகத்தெனின் சுத்தன் நிர்விகாரி யென்றவற்றிற்குத் தோடமும், பார்த்தவிட மெல்லாம் பரமன்கா ணென்பதனுல் அவரே சகத்தெனின் சகத்து சடமாதலின் ஞான சொரூபி யென்றதற்குத் தோடமும் வருமாதலி னென்க.

24-வது புத்தகம் (122) பக்கம்.

சிவஞான முனிவர், கேவலம் நிமித்தகாரணக் கடவுள் எல்லாமாயும் அல்ல வாயு மிருக்கிரு ரென்பதை ஸ்தாபிக்குமா றெழுந்து அதற்குயாதொரு நியாய முங் கூருது, "உலகெலா மாகிவேரு யுடனுமா யொளியா யோங்கி" என் றுள்ள செய்யுளைக் காட்டினுர்.

கேவலம் நிமித்தகாரணம் எஞ்ஞான்றும் முதற்காரணத்திற்கும் காரியத்திற் கும் பின்னமா யிருத்தல் நியதியாக, இவரது கேவலம் நிமித்தகாரணக் கடவுள் உலகாயும் வேருயும் உடனுயும் மிருத்தல் எவ்வாறமையும், அமையாதாக இவ ருடைய கேவலம் நிமித்தகாரணக் கடவுள் உலகாயும் வேருயும் உடனுயு மிருக் கிரு ரென்பது குலாலன் குடமாயும் அஃதன்ருயும் உடனுயு மிருக்கிரு னென் பதற் கினமாம்.

இன்னும் "அரக்கொடு சேர்த்தி யணைத்தவக் கற்போ
லுருக்கி யுடங்கியைந்து நின்று—பிரிப்பின்றித்
தானே உலகாந் தமியே னுளம்புகுதல்
யானே யுலகென்ப னின்று" என்னும்,

4-வது. உதாரண வெண்பா உரையில் இவ்வதிகாரணத் தானே பேத மென்றும் அபேதமென்றும் பேதாபேத மென்றும் பிணங்குஞ் சமயிகளை யெல் லாம் மறுத்து, அம்மூவகை யியல்புந் தன்கட் டோன்ற நிற்கும் அத்துவிதத் துண்மை எதுக்களானும் உவமைகளானும் உணர்த்தியவாறு புடைநூ லாசிரி யரும் இவ்வதிகாரணப் பொருளே பற்றிப்;

"புறச்சமையத் தவர்க்கிருளா யகச்சமயத் தொளியாய்ப் புகலளவைக் களவாகிப் பொற்பணிபோ லபேதப், பிறப்பிலதா யிருள்வெளிபோற் பேதமுஞ் சொற்பொருள்போற் பேதாபேதமு மின்றிப் பெருநூல்சொன்ன, வறத்தினுல் விளைவதா யுடலுயிர் கண்ணருக்க னறிவொளிபோற் பிரிவரு மத்துவித மாகுஞ், சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்க லுற்ரும்." என்ருர்.

என்றெழுதினுர் இது சிவப்பிரகாசப் பாயிர மேழாஞ்செய்யுள், இரௌர வாகமத்திற் பாச விமோசனப் படலத்திற் காமிகாதி சிவாகம மிருபத்தெட் டின் சாரமா யுள்ள சிவஞான போதமென்னு முதனூலுக்கு உபநிடதங்கட்

கெல்லா முரண்பட உடலுயிர் கண்ணருக்க னறிவொளிபோற் பிரிவறு மத்து விதமாகுஞ் சிறப்பினதென்றும் வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்த மென் றுங் கூறுமிச் சிவப்பிரகாசம் புடைநூலாமென்றதும், சிவஞானசித்தியார் வழிநூலாமெனக் கூறுவதும் எறும்பியின்கண் திவுளியா யெருத்தினை யீன்ற தென்பதற் கினமாமென் றறிக. இது நிற்க.

ஷை வெண்பாவில் "உருக்கி அரக்கொடுசேர்த்தி யணைத்தவக் கற்போல்" என்பதுவரைக்கு முதாரணம்; இவ்வுதாரணத்தில் ஒன்று எல்லாமாதலு மல்லவாதலு மிருக்கின்றதா வெனிலோ வஃதில்லவே யில்லை. அரக்கை யுருக்கி அதனோடு சேர்த்துள்ள கல் அவ்வரக்காயு மஃதன்றாயு மிருக்கின்ற தென்பது விசாரணையுடையார் கூற்றாமா? அரக்கிற் கல்சேர்ந்தது சையோக சம்பந்த மாகலின் அச்சையோக சம்பந்தத்தில் அனுயோகி சம்பந்தமுள்ள பொருள் பிரதியோகி சம்பந்தமுள்ள பொருளாயு மஃதன்றாயு மிருக்குமா? பட்சிக்கு மரத்திற்கு மிரண்டாட்டுக் கடாக்களுக்குமுள்ள சையோக சம்பந்தத் தில் ஒன்று மற்றொன்றாயு மஃதன்றாயு மிருத்த லெங்ஙனமின்றே அங்ஙனமே கல்லு மரக்குமாயிருக்க; அவர்யாதோ ராராச்சியு மின்றிக்; கடவுள் எல்லா மாகியு மல்லவாகியு மிருத்தற்கு. "அரக்கொடுசேர்த்தி யணைத்தவக் கற்போ லென் றெடுத்தவுவமை யெவ்வாறு பொருத்தமாம்? இதனால் சிவஞான்போத உதாரணவெண்பாவு மறுக்கப்பட்டமை காண்க.

இதுவேயுமன்றி யிவரினத்தவர் கடவு ளெல்லாமாயு மல்லவாயு மிருத்தற் குவமை பாலினெய், பழத்தில்மதுரம், என்றற் றொடக்கத்தன வற்றையுங் கூறியிருக்கின்றனர். பாலில் நெய் பின்னசம்பந்த மாயும், பழத்தில் மதுர மபின்னசம்பந்த மாயு மிருத்தலின் இவை யெல்லாமாயு மல்லவாயு மிருக்குமா? "அரக்கொடுசேர்த்திடுமென்னு ஷை வெண்பாவி னுரையில்; சிவஞானசுவாமி கள் "இறைவன் பொருட்டன்மையால் வேறுநிற்றலான்" என்று கூறுத லால், பொருட்டன்மையால் வேறுநிற்கு மிறைவன் எல்லாமாதலு மல்ல வாதலும் கூடுமோ? இறைவன் கலப்புத் தன்மையா லவை கூடுமெனின், இவர்கூறுங் கலப்புச் சையோக சம்பந்தத்தி லாதலின் சையோகசம்பந்தத்தி லொன்று மற்றொன்றாதல் கூடாதாதலின் அஃதீண்டுச் சிறக்காதென்க.

இவரினத்தவரான உமாபதி சிவாசாரியார் சங்கற்பநிராகரண நிமித்த காரண பரிணமவாதி நிராகரணத்தில், "உலகே ழெனவிறை பலவாந் தன்மை, கடமொடு சார்வங் கலச மாதிக, ளடலுறு குயவ னுயின னென்றாற், றானே யாகா வவைதா னுகா, னுயின னென்ப தாக்கின னெனவே, யானு யென்ப தனைத்து மவ்வகை தானு காமையை சாற்றிடு மென்க" என்றகூற, அதற் குரையிட்டவரும், "உலகே ழெனத்திசை பத்தெனத்தா னொருவனுமே" என்ற திருவாசகத்தின் றன்மை, குடங்கள் சட்டிகள் கலசங்கள் இவையாதி யாகச் சொல்லப்பட்ட பாத்திரங்கள்எல்லாம் விரைவிலே பொருந்திச்செய்யப் பட்ட குயவன் ஆயினனென்று சொன்னல் அந்தக்குயவன் அந்தப்பாத்திரங்க ளாகான், அந்தப் பாத்திரங்களந்தக் குயவனுகா. ஆயினனென்ன தாக்கின

னென் றிலக்கணங்களிற் சூத்திரஞ் சொல்லுகையினல் 'வானுனுய் மண்ணுனுய்' என்று சொல்லப்பட்டதெல்லாம் அந்தசிவன் அந்தவானும், மண்ணும், ஆகானென்பதைச் சொல்லுமென்றறிக." என்று கூறுதலால், குயவன் குடமாகாமைபற்றிக் குடத்தில் குயவன் எவ்வாறு வியாபகமாதலின்றே, அவ்வாறே சிவன் உலகாகாமைபற்றி உலகில்சிவன் வியாபித்த லின்றென்பது, குயவன் குடமாகாமைபோல் சிவன் உலகாகாமையே இவரது சித்தாந்தமாக, சிவன் உலகாயினுனென்று கூறுவது அவசித்தாந்தமாம். மேலும் குயவன் குடமாயினுன், கருமான் வாளாயினுன், சேணியன் சீலையாயினுன், கொத்தன் வீடாயினு னென்பது, யாண்டும் வழக்கின்மையான் உமாபதி சிவாசாரியர் 'கடமொடுசார்வக் கலசமாதிகள், அடலுறுகுயவ ஞயினனென்றல்' என்றுகூறியதும், அதையொத்துப் பிறர்கூறியதும் பிழையினும் பிழை பெரும்பிழையாமென்க. ஆயினுனென்பதை யாக்கினுனெனப் பொருள் கொண்டு அவ்வாக்கப்படும் பொருளிற்குத் தான்வேறெனக் கொள்ளின், "வானுகி மண்ணுகி" என்ற திருவாசகச்செய்யுளிலுள்ள, "உண்மையுமாய்" என்ற சொல்லுக்கு உண்மையை யாக்கினுனெனப் பொருள்கொண்டு, உண்மைக்குக் கடவுள் வேறென்று பொருள்கொள்ளவேண்டும், உண்மைக்கு வேறு இன்மையாதலின், இதனுல் கடவுள் இன்மைப் பொருளாமென்பது உமாபதி சிவாசாரியரது வாக்கினுற் சித்தாந்தமாகிறது. அத்வைதிகள், பிர்மம் எல்லா (உலகுயிர்) மாயும் அல்லவாயு மிருக்கின் றதென்று கூறுகின்றூர்களே, நாமும் (துவிதிகளும்) அவ்வாறு கூறுவோமென்று கருதி, புலியைப் பார்த்து நரி சூடிட்டுக் கொண்டாற்போன்று, பொருத்தமில்லா வுவமைகளைக் கூறி அவமானப் படுகின்றூர்கள், பாவம்.

வேதாரணிய புராணம் விஸ்வாமித்திரருக் குபதேசச் சருக்கம்.

கேள்விமுதற் பாவனையாற் கிளருமனு பூதியுறக் கிடைத்த வின்பத்
தாள்வினையான் மரங்கரியா ளாயுறுமா மதுபோல வகில முற்றுங்
கோள்விலங்கும் பிரமமதாங் குறிமருவிச் சிதானந்த குணத்தி னுகி
நாள்விழியா தின்பமுற நலமலியுஞ் சீவன்முத்தி நயத்தி னுலும்.

சூதசங்கிதை 2-ம் அத்தியாயம்.

ஒன்றுமாய்ப் பலவு மாகி யுருவுமா யருவு மாகித்
தொன்றுமாய்ப் புதிது மாகித் தூரமாய்ச் சமீப மாகி
யின்றுமா யென்று மாகி யிருளுமா யொளியு மாகி
நன்றுமாய்த் தீது மாகி நயந்தரும் பொருளே போற்றி.

பிரமக்தை.

சிலந்தி யுமிழ்ந்து விழுங்குவ தெப்படி தேகத்தே
மலந்தரு கேச வுரோமம தெப்படி மண்ணிற்கே

பலந்தரு மோடதி யெப்படி யப்படி யீசன்பால்
அலர்ந்த சுடங்க வெறுங்கன வொக்கும தாயுங்கால்

திருமழிசை யாழ்வார்.

ஏழுபா ரெழுகட லியங்களெட்டு வெற்புடன்
சூழுவான் கிரிகடந்து சொல்லுமே முலகமும்
ஆழிமால் விசும்புகொள்பிர் மாண்டரண்ட வண்டமும்
ஊழியா னுளிக்குளே யுதித்துட னொடுங்குமே.

அரியுமாகி யயனுமாகி யண்டமெங்கு மொன்றதாய்
பெரியதாகி யுலகுதன்னி னின்றபாத மொன்றலோ
விரிவிதென்று வேறுசெய்து வேடமிட்ட மூடரே
அறிவிேைனாடு பாருமிங்கு மங்குமெங்கு மொன்றதே.

கடவு ளெல்லாமா யல்லவுமா யிருக்கின்று ரென்பதற்குக் காரண காரிய வுவமை பொருந்துமே யன்றி (அதாவது கற்பிதபேத வாஸ்தவ அபேத தாதாத்மிய சம்பந்தம் பொருந்துமேயன்றி) மற்றொன்றும் பொருந்தாதென வறிக. அஃதாவது : மண்கடமாயு மஃதன்றுயும், பொன்பணியாயு மஃதன்றுயும், கயிறரவாயு மஃதன்றுயு மிருத்தல்போன்று ; கடவு ளெல்லாமாகியு மல்லவாகியு மிருக்கின்றுரெனக் கொண்டால் யாதோரிழுக்கும் நேராது. எல்லாமாதல் கற்பனையாயும் அல்லவாதல் யதார்த்தமாயு மிருத்தலா லொன்று மற்றொன்றுதல் கற்பிதத்தி லிருக்குமென்பது மண்ணைத்தவிரக் கடமும், பொன்னைத் தவிரப் பணியும், கயிற்றைத்தவிர அரவு மின்மையாற் காணலாம். இதனை யோசியாமல் புறச்சமயத் தவர்க்கிருனா யென்னுஞ் செய்யுளி லுமாபதிசிவம் பொற்பணிபோ லபேதப் பிறப்பிலதா யென வுதாரணமெடுத் தோதியது பயனில்சொல்லா மென்பதற்கு அடியில்வருந் திருமந்திரமுதலிய நூல்களே சான்றுமென்க.

திருமந்திரம்.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே.

பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னில் மறைந்தது பொன்னணி பூடணம்
தன்னை மறைத்தது தன்கர ணங்களாந்
தன்னில் மறைந்தது தன்கர ணங்களே.

மாயை மறைக்க மறைந்த மறைப்பொருண்
மாயை மறைய வெளிப்படு மப்பொருண்
மாயை மறைய மறையவல் லார்கட்குக்
காயமு மில்லை கருத்தில்லை தானே.

அத்துவிதவுண்மை.

கடங்க டமது காரணத்தைக் காட்டி டாது முன்விளங்கும்
படங்க டாமு மப்படியே பகர்கா ரணமு நீங்காது
சடங்க ளாகு மிச்சகமுந் தான்முன் விளங்குங் காரணமாம்
இடங்கொள்சொரூபத்தையுங்காட்டாதிருக்குமதைவிட் டகலாதே.

மரத்தை நோக்கின் மதகரியு மறைந்து விளங்கு மதைநோக்கின்
மரத்தை மறைத்துத் தான்விளங்கும் வாறு போலச் சகமுழுதும்
பரத்தை நோக்கி னதின்மறைந்து பரமாய் விளங்குஞ் சகநோக்கில்
பரத்தை மறைத்துத் தான்விளங்கும் பரமே யனைத்து மாதலினல்.

இங்ஙனங் கூறியுள்ள பிரமாணங்களின்படி பார்த்தால் காரணமே காரியமாகின்றது; மரமே யானையாகிறது போலாம். மரம் காரணம் யானை காரியம் மரம்யானை யாகிறபோது மரமேயானை ஸ்வரூபமென்று சொன்னால் தோஷமென்னை? மரத்தின் காரியமான யானை, குதிரை, தேர்முதலியவற்றை யெல்லாம் பார்த்து இவைகளெல்லாம் மரசொரூபமென் றெப்படிச் சொல்லலாமோ; பொன்னின் காரியமான பூஷணங்களையெல்லாம் பொன்னின் சொரூபமென் றெப்படிச் சொல்லலாமோ; நூலின் காரியமான வஸ்திரங்களையெல்லாம் நூலின் சொரூபமென் றெப்படிச் சொல்லலாமே அப்படியே பிரமத்தின் காரியமான புல்பூடாதிகளைப் பிரம சொரூபமென்று சொல்லத் தடையென்னை? இப்படிச் சொன்னால் பிரமத்துக்கும் பூரணஞ் சித்திக்கிறது; புல்பூடாதிகட்கும் ஒருவிதமாக இருப்பு ஏற்படுகிறது. பிரமமே எல்லாமாய் அல்லவுமாய் இருக்குமென்பதற்குப் பிரமாணங்கள் வருமாறு.)

தாயுமானர்—மண்டலத்தின்.

தன்னிலேதானக...பொன்னிலே பணிபோலு மாயைதரு மனமே.

கம்பராமாயணம்.

பொன்னிடைப் பிறந்த முடிபல பணியாய்ப் பூண்பன் போலவும் புணரி, தன்னிடைப் பிறந்த தடந்திரை யெனவுந் தரையினின் றெழுதுக ளெனவும், நின்னிடைப் பிறந்த சுரர்மனு சாதி முதலபல் லுயிர்களு நீயும், அன்னிய மாகி யாயினென் றுதி யாழியா யாருனை யறிவார்.

பாகவதம்.

அன்பு செய்வதிங் கரிதிலை யன்புசெய் வதுதான்
பொன் பிறங்கிய வணியெலாம் பொலிந்திருப் பதுபோன்
மன் புகழ்ச்சரா சரங்களாய் மாயனென் றுரைக்கு
நன் பெரும்பொரு ளிருக்குமென் றுளத்துண டுவதே.

இதுவுமது.

எங்கு மாய்நிறைந் திலங்கிய ஞானவா ரிதியிற்
பொங்கு தெண்டிரை நுரைவரும் புற்புது மெனவே
யங்கண் மாநில முதலிய வுலகங்க ளனைத்துந்
தங்கி நின்றெழும் வேறுவே றறிவிலர் சாற்ற.

இதுவுமது.

மறிந்து தோன்றிய திரைநுரை குமிழிமற் றனைத்துஞ்
சிறந்து தோன்றுமந் நீரலாற் றெரிக்கில்வே றிலைபோற்
குறைந்து தோன்றிய வுலகங்க ளனைத்தையுங் குறிக்கி
னிறைந்து தோன்றுநல் லறிவலா னிகழ்த்தவொன் றிலையால்.

திருவாசகம்.

இரந்திரந் துருக வென்மனத் துள்ளே யெழுகின்ற சோதியே யிமையோர், சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய் திருப்பெருந் துறையுறை சிவனே, நிரந்தவா காய நீர்நிலந் தீகா லாயவை யல்லை யா யாங்கே, கரந்ததோ ருருவே களித்தன னுன்னைக் கண்ணுறக் கண்டுகொண் டின்றே.

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத் தெழுகின்ற ஞாயிறே போன்று, நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தே னீயலாற் பிறிது மற் றின்மை, சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந் திருப்பெருந் துறையுறை சிவனே, யொன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை யாருனை யறியகிற் பாரே.

இலிங்கபுராணம் தியானவிதி.

விரிந்தபூ தங்களி னோடு விளம்பிந் தியங்கள் தத்துவங்கள்
திருந்தா கங்கா ரத்தினொடு செறிமுக் குணங்கள் மாத்திரைகள்
பொருந்து மாயை சீவனிவை பொய்யாம் யாமே பொய்யின்றி
யிருந்தெவ் விடத்து நிலைபெறுவோ மதனாற் றுணு வெனவிசைப்பர்.

சிவஞான சித்தியார் ௮-வது சூத்திரம் ௬௦-ம் செய்யுள்.

அறியாமை யறிவகற்றி யறிவி னுள்ளே யறிவுதனை யருளினு னறியாதே யறிந்து, குறியாதே குறித்தந்தக் கரணங்க ளோடுங் கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாயிற், பிறியாத சிவன்றானே பிரிந்து தோன்றிப் பிரபஞ்ச பேதமெல்லாந் தானுய்த் தோன்றி, நெறியாலே யிவையெல்லா மல்ல வாகி நின்றெனன்றுந் தோன்றிடுவ னிராதார னுயே.

ஷ ௨-ம் சூத்திரம் எசு-வது செய்யுள்.

சிவஞ்சத்தி நாதம் விந்து சதாசிவன் றிகழு மீசன்
உவந்தரு ளுருத்தி ரன்றான் மாலய னென்றி னென்றாய்ப்
பவந்தரு மருவ நாலிங் குருவநா லுபய மொன்று
நவந்தரு பேத மேக நாதனே நடிப்ப னென்பர்.

திருமந்திரம்.

தலையான நான்குந் தனதரு வாகு
மலையா வருவுரு வாகுஞ் சதாசிவ
நிலையான கீழ்நான்கு நீடுரு வாகுந்
துலையா விவைமுற்று மாயல்ல தொன்றே.

திருக்களிற்றுப்படியார் எகூ-ம் செய்யுள்.

பொன்னிறங் கட்டியினும் பூணினு நின்றாற்போ
லன்னிற மண்ணனு மம்பிகையுஞ்—செந்நிறத்த
ளெந்நிறத்த ளாயிருப்ப ளெங்கள் சிவபதியு
மந்நிறத்த னுயிருப்ப னங்கு.

அமுதசாரம் காரணகாரிய வேறின்மை.

மன்னு முதற்பொருளின் மன்னுத விவ்வுலகம்
பின்ன மெனுமாறு பேசற்க— பொன்னே
யணியாவ தன்முன்னு மப்பொன்னே சாய்ச்சி
மணியான போது மறித்து.

திருவிளையாடற்புராணம் நரியைப் பரியாக்கிய படலம்.

மண்ணாய்ப் புனலாய்க் கனலாய் வளியாகி
விண்ணா யிருசுடரா யித்துணையும் வேறாகிப்

பண்ணு யிசையாய்ப் பனுவலா யெங்கண்ணுங்
கண்ணுஞ யென்னுறுகண் காணுவா றென்கொல்லோ.

இதுவுமது.

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற் கற்றகேள்வி
வல்லார்க ளுல்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்பாலா
யெல்லாமா யல்லதுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்துகாட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாம னினைந்துபவத் தொடக்கை
[வெல்வாம்.

பிரமகீதை ஐதரேயவுபநிஷதார்த்த சேஷமும் தைத்திரியவுபநிஷதார்த்த தார்ப்பரியமு முரைக்குமத்தியாயம்.

பிரம னிவனே யிந்திரனும் பிரசா பதியு மிவனிவனே
யுரம துடைய வும்பர்கள்பூ தங்க ளுலகங் களுமெல்லா
முரைசெய் திடுமண் டசமுதலா மியோனி பேதங் களுமிவனே
குரக தங்கோ மாநுடரும் குஞ்ச ராதி களுமிவனே.

இதுவுமது.

ஏனை மற்று மியம்பாத வியங்க நிற்கப் படுவவெலா
ஞான கனபா மிறையவனே நலமாஞ் சிவனு மானுமுத
லான நாமங் களையுடைய யாவு மறியு மெய்ப்பரம
னீன மில்லா வறிவுருவே யெல்லாப் பொருட்கு மிறைபேரும்.

ஈசுரகீதை—சாங்கியயோக அத்தியாயம்.

அழியா தென்று முளதாகி யனைத்துட் புறம்புந் தானிரப்பி
யொழியா வறிவா யொருகுற்ற முரைத்தற் கரிய தொருபொருளே
கழியா மாயை யதனலே காணப் பலவாய்த் தோன்றியிடு
மழிவா யினதென் றென்றுமிலா திருக்கு மதுவே யியல்பென்றுன்.

மற்றும் வருவனவற்றுற் காண்க.

யோகசிகோபநிஷத்து.

"கயிற்றிற் பாம்பென்கிற தன்மைபோல ஜீவத்வத்தை யறியவேண்டியது. கயிறென்கிற ஞான மில்லாததினு லொருக்ஷணத்திற்குள் கயிறு சர்ப்பமாய்க் காணப்படுகின்றது. அதுபோற் கேவலஞ் சித்தானது தானே பிரபஞ்சமாக விளங்குகின்றது பிரபஞ்சத்திற் குபாதான காரணம் பிரமத்தைத்

தவிர வேறில்லை. ஆகையாலிச்சகலமான பிரபஞ்சமும் பிரமமாகவே யிருக்கின்றது, வேறேயில்லை.

பாசுபதப் பிரமோபநிஷத்.

" இந்தவித்தை யவித்தைகள் விவகார திருஷ்டியினாலேயன்றி வேறில்லை தத்துவமாய்ப் பார்த்தா லில்லவே யில்லை.

இதுகாறுங் கூறிவந்த பிரமாணங்களாற் பொற்பணிபோ லபேதப்பிறப் புள்ளதென நாட்டியதா லிலதாயென்ற வுதாரண மறுக்கப்பட்டது.

இனி யிருளும் வெளியும் பேதமாதல் யாங்ஙன மமையும்? அதனை யாராய்வாம்: இருளென்பது பொருளல்ல ஒளியினது குறைவாகும். வெளியென்பது ஆகாய மதுவொரு பொருள்தான். ஆகாயமென்னும் பொருளு மிருளென்னு மொளியின் குறைவு மெங்ஙனம் வேறும்? ஆகாயத்தின்கண் இருள்கலந்து போதலின் வேறெனப் பகர்வாமென்னி னஃதுபொருந்தாது. எனெனில் :—

ஆகாயத்தினின்றும் வாயுவுற்பத்தி; ஆகாயங் காரணம் வாயு காரியம்; ஆகாயத்திற்கும் வாயுவுக்கு முதற்காரண காரியசம்பந்த மிருப்பதா லபின்னமே. எப்படிப் பஞ்சுநூலுங் காரண காரியமோ எப்படியபின்னமோ அப்படியே ஆகாயமும் வாயுவுமாம். அதன்பின் வாயுவினின்றுந் தேயுவுற்பத்தி: வாயுகாரணம் தேயுகாரியம். வாயுவுக்குந் தேயுவுக்கு முதற்காரணகாரிய சம்பந்த மிருப்பதா லபின்னமே; யெப்படி நூலுமாடையுங் காரண காரியமோ வெப்படி யபின்னமோ அப்படியே வாயுவுந் தேயுவுமாம். பஞ்சினது காரியம் நூல்; நூலினதுகாரிய மாடை பஞ்சினுக் கபின்ன நூல், நூலினுக் கபின்ன மாடை. ஆடை நூலினுக்கு மாத்திர மபின்ன மன்று; பஞ்சினுக்கு மபின்னமேயாம். அங்ஙனமே யாகாயத்தினது காரியம்வாயு, வாயுவினது காரியந் தேயு; ஆகாயத்தினுக் கபின்னம்வாயு, வாயுவுக் கபின்னந்தேயு: தேயு வாயுவுக்கு மாத்திர மபின்னமன்று, ஆகாயத்துக்கு மபின்னமேயாம்.

இனித் தேயுவினது குணம் ஒளி ஒளியினது குறை வேயிருள்; ஒளியை விட இருள்வேறன்று. வேறெனக் கூறின் ஒளியென்னுங் குணத்தைத் தேயுப் பெற்றிருப்பதுபோ லொளியில்லாத விருளென்னுங் குணத்தைப் பெற்றிருக்க வொருபொருள் வேண்டும். அப்படிப்பட்ட பொருளொன் றிருப்பதாய்த் தெரியவில்லை. இவற்றைத் திருஷ்டாந்த வாயிலாகவும் பார்ப்போம்: பகல் வர்த்தியை யிரவில் கொளுத்தி வைத்தா லது எரிய எரிய வதற்குமுன் னங்கிருந்த இருள் காணப்படாதுபோய் ஒளி மிகுதியாகின்றது. அதுபின் னவிய வவிய வொளி குறைவுபட்டு ஒளியினது குறைவானவிருள் அதிகப்படுகின்றது. அவ்வாறே: யொளிக்கு மிருளுக்கு மிடமானபொரு ளிரண்டல்ல வொன்றேயாம். ஒளியென்னுங் குணத்தை யெது குணியாகப் பெற்றிருக்கின்றதோ, அதுவே யிருளென்னுமதன் குறைவையுங் குணியாகப் பெற்றிருக்கின்றது.

அந்தக்குணி தேயுவாம். இரண்டுங் குண (ஒன்றுசேஷமானால்) மானல் ஒன்றிருந்தபோது மற்றொன்றிருக்க வில்லையேயெனின் அவ்விரண்டும் நேர்விரோத முள்ளனவாகலின் ஒன்றிருந்தபோ தொன்றிரா. நீட்சி குறுகலான இரு குணமு மொன்றிருந்தபோ தொன்றிருக்கின்றதா? இல்லையே, அப்படியிருக்கும் ஒருகழிக்கு நீட்சிகுறுகல்கள் குணமன்று? அங்ஙனமே தேயுவுக்கு ஒளியும் இருளும் சேஷங்களாம். உதாரணம் கொடிக்கவி; "ஒளிக்குமிருளுக்கு மொன்றேயிட மொன்றுமேலிடி லொன்றொளிக்கும்." ஔவையார் விநாயக ரகவல். "இருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன, அருடரு மாநந்தத் தழுத்தியென் செவியில்."

திருமந்திரம்.

தானே விரிசுடர்மூன்று......தானே வெளியொளி தானிருட் டாமே.

தேயுவானது முன்கூறியபடி ஆகாசத்தினது காரியத்தினுக்குங் காரியமாம், ஆடை பஞ்சினது காரியத்தினுக்குங் காரியம்போல, எப்படி ஆடை பஞ்சினுக்கு அபின்னமோ, அப்படியே தேயு, ஆகாயத்தினுக்கு அபின்னமேயாம். எப்படி ஆடையின் நீட்சிக் குறுக்கல்களுக்குப் பஞ்சு அபின்னமோ, அப்படியே தேயுவின் ஒளிக்கு மதன்குறைவான இருளுக்கும் ஆகாயம் அபின்னமேயாம். குறுகலான கழி யிருப்பதுபோல் ஒளியின் குறைவானதேயு இருக்கின்றதா வென்று சங்கைபண்ணக்கூடும். உஷ்ணத்தோடுகூடிய வெந்நீரில் ஒளி காணப்படவில்லை. காணப்படாதேனுந் தேயு இருப்பதாய் ஒத்துக்கொள்வோம். அதன்கண் ஒளியிருக்கின்றதா? இருள்நிறைந்த ஓரறையில் கொதிக்கும் நீரைக் கொண்டுபோய் வைத்தால் அங்கிருந்த இருள் ஓடிப்போகின்றதா? இல்லையே, இதனால் தேயுவினிடத்தில் ஒளியும் அதன்குறைவானஇருளு மிருப்பனவாய் ஏற்படுகின்றது. உதாரணம்.—திருவாசகம். "பார்பத மண்ட மனைத்துமாய் முளைத்துப் பரந்ததோர் படரொளிப் பரப்பே, நீருறுதீயே நினைவதே லரிய நின்மலா" என்பதானும். விளங்கும். இதுவரையில் கூறிப்போந்த நியாயங்களால் வெளியின்கண் இருள் பின்னமென்று கூறுதல் ஒவ்வாது; அபின்னமென்றே கூறுதல் தகுதியாமென்க.

'இனி சொற்பொருள் பேதாபேதமெனலையு மாராய்வாம். ஒருபொருளுக்கு மற்றொருபொருள் பேதமாகவேனும், அபேதமாகவேனும் இருத்தல் வேண்டும். பேதாபேதமென்று ஒருபோதுஞ் சொல்லஇயையாது. பேதமென்பது மபேதமென்பது மெதிர்மறைக்குணங்கள். எதிர்மறைக்குணங்க ளொரு குணிப்பொருளி னிடத்திருக்குமென்ப தசங்கதம். சொல்லின்கண் பொருள் பேதமென்றுாவ தபேதமென்றுாவ துரைக்கவேண்டு மங்ஙனமின்றி யிரண்டுஞ் சேர்ந் தொருபொருளி னிடத்திருக்கு மென்பது; சூரியனிடத் தொளியு மிருளு மொன்றுபட் டிருக்குமென்பதற் கினமாம். ஒருபொருளிடத்து மற்றொருபொருள் ஒருகாலத்துப் பேதமாயும் மற்றொருகாலத் தபேதமாயு மிருக்குமென் றுரைத்தல் பொருந்தாதோ? வெனின் பொருந்தாது. யாங்ஙன

மெனின் காட்டுதும். எது, பேதமோ வதுவென்றும் பேதந்தான் ; எதுவ பேதமோ வதுவென்று மபேதந்தான் : மாத்தின்கண் பறவையென்னு மிடத்து அதுஎன்றும் பேதந்தான் அது வோர்போது மபேதமாகாது. மாத்தின்கண் கிளையென்னுமிடத் ததுவென்று மபேதந்தான் பேதமாகாது. அங்ஙனமே சொல்லின்கண் பொருள் பேதமாயின் பேதமாயே யிருத்தல்வேண்டும். அவ்வாறில்லாம லிரண்டையு மொன்றுகூட்டிப் பேதாபேதமென் றுரைத்தல் பொருந்தாது.

இனிப் பேத மபேதமென்னு மிரண்டனுள் யாதுண்மையென வாய்தல் செய்வாம் : சொல்லின்கண் பொருளிருக்கு மென்கை நமது மனோகற்பிதமேயன்றி வாஸ்தவமன்று. சொல்லானது ஒலிரூபம் ; ஒலிக்கெல்லாம் பொருளுண்டென்னிற் சமுத்திரவொலிக்குங் காற்றொலிக்கும் பொருளிருத்தல் வேண்டுமவ்வாறில்லை. சொல்லின்கண்பொருள் கற்பிதமன்றி யுண்மையாயின் ஒரு சொல்லொருபொருளையே யுடைத்தாதல் வேண்டும். அங்ஙனமின்றி யொரு சொல்லுக்குப் பலபொரு ளுண்டென்பதற்கு நிகண்டே சாட்சிபகரும். ஸ்படிகமானது தான் சுத்த வெண்ணிறமா யிருந்தும் தன்னைவந் தடுத்தபொருள்களின் நிறத்தைத் தனக்குரியனவு மபேதமும்போற் காட்டுகின்றது ; அவ்வாறே சொல்லுந் தனக்குரிய வபேதம்போற் பொருளைக் காட்டுகின்றது. ஸ்படிகமானது கறுப்புமுதலிய நிறத்தை யபேதம்போற் காட்டினு முண்மையிலெப்படிப் பேதமோ ; அப்படியே சொல்லு மபேதம்போற் பொருளைக் காட்டினுலும் பேதம் பேதமேயாம். ஸ்படிகத்திற் கியற்கைக்குணம் வெண்மையேபோற் சொல்லுக் கியற்கைக்குண மொலியேயாம். மற்றையாவுஞ் செயற்கையான பேதகுணங்களே யாகும். இப் பேதகுணங்களைப் பேதாபேத குணமென்று உமாபதிசிவன் சொல்லியதற்கு முரணைச் சிவஞானசித்தியார் பேதமெனக் கூறுவதை யடியில் காட்டுதும்.

சிவஞான சித்தியார்.

(சத்தப்பிரம வாதிமத மறுதலை நான்காஞ் செய்யுள்.)

உரைபோற் பொருளுக் குருவின் மையினவ்
வுரையே பொரு ளென்றனை யின்றரியென்
னுரையே கவி மாலவ னுக்குளதா
முரையாய் கவி யாகவோர் மாலினையே.

(இ-ள்.) சத்தத்தைப்போல அர்த்தத்திற்கும் உருவமில்லாமையினல் அச்சத்தமே அர்த்தமென்று கூறினாய்.— இன்று அரியென்று சொல்லப்பட்ட சத்தம் திருமாலினுக்குங் குரங்குக்கும் மற்றும்பல பொருட்கும் பெயராகச் சொல்லலாம் ; அதனைப் பொருட்டன்மையிலே நின்றுஞ் சத்தங்கொள்ளாமற் சத்தத்தின் றன்மையிலே நின்றும் பொருள்கொள்ளலாமாகில், திருமாலைக் குரங்காகச் சொல்வாயாக என்க.

எனவே சொல்வேற்றுமையும் பொருள்வேற்றுமையும் உண்டென்பதா யிற்று. இதனால், சத்தமும்பொருளு மொன்றுபட்டிருந்தாலும் இரண்டும் வேறென்றே காண்க என்றதாம். என்றும்.

ஷ ௩-வது செய்யுளில்எனவே சத்தத்தினும் அர்த்தமே சிறப்பையும் நிலைபேற்றையு முடைத்தென்பது கருத்து. பரிணமமாகின் நெருப்பென்ற போது நெருப்பா யெழுந்திருக்கவேண்டும்; விருத்தியாகின் நெருப்பென்ற போது வாய்வேக வேண்டும்; ஆதலால் தாதான்மியமுமன்று உற்பத்தியு மன்று இடுகுறிப்பெயரா மென்றதெனக் கொள்க. என்றும் உரையெழுதி யிருக்கின்றனர்.

இவைகளினுற் சொல்லும்பொருளும் பேதமென விளங்கினவன்றோ? இவ்வாறு உமாபதி சிவாசாரியர், சொல்லும்பொருளும் பேதா பேதமென்ற தற்கு மாருக ஷயாருக்கு மூலபுருஷரான அருணந்தி சிவாசாரியர், சொல் லும்பொருளும் வேறென்று கூறுகின்றமையின் அதற்கென் செய்வரோ அறியோம்.

இன்னும் ஷ புறச்சமயத் தவர்க்கென்னுஞ் செய்யுளில் உடலுயிரும் கண்ணருக்கனொளியுந் திருட்டாந்தங்கூறினர் இவைகள் பின்னமுதலிய மூன் றையுங்கடந் திருக்குமா? உலகி லெந்தப் பொருள்களும் பின்னமாகவாவது, அபின்னமாகவாவது, பின்னுபின்னமாக வாவது இருக்கவேண்டும். இம் மூன்றையுங்கடந்த இலக்கணமுள்ளபொருள் கிடையாது. அம்மூன்றினும் பின்னுபின்னப்பொரு ளகப்படவே மாட்டா. அங்ஙனமாக விம் மூன்றிலக் கணத்தையுங் கடந்து சொல்லவருவது எவ்வளவு புத்திநுட்பத்தைக் காட்டு கின்றது. அதிலும் பின்னம், அபின்னமாகிய இரண்டு குற்றங்களுக்கே யிலக்காகின்றார். உடலுமுயிரு மிரண்டுபொருளென் றெவ்வொரு ஆஸ்தி கரும் ஒப்புவர் அதனை யொப்பாது ஒன்றெனக் கொள்வர் நாஸ்திகர். இவ ரதனைப் பிரிவரு மத்துவிதமாகுஞ் சிறப்பினதா யென்றுகூறினர். இதற்குவ மேயம் உரைகாரர் "கர்த்தாவையும் பிரபஞ்சத்தையுந் தன்னிற் பிரித்தறற் கரிதா யநந்நியமா யிருக்கிற சிறப்பினை யுடைத்தாகிய" என்கிறார். அத்து விதமென்னுஞ் சொல்லுக்குப்பொருள் ஒன்றுமல்லவா மிரண்டுமல்லவாம். பிரிவருமென்பதற்குப் பிரித்தற் கரிதென்கின்றார்; உடலுமுயிரும் பிரித்தற் கரிதோ? உடலுமுயிருந் தன்னி லொன்றுபட் டறியுமென்றுங் கூறுகின்று ரிதனு லிவர்க்குவந்த லாபமென்னை? உடலுமுயிரு மொன்றல்ல வென்பது நியாயமேயன்றி, யிரண்டு மல்லவென்று கூறுவதெப்படி நியாயமாகும்? இரண்டு மல்லாவிடின் மூன்று நான்கு முதலிய வெண்களி லொன்றைக் கூற லாமா? உவமான மிவ்வளவு இலக்கணத்தைக் கொண்டிருக்கும்போது உவமே யமு மப்படித்தானே யிருக்கும். உடலுமுயிருந் தன்னி லொன்றுபட்டறியு மறிவைப் பிரிக்கவொண்ணு தெனவும் வியாக்கியானத்தி லிருக்கிறது: அறிவு உயிரினதுகுணம், உடலினது குணமன்று; அறிவைப் பிரிக்கவொண்ணு

தென்பதி லெனைவிட்டு, உடலைவிட்டா? உயிரைவிட்டா? உடலைவிட்டுப் பிரிந்துபோவது கண்கூடன்ரு? உயிர்க்கறிவு குணமாதலின் பிரிந்துபோகா தென்பது சரியே.

நன்னூல் உரியியல்.

உணர்விய லாமுயி ரொன்று மொழித்த
உடல்முத லனைத்தும் உயிரல் பொருளே.

(இ-ள்.) அறிவுமயமாகிய சீவனென்றையு நீக்கியுள்ள உடம்புமுதலாகிய (உலகத்துப்) பொருள்க ளெல்லா முயிருடையன வல்லாத பொருள்களாம். எ-று.

ஒற்றுமை நயத்தி னொன்றெனத் தோற்றினும், வேற்றுமை நயத்தின் வேறே உடலுயிர். (இ-ள்.) ஒற்றுமைநயத்தின்=(உயிர்தானடைந்த உடம் பின்மயமாய்நிற்கிற) ஒருமைப்பாட்டின் தன்மையால், ஒன்றுஎன=(உடம் பும்உயிரும்) ஒன்றுபோல, தோன்றினும்=தோன்றினாலும், வேற்றுமைநயத் தின்=(உயிர் சித்தாகியும் உடம்பு அசித்தாகியும் நிற்கிற) வேறுபாட்டின் தன் மையால், உடல் உயிர்=உடலும் உயிரும், வேறே=வேருகும். என்றவாறு (சித்து) ஞானம், அறியுந்தன்மை யுள்ளது. (அசித்து) சடம், அறியுந்தன்மை யில்லாதது.

திருக்குறள், நிலையாமை.

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்பொ டுயிரிடை நட்பு.
உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.
புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினு
டுச்சி லிருந்த வுயிர்க்கு.

தேவாரம்.

நடலை வாழ்வுகொண் டென்செய்தீர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலி னர்விட முண்டவர் கைவிட்டால்
உடலி னர்க்கிடந் தூர்முனி பண்டமே.

ஐயினன் மிடாரடைப்புண் டாக்கைவிட்டு ஆவியார் போவதுமே அகத்தார் கூடி, மையினற் கண்ணெழுதி மாலை சூட்டி மயானத்தி லிடுவதன்முன் மதியஞ் சூடும், ஐயனர்க் காளாகி, என்றும்.

தந்தையார் போயினர் தாயரும் போயினர் தாமும்போவார், கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார் கொண்டுபோவார், எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியா வேழைநெஞ்சே, அந்தணு ரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்சனெஞ்சே.

செடிகொள்நோ யாக்கையைம் பாம்பின்வாய்த் தேரைவாய்ச் சிறுபறவை, கடிகொள்பூந் தேன்சுவைத் தின்புற லாமெனக் கருதினாயே, முடிகளால் வானவர் முன்பணிந் தன்பரா யேத்து முக்கண், அடிகளாரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்சனெஞ்சே.

நன்னெறி.

வருந்து முயிரொன்பான் வாயி லுடம்பிற்
பொருந்துத லானே புதுமை—இருந்திழாய்
சீதநீர் பொள்ளற் சிறுகுடத்து நில்லாது
வீதலோ நிற்றல் வியப்பு.

தாயுமானர்.

நீர்க்குமிழி பூணமைத்து நின்றாலு நில்லாமெய்
பார்க்கு மிடத்திதன்மேற் பற்றறுவ தெந்நாளோ.

எந்தவுட லேனு மெடுத்தவுட னல்லதென்று
சிந்தைசெய்ய வந்ததிறஞ் செப்பாய் பராபரமே.

இனி, கண்ணொளியில் சூரியனொளி வியாபித்த உபமானத்தையும் ஆராய்வாம். கண்ணொளியில் சூரியனொளி வியாபித்ததுபோலப் பசுபாசங்களில் பதி வியாபித்ததென்று சொல்லலாமே யென்னின், இவ்வுபமானமும் தோஷமாய் முடிகிறது. ஏனெனின் கண்ணுக்கு ஒளியுண்டென்று சொல்லுகின்றமையா னென்க. ஒளியில் ஒளிவியாபித்தலே யொவ்வாதாக ஒளியில்லாமையில் ஒளிவியாபித்த லெங்ஙனங்கூடும்? சூரியன் ஒளிப்பொருளென்பதற்குச் சூரியோதயமுதல் அஸ்தமிக்கிற வரையிலுள்ள நிலைமையே சாக்ஷிபகரும். கண் ஒளிப்பொரு ளல்லவென்பதற்குச் சாக்ஷி சூரியோதயம் சந்திரோதயம் தீப முதலியன இல்லாக்காலத்து ஒருபொருளுந் தெரியாமல் கண் இருளடைந்திருத்தலேயாம். இனிக்கண்ணுக் கொளியுண்டெனச் சாதிக்கவெழுந்து, சிவஞானசுவாமிகள் இந்தச் சிவஞானபோதம் 10-வது சூத்திரம் முதலதிகரணம் முதல்வெண்பாவுரையில் "மின்மினித்துணையாயினும் தானேவிளங்கும் இயல்பில்லாத கண்ணுக்கு ஒளிக்குண முண்டென்பதற்குப் பிரமாணமென்னையெனின், அறியாது சடாயினும், ஆகாயத்தின் கண்ணதாய சத்தகுணம் வியஞ்சகத்தானன்றித் தினைத்துணையானும் தானென விளங்குமாறின்மையின் அதுபற்றி யெதிரொலிவடிவாய வோசையை ஆகாயத்தின் குணமன்று, வியஞ்சகப்பொருளின் குணமென்பார் யாருமில்லை. அதுபோ

லக் கண்ணின் கண்ணதாகிய வொளியும் வியஞ்சகமுள்வழி விளங்கி, அல்லுழி விளங்காமை மாத்திரையே பிறிதில்லை யாகலின், அதனைக் கண்ணின்குணம் அன்றென்றல் அறிவிலார் கூற்றே யாமெனவும், அக்கண்ணொளியாவது தன்னை விளக்குதற்குரிய வியஞ்சகப்பொரு ளேகதேசமாயின் அனேகதேச மாய் விளங்கியும் நிற்பதோ ரியல்பிற்றெனவும், உணர்க." எனக்கூறிக் கண்ணுக்கு இயற்கையில் ஒளியுளதெனவும், உளதாயினும் துணையில்வழி விளங்காதெனவும், துணையில்வழி விளங்காமைபற்றிக் கண்ணுக்கு ஒளியின் றெனக்கூறுதல் அடாதெனவும், பேசி, கண்ணின்ஒளியை விளக்குதற்கு விளக்கொளி துணையாமென்றுவிளக்கினர்.

ஆகாயத்திற்குச் சத்தகுணம் இயற்கையென்பது நூற்பிரமாணம். இயற் கையேனும் வாயுமுதலிய துணையில்வழிச் சத்தகுணம் உண்டாதலில்லை, அங் ஙனம் கண்ணுக்கொளி இயற்கையாயுண் டென்பதற்குப் பிரமாணம் ஏது மில்லை, விளக்கு. சூரியன்முதலிய இயற்கை யொளிப்பொருள்க ளுள்வழிக் கண்ணுக் கொளியிருத்தலைக் காண்கின்றோம், அவையில்லாவழிக் காண்கி லேம், வாயுவாதித் துணையினால் ஆகாயத்தின்கண் சத்தகுணம் உண்டாம், அவையில்லாவிடத்துச் சத்தகுணங் காண்கிலேம், காண்கிலமேனும் ஆகாயத் திற்குச் சத்தகுண முண்டென்பது சுருதியாதி நூற்பிரமாண மாதலினானும், வாயுவின்கண் ஆகாயம் நிறைந்திருத்தலினானும் ஆகாயத்தின்காரியம் வாயு வாதலானும், கடத்திற்குப் பொருளாயிருப்பது எங்ஙனமண்ணோ அங்ஙனமே வாயுவாதிகளுக்குப் பொருளாயிருப்பது ஆகாயமாதலினானும், மண்ணைவிட் டுக் குடமிராததுபோல ஆகாயத்தைவிட்டு வாயுவிராமையானும், காரணத் தின்றன்மை காரியத்திற் குண்டென்னும் நியாயம்பற்றி நேரே காணப்படா விடினும் இருப்பதுகொண்டு ஆகாயத்தினிடஞ் சத்தமுண்டென் றனுமானிக்க இடமுண்டாதலானும் ஆகாயத்திற்குவாயு அபின்னமாகலினானும் ஆகாயம் சத்தகுணமுடையதென அங்கீகரிக்கின்றோம். அங்ஙனம் எவ்விதத்தினும் கண் ணுக்கும் விளக்குமுதலிய பொருட்கும் சம்பந்தமின்றே. இல்லாதபோது கண் ணுக்கொளியுண்டென் றெவ்வாறு அங்கீகரிக்கலாகும்.

முதலாவது:—கண்ணுக் கொளியுண்டென்பதற்குப் பிரமாணமில்லை.

இரண்டாவது:—சத்தத்தையுண்டாக்கத் துணையாயிருக்கும் வாயுவாதி களில் ஆகாயம் நிறைந்திருக்கின்றது. இவ்வாறு விளக்கொளியில் கண் ணொளி நிறைந்திருக்கிறதென்று கூறுதல்கூடாது. ஏனெனில் கண்ணுக்கு ஒளியில்லை; இருக்கிறதாகக் கொள்ளினும் ஒன்றிலொன்று நிறைந்திருக்கு மென்பது கூடாது.

மூன்றாவது:—வாயுவுக்குப் பொருளாயிருப்பது ஆகாயம்போல, விளக் கொளிக்குப் பொருளாயிருப்பது கண்ணன்று.

நான்காவது:—ஆகாயத்தைவிட்டு வாயுவில்லை. அன்றி, ஆகாயத்திற் கும்வாயுவுக்கும் அபேதம் அவ்வாறு விளக்கைவிட்டுக் கண்ணில்லாமற்போக வில்லை; அன்றி, விளக்குக்கும் கண்ணுக்கும் பேதம்.

ஐந்தாவது:—காரணத்தின் றன்மை காரியத்தில் இருக்கவேண்டும் என்கிற நியாயம்பற்றிக் காரியமான வாயுவின்கண் சத்தகுண மிருக்குங்கால் காரணமான ஆகாயத்தின்கண்ணுஞ் சத்தகுணமிருக்கவேண்டும். அதுபற்றி, ஆகாயஞ் சத்தகுணமெனக் கொண்டாம். அங்ஙனமே விளக்கினுக்குக் கண் காரணமன்று, ஆதலால், காரணத்தின் றன்மை காரியத்தி லிருக்கவேண்டுமென்று கூறுவதுபோலக் கண்ணினொளி விளக்கின்க ணுளதெனக் கூறவியையாது.

இனி, இயற்கையில் கண்ணுக்கொளியுண்டென்பது பிரத்தியக்ஷத்தாலோ? அனுமானத்தாலோ? பிரத்தியக்ஷமல்லவென்பதற்கு இருட்காலத்திற் கண் இருளடைந்திருப்பதே சாக்ஷியாம். விளக்கு சூரியன்முதலிய பொருள்களுள்ளபோது ஒளிசெய்கின்றதெனின் அக்காலத்துக் கண்மாத்திரமா? எப்பொருள்களுமே யொளிசெய்கின்றது. கண்: ஒளிசெய்யவில்லையெனயாம் கூறவந்தோமில்லை; அதற்கியற்கை யொளியுளதா? இலதாவென்பதுவே யிப்போதுநேர்ந்த ஆக்ஷேபம், கண்ணுக்கொளி இயற்கையா யுண்டென்னுங்கால் மின்மினி, விளக்கு, ஜோதிவிருக்ஷ, முதலியன இருட்காலத்தில் தாமே விளங்குதல்போல, கண்ணும் விளக்கமுறவேண்டும். அங்ஙனமின்மையின் பிரத்தியக்ஷமன்று, அனுமானமென்னின், அவ்வனுமானத்திற்குப் பிரத்தியக்ஷம்யாது? அந்தப்பிரத்தியக்ஷம் கண்ணுக்கு ஒளியில்லாக் காலத்திலன்றோ நிகழவேண்டும், ஒளியில்லாத இருட்காலத்தில் கண்ணுக்கொளியுண்டென் றனுமானித்ததற்கு எதும் பிரத்தியக்ஷமின்மையின் அநுமானமென்று கூறுதற்கு மிடனின்றாம்.

தாயுமானவர்பாடல்.

"பண்ணி னிசைபோலப் பரமன்பா னின்றஇற
னெண்ணி யருளாகி யிருக்குநா ளெந்நாளோ."

(கு—ரை.) பண்ணும்இசையும் பேதமன்று, அபேதமேயாம். அவ்வாறே கூடஸ்தபிரமம் பேதமன் றபேதமேயாம். என்பது, இச்செய்யுள். முத்தியிற்றுவிதஞ் சாதிக்கும் பூர்வபக்ஷிகளுக் கெங்ஙனமுரித்தாகும். பண்ணும் இசையு மபேதமெனப் பாமரரும் அங்கீகரிக்கத் தக்கதாயிருக்க அதைப் பேதமென் கின்றனரே? உபமானத்தையு முபமேயத்தையும் பொருத்தித் தமது மதசித்தாந்தத்தையுஞ் சற்றுயோசித்துப் பார்ப்பாராலு லங்ஙனங் கூறத்துணியார்கள். இனிப்பழத்திற் சுவையும் பேதமன் றபேதமாயாம்; அவ்வாறே கூடஸ்தப்பிரமமும் பேதமன் றபேதமேயாம். இவ்வா றன்றித் துவிதிகள் தங்கள்கொள்கைப்படி யுரைசெயப்புகின் பழத்தினின்றுஞ் சுவையை வேறுபிரித்தற் கொண்ணாது. எனெனிற், பழம்குணி, சுவைகுணங், குணியைவிட்டுக் குணம் வேறுபிரியாது. அங்ஙனமே பதியைவிட்டுப் பசுபாசங்கள் வேறுபிரியாம லபின்னமாகும். ஆகுமேல் பசுக்கள்செய்யு மஞ்ஞானகாரியமாகிய

தொழில்க ளெல்லாவற்றையும் பதிசெய்ததாகவும், பசுக்கள்படும் ஜனனமரண சமுசாரதுன்பங்களெல்லாம் பதி யனுபவித்த தாகவும்முடியும். அத்துன்பங்களை யொழித்துக்கொள்ளற் பொருட்டுப் பசுக்கள் பதியைவணங்களாம், பதி யாரைவணங்குவது ? பசுக்களுக்குக்குப்பதி மோக்ஷத்தைக்கொடுப்பார் ; பதிக்கு மோக்ஷங் கொடுப்பதெவர் ? குணகுணிகளி லொன்றுகொடுப்பது மொன்று பெறுவதுங்கூடுமோ ? பதியானகுணிக்குப் பசுபாசங்கள் குணமாகலின் பாசத்துக்குரிய சடத்தன்மை பதிக்கும் பசுவுக்கு முள்ளனவாகிச் சடமெனப்படும் ; படுமே லெதுசடமோ வது அசத்தென்ப திவர்மதத்திற்கு முடன்பாடனமையின் பதிபசுபாசமசத்தாம். அசத்தென்பதின்பொரு ளில்லதெனும் பொய்யானமையி னிவர்மதப்படி கடவுளுஞ் சீவர்களு முலகமும் பொய்யாகு மகனுலிம்மதஸ்தர் பரமநாஸ்திகரும் முழுச்சூனிய வாதிகளுமாமென்க. பாசத்தைமாத்திரஞ் சடமாகவும், பதியையும் பசுவையுஞ் சித்தாகவுஞ் சொல்லலாமேயெனில் மேர்படி யுபமானப்படி மூன்றும் அபின்னமாதலிற் கூடாவென்க.

"கருமருவு குகையன காயத்தினடுவுட் களிம்புதோய் செம்பனையயான் காரிட்ட ஆணவக் கருவறையி லறிவற்றகண்ணிலாக் குழவியைப்போற் கட்டுண்டிருந்த வெமை." என்னுமிவற்றுள் கூறியவை சீவனுகும். இதனைக்கைவல்யத்திலும்; "நானிகர் தனக்கா மீசன் றனையுந்தங் களைத்தாங் கண்ட, ஞானிகடமையு மன்றி நாஸ்திக பாதி யென்னும், ஊனிடை யுயிர்க ளுள்ளத் துணர் விழிக் குருடாம் வண்ணம், வானிலங் திசைகண் மூடு மழைநிசி யிருள்போன் மூடும்." என்றுதான் கூறுகின்றன. "அருளுடைப் பரமென்றே வன்று தானே யானுளனென்றும். எனக்கே யாணவாதி பெருகுவினைக் கட்டென்றும்." "என்றுளை நீ யன்றுளம்யாம்." என்றும் கூறுவதின்கருத்து:— மாயா சம்பந்தமான ஈசனென்றுண்டோ அன்றே யவித்தியா சம்பந்தமான சீவனுண்டு அந்தச்சீவனுக் கஞ்ஞானபந்த முண்டாதலால் சீவனநாதியாம் என்பது. இதுபோற் கைவல்யத்திலும்: "அதுதானெப் படியென்றக்கா லநாதியாஞ் சீவரெல்லா." மென்றன.

செங்கதிரின் முன்மதியந் தேசடங்கி நின்றிடல்போல்
அங்கணனர் தாளி லடங்குநா ளெந்நாளோ. என்றன.

இது கைலாயமாதிகளி லிருக்குஞ் சகுணப் பரமசிவன் திருவடியில் சீவனடங்கியிருக்கு நிலைமை. சர்வஞ்ஞத்துவாதி குணங்களுள்ள பரமசிவ சந்நிதானத்திற் கிஞ்சிஞ்ஞத்வாதி குணமுள்ள சீவனிருத்தற்குச் சூரியன்முன் மதியம்போலச் சொல்லாமல் வேறென்ன சொல்லுவார் ? இதனுலிது பதவி முத்தி யாயிற்று. தாயுமானவர் பதவிமுத்தியை விரும்புவரோ? வென்னின். சரியை, கிரியை, யோகங்களைக்கடந்த ஞானியான தாயுமானவர் ; "எல்லா முதவு முனையொன்றிற் பாவனை யேனுஞ்செய்து, புல்லாயினுமொரு பச்சிலையாயினும் போட்டிறைஞ்சி னில்லேன்." எனக் கிரியையில் விருப்புற்றவர்போ

லப் பேசுவானேன்? இவர்ஞானவா னென்பதற்கு: "என்னைத் தானாக்கிக் கொண்ட." "நீயேநான்." "யான்றனிரண்டற்றது." "வேதாகமத்துணி பிரண்டல்ல வொன்று என்னவே." இதுமுதலிய வாக்கியங்களே சான்றுபகரும். அங்ஙனமின்றி யதுவே யதார்த்தமுத்தி யென்னும்பக்ஷத்தில்; சூரியன், சந்திர னிரண்டுங் கண்டமா யபரிபூரணப் பொருளாகின்றன; அங்ஙனமே தூரியசிவனும் உயிருங் கண்ட வபரிபூரணப் பொருளாகின்றனவே? உயிர்கண்டப் பொரு ளென்பது சுருதிசம்மத மாகலின் அது குற்றமின்மையேனும் சிவமும் கண்டப்பொருளெனச் சொல்லத் துணிவதெங்ஙனம்? இது சுருதிவிரோதமுமாமே. ஆதலால், அதைப் பதவிமுத்தியில்வைத்துச் சொல்வதே சுருதி, யுக்திஅநுபவ சம்மதமாம். பதவிமுத்தியில் ஜீவேசபேத மொப்புவதில், அத்வைதிகட்கு யாதொரு விரோதமுமில்லை யென்றறிக.

தாயுமானர்.

வானூ டடங்கும் வளிபோல இன்புருவாங்
கோனூ டடங்குங் குறிப்பறிவ தெந்நாளோ.

ஆகாயத்தில் வாயுவடங்கிய வுபமானத்தினாலே சிவன்சத்தும், ஜீவன் சத்துப்போலியுமாமென்க.

திருமந்திரம்.

மண்ணொன்று தான்பல நற்கல மாயிடு
முண்ணின்ற யோனிக ளெல்லா பொருவனே
கண்ணொன்று தான்பல காணுந் தனைக்காணு
வண்ணலு மவ்வண்ண மாகிநின் றானே.

இதுவுமது

தானே படைத்திடுந் தானே காத்திடுந்
தானே துடைத்திடுந் தானே மறைத்திடுந்
தானே யிவைசெய்து தான்முத்தி தந்திடுந்
தானே வியாபித் தலைவனு மாமே.

இதுவுமது.

ஒன்றது வாலே யுலப்பிலி தானாகி
நின்றது தான்போ லுயிர்க்குயி ராய்நிலை
துன்றி யவையல்ல வாகுந் துணையென்ன
நின்றது தான்விளை யாட்டென்னு நேயமே.

இதுவுமது.

கடங்கடந் தோறுங் கதிரவன் மேருன்றி
லடங்கிட மூடி லவற்றி லடங்கான்
விடங்கொண்ட கண்டனு மேவிய காயத்
தடங்கிட நின்றது மப்பரி சாமே.

இதுவுமது.

தானே விரிசுடர் மூன்றுமொன் ருய்நிற்குந்
தானே யயன்மா லெனநின்று தாபிக்குந்
தானே யுடலுயிர் வேறன்றி நின்றுளன்
தானே வெளியொளி தானிருட் டாமே.

இருவினையிற் போக்குவரவுபுரிதற்கு—உதாரணம்.

பட்டணத்துப்பிள்ளையார்.

ஊட்டுவிப் பானு முறக்குவிப் பானுமிங் கொன்ருெடொன்றை
மூட்டுவிப் பானு முயங்குவிப் பானு முயன்றவினை
காட்டுவிப் பானு மிருவினைப் பாசக் கயிற்றின்வழி
யாட்டுவிப் பானு மொருவனுண் டேதில்லை யம்பலத்தே.

திருமந்திரம்.

தானவ னாகிய தற்பரந் தாங்கிஞே
னனவை மாற்றிப் பரமத் தடைந்திடு
மேனே யுயிர்வினைக் கெய்து மிடஞ்சென்றும்
வானு நிலனும் புகுந்தும் வருந்துமே.

இதுவுமது.

எல்லாந்தன் னுட்புக யாவுளுந் தானுகி
நல்லாந் துரியம் புரிந்தக்கா னல்லுயிர்
பொல்லாத வாறுறட் போகாது போதமாய்ச்
செல்லாச் சிவகதி சென்றெய்து மன்றே.

ஆணையினீக்கமின்றி நிற்குமென்பதற்கு. உ—ம்.

தேவிகாலோத்திரம்.

ஆனநிலை யாவுடைய பூதங்க ளனைத்துநான்
வினையவை யாவையுள வெவைவுநான் றாலநுண்மை

ஆனவியா வையுமல்லே னென்னையறிபி னறிவோர்க்கு
ஞானமொன்று மென்னுருவ நானேயெவ் வுயிர்க்குறவும்.

இதுவுமது.

இல்லாத விடமில்லையா னெமக்குமல மியாதுமில்லை
எல்லாருந் தொழுமீச னெனக்கவத்தை யெவையுமில்லை
வில்லாரும் புருவத்து வேலாரும் விழியாய்கேள்
நில்லாத வுலகத்தை மிகநீங்கி நிற்பேனுன்.

தாயுமானுர்.

அகாவுயி ரெழுத்தனைத்து மாகி வேறு யமர்ந்தெனெ வகிலாண்ட மனைத்து மாகிப், பகர்வனவெல் லாமாகி யல்ல வாகிப் பரமாகிச் சொல்லரிய பான்மை யாகித், துகளறுசங் கற்பவிகற் பங்க ளெல்லாந் தோயாத வறிவாகிச் சுத்த மாகி, நிகரில்பசு பதியான பொருளை நாடி நெட்டுயிர்த்துப் பேரன்பா னினைதல் செய்வாம்.

விவேகசூடாமணி.

சகமிது மெய்யாமாகிற் சத்தியப் பிரமத்திற்குப்
புகல்பரி பூரணத்வம் போயிடும் வேதத்திற்கு
மிகவுமப் பிரமாணத்வ மேவிடும் பரசிவற்கு
மிகலசத் தியவாதித்வ மெய்திடு மிவைநன்றன்றே.

வேதாந்தசூடாமணி.

ஓர்வடி வாகிக் குளிர்முதன் மாற்று முண்மையாஞ் சித்திரப் படம்போன், ஞர்வம தொருங்கே அகற்றிடற் கிசைந்திங் கணிபெற நிற்பதோர் பிரமம், ஏர்பெற வரைந்த சித்திரமென்ன விருக்குமப் பாத்திலிவ் வுலகந், தேர்வுறிற் றன்னைத் திரிபறவெங்குந் திகழுமிந் நிலையது பின்னும்.

பட்டணத்துப்பிள்ளையார் திருக்கழுமல மும்மணிக்கோவை.

“எந்தைநின், திருவளர் நாட்டங் கருணையிற் பெறலும்
யாவையு மெனக்குப் பொய்யெனத் தோன்றி
மேவரு நீயே மெய்யெனத் தோன்றினை
ஓவியப் புலவன் சாயல்பெற வெழுதிய
சிற்ப விகற்ப மெல்லா மொன்றிற்

றவிராது தடவினர் தமக்குச்
சுவராய்த் தோன்றுந் துணிவுபோன் றனவே.''

பைங்களோபநிஷத் க-வது அத்தியாயம்.

"அவனிடத்தி லடங்கியிருந்த, சகலசகத்தையும், பிராணிகளுடைய, கருமவசத்தினாலே, சுருட்டியிருக்கிற சித்திரமெழுதிய துணியை விரித்தாற் போலத் தோற்றச்செய்தான். பிராணிகளுடைய, கருமக்ஷயத்தினால் மறுபடி மறைத்துப்போடுகிறான். அவனிடத்திலேயே சகலமான பிரபஞ்சமும் சித்திரமெழுதிய துணியைச் சுருட்டியதுபோ லடங்கியிருக்கின்றன."

சாமவேதத்தில் மைத்திராயண்ணியுபநிஷத் ச-வது பிரபாடகம்.

"இந்திரஜாலம்போல் மாயாசுவரூபமாயும் சொப்பனம்போல் பொய்த் தோற்றமாயும் கதலீகருப்பம்போல் சாரமற்றதாயும் வேஷக் காரனைப்போலப் பலபல வேஷமெடுக்கிறதாயும் சுவரிலெழுதிய சித்திரம்போல் பொய்யான மனோக்கியமாயு மிருக்கிறது" இவ்வுலகத்தோற்றமென்க.

பாகவதம்.

சேலமாய்ச் சேலத்துற்ற சித்திரம் பலவா மாபோல்
ஞாலமே முதலவாகி நவையறு முயிர்க ளாகிக்
காலமாய்க் கருவியாகிக் காரண மாகி யொன்றாய்
மூலமா யழிவொன்றின்றி முதன்மையாம் பிரமம் வைகும். என்றும்.

இங்ஙனம் சுருதிகூறுகின்றபடியால் மேற்காட்டிய பிரமாணப்படியே சித்திரபடதிருட்டாந்தத்தை வித்தியாரண்ணிய சுவாமிகளும் பிறரும் கூறினாரென்பது பசுமரத்தாணியா மென்க.

ஔவைக்குறள்.

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன். என்றும்.

இச்சூத்திர உதாரண வெண்பாவில்

"அக்கரங்க ளின்றாம் அகரவுயி ரின்றேல் இக்கிரமத் தென்னு மிருக்கு" என்றிருக்கிறது. இதனுரையாவது, அகரவுயி ரில்லையாயின் அக்கரங்களில்லை யென்று வேதம் ஓதும் என்பதாம். அகரமில்லாவிடில் மற்ற எழுத்துக்களில்லை அதுபோலப் பிரமமில்லாவிடில் மற்றப்பொருள் அதாவது சகத்தாகியபொருள் இல்லை. இதனால் பிரமத்துக்கும் பிரபஞ்சத்துக்கும் அபேதஞ் சித்தித்தது யாங்ஙனமெனின், அகரத்துக்கும் மற்றஎழுத்துகளுக்கும் எப்படி அபேதஞ்சித்தித்ததோ அப்படியே பிரமத்துக்கும் சேதனாசேதன உலகுக்கும் அபேதஞ் சித்தித்ததென்க. "அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு." என்னார் திருக்குறளின் பொருளும் இதுவேயாமென்க.

மெய்கண்டதேவர் எந்தச்சூத்திரத்திற்கு ஷிவெண்பா கூறினாரோ அந்தச் சூத்திரமும் "அவையேதானேயாய்" என அபேதமேசாதிக்கின்றது. மண்ணனது கடாதிகளாயும் அல்லவாயும் எப்படி அபேதமாயிருக்கின்றதோ அப்படியே பிரமமும் சடாசடப் பிரபஞ்சமாயும் அல்லவாயுமிருக்கின்றது. இந்தப்பிரகாரமே, சுருதி, ஸ்மிருதி, புராணம், இதிகாசங்களும் முறையிடுகின்றன. அன்றியும், மண்கடம், கயிற்றரவு, இப்பிவெள்ளி, கானல்நீர், மனம்சொப்பனவுலகு முதலிய திருட்டாந்தங்களைக்கூறி வலியுறுத்துகின்றன. இங்ஙனங்கொண்டால் சுருதி, யுக்தி, அநுபவங்கட்கும் பொருத்தமாகின்றது. இதற்கு மாறாகப்பேசும் இவரது துவைத சித்தாந்தத்திற்குச் சுருதியுமில்லை, யுக்தியுமில்லை, அநுபவமுமில்லையென்க.

இரண்டாஞ்சூத்திரம் முற்றிற்று.

மூன்றாஞ் சூத்திரம்.

அவதாரிகை.

தேகேந்திரிய அந்தக்கரணங்களினும் வேறாய் ஆத்மாவொன்றுண்டென்பதைப்பற்றித் தோன்றுமாசங்கையை நிவிர்த்திக்கும்பொருட்டு ஆத்மாநாத்ம இலக்கண மினையதென அஷ்டவிதப் பிரமாணங்களினாலும் இச்சூத்திரமுணர்த்துகின்றது.

மூன்றாஞ் சூத்திரம்.

உளதில தென்றலி னெனதுட லென்றலி
னைம்புல னொடுக்க மறிதலிற் கண்படி
லுண் டிவினை யின்மையி னுணர்த்த வுணர்தலின்
மாயா வியந்திர தனுவினு ளான்மா.

(இ—ள்.) மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா உளது=மாயாகாரியமாகிய இத்தேகத்தினுள் தேகியாகியஒருவன் இருக்கின்றான்என்று ஆசிரியர் கூற (மாணாக்கனையனே யித்தூலதேகத்தையன்றித் தேகிவேறுளனோ? இஃதென்னவியப்பு இருந்தாற்காணோனா, இல்லையாதலிற்காணேனென) இலது என்றலின் ஆன்மா உளது=(ஆன்மாதன்னைமறந்து தனதுமேலாய துரியநிலையை அறியாதிருப்பதே அஞ்ஞானம், ஒருவர் ஆன்மவிலக்கண மினையதெனக் கூறுமிடத்து, அஃதில்லையென்றும், அந்தப்பிரத்தியகாத்மா உண்டெனிற், றானென்றுதாவென் றெய்து நாஸ்திகபாதியென்னு மிரண்டு முற்கூறிய அஞ்ஞானகாரிய வாவரணமெனப்படும்) அந்தத்தன்னிழப்பைத் தன்னிடத்தி லேகதேசமாகக்கண்டு கூறுதலின் ஆன்மாவுளது, எனதுடல் என்ற

வின் ஐம்புலன்அறிதலின் ஆன்மாஉளது=சாக்கிரத்திற் றூலதேகத்தை 'என தென்றலினும், ஐம்பொறிகளாலும் ஐந்துவிஷயங்களை அறிதலினும், ஆன்மாவுளது, ஐம்புலனொடுக்கம் அறிதலின் ஆன்மாஉளது=அச்சாக்கிர மொடுங்கிய சொப்பனத்தை அறிதலின் ஆன்மாவுளது, கண்படில் உண்டி வினை இன்மையின் ஆன்மாஉளது = அச்சொப்பன மொடுங்கிய சுழுத்தியி லுணவுந்தொழிலு மில்லாதிருத்தலிற் பிராணனு மாத்மாவன்று அதற்குவே றாகச் சுகமாய் நித்திரைசெய்தே னென்றுமறியேனெனு மனுபவத்தானு மாத்மாவுளது, உணர்த்த உணர்தலின் ஆன்மாஉளது = ஆசிரியருணர்த்தியவண்ணம் சென்று தன்சிவவடிவத்தை யறிதலினான்மாவுளது. எ=று.

(ப=ம்.) விடயகதப் பிரத்தியட்சம், காட்சிப்பொருள், கருத்துப்பொருள்களை, விஸ்மரணையாகக் காண்டலும், ஞானகதப் பிரத்தியட்சம் தஸ்மரணையாகக் காண்டலுமாமென்பார், உணர்த்தவுணர்தலி னான்மாவுளதென்றும்.

அனுமானப்பிரமாணம்:—பிரதிஞ்ஞை, எது, திருஷ்டாந்தமென மூன்றவயவமுடையதாம். அவற்றுள், உபமானம், இம்மலைஅக்கினி யுடைத்தென்றாற்போல, உபமேய மிவ்வுடலம் அறிவாகிய சத்துடைத்தென்பது பிரதிஞ்ஞையென்றும். உபமானம் புகையிருப்பதினா லென்றாற்போல, உபமேயம் ஞெப்திப்பிரிய மிருப்பதினாலென் றறிதல் எதுவென்றும்.

உபமானம் ஐயமுறுமே லதனைத்தணித்தற்குப் பாகசாலை யென்றாற்போல, உபமேய முயிர்களைக்காட்டுதல் திருஷ்டாந்தமுமென்பார். மாயாவியந்திரதநுவினு ளான்மாவுளதென்றும்.

ஞானத்தை யுணர்த்துவதாகிய விந்நூற் பிரபலசுருதி யென்பார்: ஆகமப் பிரமாணமென்றும்.

உடல் பாரித்திருப்பதினால் நித்திய வுபவாசியெனல் பொய்ப்படுமாறுபோன்று: உலகம் பிரியமயமா யிருத்தலின்; நாஸ்தி நபாதியெனல் பொய்ப் படுதற்குரியது திருஷ்டாருத்தா பத்தியென்பார்; இலதென்றலின் எனதுடலென்றலின் ஐம்புலனறிதலி னான்மாவுளதென்றும்.

தன்னாற் றேடப்புகுந்தபுருட னகத்தின்க ணின்றேனும், புறத்திலிருப்பனென் றெண்ணுமாறுபோன்று; தன்னாற்றேடப்புகுந்த பரவஸ்து விருத்திபேதத்தினாற் றன்பாற் காணப்படுத லின்றேனும், விருத்தி நிக்கிரகத்தாற் காணப்படுத லுண்மையாதலின், கேள்வியருத்தா பத்தியென்பார், ஐம்புலனொடுக்க மறிதலிற் கண்படி லுண்டிவினையின்மையி னான்மா வுளதென்றும்.

அலைதாடியின்றி யேனைய அவயவங்களோடு விளங்கும் பசுவொன்றுளதேல்; அதனையொக்கும் மரையென்னு மிருகமென்றாற்போல, அிர்தாதி குறியின்றிய ஆகாய மொன்றுளதே லதனையொக்குஞ் சிதாகாயமெனல், உபமானப் பிரமாணமென்றும். பசுவைப்போல், மரையைவிளக்கல் திருட்டவுபமானமெனவும். புருடனைப்போல சாயாபுருடனைவிளக்கல் அதிருட்டவுபமானமெனவுங் கூறுப.

அபாவத்தையும், சம்பவத்தையும், ஐதிகத்தையும் உணர்வினதாகக் கூறியதால் : கடம், நூறு, இயக்கன் என்பவை திருஷ்டாந்தம் இம்மூன்றிடத்தும் அறிவெனல் தாஷ்டாந்தம்.

மண்ணையன்றிக் கடமெனல் நான்குகாலத்து மின்றாதல்போல, அறிவையன்றிச் சகத்தெனல் நான்குகாலத்து மின்றாதலின் ; இந்நிலனிற்கடமில்லை யென்பதனாற்றோன்று மின்மையுணர்வு அபாவமாமென்றும்.

ஆயிரமென்னுந்தொகையி லொருநூறென லெங்ஙனமுண்மையோ, அதுபோலச், சராசர பற்பலபேதப் பல்லாயிரங்கோடி யுயிர்த்தொகையினு ளோருயிராகிய வுணர்விருத்தலின், "ஆயிரமாகிய வெண்டன்னி லொரு நூறாகிய ஞானந்தான் சம்பவமா" மெனவும். நூறெண்ணு மெண்ணிக்கைத் தொகையன்றி யாயிரமென்னும், பிண்டத்தொகை யின்றாதல்போல, ஒவ்வோருயிரெனல் சொல்லும், அறிவெனல் பொருளுமா நிற்றலினானும், இங்ஙனமோ ருயிரைச் சோதிக்குங்கால், முடிவில் சிற்பிரகாசமா விளங்குதலினானும், இவ்வாறொருவன் றன்னைத்தான் காணில், சமஸ்தமு மிவனுக்குச் சிற்பிரகாசமாய் விளங்குதலினானும், நூறெனலைப் பிண்டித்த பொருளெனவும், ஆயிரமெனலைப் பிண்டப்பொருளெனவு முவமானித்ததென்க.

இம்மரத்தின்கண் பேயாகிய யட்சனுளனெனச் சொன்மாத்திரமா வழங்குமாறு போன்று, நானென்னு மகந்தை யெவ்வுயிர்பாலுஞ் சொன்மாத்திரமா வழங்கலின், "இம்மரத்தி னியக்கனுளனென்னுஞ் சொன்னிகழ்வில் வருமியக்க விடயவுணர்வதனைச் சொற்றிடுவ ரறிஞரைதிகமாக" என்றார்.

மேற் பிரத்தியட்சப்பிரமாண மாவது ஞானகதப்பிரத்தியட்சமெனவும் விஷயகதப்பிரத்தியட்சமெனவு மிரண்டாம். அவற்றுள், ஞானகதப்பிரத்தியட்சத்தை நிருவிகற்பப் பிரத்தியட்சமெனவும், விஷயகதப் பிரத்தியட்சத்தைச் சவ்விகற்பப் பிரத்தியட்சமெனவுங் கூறுவாருமுளர். இவற்றுள், ஞானகதப் பிரத்தியட்சமாவது, அபரோட்சஞானமாம், விஷயகதப் பிரத்தியட்சமாவது, விஷயகதப் பிரத்தியட்சமெனவும், இந்திரியப் பிரத்தியட்சமெனவும், மானதப் பிரத்தியட்சமெனவும், வேதனைப் பிரத்தியட்சமெனவும், யோகப் பிரத்தியட்சமெனவு, மைந்தாம். இவற்றுள் வேதாந்தமுடியினுள்ள மகாவாக்கியபடி, பரமாத்ம ஐக்கியமான அத்துவிதவேதாந்திகட்கு, ஞானகதப் பிரத்தியட்சமொன்றுமேயாம். ஏனையவுலகாயுதன்முதற் பாட்டவேதாந்தியீறானசமயவாதிகட் கைத்துவிதமான விஷயகதப் பிரத்தியட்சங்களில், அவரவர்க்குத் தகுந்தவைகளேயாம். இன்னும், பிரத்தியட்சப் பிரமாணமாவது மூன்றுவிதமாயிருக்கும். அவையாவன :— விபரீதப் பிரத்தியட்சமெனவும், சந்தேகப் பிரத்தியட்சமெனவும், யதார்த்தப் பிரத்தியட்சமெனவுமாம். இவற்றுள் உஷக்காலாந்தகார விமோசனபூர்வங் கண்ணிருந்துங் கட்டையைக் கள்வனாகக்கண்டு பயகம்பனாதிகளை யடைவதுபோல, அஞ்ஞானாந்தகார விமோ

சனபூர்வம் சித்திருந்தும், சச்சிதானந்தஸ்வரூபமான பிரமத்தை யநிர்தசடதுக் கரூபமான சகத்தாகக்காண்பதே, விபரீதப் பிரத்தியட்சமும், அருணோதய பூர்வம் நாம்கண்டது கள்வனாகவிருந்தாற் சரிக்கவேண்டுமே; அங்ஙனஞ்சரி யாமையினாற் கட்டையோ, கள்ளனோவென் றையுறுதல்போல, அஞ்ஞான விமோசன விவேகபூருவ மியாங்கண்டது, சகத்தாகவிருந்தாற் பிரியமன்றி யிற் றோற்றவேண்டுமே; அங்ஙனந்தோற் றாமையாற் சச்சிதானந்தமோ, சகத் தோவென் றையுறுதல், சந்தேகப்பிரத்தியட்சமும், சூரியஉதயகாலத்தி லுண் டாகிய பிரகாசத்தால் யாங்கண்டது நிச்சலமா யசைவற்றிருத்தலிற், கள்வ னன்று, கட்டையேயென் றறிந் தானந்திப்பதுபோல, ஞானோதயகாலத்திற், யாங்கண்டது தற்பிரியமாகத் தோற்றியிருத்தலின், அநிர்தசடதுக்கரூபமான சகத்தல்ல, இருப்பது சச்சிதானந்த ஸ்வரூபமாகிய சித்தே, யெனக்காண்பது யதார்த்தப் பிரத்தியட்சமுமாம்.

வினா:—இங்ஙனம் ஸ்வரூபப்பிரத்தியட்சமான அனுபவமுண்டானால், மேல் அனுமானப்பிரமாண மியாதுக்கு?

விடை:—பூர்வஞ்செய்த நிட்காமபுண்ணிய பரிபாகத்தினா, லிவ்வனுப வங்கிடைப்பது, அதிதீவரபக்குவர்க்கேயன்றி, யேனையோர்க்கின்மையின் அவர்களைமுன்னிட் டக்காரணமான சித்தை காரியமான திரிஸ்யத்தினால், வெளிப்படுத்திப் பிரத்தியட்சமாகக் காண்பிக்குநிமித்தம், இப்பிரமாணமும் வேண்டிற்றென்க.

வினா:— அஃதெங்ஙனம்.

விடை:— அவ்வனுமானப்பிரமாணமும் ஐந்துவிதமாயிருக்கும். அவையா வன:—பிரதிஞ்ஞை, ஏது, திட்டாந்தம், உபநயம், நிகமனம்என்பனவாம். இவற் றுள்: பிரதிக்ஞை: பிரதிஞ்ஞை, ஸூப்பிரதிஞ்ஞை, விப்பிரதிஞ்ஞைஎன மூவ கையாம்; ஏது:— இயல்பேது, காரியவேது. அனுபலத்தியேதுஎன மூவகை யாம்; திட்டாந்தம்;— அன்னுவயம், வியதிரேகமென இருவகையாம். உபநயம், நிகமனம் இவற்றிலடங்கியிருக்கின்றன. இவ்வைந்தங்களையுடைய அனுமா னம் பூருவப்பிரத்தியட்சானுமானமெனவும், அனுமானானுமானமெனவும், ஆகமானுமானமெனவும் மூன்றாம், முற்கூறியவற்றுள் இப்பருப்பதத்தில் வேயாதிவிருட்சங்களும், காந்தமாதியகற்களு மிருப்பதனால், அத்தருக்க ளொன்றோ டொன்றிழைந்து அவற்றுள், வியாபித்திருந்த அக்கினியும், கதி ரினுஷ்ணங் காந்தக்கல்லிற்றாக்க. அவற்றுள், வியாபித்திருந்த அக்கினியும் வெளிப்படுதலின் இம்மலையின்கண், அக்கினியுண்டென நிச்சயிப்பதுபோல, இச்சகத்தின்கணுள்ள, சராசரவுயிர்க ளொவ்வொருபோகங்களை யனுபவிக்கு மிடத்தவற்றுள், வியாபித்திருந்த தற்பிரீதிவெளிப்படுதலின். இவ்வுயிர்களிடத் திற், பிரமசித்துண்டென, நிச்சயிப்பதே பிரதிஞ்ஞையெனவும், அத்தருவின்க ணுள்ள அக்கினிவெளிப்படுதற்கு அதன்காரியமானபுகை முன்வெளிப்படுதல் போல, இவ்வுயிர்களிடத்துள்ள ஆன்மப்பிரியம் வெளிப்படுதற்கு, அதன்காரிய

மான விடயானந்தம் வெளிப்படுதலி, னிஃதே யேதுவெனவும், சலமாதியவ
ற்றிலுள்ள தூமம்போலன்றிப் பாகசாலையின்கணுள்ள தூமத்தால் அக்கினி
யைப் பிரத்தியட்சமாகக் காண்பதுபோலக் காலவரம்பைக்காட்டுங் கடியார
மாதியவற்றின் சித்துப்போலன்றி, அஃதின்னவிதமாகச்செய்யி னின்னவித
மாகக் காலவரம்பைக் காண்பிக்குமென்றறிந்து, அதுசெய்யுஞ் சத்தியைக்
கொண்டு, அச்சத்தனையறிவதுபோல, இச்சகத்துற்பத்திலய மிவ்விதமாய்ச்
செய்யி னிவ்விதமாய் நடந்துவருமென்றறிந்து, செய்யுஞ்சிற்சத்தியைக்கொ
ண்டு, அதனுதாரமான சுயஞ்சித்தைப், பிரத்தியட்சமாகக் காண்பதே, திட்
டாந்த மெனவுமாம் :

வினு:—இங்ஙனம் இவ்விரண்டு பிரமாணங்களினல் ஞானகதப்பிரத்தி
யட்சமானல், மேல் ஆகமப்பிரமாணமியாதுக்கு?

விடை:—இவ்வனுபவத்தை யடைவோர்கள் அதையடைந்த ஆப்தர்கள்
வசனத்தை, முக்கியமாகச் கொள்ளவேண்டு மாகலின், இப்பிரமாணமும்
வேண்டிற்றென்க.

வினு:—அஃதெங்ஙனம்?

விடை:—இவ்வாகமமுஞ் சாத்திரம், அசாத்திரமெனவிரண்டாம்; இன்
னுமிவையே தந்திரகலை, மந்திரகலை, உபதேசகலையெனமூன்றுமாம். இன்
னும்அற்பசுருதி, பிரபலசுருதியென இரண்டுசுருதிகளுமாம். அவற்றுள் கான
லாற்றின்கரையிற், கனியிருக்கின்றதென்னும், அநாப்தன்வசனத்தைக் கேட்
டுச்செல்வதுபோல, தேவர்முதற் ரூவரமீறுவுள்ள, வுலகங்களிற், சொர்க்
காதி விடயானந்தங்க ளிருக்கின்றனவென்னும், பாமரர்வசனத்தை நம்பச்சொல்
வது, அசாத்திரமெனவும், கங்கையாதி நதிதீரங்களில், முக்கனிமுதலியவைக
ளிருக்கின்றனவென்னும், ஆப்தன்வசனத்தைக் கேட்டுச்சென் றவற்றைய
டைவதுபோல, மனுடாநந்தமுத விரணியகருப்பாநந்தமீறான 11-வகை ஆநந்
தங்களும், விளங்குதற்குஸ்தானமான, நிரதிசயாநந்த மிருக்கின்றதென்ற,
ஆப்தன்வசனத்தைக்கேட்டு அவ்வழிச்சென் றச்சுயஞ்சித்தைப், பிரத்தியட்ச
மாகக் காணச்சொல்வதே சாத்திரமெனவுமாம்.

வினு:—இம்மூன்றுபிரமாணத்தா லச்சுயஞ்சைதன்னியம் பிரத்தியட்ச
மானல் மேலுவமானப் பிரமாணமியாதுக்கு?

விடை:—இவ்வனுபவம் அறிவினிடத்துக்கண்டு அதீதமாக வேண்டுதலால்
இப்பிரமாணமும் வேண்டிற்றென்க.

வினு:—அஃதெங்ஙனம்? விடை:—அதிட்டம், திட்டமெனவிரண்டாம்.
அவற்றுள் புருடனைப்போலச் சாயாபுருட னிருப்பானெனக்காணுதலின்,
சுத்தாவத்தையிற்றோன்றும் அனுபவம், ஆநந்தாதீதமா யிருக்குமென்பது,
அதிட்டமும், பசுவைப்போல, மரை யலைதாடியின்றி யிருக்குமென்றபடி,
யதைத்தேடிக் கண்டவிடத்தஃதாய், அதில்அதீதப்பட்டு நிற்றல்போலச், சமா

தியின்கண், தத்தரிசனமான ஆத்மாநந்தத்தைப்போலச், சிவாநந்தம் போத மின்றி யிருக்குமென்றபடி, சிந்தித்தவிடத் துதயமானபோது, அவ்விரண்டு மின்றி யதீதானுபவம், பிரத்தியட்சமாய்க்காண்பது திட்டமுமாம்.

வினு:-இந்நான்கு பிரமாணத்தாற், சுவானுபவம் பிரத்தியட்சமாயிருக்க, மேல் அருத்தாபத்தி யாதுக்கு?

விடை:—அவ்வனுபவி யெவ்விதமா யிருக்கினும், அவ்வானந்தா தீதமா கவே யிருப்பனென் றறிதற்காகவென்க.

வினு:—அஃதெங்ஙனம்? விடை:—அவ்வருத்தாபத்தி, சிரவணம், திட்ட மெனவிரண்டாம். அவற்றுள், சீவிதமானபுருடன் வீட்டின்கண் இல்லையென் முல், மற்றோரிடத் திருப்பானென் றறிவதுபோல, அவ்வறிவினிடத் ததீதா னுபவ மில்லையென்முல், ஆனந்தத்தி லிருக்குமென்பது, சிரவணருத்தா பத்தி யெனவும். பகலிலுண்ணுத புருடன்றேகம், பருத்திருப்பதைப்பார்த்து, இர விற் காவிலொளித்துண்பானெனக் காண்பதுபோல, புறம்பினுள்ள விடங்க ளைக்கூடி, யாநந்தியாதவன் முகத்திற், பிரமதேஜஸ் ஜொலிக்கின்றதைப் பார்த்து, அகத்திற் பிரமாநந்தத்தைப் பிரத்தியட்சமா யடைந்திருக்கிறனெ னக் காண்பது, திருட்டாருத்தா பத்தியெனவுமாம்.

வினு:—இவ்வைந்து பிரமாணத்தாற், சமாதியனுபவம் பிரத்தியட்சமா ணுல், மேல் அபாவப்பிரமாண மியாதுக்கு?

விடை:—இவ்வனுபவஞ், சகசத்தில் விளங்குநிமித்தம், இப்பிரமாணமும் வேண்டிற்றென்க.

வினு:—அஃதெங்ஙனம்?

விடை:—பிராகபாவம், பிரத்தொம்ஸாபாவம், அன்னியோன்னியாபா வம், அத்தியந்தா பாவமெனப்பட்டு. முன்பின் இடை யொருகாலத்து மில் லையென நிற்பனவாகும். அவற்றுள்:-உற்பத்திக்குமுன் மிருத்திகையைத் தவிரக் கடமின்மைபோலச் சிருட்டிக்குமுன் சத்தைத்தவிரச் சகமில்லாமை யாற் பிராகபாவமெனவும், லயத்திற்குப்பின் மிருத்திகையைத்தவிரக் கட மின்மைபோல லயத்திற்குப்பின்னுஞ் சத்தைத்தவிரச் சகத்தில்லாமையால் பிரத்தொம்ஸா பாவமெனவும், இடையில் கடத்திற்படமும் படத்திற்கடமு மில்லையென்பதனுல் மிருத்திகையுந் தந்துவுமே யிருக்கின்றதுபோல இடையி லறிதலிலறிபொருளு மறிபொருளி லறிதலுமின்றி யறிவாகியசத்தே யது வதுவாய் விளங்குதலிற் றிரிபுடிரூபமாகிய சகத்தில்லாமையா லன்னியோன் னியா பாவமெனவும், இந்தமூன்றிடத்து மிருத்திகையைத்தவிரக் கடமில் லாததுபோல எப்போதுஞ்சத்தே பிரத்தியட்சமாயிருத்தலி னெப்போதுஞ் சகத்தில்லாமையா லத்தியந்தா பாவமெனவுமாம்.

வினு:—இந்த ஆறுபிரமாணத்தாற் சதோதயமான சத்தே பிரத்தியட்ச மாணுல் மேல் சம்பவப்பிரமாண மியாதிக்கு?

விடை:—இவ்வனுபவம் எக்காலத்திலும் இயல்பாய் விளங்குகின்றதென்பதை யறிவிக்குநிமித்தம் இப்பிரமாணமும் வேண்டிற்றெனக.

வினு:—அஃதெங்ஙனம்?

விடை:—சகஸ்திரத்திற் சதமிருக்குமென்னுமிடத்திற் சகஸ்திரத்திற்குஞ் சதத்திற்கும் அபேதந்தோன்றல்போல, பிரமத்திற் கூடத்தனிருக்குமென்னுமிடத்து அக்கூடத்தனே பிரமம், பிரமமே கூடத்தனென அபேதம் பிரத்தியட்சமாகத் தோன்றுவதே சம்பவப்பிரமாண மெனவுமாம்.

வினு:—இவ்வேழு பிரமாணங்களால் அத்துவிதசொரூபம் பிரத்தியட்சமானல், மேல் ஐதிகப்பிரமாண மியாதுக்கு?

விடை:—இவ்வனுபவந், தொன்றுதொட்டு விளங்குகின்றதென்பதை, யறிவிக்குநிமித்தம், வேண்டிற்றெனக.

வினு:—அஃதெங்ஙனம்?

விடை:—இம்மரத்தில், இயக்கனுளனென்பது, அநாதிசித்தமா யிருப்பதென்னுமிடத்து, இம்மரமே பேயாய்க்காண்பதுபோல, இச்சகத்திற் சித்துளதென்பது, அநாதிசித்தமா யிருப்பதென்னுமிடத்து, இச்சகமே, சித்தாய் விளங்குதல், பிரத்தியட்சமாதலின், ஐதிகப்பிரமாணமென்பதாம்.

வினு:—இவைகட்குச் சுத்தானுபவமியாது?

விடை:—சுவானுபவாதீத, சுயம்பிரகாச ஸ்வரூபமே, பிரத்தியட்சமும், அதனது, ஸ்வப்பிரபையான ஸ்புரணமே, அனுமானமும், அந்தஸ்புரணரூபமான சங்கற்பம், அதீதமான தத்தெரிசனர்த்தமாய், வந்ததேயன்றி வேறின்றென, நிச்சயிப்பதே, சத்தமும், இப்பூர்ணமான சங்கற்பத்தைப்போல், அவ்வறிவிருப்பினும், அறிதல்மாத்திரங் கரைந்துநிற்றல், உவமானமும், இச்சங்கற்பம் பகிர்முகத்தில், அதிசயமான விடயானந்தங்களான் மொத்துண்டதுவே, யகத்தி னிரதிசயானந்தத்தைக் காட்டுதலின், அருத்தாபத்தியும், அச்சங்கற்பம் முன்பின் இடையொரு காலத்துமின்றி, யெப்போதுந்தானகப் பிரகாசித்தலின், அபாவமும், இச்சங்கற்பம் சத்தின்சுபாவமா யுண்டென்பதனற், சம்பவமும், இச்சங்கற்பத்தை யதீதம்வியாபித்து நிற்றலின், ஐதிகமும்ஆம். இஃது சுருதிகுரு சுவானுபவரீதியாற், குருவாக்கியப்படி, யனுபவத்திற்காண்க. இன்னும் சந்தேக, விபரீதமாகிய சவிகற்பஞானத்திற்கு; பெயர் சாதி குணமே கன்மம் பொருளெனவைந்துண்டு: (தாண்டவனென்னும்) பெயர், (பிராமணனென்னுஞ்) சாதி, (சிவப்பென்னுங்) குணம், (தேவபூசகனென்னுங்) கன்மம், (இவனென்னும்) பொருள் என்பனவாம். பொருளினுண்மைமாத்திரத்தின் விண்டலில்லாவறிவாகும் விகற்பமில்லாக் காட்சியே=சத்துவாபத்தியால் முற்கூறியசவிகற்பஞானந்தோன்ருதது நிருவிகற்பஞானமெனப்படும்.

ஷை சவிகற்பஞானமானது; விஷயகதப்பிரத்தியட்சம், இந்திரியப்பிரத்தியட்சம், மானதப்பிரத்தியட்சம், வேதனுப்பிரத்தியட்சம், யோகப்பிரத்தியட்சமெனவும் ஐந்துவிதமாம்.

பிரமேயப் (அளக்கத்தக்க) பொருளினது தன்னியல்பு பொதுவியல் பியற்கையையுணர்த்தல். அதாவது; பதிபசுபாசங்களாகிய பிரமேயங்களினது தன்னியல்பு (தனதசாதாரண லட்சணத்தையும்); பொதுவியல்பு (பொருந்தியசாதாரணலட்சணத்தையுமுணர்த்தல்).

1. அநாதிமுத்தசிவன், ஆதிமுத்தசிவன், அபாமுத்தசிவனென்றுகூறும் பதிபதார்த்தத்துள் ஒவ்வொன்றும் அன்னியசாதியாகிய பசுபாசங்களேயும்; தன்சாதியாகியமற்றிரண்டையு நீங்கிநிற்றல் தனதசாதாரணலட்சணம்.

பசுபாசங்களேமாத்திரம் நீங்கித் தன்சாதியாகிய மற்றிரண்டிற்குஞ் சமமாகிச்சிவனென்றுநிற்றல் தனதுசாதாரணலட்சணம்.

2. விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர்என்னும்பசுபதார்த்தத்துளொன்றென்றும் அன்னியசாதியாகிய பதிபாசங்களேயும் தன்சாதியாகியமற்றிரண்டையுநீங்கிநிற்றல் தனதசாதாரணலட்சணம்.

பதிபாசங்களேமாத்திரம்நீங்கித் தன்சாதிக்குச்சமமாகிப் பசுவெனநிற்றல் சாதாரணலட்சணம்.

3. மலமாயைகன்மமென்னு பாசபதார்த்தத்துளொன்றென்றும் அன்னியசாதியாகிய பதிபசுக்களேயுந் தன்சாதியாகியமற்றிரண்டையு நீங்கிநிற்றல் தனதசாதாரணலட்சணம்.

பதிபசுக்களேமாத்திரநீங்கித் தன்சாதிக்குச்சமமாகிப் பாசமெனநிற்றல் சாதாரணலட்சணம்.

மூன்றுபக்கம்.

1. பிரதிஞ்ஞை = பக்கம் = சாதிக்கப்படுவதாகியவன்னி யீசுரன்முதலிய பதார்த்தத்துக்குத்தானமாகிய மலை யுலகுமுதலாகியபொருளாம்.

2. நிகர்பக்கம் = சபக்கம் = உவமை = திருட்டாந்தத்தானமாகியபாகசாலை குடமுதலாகியஇடம்.

3. நிகரில்பக்கம் = விபக்கம் = சாத்திய சாதனங்களாகிய அக்கினி தூமமுதலியபொருள்கள்போய்ப் பொருந்தாத மடுமுதலியதானமாம்.

ஏதுமூன்று.

1. இயல்பேது = இதுமாமரமென்கிறவேதுவான்மனசு குதிரைமுதலியபிறவற்றிற் செல்லாமல் இயற்கையாக மாமரத்திற் செல்லுதல். இயல்பேது.

2. காரியவேது = (மலையிதுவன்னியுடைத்துப் புகையுடைத்தாதலா லென்னும்) தனக்குக் காரணமாகிய வன்னியைக் காட்டும்புகை காரியவேது.

3. அனுபலத்தியேது = சீதமின்மையால் வரும்பனி ஞானபாவமாகிய வேதுப்போலும்.

இயல்பு=இயற்கை, காரியம்=பண்ணப்படுவது, அனுபலத்தி=ஞானபாவம்.

திட்டாந்தமிரண்டு.

1. அன்னுவயம் = எங்செங்கேபுகையுண் டங்கங்கேயனலுண்டு பாக சாலைபோலெனல்.

2. வெதிரேகம் = எங்கெங்கே அக்கினியில்லை யங்கங்கே புகையில்லை மடுவிற்போலெனல்.

அன்னுவய, வெதிரேகமுறையி லைந்துறுப்புங்கூறல்.

1. மலையிது வன்னியுடைத்து இதிபிரஞ்ஞை யென்கிறவவயவம். புகையுடைத்தாதலா லிதுவேதுவென்கிற வயைவம். எங்கெங்கேபுகையுண் டங்கங்கே வன்னியுண்டு; எப்படி? அடுக்களை; இதுதிருட்டாந்த மென்கிறவவயவம். அப்படியிந்தமலையும் புகையுடைத்து; இதுஉபநயமென்கிற வவயவம். ஆகையா, லப்படிவன்னியுடைத்து, இது நிகமன மென்கிறவவயவம். இப்படிஅன்னுவயத்தி லைந்துறுப்புக்காண்க.

2. மடுவிதுவன்னியில்லது இதுபிரதிஞ்ஞையென்கிறவங்கம். புகையின்மையால், இதுவேதுவென்கிறவங்கம். எங்கெங்கேவன்னியில்லை அங்கங்கே புகையில்லை; எப்படிமடு, இதுதிருட்டாந்த மென்கிறவங்கம். அப்படியிந்தமடுவும்புகையில்லது; உபநயமென்கிறவங்கம். ஆகையாலப்படி வன்னியில்லது, இதுநிகமனமென்கிறவங்கம். இப்படிவெதிரேகத்திற் பஞ்சாங்கமு மறிக.

1. பூர்வக்காட்சியனுமானம் = மறைவிலுள்ள புட்பத்தை மணத்தா லறிதல். இதுமுன்னும்பின்னும் பிரத்தியக்ஷ யோக்கியப்பொருளை யுணர்த்துதலாற் பிரத்தியட்சானுமானம், தன்மானுமானம், திருட்டானுமான மெனவுமாம்.

2. கருதலனுமானம் = (பிறரறிவுயோகிக்கு மாத்திரமன்றி யொருவர்க்கு பிரத்தியட்சமன்றாதலாற், புத்திபூர்வமாய் வார்த்தைவருமென் றனுமிதித்தறிந்த) ஓதுமுறையா லறிவினதுயர்ச்சியை யனுமிதித்த லனுமானனுமானம்; இதுகாரியானுமானம் (சாமானிய) திருட்டானுமான மென்றுமாம்.

3. ஆகமானுமானம்= பிராரத்தம்புசிக்குமிடத்துவரும்ஆகாமியகன்மங் காரணமாக; சுகதுக்கமோகங்கள் சுவர்க்க நரகங்களிலேயும் சுவர்க்கநாக சேடமாகிய பூலோகத்திலேயும் இனிமேல்வந்து பொருந்தும்; சுகதுக்க

மோகபலகாரணம் கன்மமென்றாகமஞ் சொல்லுதலால்என்றறிதல் உரையால னுமானம். இவ்விரண்டுமோகமம். கிரமத்திலே காரியானுமானம், காரணா னுமானமென்றும் சாமானியத்தினல் திருட்டானுமானமென்றுஞ் சொல்லப் படும்.

அவ்வாகமம் = சரியா, கிரியாப்பாதப்பொருளையுணர்த்துந் தந்திரகலை யென்றும்; யோகபாதப்பொருளையுணர்த்தும் மந்திரகலையென்றும்; ஞான பாதப்பொருளையுணர்த்தும் உபதேசகலையென்றும் மூன்றுவிதமாம்.

இனிமுன்சொன்ன பக்கம்போலத்தோன்றி யல்லவாய்ப்போம் பக்கா பாசம்நான்கு; வேதுப்போலத்தோன்றி யல்லவாய்ப்போம் எத்துவாபாசம் மூன்று மிருபத்தொன்றுமாம்; திருட்டாந்தம்போலத்தோன்றி யல்லவாய்ப் போந் திருட்டாந்தாபாசம் பதினெட்டாம்; தோல்வித்தானமிரண்டு இந்நிக் கிரகத்தானங்கள் இருபத்திரண்டாம். முன்சொல்லியபக்கப்போலிமுதலிய வெல்லாம் தொகையாக்கி அறுபத்தைந்தாம். இன்னும் பிரமாணங்களின் விரி வைத்தர்க்கசாத்திரங்களிற்கண்டுகொள்க.

இனிப்பிரத்யக்கான்மாவுளதென்பதற்குப்பிரமாணங்கள்.

"ஒழியுமென்னுயிர்"—என்னுயிர் நீங்குமென்று கூறுமிடத்து, அவ்வுயி ரையன்றி, யங்ஙனங்கூறுதற்கு, வேறோருயிரும்உண்டோ? இதையோர்ந்து சொல்லுதி, குற்றமில்லாதநல்லகிருபாமலைபோன்றவரே, யென்று கோரக்கன் சொல்ல, செழுமையும் மிருதுவும், பொருந்திய தாமரைமலர்போன்ற, தமது திருவடிகளா, லெமையாள்பவன் ஆகியஅல்லமன் சொல்லுவன்; உயிரென்று சொல்லப்பட்டபெயர், தருத்திபோலியங்கும், பிராணவாயுவிற்கு இயற்பெய ராகச் சொன்னல், இதனேடு, கலப்புறு தயலாகசிற்கும், பிரத்தியகாத்மா வாகிறதனக்கு, அந்தவியற்பெயர், ஆகுபெயரா வருமென்று, முத்தமிழு ளியற்றமிழ் நன்குணர்ந்தோர், சொல்லுவார்களென்று, நமக்குக் காரணாசிரிய னாகிய அல்லமன், ஒன்றையொன்றாகக்கொள்ளும், பிராந்திதீரும்படி, யிந்த நிலைமையைச் சொல்லினன்.

வழக்கத்தாலன்றி, என்னுயிரெனற்குச் சுதந்தரன் வேறின்றே, எனக் கருதி வினவினன், அதற்கு:—உலகருவப்ப வென்னுமிடத்து, இயற்பெய ரும், உலகமுவப்ப வென்னுமிடத்து, ஆகுபெயருமாய் நிற்றல்போன்று, உயி ரெனும்பெயர், பிராணவாயுவிற் கியற்பெயராயும், பிரத்தியேகாத்மாவிற், காகுபெயராயும், நிற்றலையுணர்பவர், ஏனைய, தமிழுணர்ந்தோ ரல்லாதவின் இயலுணர்ந்தவ ரியம்புவரென்றார். விசாரியாதுழி, பிராணவாயுவிற்கும், விசாரித் தையத்தவிர்ந்துழி, ஆன்மாவாகிற சுத்தசைதன்யத்திற்கு, மாகச் சேறலின், உயிரெனலை, இயற்பெயரெனவும், ஆகுபெயரெனவுங்கூறினார். அயவிலக்கணத்தில் சொல்லாற்றலும், தன்னிலக்கணத்தில், ஞானகதப் பிரத் தியட்சவாற்றலும், இன்றியக்கண், இக்கவியின்கருத்துப், புலப்படாதென்

பது திண்ணமென்க. ஆகுபெயர், குறிப்பிற் பொருளுணர்த்துவது, இயற்பெயர் அங்ஙனமின்றிப் பொருளுணர்த்துவது, என்க.

ஆன்மாவாகிற தன்னைச், சச்சிதானந்த ஸ்வரூபமென்று, அரியவேதங்கள் கூறாநிற்க, மின்னல்போற் ருேன்றிமறையும், தசைசிண மென்புதோன் மேய்ந்த, இன்னற்பொய்க்குடிலாகிய வுடம்பினை, நானெனன், றுன்னிக்கெட்டனை யென்கொனீ, யென்றினுமியம்பும்.

அகங்காரமானது, கற்பிதாத்மாவென் றறிவிப்பான்வேண்டித், தூல முதல்மனமீருய தத்துவங்களை யறியுஞ்சத்தி, சுயமா யதற்கின்றென வுணர்த்துகின்றது.

நீலகுணமாகிய விசேடத்தோடு, புஷ்பமென்னும் விசேஷியமானது, விளங்க வெளிப்படுத்து மாறுபோன்று, யானிளைத்தேன் பருத்தேனென்ருல், தூலசரீரத்தோடும், யான்கேட்பன், பரிசிப்பன், காண்பன், உண்பன், மோப்பனென்ருல், ஞானேந்திரியங்களுடனும், யான்வசனிப்பன், கொடுப்பன், கமனிப்பன், விசர்ச்சிப்பன், ஆநந்திப்பனென்ருல், கன்மேந்திரியங்களுடனும், யோசிப்பன், நிச்சயிப்பன், சிந்திப்பன், அபிமானிப்பனென்ரு; லந்தக்கரணங்களுடனுங், கூடி யவற்றின், குணுகுணங்களுக்கு, விலட்சணமா யிருந்தறியும், ஆன்மா, இருக்கப்பெறுதலால், அகங்காரமான்மாவன்று. அங்ஙனமாயின், அறிதலிழந்த, அகங்காரமானது, நேராகத்தனக் கன்னியமாயுள்ள, விஷயங்களை யறிவானேனெனக் கேட்கின், காந்தக்கல்லின் முன், இரும்பெங்ஙனஞ் சேட்டிக்குமோ, அதுபோலென் றறிவாயாக. "சினைவினை சினையொடு முதலொடுஞ்செறியும்" என்பதினல், யானிளைத்தேன்முதலிய, நான்கு வகையும்; வந்துவாறுகாண்க. துரியனுக்கு உற்பலமும், அகங்காரசம்பந்தமான தூலாதிகட்கு, நீலநிறமு முவமித்ததென்க. துரியனே தனுவாதிதத்துவங்களைச், சாட்சியாயறிந்துநிற்றலி னவனேயாத்மாவெனவும், அகங்காரமங்ஙனம் அறியாமையின், அநாத்மாவெனவுங்காண்க. அங்ஙனமாயின் புறவிடயங்களை, யறிவதெங்ஙனம்? அவனது, சந்நிதான விசேடத்தாலென்க, அற்றேல். ஆத்மாவிற்கும், அநாத்மாவிற்கும், விடயங்களை யறியுந்தன்மை, யொன்றென்ருல், இவர்கட்குப்பேதமென்னை? ஆகாயமானது, பிருதிவியாதியான்கு, பூதத்தினுங் கூடியிருந்துங், கூடாமலதற்கு வேருயிருப்பது போலச் சின்மாத்திரமான, ஆத்மாவானது, தனுவாதி விஷயங்களோடுகூடி, யதன்ருெழில்களை யறிந்தும், அவற்றிற்சம்பந்தப்படாமற், சாக்ஷியாயறிவதும், மாணிக்கச்சாயை, பற்றினபடிகம், அச்சாயையைத் தனதாகக்காட்டல் போல, ஆத்மாவினது பூரணமான, சிற்சாயையிற் கிஞ்சித்தமிசம்பெற்ற, அகங்காரம் விடயங்களிற் சம்பந்தமாய், அவற்றின்சுகதுக்கங்களைத் தானறிவதுபோலக் காட்டுதலாமென்க. இன்னும்அகங்காரமானது, விடயஞானத்திற்சுழன்று, சுழுத்தியிலடங்குநிலைமை யினையுவென வுணர்த்துகின்றது.

சூரியசன்னிதானத்திற் காட்டப்பெற்ற, கண்ணாடியானது, அறைவீட்டைவிளக்கும்விதமெங்ஙனமோ, அதுபோல, ஆன்மாவினது சன்னிதானத்தில், நிகழுந்தன்பால் தனதுசைதன்னியப் பிரதிபிம்பமான தடையப்பெறவும், அங்ஙனம், பெற்றஅசஞற், சடமாநின்றுள்ள வகங்காரமானது, விடயவுணர்ச்சிகாரணமாக, நனவுகனவுகளிற் பலவாறுழன்று, காமாதிகளைவிளைவுற்றுச் சுழுத்தியின்கண், ஒடுங்கிநிற்கும்; அவ்வகங்காரமானது, ஒடுக்கத்தக்க சுழுத்தியவத்தையில், திடமானஅவித்தையென்னும் உட்சுவரும். நித்திரையென்னுங்கதவுமில்லாமல், அசைவற்றதீபம்போலத், தன்னைத்தானே விளக்கிக்கொள்ளுதல், பிரத்தியக்காத்மாவினது சொப்பிரகாசமாம்; பின்புவிடாமற் ருெடர்ந்துவருகின்ற, காலகரும முதலியவைகள், மகாப்பிராணனென்னும் வாயுவினல், நித்திரையென்னுங் கதவைத்திறக்க, முற்கூறிய அவத்தையிலடுத்திருந்த முதலவித்தையென்னும், மகதத்துவமாகிய வாசற்படியிற் சேர்ந்திருந்த, அகங்காரமென்னும் வெண்பளிங்கிக் கல்லானது, ஆத்மப்பிரகாசமானது பிரதிபிம்பிக்க, அதனை அமையப்பெற்று, முன்போலச் சீவனென்று சொல்லும்படியாகவேயிருந்து, சொப்பனமென்னும் நடுவீட்டைவிளங்கச்செய்து, ஐம்பொறியென்னும் பலகணிவாயிலாக வெளிப்பட்டு, சாக்கிரமென்னும் முற்றத்தில்விளக்குகின்ற, முற்கூறியமகதத்துவ காரியமாகிய அகங்காரமென்னும், கல்லபடிகக்கல்லானது, காலகருமமாதிகள் மகாப்பிராணனல், அந்நித்திரைக்கதவைமூடவும், அவித்தையிடத் தடங்குமாறுசென்று, சாக்கிர சொப்பனமென்னும், முற்றம் நடுவீடுமுதலியவைகள் இருளாகும்வண்ணம், தானுகிறபடிகக்கல்லிற் பிரதிபிம்பித்த சிதாபாசன், தனக்குமுதலாவுள்ள, ஞானப்பிரகாசத்தையுடைய ஆத்மாவையடைந்து, ஏகமாகவிளங்கும்.

ஆத்மாவின் சிற்சாயை தங்கியவிடத்து, அவைபோலத்தோற்றிய அகங்காரமானது, நனவுகனவுகளிற் சஞ்சரித்து, சுழுத்தியிலடங்கும்போது தானவித்தையிலும் தான்பெற்றிருந்த சிற்சாயை அதன்காரணமான ஆத்மாவினிடத்திலும் அடங்கும்.

கருமமுதலிய வென்றது, உயிர்களின திச்சாஞானக் கிரியைகள். முதலவித்தை மகத்துவமென்றமையின், இதற்குக்காரணமானஅவித்தை மூலப்பிரகிருதியெனப்படும். இங்ஙனம்பிரமத்தையே கூடஸ்தனுகக்கூறுதலின், அதிலாரோபிதக்கிரமப்படி பிரகிருதியாதிய மூன்றையுங்கூறினரென்க.

ஆத்மாநாத்ம இலக்கணமினையவென வுணர்த்துகின்றது.

அகங்காரத்தினறிவறியாமை விளங்குகின்ற, சாக்கிரமுதலிய அவத்தையின்கண், அவிகார முடையதாகிச்சென்றறியும், பிரத்தியேகாத்மாவென ஒன்றிருப்பதினல், முற்கூறிய, அகங்காரமெப்போதும், ஆத்மா அல்லவென்று, நீயறிந்திடுதி. புறம்பாகவைக்கப்பட்டுள்ள. விடயங்களுக்கு ஆன்மாவாகவும், பிரத்தியகான்மாவிற்கு, அறிபடுபொருளாகவு மிருக்கப்பெறுதலின், சிற்சடமாயுக் கண்ணுடிக்குமுன் பின்போல, விஸ்மரணையுளதாயும், தஸ்மரணையிலதாயும்,

நிற்கின்ற, அகங்காரத்திற்குத் தூலதேகத்தோடும், சிற்சாயையோடும், ஆத்மாவோடுந், தாதாத்மியமுளவாம். தாதான்மியமென்பது, ஒன்றுபோற்ருேற்றல். சிற்சாயைதங்கிய அகங்காரமானது, நானிச்சாரூபியென்பதனிலிருந்து, தூலசம்பந்தத்தினுல், அதன்கன்மபலமான, சீதோஷ்ணுதி சுகதுக்கங்களையறிதலே, கன்மஜ தாதாத்மியமெனவும், அவ்வகங்காரமானது, சீவனுடன்கூடி நானறிந்தேனென்ப தியல்பாயிருத்தலிற், சகஜதாதாத்மியமெனவும், அவ்வகங்காரம் ஆத்மசம்பந்தத்தினுல், நான்கருத்தாவென்றறிவது, பிரமையாதலிற் பிராந்திஜ தாதாத்மியமெனவுஞ், சத்துக்கள்கூறுவர்.

ஆடிக்குமுன்பு ஒளியும், பின்பு இருட்மோதல்போல், அகங்காரத்திற்கு முன்புசித்தும், பின்புசடமுமாம். ஆகவே, இவ்வகங்காரஞ் சித்திற்குச்சடமும், சடத்திற்குச்சித்துமாதலிற், சிற்சடவடிவமென்க. அற்றேல், ஒருபொருள் இருதன்மையடையுமோ? எனின், அத்தம்போலிருக்குமென்க. கண்ணுடியின்பின் இரதப்பூச்சினு லிருட்டுவந்ததன்றிச், சுபாவமன்றே? என்னின், இவ்வகங்காரத்திற்குமுன்பு, சிற்சாயாஒளியும், பின்புசடசாயாமலினமு, மிருத்தலி னங்ஙனமாயிற்றென்க. முன்சடமெனக்கூறிப், பின்சிற்சடமெனக் கூறலாமோ? சடமாயிருந்தஆடிக்குச், சூரியனெளியைவாங்கி யிருளைவிளக்குந்தெளிவொன் றிருப்பதுபோல, இவ்வகங்காரஞ் சடமாயினுங், கூடஸ்தனெளியைவாங்கி விடயங்களை, விளக்குதலி னிங்ஙனங்கூறலாயிற்று.

சாக்கிராதியவத்தைகளில் விகாரத்தோடுஞ் சஞ்சரிக்கும், அகங்காராதியவத்தைகட்கு, விலட்சணனுயிருந்து, அறியுந்துரியனே ஆத்மாவெனவும், அங்ஙனஞ் சடசித்தூருபமாய்ச் சஞ்சரிக்குமகங்காரம், கற்பிதாத்மாவெனவும், அவன்சஞ்சரிக்குஞ் சாக்கிராதியவத்தைகள், அனாத்மாவெனவுந் தெரிவித்ததென்க.

அவித்தை—அகங்காரமெனினும், ஒருபொருள்.

இவ்வைந்தவத்தைகள், இடைவிடாது, தத்தமக்குள்மாறிநிற்பினும், அங்ஙனமாகாது, பிரஹ்மம், ஒருதகைத்தாநிற்றலையும், நனவுகனவுகளைப்போலச், சுழித்தியின்கண் ணறிவுவிளங்கவில்லையேயென்ற, வினுவிற்குத்தகும் விடையையு முணர்த்துகின்றது.

மேற்கூறிய பஞ்சாவத்தைகளினும், நீங்காமனிற்போன், கூடஸ்தனெருவனேயாம். சாக்கிரத்திலுஞ், சொப்பனத்திலும், அறிவுண்மையெனலை, யையந்திரிபின்றி யேற்கப்பெற்றனம், மேற்கூறிய சுழுத்தியவத்தையிலும், அந்தச்சைதன்ய மிருப்பதாக, ஏற்கப்பெறுவதைப்பற்றிச், சொல்லுமிடத்து, ஒருவ னித்திரையை விட்டெழுந்து, வேறென்றுங்காணுமற் சுகமாக, நன்குறங்கினேனென்று சொல்லப்போந்தது. இருவிதமானநினைப்பு மனுபவமுஞ் சுழுத்தியின்கண், இல்லாமல்வராதென்னுந், திருஷ்டாருத்தபத்தியினுல், சமஸ்தபொருள்களையு மன்பாலடக்கிய, இருளை விழிகள்காணுமாறுபோன்று, மாயாகாரியங்களனைத்தையுந், தன்பாலடக்கிக்கொண்ட பெரிதாகிய,

அவித்தையென்னுமிருளையும்; மேற்கூறிய அவித்தையினது சூக்குமவிருத்தியிற், காற்றினு லலைந்துகொண்டிருக்கும் மாத்தினது, இலைகளி னிடையிடையேவந்து தோற்றும், வெண்ணிலாவின் றுளிகளைப்போல, வுதித்துவிளங்கியடங்கும், நிசாநந்தக் கூறுபாட்டினையும், வராநின்ற மனங்காரணமாக, ஓரபேட்சையுமில்லாம லாத்மாவானது, முற்கூறிய சுழுத்தியவத்தையின்கண், அநுபவித்துக்கொண்டு வருதலால், அந்தச்சுழுத்தி யவத்தையின்கண், ஸ்திரமாக அறிவுண்டா யிருக்கின்றதாம். அவ்விடத்து, யாதொன்றும் அறியாது, மிக்கசுகத்துட னுறங்கினேனெனக், கூறுதற்குக்காரணம், முறையே விஷயஞானமின்மையும், குடும்பபாரநிவர்த்தியுமாம், என்றறிதி.

அநுபவித்தலுக்குச் செயப்படுபொருள்கள், அவித்தையிருளினையும், ஆநந்தக்கூற்றினையுமெனக்கொள்க. சூக்குமவிருத்தியென்றது, சுழுத்தியவத்தையிலுள்ள, பிராஞ்ஞன்றெழில், குடும்பநிவர்த்தி துக்கரூபமான, பந்த நீக்கம். நிசாநந்தக்கூற்றென்பது, பிரமானந்தாமிசலேசமெனல். இதனைச் சமாதியின்கண், நவநவமாய்விளங்கு மானந்தமெனினு, மமையும். முறையே யென்றமையின் விடயஞானமின்மை, யறியாமைக்கும், குடும்பநிவர்த்தி, சுகத் துறங்கினே னென்பதற்குங் கொள்க.

உயிர் சச்சிதானந்தமெனலே, யுவமானபூர்வமாக வுணர்த்துகின்றது.

மிக்கசுழுத்தி யவத்தையின்கண், அதற்குச்சாட்சியாக, ஆனந்தமயமாநின்றுள்ள, ஆன்மாவுண்டெனக்கூறுதல், ஒருவராகிலு, மவ்விடத்தறிந்தேனென்று, சொல்லாமைக்குக்காரணம், யாதெனில், கிணற்றில் தவறிவிழுந்த, வொருபொருளை, யெடுக்கவேண்டி, நீரில்மூழ்கினேன், அவ்விடத்திருக்கின்றதென்பதைக், கரையிற் சென்றல்லாமற், சொல்லக்கூடாமை யெங்ஙனமோ, அதுபோல், ஓர்கருமங்கருதி யதைச்செய்யவேண்டுமென்னுஞ், சங்கற்பத்தினு லெழுந்திருந்து, அதற்குத் துணைக்கருவியாக நின்றுள்ள, அந்தக்காண சம்பந்தத்தினுலன்றி, அந்நீரினுள், அறிந்தபொருளைச், சொல்லக்கூடாததாகும்; ஆகையாலாத்மா, சச்சிதாநந்த, சொப்பிரகாச வடிவினதா, மென்றறிதி.

காணங்கூடினன்றி, யதிலறிந்தபொருள் கூறெணுதென்றமையின், கூடஸ்த னறிவுமயமாமென்பதுபெற்றும். முற்கூறிய, ஐந்தவத்தையி னிடையினுள்ள, சுழுத்தியினு, மறிவுண்டெனவிளக்கி, யிவற்றையறிகின்ற விசுவ, தைசத, பிராஞ்ஞ, சீவன், சாக்ஷியென்கிறதற்கு, இம்முறையே, யிவைகட்கு அதிஷ்டானமான சத்து, சித்து, ஆனந்தம், நித்தியம், பூரணமென்னு, மைந்து தன்மையையுமுடையதே, யாத்மாவெனவும, இவற்றிற்கெதிர்மறையா, யைந்துதன்மையு முடையதே, யனுத்மாவெனவுந்தோன்ற, விளக்கியதெனக் காண்க.

வினு :—அற்றேல், துரியத்தினுள்ள சீவனையு, மதீதத்தினுள்ள சாக்ஷியையு, மிங்ஙனங்கூறலாமோ ?

விடை :—"சொற்றஅவத்தைகளி லனுசூதனுயறியுந் துரியனேயுள" னென்னுமிடத்து, உளனென்பது, நித்தியமும், அனுசூதனென்பது, பூரணமுமாக, விளங்கலினுனும்; இச்சீவனுக்குரித்தியத்துவமும், இச்சாக்ஷிக் குப்பூரணத்துவமு, மிருத்தலினுனுங்கூறலாம்.

வினு :—அற்றேல், ஆன்மாவுக், கிவ்வைந்துதன்மையுங், கூறலாமோ ?

விடை :—"உயிர்சச்சிதாநந்தவொளியா" மெனவும் அசத்தாதியைந்தும் நீக்கவந்த சத்தாதிநாமமேயன்றிச், சுபாவமன்றெனவு முற்கூறியிருக்கின் றதே, யுத்தரமாமென்க.

இவ்வைந்தவத்தையும், அநாத்மாவெனவும், இவற்றையறிவது, கற்பிதாத்மாவெனவும், இவையாவுமா, யவையல்லாதசொப்பிரகாசமே, யாத்மாவெனவும் விளக்கியதென்க.

வேதாந்த இலக்கணம்.

தூல மென்னி னேனைய வேடம், யாதோ யாது மவத்தை யளவே, லான்மா வதுவது வாகக் காணுங், காணினு மாரு தவைமா றிடினுஞ், சத்தென லான்மா வென்பது திண்ணம்.

இ-ள். தூலவேடமே சத்தென்னில், ஏனையவேடம்யாதோ? எவ்வெவ் வுபாதிவடிவமும், அவ்வவ்வவத்தை, உள்ளவளவுங்காணுமென்ருல், அப்போது, ஆன்மாவே, அவ்வவ்வுபாதிவடிவாய், ஆங்காங்குகாணுங், காணினும் அவைபோல், மாருதென்றும் ஒருதகைத்தாயிருக்கும். ஆதலின், சத்தென்பது, ஆன்மாவே வேறன்று; இது சத்தியம். எ-று. சத்துஇஃது என்பதற்கு ஏதுக் கூறியது.

(ஆதலின்) உபாதியோ வுயிரோ யாமெனப்படுவ,
துயிர்சித் தாதலி னேற்கு மென்ப.

இ-ள். ஆதலால், நாமெனப்படுவ துபாதியோ, உயிரோவென; ஐயமுறில், ஆன்மாசித்தாதலி, ஞமிதுவென்பது, ஏற்குமெனச் சத்துக்கள் சொல்லுவார்கள். எ-று.

நாம்அறிவதால், ஆன்மாநாமெனப்பட்டது, உடலுயிர்பகுத்துணராதார், ஒன்றெனினும், சித்துசடமாதலின், அவைசம்மதிக்குமோ? இன்பதுன்பம் நமக்காதலால், ஆன்மாநாமென்ருமம்.

கைவல்யநவநீதம்.

இந்தவான்மாவாகிய சாக்ஷியே நீயென்பதைக் கூறியது.

தூலசூக் குமவஞ் ஞானந் தோன்றுமூன் றவத்தை தாமுங்
காலமோர் மூன்றுஞ் சன்மக் கடலெழுங் கல்லோ லங்கள்

போலவே வந்து வந்து போனதெத் தனையென் பேனு
னூலமர் கடவு ளாணை யவைக்கெலாஞ் சாக்ஷி நீயே.

போ-ரை. தூலம், சூக்குமங், காரணம்என்னு மிம்மூன்றுதனுக்களும், இவைகாணப்படுதற் கிடமாவுள்ள, சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி யென்னு மூன்றவஸ்தைகளும், இவற்றிற்குக்காலவரை யறையாநின்றுள்ள, இறப்பு, நிகழ்வு, எதிர்வு, என்னுமுக்காலங்களுமாகிய, விவைகள் :—பிறவிசாகரத்தில் தானே யெழுந்தடங்குதலை, யியல்பாகவுடைய, போலைகளைப்போலவே, தோன்றித்தோன்றி, யழிந்ததாகியதொகை, யெத்தனையெனக் கணக்கிடுவன் யான் :— முன்னர்ச், சனகாதிகட்களுக்கிரகிக்கக், கல்லாலவிருக்ஷத்தின்கீழ்க், குருமூர்த்தமாகவெழுந்தருளிய, பரமசிவத்தின்மேலாணைப்படி, யந்தத்திரிசியங்களனைத்திற்குஞ், சாக்ஷியாநின்றுளது, நீயே, வேறில்லை, நீயிதனை யனுபவித்துக்காணுதி. எ-று.

போனதென்பது, தொகையொருமை, கடலுக்கலைகளியல்பாமாறு போன்று, பிறவிக்குத் தூலமுதலியவிவ்வொன்பது மியல்பாமென்பதாயிற்று. இதற்குத்தடையுளதேல்கூறுதும், நம்பிக்கையன்று. கேளுதி, ஞாயமுகத்தால். எங்ஙனமெனின், இப்போதுயாம் நின்றுளது பிறவியோ, அன்றோ; பிறவியெனின், இந்தப்பிறவியில், தூலமுதலியவிவ்வொன்பதுந், தோன்றித்தோன்றி மறைகின்றனவோ, இன்றோ; மறைகின்றனவெனின், இப்பிறவி நழுவுமளவு, மிங்ஙனமாய, தொகையொருமையெத்தனை. கணக்கில்லையெனின், இப்பிறவிக்கிவை யலதாகவேண்டும், உளதாதலிற், பிறவிதோறுமுளதாகவேற்கவேண்டும், இதனைமறுத்தற்குஇடமின்று. இனிப்பிறவிகளுபாதிக்கோ, அறிவுக்கோ; உபாதிக்கெனின், உபாதிசடமாதலி னறிவாகுமா? ஆகுமெனின், உபாதிதன்னால் தானறியப்படுகின்றதோ, அன்னியத்தாலோ; தன்னாலெனின், சொப்பன சுழுத்திகளிலறிந்துகொள்ளவேண்டுமே; அங்ஙனமின்றாமைக்கேதென்னை? அறியாதேனும், யோனிவழித்தாத வுடலாதலின், உபாதிக்கேயாம். யோனியென்பது, நால்வகையை. இதுநிற்க; இனிஉபாதிக்கறிவோ, அறிவுக்குபாதியோ, உபாதிக்கெனின், உபாதிக்கறிவுயாதுக்கு? சுகசாதனத்துக்கெனின், அறிவுசுகசாதனமாயின், சுகத்தையனுபவித்தல்யாது? உபாதியெனின், தன்னையேனும், அன்னியத்தையேனு, முணரத்தகையதாகவேண்டுமே, அப்போதுதூலமன்று. சூக்குமமெனின், சுழுத்தியிற், கேவலசுகத்தை யனுபவித்தற் கியைந்த, வுணர்வினதாக வேண்டுமே, இல்லாததால், சூக்குமமன்று. காரணமெனின், அவித்தையாகவேண்டும், தன்னைத்தானறிதற்பால தன்றாமையின், தன்னைத்தான் சுகிக்குமாறு எங்ஙனங்கூடும்? கூடாததால், உபாதிக்கறிவன்று, அறிவுக்குபாதியெனின், ஒருவாற்றாற்பொருந்தும். அவஸ்தாத்ரயம், காட்சித்ரயம், உபாதித்ரயம், அபிமானித்ரயமாய், நிற்பதிவ்வறிவேனும், சாக்கிரத்தில், ஸ்தூலத்தைதனுவாகப்பெற் றுலகபோகத்தைநுகர்வதும், சொப்பனத்தில், சூக்குமத்தைத் தனுவாகப்பெற்றங்குள, சுகத்தைநுகர்வதும், சுழுத்தியில் காரணத்தைத்

தனுவாகப்பெற் றங்குள்ள, கேவலசுகத்தையனுபவிப்பதும், அறிவெனினும், அஃதிங்ஙனநிற்றலே, அறிவாரெங்ஙனு மின்ருதலா, னதனைக்கணிப்ப தெளிதன்று. இதுநிற்க. அறிவுக்குபாதியெனல், இதுதன்னைத்தா னறியுமட்டுள்ள தந்திரம். எங்ஙனமெனில், இம்மூன்றுதனுவும், அஞ்ஞானதனுவாகும்போது, ஞானதனு விருக்கவேண்டுமே, அதுவுமறிவுக்குச் சுத்தவுபாதி யாகவேண்டுமே, சுத்தவுபாதியி லசுத்தவுபாதியும், அசுத்தவுபாதியில் சுத்தவுபாதியுமின்ருமாயினும், அறிவிருத்தலாற், சாக்ஷியாகவேண்டும். அறிவேநீயாதலால், நீயே சாக்ஷியென்ருர். இதற்குமேலுண்மை இன்ருதலாற், கடவுளாணையெனப்பட்டது. வந்துவக்துபோன தெத்தனையென்பேன் யானெனவே, இனிவரப்போவ தெத்தனையோவெனக் குறிக்கின்றது. உபாதிக்கேபிறவி, அறிவுக்கன்று; அறிவுநீயாதலி னீயேசாக்ஷியென்பதுபொருந்தும்.

உதாரணம். பாகவதம்.

பிறத்தலு மிறத்தலும் பேசி லாக்கைக
ளுறத்தகு முண்மையா யுற்ற நல்லுயிர்க்
கறத்துறை யரசவக் குணங்க ளின்மையா
லிறத்தமற் றுனக்கிலை யென்றும் வைகுவாய்.

விளங்கு மெய்ப்பொரு ளாக்கைமே வினுமதன் குணங்க
ளுளங்கொ டெண்ணிலப் பொருட்கிலை யென்பது மோர்ந்தேன்
களங்க மென்பது மதிக்கிலை கருதுமக் களங்கம்
வளங்கொள் பூமியின் சாயையென் பாரதை மதித்தே.

கடத்துறை வானுமக் கடமுடைக் கில்வா
னிடத்தொடு மொன்றுபட் டிருக்கு மாறுபோற்
சடத்துறை யுணர்வுமச் சடந்த ணக்கிலிங்
கடக்கரும் பரத்திலொன் ருகி வைகுமே.

பக்குவத்தி லாசிரியர் உணர்த்தியவண்ணஞ்சென்று துரியத்துத்தானே தன்னையறிதலி னுன்மாவுளதுஎன்பதற்கு உதாரணங்கள் திருமந்திரம்.

ஆன்மவிலக்கணம்.

அறிவைம் புலனுட னேகான்ற தாகி
நெறியறி யாதுற்ற நீராழம் போல
வறிவறி வுள்ளே யழிந்தது போல
குறியறி விப்போன் குருபா ரனுமே.

ஆமேவு பானீர் பிரிக்கின்ற வன்னம்போற்
றாமே தனிமன்றிற் றன்னந் தனிநித்தந்

தீமேவு பல்கர ணங்களு ளுற்றன
தாமே பிறப்பெரி சேர்ந்தவித் தாமே.

வித்தைக் கெடுத்து வியாக்கிரத் தேமிக
சுத்தத் துரியம் பிறந்து துடக்கற்று
ஒத்துப் புலனுயிர் ஒன்று யுடம்பொடு
செத்திட் டிருப்பர் சிவயோ கியர்களே.

துரிய மிருப்பது சாக்கிரத் துள்ளே
நரிகள் பதினறு நஞ்சுண்டு செத்தன
பரிய புரவியும் பாறிப் பறந்தது
துரிய மிறந்திடஞ் சொல்லவொண் ணாதே.

முன்னை யறிவினிற் செய்த முதுதவம்
பின்னை யறிவினைப் பெற்ற லறியலாந்
தன்னை யறிவ தறிவா மஃதன்றிப்
பின்னை யறிவது பேயறி வாமே.

தானே யறியும் வினைக ளழிந்தபி
ஞனே யறிகில னந்தி யறியுங்கொ
லானே யுருகி யுணர்வை யுணர்ந்தபின்
றேனே யனையனந் தேவர் பிரானே.

*விஞ்ஞானத் தோர்க்கா ணவமே தநுவாகு
வெஞ்ஞானத் தோர்க்குத தநுமாயை தாமென்ப
வஞ்ஞானத் தோர்க்குக் கன்ம தநுவாகு
மெஞ்ஞானத் தோர்க்குச் சிவதநு மேவுமே.

அவத்தைபேதம்.

ஐயைந்து மத்திமை யானது சாக்கிரம்
கைகண்ட பன்னன்கிற் கண்டங் கனவென்பர்
பொய்கண் டிலாத புருடனித யஞ்சுழுனை
மெய்கண் டவனுந்தி யாகுந் துரியனே.

சீவன்.

மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு

* விஞ்ஞானத்தோர்—விஞ்ஞானகலர்—வெஞ்ஞானம். பிரளயாகலர், வஞ்ஞானத்தோர் சகலர்.

மேவிய கூறது வாயிர மாயினு
லாவியின் கூறுநா றுயிரத் தொன்றே.

மாயா வுபாதி வசத்தாகுஞ் சேதனத்
தாய குருவரு ளாலே யதிற்றாண்ட
ஓயுமு பாதியோ டொன்றினென் றுதுயி
ராய துரியம் புகுந்தறி வாகுமே.

போதன்: "சீவ னென்னச் சிவனென்ன வேறிலை
சீவ னார்சிவ னாயிட் டிருப்பரே."

வாயுசங்கிதை ஞானநிலையை யுரைத்த வத்தியாயம்.

ஒன்று மறியா ரிவ்வகையே யுரைப்பார் புந்தி முதலொடுங்க, இன்று துயின்றே னெழுந்துநன்காய்த் துயின்றே னென்ன இசைத்தமையான், என்று மெவைக்கும் நடுவாகி யிருக்குமான்மா வுளனவனை, மன்ற மறையந் தரியாமி யென்னநாளும் வழங்குமால்.

பிரமகீதை கைவல்ய உபநிடதார்த்த முரைத்த அத்தியாயம்.

தாக்கரும் பரமன் றன்சுதந் தரத்தாற் றன்னுடை மாயைதன்னாலே, யாக்கின னிந்த வுடம்படைந் தறியான் போலநின் றனைத்தையு மதிலே, சாக்கிரத் தென்னு மிடம்வருத் தன்ன பானமுந் தையலார் முதலாம், போக்கியங் களையும் புசித்திடுங் கனவும் பண்ணியத் தன்மையே புசிக்கும்.

உறங்குமவ் வியத்த மன்னிய தமத்தி னுட்புகுந் தொன்றுழி யாம, விறந்தவவ் விடத்தே தன்னுரு வான வின்பமே புசிக்குமீண்டெழுந்து, கறங்குபோ னனவை யடையினு மடையுங் கனவைவந் தடையினு மடையுஞ், சிறந்தமுப் புரமு மிவன்விளை யாடித் திரிதாச் செய்ததே திகழ்த்தில்.

இதுவுமது.

பொற்பொருள் புதைத்தபுவி யிற்புல னிலார்போய்
நிற்பினு மிடிப்பர்நனி நித்தமுல கத்தோர்
தற்பொருள் சுழுத்திதனி லுற்றுமது தானே
யற்பமறி கிற்றில ரயர்ச்சிவலி யையோ.

ஸாமவேதம் மைத்திரேயோபநிஷத் 2-வது அத்தியாயம்.

மேலும் பகவானான மைத்திரேயர் கைலாசத்திற்குப்புறப்பட்டு அவ்விடஞ் சென்று ஓ பகவானே! பரமதத்துவரகசியத்தைச் சொல்லுமென்றுகேட்டார்; மகாதேவர்சொன்னதாவது:—தேகமானது தேவாலயமென்று சொல்லப்படுகின்றது; அதிலிருக்கிற ஜீவனானவன்சிவனே; அஞ்ஞானமாகிய, நிர்மாலியத்தைத்தள்ளி (ஸோகம்) அவனேநான்என்கின்ற பாவனையினாலே, பூஜிக்கவேண்டியது. ஜீவனானவன் பிரதிபிம்பனென, முன்சொல்லப்பட்டிருக்கிறது; அப்படியிருக்க, எப்படிஜீவன், பிரமமாகலாமென்று, சங்கிக்கலாம். அதற்குப், பாம்புகயிறுகத்தோற்றுவதில், பாம்பென்கிற மயக்கம்போனால், இருப்பது கயிறுதான். அப்படியே, துரியாதீதநிலையில், ஜீவன்கஷ்டமாய்ப் போகின்றான், போனால் உள்ளதுசிவனேதான். இந்த அர்த்தத்தின்பேரில், ஜீவன் சிவனாகின்றானென்று சொல்லப்படுகிறது.

திருமந்திரம்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளித் தெளிந்தோர்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே.

பிரமகீதை முண்டகோபநிஷத் தாற்பரியமுரைக்கு மத்தியாயம்.

இந்தவுடம்புறை சீவபரங்க ளெனப்படு மன்னமிரண்
டந்தவிரண்டினு மொன்று வினைப்பய னங்குநுகர்ந்திடுமாந்
தொந்தமறும்பர மொன்றுமுணாது சொலப்படு பேதமும்வான்
வந்தகடத்தி லகப்படுபேத மெனப்படு மாயையினால்.

தற்பர னுருவஞ் சித்தே தற்ப ரனிடையேயக்
கற்பித சீவன் றானு மதானக் காலந்தச்
சிற்பொரு ளொன்றே வேறெனின் மற்றது சித்தாமோ
வற்பமும் வேறா காதுசித் தாகா ரத்தாலே.

பாவபுண் ணியங்க ளிரண்டையு முதறிப் பற்றுத லொன்றொடு மின்றி, யாவையுந் தானாய் வேறிலா தவனாய்ப் பெய்துமற் றிப்பொருளறிந்தான், சீவனும் பரனுஞ் சின்மய மாகு மாதலா லொப்பெனச் செப்பன், மேவியோன் றாகி விடுதலே யன்றி வேறுவே றுருகுமோ வீடு. ௩௧

எப்படி யாலும் பண்டுமிப் போது மெப்பொழு துஞ்சிவ சீவர்க், கொப்புள தாகு முருவமொன் றான வுண்மையால் வேறுறு தொன்றே,

யப்படி யுள்ள சிவன்பிறர் போல வவிச்சையா னிகழுமவ் வவிச்சை, மெய்ப்பா விச்சை யானசித் தொன்ருய் விடுதலொப் படைதல்வே றன்றே. ருரு

சீவன் றன்னுரு வான சிவத்தைத் தெளியிற்ருன்
மேவும் பலதொழி றன்னிடை யாலே விளையாடும்
யாவுந் தன்னுரு வாகி நிகழ்ந்தா லிவன்முத்தன்
ஆவன் பண்டவ ளுகா மையின்முத் தனுமாகான். ருச

கைவல்லியவுபநிஷத் தாற்பரியமுரைக்கு மத்தியாயம்.

நீயெனும்பொரு ளேயதென்று நிகழ்த்திடும்பொரு ளாவதுந்
தூயசிற்ப மேபதங்க ளிரண்டினுந்துணி வாதலான்
மாயையென்று மவித்தையென்று முபாதிபேத வழக்கிளு
லாயகற்பித பேதமல்ல தபேதமேபொரு ளாவதே. உக

ஆதரத்தோ டவிச்சைநாம மறுத்தநல்லதி காரிபைப்
போதமுற்று மெனப்புகன்றது பொய்யிலாமறை யையமன்
றேதமற்றது நானெனுந்திட னுவனேயஃ தெய்திஞ
ளுேதமுத்தி யவன்றனுள்ளது போகமிங்ஙு னுதிப்பதாம். உஉ

வேதநூன் மிருதி புராணமத் துவித மெய்ம்மையே விளம்பமெய்த் தர்க்கஞ், சாதியா நிற்கத் தத்துவ ஞானத் தவருமிப் பொருளையே சார, வாதியாஞ் சிவனு ராயண னுனிங் கறைந்தது மபேதமா யிருக்க, வாதியா மொருவர்க்கிதையனு தரித்தன் மாயையி னுடையவல் லபமே.

பிரபுலிங்கலீலை.

தூய்தாகிய நெஞ்சுடை யார்க்குத் தாமேசிவமாத் தோன்றுமால்
தீதாகிய நெஞ்சுடை யார்க்குத் தெளிய வபேத மிகலின்றி
வேதா கமங்கள் விளம்பிடினும் விளங்கா தென்றும் வேறென்னும்
வாதா லழிவர் அவர்மாயை மயக்க மயங்கு மதியினர்.

தாயுமானர்.

போத மென்பதே விளக்கொவ்வு மவித்தைபொய் யிருளாந்
தீதி லாவிளக் கெடுத்திருள் தேடவுஞ் சிக்காது
ஆத லாலறி வாய்நின்ற விடத்தறி யாமை
யேது மில்லையென் றெம்பிரான் சுருதியே யியம்பும்.

அப்பொருளு மான்மாவு மாரணநூல் சொன்னபடி
தப்பிலாச் சித்தொன்ருஞ் சாதியினு—லெப்படியுந்
தேரிற் றுவிதஞ் சிவாகமமே சொல்லுகிட்டை
யாருமிடத் தத்துவித மாம்.

சிவஞானசித்தியார்உலகாயதன்மதமறுதலை.

காணொணுகர ணங்களுக்குயிர் கண்டிடாமையி னின்றெனிற்
காணு மோகடங் கண்டகண் ணினைக் கண்டுநிற்பதுங் கண்ணதே
காணொணுதுயிர் தானுமிப்படி கண்டிடுங்கர ணங்களை
காணொணுகர ணங்களுக்குயி ருண்மையாவதுங் கண்டிடே.

(இ-ள்.) புறக்கரணங்களுக்கு உயிர்காணவொண்ணுதாகையாற் காட்சிக்குப்புலப்படாமையின் ஆன்மாவென் ருென்றில்லையென்றுகூறின்,—சரீரமானது தன்னைக்கண்டகண்ணைத்தான்காணவற்ருே? அச்சரீரத்தைக்கண்டுநிற்பதுங் கண்ணுக்குள்ளதொழிலேயாம்,-காட்சியளவையாகிய கண்ணுக்குக் காணவொண்ணுதென்ற உயிரும்இத்தன்மைத்து,-உயிர்சேதனமாகையாற் கரணங்களைக் கண்டுநிற்கும்,-கண்களைச்சரீரம் அறியாதவாறுபோலக் கரணங்களும் அவ்வான்மாவைக்காணவொண்ணு,—ஆகையால் ஆன்மாவையுண்மையாக உண்டெனவறிவாயாகஎன்க. என்றுகூறியிருக்கின்றன. தன்னிற் றன்னை யறியுந் தலைமகன், தன்னிற் றன்னை யறியத் தலைப்படும். தன்னிற் றன்னை யறிந்தில ணுயிடின், தன்னிற் றன்னையுஞ் சார்தற் கரியனே.

மூன்றுஞ்சூத்திரம் முற்றிற்று.

நான்காஞ் சூத்திரம்.

அவதாரிகை.

முற்கூறியவான்மா தனக்குச் சகசமலமும் அவற்ருலைந்தவத்தையு முத்தனபோற் ருேன்றினுந் தாஞகாவென்பதை யிச்சூத்திர முணர்த்துகின்றது.

நான்காஞ் சூத்திரம்.

அந்தக் கரண மவற்றினென் றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா
தமைச்சர சேய்ப்பநின் றைந்தவத் தைத்தே.

(இ-ள்.) ஆன்மா=கூடஸ்தஞகியவறிவு, அந்தக்கரணமவற்றினென்றன்று=அபுவாதத்தில் மனம், புத்தி, சித்தம், அகங்காரமென்னு மந்தக்காண

சதுட்டயத்தில் தானென்றுமல்ல, அவைசந்தித்தது=(அத்தியாரோபத்தாற் றனக்கு) அவைதோற்றத்தது, சகசமலத்துணராது=(தன்னைத்தா னுணர்தற்பாலதாகியஅறிவு) தன்மறதியாகிய பஞ்சமலங்களாற் றன்னையறியாது, அமைச்சர சேய்ப்பதின் றைந்தவத்தைத்தே= துர்ப்புத்திமந்திரிகளுடன்கூடிக் கொடுங்கோனடாத்து மாசனைப்போல அஞ்ஞானபூமியேழினுங் காமனுதிய மந்திராலோசனைத் தலைவருடன்கூடி மோகவேந்தனுய்ச் சாக்கிரமுதலிய ஐந்தவத்தையினும்பொருந்தும். (ஆன்மா தன்னைத்தா னறியவிரும்பின், நற்புத்தி மந்திரிகளுடன் கூடிச் செங்கோனடாத்து மாசனைப்போல, ஞானபூமியேழினு நிருபகனுதிய மந்திராலோசனைத் தலைவருடன்கூடி, விவேகவேந்தனுய்ச், சுத்த சாக்கிரமுதலிய வைந்தவத்தையிற் செல்லல்வேண்டும்.) எ-று.

அந்தக்கரணமுதல் சகசமலத்துணராதெனல்வரைக்கும். உ-ம்.

தாயுமானுர்.

தன்னிலேதானுக பொன்னிலேபணிபோலு மாயைதருமனமே.

உபநிடதம்.

பொன்போல விலங்குமனஞ் சஞ்சலத்தாற் குரங்காம் புத்தி
விசாரித்தறியும் பொலிவதனு லரவாந்
தன்போல விலையெனலா லகங்கார மதமாத்
தனைநிகரா நு சித்தமொரு தன்மையினு னுயா
மின்போலுஞ் சலனமன மசையாம னிருத்தி
விசாரிக்கும் புத்தியினை மெய்ப்பொருட்பால் விடுத்து
வன்போடு வருமகங்கா ரத்தினையுங் கடிந்தால்
வைத்தவிடத் திருந்துசித்த மகத்துவமுந் தருமே.

(பொ-ரை.) மாற்றுயர்ந்தபொன்போல மலரகிதமாகவிளங்கும்மன (ஆன்மா)ம் எனப்படுதல்யாதோ அதுபகிர்முகத்தாயவழி யியல்பாகவெய்துஞ் சஞ்சலத்தினுல் குரங்குபோல்வதாகும், அதன்றிரிபாகிய புத்தியெனப்படுவது காரியங்களை விசாரித்தறியும் மிகுதியினுல் கட்செவிபோல்வதாகும், அப் புத்தியின்றிரிபாகிய அகங்காரமெனப்படுதல் தன்னைப்போலஒருவருஞ் சமானமில்லையெனக்கோடலால் மதயானைபோல்வதாகும், அவ்வகங்காரத்தின் றிரிபாகிய சித்தமெனப்படுதல் இழிவில்தனக்குத்தானே நிகரெனப்படும் ஓரேதுவினுல் நாய்போல்வதாகும், மின்னலைப்போலத் தோன்றிமறைதலையுங் கணமேனுநில்லாது சலித்தலையு மியல்பாகவுடைய அந்தமனதை அந்தர்முகத்தாயவழிச் சற்றுஞ்சலியாமனிருத்திப் பொய்ப்பொருளையே நிஜமெனவிசாரித்துழலும் புத்தியெனப்படுவதை மெய்ப்பொருளாகிய சைதன்னியத்தின்கண் விசாரிக்கவிடுத்து, விடயவலிமைகொண்டு பிறந்திறந்து வருவதற்குரிய அகங்

காரத்தையும் நாசப்படுத்தினால் சித்தமெனப்படுவது விசாரித்திலக்காகவைத்த அந்தச்சைதன்னியத்தினிடத்தில் பிறழாதிருந்து நவநவமாகவிளங்கும் மேலாய நிலைகளையும் ஏகமாகநிற்கும் மகத்துவத்தையுந் தந்தேவிடும். எ-று.

பொன்போலவிலங்குமனமென்பதுமுதல் நாயாமென்பதுகாறும் விஸ்மரணையெனவும், மின்போலுஞ் சலனமனமென்பதுமுதல் சித்தமகத்துவமுந் தருமேயென்பதுகாறுந், தஸ்மரணையெனவுங்கொளநின்றது ஒர்ஸ்மரணையே யெனக்குறிக்க அத்தியாரோப அபவாதயுத்தியை யிக்கவிகாட்டிற்றென்க. சஞ்சலமுதலியபுடைபெயர்ச்சிகளை உன்னுமிடத்துத் தொழில்சாதாரணதருமமாசக்காண்டலி னின்னான்குவமையும்பொருந்தும். இந்நான்குபுடைபெயர்ச்சியும் ஒவ்வோர்முதலினதாகக் காண்டலேயன்றி விசாரிப்புழியின்றாதலின் மனமுதலியநான்கு மவ்வவ்வவசரநிலையாமென்க. க்ஞானம், மனம், புத்தி, சித்தம், அகங்காரமென்பவற்றுள் க்ஞானமயலாயவழி-சஞ்சலமுதலியநான்கு புடைபெயர்ச்சியையுமேற்று அவ்வவற்றிற்கு வினைமுதலாக மனமுதலியநான்கையுங் கொண்டவாறெங்ஙனமோ அதுபோலப் பொன்போலஇலங்குதலாகிய புடைபெயர்ச்சியையேற்று வினைமுதலாகநிற்பது ஒன்றுளதாகக் கோடல்வேண்டுமாதலின் க்ஞானமென்றும். அன்றேல் இலங்குதல் யாதின்புடைபெயர்ச்சி. பொன்போலவெனல் யாதிற்குபமானம். ஆதலின மறுக்குதும். ஆன்மாஅயல்மயமாகாதுழி க்ஞானமெனக்கோடற்கு முரணென்னை. பொன்போ லிலங்கல் மனமெனற்கு விசேடமா நிற்பதெனின், அவ்வவசரஞ் சுத்தமனமெனலாயிற்று. ஆகவே க்ஞானமென்றும். மருளாயவழி மருண்மயமாதலும் தெருளாயவழி தெருண்மயமாதலும் க்ஞானம் (ஆன்மா) ஆதலினெக்கும். தன்மருளையன்றி அநிர்தசடதுக்கமும், தன்தெருளையன்றிச் சச்சிதானந்தமு மின்றாதலின் க்ஞானமெனற்கு ஐயமின்றென்க. ஊத்தமுகமாயவழி மனமுதலியநான்குபேரு மத்தியாசமெனற்கியைதலின் அத்தியாரோபமெனவும் இவையனைத்தும் விசாரித்துத்தெளிந்துழி தானைக்காண்டலின் அபவாதமெனவும் போந்தவாறுகாண்க.

மெய்ப்பொருளென்றதனால் பொய்ப்பொருளெனவருவித்தாம். பொய்ப்பொருளிலக்கு கொதுகிலக்கையும், மெய்ப்பொருளிலக்கு மலையிலக்கையும் போல்வதின் புத்தியினை மெய்ப்பொருட்பால்விடுத்தெனப்பட்டது. அகங்காரத்தினைக் கடிதலாவது; ஞானசுதப்பிரத்தியட்சத்தில் சதோதயமாகவிளங்குஞ் சைதன்னியத்தை யிடைவிடாதுகண் டிதுநானிதுநானெனப் பழகுங்கால் முன்போல உடல் நானெனவந்துழி அதனைக்கடிந்துகோடலே. அறிவேவடிவாயிருக்கவேண்டுதலைப்பற்றி மலைஇலக்குபோல்வதின் வைத்தவிடத் திருந்து சித்த மகத்துவமுந் தருமெனற்குமுரணென்னை. இன்றாதலா லெவர்க்குமுடன்பாடாமெனக்கருதி யிங்ஙனங்கூறினாரென்க. வாளாபுத்தியென்னாது விசாரிக்கும்புத்தியென்றதனால் நம்பிக்கையாவிது மெய்ப்பொருளெனக்கோடற்க கொள்ளின் பூர்வபட்சத்திற்கியையும். இயையின்முன்போல அநிர்தசடதுக்கத்தைச் சச்சிதானந்தமாகக்கொண் டலையவேண்டியவருமென்க.

விசாரித்தற்கியைந்தகருவி சிரவணமுதலியவை.

சகசமலத்துணராதமைச்சரசேய்ப்பநின்றஞ்சவத்தைத்தே
யென்பதற்கு உ—ம் கைவல்லியம்.

வினவுமிடத் தஞ்ஞான பூமிகளேழ் ஞானபூ மிகளே ழென்பா,
ரினியவற்று ளஞ்ஞான பூமிகளை யையுமுந்தி யியம்பக் கேளாய்,
தனிவித்து சாக்கிரஞ்சாக் கிரமகா சாக்கிரஞ்சாக் கிரத்தைச் சார்ந்த,
கனவுகனுக் கனவுசாக் கிரஞ்சுழுத்தி யென்றெழுபேர் கணித்தார் மேலோர்.

(க-ரை.) அகண்டபரிபூரணமாகவிளங்குஞ் சுத்தசயஞ்சைதன்னியத்தில் முன்னென்றுமில்லாதறிவுஸ்புரித்தல்போறலின், விந்துசாக்கிரமெனவும், அங்ஙனம் ஸ்புரித்தலளவாநின்ற அறிவானது அகந்தையென் றங்குரம்போலாகத் தானுமதன்மயமாகக்காண்டலில், சாக்கிரமெனவும், இவ்வகந்தைமேலீட்டாற் பிறவிதோறு மகமமதைவளரும், அவ்வகமமதைரூபமாக வளர்தல்போன் றறிவு காண்டலின், மகாசாக்கிரமெனவும், அவ்வகமமதைமேலீட்டால் தடையின்றி மனோராச்சியம் புரிதல்போன்றவ் வறிவுகாண்டலின், சாக்கிரசொற்பனமென வும், அங்ஙனம் மனோராச்சியஞ்செய்தலோ டுண்டுறங்குவதுபோ லறிவுகாண் டலே, சொற்பனமெனவும், முன்கண்டுமறந்ததை மீண்டுநினைப்பதுபோ லறிவு காண்டலே, சொப்பனசாக்கிரமெனவும் நன்குறங்குங்கால் மிக்கவிருள்மூடிக் கொள்வதுபோ லறிவுகாண்டலே சுழுத்தியெனவுங்கூறியதென்க.

இந்தவஞ்ஞானபூமியேழு மத்தியாரோபமெனக்காட்டக் கூறியதென்பது ஆகாயமானது; காற்று, அக்கினி, நீர், மண்ணாகப்பரிணமித்ததுபோற் காணி னும், அவற்றால்தனக் கானிவிர்த்தி தினைத்துணையுமில்லை. அதுபோல; சுசாதியாதி விகற்பமின்றிய வறிவானது; அஞ்ஞானபூமிகளாகிய மூலப்பகு திமுதல் தனுவிகுதியீறாக்கிடந்த கற்பனைகளாகப் பரிணமித்ததுபோற் காணி னுமவ்வவற்றி னானிவிர்த்தி தினைத்துணையுந்தனக்கில்லை. உள்ளதுபோற்காண் டலி னிங்ஙனங்கூறினரென்க. இல்லாததை யுள்ளதுபோற் கூறவந்தது; உள்ளதாகக்கருதியதை விலக்கற்கென்க. இல்லாததை யில்லையெனக்கூறி னெவருமேலார். அதாவது; அறிவையன்றிச் சகமென்பதில்லையெனக் கூறு தல்போல்வது. சிருஷ்டிக்கிரமங்களாற் சகமுள்ளதாகமுடிக்கி னெவர்க்குமு டன்பாடு. இங்ஙனமுடன்பாடாக யாமுங்கலந்து மெல்லமெல்லத் தளர்த்தல் வேண்டும் எங்ஙனமெனில்; உலகமும்யாமுங் கடவுள்சங்கற்பத்தாலன்றித் தோன்றச்சற்றுஞ் சுருதியுத்திகண்டிலம். ஆகவே, அந்தச்சங்கற்பம், நமக்குமுல குக்குங் காரணமோவன்றோ? காரணமெனின், மூன்றுகாரணத்துள்யாது? துணைக்காரணமெனின், அப்போதுகடவுள் நிமித்தகாரணமாகின்றது. முதற் காரணமெங்கே? மாயையெனின், யாமாசாமாயா, என்பதற்கருத்தமென்னை? இதுமலடிமைந்த னென்றாற்போலும், எனக்காட்டி வயப்படுத்தவெனவறிக.

சீவனுக்குமூன் றுபாதியும், எட்டத்தியாசமும், ஐந்தவத்தையும். பாவித் தற்கியைந்த அவிச்சின்னோபாதி, பதிவிம்போபாதி, அத்தியாசோபாதியென,

வுபாதிகண் மூன்றுள்ளனவாம். அவற்றுள் :—சுழுத்திவடிவமாகின்றுள்ள வவித்தையே யாவரணமெனப்படும் அவிச்சின்னேபாதியாம் சுழுத்தியவத்தையிற் பிராக்ஞனுக சட்டுண்டிருத்தலின் ஆவரணுவிச்சின்னே பாதியெனவும்,

பிரத்தியகாத்மாவிற் கதனதுகாரியமாகின்றுள்ள புத்தியின்கண் தங்கிய ஆத்மாவானது பிரதிவிம்பித்தலே பிரதிவிம்போபாதியாகும் : அந்தக்கரணப் பிரதிபலனனுகிக் கனவில்தைஜதனுக அதைப்பார்த்திருத்தலின் பிரதிவிம்போ பாதியெனவும்,

அந்தக்கரண சம்பந்தமாகவாய்த்த மிக்கசுகதுக்கங்களை, யநுபவிக்குமாறு போன்று ஆத்மா விடாதுமுயர்சிப்பதே யத்தியாசோபாதியென்பதாம் : மனேகற்பிதத்தாலுண்டான துக்கரூபமான விடயங்களைச் சுகம்போலக்கருதி நனவின்கண் ணடைதற்கு விசுவனுகமுயலுதலின் அத்தியாசோபாதியெனவும், ஆத்மாவிற்கு அவாந்தரமாக வந்ததுபோலத் தோற்றினவென்க.

இங்ஙனம்எய்திய அத்தியாசவிலக்கணமெனல் கிளிஞ்சலே வெள்ளியெனக் கருதுமாறுபோன்று ஒன்றைமற்றென்ருகக் கருதுதலாம். அந்த அத்தியாசமானது மித்தையாத்தியாசம், இதராத்தியாசம், இதரேதராத்தியாசம், சத்தியாத்தியாசம்என நான்குவகைப்படும். அக்கினிசம்பந்தத்தாற் சலத்துக்குட்டணத்தன்மை வருமாறுபோன்று சதோதயமாகவிளங்கும் ஆன்மசந்நிதியில் முறையே போக்குவரத்தும், காணுதலும், நினைத்தலும், அறிதலும் வருதலினல் ; சரிப்பு தூலதேகத்திற்கும், காண்டல்இந்திரியங்களுக்கும், நினைத்தல் அந்தக்கரணங்களுக்கும், அறிதல் மூலஅகங்காரத்திற்கும் எனக்கொள்க. கூடஸ்தனது சந்நிதியை யடுத்திருத்தலால் அகங்காரமுதலிய நான்கிற்கும் இத்தொழில்க ளுண்டாயினவென்க. எனவே, இவைகட்கோரறிவு தனியேயின்றென்பதுபெற்ரும். நித்தியமான ஆத்மா அநித்தியமான தேகசம்பந்தமாய் அதன்சரித்தலாதியின்றெழிலைத் தனதாகப்பாவித்தலின் மித்தியாத்தியாசமெனவும்,

தனக்குவேருய இந்திரியங்களின்றெழிலைத் தனதாகக்காண்டலின் இதராத்தியாசமெனவும், மனமாதியவற்றை யானென்னதெனச் சங்கற்பிக்குஞ் சங்கற்பத்தைத் தனதாகப்பாவித்தலின் இதரேதராத்தியாசமெனவும், தானல்லாததைத் தானுகக்கருதும் அகங்காரத்தைத் தானுகஅறிதலின் சத்தியாத்தியாசமெனவுங்கூறுப. அத்தியாசோபாதியினுண்டான நான்கத்தியாசத்தின் இலக்கணமுணர்த்தியதென்க.

அகங்காராத்மாவிற்குள்ள எனையநான்கத்தியாசங்களாவன நிருபாதிகாத்தியாசம், சோபாதிகாத்தியாசம், தத்தருமாத்தியாசம், சம்பந்த மாத்திராத்தியாசம் எனப்படும். அவற்றுள் : அகங்காரான்மாவிற்கு நானென்னுந்தன்மை வருவதால் ரச்சுசர்ப்பம்போல நிருபாதிகாத்தியாசமெனவும், படிகத்திற்பற்றிய செவப்புப்போல அகங்காரத்தை யியல்பாகவுடைய ஆத்மாவிற்கு நான் கர்த்தாவென்னுந் தன்மைவருவதாற் சோபாதிகாத்தியாசமெனவும், அலைகளை

யுடையசலத்திற் பிரதிபலித்த குளிர்ந்தசந்திர விம்பத்தைப்போல இவ்விடத்தி லெழுந்த அந்தக்கரண பரமாத்மாவிற்கு இச்சாமியம் அகமென்றிருப்பதால் தத் தருமாத்தியாசமெனவும், நான்கும்பவானென் றகங்கொண்டு நிற்றலால் கப்பலிலிருப்போர் விவகாரத்தைப்போலப் பூமியிற் புத்திரர்முதலானவருடன் சம்பந்தித்திருப்பதினல் ஆத்மாவிற்கு சம்பந்தமாத்திராத்தியாசமெனவுஞ், சத் துக்கள்கூறுநிற்பர். நிருபாதிகாத்தியாசம் கயிற்றரவுபோலவும், சோபாதிகாத் தியாசம் படிகத்திற்காணும் சிவப்புமுதலியபோலவும், தத்தருமாத்தியாசம் சலப்பிரதிவிம்பம்போலவும், சம்பந்தமாத்திராத்தியாசம் கப்பலிலிருப்போரது விவகாரத்தைபோலவும் நிற்குமெனவுணர்க.

இங்ஙனங்கூறிய அகங்காரான்மாயாது?

ஆன்மசந்நிதியில் அகங்காரான்மா, அகங்காரவியலான்மா, காணதரு மான்மா, இந்திரியதரு மான்மாவென்னும்அகங்குடும்பான்மா ஆகியநான்குமாம்.

இவ்வத்தியாசங்கள் தனதுசந்நிதி சத்தையினாற்றேற்றினுந் தான்அதிற் சம்பந்தமின்றியிருத்தலின், ஆத்மாநிருவிகாரியெனலாம். அவற்றின் சம்பந் தங்களைத் தானறிந்துகொண்டிருத்தலிற் சமுசாரம் ஆத்மாவிற்கெனினுமமை யும். கூடஸ்தனது இச்சாயெத்தனமின்றி யவனதுசந்நிதியினியல்பாக நான்கத் தியாசமும், அகங்காரசம்பந்தமாக நான்கத்தியாசமும், ஆகியஇவ்வெண்வகை அத்தியாசங்களும் அவாந்தரமாக யுண்டானதுபோலத் தோற்றியவென்க.

மேற்கூறிய ஐந்தவத்தைகளுள் சாக்கிராவஸ்தையின் இலக்கணமுணர்த்தல்.

பெருந்தூலஐம்பூதமும், ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள்பத்தும், பிரா ணாதிவாயுக்களைந்தும், மனமுதலிய நான்குகாணங்களும், ஆகியஇவைகளே யோர்வடிவமாநின்றுள்ள அரியதூலசரீரத்தில், சாத்துவிதகுணமும், அகார வெழுத்தும், தெய்வம்விஷ்ணுவும்ஆகிய இவற்றிற்கிடங் கண்ணாகநிற்கப் பொதுமையாநின்றுள்ள இருதயமாகிய எட்டிதழ்க்கமலத்தில், விசுவனென்னு நாமமுள்ளசிவனும், விராட்டென்னு நாமமுள்ளஈசனும் ஒருங்கேகூடிநின்று, பலமுயற்சிகளால்வருந்தி, வனிதாதி விஷயங்களை யெல்லாக்கரணங்களா லும் கூடியனுபவித்தலே சாக்கிராவஸ்தை யெனப்படுவதாம். விழியிடம் பாவைவடிவரூபம். முற்கூறியசான்றாகிய ஜீவாத்மா தூலசரீரத்தினுள்ள இருதயகமலத்தில் விசுவநாமத்தோடும், விராட்டெனுங் கூடியிருந்து, நேத் திரஸ்தானமுன்னிலையிற் சகலவிடயானுபவங்களை யிந்திரியங்களாற் புசிப்பது சாக்கிராவஸ்தையென்க.

சோப்பனவஸ்தையின் இலக்கணம்.

பஞ்சமகாபூதமும், சித்தமும், புத்தியுமாகிய இவ்வேழினின்றும்நீங்கிய பதினேழின்மயமாநின்றுள்ள சூக்குமசரீரத்திலிருந்து, ஏனையராசதகுணமும்,

உகரவெழுத்தும், அதிதெய்வம் பிரமனுமாகிய இவர்க்கிடங் கண்டமாகிற்க, நல்லஇதயமென்னுந் தாமரைப்பூப்பொகுட்டில், தைசதனென்பவனும், இரணியகருப்பனென்பவனுங் கூடிநின்று, நனவின்வாதனையை மனமென்னு மந்தக்காரணத்தினல் அநுபவிப்பதே சொப்பனவஸ்தை யெனப்படுவதாம்.

நின்றெழுந்தபதினேழென்பன மனமும், அகங்காரமும், பிராணபஞ்சகமும், தசேந்திரியமும்.

முற்கூறியசான்றாகிய அந்தராத்மா சூட்சுமதேகத்திலுள்ள இருதயகமலப்பொகுட்டிற் றைசதனை யிரணியகருப்பனோடுங்கூடிக் கண்டஸ்தானமுன்னிலையில் வாசனைவிடயங்களை மனதினாற்புசிப்பது சொப்பனமென்க.

சுழுத்தியவஸ்தையி னிலக்கணம்.

பலவாறாகச்சென்று மேய்ந்துதிரியுங் குஞ்சுகளைச் சிறகிலடக்கிக்கொண்டு நித்திரைசெய்யும் பெண்பட்சியைப்போல, பலவாறாகவிரிந்த விருத்திபேதகாரியங்களை யுள்ளடக்கிக்கொண்டு, அந்தச்சாக்கிராதிவாசனையுடன் அந்நிலையதாகஆய்வுற்ற ஆன்மாவின்அநுசாரத்தில் ஏனையஇரண்டவத்தைகளும் மாறும்படியிருக்கின்ற அரிதாகிய பிரகிருதிமயமாகின்றுள்ள காரணசரீரத்தில், இயைந்ததாமதகுணமும், அகரவெழுத்தும், தெய்வமுருத்திரனும் ஆகிய இவற்றிற்கிட மிதயமாகிற்க, அந்தத்தாமரைப்பூவினது நடுப்பொகுட்டின்கண், அந்நிலையையங்கே யுணர்ந்துநின்றுள்ள பிராஞ்ஞனென்பவனும், அந்தரியாமியென்பவனு மொருங்கேகூடி மாயாசம்பந்த விருத்தியென்னும் நுண்ணியகாரணவிருத்தியினாற் பிரமாநந்தத்தை யநுபவித்தற் கியைந்தது சுழுத்தியவத்தையெனப்படுவதாம்.

ஷை நுண்ணியகாரணமென்றது அவித்தையான்மறைபட்டு மெலிந்துநின்றவித்தை; எனவே, சுழுத்தியின்அவித்தையினாலும், கனவின்மனத்தினாலும், நனவிற்காரணங்களினாலும் புசித்தலாம். பிரமாநந்தமென்றது அவித்தைகளனைத்துமிறந்து அவற்றால்வராநின்ற துன்பங்களனீங்கிய விடத்துள்ள சுகம்.

முற்கூறியசான்றாகிய பரமாத்மா காரணதேகத்திலுள்ள பிராஞ்ஞனை அவ்வியாகிருதனென்னும் பரனோடுங்கூடி யிதயகமலப்பொகுட்டுமத்தியில் இதயமுன்னிலையிற் பிராஞ்ஞவிருத்தியினால் ஆனந்தமனுபவிப்பதே சுழுத்தியவத்தையென்க.

துரியாவத்தையினிலக்கணம்.

இங்ஙனக்கூறிய சாக்கிரமுதலிய மூன்றவத்தைகளும், மூன்றுதருமங்களும், தூலமுதலிய மூன்றுதநுக்களும், அவற்றிற்குரியதானங்களும், இவையல்லாத பிரமன்முதலியமுத்தெய்வங்களுமெனக் கூறற்கியைந்த பரியாய நாமங்களேற்கவுரைத்த சாக்கிராவஸ்தையில், முற்கூறியசமலம்நீங்கி மனோவழக்சமுந்தவிர்ந்து பிரமத்தைத் தியானிப்பதுவே துரியமெனப்படுவதாம்.

சாக்கிராதிமூன்றை மூன்றவத்தையெனவும், அவைமூன்றுதன்மையாயிருத்தலின் முத்தருமமெனவும், மூன்றுதேகமாயிருத்தலின் முப்புரமெனவும், இருதயங்கண்டம்நேத்திரமென மூன்றிடமாயிருத்தலின் முத்தானமெனவும், மும்மூர்த்திகளாயிருத்தலின் முத்தெய்வங்களெனவும், இங்ஙனங்கூறிய கேவலசுழுத்தியாதிய மூன்றுமுதலியயாவும், நீங்கியவிடம் முற்கூறிய கமலம்நீங்கி மனவழக்கமுந் தவிர்ந்தெனவுங்கூறினர். தத்கமலம்அழிந்தென்றது கேவலசுழுத்திநிகழும் இதயத்தைநீங்கி யச்சுழுத்தியில்நனவாதியாவினிடத்து நிகழ்தலே.

முற்கூறியசான்றாகியஞானாத்மா அவத்தாத்திரயவிவகாரம் யாவுமின்றிவிலட்சணமான விடத்துள்ள சீவசைதன்னியனைப் பிரத்தியகாத்மனைக்கூடிச் சாக்கிரசுழுத்தியென்னுஞ்சமாதியிற் சின்மாத்திரமா யநுபவிப்பதேதுரியாவத்தையென்க.

துரியாதீதாவத்தையினிலக்கணம்.

அப்பரமான்மாவிடத்தில் மனதுலயிப்பதே துரியாதீதமெனச் சத்துக்கள்சொல்லுவார்கள்.

சான்றாகிய ஆநந்தாத்மா இவ்வறியுந்தன்மையனைத்தும் நீங்கினவிடத்துள்ள கூடஸ்தனைப் பரமாநந்தத்தைக்கூடி யாவுந்தன்மயமாக அனுபவிப்பதே துரியாதீத அவத்தையெனவும் விளக்கியதென்க. துரியத்தில் சீவேசுரரையும், அதீதத்திற் கூடஸ்தபிரமத்தையுங்கொள்க. எற்றினுக்கென்றால் நனவில்விசுவவிராட்டையும், கனவில்தைசதஇரணியகருப்பனையும், சுழுத்தியிற்பிராஞ்ஞனையும்பரனையுங் கூட்டியதாலென்க.

இங்ஙனங்கூறிய ஐந்தவத்தைகளுள் விருட்சமுதலியவைக ளேற்றற்பாலது இருள்மயமாநின்றுள்ள சுழுத்தியத்தையாம்; மிருகமுதலியவைகள் அடையற்பாலன சுழுத்தியுங்கனவுமாம்; தேவர்களுக்குச்சாக்கிரமும், மனிதர்களுக்குச் சாக்கிரமுதலியமூன்றுமாம்; சஞ்சலமற்ற வுன்மத்தனுக்குத் துரியமும், மேன்மையான யோகிகளுக்கு வரற்பாலன துரியாதீதமுமாம். சுகதுக்கத்தால் மொத்துண்டுநிற்கு மனிதர்களுக்குச் சாக்கிரமுதலியமூன்றுந் தம்மிற்றாமே தோன்றிவருகின்ற பந்தசாதனமாயிருக்கும். துரியந்துரியாதீதமாகிய ஏனையவிரண்டும் யோகங்காரணமாகச் சதோதயமாகவிளங்கும் முத்திசாதனமாநிற்கும். இவ்வைந்தவத்தைகளுந் தந்தமக்குள்ஒன்றிலொன்றில்லாமையினாற் காலதேசவஸ்துக்களின்நியமம் பொய்யாகமுடியும்.

விலங்குமுதலென்றமையின் பறவையும், ஊர்வனவும், சலஜந்துக்களுங்கொள்க. மருளரென்றது ஒருதெய்வவயப்பட்டவன். எனவே, அறிவின்வயப்பட்டு அதுவாய்நின்ற துரியனாயிற்று. முற்கூறியபஞ்சாவத்தைகளுள் பரிசவறிவொன்றையுடைய தாவரவுயிர்கட்கு மற்றென்றுந் தோன்றாதிருத்

தலின் அவைகட்குச் சுழுத்தியொன்றேயெனவும்; பரிசமிரதமாகிய விரண்டறிவும் நீரில்வாழும் நத்துமுதலிய வுயிர்கட்கும், பரிசமிரசகந்தமாகிய மூன்றறிவுஞ் செல்லுமுதலிய வூர்வனவுயிர்கட்கும், பரிசமிரசகந்தமுருவமாகிய இந்நான்கறிவும் வண்டாதிவுயிர்கட்கும், சத்தமாதியையறிவும் நடப்பனபறப்பனவாகிய பசுபட்சிமுதலியவுயிர்கட்கும், கனவைப்போலத் தோற்றியநினைவு சுழுத்தியைப்போல மறைதலின் இந்நான்குவகுப்பிற்குஞ் சொப்பனஞ்சுழுத்தி யிரண்டேயெனவும்; ஐந்தறிவுடையதேவர்கட்குத் தோற்றியநினைவு மறையாதிருத்தலின் அவர்கட்கு நனவொன்றேயெனவும்; இவ்வைந்தறிவையுமுடைய மானிடவுயிர்கட்குத் தோற்றியநினைவு ஒருகாற்றெரிவா யிருத்தலின்நனவும், ஒருகாற்றோன்றியுந் தோன்றாதிருத்தலிற்கனவும், ஒருகாற்றோன்றா திருத்தலிற்சுழுத்தியும் ஆகுமாதல்பற்றி மூன்றேயெனவும்; மருளர்க்கு ஆசான் அனுக்கிரகம்பெற்று ஆத்மவிசாரணையின் உதயமானஅறிவு சொப்பிரகாசமாய் விளங்களிற் றுரியமொன்றே யெனவும், வரயோகிகட்கு அங்ஙனந்தோன்றியது அறிவானந்தமா யதீதப்பட்டிருத்தலிற் றுரியாதீதமொன்றேயெனவும், முன்மூன்றவத்தையு மான்மாவைமறைக்குமெனவும், மேலிரண்டவத்தையும் ஆத்மாவை வெளிப்படுத்து மெனவுங்கொள்க.

வினா:—இங்ஙனமாயின் தேவர்முதலிய அறுவகையாருநிற்க, மனிதரொருவர்க்கே யிம்மூன்றவத்தை வந்தகாரணமென்னை?

விடை:—தேவர்களுக்குச் சாக்கிராவத்தையினில் நினைவன்றி மறைப்பின்மையினாலும், ஏனையஐந்திற்கும் மறைப்பன்றி நினைவின்மையினாலும், மானிடர்க்கு அவ்விரண்டுமிருத்தலினாலும், இவ்விரண்டும் நீங்கியவிடம் முத்தியடைதற்கு ஆதாரமாதலினாலும் வந்தனவென்க.

வினா:—அற்றேல் முப்பத்தாறுதத்துவங்களோடுங் கூடிவிவகரிப்பது சாக்கிரமெனவும், இவற்றில் அஸ்திமுதற் பதினொன்றுநிற்க, ஏனையஇருபத்தைந்து தத்துவங்களோடும் விவகரிப்பது சொப்பனமெனவும்; இவற்றில் மனமுதலிய இருபதுநிற்க, ஏனையஐந்து தத்துவங்களோடும் விவகரிப்பது சுழுத்தியெனவும், இவற்றில்வித்தையவித்தை யிரண்டுநிற்க ஏனையமூன்றுதத்துவங்களோடும் விவகரிப்பது துரியமெனவும், இவற்றில்சீவன்ஈசன் இரண்டுமல்லாத ஏனையபிரமமொன்றும் விவகரிப்பது துரியாதீத மெனவுங்கொள்க. இவ்வைந்தவத்தையும் மானிடவுயிர்கட்குச் சமுதாயத்தின் நித்தியப்பிரளயம் போலத் துயிலினும்விழிப்பினும் நியதிப்படி யனுபவமிருக்கச் சுரோத்திரியனுக்கிரண்டும், விராத்திரியனுக்கு மூன்றுமெனக்கூறியதென்னை?

விடை:—மானிடவுயிர்கட்கு இவ்வைந்தவத்தை யுளவாயினும் விராத்திரியன் அறியாமையின்மூன்றவத்தையிற் சஞ்சரிக்குமிடத்து அவ்விரண்டும் இவற்றினடங்கிநிற்றலின் இவர்கட்கம்மூன்றேயெனவும், சுரோத்திரியன் அறிவினுலிவ்விரண்டினுஞ் சஞ்சரிக்குமிடத்து அம்மூன்றும் இவற்றிலடங்கிப் போதலின் இவர்கட்கிரண்டே யெனவுங்கூறியதென்க.

இவ்வைந்தவத்தையையுய்நீக்குமிமித்த மிவைகளினிலக்கணமும் இவற்றையடைந்தவர்க ளிலக்கணமு முணர்ந்தியதென்க.

மூன்றாவது சத்தியல் பரநிலையிலக்கணம்.

வேடம் வேட தாரியென் பவற்றுள்
வேட முபாதித் திரைய மான்மா
வேட தாரி யாகு மிதனை
யவத்தாத் திரைபத் தனுதினங் காண்பம்.

(இ-ள்.) வேடம் வேடதாரியென இரண்டாம். இவற்றுள் வேடம் உபாதித்திரையமும், வேடதாரிஆன்மாவுமாம். இங்ஙனமாயநிலையைமூன்றவத்தை தோறும்அனுதினமும்யாமேகாண்கின்றனம், வேறுசாட்சிவேண்டுவதின்று. எ-று.

இதனால், சத்திஃதென்னத் தானே விளங்கும்.

(இ-ள்.) இங்ஙனங்கூறியதினால், ஆன்மாசத்தென்பதாயிற்று.

தூல சூக்கும காரண வுபாதி
தத்த மவத்தை யன்றிக் காணா.

(இ-ள்.) தூலஞ்சூக்குமங்காரணமென்னுமுபாதித்திரையம் தத்தமவத்தைதோன்றியக்கண்ணன்றிக் காணுவாம். எ-று. தூலம் நனவிலும், சூக்குமங் கனவிலும், காரணஞ்சுழுத்தியிலுந்தனிக்காணுயன்றி ஒன்றிலொன்றுகாணு வென்பது.

அவத்தை தோறு மவ்வவ் வுபாதி
யகர்த்தா வாதலி னான்மா வன்றிக்
காணு வாகி லதுசத் தாகும்.

(இ-ள்) அவ்வவ்வுபாதிகள் அகர்த்தாவாதலின் அவத்தைகடோறும் தாமேஆன்மாவையன்றி எழுந்துகாணுவாம். அங்ஙனங்காணுவாயின் அப்போதுயாது சத்தெனப்படும். எ-று.

எனவேகர்த்தத்துவம் ஆன்மாவுக்கென்றாயிற்று.

சீவ னான்மா வொன்றென லுடலுயிர்
ஒன்றெனல் போலு முரைப்பார் மிசைப்பிழை.

(இ-ள்.) சீவனென்பதும், ஆன்மாவென்பதும் ஒருபொருட்பல்பெயரென்பது, உடலென்பதும் உயிரென்பதும் ஒருபொருட்பல்பெயர்என்றாற்போலும். இப்பிழை இவற்றின்மேலன்று, ஆயாதுரைப்பார்மேற்று. எ-று. இவ்வையமகலக்கூறுதும்.

இரண்டெனி லான்மா வுயிர்போற் கற்பித
மாகா திழுக்கா மிலக்கியார்த் தத்தே.

(இ-ள்.) ஒன்றல்லாவிடத்து இரண்டென்போமெனில், உயிர்போல் ஆன்மாவுங் கற்பிதமாகுமா? ஆகாதே. ஆகுமெனின், இலட்சியார்த்தத்திற் குற்றமாமுடியும். எ-று.

ஒற்றுமைநயத்தால் உடலுயிரொன்றெனின், வேற்றுமைநயமாகிய சித்து சடமெனப்படாதிருக்கவேண்டும். இரண்டெனின் சித்துபோற் சடமுஞ்சுசாதிகமாகவேண்டும்; ஆகாததாற்கூடாது. இதுபோல் அறிவேஉயிரெனினும், ஆன்மாவெனினுமொக்கும். ஒத்தலாலொன்றெனின், உபாதித்திரயம் வேடம், அறிவுவேடதாரி. மூன்றவத்தையிலும் உபாதித்திரயமாகக்காண்டல் அறிவு. அகர்த்தத்துவமாதலின் அவைதாமேயெழாவாம். அறிவு அவ்வேடமாநிற்குங்காறும் சீவனெனவும், நிற்பினுந்தானவ் வேடமல்லாததால் ஆன்மாவெனவும்பெயர்பெறும். வேடம்வேடதாரி யாகாததால் ஒன்றெனப்படாது. இரண்டெனில், வேடதாரியைத்தவிர வேடமோர் முதலன்றாதலானும், முதலல்லாததை யளவையிலொன்றெனற்கு உடன்படாதாதலினானுங் கூடாதென்க. சீவன், ஆரோபம், ஆன்மா, அதிஷ்டானம். பொருளன்மை, சீவன், பொருள் ஆன்மா. உதாரணம். "சீவனென்கின்றசொல்லும்பொருளுமாய்ச்செறிந்தவான்மா" பொற்பணி, மட்கடம், நூற்படம் என்றாற்போலும். அறிவென லொன்றே யவசரம் பற்றிச், சீவ னான்மா வென்பதன்றி, வாஸ்தவ மன்றிவ் விருமைப் பெயரும்.

(இ-ள்.) அறிவென்பதொன்றே அவசரக்காரணமாகச் சீவன் ஆன்மாவெனப்பட்டதன்றி இவ்விருவகைப்பெயரும் அறிவுக்கு வாஸ்தவமன்று எ-று.

அறிவு, வாஸ்தவம், இருமைப்பெயரும் கற்பிதம். இது சோதனையாதிமுகத்தால் ஏற்படும்.

(அறிவே) அவத்தை யுபாதி காட்சித் திரய, மாகிய வவசரஞ் சீவ னாகா, வவசர மான்மா வெனப்படு மென்ப.

(இ-ள்.) அறிவாகியசைதன்யமே; அவத்தாத்திரயம், உபாதித்திரயம், காட்சித்திரயமாகிநிற்கும் அவசரம் சீவனெனவும், இங்ஙனமெல்லா மாகாது நிற்குமவசரம், ஆன்மாவெனவுங்கூறப்பட்டு இருக்குமெனச் சந்துக்கள் சொல்லுவார்கள்.

இதனைத்தினவனுபவத்தில் எவ்வுயிருந்தடையின்றிக்காணலாம்.

தாயுமானர்.

"பாராதி பூதநீயல்லை யுன்னிப் பாரிந்திரியங் கரணநீயல்லை
யாராய்உணர்வுநீ யென்றான்"

இனிஞானபூமிகளேழையுஞ் சுத்தசாக்கிரமுதலிய வைந்தவத்தையையுங்கூறுகின்றது.

புலவர்புகழ் முதற்பூமிசுபேச்சைவிசாரணையிரண்டாம்பூமியாகு
நலதனுமானசிமூன்றாம்பூமிசத்துவாபத்திநாலாம்பூமி
சொலுஞ்சமுசத்திப்பேரும்பதார்த்தபாவனைப்பேருந்துரியப்பேரு
மவினமறுமகனைபைந்தாமேழுபூமிகளாவகுத்தார்மேலோர்.

(பொ-ரை.) பொருளல்லவற்றைப் பொருளாகக்கொள்ளுந் துர்ச்சங்கச் சார்பகன்று மேலாயஞானமாதற்குவிரும்புவது சுபேச்சையெனப்படுவதாம், பொருளைப்பொருளாகக்கொள்ளுஞ் சற்சங்கத்தைத்தழுவி யவருரைக்குமொழிகளை யையமறக்கேட்டு, இஃதொக்க ஞானசாஸ்திரங்களிற் பலகாற்பழகல் விசாரணையெனப்படுவதாம், உண்மையெனச் சொல்லுதலா லவற்றினம்பிக்கையுற்று முன்னர்தனக்குச் சங்கமாநின்றுள்ள வீடணுந்திரியங்களை விட்டகறல் தனுமானசியெனப்படுவதாம், இந்தமூன்றேதுக்களாலுஞ் சற்சங்கமயமான மனதின்கண் மெய்யுணர்வெழல் சத்துவாபத்தியெனப்படுவதாம், உண்மையாதோ வதில்மனமானதழுந்தி மித்தையெனப்படுவன வெவையோ வவற்றையொருங்கேமறந்துவிடுதல் சமுசத்தியெனப்படுவதாம், அத்துவிதாநந்தம் உதயமாய் அதனால்திரிபுடிபோகத்தகுவது பதார்த்தாபாவனையெனப்படுவதாம், பிரமவஸ்துவிலே யெங்ஙனமிருந்ததோ வஃதிருந்தவண்ணந் தானுமிருக்க வதனுலெய்து மவுனசுபாவந் துரியமெனப்படுவதாம், இந்தத்துரியபூமியையே முன்னேதுரியாதீதப்பதமென்று சொன்னேமே யதனையுமிப்போது கூறக்கேளுதி. எ-று.

இங்கேஉண்மையாவது ஆன்மா. உதாரணம். "மெய்யதேதெனில் சச்சிதானந்தமாய் வியாபிக்குமான்மாவே." இன்னுமுண்மையாவது; ஞானம். சிவமெனற்கும், ஆன்மாவெனற்கும் பொருள்; ஞானத்தையன்றிச் சோதனையில்வேறுகண்டாருளரோ? உளரெனின், உபாதிகுணந்தொழிலன்றே? இம் மூன்றைபுந்தள்ளிக் காட்டவேண்டும். கூடாதெனின், ஒத்துக்கொள்ளுதற்குத் தடையென்னை? இதுநிற்க. சுசாதியாதிபேத மிறந்ததாதலின் ஞானத்தில் மனமுறைதற்குத் தடையென்னை? உறையவே, மித்தையெல்லாமறக்கவரும். மறக்கவரவே, அத்துவிதானந்தம்வரற்கும், திரிபுடியொழிவுக்கு மிடமுண்டாம். உண்டாகவே, பரமெங்ஙனமிருக்கின்றதோ வங்ஙனமிருக்கத் தானேயமையும். அங்ஙனமாயவமைதியே, சுபாவமெனத்தக்கது. அச்சுபாவமே மகாமௌனமாம்.

சிவஞானம்விரும்பல் ஞானநூல்பழகல், ஈடணைகள்விடல், இம்மூன்று மூலகத்தை மறக்கற்பாலதன்றாமையின், புவிமூன்றினுமுலகந்தோன்றுமெனவும், அவை சாக்கிரமெனவும், ஞானேதயவிளக்கம் உலகஞ் சாயாவடிவம் போற்காணச்செய்தலின், மூன்றதற்கப்பால் நான்காம்பூமிசொற்பனமெனவும், தத்துவத்தின் மனமுறைந்தபோது மித்தையெனப்படுவன வற்றையெல்லாம்

மறந்துபோகச் செய்தற்பாலதாதலின் ஐந்தாம்பூமிசுழுத்தியாகுமெனவும், அப்போதங்கே யெழுமானந்தம் துவிதமிறந்த தாதலினானும் திரிபுடியென்பதிருத்தற் கிடமின்றாமையினானும், அவ்வானந்தந் தெரிவுமயமாதலினானும், அதனை அற்புதமாஞ் சுபானுபவமிகுமாறாம்புவி துரியமெனவும் சுத்தசைதன்னிய மெங்ஙனமிருந்ததோ வங்ஙனந்தானாதலை, அதற்கப்பாலோர் கற்பனையில்லாத விட மதீதமென்று மவுனமாக்காட்டும் வேதமெனவுங் கூறியதென்க.

பிரபோதசந்திரோதயம். மோகவேந்தனரசாட்சி.

தனையுவந் தீன்ற மாயை தன்குறிப் பறிந்து மைந்தன்
புனைதரு நவத் துவார புரங்கள்பல் கோடி கண்டு
தினையள வளவைத் தாகச் சீவபல் கோடியாக்கி
யனையதன் றாதை தன்னை யங்கங்குச் சிறைசெய் தானால்.

இடம்பெறுஞ் சோதி ரூப மேகமா கியும்பல் கோடி
யுடம்புக டோறு மங்கங் குறைகின்ற தெவ்வா றென்னிற்
படர்ந்தொளி பரப்புஞ் சோதிப் பரிதியொன் றாயுந் தெண்ணீர்க்
கடந்தொறு மோரோர் விம்பங் காட்டுதல் போலு மன்றே.

விவேகவேந்தன் முடிசூடல்.

திருமுடி விவேகர்கோன் சிரத்திற் சூட்டுவித்
தருளனுந் தம்பொரு ளவன கத்தில்வைத்
தொருமலர் வாணியு முயர்ந்த பத்திக
ளிருவரு மவனிடத் தினிதின்வாழ் வுற்றார்.

தாயெனு நிவர்த்தி யோடுந் தந்தைசேர்ந் துவகை கூர
மேயநற் சுமதி மேலும் வியனுப நிடதை மேலு
நேயமுற் றறிஞர் கோமா னிருபர்கள் முதலோர் சூழத்
தூயசெங் கோன டாத்தித் தொல்லறம் புரக்கு நாளில்.

பிரபோதன் முடிசூடல்

தேவர் மனிதர் விலங்கு புள்ளா திகளு மல்லேன் றிகழசுர
மாவ னவுமே யல்லேன் மண் ணீர்தீக் கால்வா னனைத்துமல்லே
னேவு கருமேந் தியங்களைந்து மியலு ஞானேந் தியங்களைந்து
நாவி லுரைக்கு முயிர்க ளைந்துங் கரண நான்கு நானலனே.

பொங்கு கடலு மலையும் விண் ணும் புவியுஞ் சுரரு மானிடருஞ்
சிங்கம் புலியா தியவிலங்குஞ் சீவகோடி பிறவு மென்ன
வங்கங் குறுநாம ரூபாதி யவற்றாற் பலவா யிருப்பதெல்லா
மெங்குஞ் சச்சி தானந்த மயமா யிருந்த தெனக்கென்றான்.

திருவிளையாடல். அங்கம்வெட்டியபடலம்.

நிலைநிலையாப் பொருளுணர்ந்து பற்றிகந்து கரணமொரு நெறியேசெல்லப், புலநெறிநீத் தருள்வழிபோய்ப் போதமாந் தன்வலியைப் பொத்திநின்ற, மலவலிவிட் டகலவரா வுமிழ்ந்தமதி போல் விளங்கி மாறியாடுந், தலைவனடி நிழல்பிரியாப் பேரின்பக் கதிபடைந் தான் றமிழர்கோமான்.

சுக்கிலயசுர்வேதத்தில் பைங்களோபநிஷத் 4-வது அத்தியாயம்.

“நானேபிரமம்” என்றறியாதவனுக்கு முத்தியுண்டாகிறதில்லை.

யசுர்வேதத்தில் வராகோபநிஷத் 2-வது அத்தியாயம்.

என்னுடைய பூரணன்மாவைத்தவிர ஜகத், ஜீவன், ஈஸ்வரன், மாயை முதலியவைகளில்லை. அவர்களுக்கு நான்விலக்ஷணன். (இவ்விடத்திலான்மாவென்பது பிரமத்தை அதிலிருந்தேயாவும்உற்பத்தி.) சத்தியமான பரப்பிரமம் நான் என்னைத்தவிர வேறேயாதொன்றுமில்லை. மகாகாசத்தில், கடாகாசம், மடாகாசம்போலச் சிதாகாசமாயிருக்கிற என்னிடத்தில் ஜீவேசுரர்கள் கற்பிக்கப்பட்டிருக்கிறார்கள். (ஜீவேசுவரர்களாகிய) ஆன்மாவின் சிருட்டிக்குமுந்தி எதானதுஇல்லையோ, அப்படியேமுடிவிலும் எதானதுதள்ளப்பட்டதோ, அதானதுமாயையென்று விவேகத்தினாலே பிர்ம்மஞானிகளாற் சொல்லப்படுகிறது. மாயையும், அதன்காரியமும் நசித்துப்போனால், ஈசுரத்துவமுமில்லை சீவத்துவமுமில்லை, ஆகையினாலே நிருபாதிகமான ஆகாசம்போல நான்சுத்தனாகவும் சித்தாகவுமிருக்கிறேன்.

(இவ்விடத்தில் ஆன்மாவென்பதுபிரமம், நான்என்பது சீவத்துவங் கழன்ற துரியாதீதமானபிரமநிலை.)

மேற்படி மூன்றாவதுஅத்தியாயம்.

அந்தப்பிர்ம்மம்நானே (நீயே, என்றுஎப்போதும் மௌனத்தை ஆசரயி.

மேற்படி நான்காவதுஅத்தியாயம்.

சிவனேகுரு, சிவனேதேவன், சிவனேவேதம், சிவனேபிரபு, சிவனேநான்,சிவனேசகலமும்,சிவனைக்காட்டிலும்வேறொன்றுமில்லை.

வாயுசங்கிதை ஞானநிலைமையுரைத்தவத்தியாயம்.

அறையுமகேச் சுரன்சத்தி மாயையார் மலத்தால்
நிறையமுன மேமறைந்து நின்றுறையு மான்மாவை

முறையிலந்த மாயைதான் மூடுமல மாயைகெட—
வுறைவதுவே சிவமென்ன வுரைப்பரா லெனவுரைத்தான்.
பாவகத்தா லழியாத சிவன்றனருள் பயக்குமான்
மேவியவவ் வருளினுன் மலமாயும் வீந்ததற்பின்
ஓவிலப் புருடனே சிவனென்ன வுறைவனெனத்
தாவில்தவத் தோர்பின்னு மிவையெடுத்துச் சாற்றினரால்.

சூதசங்கிதை ஞானயாகவைபமுரைத்த அத்தியாயம்.

மல்லலான் மாபலவாய்த் தோன்றுவதுஞ் சிவான் மாபரான் மாவெனும்பே தந்தோன்று மதுவும், சொல்லனுறி னுபாதியா லன்றிமா முனிவீர் சுபாவத்தி னின்றஃதெப் படியென்னிற் கேண்மின், வல்லகட முதலாய வுபாதிசம்பந் தத்தால் வான்பேத மாய்த்தோன்று மதுபோனு முணர்வீர், செல்லலில்வே தாந்தவாக் கியங்களெலாம் பரம சிவனொருவ னேயென்னத் தெரிவிக்கு நாளும்.

முன்னுரைத்தசேதனவசேதனவாகாரங்கண்முதன்மையாகப்
பின்னுரைத்தவிருப்பதிலேயெனுமளவும்பிறங்கநிரூபணஞ்செய்காலை
மன்னுமொளிப்பரசிவனோடபேதமேயாஞ்சுருக்கிவகுத்தாம்யாவும்
பன்னுசிவமேயன்றிவேறில்லைநன்குணர்வீர்பண்புளீரே.

மேற்படி விசேடசிருட்டி.

தத்துவ ஞானத் தாற்பர சிவமே சகமாயை சீவன்முன் னை, கொத்துறு சொரூப மாகவே தெரியுங் குறித்திடின் வேறொன்று மிலைச்ச, கத்துவே றாகப் பார்ப்பவன் பந்தக் கடுந்தளை நீங்குறா னென்றும், பொத்துமா மலத்தி னீங்கியின் னருளைப் புணர்ந்தின்ப மார்தரு முனிவீர்.

மேற்படி ஆன்மானன்ம விவேகமுரைத்த அத்தியாயம்.

ஆதலால் பரமார்த்த மாப்பிரத்தி யக்கான்மா
பரமேயம்ம
போதகுரு வுபதேச மாதிகளா லனன்மாவாப்
பொலிந்துதோன் றுங்
காதலுறு மேவற்றையுமான் மாவாகத்
தெரிந்துகொண்டான் மாவையுங்கற்
றோதலருந் தவத்திர்கத் தப்பிரம
மென்றுள்ளே நிச்சயித்து.

அக்குரு கடாட்சமுஞ் சிவப்பிரசா தத்தாலே யமையமேவு
நக்கசத்துச் சீவன்முத லானதெல்லாஞ் சிவமென்னு ஞானந்தானே
தக்கசிவப் பிரசாத மாகுமந்த ஞானமுள்ள தலைமையோனே
மிக்கசிவ ஞானியா வானென்று நான்மறையும் விள்ளுமாலோ.

சூதசங்கிதை கடவல்லியோடுசுவேதாச்சுவதரமுரைத்தது.

இரதிகனு கியசீவ னிரதமுடலம் புத்தியினை தேர்ப்பாகன்
விரவுறு மிந்திரியங்க ளச்சுவங்கள் மனம்பாசம் விடயமெல்லாம்
பரவுறு சஞ்சார தேயங்க ளிவைகளொடு பண்பிற்கூடி
யரதநமா முடியமரி ரெல்லாவற் றையுநாளு மனுபவிப்பான்.
இந்திரிய மஞ்ஞானிக் கவசமா யிருக்குமிவை தேர்ப்பாகற்கு
நந்தியடங் காப்பரிபோ னற்பரிபோல் வசமாய்ஞா னிக்கிருக்கு
மந்திலெவன் விஞ்ஞான மனமுறைசா ரதிபாச மாயுள்ளானுய்ச்
சந்ததமுஞ் சுசியாகி யிருக்கின்றான் பரமபதஞ் சார்வானன்னோன்.

ஷை சமாதிவிதியுரைத்தவத்தியாயம்.

மேவரு மறைக ளத்து விதமென விளம்பு மச்சொற்
றூவரும் பொருள்வே றன்மை தானென வுரைப்ப ரற்றாற்
சீவர்கள் பலருந் தானுப் நிற்பனந் தேவ தேவன்
பாவனை துவிதங் கொள்ளிற் பவமொழி யாது நாளும்.

பெருகுறு பரமா னந்தப் பேரொளி யொன்றே யேனு
மொருவிறன் மாயை யாலே யுறப்பல பேத மாகிக்
கருதும்வான் மடாகா சஞ்செய் கடாகாச மாயி னாற்போற்
றிருகற விளங்கு முண்மை தெளிதரிற் பேத மின்றே.

கூர்மபுராணம் சாங்கியயோகமுரைத்த வத்தியாயம்.

நித்திய மாகு மான்மா வேகமாய் நிகழ்த்து மாயா
சத்தியா யளப்பில் பேத மாமுறு பேதஞ் சாற்றில்
வைத்தநீர்க் குடங்க டோறுந் தோன்றிடு மதியம்போல
வுய்த்திடு முபாதி தன்னாற் பற்பல வுருவந் தோன்றும்.

காசிகாண்டம்.

இலகொளிய கதிரொன்று யிரம்புனல்பெய் குடங்கடோறு மியைந்துநாளும், அலகில்பல வுருவாகித் தோன்றுதல்போற் சராசரங்க ளனைத்துமாகி, உலகமுழு வதற்குமொரு தனிக்கடவு ளாகியுல

களங்தமாலும், மலரயனு மறியாது நின்றநின்றன் சேவடிகள் வணங்குவாமே.

பாகவதம்.

அருவ மாமறி வானவ ஞக்கைகள் பலவும்
ஒருவ ஞகிபே யுறைகுவ னென்பதை யுணர்ந்தேன்
பருதி வானவ னெருவனே யாப்பல கடத்தின்
மருவு நீர்தொறு நிழல்பல வாயுற மதித்தே.

அமுதசாரம் அணுப்பிரவேசம்.

ஆன கடங்க ளளவிலவற் றுட்புகுந்து
வானகந் தானின்ற வாறெக்கும்—யோனிகளெண்
பத்துநான் காயிர நூ ருகப் படைத்தவற்றுள்
நித்தனர் நின்ற நிலை.

சிவஞானமுனிவர் 4-ம். சூ. மனமாதியாலென்னும் வெண்பாவுரையில், "இதனனேஅந்தக்கரணங் கீழுள்ளவற்றைநோக்கிச் சித்தாமாறும், மேலுள்ளவற்றைநோக்கி அசித்தாமாறும், உயிர் அவ்வாறன்றி யாண்டுஞ் சித்தாமாறுங் கண்டுகொள்க." என்றுகூறியிருப்பதைக்கண்டுகொள்க.

சிவஞானசித்தியார் 4-ம். சூ. 24-ம். செ.

தோற்பாவைக் கூத்துந் தொல்லைமரப்பாவை யியக்க முஞ்சீர்த்
தேர்ப்பாரிற் செலவும் வேருய்ச் செலுத்துவோர் செய்தி தானும்
பார்ப்பாய வேடங் கட்டி யாடுவோர் பரிசு போலும்
ஆர்ப்பாய காயந் தன்னை யான்மாநின் றுட்டு மாறே.

திருமந்திரம்.

சாக்கிர சாக்கிர மாதி தனிலைந்து
மாக்கும லாவத்தை யைந்து நனவாதி
போக்கி யிவற்றெடும் பொய்யான வாறுறு
நீக்கி நெறிநின்றெ னுகியே நிற்குமே.

இந்திய மந்தக் கரண மிவையுயிர்
வந்த ருக்க வுடலன்று வானாது
தந்திடு மைவிதத் தாற்றற் புருடனு
முந்தின மன்னுமா றுறு முடிவிலே.

முன்னை முதல்வினை யாட்டத்து முன்வந்தோர்
பின்னைப் பெருமலம் வந்தவர் போத்திட்டுத்
தன்னைத் தெரிந்துதன் பண்டைத் தலைவன்றான்
மன்னிச் சிவமாக வாரா பிறப்பே.

உள்ளம் பெருங்கோயி லூனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளித் தெளிந்தோர்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே.

"பிரானல்ல நாமெனிற் பேதையுலகம், குராலென்னும்."

அன்றிய பாச விருளுமஞ் ஞானமுஞ்
சென்றிடு ஞானஞ் சிவப்பிர காசத்தா
லொன்று மிருசுட ராமரு ளுதையத்
துன்றிருள் நீங்குதல் போலத் தொலைந்ததே.

கடங்கடந் தோறுங் கதிரவன் றோன்றி
லடங்கிட மூடி லவற்றி லடங்கான்
விடங்கொண்ட கண்டனு மேவுப காயத்
தடங்கிட நின்றது மப்பரி சாமே.

சாம்பிரதாய சிந்தனை.

பச்சோந்தியாகிற விஷயத்துக்குத் துரியமாகிறமயில் தான்சமர்த்தாயிருந்தும், தன்னைப்பாராமல் தன்கண்ணைக் கொடுத்துவிட்டது; தன்னைப்பார்த்தால் கொடாது. தன்வியாபகத்தைப் பார்த்தபோது, தன்னிச்சையென்று தெரிந்தது, இதுதன்னிச்சையென்று பார்க்கின்றதற்கு வினைதேவையில்லை. மயிலானது—குஞ்சரத்தையுங் கொல்லும்படியான விஷமுள்ளபாம்பைப் பிடித்துவிழுங்குஞ் சக்தியுள்ளதாகியும் பெரியஜந்துவாகியுமிருந்தும்; சிறியஜந்துவாகிய பச்சோந்தியைக் கண்டவுடனே, தன்னைப்பார்த்தால் கண்ணைக்கொடாது, தன்னைப்பார்க்காமல், அதற்குப்பயமடைந்து சமீபத்திற்சென்று கண்ணைக்காட்டியவுடனே, அதுகொத்துகின்றது. எப்போதுகண்ணைக்கொடுத்ததோ, அப்போதேதன் பலங்குறைந்துவிட்டது. அதுபோலத், துரியமென்னுமயிலானது சத்தாமாத்திரமாகியும், அவஸ்தாத்திரய, முதலியவைகளைச் சாக்ஷியாகவிருந்து அறியுஞ் சக்தியுள்ளதாகியுமிருந்தும் அசத்தாகியும் அல்பமாயுமிராநின்ற விஷயத்தைப் பார்த்தவுடன், தன்னைப்பார்த்தால் தனதுஞானங்கெடாது. அங்ஙனந்தன்னைப்பார்க்காமல் தன்கண்ணாகியஞானத்தைப் பச்சோந்தியாகிய விஷயத்திற்குக் கொடுத்துத்தனது வியாபகவிளக்கத்தையு மறந்துவிட்டது. ஆதலால், விஷயவாசனையி லறிவைச்செலுத்தாயல், தனதுஞானவிளக்கத்தை விடாதிருக்கவேண்டும்.

திருச்சிற்றம்பலக் கோவையார்.

(பே.) மனத்தாற்கண்டிலேனென்னெனவருந்தல்.

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளு
முறைவா னுயர்மதிற் கூடலி னுய்ந்தவொண் டீந்தமிழின்
றுறைவாய் நுழைந்தனை யோவன்றி யேழிசைச் சூழல்புக்கோ
விறைவாதடவரைத்தோட்கென்கொலாம்புகுந்தெய்தியதே. 20

(சே.) உயிருளத்துடனே யுற்றதுரைத்தல்.

கோம்பிக் கொதுங்கிமே யாமஞ்ஞை குஞ்சரங் கோளிழைக்கும்
பாம்பைப் பிடித்துப் படங்கிழித் தாங்கப் பணைமுலைக்கே
தேம்பற் றுடியிடை மான்மட நோக்கிதில் லைச்சிவன்று
ளாம்பொற் றடமலர் சூடுமென் னுற்ற லகற்றியதே. 21

ஆன்மா மறதியா மஞ்ஞான நோய்நோக் ககிலசகம்
ஆன்மாவே தானு மருஞ்ஞான நோக்கா லகம்பிரமம்
ஆன்மாவே போல்வா ளரிமதர்க் கண்ணிரு நோக்கதுபோல்
ஆன்மா வகிலமா பல்லவாந் தன்மையா மாய்ந்திடினே.

ஆய்ந்த பிணிக்கா மருமருந் துள்ள தருஞ்சிலம்பில்
ஆய்ந்த தொடியா ளவனேனைக் கவளே யருமருந்தென்
றுய்ந்த பெரியோ ரறைவரஞ் ஞானப் பிணிக்கதுபோல்
ஆய்ந்தமெய்ஞ் ஞான மருமருந் தாமலீ தயவில்லையே.

அயலில்லை யாகி யனுகிற்றன் னென்று மகலில்விடம்
அயலில்லை யாகி படுந்தி யவள்பெற்ற வாறதென
அயலில்லை யாகு மனுபூதி யாந்தி யனுக்லரேல்
அயலில்லை யென்னு தடுந்தியா மஞ்ஞான ம்மமதுவே.

அதுமுன் னியற்கைப் புணர்ச்சி நினைந்தோ னடையுந்துன்பம்
இதுபின் னவடனை யெய்தியுற் றேறுனெய்து மின்பமொக்கும்
கதுகாமக் கண்குறி யன்பு மெனக்கவள் காட்டுமொரு
பொதுகண் ணிருநோக்குப் போன்மெய் யறிவினும் போந்திடுமே.

போந்த களவிற் புணர்ச்சித் தடையுடன் போக்கின்று
யேய்ந்து புணர்தொறு மின்னருஞ் செய்யுட் பொருளினின்பம்
வாய்ந்தோன் புணர்ச்சி புணராமை யொத்து வளர்வதென்ன
ஆய்ந்த வுணர்வினின் முன்ஞான மஞ்ஞான மாமடுக்கே.

பட்டிணத்தார்.

பெண்ணாகி வந்தொரு மாயப் பிசாசம் பிடித்திட்டென்னைக்
கண்ணால் வெருட்டி முலைபான் மயக்கிக் கடிதடத்துப்
புண்ணாங் குழியிடைத் தள்ளியென் போதப் பொருள்பறிக்க
வெண்ணா துனைமறந் தேனிறை வாகச்சி யேகம்பனே.

தாயுமானார்.

காந்தமதை யெதிர்காணிற் கருந்காது செல்லுமந்தக்
காந்தத்தொன்று
தேய்ந்தவிட மெங்கேதா னங்கோதன் சலிப்பறவு
மிருக்குமாபோற்
சாந்தபதப் பரம்பொருளே பற்றுபொரு ளிருக்குமக்காற்
சலிக்குஞ்சித்தம்
வாய்ந்தபொரு ளில்லையென்னிற் பேசாம னின்றநிலை
வாய்க்குமன்றே.

நான்காஞ்சூத்திரம் முற்றிற்று.

ஐந்தாஞ் சூத்திரம்.

அவதாரிகை.

அவ்வான்மாவாகிய பிரமசமுகத்தி லிந்திரியங்களு மந்தக்கரண சதுட்டயமுஞ் சிவன்முதலியனவுங் காந்தக்கல்லின்முன் னிரும்புக ளசைவதுபோற் றொழிற்படுமென்பதை யிச்சூத்திரமுணர்த்து கின்றது.

ஐந்தாஞ் சூத்திரம்.

விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தறிந் தறியா வாங்கவை போலத்
தாந்த முணர்வின் றமி யருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே.

(இ-ள்.) விளம்பியவுள்ளத்து= (அவத்தையறுதியிற்றன்னை யறிவே வடிவாக எவ்விடத்து மெய்பொருட்கண்ணும் பிரத்தியட்சமாகக் காண்டற் குரிய சித்துத்தானேதானாகவிளங்கு) முற்கூறியவான்மாவைப்போல, மெய்

வாய் கண்மூக்களந்தறிந்தறியா = சாக்கிரத்திற்செவியாதி ஞானேந்திரியங்களாந் சத்தமுதலிய பஞ்சவிஷயங்களையு மளவிட்டறிந்தும் தம்மையறிய மாட்டா, ஆங்கவைபோலத் தாந்தமுணர்வின் = (அந்தக்கரணமுஞ்சீவனும்) அவைபோலச் சொப்பனசுழுத்தியில் தத்தமக்குரிய விஷயங்களையறிந்தும் தம்மையறியமாட்டாது, தமியருள் (முன்) காந்தங்கண்ட பசாசத்தவையே = அசங்கமான சொரூபஞானத்தின்முன் தேகேந்திரியகரணங்களாகியஇவைகள் காந்தக்கல்லின்முன் னிரும்புகளெங்ஙனமசையுமோ அங்ஙனமேயாமென்றறிதி.

இஃதறிவுக்கறிவுவேறுண்டென்னு மவிவேகத்தைமறுத்தது. என்னை? அநவத்தாதோட முறுதற்கியைதலின். அறிதற்றன்மையனவாகியபுலன்கள், அறியப்படுந் தன்மையனவாகிய, சத்தமுதலியவிடயங்க ளாகுமாயின், கரணங்கள் புலன்களாகவும், ஜீவன் அந்தக்கரணமாகவும், கூடஸ்தன் ஜீவனாகவுமாகலாம். ஆதலின், சுவானுபவமில்லாதார், ஜீவசாட்சியாகிய கூடஸ்தநிலையொன்றுளதாகவும், உற்றுவிசாரித்தறியாது அதனைச்சீவனெனக் கோடல்தவிர்தற்கும்; இவ்வாறுசுமேன்மே லொன்றையொன் றறியுமாறுபோன்று, ஜீவசாட்சியாகிய கூடஸ்தனையு மறிதற்குவேறொன் றிருக்கவேண்டுமேயென்னுஞ் சங்கைவாராததற் கியைர்தலை கூறியதை மறுக்காதேற்றற்கு மிங்ஙனங் கூறினாரெனவறிக.

உள்ளம் (சாட்சி) என்றதனு லதனினுமேலாயநிலை யின்றென்பதாயிற்று. ஒன்றையொன் றறிவதாக மேல்மேல்சேறல் யுக்திபூர்வகமும், அங்ஙனஞ்செல்லவொட்டாது தானேயமையச்செய்வது, ஞானகதப் பிரத்தியட்சானுபவமுமாம். அறியத்தருமெனக்கோடல், யுத்திபூர்வகமெனவும், அறியத்தருமோவெனமறுத்தல் அனுபவபூர்வகமெனவும், கோடற்கியையுமாறுகாண்க. சாட்சியானது, ஆகாயத்துக்குமேல் வேறாகாய மில்லாவாறுபோன்று, தனக்குமேலொன் றில்லாதிருத்தலின், தானுயிடையறாின்றிலகுவதாம். அதனைக்காண்டற்கேதுண்டா மதுவாகியிருந்து காண்டல்வேண்டும். அந்தப் பிரத்தியட்சானுபூதியிழப்பே, இவ்வாறுய பேதமெனக்காட்டற், கிச்சூத்திரம் கூறப்பட்டதென்க.

எனவே, அனுபூதியில்லாவிடத்திவ் வையந்திரிபருதெனக் கண்டாம்.

(உ-ம். தம்மலறியப்படுபவை தாமாகாவெனல்)

எண்சீர். வுபநிடதம்.

விடயமறிந் திடும்பொறிகள் விடய மாமோ
மிக்கபொறி யறிகரணம் பொறிக ளாமோ
வடையவறி சிவனந்தக் கரண மாமோ
வதனையறிந் திடுஞ்சாட்சி சீவ னாமோ

தடையறவொன் றனையறியு மொன்று மேலாஞ்
சாட்சியையொன் றுலறியத் தகுமோ தானு
யிடையறவொன் றிலகுமெனி லதனைக் காண்டற்
கேதுண்டா மதுவாகி யிருந்து காணே.

தமியருள்காந்தங்கண்ட, பசாசத்தவையே=ஒப்பற்றவருளையுடைய ஆன்ம சைதன்னியத்தின், சந்நிதியில் காந்தக்கல்லின்முன் னிரும்புகளசையுமாறு போன்று, தேகேந்திரியகாணங்க ளசையுமென்பதற்கு.

உதாரணம். கைவல்லியம்.

செய்கையுஞ் செய்விக்கையு மற்றிருக்குங் காந்தச்
சிலைமலைமுன் னிரும்புகள் சேட்டிக்கு மாபோற்
செய்கையுஞ் செய்விக்கையு மற்றிருக்கு மென்முன்
செடமான வுலகமெலாஞ் சேட்டை செய்யு
மெய்கலந்த விந்திரிய விகார ரூப
விவகார விருத்திக்கும் விருத்தி தானு
மெய்கலந்த சமாதிக்குஞ் சாட்சி யேநான்
வெயில்போலென் றுறைத்தவனே விபுமா கர்த்தன்.

(பொ-ரை.) தன்வினையாகியசெய்கையும், பிறவினையாகிய செய்விக்கையுமின்றிச், சும்மாயிருக்குங் காந்தக்கற்களாலமைந்த பர்வதத்துக்கெதிரில், இரும்புகளெங்ஙன மசையுமோ வதுபோல :— செய்கையுஞ் செய்விக்கையுமின்றிச், சும்மாவிருக்கின்ற வெனக்கெதிரில் சடரூபமாயுள்ள செகங்களனைத்தும், பற்பலகிருத்தியங்களைச் செய்யாநிற்கும் :— தேகசம்பந்தமான ஞானேந்திரிய கன்மேந்திரியக் காரணமாகநிகழும் பற்பலவிகற்ப ரூபமாயுள்ள விவகாரச்சேட்டைகட்கும், சகலவிருத்திகளுந் தானுகவிளங்கிய வாத்மசம்பதந் மாகநிகழும் சொரூபசமாதிக்கும் :—தன்முன்சகலவுயிர்களும் பற்பலகிரியைகளியற்றற்குச் சாட்சியாநின்றுள்ள சூரியனைப்போல, நானேசாக்ஷியெனத் திரமாகக்கலங்காது நின்றோனெவனோ, வவனேவிபுவனைத்திற்கும் விபுவாயுள்ள மாகர்த்தனெனப்படுவோன். எ-று.

செய்கையுஞ் செய்விக்கையுமாவது ; அசைத்தலையுமசைப்பித்தலையு மெனக்கொள்க. காந்தமலையானது அசைக்கவுமில்லை யசைப்பிக்கவுமில்லை யிங்ஙனமிருக்க இதினெதிரி லிரும்புக ளசையுமாறு போன்று ; உபாதிரகிதமாக விளங்குநா னசைக்கவுமில்லை யசைப்பிக்கவுமில்லை யிங்ஙனமிருக்க எனக்கெதிரில் சமஸ்தவுலகமு மசையுமாதலால் என்முன் னுலகமெலாஞ் சேட்டைசெய்யு மெனவும் ; சகலவுயிர்களுந் தத்தங்கிரியைக ளியற்றற்குச் சாட்சியாநின்று

ளோன் சூரியனுதல்போல; அநாத்மவிவகாரம், ஆத்மவிவகாரமென விரண்டாம். அநாத்மவிவகாரம்:-தேகாகாரமாக வகக்கரணபுறக்கரணங்களோடு கூடியியற்றுங்கிரியை. ஆத்மவிவகாரம்:-மெய்யுணர்வு சம்பந்தமாக விவேகாகாரமாகக் கரணசம்பந்தமின்றி நின்றியற்றுங்கிரியை. அத்தக்கிரியை மூடமெனவும், இந்தக்கிரியை சமாதியெனவுமாம்; இவ்விருவகைக்கிரியையு மென்னுலியற்றப்படினு நானன்று. அஞ்ஞானமாகநின் றக்கிரியை புரிந்ததுநானே; ஞானமாக நின் றிக்கிரியை புரிந்ததுநானே. ஆயினுமிவ்விரண்டு மொன்றிலொன் றில்லாததானும்; இவ்விரண்டுகாலத்தும் நானெனவிருத்தலானு நானெனலேயுண்மை நானே சாக்ஷியென்பதுபற்றி மெய்கலந்த விருத்திக்கும், மெய்கலந்த சமாதிக்குஞ் சாட்சிநானே யெனவுங்கூறினர். விருத்திதானுமென் றதனு லறிவையன்றிச் சகலவிருத்திகளு மின்றெனப்பெறும். பெறவே, ஆன்மாவே சந்நிதியாகவுஞ், சாட்சியாகவு நின்றமை காண்க.

உதாரணம் திருமந்திரம்.

அறிவொன் றிலாதா னவையேழு மொன்று
மறிகின்ற வென்னை யறியா திருந்தேன்
அறிகின்றாய் நீயென் றருள்செய்தார் நந்தி
யறிகின்ற நானென் றறிந்துகொண் டேனே.

மெய்வாய் கண்மூக்குச் செவியென்னு மெய்த்தோற்றத்
தவ்வாய வந்தக் கரண மகிலமு
மெவ்வா யுயிரு மிறைபாட்ட வாடலாற்
கய்வாயி லாநிறை யெங்குமெய் கண்டதே.

தத்துவ மானது தன்வழி நின்றிடில்
வித்தக னுகி விளங்கி யிருக்கலாம்
பொய்த்தவ மாமவை போயிடு மவ்வழி
தத்துவ மாவ தகார வெழுத்தே.

தன்னை யறியா துடலைமுன் றானென்றான்
றன்னைமுன் கண்டான் றுரியந் தனைக்கண்டா
னுன்னுந் துரியமு மீசனோ டொன்றாக்காற்
பின்னையும் வந்து பிறந்திடுந் தானே.

எல்லா மறியு மறிவு தனைவிட்டு
வெல்லா மறிந்து மிலாபமங் கில்லை
யெல்லா மறிந்த வறிவினை நானென்னி
லெல்லா மறிந்த விறைவென லாமே.

காந்தசந்நிதானத்திலே ஊசிதொழிற்படுவதுபோலப் பிரமசந்நிதானத்திலே மாயைதொழிற்படுவதுஎன்னும், வேதாந்தத்தின் சித்தாந்தத்தை மறுக்குமாறெண்ணி, அதைமற்றொருவிதமாய் ஷிசிவஞானசித்தியார், மாயாவாத மறுதலை (14-வது பாட்டில்.) "இங்குநின்றதொரு காந்தமானக விரும்புசந்நிதி யியங்குநேர், தங்கிநின்றதெனி னீங்கிமீளும்வகை தங்கிடாதுனுரைதப்பதே" என்றுகூறுகின்றது. இதற்குரைகாரர் "இவ்விடத்துண்டானதொரு காந்தக்கல்லின் சந்நிதியிலே, இரும்பசைந்தடங்கும் தன்மைபோலச், சீவான்மாவின் சந்நிதியிலே, அத்தக்காணங்களுஞ் சேட்டைப்பட் டடங்கினவென்று நீகூறின், நீகூறியஇரும்பு காந்தத்தோடுகூடினுற், காந்தத்தையிரும்பு நீங்காத தன்மைபோல, அந்தக்காணங்களுஞ் ஜீவான்மாவோடுகூடினுல், நீங்கப்படாவாகையால், நீகூறியவுவமை பிறழ்ந்ததாம்" என்றுகூறிஇருக்கின்றார். இது விளம்பியவுள்ளத்துஎன்னுமிச்சூத்திரத்தோடு, முரண்படுகின்றது, சிவத்தின் சந்நிதியில் சீவன் சேட்டித்தலுக்கே, ஷிசிவஞானபோதம்; "தாந்தாமுணர்வின் றமியருள் காந்தங்கண்ட பசாசத்தவையே" என்றுகாந்தஇரும்பு உவமைகூற, அதைமறுத்து அதன்வழிநூலான சிவஞானசித்தி சீவான்மாவின் சந்நிதியிலெனப்பொய்மொழிகற்பித்துக் கூறுவது அழகினும் அழகு! மிகுஅழகு!! கலியாணவீட்டிலேயே கண்ணீர்விட்டுக்கதறும் ஒருத்தி, கருமாந்திரவீட்டில் கட்டிக்கொண்டு கதறுவதைப்பற்றிச் சொல்லவும்வேண்டுமோ? என்றவாறு முதல்நூலானசிவஞானபோதத்தையே, மேலேகண்டவாறு இகழும்அதன் வழிநூலான, சிவஞானசித்தி ஏனையநூல்களை யிகழுதலைப்பற்றிச் சொல்லவும்வேண்டுமோ, சிவஞானபோதத்தின், துவிதவுரைகாரர் (சிவஞானசுவாமிகள்) "காந்தங்கண்டபசாசத்தவையேயென்றது, ஒருபுடையுவமையாதல்பற்றியே பிறிதன்றென்பது கருத்து" என்று கூறுகின்றது, வேதாந்திகளுக்குமாமென்றுகொண்டால் ஷிசிவஞானசித்தி காந்தஇரும்பு உவமையைப்பழித்தது, அதற்கேபழிப்பாமென்க. உவமைகூறுதல்ஒர்புடைபற்றியென்று கருதாதுபேசுதல் உவமையியலறியாதார் கூற்றாமென்றுவிடுக்க. காந்தக்கல்லின்முன் இரும்புதொழிற்படுவதுபோன்று, சிவத்தின்முன் உலகுதொழிற்படுகின்றது என்பதில், தொழிற்படுவதைச்சாதாரணதருமமாகக்கொள்ளாது; சீவான்மாவிலெனக கற்பித்துக்கொண் டதில்ஒட்டிக்கொண்டு நீங்காதிருப்பதைச் சாதாரண தருமமாகக்கொள்ளுதல், அறிவுடைமையாமோ? காந்தஞ்சடமானபடியால், அதனெதிரில் தொழிற்பட்டு, அதில்ஒட்டிக்கொண்டஇரும்பு நீங்காதிருக்கின்றது, பிரமம், அல்லது சிவம் சித்தாயிருக்கிறபடியால், அதன்சந்நிதானத்தில் தொழிற்படும், உலகம்ஒட்டுதலும் விடுதலுமான தொழிலைப்பெறுமென்றால், இதன்மேல்என்னசொல்லக்கூடும், காந்தக்கல்லின்முன் இரும்புதொழிற்படுவதுபோலப் பிரமசந்நிதானத்தில், உலகந்தொழிற்படுகின்றதென்பது, காந்தம் விகாரமின்றியிருக்க, அதன்சந்நிதானத்தில் இரும்புதொழிற்படுவதுபோலப், பிரமம்விகாரமின்றியிருக்க, அதன்சந்நிதானத்தில், உலகந்தொழிற்படுகின்றதென்பதுவரைக்குமுபமேயமாம். இதுகீழ்க்காட்டப்படும் செய்யுட்களாலும் செவ்வனேவிளங்கும்.

கூர்மபுராணம் சாங்கியயோகமுரைத்த அத்தியாயம்.

மாயையைக் கடிந்தவான்மா (பிரமம்) மாயையாஞ் சகத்தைநாளு
மோய்வற நடத்தே னென்னை யின்றிமற் றதுவு மொல்லா
தாயவை யென்கோ லென்னிற் காந்தமுன் னூடு மூசி
யேயுற வென்மு னிந்த விருஞ்சக நடக்கு மன்றே.

பிரபோதசந்திரோதயம்.

போந்துவிகா ரஞ்சிறிதும் பொருந்தாது தன்னியல்பிற் பொருந்தி நிற்பக், காந்தமசை யாதிருந்தும் அக்காந்தத் தெதிரூசி கம்பித் தாற்போல், வாய்ந்தவதன் (பிரமம்) சந்நிதியின் மாயைவிகா ரம் புரிந்து மணிச்சுருன் முற்றி, யேய்ந்தபெயர் மானதனென் றெடுத் தோத வொருமக்வை யின்ருள் மன்னே.

கீதாசாரம்.

இருக்கினு மசேதனத்துக் கிச்செய லுண் டோவெனவே
உருக்குபடாக் காந்தமுன்னி லூசிநிக ரென்றவரோ.

(இ-ள்.) இருக்கினும் (சைதன்னியத்தின் சந்நிதானம்பற்றி) யிருந்தாலும், அசேதனத்துக்கு—சடமாயுள்ள (சரீரத்துக்கு), இச்செயலுண்டோ—இக்கன்மாதிகளைச்செய்யத்தக்க செயலுண்டாகுமோ, எனவே—என்றருச்சுனன்கேட்க, உருக்குபடா—அக்கினியினலுருக்கப்படாத, காந்தமுன்னில்—காந்தசந்நிதானத்திலுள்ள, ஊசிநிகர்—ஊசிக்குக்கம்பிக்குஞ்செய லுண்டாதல் போல, என்றவரோ—ஆன்மசந்நிதானத்திராநின்ற சரீரத்திற்குக் கன்மச் செயல் வரக்கூடுமென்று கூறியருளியவரோநீர். எ-று.

சிவதருமோத்திரம்.

இயக்கினுட லுயிர்விதற்கி யெனிற்பூணிக் கியந்திரத்தின்
றியக்குவிக்கு மிறையமல னெனிற்றொழி லுண் டிறைவனுக்கு
மியக்கமிரு நிலமெய்து மிரவிக்கே வுதலில்லை
யியக்கமிரும் பெய்தியிடுங் காந்தத்து மிலைத்தொழிலே.

எ-து. சீவன்றேகேந்திரியகரணத்தை யியக்குவிப்பானெனின் அற்றன்று, சகடையையியக்குமெருதை யியக்குவிப்பாளுெருவன்போல உலகத்தைநடத்துவான் நின்மலமாகிய சிவனேயெனின் அகர்த்தாவுக்குத் தொழிலுண்டாக வேண்டுமெனின் அது அப்படியல்ல; பெரியநிலத்துள்ளார் தொழில் செய்வது சூரியனேவலல்லவே; யதவல்லாமல் காந்தக்கல்லின்முன் இரும்பு சேட்டிக்கப்படுவதுங் காந்தக்கல்லின்றொழிலல்லவே; ஆகையால் கர்த்தா

வுக்குத்தொழிலில்லை, சூரியன், காந்தக்கல் இவற்றின்சந்நிதிமாத்திரத்தில் அவைகாரியப்படுவதுபோல உலகமுஞ் சிவன்சந்நிதிமாத்திரத்தில் காரியப் படும். எ-று.

பிரமகீதை ஐதரேயவுபநிடதார்த்த முரைக்குமத்தியாயம்.

சின்மாத் திரமா யுள்ளவெறுஞ் சிவனே திகழ்வான் யாதுக்கும்
முன்மாத் திரமும் வேறில்லை முற்று மவனே மொழிவுற்ற
நன்மாத் திரமா யான்மாவென் றுரைக்கு நாமத் தினையுடையான்
தன்மாத் திரமே யாகியவத் தன்மை யான சங்கரன்றான்.

மேற்படிதைத்திரீயவுபநிடதார்த்தம்.

செய்வான் செய்விப் பவன்செய்யும் பொருள்செய் கருவி செய் தொழிலென், றைவாய்ப் பொருளும் வெறுமான்மா வாகித் தோன்று மிறையருளா, லெய்யா ஞான மறிபொருளு மறிவோ னென்னப் படும்பேத, மெய்யா மிறைவன் றிருவருளா லெல்லாந் தானுய் விளங் குமால்.

அறையு மறையா லாகமத்தா லறியா னாகின் மற்றுந்தா
னறிவ தொருபா டையினலே யறைவா னென்று மமைவுறவே
யிறையை யடைதற் கேதுவிது விதனாற் பரம யோகெய்தும்
பிறிவொன் றறவே சிவன்றன்னை யோகத் தாலே பெறலாமால்.

இந்தப் பிராண பானதி யாரா லுண்டா யிலங்குவதிங்
கெந்தப் புருடன் முன்பாக வெல்லா மியங்க லுற்றுருகுன் [கின்று
றோந்தப் படவெத் தொழிலுஞ்செய் தேவன் றொழிலற் றிருக்
னந்தப் பரனே யாவர்க்கு முள்ளா மான்மா வாகின்றான்.

சூதசங்கிதை பராசத்திவிசாரமுரைத்த அத்தியாயம்.

பாவுதா னென்னுநிறை யான்மாவி னின்றும்பல் லுலகமுஞ்சீர்
மேவுசீ வனுமீச்சு ரனுமாயா சத்தியும்வே றல்லரம்பா
வோவில்சுயம் பூரணநற் சிவஞான முள்ளவனு முயர்வுபூண்டோன்
தாவில்சா ருவபௌமன் போன்றுசுதந் தானகித் தழைவானென்றும்.

கூர்மபுராணம் சாங்கியயோக முரைத்த அத்தியாயம்.

சொச்சமாய்ச் சாந்த மாகிச் சூக்கமாய் ஒன்றாய் நாளும்
நிச்சமாய் ஞான மாகி யெங்கணு நிறைந்த தாகி
அச்சமில் தமத்துக் கப்பா லாயகே வலமா யென்றும்
எச்சமி லான்மா வென்றோன் றினிதுள தென்பர் மேலோர்.

பஞ்சபூ தங்களன் று பகருஞானேந் திரியங்கள்
அஞ்சுமன் றுரைத்தகன்மேந் தியங்களோ ரைந்துமன்றும்
எஞ்சலில் சத்தமாதி வாக்காதி யிவைகளன் று
செஞ்சவே மனுதியன் று திகழுமவ் வியத்தமன்றே.

உழிதரு பிராணனன் று கருத்தனன் றுண்போனன் று
தழைபிர கிருதியன் று புருடனு மன்றுசால
விழைவுறு மாயையன் று விளங்கிய ஆன்மாயாருந்
தொழுதரு மறைகளெத்துஞ் சுத்தசை தனியமாமால்.

பொருவில்வே தாந்தத்துண்மை யறிந்தவர் புகன்றவான்மா
விரிதரு வியாபியென்றும் மேவுதத் துவங்கட்கெல்லாம்
கரியது வென்றுமூலப் பகுதியுங் கடந்துநின்ற
துரியம தாகுஞ்சுத்த வெளியென்றுஞ் சொல்லுவார்கள்.

இலிங்கபுராணம். தியானவிதி யுரைத்தவத்தியாயம்.

காரிய காரணங்கள் யாவையுங் காசொன் றில்லாத்
தாருமான் மாவின் கண்ணே யமருமென் றறிந்துகொண்டோன்
ஓர்தரு பொருள்க டன்னை யன்றிவே றுளதென் றெண்ணி
யோர்தரு வுள்ளஞ் செல்லா தின்பமுற் றிருப்ப னன்றே.

உபாதிபற்றியன்றி அறிவறியாமை தனக்கின்றாதலின் சத்துஞ் சித்தும் அபேதமாமெனல்.

திருக்குத்திரிசியவிவேகம்.

இக்குணங்கள் போலி யெதார்த்தமா மென்றிரண்டின்
மெய்க்குணங்கள் போனடிக்கின் மெய்யாமோ—பொய்க்குணங்கள்
விட்டுண்மை காணின் வெளிபோல் விடாதாகில்
விட்டுவிட்டு நிற்குமெனல் வீண்.

எ-று. இந்தச்சச்சிதானந்தமுதலிய ஐந்துகுணங்களும் போலியதார்த்த மென்று இருவகைப்படும். அவற்றுள்போலிக்குணங்கள் யதார்த்தகுணங்கள் போல மெய்பாய்நடிக்கினும் அவ்யதார்த்தகுணங்களாகுமா? ஆகாவே. ஆதலின்போலியாகிய அப்பொய்க்குணங்களைவிட்டு மெய்க்குணங்களையே யிடைவிடாது காணுங்கால் சத்தமுதலாகிய ஐந்துகுணங்களும் வெளியின்கண் வெவ்வேறுபடாமல் ஏகத்துவமாய் விளங்குமாறுபோல விளங்குமாதலின் அதனையுணராது பஞ்சகுணங்கள் வெவ்வேறுமென்றுரைத்தல் வீணேயன்றிப் பயன்படாவாம். எ-று.

ப்ராதிபாலிகசத்து, வியாவகாரிகசத்து, பாரமார்த்திகசத்துஎன்றுசொல்லப்பட்ட இம்மூன்றுஞ் சத்துப்போன்றிருத்தலின் சத்துப்போலியெனவும், சீவன், ஈசுவரன், இவர்க்குச்சாக்ஷியாயுள்ள கூடத்தன், பிரமமென்னப்பட்ட இந்நான்குஞ் சித்துப்போன் றிருத்தலின் சித்துப்போலியெனவும், எண்ணிறந்த ஆநந்தபேதங்களினும் மிக்குயர்ந்துள்ள பிரமாநந்தமுதலிய அஷ்டவிதாநந்தங்களும் எதார்த்த ஆநந்தம்போன்றிருத்தலின் ஆநந்தப்போலியெனவும், நான்கிடத்தும் அபாவமாயுள்ள சகஜீவபாரங்கள் நித்தியம்போன்றிருத்தலின் நித்தியப்போலியெனவும், காலம், தேசம், வஸ்துஎன்னுமிம்மூன்றும் எங்கணும்வியாபித்திருத்தல்போல் காண்டலிற் பரிபூரணப்போலியெனவுமாமன்றி யுண்மையாகாவெனக்கொள்க. அறிவானது தனதுவியாபகவிளக்கத்தை மறந்தவிடத்துத் தன்னைத்தான் முதற்கருவியாகவும் ஆதாரமாகவுங் கொண்டு பரிணமித் துதித்தொடுங்கும் உபாதித்திரயங்கட்குச் சாட்சியாய் நின்றுள்ள சத்துத்தானாதலால் அந்தச்சத்தொன்றே வியாவகாரிகாதி மூன்று சத்தாகவும், இவ்வுபாதித்திரயங்கள் தன்பாலுதித்தொடுங்கினுந் தானவ்வனமாகாது அவற்றைச்சாட்சியாய் நின்றுணருந் தன்மையது தானேயாதலால் சத்தாய்நின்றுள்ள சித்தொன்றே பகிர்முகதிருஷ்டியாற் சமட்டி, வியட்டிகளாகக் காணப்படு முபாதித்திரையங்களில் நிறைவுற்றதுபோலவும் பிரதிபிம்பித்ததுபோலவுந் தோன்றுநின்ற சீவேசவரகூடஸ்தபிரமமெனச் சித்தொருநான்காகவும், இந்தச்சித்துக்குப் பயனுயுள்ள பிரியவடிவஞ் சித்தாதலானும் சித்தையன்றிப் பிரியவடிவம் வேறின்மையானுஞ் சித்தேயாநந்தமாயிற்று, இந்தச்சிதாநந்தமொன்றே விடயாநந்தம், பிரமாநந்தம், வாசனாநந்தம், முக்கியாநந்தம், நிஜாநந்தம், வித்தையாநந்தம், ஆத்மாநந்தம், அத்துவிதாநந்தமென எட்டுவிதஆநந்தமாகநின்று இவையாவும் அந்தர்ப்பருவத்தளவாய் உதித்தொடுங்கினுந் தானவ்வனமாகாமலுந் தனதுபிரியவடிவங்குன்றாமலுஞ் சதோதயமாய் விளங்கிநிற்குந்தனது நித்தியத்துவமொன்றே ப்ராகபாவமாதி யோருநான்கு நித்தியத்துவமாகவும் இந்தநித்தியத்துவத்திலடங்காப் பொருள், இடம், காலம் வேறில்லாமையால் இதுவேபரிபூரணமாயிற்று. இந்தப்பரிபூரணமொன்றே பொருளிடங்காலங்கட் குரியதுபோ லத்தியாசமாகத்தோன்று மூன்றுபரிபூரணமாகவும் காணப்படுவனவன்றி ஆதாரம்போலாதே தயமுண்மையாகாவாகலின், மெய்க்குணங்கள்போனடிக்கின் மெய்யாமோ? இக்குணங்கள்போலி யதார்த்தமாமென் றிரண்டிலெனவும், அம்மெய்க்குணங்கள் வெவ்வேறுபடாது ஏகத்துவமாமென் றுவமையால் விளக்கப் பொய்க்குணங்கள் விட்டுண்மைகாணின் வெளிபோல்விடாதெனவும், அவ்வேகத்துவத்தைச் சமாதியின்கண்காணுது வெவ்வேறுமென வாயாற்கூறுதல் நினக்குப்பயன்படாவாதலின் விட்டுவிட்டுநிற்குமெனல் வீணெனவுங் கூறியவாறாயிற்று. இங்ஙனங்கூறியது பொய்க்குணங்களை மெய்க்குணங்களாகக் காணின் மெய்க்குணங்கட்கு ஏகத்துவங்கூடாவாதலினென்க.

பிரதிபலித்தலாகியசக, சீவ, பரஞ் சகலத்திற் சத்தியப்பொருளாகக்காண்டல் ப்ராதிபாலிகசத்து, விவகரித்தலாகிய இச்சாஞானக்கிரியைகள் பிரதிப

வித்தலுள்ளளவும் உள்ளவாறு நிகழ்வதாகக்காண்டல் வியவகாரிகசத்து; விருத்திகள் அடங்கிநிற்றலாகக்காண்டல்; அதாவது கேவலத்திற் பிரதிபலித்தலுஞ் சேட்டித்தலுமில்லாதுநிற்றல் பாரமார்த்திகசத்தெனப்படும் இம்மூன்றையும் போலிச்சத்தென்றது: இவையொருபோதுண்டாய் ஒருபோதில்லாமைபற்றியென்க.

சிவன்முதல் பிரமமீறாகச் சொல்லப்பட்ட நான்கையுஞ்சித்தென்றது அறிதற்றன்மைபற்றி. அறிதற்றன்மையொத்துள்ளசித்தை நான்கென்றது காரணகாரியோபாதிபற்றி. அங்ஙனமாயினுஞ் சித்திரண்டென்னலாமே யெனின், அவித்தைமாயையன்றிச் சமட்டிவியட்டியாயுள்ள சூக்குமோபாதி யில்லாதிருக்கவேண்டும். உண்டாயிருத்தல்பற்றிநான்கே. காரணவகையால் அவித்தை மாயையென்றிரண்டுபாதியும், காரியவகையாற் சமட்டி வியட்டி சூக்குமமென் றிரண்டுபாதியுமாகியஇவற்றுள் சித்து அவித்தைமாயையென்பவற்றில் நிறைவுற்றும் மற்றவற்றுள் பிரதிபலித்துநிற்கும். அங்ஙனம் நிறைவுற்ற சித்துக்குப் பிரமகூடஸ்தரெனவும், பிரதிபிம்பித்தசித்துக்கு ஈசுரன், சீவனெனவுமாம்; இந்நான்கையும் போலிச்சித்தென்றது ஞானுஞ் ஞானங்கட்கேற்கக் காணப்பட் டழியுந்தன்மை யாதலினென்க.

அங்ஙனமாயின் சிவேசுரர்களுக்குக் கூடஸ்தபிரமம் யதார்த்தமெனவும், சாக்ஷியெனவும் தொம்பத தத்பதலட்சியார்த்தமெனவுஞ் சுருதிகூறுவானேனெனின்; சகலகேவலங்க ளற்றவிடத்துள்ளது கூடஸ்தபிரம மாதல்பற்றியும், இவற்றையும் பொய்யென்றது: தன்னையுள்ளவாறுகாணுழி மகாகாயத்தையன்றிக் கடாகாயமும் மேகாகாயமும் வேறன்றாதல்போலத் தன்னைத்தவிர வேறன்றாதல்பற்றியென்க.

உரையிற்கோடலென்னும் உத்தியாலெண்ணிறந்தஆநந்த பேதங்களென்றது: பஞ்சேந்திரியமென்னும் ஐந்தறிவினுட் பரிசமென்னும் ஓரறிவுயிராயுள்ள புல், பூடு, செடி, மாமுதலியவை யவ்வோரறிவாற் சுகிக்குஞ்சுகமும்; அதனினுமிக்கது பரிசம், இரசமென்னும் ஈரறிவுயிராயுள்ள இப்பிசங்குமுதலியவை அவ்வீரறிவாற் சுகிக்குஞ்சுகமும்; அதனினுமிக்கது பரிசம், இரசம், கந்தமென்னும் மூவறிவுயிராயுள்ள கறையான், எறும்புமுதலியவை யம்மூவறிவாற் சுகிக்குஞ்சுகமும்; அதனினுமிக்கது பரிசம், இரசம், கந்தம், ரூபமென்னும் நான்கறிவுயிராயுள்ள தும்பி, வண்டுமுதலியவை யந்நான்கறிவாற் சுகிக்குஞ்சுகமும்; அதனினுமிக்கது பரிசம், இரசம், கந்தம், ரூபம், சத்தமென்னும் ஐந்தறிவுயிராயுள்ள புள், விலங்கு, மக்கள், அசுரர், தேவர் முதலியவை யவ்வைந்தறிவாற் சுகிக்குஞ்சுகமும், இச்சுகம் ஐந்தறிவி லொத்துளதேனும் மக்கட்குப் புத்தியும், சுராசுரர்க்குப் புத்தியோடுசித்தியும், திரிமூர்த்திகட்குப் புத்திசித்தியுடன் சர்வஞ்ஞத்துவமுதலியகுணங்களும், பஞ்சகிருத்திய தாரதம்மியமும், பதவிதாரதம்மிய சுகமுமாமென்க.

இவற்றினும்மேலாய எண்வகைஆநந்தங்களுள் விடையாநந்தம் ஆலிங்கனத்தாலுண்டாஞ்சுகம். இதுபந்தகன்மத்துக்கேதுவாயுள்ள எண்ணிறந்தஆநந்

தபேதங்களுளொன்ருயிருக்க, இதனைவேறுபிரித்து விடுதிகன்மத்துக் கேது வாயுள்ள நிஜாநந்தமுதலியவற்றுட் சேர்த்துக்கூறியது ; ஏனையவிடயசுகம் உபரதிவயிராக்கியத்தாலும் இவ்வாலிங்கனசுகம் பிரத்தியட்சஞானத்தாலும் கெடுதல்பற்றியும் ; கணப்போதாயினுந் திரிபுடியற்றிருப்பதினுனுமென்க. இதனையே ஞானசுகமென்னுதது உபாதிபற்றிவந்ததானும், நிரந்தரமில்லாததானுங் கூடாதென்க. இதனைப்பிரகஸ்பதிபகவான் இந்திரனுக்கு ஆலிங்கனசுகமே சுகமென்றது: சுகிப்பானைக்கண்டு சுகிப்பதுஅரிதரிதெனக்கருதி. இச்சுகம் ஆன்மாக்களைக் கெடுக்கத்தக்கதாயினும் இதனின்மூழ்கித் தெளிந்தாலன்றி யிம்மயக்கமறுமையானும், உபரதிவயிராக்கியத்தா லற்றதுபோர்காணினு மவித்தை கெடாமையா லற்றதன்ருமையானும், இம்மயக்கமறுவிடத் துண்மைகூறினு மதுஎய்தற்பால தன்ருமையானும் இம்மயக்கத்தாருக் கிதுவேமுத்திசுகமெனக் கவுணமாகக் கூறினதேயன்றி முக்கியமன்றென்க. இதனையவர்கூறிய மதநூலாலறியலா மிதன்சுருக்கத்தை யுரைச்சிறப்புப்பாயிரத்துட்காண்க.

இனிப்பிரமாநந்தமாவது : கேவலாவத்தையிலுதிக்கு மாநந்தமாகும். இக்கேவலாவத்தையாவது நனவிற்சின்னஞ்சின்னமாயுள்ள வடிவங்களைப்பலவாறு இடைவிடாது கற்பித்தலின்கண்ணும் அதுபற்றிச்செய்யும் இச்சாஞானக்கிரியைகளின்கண்ணும் அதுபற்றியுண்டாஞ் சகதுக்கங்களில் மொத்துண்டலின் கண்ணுமுண்டா மசதியாதலானு மிவையாவுஞ் சத்தியமெனத் திடங்கொள்ளுந் தாற்பரியத்திற்கு இவ்வசதி மாருதல்பற்றி யிவையொன்றுந்தோன்ருப் பாழெனப்பதினுனு மிவ்வசுத்தகேவலத்தி லுதிக்குஞ்சுகத்தை நின்மலத்திலுதிக்கும் பிரமாநந்தமென்றது : விடையாநந்தமனைத்தினுள்ளுந் திரிபுடியற்று நெடுநேரஞ் சுகிப்பதற்கு இதுவே மேலானநிலையாதலானும் நனவுகனவுகளிலுண்டாம் அலுப்பாற்றுதற்குத் தக்கஇடமதுவாதலானும் இச்சுகமான்மாக்கட் கின்றியமையாமையானும் இதுபோன்றசுகம் விழிப்பில்வேறின்மையானும் விடையாநந்த சுகங்கட்கெல்லாம் இதுவே பிரமாநந்தமென்றறிக. திரிபுடிக்கசதிகாணுங்கால் விருத்திகட்கோய்வுண்டாம் ; அவ்வோய்வுகண்டவிடஞ் சும்மா இருப்பதற்கிடமாம் ; அங்ஙனஞ்சும்மா இருப்பதேசுகயாம். இவ்வசுத்தகேவல சுகத்தை நின்மலத்திலுதிக்கும் நிசாநந்தமுதலியவற்ருேடு சேர்த்துக்கூறியது ; அவித்தையொன்ருெழிய மற்றைய விருத்தித்திரிபுடிகளின்றித் தான்மாத்திர நிற்குந்தன்மைய தாதல்பற்றியென்க. அவித்தையறுததால் இதுவும்விடயாநந்தத்துக் கன்னியமன்ருயிருக்க, இதனைவேறுபிரித்தவ் விடயாநந்தத்திற்குப் பின்வைத்துக்கூறியது : ஞானகதப் பிரத்தியட்சத்தாற்கெடும் ஆலிங்கனசுகம் போலாது ஞானகாரத்தாற்கெடுவ திதுவாதல்பற்றியென்க. விலக்கற்பாலதா மிதனைப் பிரமாநந்தமெனச் சாமளாதிமதங்கூறுவது : சர்வசூனிய மயானத்திலுதிக்கும் ஆநந்தமே பிரமாநந்தமெனக்கூறுஞ் சுருதிவாக்கியத்தின்கருத்து மாயையோடு அவித்தையும் அவற்றின்காரியமாகிய சமட்டிவியட்டி தூலசூக்குமங்களாயுள்ள அனைத்துமொருங்கே நசித்தவிடமெனக்காணுது அவித்தைமா

யைநசியா தலாற்றின் காரியங்களொருங்கே யசதியாற்றோன்றாதவிடம் அது
வாமெனத் தப்பாகக்கருதிக் கூறுவதேயன்றி யுண்மையாகாதென்க.

இனிவாசனாநந்தமென்பது : நித்திரைதெளிந்துந்தெளியாவிடத் தகமுக
மாகச் சங்கற்பிக்குஞ் சங்கற்பவடிவங்களுஞ் சுழுத்திசுகமாறாமையால் அச்சுக
மும்இழுக்கும். இழுக்கினு மவ்வவ்வசத்தாகாது அங்கேயறிவு நடுநிலையாய்
நிற்குமாதலாலும் அந்நடுநிலை சமரசமாதலாலும் அச்சமரசமே சுகப்பேறு
மென்க. இதனையேமுத்தியென்றாற் குற்றமென்னையெனின் : சமரசமாக நிற்
கினும் முன்னரிளைப்பாறியதாற் சங்கற்பிக்கலாயிற்று. அதனைக்கேவலசுகந்
தடுக்கினும் இன்னஇன்னசங்கற்பங்கள் இன்னஇன்னவிதமாக முயற்சிக்கின்
இன்னின்னபலன்றருமென்பது மேலிடமேலிட அக்கேவலசுகம் முன்னர்
மேலிட்டவாறு வரவரத்தணியும் ; அதுதணியத்தணிய இந்நித்திரையால் இன்
னின்னகாரியந் தடையாயிற்றென்று நித்திரைவிட்டெழுந்து இச்சாஞானக்
கிரியைகள் செய்யவேண்டிவரும் ; அதுவா இச்சமரசநிலைநழுவும் ; இதுநழுவ
அங்ஙனமுள்ள சுகமுநழுவுமாதலால் இதுமுத்தியாகாதென்க. ஆயின்சத்துக்
கள் சமரசநிலையேமுத்தியென்றது : சுத்தசகலகேவலத்திற்கு நடுநிலையாதலா
லிதனையன்று. அங்ஙனமாயினிதனைச் சுத்தாவத்தையிலுதிக்கும் நிசாநந்தமுத
லியவற்றோடு சேர்த்துக்கூறியது என்னையெனின் : அசுத்தமாயினுஞ் சகல
கேவல வசத்தாகா திருப்பதுபற்றியென்க. அஞ்ஞானங்கெடாததா விதுவும்
விடயாநந்தத்து ளொன்றாயிருக்க இதனைவேறுபிரித்து கேவலாநந்தத்திற்குப்
பின்வைத்துக்கூறியது : கேவலசுகம்ஞானாகாரத்தாற் கெடுமாறுபோல நடு
நிலையாயுள்ள இவ்வாசனாநந்தமும் ஞானஞ்ஞானங்கட்கு ஆதாரந் தானெனக்
கண்டவிடத்துக் கெடுமாதல்பற்றியென்க.

இனிமுக்கியாநந்தமென்பது : மண். பெண், பொன்என்பவற்றின் நிலை
யாமைபற்றியுண்டாம் விராகசுகம். அவ்விராகத்தாற் சுகமுண்டாதற் கேதென்
னையெனின்: விராகம்நிலைக்கின் மனையாதிகுடும்பசம்பந்தமும் அதனதானி
விருத்தியு மதனாலுண்டாஞ்சுகாசுகமும் அக்குடும்பத்தின்மேற் றனக்குண்
டாம் விருப்புவெறுப்புவாதையும் அக்குடும்பத்தைச் சுமக்கும்பாரமும் அது
பற்றி யத்திற்கற்பிக்குஞ் சிவசிருட்டியும்இல்லையாம் : இவையில்லாவிடத்துக்
கவலையற்றிருக்குமாதலால் அதுவேசுகமாமென்க. பந்தமற்றவிடத் துதிக்
குஞ்சுக மிதுவாதலா லிதனையே முத்திசுகமென்னலாமெனின் : தன்னையுஞ்
சகத்தையும்உள்ளவாறு சுருதிகுருசுவானுபவத்தாற் சந்தேகவிபரீதங்களற
விசாரியாவிடத் துதிக்குஞ்சுக மிதுவாதலால் முத்திசுகமாகாதென்க. இங்
ஙனமாயின் இம்முக்கியாநந்தமே முத்தியாமெனச் சிலநூல்களிற் கூறுவது :
இந்நிலையாவது வாராதாவென்னுங் காருண்ணியத்தாற் கூறியதேயன்றி
முத்தியாகாது : விடயகதப்பிரத்தியட்சத்தின் நிலையாமைபற்றி யுண்டா
மிதனை அவ்விடயத்தினின்று வேறுபிரித்து ஞானகதப்பிரத்தியட்சத்திலுதிக்
கும் நிசாநந்தமுதலியவற்றோடு சேர்த்துக்கூறியது : ஞானகதப்பிரத்தியட்சத்
திற்கு விராகங் காரணமாதலினென்க.

இனிநிசாநந்தமென்பது : நிசத்திலுதிக்குமாநந்தம். நிசமென்பது : அறிவு விகற்பாகாரமாய்க்காணது ஓர்குறிமுன்னிட்டுத் தனதுயதார்த்தவடிவாய் விளங்கல். யதார்த்தவடிவமாவது : அறிவுவிசுவ, தைசத, பிராக்ஞாகிதமாய் விளங்கல். அவ்விளக்கந் திரிபுடியும் அஞ்ஞானந்தகாரமும் அற்றிருப்பதானும், அபரிச்சின்னயாதலானும், உபாதித்திரய மில்லாததானும், சும்மாவிருப்பதற் கிடமாதலானும், துக்காபாவமாதலானு மிங்ஙனம்நிற்கும் நிலையேசுகோதய மாம்; ஞானகதப் பிரத்தியட்சத்திலுதிக்கு மிச்சுகத்தையும் முத்திச்சுகமென் ஞது போலிச்சுகமென்றது : அறிவு தேகத்திலாருதாரக்குறிவினு ளோர் குறிவழித்தா யிங்ஙனம்விளங்குவதில் மனோலயமாகத்தகு மிந்நிலையோகமாதலி னென்க. யோகநூலில் மனோநாசமாகும் இந்நிலையே முத்தியாமெனக்கூறு வது : இதனினுங் கீழாயசரியைகிரியைகட்கிதுமேலாதலால். அறிவுகுறி வழித்தாய்விளங்கினு மிந்நிலைமனோலயந்தானேயெனின் : “மெத்துகின்ற வாதனையைவிட்டான் மேலாநிலையுளதாஞ், சத்தினசத்தி னிடைநின்று சைதன்னியத்திற்சாட்டியத்தி, லொத்துநடுநின் றலைவதுவே யுள்ளமாகு மவ்வுள்ளஞ், சித்தின்முயல்வாற் சித்தாகுஞ் செடத்தின்முயல்வாற் சடமா கும்.” என்றவாசிட்டக்கவிப்படி மனமானதுசித்திலேனுஞ்சடத்திலேனும் முயற்சிக்குத்தக்கவாறு லயிக்கினுமதுலயமன்று. ஏனெனின் : மனோரம்மி யத்திற் கிடமாயுள்ள சகலகேவலங்கள் நிலையாவாறுபோலச் சடசித்துக்கள் நிலையா வாதலினானும், சடசித்தென்பவற்றுட் சித்தோ குறியன்றிவிளங்கு வது; இதுவேநிலையாதபோது தேகத்திலோர் குறிமுன்னிட்டு விளங்குஞ் சித்தா நிலைக்கும் ? நிலையாதுநிலையாது. மனோலயமாகும்நிலையாவது : சித்து சடங்கட்கும், மறதிக்கும் ஆதாரமாயுள்ளதைக்கண்டு அதிலயிப்பது ; அதுதான் குறியின்றிவிளங்குஞ் சித்தாகிய கூடஸ்தபிரமமெனவறிக. குறிவழித்தாயுதிக் கும் நிசாநந்தத்தில் மனோலயம்போற் காண்டலேயன்றி லயமாயின்மீண்டும் விடையாகாரமாயுதித்துக் “கிரைக்கறிசமைத்தாயிற்று” வெனக் கேட்க வருமா ? கேட்கவந்தபடியால்லயமன்று ; மனமீளத்தக்கதாயினும் ஞான மடைதற்கிது சாதனமாதலானும், இஃதன்றிஞானமெய்தற்பால தன்றுமை யானும் ஞானத்திற்குச்சாதனம் யோகமெனக்கூறியதென்க. அஃதெவ்வா றெனின் :—

அசைவுறுங்கடத்திற்சலமும் அதிற்பிரதிபிம்பித்த சூரியப்பிரதிபிம்ப மும் அதனதுசாயாவொளியு மவ்வாறலையும் : அலையுமிடத்து அவ்வொளிக்கா தாரங் காணவேண்டினோன் குடத்தையசையாதுநிறுத்த அதினிறைவுற்ற சலமு மசையாதுநிற்கும் ; அதுநிற்க அதிற்பிரதிபிம்பமும் அசையாதுநிற்கும் ; அதுநிற்க அக்கடத்திற்கருகே யசைவாடிநின்ற அப்பிரதிபிம்பவொளியு மசைவற்றுநிற்கும் ; அதுநிற்கஅப்போது யதார்த்த பிம்பசூரியன்வெளிப் படும் ; அதுவெளிப்படப் பிரதிபிம்பமு மதனதுசாயாவொளியும் பொய் யெனக்காணப்படும். அதுபோலப் பிராணாதி வாயுக்கள்சம்பந்தமாயுள்ளதாற் சரீரஞ்சலிக்க அதையபிமானித்து அதினிறைந்துள்ள மனஞ்சலிக்கும் ; அது

சலிக்க அதிற்பிரதிபிம்பித்த சுயஞ்சித்தாபாசமான சிதாபாசன்சலிக்கும்; அதுசலிக்க அதனதுசாயையாகப் புறம்பிற்சத்தியமாகக் காணப்படுஞ் சகசீவ பாஞ்சலிக்கும்; அதுசலிக்க அதனுலிவற்றினுண்மையை யாவராலும் அறிதற்கரிதாமெனச் சோர்வுற்ருேனுக் கெவரும்உண்மை இஃதென்று எளிதில் முறையே யனுட்டித்தடையச் சான்ருேராலியற்றிய இயமம், நியமம், ஆதனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதியென்னும் அங்கயோகமெட்டனுள் இயமமாவது: கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பிறர்பொருணயவாமை, இந்திரியமடக்கல். நியமமாவது: தவம் தூய்மை, தத்துவநூலோர்தல், மனம்உவக்திருத்தல், தெய்வவழிபாடு. ஆதனமாவது: சுவத்திகம், கோமுகம், பதுமம், வீரம், கேசரி, பத்திரம், முத்தம், மயூரம், சுகம்என்பனவாம். இவற்றில் சுவத்திகமாவது: தொடைக்கும் முழங்காற்கும்நடுவே யிரண்டுள்ளங்காலையுஞ்செலுத்தி யிருமாந்திருத்தல் கோமுகமாவது: சகனப்பக்கத்தி லிருகாற்பரட்டையும் மாறவைத்து அவ்விருகாற்பெருவிரலைக் கைப்பிடித்திருத்தல். பதுமமாவது: இருதொடைமேலும் இரண்டுள்ளங்காலையும் மாறித்தோன்றவைத்தல். வீரமாவது: வலதுதொடையி லிடதுகாற்பரட்டைச்சேர்த்து இருமாப்புற்றிருத்தல். கேசரியாவது: பீசத்தின்கீழ் இடதுபாட்டைவைத்து இடதுமுழங்கையை முழங்காலில்வைத்து அங்குலியைவிரித்து நாசியைப்பார்த்திருத்தல். பத்திரமாவது: பீசத்தின்கீழ் அவ்விருகாற் பரட்டையும்வைத்து அவ்விருபதத்தையும் இருகையாலிறுகப்பிடித் தசையாதிருத்தல். முத்தமாவது: இடக்காற்பரட்டாற் சிவனியையழுத்தி வலக்காற்பரட்டின்கீழுந்தவிருத்தல். மயூரமாவது: முழங்கையிரண்டும் உந்திப்புறத்திலழுந்தப் புவியிற்கையூன்றிக் காலைநீட்டித் தலைநிமிர்ந்திருத்தல். சுகமாவது: சுகமுந்திடமு மெவ்வாறிருக்கினெய்துமோ அவ்வாறிருத்தல். பிராணுயாமமாவது: இரேசகபூரக வாயுவைக் கும்பித்தடக்கல். பிரத்தியாகாரமாவது: உபாதியைநீக்கி யுள்நோக்கல். தாரணையாவது: கண்டம், இதயம், நெற்றிக், கபாலம், நாபியென்று மிவற்றுள் ஒன்றிற் சந்ததஞ்சிந்தைவைத்தல். தியானமாவது: ஐம்புலனையடக்கிச் சிவயோகஞ்சேர்தல். சமாதியாவது: இந்திரியமுதலிய தத்துவச்சேட்டைகட் கேதுவாகிய ஆக்கையுணின் றவற்ருேடுகூடினு மவற்றிற்பற்றின்றியிருக்கு மான்மாவாகிய தன்னைத்தான்காண்டல்; இவ்விதப் பொருள்கோடலைப்பெற்ற இயமமாதிப் பிராணுயாம மீருக்கிடந்நான்குந் தறிபோலுடலஞ் சலியாதுநிற்றற்கும், பிரத்தியாகாரமுதல் தியானமீருக்கிடந்மூன்றுங் காணம்பதைப்பறச சித்திரதீபம்போனிற்றற்குஞ் சாதனமாம். சாதனமாகாவிடத்துச் சமாதியில்தன்னை யுள்ளவாறு காணப்படா தாதலினென்க.

இரியாத்மாநந்தமென்பது: அவித்தியாவசத்திற் பிரத்தியட்சம் விடயமயமாகுங்கால் ஆன்மாஅப்பிரத்தியட்சமாயும், அனுமானத்தா லுள்ளதாகத் தோற்றுந்தோற்றன்மாத்திரமாயும், சொல்மாத்திரமாயும், ஆதாரமுஞ் சுகப்

பேறும் விடயமன்றித்தனக்குக் கிஞ்சித்தேனும் வேறில்லாததாயுங் காணப் படுமாறுபோன்று அவித்தியாநாசத்திற் பிரத்தியட்சம் ஆன்மமயமாகுங்கால் விடயம்அப்பிரத்தியட்சமாயும் பூர்வவாசனையாற்காணினுந் தோற்றன்மாத் திரமாயும் சொன்மாத்திரமாயும், ஆதாரமுஞ் சுகப்பேறும் ஆன்மாவன்றித் தனக்குக்கிஞ்சித்தேனும் வேறில்லாததாயுங் காணப்படுங்காட்சியே யாத்மா நந்தமெனவறிக.

ஆன்மாவே பிரியவடிவமென்ருல் அஞ்ஞானதசையில் விடயப்பிரியத் துக் கங்காந்திருப்பானேனெனில்: நாயானது பசையற்றஎன்பைப் பசை யுள்ளதாகக்கருதிக் கடிக்குங்காற் சிதையுண்டஎன்பிலொன்று தனதுபல் லீறலிற் றைத்தொழுகும்உதிரந் தனதாகக்கருதாது அதனதாகக்கருதி யவ் வென்பை மேலும்மேலும் புரட்டிப்புரட்டிக் கடிக்குமாறுபோல் ஆன்மாவுந் தனது கற்பனுவடிவமே விடயமாமென்றதையும், தற்பிரியமே அதன்பிரிய மாகத் தோற்றுமென்பதையும்மறந்து அதனுற்பசையற்ற விடயத்தைப் பசை யுள்ளதாகக்கருதிப் பாடுபட்டுத்தேடித் தனக்குப்பிரிய மல்லாததைத்தள்ளிப் பிரியமுள்ளதை யனுபவிக்குங்கா லுண்டாம்பிரியந் தனதாகக்காணுது அதன தாகக்கருதி, அவ்விடயங்களை மீண்டுமீண்டும் மாறிமாறி யனுபவிக்கும்; அனுபவிக்கினும் அவ்விடயப்பிரியம் உதிப்பதுமடங்குவதும் தற்பிரியத்தி லாதலால் அங்காத்தல்போற் காண்டலேயன்றி யங்காத்தலன்றெனக.

பிரியவடிவம் விடயமன்ருயின் புகழ், சத்தசரம், சங்கீதம், நடனம், சர்வ வாத்தியம், இனியமிடருேசை, குயில்கூவல், கிளிகொஞ்சல், மழலைச்சொல், பஞ்சணை, அலங்காரக்காட்சி, நளபாகம், தீங்கனி, பால், தேன், சர்க்கரை, கற்கண்டு, நன்னீர், நற்கந்தம், விணேதமுதலியவை காரணமாகப்பிரியமும்; இகழ், அவசுரம், அவாத்தியம், இனிமையில்லாமிடருேசை, காக்கைகத்தல், கழுதைகூவல், முள்ளணை, பருக்கணை, கோரவடிவம், வறும்பாகம், கசப்புக் கனி, மூத்திரம், உவர்நீர், அவுடதம், துர்க்கந்தமுதலியவை காரணமாக அப் பிரியமும்வருதற் கேதென்னையெனின்: தானலாவுடம்புதன்னைத் தானெனக் கருதி யபிமானித்தலால் கரணஇந்திரியமும் அக்கரணேந்திரியத்தால் இரா காதிகளும் சத்தாதிகளும் இவற்ருற் பிரியாப்பிரியமும் வந்தனவென்று நீவ ரீர்கூறியது மெய்யாயினும் இதுநன்குபுலப்படும்வண்ணம் யானுமான்மாவாத லாற் பிரியவடிவமென்பதை விளக்கவேண்டுமெனா: நினதுபிரியத்தை விடயத்தினதெனக்கருதி அனுபவிக்கினும் அதுவிடாக்கவலையாதலானும், அதனைத்தணிப்பான்வேண்டி விடயவிருத்திகளடங்கி யுறங்குமுறக்கத்தில் ஆன்மாவே தான்மாத்திரஞ் சேடித்துநிற்றலானும், அங்ஙனம்உதிக்குஞ்சுகம் அவ்வான்மாவையன்றி வேறின்றுதலானும், அவ்வெதார்த்த சுகத்தைத் தானேசுகித்து அக்கவலையைத் தணித்துக்கொள்ளுதலன்றி வேறென்றுற் றணிக்கப்படாதென்பது அனுதினமுநினக்கே அனுபவசித்த மாதலானும் இதுவேபிரமாணமெனவறிக. பிரியவடிவாயுள்ள அனைத்தினுக்கும் பிரியந்

தானெனக்கண்டஇதனையும் போலிச்சுகமென்ற தென்னையெனின் : பிரம வியாபகத்தில் ஆன்மாவாகியகூடஸ்தன் வியாப்பியமாயும் ஏகதேசமாயும் விளங்குவதைச் சிந்திக்குமிடத்துப் பூர்வபட்சமாமென்பதையும், முன்னர்விடயம் பிரியவடிவாய் நின்றாற்போல இப்போதுவிசாரத்தால் ஆன்மாபிரியவடிவாய் விளங்குகின்றதென்பதையுங் கருதியென்க. அமுக்கியமாகத்தக்க இவ்வாத்மாநந்தத்தாற் பயனென்னையெனின் : இந்நிலைவாய்க்கினல்லது மேனியினகம்புறமாகக் காணப்படுமனைத்துஞ் சின்மாத்திரமாக்கப் படாதென்பதே பயனுமென்க.

இனிஅத்துவிதாநந்தமென்பது : துவிதநாசத்திலுதிக்கு மாநந்தமாம். துவிதமென்றது : கூடஸ்தபிரமத்தை. அவற்றுள் : மேனியினுள்ளிற் றத்துவங்களனைத்தையுங்கரைத்துச் சின்மாத்திரமாக விளங்கும்விளக்கமே கூடஸ்தனெனவும், மேனியின்புறம்பிற்காணப்படுஞ் சகலசராசரங்களையுங் கரைத்துச் சின்மாத்திரமாக விளங்கும்விளக்கமே பிரமமெனவுங்கொள்க. கூடஸ்தவியாபகத்திற்கு வியாபகமாயுள்ளபிரமத்தையும் ஏகதேசமாக்கித் துவிதமென்றதென்னையெனின் : அகம்புறமென்பதும் அவ்வகம்புறத்தில் விளங்கும்விளக்கமுந் தன்னையன்றி யில்லாமையானும், அகமென்பதுபுறம்பிற்கு ஏகதேசமாவதுபோலப் புறம்பென்பதும்அதனுக்கு ஏகதேசமாமென்பதினானும், அகமென்பதிருத்தல்பற்றிப் புறம்பென்பதுண்டாகப்பெறு மென்பதினானும் துவிதமெனக்கூறியதென்க. இத்துவிதநீக்க மெங்ஙனங்கூடுமெனின் : ஒன்றைத்தவிர நூறென்பதில்லாததுபோலக் கூடஸ்தனையன்றிப் பிரமமென்பதில்லையெனவும், வெளியையன்றிப் பத்துத்திக்கென்னும் வெளிபேதங்களும் எங்ஙனமில்லையோ, அதுபோலப் பிரமத்தையன்றிக் கூடஸ்தபேதங்களுஞ் சுவேசுரபேதங்களு மில்லையெனவுந் தனதனுபவ விளக்கத்தினாற் கூடுமெனவறிக. இங்கேகூடஸ்தபிரம ஐக்கியமென்றதன் உண்மையைவிளங்கக் கூறவேண்டுமெனின் : உபாதிகுணந்தொழிலைநீக்கி விசாரித்துத் தெளியுங்கால் நாற்கதிகளுந்தெரிவெனவும், இத்தெரிவுதனித்தனிக் காண்டலாற் கூடஸ்தனெனவும், இத்தெரிவனைத்தும் ஏகமாகக்காண்டலால் அதுவேபிரமமெனவுங்கொண்டு இவ்விரண்டினுமிருப்பத் தெரிவாதலா லிதுவேயது, அதுவேயிதுவெனத்துணியக் கூடஸ்தனே பிரமமெனவும், பிரமமே கூடஸ்தனெனவும் விளங்குமெனவறிக. இத்துவிதநீக்கத்திற் சுகமுதிப்ப தெவ்வாறெனின் : வியாபக வியாப்பியமென்னுஞ் சொரூபமும், அதுபற்றியுண்டாம் பிரமகூடஸ்தனென்னும்நாமமும், பிருதிவிதத்துவமுதல் நாதத்தத்துவ மீறாகக் கிடந்துள்ள சகலகாரணகாரிய சம்பந்தங்களைசித்து அதற்குமேல் சின்மாத்திரமாய் விளங்குகின்றேமென்னும் வாசனையும் அற்றுநின்றநிலை நனவிற்சுழுத்தியாதலால் அதுவேசுகப்பேறுமென்க. இதனையும்போலிச்சுக மென்றதென்னையெனின் : கற்பிதமாயுள்ள அவித்தை, மாயையால் அறிவு கூடஸ்தபிரமமெனத் துவிதம்போற் காண்டலேயன்றித்துவிதமாகாது. துவிதமானு

லன்றோ பின்னர்விசாரத்தா லத்துவிதமாகும்? இல்லவேயில்லை; ஆதலாற் போலியாமெனவறிக. இங்ஙனமாயின் அறிவேகூடஸ்தன் ஆனந்தமேபிரம மெனச் சிலர்கூறுவதென்னையெனின்: தானென்னும்முதற்பதத்தின் வாச்சியார்த்த லட்சியார்த்த மின்னதெனச் சிந்தித்து ஐயந்திரிபறத் தெளியாததாலென்க. அஃதெங்ஙனமெனின்: தன்னையன்றியறிவும், அறிவையன்றி ஆனந்தமு மில்லாததாலென்க. துவிதமற்றதன்னை யேகமென்றாற்குற்ற மென்னையெனின்: ஒன்றெனினில் இரண்டென்னவரும் ஆதலின்கூடாதென்க. அற்றாயின் ஒன்றேயொழிய இரண்டாவ தில்லையென்னு மொரு வேதமெனக் கூறுவானேனெனின்: சசீவபரமென்னும் விகற்பத்தை யொழிக்கவேண்டியென்க. ஒன்றெனினி லிரண்டென்ன வருமென்றதெங்ஙனம்? தானே தானாய் விளங்கும்நிலை யொன்றே யுண்மையெனி னங்ஙனங் கூறவருமா? வாராததால் இரண்டெனப்படுமெனவறிக. ஆயின் உண்மைதான் யாதோவெனின்: தானேயெல்லாமா யல்லவுமா யிருப்பதாதலிற் றானே யுண்மையெனவறிக. தானேயுண்மையென்றற்குப் பிரமாணம் வேதாந்த சூளாமணி ௩௫-வதுகவி "விரிபுமுலகனைத்தும்பொய் மெய்மைதானென் னும் விவேகத்திற் றோற்றுவதே யத்துவிதாநந்தம்" என்பதினாலறிக. தானே தனதுவிகற்பமாயுள்ள ஞானஞ்ஞானங்களில் நவநவமாகவும் பாவாபாவமாக வுஞ் சகளநிஷ்களமாகவுங் காரணகாரியோபாதி பேதங்களாகவுங் காணப் படுங் காட்சிகளெத்தனையோ, அத்தனையுஞ் சடமாதலாற் சடமாகவும் அச்சட பேதங்களை யங்கங்கே யவ்வவற்றிற்கு ஆதாரமாயுஞ் சாக்ஷியாயும்நின்று தெரியுந்தெரிவுபேதங்க ளெத்தனையோ அத்தனையுஞ் சித்தாதலாற் சித்தாக வுநிற்றலின் அத்தத்துவிதநீக்கமே யத்துவிதமென்றால்தோடமென்னை? எனின்: "சித்தம்பிறந்து செகம்பிறந்து நானெனவோர், கர்த்தன்பிறந்த வழி கண்டோமே—சித்த மடங்காமை யேமாயை யம்மாயை மாய்ப்பார், திடந்தானே சாயுச்சியம்" என்பதினானும், "விளக்குமிரவிபு மலருமுண்டா முண்டாம் வீசொளியும்பகற்பொழுதும் விரையும்போலத், துளக்கமில்சித் துண்டாகி லுண்டாஞாலத் தோற்றாவுமாத்திரமே சொரூபமாகும்" என் பதினானும், "சங்கற்பசாலர் சகத்தோற்றரவெல்லா மிங்கற்பமென்னுநிழி வரோ" என்பதினானும், சித்தினதுவிகற்பஞ் சடமெனப்பெற்றாம். பெறவே, சித்தினதுவிகற்பமற்றாற் சகத்தாகியசடபேதமனைத்தும் ஒருங்கேசித்துச் சின்மாத்திரமாய் விளங்குவது சேடித்துநிற்குமாதலானும் அங்ஙனநிற்பது அவித்தியாமாயாநாசத்தால் இரண்டுபோலக் காணுமாதலினானும் அவைகூட ஸ்தபிரமமாதலால் அவற்றிற்கே ஐக்கியமாதலானும் அங்கேசடபேதமின்றாத லானுங் கூடாதென்க. வியாபக வியாப்பியமென்னும்உருவமுங் கூடஸ்தபிரம மென்னும்நாமமுஞ் சடமாகவும் அங்கேயவற்றிற்கு ஆதாரமாயுஞ்சாக்ஷியாயும் விலட்சணமாயும்நின்று அவற்றைத் தெரியுந்தெரிவு சித்தாகவுமிருக்க இத்து விதத்தைப் போக்கத்தக்கதன்றோ அத்துவிதமென்றது? என்னின்: கடோ பாதியாயும் மேகோபாதியாயுந் தடிப்புற்றுநின்ற அறிவு அவ்வவ்வுபாதிகட்கு

அகம்புறமின்றி யிடைவிடாது நிறைந்துள்ளது வெளியேயெனத் தேர்ந்தவி டத்து அவ்வவ்வுபாதிகளாகாது அவ்வவ்வெளியளவா நின்றாற்போல அவித்தி யாமாயோபாதியளவாத் தடைப்புற்றுநின்றதான் அவ்வவ்வுபாதிகட்கு அகம்புற மின்றி யிடைவிடாது நிறைந்துள்ளது அறிவேயென்று ஐயந்திரிபறத் தேர்ந்த விடத்து அவ்வவ்வுபாதிகளாகாது அவ்வவ்வறிவளவாகவேநிற்கும். அங்ஙனம் நிற்குந்தா னறிவாதலானும் அவ்வறிவே வியாபகவியாப்பியமாதலானும் இந்த வியாபகவியாப்பியஞ் சித்துப்பேதமாதலானும் இந்தச்சித்துப்பேதமே துவித மாதலானும் இந்தத்துவிதநாசமே அத்துவிதமாதலானுங்கூடாதென்க. பிரமமு தற்பிபீலிகாந்த வரையாயுள்ள சமஸ்தகற்பிதங்களுந் தானேயென்பதுந் தான ல்லவென்பதும் எவ்வாறணாப்படும்? எனின்: கோச்சேரமான்யானைக்கட் சேஎய்மாந்தரஞ் சேரலிரும்பொறை யென்றவழி யாசனென்பதோர்சாதியும், சேரமானென்பதோர்குடியும், வேழநோக்கின யுடையானென்பதோர்வடி வும், சேயென்பதோரியற்பெயருள், மாந்தரஞ்சேரலிரும்பொறையென்ப தோர் சிறப்புப்பெயரு மாதலால் இக்கற்பனைகள் ஓர்புருடனல்லாதிருந்தும் அவனையன்றியவை யில்லாவாறுபோலென்க. ஒழிவிலொடுக்கத்தில் "ஆனைக் கைபோலபின வத்துவிதாநந்தமா, மோனத்தை வாக்குமனமூட்டுமோ" வென்னுங்கவியில் "சிவமுமான்மாவு மிரண்டற்றிருப்பதேஅத்துவிதமாகிய மோனாநந்த" மென்றகூறியது மவ்வத்துவிதந்தானே? யென்னின்: கை நாசியென்றிரண்டுருப்பாய்ப் பரிசங்கந்தமென்னும் இரண்டுவிடயங்களையும் வேறபிரித்தறிவதாயிருந்தும் பிரிபடாது அதுவேயிதுவாய், யிதுவேயதுவா யிருப்பதுபோற் சிவமென்றும் ஆன்மாவென்றும் இரண்டுபொருளாய்ச் சர்வக்ஞத்துவம், கிஞ்சிக்ஞத்துவமென்னும் இரண்டுஞானங்களாய் வேறுபட் டிருந்தும் அயிக்கத்துப்பிரிபடாது அதுவேயிதுவா யிதுவேயதுவாயிருப்பது அத்துவிதமென்றால் உபாதிகுணங்களறுவிடத்துப் பசுபதிக்கெங்ஙனம் ஐக் கியங்கூடும்? கூடினதுபோற் காண்டலேயன்றிக் கூடினதன்றெனவும், அவித்தைமாயைகெடாததால் இதுவும்பதவிமுத்தியேயன்றி யைக்கியமுத்தி யன்றெனவும், மீண்டும்பிறந்திறத்தற் கையமின்றெனவுங்கொள்க. இங்ஙன மிருக்க எம்மதத்தோருஞ் சீவேசுரர் சிற்றறிவும் பேரறிவுமாதலாற் சிற்றின் பம்பேரின்ப மொன்றுபடாதெனக் கூறுவதென்னை? யெனின்: உபாதி குணத்தொழிலே யறிவெனக்கொண்டு இவ்விருவரெனவுஞ் சடசித்து இன்ன தெனக்கூறுஞ் சுருதியும் அதனையுணர்ந்தஅறிஞருஞ் சித்தையன்றிச் சீவேசுரா ருபாதிகுணத் தொழிலாகாரென ஞாயத்தாற் சந்தேகமறக்கூறினும் இவை யனைத்தும் பிதற்றலெனவஞ்சொள்ளும் அறிவிலிகட்கு அறிவுபேதம்நீங்காது. அதுநீங்காவளவும் ஆநந்தபேதம் எங்ஙனம்நீங்கும் நீங்காது.

இனிவித்தையாநந்தமென்பதுயாது? எனின்: நான்குவேதத்தினும் முடிவாயுள்ள மகாவாக்கிய வாச்சியார்த்த லட்சியார்த்த முன்னிட்டுதிக்கும் ஆநந்தமாம். நான்குவேதமாவது: இருக்கு, யசுர், சாமம், அதர்வணமென் பன. அவற்றில்முடிவாயுள்ள மகாவாக்கியமென்பது: முதலாவது பிரக்

ஞானம்பிரமம், இரண்டாவது அகம்ப்ரம்மாஸ்மி, மூன்ருவது தத்தொமசி, நான்காவது அயமான்மாபிரமம்என்பதாம். இவற்றில்தன்னைச் சுருதியுத்தியால் ஐயந்திரிபறவிசாரித்துநிச்சயிப்பது வாச்சியார்த்தமெனவும், அங்ஙனம் நிச்சயித்தவாறு ஞானகதப்பிரத்தியட்சத்தால் தன்னையுள்ளபடிகண்டு அனுபவிப்பது லட்சியார்த்தமெனவுமாம். இதனையும்ஆபாசமென்றது: அக்கினியினதுகாரியம் புகையாயினும் அப்புகைமுன்னிட்டு அக்கினியைக் காணுமாறுபோல், "தன்னிடத்திலேதோன்றித் தன்னிடத்திலேயிருந்து தன்னிடத்திற்கூடுஞ் சகத்தோற்றம்" என்றகவிப்படித் தனதுகாரியம் வாக்கியமாயினும் அவ்வாக்கியமுன்னிட்டுத் தன்னைக்காண்பதெனிற் புகையுள்ளபோதும் இல்லாதபோதுந் தானிருப்பதுண்மையாதலின், ஆபாசமாமென்க. இங்ஙனமாயின் வாக்கியமுன்னிட்டுத் தான்விளங்குவானேன்? எனின்: காகதாலிய ஞாயம்போலாமென்க. கதகன்மபுண்ணிய பரிபாகத்தால் விளங்குமாயின் வாக்கியவிசாரத்தாற் பயனென்னை? யெனின்: "பண்ணியபயிரிற் புண்ணியந்தெரியும்" என்பதனுல்வாக்கியவிசாரத்தால் அப்புண்ணியந் தெரியுமாதலின் அதுவேபயனுமென்க. விசாரமின்றி ஞானமுதித்தபேரும்உண்டா? உண்டு; அவர்கள்முன்னரே கிருதகிருத்தியராமென்க. இனிமுன்னே அபாவமென் ஞெருநான்கு நித்தியத்துவம் உண்டென்றீரே; அவ்வபாவம் என்பதற் கருத்தமென்னை? இல்லாமையாம். அவ்வில்லாமையை யேற்பதெது? ஜக, சீவ, பரங்களாம். அஃதெங்ஙனம்? கடபடங்களுக்கு முன்பின்னுள்ளது மண்ணும்நூலுமேயன்றி அவ்வுபாதிகள் அப்போதில்லாவாறு போலச் சக, சீவ, பரங்கட்கு முன்பின்னுள்ளது காணேந்திரியமென்னுந் தெரிவேயன்றி அவ்விகற்பங்கள் அப்போதில்லையாதலால் ப்ராக்பாவம் ப்ரத்தொம்சாபாவமெனவும், கடநோக்கிற்படமும் படநோக்கிற்கடமும் எங்ஙனமிப்போதில்லையோ, அதுபோலப் பசுபதிசித்தும் சகத்துசடமுமாதலாற் சித்துநோக்கிற்சடமும் சடநோக்கிற்சித்தும் இப்போதுமில்லையாதலால் அன்னியோன்னியாபாவமெனவும், முன்பின் இப்போதுமில்லாக் கடபடங்களைப் போதுமிருக்குமா? இராவே. அதுபோலஇப்பூதபௌஷிய வர்த்தமான காலத்திலில்லாச் சடசித்துக்கள் சதாகாலமும்இருக்குமா? இராவே. அது பற்றியத்தியந்தா பாவமெனவுங்கொள்க. இதனைநான்கபாவமென் ஞெருநித்தியத்துவ மென்றதென்னை? அபாவமேநித்தியத்துவமாகக் காண்டலினென்க. கல்வியின் மிக்குயர்ந்துள்ள எம்மதத்தோரும் இம்மூன்றையும் அபாவமென் றுணராததென்னை? தன்னைத்தானுள்ளவாறு விசாரித்துத் தெளியாமையாலென்க. இதனையும்போலியென்றதென்னை? மலடிமைந்தனென்ருற்போல அபாவமென்னுஞ்சொல்லே போலியென்றதற் குத்தரமென வறிக. அத்தியாசமென்ருெரு பரிபூரணத்துவம்உண்டென்றீரே; அவ்வத்தியாசத்துக்கு அருத்தம்யாது? என்னின்: பழுதையைப்பாம்பென்றது அத்தியாசமாம். அதுபோலப்பரிபூரணமாயுள்ள பொருளிடங் காலங்கட்கு

அத்தியாசமாவதுஎன்னை? யெனின்: இன்னதுஆகும் இன்னதுஆகா தென்று ஏகதேசதருமத்தை யேற்கப்படுஞ் சடசித்தாயுள்ள சமஸ்தபொருள் களும் விருப்புவெறுப்பு மயமாமன்றிப் பிரியமயமாகாவாகலின் வஸ்துபரிச் சேதமெனவும், கடல்படுதிரவியங் கான்படுதிரவியம் வயல்படுதிரவியம் மலை படுதிரவியம் பாலைபடுதிரவியம் என்பனவேயன்றி இப்பொருளனைத்தையுந் தன்பாலுள்ளதோ ரிடமின்றாதலின் தேசபரிச்சேதமெனவும், ஓர்பருவத்துள் ளது மற்றோர்பருவத்தின்றாதலானும் அப்பருவங்கடோறும் விளைவனவற் றைத் தன்பாலுள்ளதோர் காலமின்றாதலானுங் காலபரிச்சேதமெனவுங் கூறப் படுவனவேயன்றிப் பூரணத்துவமில்லாமையாற் பரிபூரணப்போலியெனப் படும். இதுகாறுஞ் சத்து சித்து ஆநந்தம் நித்தியம் பரிபூரணமென்னப்பட்ட குணங்களை யதார்த்தமெனவும், போலியெனவுங்கூறியது யாதுபயன்கருதி, யென்னின்: போலிக்குணங்களைக்கண்டு விலகில் யதார்த்தகுணங்களின் ஒருமைதோன்றுமெனக் கருதியென்க.

இம்மெய்க்குணங்கள் அறிவுக்கபேதமாயிருக்க இவற்றை யவ்வறிவினி ன்றும் வேறுபிரித்துக்கூறுவ தென்னையென்ற வினாவுக்குவிடை.

"செம்மை யொளிவெப்பந் தீபமே யென்றாற்போல்
மெய்ம்மை குணமறிவே வேறல்ல—நம்மை
யறிவே வடிவென் றறிதற்குச் சொன்ன
குறியாகு மிந்தக் குணம்."

பதார்த்தசோதனை செய்யவேண்டினோன் அபேதமாயுள்ளதைச் சிவப்பு, ஒளி, யுட்டணமெனப் பகுத்துணர்ந்து இவைதாம்பேதியாது ஏகத்துவமாகக் காண்டலே தீபமெனத்துணிந்தாற்போல அறிவுசோதனை செய்யவேண்டி னோன் அபேதமாயுள்ளதைச் சத்தாதியாகப் பகுத்துணர்ந்து இவைதாம்பேதி யாது ஏகத்துவமாய்நின்று ஒளிர்வதே யறிவெனத்துணிவதற்கன்றி இக்குணங் களை யறிவினின்றும் பிரித்தற்குக்காரணம் வேறல்ல. இஃதன்றியும் நம்மை யறிவே வடிவமென்று நாமுணர்தற்கும்; அவ்வறிவைலட்சியிப்பதற்குஞ் சுருதி சொன்ன குறிகளாகும் இவ்யதார்த்த குணங்கள்.

"நம்மையறி வேவடிவாய் நாங்கண்டோம் நம்மையன்றிச்
செம்மை யுலகத் திரள்காணோம்—நம்மைநாம்
உற்றுப்பா ராதிருந்தோ மல்லா லொருக்காலும்
இற்றுப்போ னோமோ வியாம்." சொரூபசாரம்.

ஐந்தாஞ்சூத்திரம் முற்றிற்று.

———

ஆறுஞ் சூத்திரம்.

அவதாரிகை.

அவ்வான்மா சகத்துமல்ல பரமுமல்ல அறிவேயெனப மகாவாக்கியத்தின் வாச்சியார்த்த மிலட்சியார்த்தங் காரணமாக இச்சூத்திரம் உணர்த்துகின்றது.

ஆறுஞ் சூத்திரம்.

உணருரு வசத்தெனி னுணரா தின்மையி
னிருதிற னல்லது சிவசத் தாமென
விரண்டு வகையி னிசைக்குமன் னுலகே.

இ-ள். உணருருவெனினசத்து—(மேற்கூறியவான்மா) இஃதெனச் சுட்டியுணரப்படும் நாமரூபப்பிரபஞ்சப்பொருளெனின் அசத்துசடமாதலினுனும், உணராதெனினின்மையின்—இஃதெனச்சுட்டியுணர்ப்படாதபொருளெனின் சூன்ய (துச்ச) மாதலினுனும், இருதிறனல்லது சிவசத்தாமென—இரண்டுவகையுமல்லாத மேலாயசச்சிதானந்த இலக்கணங்களையுடையதென்று, இரண்டுவகையினிசைக்குமன்னுலகே—தத்துவமசியென்னு மகாவாக்கியத்தால் வாச்சியார்த்தம் இலட்சியார்த்தமென்னு மிருநெறியானும் நிலைபெற்ற சத்துக்கள் சொல்லுவார்கள். எ-று.

ப-ம். ஆன்மவிலக்கணம் சதாநந்தமென்பார்:—சிவசத்தாமெனவும். வாச்சியார்த்த சீவேஸ்வரர்களுக்கு ஐக்கியம்பொருந்தாது இலக்ஷியார்த்த கூடஸ்த பிரமத்துக் கைக்கியம்பொருந்துமென்பார்:—இரண்டுவகையி னிசைக்குமன் னுலகேஎனவுங்கூறினர்.

உணருருமுதல்சிவசத்தாமென்பதுவரை. உ-ம். சசிவன்னபோதம். அறியும்பொரு ளன்றறி யாப்பொருளன், றறிவாகிய நீயெனு மப்பொருள்தான், பொறியின்வழி நின்றறி யும்பொருளோ, போதக்கண் விழித்தறி யும்பொருளே.

இ-ள். இஃதெனச்சுட்டியறியப்படும்வஸ்து காரியமானசகத்தாம். அறியப்படாதவஸ்து மூலாஞ்ஞானமாம். இந்நெறியால்; அறிவேவடிவாயுள்ள நீயென்னுமந்தத் துரியப்பொருளானது திரிசியமுமல்ல, அதிரிசியமுமல்ல (ஆயின் அஃது) மனுதிஐம்பொறி மார்க்கமாகநின்று காணும்வஸ்துவோ? அறிவாகியநேத்திரமலர்ந்து தானேதானுயறியும் பரவஸ்துவாம்.

சித்தாந்ததரிசனம்.

அறியாப் பொருளு மலனறிவா லூன்கண்
ணறியும் பொருளு மலன்.

ஆகாயம் போல வறிவாகி நிற்பானை
நீகா ணறிவாகி நின்று.

நீருக்குட் டட்பம்போ னின்னறிவி னின்றானைப்
பாரருட்கண் கொண்டு பரிந்து.

கைவல்யநவநீதம்.

அறிவுக்கு மறிவு செய்யு மறிவுவே றுண்டென் றெண்ணு
மறிவற்ற குதர்க்க மூடர்க் கனவத்தை பலமாய்த் தீரு
மறிபடு பொருணீ யல்லை யறிபடாப் பொருணீ யல்லை
யறிபொரு ளாகு முன்னை யனுபவித் தறிவாய் நீயே.

இ-ள். ஞானத்துக்கும் ஞானமுணர்த்தக்க ஞானம்வேறுளதென் றெண்ணுகின்ற:—மெய்யுணர்விழந்த குதர்க்கவாதிகளாகிய மூடஞானிகளுக் கனவஸ்தாதோஷமே பிரயோசனமாகமுடியும். (ஆதலினந்நெறிச்செல் லற்க):—அறிபடுபொருளாகிய பதிபசுபாசமுநீயல்லை, அறியப்படாததாகிய பாழெனும்பொருளுநீயல்லை. (ஆயின்யானாவதியாதெனின்):—தன்னைத் தானுணரற்பாலதாகியபொருள் மெய்யுணர்வாதலினதுவேநீ, அங்ஙனமாய வுன்னை நீயேயனுபவித்தறிதி. எ-று.

கைவெண்ணெயை நெய்யென்றறியா தலைவார்போன்று, தானாகிய வறி வினுண்மைநிலை யிஃதென்றாய்ந் தனுபவிக்கவகையறியாது, அறிவுக்கறிவென் பர், (அதாவது) சீவவறிவு, பரவறிவு, எனவிரண்டு. பரவறிவுணர்த்தாது சீவ வறிவு தன்னைத்தானுணராதெனல் மெய்யே; சீவவுணர்வுணர்த்தல் பரவுண ர்வு; பரவுணர்வுணர்த்தல், வேறுணர்வுண்டாகவேண்டும், அதனையுணர்த்த வேறுணர்வுண்டாகவேண்டும், அதனையுணர்த்த வேறுணர்வுண்டாகவேண்டும், இங்ஙனஞ் செல்லில்முடிவெங்குளது, இன்றாதலினிதனை யனவத்தாதோட மென்பர் கலைவல்லோர். இங்ஙனமாகுமெனவறியாது, அறிவுக்கறிவெனக் கூறற்குப்பயன் அனவத்தாதோடம். இதனையறியாததா லறிவற்றகுதர்க்கமூட ரென்றார். இதில்தோடமென்னை? இவரைஞானியென்பா ரிவரினும்விவேகி யர்போலும். இதுஞானமாகுமா. இவர்ஞானமென்பதைக் கேட்டுமறியார்போ லும், அந்தவூரிலுங் குடியிருந்தறியார்போலும். இங்கேகுதர்க்கமூடரென் பதில், குதர்க்கமாவது; ஒழுங்கின்றிவாதித்தல். அதாவது, ஸ்மரனையயன் றிச் சகசீவபாத்துள் சகமெனல்யாதெனில், இதோதோற்றுகின்றதே யது தானெனல். அததற்குரிய பெயருளதாயிருக்கச் செகமெனும்பெய ரேற்றற் பாலதெதுவெனில், முன்போலமீண்டும்விடைதரல். இதுதோற்றமன்றோ, உளதேல் காயத்தால்சுட்டிக்காட்டெனில், விரலாலிதுதானெனச் சுட்டிக்காட் டல். இவ்விரலுடலன்றியில்லை, இவ்வுடல்உலகன்றியில்லை, நீயுடலன்றாத லால், நீவேறாயிருந் துலகைக்காட்டுகவெனின், இதற்குநேராக வுத்தரமின்றிக்

கண்டபடிசொல்வாதஞ்செயல். சாயத்தாற்சுட்டிக் காட்டவொண்ணாதேனும், வாக்காலேனுங் காட்டுதியெனின், சொல்லாலிதுவெனக்கூறல். சொல், சத்தத்தையன்றியில்லை, சத்தம், ஆகாயத்தையன்றியில்லை, நீயாகாயமன்றாதலால், நீவேறாயிருந்துலகைக்காட்டுதியெனின், இதற்கும்முன்போலச் சொல்வாதஞ்செயல். காயத்தாலும் வாக்காலுஞ் சுட்டிக்காட்ட வகையின்றேனும், மனத்தாலேனுஞ் சுட்டியறிதியெனின், எங்ஙனமெனவரும். மனம்உலகாய் நில்லாது வேறாயிருந்துன்னவேண்டுமெனின், வேறாயிருந்துதா னுன்னினேனெனவரும். வேறிடம்பாழன்றோ, அங்கேமனமெங்கே, உன்னுதலெங்கே, காணப்படுமுலகெங்கேயெனில், முன்போலச் சொல்வாதம்வரும். இங்ஙனஞ் செய்தலே குதர்க்கமெனவுணர்க. இங்ஙனமாயவழக்கில் மூழ்கியெழாதார்க்கு வேதாந்தபட்சமிது, சித்தாந்தபட்சமிதுவென் றெங்ஙனந்தெளிகற்கிடக்தரும். ஆதலினவர்வழிச் செல்லாதிதனைக்கேளுதி; நீயுன்னலறியப்படும் பொருளாமெனி னுலகமாம், நீயுன்னலறியப்படாப் பொருளாமெனிற் சூனியமாம், உலகஞ்சடமாதலினீயல்லை, சூனியஞ்சடமாதலினீயல்லை. இவ்விரண்டையுமறிவ தறிவாதலி னதுநீயாமென்பார்:—அறிபடுபொருணீயல்லை யறிபடாப் பொருணீயல்லை யறிபொருளாகுமெனவும், சொல்லளவாகவு நினைவளவாகவும் போகாதேயென்பார்:—அனுபவித்தறிவாய் நீயேயெனவுங்கூறினார். நீயேயென்பதில், ஏகாரந்தேற்றப்பொருள்.

உதாரணம். திருமந்திரம்.

அறிவிக்க வேண்டா மறிவற் றயர்வோர்க்கு
மறிவிக்க வேண்டா மறிவிற் செறிவோர்க்கு
மறிவுற் றறியாமை யெய்திநிற் போர்க்கே
யறிவிக்கத் தம்மறி வாலறி வோரே.

தன்னை யறிந்து சிவனுடன் றானாக
மன்னு மலகுண மாளும் பிறப்பறும்
பின்னது சன்முத்தி சன்மார்க்கப் பேரொளி
நன்னது ஞானத்து முத்திரை நண்ணுமே.

வேதாந்தங் கண்டோர் பிரமவித்தி யாதரார்
நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற யோகிகள்
வேதாந்த மில்லாத சித்தாந்தங் கண்டுளோர்
சாதா ரணமன்ன சைவ ருபாயமே.

சிவஞானவள்ளலார்.

ஒன்றுடனுந் தோய்விலா னென்றவுரை யாலே
யென்றும் பிறப்பறுத்தா யென்றாயே—யென்று

மிவனவனு கில்லா னென்றவுரை பெண்கொல்
தவமிலர்க்குச் சொன்னமொழி தான்.

கைவல்யநவநீதம்.

உபதேசிக்க வெடுத்துக்கொண்ட தத்தொமசியென்னு மகாவாக்கியத்தில் வாச்சியார்த்தத்துக் கைக்கியங்கூடாதென்பதை யுணர்த்தல்.

இந்தநீ தொம்பதத்தி னிலக்கியப் பொருளா மென்றும்
பந்தமில பிரமமேதற் பதந்தனி னிலக்கி யார்த்த
மந்தமாஞ் சிவனீச னவர்களை வாச்சி யார்த்தஞ்
சந்ததம் பேதமாவார் தமககைக் கியங்கூ டாதே.

(போ-ரை.) இந்தநிலையாயுள்ள நீயென்னுங்கூடஸ்தனே தொம்பதத்தின திலட்சியார்த்தமாம், எப்போதும்பந்தரகிதமாயுள்ள அதுவென்னும்பிரமமே தற்பதத்தி னிலட்சியார்த்தமாம், முதலீறுள்ள சீவேசரெனப்படுபவர்களே நீயென்னுந் தொம்பதத்திற்கு மதுவென்னுந் தற்பதத்திற்கும் வாச்சியார்த்தமாம், ஐக்கியமாக்கினு மெப்போதும்பேதமுறுவராதலி னிவர்க்கைக்கியமென்பதேகூடாது. எ-று.

பேதமாவாரெனப் பொதுப்படக்கூறினுஞ் சமஷ்டி வியஷ்டிபேதஞ் சாக்ஷிக்கின்மையின் சீவேசரைக் குறிக்கப்பெற்றும். பெறவே கற்பித சைதன்யமென்ருயிற்று. இதுசுருதிபூர்வகமாக வுபதேசிக்கப்புகுமர்த்தம்.

வேதாந்தமுதலியகல்விகள், தத், தொம், அசி, யென்னு மூன்றுபதத்தைக் கடவாதென்பதற்கும்; இம்மூப்பதத்தின்கண்ணே தத்துவங்களைக் கடந்தபொருளை யுணர்த்து மாகமங்களெல்லாம் விரியப்பெறு மென்பதற்கும். உதாரணம்.

தொல்காப்பியம். கசுசு-ம். சூ.

வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது.

இது "ஓதலுந்தூதும்" என்னுஞ் சூத்திரத்திற்கூறிய ஓதற்பிரிவிற்குக் காலவரையறை யின்றெனபதூஉம், அவ்வோத்து இதுவென்பதூஉ முணர்த்துகின்றது.

இ-ள். கல்வி வேண்டிய யாண்டு இறவாது=துறவறத்தினைக்கூறும் வேதாந்தமுதலியகல்வி வேண்டியயாண்டைக்கடவாது; மூன்று இறவாது= அக்கல்வியெல்லாம் மூன்றுபதத்தைக் கடவாது. எ-று. இறவாதென்பதை யிரண்டிடத்துங்கூட்டுக. மூன்றுபதமாவது:—அதுவென்றும் நீயென்றும் ஆனுயென்றுங் கூறும்பதங்களாம். அவைபாமுஞ்சீவனும் அவ்விரண்டுமொன்ருதலுமாதலின் இம்மூன்றுபதத்தின்கண்ணே தத்துவங்களைக்கடந்தபொருளையுணர்த்தும் ஆகமங்களெல்லாம் விரியுமாறு உணர்ந்துகொள்க. இது

மூன்றுவருணத்தார்க்குங்கூறினர். ஏனையவேளாளரும் ஆகமங்களானு மப்பொருளைக்கூறியதமிழானும்உணர்தல் "உயர்ந்தோர்க்குரிய" என்பதனானுணர்க. இது இல்லறம்நிகழ்த்தினர் துறவறநிகழ்த்துங் கருத்தினராகவேண்டுதலின் காலவரையறை கூறாராயினர். என்பது நச்சினார்க்கினியார்வுரை.

தாயுமானசுவாமிகள். ஞானிகளிடம்.

நினைவொன்று நினையாம னிற்கினக மென்பார்
நிற்குமிட மேயருளா நிஷ்டையரு ளொட்டுந்
தனையென்று மறந்திருப்ப வருள்வடிவா னதுமேற்
றட்டியெழுந் திருக்குமின்பந் தன்மயமே யதுவாம்.
பினையொன்று மிலையந்த வின்பமெனு நிலயம்
பெற்றாரே பிறவாமை பெற்றார்மற் றுந்தான்
மனையென்று மகவென்றுஞ் சுற்றமென்று மசுத்த
வாசனையா மாசையொழி மன்னுருஞ்சாற் கொண்டே.
ஒருமொழியே பலமொழிக்கு மிடங்கொடுக்கு மந்த
ஒருமொழியே மலமொழிக்கு மொழிக்குமென மொழிந்த
குருமொழியே மலையிலக்கு மற்றைமொழி யெல்லாங்
கோடின்றி வட்டாடல் கொள்வதொக்குங் கண்டாய்
கருமொழியிங் குனக்கில்லை மொழிக்குமொழி ருசிக்கக்
கரும்பனைய சொற்கொடுனைக் காட்டவுங்கண் டனைமேற்
றருமொழியிங் குனக்கில்லை யுன்னைவிட்டு நீங்காத்
தற்பரமா யானந்தப் பொற்பொதுவாய் நில்லே.

நிஷ்டானுபூதி.

ஒருமொழி யாலே சுருதியா கமநூ லுயர்புரா ணமுமெலா மொழியும்
ஒருமொழி யாலே சரியைநற் கிரியா யோகபா வனையெலா மொழியும்
ஒருமொழி யாலே யண்டபூ தங்க ளொடுங்கிடுந் தன்னிலே தோன்றும்
ஒருமொழி சும்மா விருத்தலா மதனை லொப்பிலாச் சிவபத மடைவார்.

ஐக்கியங்கூடாமைக்கேதுகூறுகின்றது.

கைவல்யம்.

பேதமா ன்துவுங் கேளாய் பேரானு மிடங்க ளானு
மோதரு முபாதி யானு முடலானு முணர்வி னாலும்
பாதலம் விசும்பு போலப் பலதூர மகன்று நிற்பா
ராதலா லிவர்க்கெந் நாளு மயிக்கியமென் பதுகூ டாதே.

(போ-ரை.) முன்னர்ப்பேதமென்றேமே யதுவுமின்னதெனக் கூறக் கேளுதி :—சீவேசரென்னும்பெயர்களாலும் பூமிமுதலியவிடங்களாலும், கைலாயமுதலியவிடங்களாலும், சொல்லுதற்கரிய சமஷ்டிவியஷ்டியென்னுமுபாதிபேதங்களினுலும், காரணசரீரம் காரியசரீரமென்னுந் தேகபேதங்களினுலும், பேரறிவுசிற்றறிவென்னு முணர்வுபேதங்களினுலும் :—பாதாளமுஞ் சுவர்க்கமு மெங்ஙனமதி தூரமோ வதுபோ லவ்வளவு அதி தூரமேங்கிநிற்பர்கள் :—ஆகையாலிவ்விருவர்க்கு மைக்கியமென்பதெந்நாளுங்கூடாது. எ-று.

பெயர், இடம், உபாதி, உடல், உணர்வு, என்னுமிவைகளால் தனித்தனி பேதமுடையோர்சீவேசர். எனவே, இங்ஙனம்பேதமுற்றசித்தம் என்றமல்லவருதென்பதைக் குறிக்கப்பெற்றும். அவர்பேதமுறுவதாலாயபய னெமக்கென்னையென்னுங் கடாவரினிது விடையெனக்கொள்க. நானென்றுதாருலகிலொருவருமில்லை, அதனையாராயப்புகுவாருமில்லை. உளரெனி லாராய்ந்தாராய்ந்து சென்றுசென் றெட்டாமையினங்கே பொருளல்லதைப் பொருளெனக்கொண்டனர், கொண்டதனுற் றுவிதபேதமறுதற்கிடமில்லை, இல்லாததால் சிற்றறிவுசிற்றின்பம், பேரறிவுபேரின்பமென்னும் பேதமெங்ஙனமகலும், அகலாததால், சுகந்தனக்கயலென்ப தெங்ஙன நீங்கும் ; நீங்காதாகவே, தேகமேநானென முன்போல்வரும். வரவே, ஆண்பெண்பேதந் தானேவரும். வரவே, மோகாதிகட்கிடமாம், இடமாகவே, பந்தம்பலப்படும், பலப்படவே, ஆலம்விழுதுபோற் கெட்டியாம். இவையெல்லாம், நானலதை நானுகக்கொண்ட விபரீதத்தாலன்றே ; இங்ஙனமாயஅவசரத்தில் உடனழுவிலுடலையன்றி நானெனற்குப் பொருளறியாதா ரெதைநானெனவறிவர். உடலோடொழிந்ததெனில், உடனுகவேண்டும். ஆகுமெனின், அன்னியத்தாலறியப்படாமலு மபிமானிக்கப்படாமலு முபசரிக்கப்படாமலுந் தானேகர்த்தத்துவமாய்நின்று ஆலிங்கனமுதலியவற்றாலாய சுகப்பேற்றை யனுபவிக்கவேண்டும் ; அங்ஙனமின்றே. ஆதலினகர்த்தா. இதனைத்துணைக்கருவியாகக் கொண் டனுபவிப்போன்கர்த்தா. அவன் ஆன்மா. அவனுடலன்று. அவன்சித்து, உடல்சடமாதலி னெங்ஙனமொன்றும். போகதாகமுடையோனுன்மா. அவனுக்கிவ் வுடல்நீங்கியதால் போகதாக மொழிந்ததோ ? இல்லையே. ஒழியாதளவு மிதுபோன் றவுடல் யாதேனும்வேண்டும். வேண்டவே, எங்ஙனஞ்செனனமகல்வர். அகலாதளவு மல்லலருதாதலால், நானென்பதை யறிந்தேதீரவேண்டும். இதனைமறுத்தற்கிடமின்று. நானென்பதை யுள்ளவாறறிந்தாலப் போதுபேதமெங்கே? அறியாதளவு முண்டெனக்குறிப்பிக்கப் பேதங்காட்டப் புகுந்தனரன்றிவேறன்று. அறிவையன்றிச் சீவேசரின்றுதலா லந்தகாட்டத்திலேகம். இது இலட்சியார்த்தம். தன்னையறி வேவடிவெனக் கேட்டுங் காணுதானுக் கயல்நானெனக் காணுமாதலா லவனுக்குபாதியன்றிச் சீவேசரெனற்குப் பொருள்வேறென் றெங்ஙனம்படும். படாதாதலி னந்தநாட்டத்திற் சீவேசர் : பெயரிடமுபாதியுடலுணர்வு முதலியவற்றாற் பேதமாகக் காணப்படுவரன்றே? ஆதலிற்பேதம். இதுவாச்சியார்த்தம்.

(க-து.) இலட்சியார்த்தம் ஏகத்தையும், வாச்சியார்த்தம் பேதத்தையும் விளக்கினிறதென்பது, இனியேகமாக்கற்கிப் பேதங்காட்டியதெனவறிக.

இன்னும்மேற்படி மகாவாக்கியத்தினல் முப்பாழகன்ற சச்சிதானந்த லக்ஷணத் திருக்குசொரூபமே யதுநீயாயிருக்கின்முயென வுணர்த்துகின்றது.

குமாரதேவர் அபிடேகமாலை.

தூலமுத லாச்சாக்கிர சொப்பன சுழுத்தியாந்
　　துரிசகல் வியன்சீவனே
சொற்றுரிய காலபர வியோமமென வித்துரிசு
　　தொலைநிமல வறிவாம்பரன்
மாலறுஞ் சொலிதைபிற சாபத்ய புவிசாந்த
　　மாந்துகளில் சிவமிவர்கடா
மனுதமப் பிரதான காரணியு மோகக்கா
　　ரணியமோ கக்காரணி
சீலசத்திக ளாமிம் முப்பா ழகன்றநிகழ்
　　சீவபர சிவதுரியமாய்ச்
செப்புசற் சிற்சுகம தாகுமது நீயெனத்
　　திகழுமொரு மொழிவாக்கியமீந்
தாலமர்ந் தடியர்பவ மாலகற் றுறுமதிப
　　வபிடேக மாடியருளே
யமலமுது கிரியிலமர் குமரசற் குருபரநல்
　　லபிடேக மாடியருளே.

இ-ள். தூலமுதலா= தூலசூட்சுமகாரணதேகங்களிலடையும், சாக்கிரம்= சாக்கிராவத்தை, சொப்பனம்= சொப்பனவத்தை, சுழுத்தி= சுழுத்தியவத்தை, ஆம்= ஆகிய, துரிசு= குற்றம், அகல்= நீங்கிய, வியன்சீவனே= சீவதுரியனே. சொல்= சொல்லப்பட்ட, துரியம்= பரசாக்கிரம், காலபரம்= பரசொப்பனம், வியோமம்= பரசுழுத்தி, என= என்றுசொல்லப்பட்ட, இத்துரிசு= இக்குற்றம், தொலை= நீங்கிய, நிமலம்= பரிசுத்தமான, அறிவாம்= அறிவேவடிவான, பரன்= பரதுரியனே, மாலறும்= மயக்கமற்ற, சிற்சொலிதை= சிவசாக்கிரம், பிரசாபத்தியம்= சிவசொப்பனம், பொற்புவிசாந்தம்= சிவசுழுத்தி, ஆம்= ஆகிய, துகளில்= குற்றங்கணீங்கிய, சிவம்= சிவதுரியன், இவர்கடாம்= ஆகியவிவர்கள், மனு= பொருந்திய, தமப்பிரதானகாரணியும்= தமப்பிரதானகாரணியென்றும், மோககாரணி= மோககாரணியென்றும், அமோககாரணியென்றுஞ்சொல்லப்பட்ட, சீலம்= குணம்பொருந்திய, சத்திக

ளாம்=மாயாசத்திகளான, இம்முப்பாழ்=இந்தமூன்றுபாழ்களையும், அகன்ற= நீங்கிய, சீவன்=சீவதுரியன், பான்=பரதுரியன், சிவதுரியமாய்ச்=சிவதுரியமாக, செப்பு=சொல்லப்பட்ட, சத்து=சத்தும், சித்து=சித்தும், சுகம்= ஆநந்தமும், ஆம் ஆகியலக்ஷணத்திருக்கே, அதுநீயென=அதுநீயானாயென்று, திகழும்=விளங்காநின்ற, ஒருமொழிவாக்கியம்=ஒருமொழிமகாவாக்கியத்தினால், ஈந்து=அநுக்கிரகித்து, ஆல்=வடவாலவிருக்ஷத்தின்கீழ், அமர்ந்து= எழுந்தருளியிருந்து, அடியர்=அடியவர்களது, பவம்=சனனமென்னும், மால்=மயக்கத்தை, அகற்றுறும்=நீங்கியருளுகின்ற, அதிப=பரமகடவுளே. அமல=நிருமலனே, முதுகிரியிலமர்=விருத்தசைலத்திலெழுந்தருளிய, குமரசற்குருபர= குமாரதேவனென்னுந்திருநாமத்தினையுடையபரமாசிரியனே: நல்லபிடேகமாடியருளே=அடியேங்கள்செய்யு நல்லபிஷேகத்தைத் திருவுளங்கொண்டருளவேண்டும். எ=று.

(ப-ம்.) தொம்பதமுக்கிய காரியோபாதியென்னும் வியட்டி தூலசூட்சமகாரண தேகாபிமானிகளான விசுவதைசதபிராக்கியர்களைக்கொண்டு அநுபவிக்குஞ் சாக்கிரசொப்பன சுழுத்திமுதலானகுற்றங்கணீங்கியகூடஸ்தனே, வியன்சீவனாகிய துரியனென்பார்:-"தூலமுதலாச்சாக்கிர...வியன்சீவனே" யென்றும். தற்பதமுக்கியகாரணோபாதியென்னுஞ் சமட்டி தூலசூட்சுமகாரண தேகாபிமானிகளான விராட்டு, இரணியகர்ப்பன், அந்தரியாமிகளைக் கொண்டனுபவிக்குங் காரணோபாதிசம்பந்தமான துரியனாகிறபாசாக்கிரமும், மூன்றுபாதியோடுசம்பந்தமான காலபரமாகிற பரசொப்பனமும், எழுபாதிகளுமடங்கி வாசனாசம்பந்தமாத்திரமான வியோமமென்னும் பாசுழுத்திபுமாகிய குற்றங்கணீங்கிய பிரமமே அறிவேவடிவானபானென்பார்:—"சொற்றுரியகாலபர...வறிவாம்பா," னென்றும். சீவனதுகாரியோபாதியேழும், பானதுகாரணோபாதியேழும் விட்டுநீங்கினேமென்னும் வாசனாபோதஞானமிருத்தலா லவ்வாசனாபோதஞானமே யுபாதிரகிதசிவனுக்குடலாதலால், சிற்சொலிதையென்னு மபிமானியைக்கொண்டுவிளங்கும் வாசனாபோதஞானமென்னுஞ் சிவசாக்கிரமும், அவ்விடப்விஸ்வந்தோன்றுதெல்லாந் தன்மயமாய்ப் பிரசாபத்தியனென்னு மபிமானியைக்கொண்டுவிளங்கும் விஸ்வக்கிராசமென்னுஞ் சிவசொப்பனமும், இவ்வாசனாவிழப்பபிமானியான பொற்புவிசாந்தத்தைக்கொண்டுவிளங்கு முபசாந்தமென்னுஞ் சிவசுழுத்தியுமாகிய குற்றங்கணீங்கியதே சிவமாதலால், என்பார்:—"மாலறுஞ்சொலிதை...சிவம்," என்றும். இங்ஙனஞ்சொல்லிவந்த சிவசுழுத்தியாகிய தமப்பிரதானகாரணியென்னுஞ் சிவப்பாழும்; பரசுழுத்தியாகிய மோககாரணியென்னும் பரப்பாழும்; சிவசுழுத்தியாகிய அமோககாரணியென்னுஞ் சிவப்பாழுமாகிய மூன்றுபாழும்; சீவதுரியம், பரதுரியம், சிவதுரியமாகிய மூன்றுதுரியனுந் தோன்றுதற்கு நிலமாகவிருத்தலானும்; இம்மூன்றுபாழைபுங்கண்டுகழன்று விளங்குஞ்சிவதுரியமே, சச்சிதாநந்தலக்ஷணத் திருக்குச்சொரூபமென்பார்:-"இவர்கடாம்......"செப்புசற்சிற்சுகமதாகு"மென்றும்" அந்தத்திருக்குசொரூபமே நீயென்று சாமவேதமுடிவாகியதத்தொமசியென்னு மொருமொழிமகாவாக்கி

யத்தினு லனுக்கிரகித்தாரென்பார்:—"அதுநீயெனத்திகழுமொருமொழிவாக்கியமீந்து," என்றுங்கூறினர்.

(வி=ம்.) தத்துவமசியென்னு மகாவாக்கியார்த்தபடி தொம்பதமுக்கியவியட்டி சீவகாரியோபாதியாவது :—ஞானேந்திரியமைந்து, சத்தாதிவிடயமைந்து, கன்மேந்திரியமைந்து, வசனுதிவிடயமைந்து, மனமாதியந்தக்காரணநான்கு, பிராணவாயுவொன்று. ஆகத்தத்துவமிருபத்தைந்து. இவையேழுபாதியாம் அவையாவன :—தேகமொன்று, இந்திரியங்களொன்று, அந்தக்கரணநான்கு, பிராணவாயுவொன்று. ஆகவேழுபாதியாம். இந்தவேழுந்தூலஞ், சூக்குமம், காரணமென்னு மூன்றுதேகமாம. இதில்சாக்கிர, சொப்பன, சுழுத்தியென்னு மூன்றவத்தையாம். இவற்றிற்குவிஸ்வ, தைசத, பிராக்கியனென்னு மபிமானிமூன்ரும்.

இவற்றுள் :—சாக்கிரமாவது சிலந்திப்பூச்சி நூலினுல்வலையாகாரமாய்ச் செய்து, அதினடுவேதானிருந்துகொண்டு சுற்றிலும்வரப்பட்ட பூச்சிபுழுக்களைச் சென்றுபிடித்துத் தானுகாரமாய்க் கொள்ளுதல்போலச்; சீவனும்புருவநடுவேசன் றேழுபாதயாகிற வலையாகாரத்திலே வந்துபொருந்திய விடயபோகங்களைச் சென்றுபற்றிப் புசிக்கும்போது ; விஸ்வாபிமானியைக்கொண்டு தூலதேகத்தை நடப்பிக்கிறதுசாக்கிரம். இந்தச்சாக்கிரத்திலுள்ள ஏழுபாதியிற் றேகமொன்று, இந்திரியங்கள்ஒன்று ஆகஇரண்டுபாதியுநீக்க. அந்தக்கரணநான்கு, பிராணவாயுவொன்று ஆகவைந்துபாதியுடன் கண்டத்தானத்திலென்று சாக்கிரத்திலேறிய விடயவாசனையும், பூர்வசன்மவாசனையு மனேபந்தனையாய்நின் றனுபவிக்கும்போது தைசதவபிமானியைக்கொண்டு சூட்சுமதேகத்தை நடப்பிக்கிறது சொப்பனம். இந்தசொப்பனத்தில் மனம், புத்தி, யகங்காரமூன் றுநீக்கச். சித்தம், பிராணவாயுவாகிய விரண்டுகருவிகளுட னிருதயகமலத்தினின்று வெறும்பாழையனுபவிக்கும்போது பிராக்கியவபிமானியைக்கொண்டு காரணதேகத்தை நடப்பிக்கின்றது சுழுத்தி. இச்சுழுத்திக்கு : மூலாங்காரமான தமப்பிரதானகாரணமென்னுமுதற்பாழுக்குச் சீவப்பாழென்றுபெயர். இங்ஙனங்கூறியவேழுபாதி, மூன்றுதேக மூன்றவத்தை, மூன்றபிமானியாகிய இவைகளையெல்லாங் கண்டுகழன்று நீக்கிநின்றவறிவே தொம்பதலெக்ஷியார்த்தமான சீவதுரியன். இந்தத்துரியன் தன்னைமறந்து ஜீவத்வம்வகித்துநின்ற பழக்கவாசனையினுல் துரியம்விரிந்தாற் சாக்கிரமாயுங் குவிந்தால்மாயாவியத்தமாயும் காரணோபாதிபெந்திப்புடனே நானேபிரமமென்றபிமானிக்கையாற் பழையபடியே சனனமரணப்படுவன். ஆதலால்தற்பதமுக்கிய சமஷ்டிஈசுரகாரணோபாதிக ணீங்கவேண்டும்.

அவ்வுபாதியாவது —சர்வஞ்ஞத்வம், சர்வகாரணத்துவம் சர்வாந்திரியாமித்துவம், சர்வேஸ்வரத்துவம், சர்வசிருட்டித்துவம், சர்வதிதித்துவம், சர்வசங்காரத்துவம். ஆகவுபாதியேழு. இவைமூன்றவத்தையாம் துரியம், காலபரம், வியோமமென்பன. இவற்றிற்குவிராட்டு, இரணியகர்ப்பன், அந்தரியாமியென வபிமானிமூன்று. இதில்சாக்கிரமாவது :—முன்சொன்ன தொம்பத

லக்ஷியார்த்தமான துரியமே பரனுக்குடலாகையால் சர்வஞ்ஞத்துவமுதலிய காரணோபாதிபெந்திப்புடனே விராட்டென்னுஞ் சமட்டியபிமானியைக்கொண்டு; தொம்பதவியட்டி தூலாபிமானியைப் பிரேரித்துக்கொண்டு விளங்குகிற துரியமே பரசாக்கிரம். முற்கூறியவேழிற் சர்வஞ்ஞத்துவமுத னுலுபாதியு நிற்க. சர்வசிருட்டித்துவம், சர்வதிதித்துவம், சர்வசங்காரத்துவமென்னுமூன்றுபாதிகளுட னிரணியகர்ப்பனென்னுஞ் சமட்டியபிமானியைக்கொண்டு தொம்பதவியட்டி சூட்சுமதேகாபிமானியைப் பிரேரித்துக்கொண்டு விளங்குகின்ற காலபரமே பரசொப்பனம். இனிக்காரணோபாதிகளேழுநீங்கி வாசனுபெந்தமாயந்தரியாமியென்னுஞ் சமட்டியபிமானியைக்கொண்டு தொம்பதவியட்டி காரணதேகாபிமானியைப் பிரேரித்துக்கொண்டு விளங்குகின்ற வியோமமேபரசுழுத்தி, யிதற்குமகாதத்துவமான மோககாரணியென்று மிரண்டாம்பாழான பரப்பாழென்றுபெயர். இங்ஙனஞ்சொல்லிவந்த உபாதியவத்தையபிமானிகளையெல்லாங் கண்டுகழன்று நீங்கிநின்று விளங்கியவறிவே தற்பதலக்ஷியார்த்தமான பரதுரியன். இந்தத்துரியனுனபரன் மேற்சொல்லிய காரணோபாதிகளுக்குற்பன்னசத்தியான துரியாதீதவுடலையெடுத் துபாதிகணீங்கினேனென்னும் வாசனுதோஷத்தோடு யானென்னுமமதையிருத்தலா லிவர்க்கிவ் வாசனுதோஷமமதைநீங்கிச் சிவமாகவேண்டுமாதலால் அசிபதசோதனையுஞ் செய்யவேண்டும். உதாரணம்.

திருமந்திரம்.

பண்டை மறைகள் பரம னுடலெனுந்
துண்ட மதிபோன் றுரியா தீதந்தனை
கண்ட பரனுங் காரணோ பாதிக்கே
மிண்டி னவன்சுத்த னுகான் வினவிலே.

என்றதனுற்காண்க. இனி, அசிபதமுக்கியமாவது:—இங்ஙனஞ்சொல்லிய பரதுரியன் துரியாதீதசிவத்துக்குடலா யதில்மூன்றவத்தையா மதாவது:—சிவசாக்கிரம், (வாசனுபோதஞானம்.) சிவசொப்பனம், (விஸ்வக்கிராசம்.) சிவசுழுத்தி, (உபசாந்தம்.) யெனமூன்றும். இதிற்சிற்சொலிதையென்கிற வபிமானியைக்கொண்டு காரியகாரணவுபாதிகள் விட்டுநீங்கினேமென்று விளங்குகிற வாசனுபோதஞானமே சிவசாக்கிரம். பிரசாபத்தியனென்கிற வபிமானியைக்கொண்டு ஜீவேசுவரஜெகத்தென்ப தொன்றுந்தோன்றா தெல்லாந்தன்மயமாகவிளங்குகிற விஸ்வக்கிராசமே சிவசொப்பனம். பொற்புவிசாந்தனென்கிற வபிமானியைக்கொண்டு முன்சொன்னசிவசாக்கிராதி மூன்று, துரியனென்று, காலபரமொன்று, வியோமமொன்று, பரமொன்று, விஸ்வக்கிராசமொன்று. ஆகவெட்டுந்தோன்றாமற் சிவசுழுத்தியான மூலாங்காரமென்னுந் தமப்பிரதானகாரணி, பரசுழுத்தியான மகாதத்துவமென்னு மோககாரணி யிந்தவிரண்டுமடங்கி, அமோககாரணிசொரூபமாய் மகாமாயையாகிற மூலாங்ஞானமாய்நின்று விளங்குகிற உபசாந்தமே சிவசுழுத்தி. இதற்குச்சிவப்பாழான மூன்றாம்பாழென்றுபெயர்.

உதாரணம். திருமந்திரம்.

காரிய மேழுங் கரந்திடு மாயையுட்
காரண மேழுங் கரக்குங் கடுவெளி
காரிய காரண வாதனை யற்றவப்
பாரண மும்முப சாந்தப் பரிசதே.

காரியமேழ் கண்டறு மாயைப் பாழ்விடக்
காரணமேழ் கண்டறும் போதப் பாழ்விடக்
காரிய காரண வாதனை கண்டறுஞ்
சீருப சாந்தமுப் பாழ்விடத் திருமே.

தத்துவரத்நாகரம்.

தத்துவந் தீர்ந்த பாழுந் தனையறிந் தற்ற பாழும்
முத்தமா முபசாந் தத்து முன்னிய மூன்று பாழுந்
தொத்திய மாயை யோடுந் தொல்பரா சத்தி யோடுஞ்
சித்துறுஞ் சிவசத் திப்பாற் றிரிந்தது திரிதல் காண்டி.

என்பதனாற்காண்க. இந்தமூன்றுபாழினு மூன்றுமாயை யிருப்பிடமாகை யானு மிம்மூன்றுபாழு மொன்றாய்க்கூடினவிடம் உபசாந்தமாகையானு மிம் மாயாசத்திகளெம்மட்டுண்டோ வம்மட்டும் பிறப்பைக்கொடுக்கு மென்பதற் குதாரணம்.

திருமந்திரம்.

பத்திக்கு வித்துப் பணிந்துற்றுப் போற்றலே
முத்திக்கு வித்து முதல்வன்றன் ஞானமே
சித்திக்கு வித்துச் சிவபரந் தானுதல்
சத்திக்கு வித்துத் தனதுப சாந்தமே. என்ப.

ஆதலாலிவைகளையெல்லாங் கண்டுகழன்று நீங்கிநின் றஅறிவே சிவதுரிய மென்னுஞ் சச்சிதானந்த லக்ஷணதிருக்காகியசிவம் சிதானந்தமாத்திரமாய் விளங்கும். உதாரணம்.

ஷை தத்துவரத்நாகரம்.

ஒழியா வுபசாந் தமதா யுளதுங்
கழியா விடுகா ரியகா ரணமே
மொழியா விடுமூ வுலகற் றவிடத்
தழியா வுணர்வே சிவமா னதுவே. என்பதனாற்காண்க.

இந்தச்சிவதுரியன் சிற்சொலிதை, பிரசாபத்தியன், பொற்புவிசாந்த னாகிய மகாவபிமானிகளாய் வாசனைவுபாதிகளோடுங் கூடினபோது அசிபத

முக்கியார்த்தமென்றும்; இவைகளை விட்டுநீங்கினபோது அசிபதலக்ஷியார்த்தமென்று மவற்குப்பெயராமென்ப. இவைவிட்டுவிடாதலக்ஷணையின்படி மூன்றுமாயையுமில்லாவிடத்து முத்துரியமுமில்லாமல் திருச்குசொரூபமான சித்தொன்றேயாம். உதாரணம்.

திருமந்திரம்.

சிவன்றன் முத்தி யதீதம் பரமுத்தி
யோதுப சாந்தஞ் சிவமுத்தி யாநந்த
மூவயின் முச்சொரூப முத்தியு முப்பா
மீழாவுறு தாரத்தி னுள்ளவர் வானமே.

மெய்ம்மொழி.

மத்த மாம்புலன் மாறிய விடத்தே மன்னுயிர் வெளிப்படு மதுபோய், பெத்த மாமுயிர் மாறிய விடத்தே பெரியநற்பரம் வெளிப்படு மதுபோய், அத்த மாம்பர மாறிய விடத்தே யமலநற்சிவம் வெளிப்படு மதுபோயச், சுத்த மாஞ்சிவ மாறிய விடத்தே தோன்றிடுஞ் சுயமபிர காசம்.

என்பதனானுஞ் சிவன்முத்தி யதிதத்தில். பரமுத்தி யுபசாந்தத்தில். சிவமுத்தி யாநந்தத்தில, அவ்வாநந்தமாகிய திருச்குசொரூபமே நீயென்று சாயவேத மகாவாக்கியநிச்சயார்த்தங் கூறப்பட்டது.

திருமந்திரம்—நவாவத்தைநவாபிமானுயென்பதினுனுங் கண்டுகொள்க, ருஉரு. ப.

சிவன்முதலிய நான்குசைதன்னியத்தின் பரியாயநாமங் கூறுவான் வேண்டி, சீவனுக்குக் கற்பிதமாகஎய்திய விசுவபரியாயநாமங்கள் பதினென்றையு முணர்த்துகின்றது.

சாற்றரியசீவபேதங்களை யவ்வவற்றிற்குரிய காரணநெறிப்படி, விசுவன், தைசதன், பிராக்ஞன் எனப்பெயர்தந்து அறிஞர்கூறுகிற்பர்; அம்மூவருள் வெவ்வேறுதன்மைகளைச்செய்கின்ற வியஷ்டிதூலவுட லபிமானியாகிய சீவனது விசுவபரியாயநாமங்கள்; வியவகாரிகன், புத்திகதுவுறுசைதன்யன், சிதாபாசன், விட்சேபரூபன், பிரமாத்திரு, கத்திரு, போத்திரு, விஞ்ஞானமயன், குடும்பி, சரீரி, தொம்பதமுக்கியன் முதலாகவருபவைகள்.

எல்லாத்தத்துவங்களோடும் விவகரித்தலின் வியவகாரிகனெனவும், அந்தக்காணபிரதிபலனனுதலின் புத்திகதுவுறுசைதன்யனெனவும், கூடஸ்தசாயையாதலின் சிதாபாசனெனவும், விடயமாகப்பரிணமித்தலின் விட்சேபனெனவும், கரணங்களோடுகூடியறிதலின் பிரமாத்திருவெனவும், இவைக்கெல்லாங் கர்த்தாவாயிருத்தலின் கத்திருவெனவும், எவற்றையுந்தா னனுபவித்தலின்

போத்திருவெனவும், எவற்றையுந்தானறிதலின் விஞ்ஞானமயனெனவும், தேகமுதலியவற்றிற் சம்பந்தித்திருத்தலின் குடும்பியெனவும், சரீரமேதானென்றிருத்தலின் சரீரியெனவும், நீயென்னும்பதத்திற்கு வாச்சியப்பொருளாதலின் தொம்பதமுக்கியனெனவுங் கூறியவாறுகாண்க. முதலாகவென்றதனல் க்ஷேத்திரி, விஷயிமுதலிய பிறவுங்கொள்க. வியாபித்திருக்குந்தன்மையால் விசுவனெனவும் காரணவிடுகுறியாகப் பெயர்வந்தமைகாண்க.

வில்லியென்றாற்போலத் தூலவுடல்வியட்டியபிமானியெனல் சீவனுக்காயிற்று. விசுவன், தைசதன், பிராக்ஞனெனல் மூன்றவத்தையிலும் சீவனுக்குரிய அபிமானநாமங்களாதலாலும். இவ்விடத்து விசுவனெனற்குப் பரியாயநாமங்கள் கூறியதாலும், அபிமானியெனலையிவற்றுளொன்றாக்கற்க.

தனக்குவாய்த்தவோர் சூக்குமவுடல் வியட்டியபிமானியாகியசீவனது தைசதபரியாயநாமங்கள்; பிராதிபாதிகன், சொப்பனகற்பிதன்முதலியன.

சாக்கிரவாசனைபிரதிபலித்தலின் பிராதிபாதிகசீவனெனவும், நனவைக் கற்பித்தல்போலச் சொற்பனத்தைக்கற்பித்தலின் சொற்பனகற்பிதனெனவும் கூறப்படும். தேஜஸ்சம்பந்தமுடைமை தைஜசமெனவும் சொற்பனவத்தையில் சோமசூரியாக்கினியின்றித் தானேபிரகாசரூபமாயிருத்தலின் தைசதனென்றும், அங்கே தூலதேகத்தைப்போற்காண்பதை யானென்றபிமானித்தலின் சூக்குமமெய்வியட்டி யபிமானியென்றும் பெயர்வந்தமையாயிற்று. இங்கே தேஜசெனல்அந்தக்கரணத்தை.

காரணவுடல்வியட்டி யபிமானியாகியசீவனது பிராக்ஞபரியாயநாமங்கள்: அவித்தையோபாதிகன், காரியோபாதிகன்முதலியவைகள். சுழுத்தியிலொன்றுந் தோற்றவில்லையெனத்தெரிந்து பின்னுணர்த்தற்கு அங்கேதெரிவாயிருத்தலின் பிராக்ஞனெனவும்; சுழுத்தியிற்பிரக்ஞை தனித்துநின்றுந் தன்னைத்தானுணர்தற்பால தன்றாமையானும் அங்ஙனமுணராமை தூலசூக்குமப்பிரவாகத்திற்கு வித்தாயிருப்பதினாலும் காரணமெய்வியட்டியபிமானியெனவும், அப்போதுவித்தியாசம்பந்தமன்றாதலால் அவித்தையோபாதிகனெனவும் அவித்தையினின்றுந் தானேகாரியப்படுதற்கு விடாதியைந்துநிற்றலின் காரியோபாதிகனெனவும், பிரக்ஞாசம்பந்தமுடைமை பிராக்ஞமெனவும் காரணவிடுகுறியாகப் பெயர்வந்தமைகாண்க.

இவைகாரணமாகவருகின்ற சீவான்மா, அந்தரான்மா, மேலாகியபரமான்மா வெனப்படுவதாகிய ஆத்மத்திரயவிலக்கணமுணர்த்துகின்றது.

உலக்களத்திற் காய்ந்துகொண்டிருக்கின்ற விரும்பைப்போலத் தூலதேகமுதலியவற்றோடுகலந்து பெண்டுபிள்ளைமுதலிய குடும்பமென்னு முலகவழக்கில் சேர்ந்திருப்பவன்யாவனோ, அவனேசீவான்மா வெனப்படுவானவன்; தாமரையிலையினீர்போலத் தான்சம்பந்தித்துள்ள குடும்பமாகிய பெரியவிவகாரத்திலிருந்தும் அவற்றோடுசம்பந்த முறாதவன்யாவனோ அவனேயந்தரான்மா வெனப்படுபவனவன்; உலகத்திற்குச் சூரியனெங்ஙனமோ, அது

போலவுலகத்தில் எவற்றிற்குஞ்சாட்சியாய் விளங்குபவன்யாவனோ அவனே பரமான்மா வெனப்படுபவனவன். என்பதாம்.

இரும்பைக்காய்ச்சி யடிக்குமிடத்து அவ்வடியக்கினிக்கு மாமாறுபோலத் தேகமுதலிய குடும்பத்தோடுகூடி விவகரிக்குமிடத்து விளையுஞ்சுகதுக்கம் அவற்றோடுசேர்ந்த ஆன்மாவுக்குமாதலால், அந்தஅவசரஞ் சீவான்மாவென வும், தாமரையிலையோடு சம்பந்தமுற்றுந் தனக்குக் கிஞ்சித்துமில்லாத நீர் போலத் தேகமுதலிய பெரியகுடும்பத்தோடு சம்பந்தமுற்றும் அதுகாரணமாக வெய்தும் விவகாரத்தாக்கு அவ்வாறுநிற்கும் ஆன்மாவுக்குச் சற்றுமின்றாத லால் அந்தவவசரம் அந்தரான்மாவெனவும்.

அந்தரத்தினின்று தன்கதிருலகமெங்கும் பரவச்செய்யினும் அவ்வுலகத் தாலெய்தும் நயநட்டந்தனக்குச் சற்றுமின்றி யதிதூரமாகவும் சாட்சியாக வும் விளங்குஞ் சூரியன்போலச் சிதாகாயத்தினின்று தனதந்தக்கரணம் உல கெங்கும் விவகரிக்கச்செய்யினும் அவ்வுலகத்தாலெய்தும் நயநட்டந் தனக்குச் சற்றுமின்றி யுபாதித்திரியங்கட்கு அதிதூரமாகவுஞ் சாட்சியாகவும்விளங்கு வது ஆன்மாவாதலால் அந்தஅவசரம் பரமான்மாவெனவுங் கோடற்கியை தலின் இங்ஙனங்கூறியதென்க.

சீவான்மாவெனல் யோகிகாறும், அந்தரான்மாவெனல் முமூட்சுகாறும், பரமான்மாவெனல் விதேகமுத்திகாறுமென்க. இதனையேலாதார் ஆத்மதரி சனமில்லாதார். எனவேஇஃதனுபூதிகாரணமாக விளக்கியதெனப்பெற்றாம். உபாதிநானெனல்சீவான்மா, எய்தியுஞ்சைதன்னியம் நாணுகாமைஅந்தரான் மா, ஆனவிடத்துஅயலின்மை பரமான்மாவெனினுமமையும் இங்கே ஆன்மா வெனல் வியாபகவிளக்கமாநின்ற ஞெப்தியை. ஆன்மாவொன்றேனும் இங் ஙனம் மூவிதமாகநிற்றல்போற் காணப்படுதலின் இதனைவிளக்க மூவித வுவமைகூறியதென்க.

கருத்து—தொம்பதிவிலக்கியார்த்தந் தோன்றுநிமித்தம் அதன்முக்கி யார்த்தத்தை விரித்துக்கூறியதென்பது.

ஆன்மாநல்வினைதீவினையாற் பிறவிகடோறு மொத்துண்ணுகிறானென் றும், விடாதுபிறவிகடோறும் விரைந்துவிரைந்து நுழைந்துநுழைந்து செல் லுகிறானென்றும் வழங்குவ்வழக்கத்தைமறுக்க வுபமானபூர்வமாகக்கூறுதலை யுணர்த்துகின்றது.

வெப்பமுள்ளசூரியன் ஆகாயத்தினின்று நீரில்விழுந்து தத்தளித்துக் கொண் டிருக்கிறானென் றுலகத்தார் சொல்லுவதுபோலவும்; மேகம்விரைவி லோடக் குளிர்ந்தகலைகளையுடைய சந்திரன் விரைவிலோடுகிறானெனக் கூறு தல்போலவுமிருக்கும்; ஒதியுமுணர்தற்கரிய வென்றுமொருதகைத்தாநின் றுள்ள ஞானாத்மாவிற்குத் தூலதேகமுதலிய வுபாதித்திரியங்காரணமாக அபி மானிப்பரியாயநாமங்களை யேற்றசீவபாவனையெய்தியது; ஆகலால், பிரிய வடிவமென் றுகருதியவுலகப் பெருவிவகாரப்பேற்றினை விம்மயக்கமெய்திய தென்றறிதி.

என்றுமொருதகைத்தா நின்றுவிளங்கும் ஆன்மாவுக்கு உபாதித்திரியங் காரணமாகச் சீவபாவமெய்தியதைவிளக்க இவ்விரண்டுவமைகூறியதென்க. பிரதிவிம்பத்தை விம்பமெனக்கோடல்போன்று அநாத்மாவை யாத்மாவெனக் கோடலும், ஒன்றின்புடைபெயர்ச்சியை வேறொன்றதாகக்கோடல்போன்று அநாத்மாவின்புடைபெயர்ச்சியை ஆத்மாவினதாகக்கோடலும் மயக்கமோ? தெளிவோ? தெளிவெனின், பிம்பசூரியன் நீரில்விழுந்தலைதலும், சந்திரன் மேகத்தினுழைந்தோடலும் மெய்யாகவேண்டும். கூடாதெனின் மயக்கமெனல்வேண்டும். இவ்வையந்தெளிதற்குப் பிரதிவிம்பத்தையும் மேகவினைவையும் நாடாதிருக்கவேண்டும். அதுபோலஅநாத்மாவாகிய உபாதித்திரியத்தை நாடாதிருக்கவேண்டும். நாடின் இவ்விரண்டுபமானமும்பொருந்தும். எனவே அதோமுகத்தைவிட்டு ஊர்த்தமுகத்தைக்கைப்பிடி யென்றவாறாயிற்று. இதனால்ஆன்மா என்றுமிருந்தபடி யிருக்கின்றதெனலைக்காணுதும். ஆன்மாவினியற்கைவடிவம் வேறன்றாதலின் ஞானவான்மாவென்றார். இங்கே ஞானமெனல் தன்னையும்அயலையுமுணருந்தகையதை. சீவபாவனையெனல் அயலைமாத்திர முணருந்தகையதையென்க. இதனதுகருத்து. தொம்பதத்தின் வாச்சியார்த்தஇலக்கணம் இலக்கியார்த்தமானகூடத்தனுக்கு வந்ததாகத் தோற்றுங் கற்பனையையுணர்த்தியதென்பது.

ஈசனுக்கபிமானத்திரயங்களையும், அவைகளுக்குப்பரியாயநாமங்கள் விராட்டிற்கொன்றும், இரணியகருப்பற்கிரண்டும், அந்தரியாமிக்குஆறும் உள்ளனவென்பதையும் விளக்குதல்.

ஈசனதபிமானநாமங்கள் விராட்புருடன், இரணியகருப்பன், அந்தரியாமி யென மூவகையாநிற்கும்; அவருள்சமஷ்டிதூலதேக வபிமானியாகியஈசனது விராட்புருடபரியாயநாமம் வியாபித்த வைசுவானரன்முதலியவையாம். சமஷ்டிசூட்சுமதேக வபிமானியாகியஈசனது இரணியகருப்ப பரியாயநாமங்கள் மாப்பிராணனும், சூத்திரான்மகனுமெனக் கூறப்படும்பெயர் முதலியவையாம்; சமஷ்டிகாரணசரீர வபிமானியாகியஈசனது அந்தரியாமியினது பரியாயநாமங்கள் அவ்வியத்தன், காரணோபாதிகன், அநந்தமயன், பரதேவதை, பரன், தற்பதமுக்கியார்த்தன் முதலியவைகளாம்.

பிருதிவிமுதலியவனைத்தையுந் தனதுருவாகக்கோடலை விராட்புருடனெனவும், தூலக்கமாகப் பிரகாசிக்கின்றவனைத்தையும் தனதுதாத்துளடக்கிக்கோடலை இரணியகருப்பனெனவும், ஆகாயம்போ லகம்புறமற்ற நிலைகோடலை அந்தரியாமியெனவுங் காரணவிடுகுறியாகக் கூறினமைகாண்க. பிருதிவிமுதலியவையெனல் அஷ்டமூர்த்தங்களை வியாபித்தவென்றமிகையால் சீவனதுவியாபகத்திற்கு வியாபகமாகநிற்றலைப்பெற்றாம். பெறவே விசுவத்திற்கு விசுவமென்றாயிற்று. வைசுவாநரனெனல் சாக்கிரப்பிரபஞ்சமாகிய விசுவவியாபகனாய் நரர்முதலிய சகலபிராணிகளிடத்தினுந் தங்கியிருத்தலையும், மாப்பிராணனெனல் மகாமாருதமே மூச்சாயிருத்தலையும், சூத்திரான்மகனெனல் எவற்றிற்குஞ் சூத்திரதாரியாகின் றவற்றையசைப்பித்தலை

யும், அவ்வியத்தனெனல் இந்திரியங்களுக்கு விஷயமாகா தடங்கிநிற்றல் பற்றியும், காரணமாமுபாதிகனெனல் சகத்கன்மாதி காரணத்வமே யுபாதியாகவுடைமைபற்றியும், அநந்தமயனெனல் முடிவின்றிவியாபித்திருத்தல்பற்றியும், பரதேவதையெனல் தேவுக்கெல்லாம் மகாதேவாயிருத்தல்பற்றியும், பரமெனல் மேலுக்கெல்லாம் மேலாயிருத்தல்பற்றியும், தற்பதமுக்கியார்த்தமெனல் அதுவென்னும்பதத்திற்கு வாச்சியார்த்தமாயிருத்தல்பற்றியும் காரணவிடுகுறியாய் வந்தனவென்க, சீவேசுசபேதஞ் சமட்டிவியட்டியாலென உவமானபூர்வமாக வுணர்த்துகின்றது.

மிக்கதொகையுள்ள மரக்கூட்டங்களைத் தோப்பெனக்கூறுமாறுபோன்று மிக்கதொகையுள்ள பலவேறுவிகற்ப வுயிர்வகையனைத்தும் நானேயென்னுமபிமானமே யீசனதுசமட்டிவடிவமாம்; தனித்தனியே யொவ்வோர்மரமும் வெவ்வேறுபெயர்கொள்ளுமாறுபோன்று, வெவ்வேறாகநின்றுள்ள உடல்கடோறும் வெவ்வேறுசேதனமாகக் காணப்படும் அபிமானமே மிக்கவுயிர்களின் வியட்டிவடிவமெனப்படுவதாம். சமட்டி இடுகுறிப்பொதுப்பெயர், வியட்டி இடுகுறிச்சிறப்புப்பெயர். சர்வாத்மாவும்ஆரோபம், அதற்கதிஷ்டானமீசன். சீவர்களனைத்தினுள்ளு மிருப்பவனீசுரனெனவும், தனித்தனியேயிருப்பவன் சீவனெனவும், இவையேசமட்டிவியட்டி பேதமெனவுங்கொள்க.

வினு :—இங்ஙனமாயின் மிகவும்பேதமாமே ?

விடை :—யானுந்தானுந்தனி பொய்யென்று கவிப்படி சாலத்தைத்தவிரச்சோலையும், சோலையைத்தவிரச்சாலமும் எங்ஙனமின்றோ, அங்ஙனமே ஜீவனைத்தவிர ஈசனும் ஈசனைத்தவிரச் சீவனும் இன்மையின் உபாதியாற்பேதம் போலத் தோற்றுவதன்றிச் சுபாவமாயன்றென்க. தீபமென்றறிதற்கு மற்றோர்தீபம் வேண்டாமற்போயினும் நேத்திரவிந்திரியப் பிரகாசாபேக்ஷை வேண்டியதனாலே கேவலஞ் சொச்சொரூப ஞானத்தினாற்றானே யாத்மபரிச்ஞானம் வரமாட்டாது. வேறோருபாயத்தினாலேயே வரவேண்டுமென்னுஞ் சங்கைக்குச் சமாதானம்சொல்லுகிறார் : அதத்துவாவிருத்திபூர்வகமாய் தத்துவமசியாதி மகாவாக்கியார்த்த சென்னியமாயிருக்கிற விர்த்திக்ஞானத்தினை விவர்தானாத்மாவென்கிற வாத்மசொரூப பரிச்ஞானத்தினாலே ஜீவபரவைக்கிய சித்தியுண்டாமாகையாலிதுவேயுபாயமென்று வெளியாய்ச்சொல்லுகிறார்.

சொரூபலக்ஷணை, தடத்தலக்ஷணை, யதத்துவாவிருத்திலக்ஷணையென்னு மூன்றினாற் சகலசுருதிவாக்கியங்களும் ஆத்மாவைப்பிரதிபாதிக்கின்றது. அஃதெப்படியெனின் பிரமமானது சத்திய, ஞான, அநந்த, ஆநந்தசொரூபமென்று சொல்லுகிற சுருதிவாக்கியமானது சொரூபலக்ஷணை, இசனாற்சத்தியஞானாநந்தசொரூபமா யொருபிரமமுண்டென்று சுவர்க்கத்தைப்போலப் பரோக்ஷமாயறிந்தபோதிலும்; அப்படிக்குண்டோவில்லையோவென்கிற சமுசயம்போகமாட்டாது அச்சமுசயபரிகாரார்த்தமாய்த் தடத்தலக்ஷணையும்வேண்டும். எப்படியெனில், மிருத்திகையிற் கடத்தோற்றம்போல் இவ்வளவுசராசரப் பிரபஞ்சங்களு மெங்கேயிருந்துண்டாமோ வெங்கேதானிருக்குமோ வெதிலேலயத்

ந்தையடையுமோ வதுவேபிரமமென்று மிந்தவகங்காராதி பிரபஞ்சங்களெல்லாம் சுயமேசடங்களாயிருந்தாலும் எதனுடைய சைதன்னியத்தைப்பற்றிக் கொண்டு சுயமேசேதனங்கள்போலே யிருக்கின்றதுகளோ விவ்வளவுமெங்கே லயத்தையடையுமோ வதுவேபிரமமென்று சொல்லுகின்ற சுருதிவாக்கியமே தடஸ்தலக்ஷணை. இதினாலேயாகாசாதிப்பிரபஞ்சத்தினுடைய சிருஷ்டிதிதிபிரளயங்களுக்கு மகங்காராதியுற்பத்திலயப் பிரவிருத்திகளுக்குங் காரணமாயுஞ் சாக்ஷிமாத்திரமாயு மொருவஸ்து உண்டென்கிறபோதம்வரும் அப்படிப்போதம் வந்திருந்தபோதிலும் ஆத்மசொரூபமானது பூதபௌதிகப் பிரபஞ்சங்களினாலேயும் அகங்காராதி ஸ்தூலாந்தங்களினாலேயு மறைபட்டதுபோ லிருக்கிறபடியினாலேயும் அந்தமறைவையும் நிவர்த்திப்பித்து ஆத்மாவைப்பிரத்தியக்ஷமாய்த் தெரிவிக்கிறதின்பொருட்டு அதத்துவாவிருத்திலக்ஷணைவேண்டியிருந்தது அஃதெப்படியென்றா லதத்துக்களென்றுசொல்லப்பட்ட அனாத்மாக்களையெல்லா மிதுவுமாத்மாவன் றிதுவுமாத்மாவன்றென்று இப்படிநிடேதித்துப்போட்டபிறகு மௌனமாய்முடிந்த வேதவாக்கியமே யதத்துவாவிருத்திலக்ஷணை. அஃதெப்படி அனாத்மாக்களைமாத்திரம் நிடேதம்பண்ணுகிறதி லதத்துவாவிருத்திலக்ஷணையான தெப்படியாத்மாவை பிரதிபாதிக்குமென்றால்; தன்பதியல்லாப்பேர்கள் தமையல்லனல்லனென்று, ளன்பனைக்கேட்டநேர மவள்வெட்கிமௌனமானா, ளென்பதுபோலநீக்கிஈதன் றீதன்றெனச்சேடித்த, பின்பரப்பிரமந்தன்னைப் பேசாமற்பேசும்வேத. மென்றசெய்யுளின்திருஷ்டாந்தம் போலே முடிந்தசுருதிவாக்கியத்தினுடைய மௌனத்தினாலே யந்தவதத்துவாவிர்த்தியானது ஆத்மாவையே பிரதிபாதிக்கின்றது ஆனதால் சர்வசாதனசம்பன்னனாகியு மேதாவியாகியும் விசாரஜீவனாகியு மாத்மாவையறியவேண்டுமென்கிற விச்சையையுடைய தீவிரதரமுமுக்ஷுவானவன் தேகேந்திரியாதியத்தியாசரூபமாயிருக்கிற பிரமைக்கதிஷ்டானமாகிய கூடஸ்தாத்மாவினிடத்திலே ஜீவனென்கிற வியவகாரத்துக் கேதுக்களாயிருக்கிற வியட்டிதூலசூக்ஷுமகாரணசரீரங்களும், சர்வாதிஷ்டானப் பிரமத்தினிடத்தி லீசுரனென்கிற வியவகாரத்துக் கேதுக்களாயிருக்கிற சமட்டிஸ்தூலசூக்ஷுமகாரணசரீரங்களும், இவைகளுடைய சங்கோசவிகாசங்களும், சர்வக்ஞத்துவ கிஞ்சிக்ஞத்துவாதிகளாயிருக்கிற குணதாரதன்மியங்களுக்கு முக்கியவேதுக்களாகிய மாயையவித்தையாதிகளான வுபாதிகளுமாகியவெல்லாவற்றையுந்தள்ளி யிவ்வளவுமதிஷ்டானத்தினிடத்தி லாரோபிதமானபடியினாலேயும் வந்தியாபுத்திரன் சசவிஷாணங் ககனாரவிந்தங்கள்போலே காலத்திரயத்திலேயும் கேவலம்மித்தியாமாத்திரமானபடியினாலேயு மிவைகளிலொன்று மாத்மாவன்றென்று நிடேதித்துப்போட்டுப் பிற்பாடுதத்துவமசியாதிமகாவாக்கியங்களினாலே ஜீவாதிஷ்டானசைதன்னியமான ஜீவான்மாவும், ஈஸ்வராதிஷ்டானசைதன்னியமான பரமாத்மாவுமாகிய இந்தவிரண்டுசைதன்னியங்களுடைய, நித்தியசித்தமான ஏகீகபாவத்தை யடைகுவன்.

ஆருஞ்சூத்திரம் முற்றிற்று.

ஏழாஞ் சூத்திரம்.

அவதாரிகை.

அறிவாகியசத்தின்முன் சகசிவபரமாகியபாவையுஞ் (அறிபடுபொருள்யாவும்) சூன்யமென்பது சத்துதயமில்லாதார்க்கு ஐபத்ததாமென இச்சூத்திரங்கூறுகின்றது.

ஏழாஞ்சூத்திரம்.

யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராதலிற்
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிற னறிவுள திரண்டலாவான்மா. எ.

இ-ள். சத்தெதிர்—அறிவாகியசத்தின்முன்; யாவையுஞ்சூனியம்—சுட்டுப்பொருளாகியவனைத்துஞ் சர்வசூன்யமயானமாம், ஆதலின்—(சத்துஅசத்தென்னுமிரண்டிலெதையறிதலெனஐயமுறும்) ஆதலின் (அதனையொழித்தற்கு,) சத்தேயறியாது—அறிவினது சத்தாதிஇலக்கணங்களைச்சந்தேகவிபரீதமறவிசாரித்து நிட்டையின்கண்தெளிந்தாலல்லது, அசத்திலதறியாது—அசத்தாகிய சுட்டுப்பொருள்கள் சூனியமென்பதையறியமுடியாது, (ஆனதால்) இருதிறனறிவுளது—விஸ்மரணைதஸ்மரணையென்னுமிருவகைப்பிரக்ஞையுடையது, இரண்டலவான்மா—சிவாநந்யஏகசைதன்யவான்மாவேயாம். எ-று.

ப-ம். சகசிவபரமாதிவிடயங்கள் பிரக்ஞானத்தைபன்றி யில்லவேயில்லையென்பார்—யாவையுஞ்சூன்யஞ் சத்தெதிரெனவும்,

பிரக்ஞையைபன்றிச் சத்துச், சித்து, ஆநந்தம், நித்தியம், அகண்டம்வேறன்றெனமுன்னர்த்தெரியின்,—அசத்துசடதுக்கம் அனித்தியம்கண்டம்வேறின்றெனத் தானேதெரியுமென்பார்—சத்தேயறியாதசத்திலதுஅறியாதெனவும்,

தஸ்மரணை, விஸ்மரணையென ஸ்மரணைஇருவகைப்படும். தஸ்மரணை, தன்னைத்தா னுள்ளவாறுகாண்டல். விஸ்மரணை, தன்னைத்தா னயலாகக்காண்டல். பொருளல்லவற்றைப் பொருளாகக்கொண்டதெவ்வறிவோ வவ்வறிவேபொருளைப் பொருளாகக்கொள்ளல்வேண்டும். சைதன்னியமன்றியாதுமில்லை, ஆயின்சைதன்யம்யாதுமல்ல. எங்ஙனமெனில், மண்ணூலையன்றிக் கடபடமில்லை, ஆயின்மண்ணூல்கடபடமல்ல; என்றாற்போலும். இங்ஙனமாயவிசாரமுகத்தாற்பழகல், நிசத்திற்பழகல். இங்ஙனமாயவிசாரமின்றிப்பழகல், அசத்திற்பழகல்; என்பதுஉபநிடதசம்மதவசனமென்பார்:—இருதிறனறிவுளதெனவும்,

இரண்டானலன்றேஒன்றாதல்வேண்டும். அங்ஙனமின்றிக் காலாதீத மானநாம் எப்போதும்ஏகமாகவிளங்கும்பிரமசொரூபமென்பார், இரண்டில வான்மாவெனவுங்கூறினர்.

திருமந்திரம்.

அணுதி சிவரூப மாகிய வான்மாத்
தணுதி மலத்தாற் றடைப்பட்டு நின்றது
தணுதி மலமுந் தடையற்ற போதே
யணுதி சிவரூப மாகிய வாறே.

வில்லிபுத்தூரார்பாரதம் வீட்டுமபருவம்.

மேவரு ஞானனந்த வெள்ளமாய் விதித்தோனுதி
மூவரு மாகிபந்த மூவர்க்கு முதல்வனுகி
யாவரும் யாவுமாகி யிறைஞ்சுவா ரிறைஞ்சப்பற்ப
றேவரு மாகிநின்ற செங்கண்மா லெங்கள்கோவே.

மாயையென் ஞெருத்திதன்பால் மீனமெனு மைந்தன்றேன்றித்
தூயநல் லறிவான்றன்னைத் தோற்றமின் ருக்கிவைத்தான்
ருயொடு தந்தைமக்க டாரமென் றிவர்பால்வைத்த
நேயமு மவன்றனுலே நிகழ்ந்ததோர் நினைவுகண்டாய்.

குயின்றவைம் பொறிவாய்நின்று குறித்தவைம் பொருளுந்தானே
யயின்றுமுக் குணங்களோடு மறுவகைப் படைகளோடும்
பயின்றர சாளுமந்த மனமெனும் பகைவனுக்குத்
துயின்றபோ தொளித்துநின்ற தோன்றலுந் தோன்றுங்கண்டாய்.

அந்தநல் லறிவன்றன்னை யறிந்தவ ரறிஞராவார்
தந்தையால் வகுக்கப்பட்ட சராசரப் பொருள்கடோறும்
வந்தவான் றீம்பாலெய்போ லுயிர்க்குயி ராகிவாழும்
பந்தம துணர்ந்துநேரே பார்க்குங்காற் பகையார்நண்பார்.

உம்பரு முனிவர்தாமும் யாவரு முணராவொன்றை
யிம்பரின் றுனக்குநானே யிசைவுற வுணர்த்தாநின்றே
னைம்பெரும் பூதத்தானு மமைத்தன வுடலம்யார்க்கு
நம்பனு மொருவனுள்ளே ஞானியாய் நடத்துகின்றான்.

என்னைநீ புகலக்கேண்மோ வெங்குமா யாவுமாகி
மன்னிய பொருளும்யானே மறைக்கெலா முடிவும்யானே
யுன்னையான் பிறிவதில்லை யொருமுறை பிறிந்துமேனு
ணன்னிலா வெறிக்கும்பூணுய் நானுநா ரணனுமானேம்.

பின்னொரு பிறப்பின்யாமே யிராமலக் குமப்பேர்பெற்றே
மீந்நெடும் பிறப்பினியும் யானுமா யீண்டுநின்றே
நின்னிடை மயக்குமிந்த நேபமு மொழிகவென்று
தன்னிலை யவர்க்குக்காட்டித் தத்துவந் தெளிவித்தானே.

யாவையுஞ் சூனியஞ்சத்தெதிர் என்றமையின் சத்தைக்காட்டி யசத்தை நீக்குதற்கு. உ-ம்.

கைவல்யநவநீதம்.

நீயாவது இனையதெனக்கூறுகின்றது.

சத்தொடு சித்தா னந்தஞ் சமந்திரஞ் சாக்ஷி யேக
நித்தியம் வியாபி யான்மா நீயது வாவ றிந்து
பொத்தொடு சடந்துக் காதி பொருந்துபே தங்க ளான
குத்திரப் பஞ்ச கோசக் குகைவிட்டு வெளியி லாவாய்.

(பொ-ரை.) சத்து, சித்து, ஆனந்தம், சமம், திரம், சாக்ஷி, ஏகம், நித்தியம், வியாபியெனப்படுவன ஆன்மாவாதலின், நீயந்தவான்மாவென வுன்னையறிந்து:—அசத்து, சடம், துக்கம்முதலியவைகளைத் தமக்கியல்பாக வுடைய பேதப்பொருள்களாகின்றுள்ள:—பஞ்சகோசமென்னும் வஞ்சகக் குகைகளி னின்றுவெளிப்படுதி. எ-று.

சத்து—உள்ளது; சித்து—இங்கேதன்னையறிவது; ஆனந்தம்—மாறாச் சுகம், சமம், என்றுமெங்குமொருபடித்தாகிற்றல்; திரம், இங்ஙனநிற்றற்கு மாறின்மை. சாக்ஷி, அதுவதுவாகியு மாகாதவற்றை விலக்ஷணமாக நின்றுணர்தல்; ஏகம், பலவாகியுமாகாதுந் தனியாநிற்றல்; நித்தியம், இங்ஙன நிற்றலொருபோதன்றெனல். வியாபி, வியாபகத்துக்கெல்லாம் வியாபகமா நிற்றல்; ஆன்மா, இக்குணங்களுக்கெல்லாங் குணியாகநிற்குமறிவு. நீ, இக்குணிதானீயெனப்படுவது, எனவே, நீவேறுகாதுநில்லென்பதாயிற்று. அறிவுக்கயல்; பஞ்சகோசங்களுக் கயலன்மையின் அசத்தாதிகளைப் பஞ்சகோசங்களுக் கடையாக்கினர். அசத்தாதிகட்கருத்தம்விளங்கச் சத்தாதிகளைக்கூறினும். சென்மகட்கியைந்தது தேகம், அறிவன்மையின் அறிவேசத்து. தன்னையறிதற்பாலது வேறன்றுமையின் அறிவேசித்து. சத்தேசித்து சித்தே சத்துஎனற் கியைதற்பாலது வேறன்மையி னறிவேயானந்தம். யாவுமறிவா நிற்றலி னறிவேசமம். அதனையெவ்விதவாதத்தானு மாற்றக்கூடாமையி னறிவேதிரம். தானேசமஸ்தமுமாயினு மன்றாகநின்றிவற்றைச் சாக்ஷியாக வறிதலி னறிவேசாக்ஷி. சராசரபேதமறிவுக்கன்மையி னறிவேயேகம். முதலிடைகடையின்மையி னறிவேநித்தியம். சமஸ்தவியாபகமுந் தன்னிடத் திருத்தலி னறிவேவியாபி. இங்ஙனமாயகுணங்களுக்கெல்லாங் குணியாக வழக்கிறந்து நிற்றற்பாலது வேறன்மையி னறிவேயான்மா. ஆன்மாவை

யன்றி நானீயென்பவைகளில்லையாதலி ஞன்மாவேயறிவு; அறிவையன்றி யான்மாவென்பதில்லையாதலி னறிவேநீ; அறிவையன்றிநீயென்பதற்குப் பொருள்வேறின்மையி னீயதுவாவறிந்தெனவும், பஞ்சகோசமு மறியாமை யாதலி னதனைவிட்டுவெளியிலாவா யெனவுங்கூறினர்.

(க-நு.) இங்ஙனமாராய்ந்துகளைவதாற் றேறியவறிவே யான்மாவென்பது. இதனைமறுப்பார் அர்த்தவாதியரல்லர். அர்த்தவாதியரரியர். சொல்வாதியரெளியர். அதனைஆராய்தி.

அ—கை.

அங்ஙனந் தெரிவித்தவாறுநின்றமாணக்கனதையத்தெளிய, விக்கவியிற் சொல்லப்புகுகின்றார்.

பஞ்சகோ சமும்விட் டப்பாற் பார்க்கின்ற போது பாழே
விஞ்சிய ததுவல் லாமல் வேறொன்றுந் தெரியக் காணே
னஞ்சன விருளை யோநா னதமென வனுப விப்பேன்
வஞ்சமில் குருவே யென்ற மகன்மதி தெளியச் சொல்வார்.

(பொ-ரை.) தேவரீர்ரியதிகளைந்தவாறு பஞ்சகோசமுந்தாண்டி யப்பாலிட்டையிற் பார்க்கும்போது மிஞ்சிநின்றுகாண்பதுபாழே:— அந்தப்பாழ் காணப் படுகின்றதேயன்றி, வேறொன்றுங்காணக் கண்டிலன்:— கருமையானவிருளையா நானென்றனுபவிப்பன், உண்மையாகத்தெளிவிக்க வெழுந்தருளிய குருநாதனேயென் றிரந்துகேட்டமாணக்கனது மதிதெளியுவண்ணந் தக்கவிடைதருகின்றார். எ-று.

அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம்எனக் கோசங்களைந்துவகைப்படும். அவற்றுள்:— சுக்கிலசுரோணிதத்தையுடையதாகித் தடிப்புற்றுநின்றதூலசரீரமே அன்னமயகோசம், சூக்குமசரீரத்தில்நிலைபெற்றுள்ள பிராணவாயும், வாக்குபாணிமுதலிய கன்மேந்திரியங்களுங்கூடியது பிராணமயகோசம்; மனதும், ஞானேந்திரியங்களுங்கூடியது மனோமயகோசம், பிரத்தியகாத்மாவினது சைதன்யச்சாயையானது புணர்ச்சியோடு இரும்பைநுனியிலுடைய ஈட்டியைப்போல தங்கிநின்றஅகங்காரமும், ஞானேந்திரியங்களுங்கூடியது விஞ்ஞானமயகோசம், அவித்தையானது, விடயதரிசனத்திலுதிக்கும்பிரியமும், சாமீப்பியத்திலுதிக்கும்மோதமும், சையோகத்திலுதிக்கும் பிரமோதமுமாகிய இம்மூன்றுங்கூடியது ஆனந்தமயகோசமெனப்படும். துன்பத்தைவிளைவிக்கத்தக்க விஞ்ஞானமயகோசவடிவாயுள்ள அகங்காரத்தை நானென்றுகூறும் ஆன்மாவெனப் புத்தியினர்கூறுநிற்பர்.

ஈட்டியென்றுவமித்தது அகங்காரத்தை அஃதொருவனிடமாய் வருவதுபோல கூடஸ்தனல்அறிவு தோன்றுமென்க. கோசம்—உறை. அஃதுகட்

முதலியவைகளைமறைப்பதுபோல இவ்வைந்தும் கூடஸ்தனை மறைத்துநிற்ற லால் அங்ஙனமுருவகித்தது. ஆனந்தமயகோசத்தில் அந்தக்கரணவிருத்தி யடங்கிநிற்றலின் அவித்தையெனவும், அங்ஙனமுள்ளசுகத்தையறிதலின் பிரி யமெனவும், அச்சுகஞ்சமீபமாயிருத்தலின் மோகமெனவும், அச்சுகத்தோடுங் கூடிநிற்றலின் பிரமோதமெனவும் வந்தனவெனக்கொள்க.

புத்தியினரென்றது பாரமார்த்திக கூடத்தரிலக்கணந்தெரியாது கற்பித மான அகங்காரத்தையே யாத்மாவெனக்கொள்ளும் சிலமதஸ்தரை. அவரிலிங் ஙனங்கொள்ளுவோர் துவிதசைவசித்தாந்தியும், பாஞ்சராத்திரிக வைணவர் களுமென்பாருமுளர். அங்ஙனங்கூறினுமமையும்.

ஆனந்தமயகோசத்துக்கு அதீதமாகிய ஆத்மா விஞ்ஞானமயகோசத்துக் குரித்தாகிய அகங்காரமாகாமையின் அங்ஙனங்கூறுவோர் ஆத்மஞானமில்லா தவரே. பிரமத்தைத்தரிசிப்பிக்குநிமித்தம் அவற்றைமறைக்கும் பஞ்சகோ சத்தைநீக்கவேண்டி யவற்றினிலக்கணங்கூறியதென்க. பஞ்சகோசத்தை நீக்கலாவது; அவைதானுகநின்றஅழுத்தத்தை. அதாவது, பஞ்சகோசமும் விகாரரூபமன்றிச் சுயம்பன்றெனக்காட்டியதனானும், காட்டியவண்ணந் தானுந்தோடங்காணத் தானேயவ்வழுத்தஞ்சிறிதுசிறிது தளருமாதலினானும், தளரத்தளர அவ்வவற்றினுள்ளபாச மணுவணுவாக நழுவுமாதலானும், நழுவி னும், அவ்வவ்வாசனை விரைவிலகலாது, சிறிதுசிறிதகல அவ்வவ்வவற்றினிலக் கும்விடும், இங்ஙனம்விடுதலேயெனவறிக. இங்கேபாழாவது; பஞ்சகோச முங்காணுமை. முன்னர்பஞ்சகோசமாநின்றதறிவாதலா லிப்போதன்றுநிற் பதுமறிவே. முன்னரறிவுவிளங்கி லிப்போதுமறிவுவிளங்கலாம். முன்னர் நாமரூபமா விளக்கியவாறுபோன்று இப்போதுபாழாவிளங்குகின்றது என் னும்விவேக மிவனுக்கின்றேனும் பாழிற்பயனின்மைபற்றிப் பஞ்சகோசமும் விட்டப்பாற் பார்க்கின்றபோதபாழேவிஞ்சிய ததுவல்லாமல்வேறொன்றுந் தெரியக்காணேனெனவும், நாமரூபமும், பாழு மறிவினதுகற்பிதத்தோற் றம், அவையோர்முதலன்று. இவ்விருமைக்கு முதலாயிருப்பதறிவு. இவ் வறிவேயிவனுயினும் விளங்காமைபற்றி யஞ்சனவிருளையோநா னகமெனை வனுபவிப்ப னெனவுங்கூறினர். பஞ்சகோசமும்பாழு மறிவையன்றியில்லை யென்னுமுளவு அவ்வனுபவிக்குத்தெரியுமன்றி யேனையோர்க்கெங்ஙனந் தெரியும். இவானுபவியாதலிற் றெரியச்சொல்வரெனப்பட்டது. உலகில் ஞானுனுபவிகளொழிய வேனையகுருக்களனைவரும் இதுபஞ்சகோசத்தி லொன்றுமே யெனத்தெரியாது அதனைமெய்த்தேவபாவமெனக்கொண்டு உபதேசித்துக்களித்துத்திரிகின்றனர். இங்ஙனமாயபாவமெல்லா மனோ சங்கற்பமன்றோ; இதுமனோசங்கற்பமெனவறிந் திவற்றைவேண்டாது மெய்ப்பொருளை யுணர்த்தத்தக்கவரைக் குருவாகவிவன்விழைந்து பல்லூழி காலமெய்த்தவம் புரிந்ததனாலன்றோ வித்தகையானகுரு விவனுக்குவாய்த் தனர். யாவருமுணர்ந்துய்யும்படி யிங்ஙனமாயமரபு தெரிவிக்கப்பட்டது.

தசமன்பாழாகி னீயும்பாழாகலாமென்பதை யிக்கவியிற்கூறுகின்றது.

முன்புகல் தசமன் புத்தி மோகத்தா லெண்ணி யெண்ணி
யொன்பது பேரைக் கண்ட வொருவனுந் தனைக்கா ணாது
பின்பவ னிடையிற் கண்ட பெரியபா ழவனே பாரா
யன்புள மகனே காண்ப தடங்கலுங் காண்பா னீயே.

(போ-ரை.) முன்னர்க்கூறியபத்தாவான் தனதுபுத்திவிகற்பத்தாற் பலகாலெண்ணியெண்ணி :—ஒன்பதுபேரைக்கண்ட வொருவனாகியதன்னை யெண்ணிக்காணாது, பின்னரவன் தன்னிடத்திற்கண்ட பெரியபாழ்தானே; தசமனெனப்படுவோ னிதனைநன்கு சிந்தித்துக்காணுதி :—எனதுபிரியமுள்ள ஞானபுத்திரா; அகம்புறத்திற் காணப்படுவனவாகின்றுள்ள திரிசியமனைத்தும் காண்பவனீயேயாகும். எ-று.

புத்திமோகம், கலக்கப்புத்தி. அவன்பாழல்லனெனமறுக்க வெதிர் மறைப்பொருடாநின்றது ஒகாரமெனவறிக. இங்குபாழாவது ஒன்றுந்தோன் றாமை. நாமரூபமுதல் பாழீறாயவனைத்தையுங் காண்பதடங்கலுமெனவும், அடங்கலுங்காண்பதறிவு, அவ்வறிவுநீயேயெனக்குறிப்பிக்க, அடங்கலுங் காண்பா னீயேயெனவுங்கூறினார்.

(க-து.) பகுதிவிகுதியிடைநிலைக்கற்பிதங்களினீயல்லை யிவற்றிற்குச் சாக்ஷிநீயென்பது.

தசமனென்பதுஆன்மா. ஏனையஒன்பதும் விசுவன், தைசதன், பிராஞ் ஞன், வைசுவானரன், சூத்திராத்மா, அந்தரியாமி, சிற்சொலிதை, பொற்புவி சாந்தன், பிரசாபத்தியனுமாம். வேறொருவனென்றதுஆசிரியன்.

இதுகாறுமாயையினாலுண்டாகிய திரிசியங்களினிலக்கணங்களைப் பகுத் தறிகின்ற திரிசியவிவேக மிவ்வளவெனக்கூறி, மேல்இத்திரிசியத்தை நீக்கு நிமித்தம் இவற்றைச்சங்கிரகமாகச்சுருக்கி யாத்மாவில்ஆகந்துகமாகத்தோற் றின அஞ்ஞானமுதலிய ஏழவத்தையின்இலக்கணங்களை யுவமானயுவமேய பூருவமாக விளக்குகின்றது.

பத்துப்பேர் ஓர்பிரவாகமானவாற்றைக்கடந்து அக்கரையில் தம்மைத் தாமெண்ணுங்கால் அவர்களிலொருவன் ஒன்பதுபேரையெண்ணிக்கண்டு பத்தாவதுபுருடன்தானெனவே தெளிவுற்றறியாது தறிபோனிற்றலேயஞ் ஞானமெனப்படும்; பத்தாவானில்லையென்னு நாஸ்திகமும், இருந்தாற் காணுவென்னுபாதியு, மாகிய விவ்விரண்டுமயக்கமும் தின்பத்தையே தரத்தகுந்த வாவரணமெனப்படுவதாம்; வழிப்போக்கனாகிய வொருவனது மொழியினால் பத்தாவான்உயிரோடிருக்கின்றானென்று அறிந்துகொள்ளுதலே முற்கூறிய பத்தாவானில்லையென்னும் அசத்தாவரணத்தோடுமுரணுயுள்ள பரோட்சமெனப்படும்; ஐயத்தையுடையஒன்பதுபுருடரோடு முறையே

யெண்ணி நீயேபத்தாவானெனக்கூற, அவன் தன்னைத்தானே யிருந்தபடி யிருந்தறிதலே, இப்போதிங்கெண்ணிக்கையி லகப்பட்டபத்தாவான் இருந் தாற்காணப்படானுவென்னு மபானுவரணத்தோடமொருயுள்ள அபரோட்ச மெனப்படுவதாம்; பெருநதியிற்பத்தாவானிறந்தனனென் றங்கெழுந்த துக்கம் போதலே, துக்கநிவர்த்தியெனப்படும்; தனக்குவாய்த்த சுபாவநிலையிற்சுகித் திருத்தலே மேலாயதடையற்ற வானந்தமெனப்படுவதாம் என்றறிக.

அஞ்ஞானந், தன்னைமறந்தஅறியாமை. ஆவரணம், முழுதுந்தெரியா மன்மறைத்தல். விட்சேபம், அவனிறந்தானென்பதனுல்வருந்துன்பம். பரோ ட்சம், இருக்கின்ருனென்கின்றநிச்சயம். அபரோட்சம், பிரத்தியட்சமாய்க் காண்பது. துக்கநிவர்த்தி, மரித்தானென்றதனுல்வருந்துன்பநீக்கம். நிரங் கிசதிருத்தி, (தடையற்றவானந்தம்) மரித்தானென்றவனைக் கண்டதனுல் வந்தசுகம்.

வினு:—ஈற்றவைமூன்றும் அவத்தையாயதென்னை?

விடை:—வினையநான்கும்நீங்கியவிடத்து உதித்ததாதலினென்க.

இனித்தசமனுக்கு முன்னும்பின்னுமின்றி விசாரணுகாலத்தில் அவாந்தா மாக இவ்வவத்தைகள் தோன்றிநீங்கினதுபோல, ஆன்மாவிற்கும் இங்ஙனமே தோன்றி நீங்கிற்றென்பதைவிளக்குதல்: அற்பநெறிக்கியைந்த சமுசாரத்தை யுடையவனுய்த் தன்னைத்தான் உணர்தற்குவலியற்றவோர் சித்துப்போலியா நின்றுள்ள சீவனுனவன் பிரபலசுருதிவிசாரணை யடைவதற்குமுன்னர் ஒப் பற்றதனது யதார்த்தசொரூபமாகின்றுள்ள சுயமபிரகாசமாகிய மேலாயதுரிய நிலையை யறியாதிருப்பதே யஞ்ஞானமெனப்படுவதாம்; பின்னெருகாலத் தில் ஆன்மஇலக்கணமொருவர் இனையதெனக்கூறுமிடத்து அஃதில்லை யென்றும், அந்தப்பிரத்தியகாத்மாஉண்டெனிற் ருேன்ருதாவென்றும் எய் துங்கலக்கமாகிய நாஸ்தியென்னும் அசத்தாவரணமும், நபாதியென்னும் அபானுவரணமுமாகியவிரண்டும், முற்கூறியஅஞ்ஞானகாரியமென்று சொல் லத்தக்க ஆவரணமெனப்படும், கர்த்தாவும், ஒள்ளியகருமபலத்தை யநுபவிக் கும்போக்தாவுந் தானெனவேநினைத்துத் தூலவுடம்பையபிமானிக்கும் அபி மானியாகியசீவன் ருனேயெனக்கூருநிற்றல் அரிதாகியவிட்சேபமெனப்படு வதாம். பிரபலசுருதியி னுண்மையுரையானுஞ் சற்குருவி னுண்மையுரையா னும் பிரத்தியகாத்மாவுண்டென வுண்மையாகவேயறித லசத்தென்றுமுன் னர்க்கூறிய முதலாவரணமானது நிக்ரகமாகத்தக்க பரோட்சமெனப்படுவதாம். நீயேபிரமமெனக்கூறும் பிரபலசுருதிமொழியை விசாரிக்கும்விசாரத்தாற் பிரத்தியகாத்மாத்தானென்று அநுபூதிவாத்தெளிந்திடுதலே முன்னர்அபான மெனக்கூறிய இரண்டாம்ஆவரணமானது நிக்ரகமாகத்தக்க அபரோட்சஞான மெனப்படுவதாம். ஆன்மசாட்சாத்காரநிலையை யுள்ளவாறடைந்து, அதன் பின்னர்நான் கன்மகருத்திரு, நான்கன்மபலப்போத்திருவெனக்கூறுஞ் சிதா பாசவடிவமான துக்கத்தினின்றும்நீங்குதலே கூறாதற்கரியதெனத்தக்க துக்க

நிவர்த்திபெனப்படுவதாம்; யாமரியதவங்களைச்செய்து அடைதற்குரியைச்த பயனனைத்தையுமடைந்து பதைப்பற்றிருந்தனமென் றமைதிபெறலே துக்க மற்ற தடையற்ற ஆனந்தமெனப்படுவதாம். இவ்விரண்டும் அபரோட்சஞா னத்தின் மேலாயபயனெனப்படுவதாம்.

அவாங்மனோகோசரமாய்த் தானேதானாய்விளங்கும் அதீதமானகூடத் தன் தனதுலீலாவிபூதியினால் எவ்விடத்தும் அதுவதுவாய்விளங்குந்தன்னை யறியுநிமித்தம் உண்டானசங்கற்பம் அந்தர்முகத்தைநோக்கி யதிற்கரையாது பகிர்முகநோக்கிற் றனதுநிரதிசயம்வெளிப்படாமையை யானறியேனென்ற சங்கற்பத்துக்குமுன்னுள்ளவிடம் அஞ்ஞானமும், அதுவிசாரத்தாற்றேடு மிடத்து அவ்வதீதம் இவ்விருத்திக்கெட்டாமையான் இல்லையெனக்காண்ப தாவரணமும், அவ்வனுபவம் விளங்கவில்லையேயென வருந்திவிரிகின்ற விருத்தியையுடையது விட்சேபமும், ஆசிரியனால் அந்நிரதிசயம் இருக்கின்ற தெனக்கூறும்உத்தியினால் அமர்ந்திருக்குமிடத்து முன்னில்லையென்ற மயக் கம்நீங்கியிருப்பதாக நிச்சயிப்பதுபரோக்ஷமும், அவ்வாசிரியன் சுருதியுத்தி யனுபவத்தால் வெளிப்படுத்துமிடத்து முன்றோன்றுநின்ற மயக்கம்நீங்கித் தானாகக்காண்பதுஅபரோக்ஷமும், இவற்றான்முன்னில்லையென்றதனால்வந்த கர்த்திருத்வபோக்த்திருத்வமாகிய துன்பங்கணீங்குவதே சோகநிவர்த்தியும், இவ்விடத்திற் றனக்குத்தானேயுள்ள இன்பம்விளங்குவது நிரங்கிசதிருத்தியு மாமென்க.

ஆத்லிற்சத்தேயறியா தசத்திலதறியாதென்பதற்கு உ-ம்.

திருக்குத்திரிசியவிவேகம்.

காரணங்கண் டாலொழியக் காரியமீ தென்றறியோங்
காரியமே காரணமாக் காணுமே—யோரில்
அறிவை விளக்கிக்கொண் டப்பாலே காணில்
வெறும்பொய் யுலகாய் விடும்.

(எ-து.) உலகத்தில் அபேதகாரண காரியவகைக ளனைத்தினுள்ளுங் காரணத்தைப் பிரத்தியக்ஷமாகக் கண்டாலன்றி யிதுகாரியப்பொருளென் றுய்த்துணரமாட்டோம். ஏனெனில் காரியமேகாரணமாகத் தோற்றுவதி னாலே. இதுபோலத்தாஷ்டாந்தத்திற் சிந்தித்துப்பார்க்குமிடத்து அபேத காரண காரியவகையாயுள்ள அறிவறியாமையென்பவற்றுள் அறிவாகியகார ணத்தை யுள்ளவாறு ஞானாசிரியராற் பிரத்தியக்ஷமாகவிளக்கிக்கொண்டு பின் னர்க்காரியமாகிய உலகத்தைக்காணில் வெறும்பொய்யாய் முடியுமென் றுணர்தி. எ-று.

விசாரித்துத்தெளியாவிடத்துப் பௌதிகமே பூதமாகக்காணுமாறுபோலச் சிரவணாதிகள்செய்து தெளியாவிடத்து அறியாமையே யறிவாகக்காணப்படு தலின் காரியமோகாரணமாக் காணுமெனப்பட்டது.

வேதாந்த இலக்கணம்.

அகண்ட நோக்க வாத லழியும்
கடலிற் சுழிபோ லென்மனுர் புலவர்.

(இ-ள்.) அறிவுதன தகண்டநிலையைத் தானேக்க, அங்ஙனே கடலிற் சுழிபோலத் தனதுகற்பிதம் அழியுமெனச் சான்றோர்கூறுவர் எ-று.

கம்பராமாயணம்.

அலங்கலிற் றோற்றும் பொய்மை பரவெனப் பூத மைந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபா டுற்ற வீக்கம்
கலங்குவ தெவரைக் கண்டா லவரென்ப கைவில் லேந்தி
இலங்கையிற் பொருதா ரன்றே மறைகளுக் கிறுதி யாவார்.

காசிக்காண்டம்.

கானலிடைத் தெண்ணீருங் கயிற்றினில்வா ளரவுமலை கடலிற் பட்ட, கூன்முதுகிப் பியிற்றோற்றும் வெள்ளியுமம் முதலுண்மை குறிக்கிற்றீரும், ஆனவைபோ னினையறியிற் றோற்றுசக மனைத்து நில்லா தழியுமாற்று, றேனவிழ்பூங் கடுக்கையணி செல்வநின தறை கழற்றாட் சென்னிசேர்ப்பாம்.

ஆறுஞ்சூத்திரம் க-வது உதாரண வெண்பா.

அசத்தறியாய் கேணீ யறிவறிந்த தெல்லா
மசத்தாதல் மெய்கண்டா னுபி—லசத்தலாப்
பாரி லெழுத்து நிகழ்கனவும் பேய்த்தேரு
மோரினிவை யின்றாயா றெப்பு.

விசாரசாகரம் நாலாவது தரங்கம்.

யாண்டுரஜ்ஜு, கிளிஞ்சல்முதலியவைகளில் சர்ப்பம், வெள்ளிமுதலியன பிரமமாயிருக்கின்றனவோ; ஆண்டுசத்கியாதி, அசத்கியாதி, ஆத்மக்கியாதி, அந்யதாக்கியாதி, அக்கியாதி, அநிர்வசனீயக்கியாதியென் றாறுமதங்களுண்டு. அவற்றுள்:—தாந்திரிகசைவரும், வைணவரும் சத்கியாதிவாதிகள். சூனியவாதிகள் அசத்கியாதிவாதிகள். க்ஷணிகவிஞ்ஞானவாதிகள் ஆத்மக்கியாதிவாதிகள். நியாயவைசேடிகர்கள் அந்யதாக்கியாதிவாதிகள். சாங்கியர், பிரபாகரர் அக்கியாதிவாதிகள். வைதிகசைவர்கள் (வேதாந்திகள்) அநிர்வசனீயக்கியாதி வாதிகளெனப்படும்.

இவர்களுள், க-வது. சத்கியாதிவாதிகள்:—சுத்தியினுடைய அவயவங்களோடு இரஜதத்தினவயவமும் எப்போதுஞ் சத்தியமேயெனவும், சித்தாந்

தத்தில் (வேதாந்தத்தில்) தோஷநேத்திரசம்பந்தத்தா லவித்தையின்பரிணாம மாக அநிர்வசனீயராஜத முண்டாவதுபோலத் தோடத்தோடுகூடிய நேத்திர சம்பந்தத்தால் இராஜதாவயவங்களினின்றுஞ் சத்தியராஜதமு முண்டாகின்ற தெனவும், சித்தாந்தத்தில் அதிஷ்டானஞானத்தால் அநிர்வசனீயராஜத நிவிர்த் தியாவதுபோலச் சுத்திஞானத்தாற் சத்தியராஜதமுந் தனதவயவத்திற் றெம்ச மாமெனவுங்கூறுவர்; இதனாற்பிரபஞ்சம்மித்தையன்று சத்தியமேயெனக் கூறுவோராயிற்று. ஆகவேயதைத் திருஷ்டாந்தமாகவைத்துப் பிரபஞ்சத்தில் மித்யாத்வசித்தி பெறுவது கூடாதாதலாற் சுருதி, யுத்தி, யனுபவங்கட்கு முரண்பட்ட சத்கியாதிவாதிகளின்மதமுந் தள்ளத்தக்கதே.

௨-வது. அசத்கியாதி (சூனிய) வாதிகள்:— இரஜ்ஜுவினிடத்துச் சர்ப்பம் அத்தியந்தம் அசத்தாம் அப்படியத்தியந்த மசத்தாயிருக்கிற சர்ப்பத் தின்பிரதீதி யிரஜ்ஜுதேசத்தி லுண்டாகின்றதென்பன். அவ்வாறு அசத் தின்தோற்ற முண்டாகும்பக்ஷத்தில் மலடிமகன், முயற்கொம்புமுதலியன வுந் தோற்றவேண்டும் தோற்றாமையா லசத்கியாதிமதமும் பொருத்தமன்று.

௩-வது. க்ஷணிகவிஞ்ஞான (ஆத்மக்கியாதி) வாதிகள்:— பழுதையி னிடத்தும், வேறிடத்தும், புத்திக்குவெளியிலோரிடத்துஞ், சர்ப்பமில்லை சகலபதார்த்தமும் புத்திக்கிவேறாகவில்லை. புத்தியே சகலஆகாரத்தையுந் தரிக்கிறது. க்ஷணிகத்தோறுமுற்பத்தி, நாசத்தையடையும் விஞ்ஞானம் (ஆத்மா) எதுவோ அப்புத்தியே சர்ப்பரூபமாகப் பிரதீதியாகின்றதென்பர். அங்ஙனஞ் க்ஷணிகத்தோறு மாறும்புத்தி சர்ப்பாகாரத்தைத் தரிக்கும்பக்ஷத்தில் க்ஷணத்துக்குமே லச்சர்ப்பந்தோற்றலாகாது. ஆனாலநுபவத்திற் பிரமமுள்ள வரையிற் சர்ப்பந்தோற்றுகின்றதாதலா லாத்மக்கியாதிமதமு மறுக்கத்தக்கதே.

௪-வது. நியாய, வைசேடிகர்:— புற்றுமுதலியஸ்தானங்களில் யதா ர்த்தமாகிய சர்ப்பமுளது; அதுநேத்திரத்தினாற் காணப்படுகின்றது. நேத் திரத்திலுள்ள தோடபலத்தால் எதிரேசமீபத்திலுள்ள இரச்சுதேசத்திற் றோற்றுகின்றது. யதார்த்தசர்ப்பத்திற்கும் நேத்திரத்திற்கும்மத்தியில் பித் தியாதிய மறைப்புகளிருப்பினுந் தோடசகிதநேத்திரத்தால்; புற்றுதியிலுள்ள சர்ப்பம் அந்நியதா அதாவதுவேறுபிரகாரமாய் எதிரிலிரஜ்ஜுவில் கியாதி (விளக்கமுஞ், சொல்லுதலும்) அந்நியதாக்கியாதியென்னும் பிராந்தியென் பர். இதனை ஷடி சிந்தாமணிக்காரர்:—தோடசகிதநேத்திரத்தினால் புற்றி னிடத்துள்ள சர்ப்பஞானமுண்டாமாயின்; மத்தியிலுள்ள ஏனையபதார்த்த ஞானங்களு முண்டாதல்வேண்டுமாதலால் பித்தியாதி அந்தராயசகித வத்து விஞ்ஞானம் நேத்திரத்தாலுண்டாகாது. பின்னையது தோடசகிதநேத்திரத் தாற் பழுதைபாம்பாகத்தோற்றுகின்றது; இப்படியொன்றுமற்றொன்றாகத் தோன்றுகிற்பதே அந்நியதாக்கியாதியென்பர். இவருஞ்ஞேயாநுசாரமாக ஞானமுண்டாகிறது, ஞேயம் ரஜ்ஜு, ஞானம் சர்ப்பத்தினதென்றுகூறுவது கூடாதென்ப ரக்கியாதிவாதிகள்.

ரு-வது. அக்கியாதிவாதியர் :—இதுசர்ப்பமென்புழி இரச்சுவினுடன் நேத்திரத்திற்குத் தன்விருத்திவழியாகச் சம்பந்தமுண்டா யிரண்டுஞானமுண்டாம்; அப்படியுண்டாதற்குப் பிரமாதாவின்கட் பயதோடமும், பிரமாணத்தின்கட் டிமிரதோடமுமேகாரணமாம்; அதனால்புருடனுக்கு இதுவென்பது இரச்சுவின்சாமானியப் பிரத்தியட்சஞானமென்றும், சர்ப்பமென்பது பூருவங்கண்ட சர்ப்பத்தின்ஸ்மிருதிஞானமென்றும் இரண்டுஞானமெனக்கு உண்டாகிறதென்கிறவிவேக முண்டாகவில்லை; இவ்விருவகைஞானத்தி னவிவேகமேபிரமமென்பர். இவரும் இதுவென்னுங்கூறு இரச்சுவின் சாமானியப் பிரத்தியட்சஞானமென்றும், சர்ப்பமென்னுங்கூறு பூர்வங்கண்டசர்ப்பத்தின் ஸ்மரணஞானமென்றுங்கூறுவதால்; ஆண்டுமுன்கண்ட சர்ப்பத்தின்ஸ்மரணமே ஒப்பி யெதிரிலுள்ள ரஜ்ஜுவில் சர்ப்பஞானத்தை யொப்பாவிடி லெதிரேகிடக்கும் ரஜ்ஜுவைக்கண்டு புருஷன்பயப்பட் டோடலாகாது. ஓடுவதால் ரஜ்ஜுவிற்றான் சர்ப்பந்தோற்றுகிறது; முன்கண்டசர்ப்பத்தின் ஸ்மரண முண்டாவதில்லை. அன்றியும் ரஜ்ஜுவின்யதார்த்தஞான முண்டானபிறகு சர்ப்பப்பிராந்தி நீங்குவதால் ரஜ்ஜுவினிடத்திலேயே சர்ப்பம் பிரதீதியாவதன்றி முன்கண்டசர்ப்பத்தின் ஸ்மிருதியுண்டாகிறதில்லை. இது சர்ப்பமென்னுமிடத் தொரேஞானந்தான்றோன்று மந்தக்கரணத்தி லேககாலத்தில் ஸ்மரணரூபஞானமும், பிரத்தியட்சரூபஞானமுந் தோன்றாது ஆதலாலக்கியாதிவாதிமதமுமசங்கதமாம்.

சித்தாந்தத்திலுள்ள அநிர்வசனீயக்கியாதியின் தன்மை. அந்தக்கரணத்தின்விருத்தி நேத்திரவாயிலாகவெளிப்பட்டு விஷயசமானகாரமாகிறது. அதனால்விஷயத்தி னாவரணம்நீங்கி விஷயந்தோற்றுகிறது. அதற்கு (சூரியாதி) ப்பிரகாசசாதகமின்றிப் பதார்த்தம்விளங்காது.

யாண்டுரஜ்ஜுவில் சர்ப்பப்பிரம முண்டாகின்றதோ, ஆண்டுஅந்தக்கரணத்தின்விருத்தி நேத்திரவாயிலாகவெளிப்பட்டு ரஜ்ஜுவுடன் அதன்சம்பந்தமுண்டாகிறது. ஆனால்மந்தாந்தகார மல்லதுகாமாலைமுதலிய நேத்திரதோஷம் பிரதிபந்தகமாயிருக்கின்றது. ஆதலால் விருத்தியின்சொரூபம் ரஜ்ஜுவின் சமானகாரமாகிறதில்லை. அதனால்ரஜ்ஜுவினாவரணம் நாசமாகிறதில்லை. இவ்விதத்தால் ஆவரணபங்கத்தின்பொருட்டு விருத்தியின்சம்பந்தமுண்டாகியும், எப்போதுரஜ்ஜுவினாவரணம் பங்கமாகிறதில்லையோ, அப்போது ரஜ்ஜுசேதனத்திலுள்ள அவித்தையில் க்ஷோப (கலக்க) முண்டாய் அவ்வவித்தை சர்ப்பாகார பரிணமத்தையடைகிறது. அந்தஅவித்தையின் காரியமானசர்ப்பம் சத்தாயிருக்குமாயின் ரஜ்ஜுஞானத்தினால் பாதமாகாது ஆகின்றபடியால் சத்தன்று. அசத்தாமாயின் மலடிமகன்போலத்தோன்றாது அவைதோற்றுவதா லசத்துமன்று. ஆனால்சதசத்விலக்ஷணமான அநிர்வசனீயமாம். கியாதி :—பிரதீதியும், சொல்லுதலும் அநிர்வசனீயத்தின்கியாதி யெனப்படும். சங்கை? சத்தின்விலக்ஷண மசத்து; அதனைஅசத்துக்கு விலக்ஷணமெனல்விருத்தம். அசத்துக்கு விலக்ஷணஞ்சத்து; அதனைச்சத்தின்

விலக்ஷணமெனல்விருத்தம். சதசத்துக்குவேறான மூன்றாவதுபதார்த்த மில்லாமையினால் அநிர்வசனீய சப்தத்தினது அர்த்தத்தினுணர்ச்சியே யில்லையென்னுஞ் சங்கைக்குச் சமாதானம் :— மூன்றுகாலத்திலும் பாதிக்கப்படாதது சத்தெனப்படும்; அதற்கு விலக்ஷணமென்பதனால் பாதிக்கத்தக்கதெனப்படும். ஸ்வரூபமில்லாத மலடிமகன்முதலியவை அசத்தெனப்படும்; அதற்குவிலக்ஷணமென்பதனால் ஸ்வரூபமுடையதெனப்படும். ஆதலால் பாதிக்கத்தக்க ஸ்வரூபமுடையது அநிர்வசனீயபதார்த்தமாம்; அங்ஙனமே பிரபஞ்சமும் இரஜ்ஜுசர்ப்பாதிகளுமாம்.

எங்ஙனம்சர்ப்ப மவித்தையின்பரிணாமமோ, அங்ஙனமே அதன்ஞானரூபவிருத்திய மவித்தையின்பரிணாமமேயாம்; அந்தக்காணத்தின் பரிணாமமன்று. எனெனின், ரஜ்ஜுஞானத்தால் சர்ப்பம் பாதிக்கப்படுவதுபோல அதன்ஞானமும் பாதிக்கப்படுகிறது. அந்தக்காணத்தின்ஞானமாயின் பாதமாகலாகாது. ஆதலால் சர்ப்பம்போலச் சர்ப்பஞானமு மவித்தையாகாரியமாய்ச் சத்து, அசத்துகளுக்கு விலக்ஷணமான அநிர்வசனீயமா யிருக்கிறதென்றறிக.

சித்தாந்த சிகாமணி.

கயிற்றரவிப்பிவெள்ளிகுற்றியிற்கள்வன்மிக்க
வெயிற்படுகானற்றெண்ணீர்விண்ணிற்கந்தருவவூர்போல்
இயற்படுநித்தசச்சிதானந்தசிவத்தின்கண்ணே
செயப்படுபொருளாய்த்தோன்றுஞ்செப்பியவுலகமன்றே

விருத்தியாம்பிகை துதி.

பழுதையென்றுணரினதின்முனர்த்தோன்றும்
பாம்புமப்பழுதையானதுபோல்
முழுதுணர்ந்தறிவாந்தன்னையேகாணின்
மூாணுறுசராசரமெவையு
மெழுதருமறிவாய்விளங்குமென்றிசைத்தெ
னெழுபவந்துடைத்தெனையளித்தாள்
கெழுமணிமுத்தாநதிசெறிவிருத்த
கிரியமர்பெரியநாயகியே.

அரவிலைபழுதையுணர்ந்தவர்க்கதுபோ
லகிலமெய்ப்பொருளினையுணர்ந்தோர்க்
கொருவுறுதிருத்தலெனையெனிற்கான
லுருசலமிலையெனவுணர்ந்தும்

மருவலினுனவிகாரமேதென்னின்
மலிகனவினிலுறுமென்றுள்
கிருதுசெய்மறையோர்பரவியவிருத்த
கிரியமர்பெரியநாயகியே.

சிவஞானவள்ளலார்.

ஒருவேதம் பஞ்சபாசங்களு மநித்தமென்றுசொல்லிற்று, பின்னொரு வேதம் கானற்சலம்போலத்தோற்றரவுமாத்திரமேயென்று சொல்லிற்று, பின்னொருவேதம் ககனாவிந்தம் வந்தியாபுத்திரன் சசவிஷாணம்போலநுபவத்திலே பிரபஞ்சமில்லையென்றுசொல்லிற்று, நாலாம்வேதம் மாயையேயில்லையிருக்கிறதெல்லாம் பிரமமேயென்றுசொல்லிற்று.

வேதாரணியபுராணம் வரன்முறைச்சருக்கம்.

பாச வல்லிவே ரறவகழ்ந் தமலமாம் பரத்தினிற் பரிவாற்றி
யூசலாகிய பிறப்பெனுந் தளைபறுத் தோங்கொளி யுருவாக்கு
நேசமார்தரு ஞானமே முத்தியை நிகழ்த்திடு நிலைவாயா
வாசையார்தரு கருமமற் றெவற்றினு மரியதா முயர்வீடே.
சுத்தி வெள்ளியிற் கயிற்றினி லரவெனத் தோற்றுத றொழிலாக
வெத்தி றத்தினு மகன்றிடா விடயமா மிவற்றினுக் கிடமாகு
மொத்த வப்பொரு ளுணர்ந்திட மபலறு முலகுயிர்க் கிடமாகுந்
தத்து வத்தினைச் சார்பற வுணர்ந்திடிற் றழைத்த முத்தியுமாமே.
மயக்க முற்றவ னிந்திர சாலமா வாரியுற் றிடைமாய்ந்தே
துயக்க முற்றிடு முலகுயிர் மெய்யெனத் துணிந்தவ னவன்போலாம்
வியக்கு மிந்திர சாலமென் றுணர்ந்தவன் வேலைவீ ழினுமின்பாய்
நயக்கு மிச்சகம் பொய்யென வுணர்ந்தவ னணுகு மின்பினைநாளும்.
இல்ல தாயினு முண்மையிற் றோற்றிடு மிதுவிறும் பூதென்றுஞ்
சொல்லை யோர்ந்திடு முலகுமற் றவத்தையி னெழிதலால் வியப்புற்றே
யல்லை மேவிய கனவுறும் பொருளென வடைந்தசாக் கிரத்தானு
மெல்லை போகிய பல்பொருள் கண்டுளத் திகழ்ந்திடு நகைபேய்ந்தே.
வேறு வேறுபல் வியற்கையிற் கனவிடை மேலுறும் விழைந்தோரிற்
கூறு மொன்றுதா னலதிலை சாக்கிரக் குறியினுந் தானேயாந்
தேறு மேபெனி னதலிற் பரம்பரஞ் சின்மய மகந்தானு
மீறி லாப்பரப் பிரமமா மசங்கமா மின்பமாத் திரைபாமே
தனது சத்தையும் புராமு மின்பமுஞ் சகத்து று மெனவேட்கை
மனம முத்திடு மாயைபாற் பரித்திடு மற்றவற் றிலைபென்றே

தினமுளத்துற வைத்தொளிர் சிற்பரத் தேசுகால் பேய்த்தேர்சூழ்
கனவெனச்சகங் கண்டிடினுலகமோர் கரிபர வுருவாமே.

சிவஞானசித்தியார்.

காரியோற்பத்தியிற் காரணம் மூன்று முறைமையாயிருக்குமென்றுரைக்கின்றார்.

காரிய காரணங்கள் முதறுணை நிமித்தங் கண்டாம்
பாரின்மண் டிரிகைபண்ணு மவன்முத றுணைநிமித்தந்
தேரின்மண் மாயையாகத் திரிகைதன் சத்தியாக
வாரியன் குலாலனாய்நின் றாக்குவ னகிலமெல்லாம்.

அ—கை.

யதார்த்தம்தோற்றமெனக்கிடந்த அறிவறியாமையபேதமாயினும் உண்மைவிளங்குமாறு அதனைப்பகுத்துக்கூறுவேனெனல்.

அறிவோ டறிவனவு மாமிரண்டு நான்காம்
பிறிவாகா வொன்றாகா பேதித்—தறிவிக்கக்
கூடா தெனினுமிதைக் கூறிட்டுக் கூறிடுவன்
நாடாமற் பொய்யெங்கு நான்.

எ-து. திருக்கெனவுந் திரிசியமெனவுங் கூறப்படுவனவாகிய இவ்விரண்டும் ஒவ்வொன்று இரண்டிரண்டாகக் காணப்படுவதால் நான்காகும். இங்ஙனங்காணப்படுந் திருக்குதிரிசியம் நிலாக்களங்கம்போல் அபேதமாகநிற்றலின் வேறுபடாவாம். அங்ஙனம்வேறுபடாததுபற்றி யேகமெனக்கொள்ளின் களங்கம்மதியெனப்படாது; படாததினால் ஏகமெனப்படாவாம். இவ்வாறின்றுள்ள திருக்குதிரிசியத்தைச் சத்துக்கள்தவிர மற்றையயாவராலேனும் பகுத்தறிவிக்கக்கூடாது. கூடாததாயினும்யானிதைப் பகுத்துக்கூறுதற்கு வல்லனாயினன். யாதுக்காகவெனின் தோற்றமெனப்படுங் கற்பனாவடிவமாகியபொய்கள் எத்திசையினுந்தலைகாட்டாது நசிக்க. எ-று.

அறிவோடறிவனவு மாமிரண்டென்றது: தனக்கெனப்பொருளொன்றிலாத உலகைப்பொருளதாகக்கருதி, அதற்காதிநித்தியத்துவங்கற்பித்து, அதுகாரணமாக அதனையாக்குதற்கு நிமித்தகாரணன் ஒருவனிருக்கவேண்டுமென்று அனுமானிக்கத்தக்கவன்ஈசனெனவும், அவனிடுவதையேற்று அனுபவிக்கத்தக்கவன்சீவனெனவும் அறியாமையாற்கொள்ளும் மயக்கத்தையறுத்தற்கும்; நான்காமென்றது: அறிவும் அறியப்படுவனவுமாகிய இரண்டினுள் அறிவுக்குளவ்வவத்தைக்கண்ணுங் காணப்படுவனவாகியதிரிசியம் பொருளல்லாப்பொருளாகவும், பொருள்பொருளாகவும் பிரத்தியட்சப்படுதலின்

அத்திரிசியத்தையிரண்டெனவும், அங்ஙனம்பிரத்தியட்சப்படுவது அறிவுக்காதலின் அவ்வறிவுதனக்குப்புலப்படும் பொருளல்லாப்பொருளைப் பொருளெனச்சத்தியமாகப் பார்க்கும்மயக்கத்தினல் அஞ்ஞானமாகவும், பொருளைப் பொருளென்று ஐயந்திரிபறப்பார்க்குந்தெளிவினல் ஞானமாகவும்விளங்கலின் அத்திருக்குவை யிரண்டெனவுங்கோடற்கும்; பிறிவாகாவொன்ருகாவென்றது: பொருளல்லாததைப் பொருளெனக்கொண்டதுஎவ்வறிவோ? அவ்வறிவேபொருளைப்பொருளாகக்கோடலினானும், அறிவையன்றியறியாமைக்கு வேறுபொருளின்ருதலினானும் அறிவறியாமையென்றிரண்டுபடாது; இரண்டுபடாதாயின் அறியாமைபோல்அறிவும் அசத்துசடந்துக்கமெனப்படும். படவே, சச்சிதாநந்தமென்பது சொன்மாத்திரமாய்முடியும். முடியவே, வேதாகமவிதிகளும் அதுகாரணமாகச்செய்யுஞ் சாதனங்களும் பயனின்றியமையும். அமையவே, ஆன்மாக்கட்கு நித்தியதிருத்தியில்லாமற்போகும்; ஆகலின்ஒன்ருகாது. இங்ஙனம்ஒன்ருகவும் இரண்டாகவுங்காணப்படுவது தானுதலைக் குறிப்பித்தற்குமாமென்க.

திருக்குத்திரிசியங்களைப்பகுத்து அவற்றிற்குரியஇலக்கணங்களை நியாயத்தாற் சுருதியுத்திக்கொத்து விசாரித்துத்தேர்ந்தது வாச்சியார்த்தமெனவும், அவ்வாச்சியார்த்தத்தால் மெய்யிதுபொய்யிதுவெனத் தேறுந்தேற்றம்வரும். அத்தேற்றத்தால் மெய்யைவிளக்குவிப்பானைத்தேடி அவனால்அதனையுள்ளபடிகாணும் காட்சிக்கு லட்சியார்த்தமெனவுங்கூறுவர். இங்ஙனமிருக்க லட்சியார்த்தத்திற்குப்பின்னர்த்தான் அவற்றைப்பகுக்கக்கூடுமென்றதென்னையெனின்: முன்னர்ப்பகுத்தது சான்ருேராணையானும், பின்னர்ப்பகுப்பது ஞானகதப்பிரத்தியட்சத்தானுமாதலிற் கண்ணுர்கண்டுபகுப்பதே மெய்யாமென்றற்கென்க.

அ—கை.

கற்பிதமானதிருசியபேதத்தால் யதார்த்தமானதிருக்கு பலவாருனற்போற்ருேற்றலேயன்றி யுண்மையாகாதெனல்.

ஆடியெலா மொன்ருகு மாடிக்கு வேருமேல்
ஆடி தனிற் காண்பவைக ளாங்காங்கே—யாடி
நிழலாமே லொன்ருகா நீமயங்கா திங்கு
மொழியுவமை கண்டுளே முந்து.

எ-து. அங்கங்கேஆடிதோறுங் காணப்படுவனவாகிய சாயாவடிவங்கள் அவ்வாடிக்குவேருகுமாயின் ஆடியெனப்படுவனவனைத்தும் ஒன்றேயாம். ஆடியேநிழலாகுமாயின் ஆடிபலவாகுமெனக்கூறியதில் நீமயங்காமல் இவ்வுவமையையிங்கேற்றற்பாலது வேறதன்ருமையின் திருக்குதிரிசியமேயெனக் கண்டு இதனைத்தெளியநின்னுள் விரைந்துமுந்துதி. எ-று. அவித்தைமாயையென்னும்அறியாமையும் அவைகாரணமாகச் சமஷ்டிவியஷ்டியாகத்தோற்றுஞ் சகலகற்பிதங்களும் அநிர்தசடதுக்கமெனவும் அவற்றிற்காதாரமாகிய

சைதன்னியஞ் சச்சிதாநந்தமெனவும் ஆராய்ந்துதெளிந்தவிடத்துச் சைதன்னியத்திற்கவை யன்னியமாகமுடியும். அங்ஙனமுடியுமாயின் உபாதிபேதத்தாற் பலவேறு வகைப்படக்காணுஞ் சைதன்னியமனைத்தும் பலபேதமிறந்தும் ஒன்றாகவேவிளங்குமென்பதுதோன்ற ஆடியெலாமொன்றாகும், ஆடிக்கு வேறாமேல் ஆடிதனில்காண்பவைகள் ஆங்காங்கேயெனவும், கற்பிதங்கள் சைதன்னியத்திற் கன்னியமாகக்காணப்படாமையாற் சைதன்னியமே யவை யெனக்கொள்ளிற் சைதன்னியம் பலவாகவேண்டுமென்பதுதோன்ற ஆடி நிழலாமே லொன்றாகாவெனவும், சைதன்னியத்தையன்றிக் கற்பிதங்கட்குப் பொருளுண்டானாலன்றோ சைதன்னியம் பலவாகவேண்டுமெனத் தெளிந்த விடத்தின்மையால் 'நீமயங்காது' எனவுங் கூறியவாறுகாண்க.

அ-கை. சித்தையன்றிச்சகத்தின்றெனல்.

தெரிவன்றி யில்லை செகத்தோற்ற முண்டேற்
றெரிவன்றிக் காட்டுதியேற் றீர்வாந்—தெரிவென்றால்
என்னபொரு ளெவ்விடந்தா னெக்காலத் தென்னகுணம்
என்னபடி செய்யு மிசை.

எ-து. சகத்தானது தெரிவைத்தவிர இல்லவேயில்லை; உண்டென்னில் தெரிவைத்தள்ளிக் காட்டவல்லையாயின் அதுவேதீர்ப்பாம். காட்டுவதிருக்கட்டும், தெரிவென்றுசொன்னால் அஃதென்னவகைப்பட்டபொருள்? அதற்கிடமெங்கே? எந்தக்காலத்திருப்பது? எவ்வண்ணமாயது? அசேதனமும் அவயவமுமில்லாத இஃது எக்கருமங்களையும் எவ்வாறுநின்று இயற்றுஞ்சொல்லுதி. எ-று.

அ-கை. அஃதின்னவகையாலெனல்.

இந்திரிய முண்டே யிருக்குஞ் செகத்தோற்றம்
இந்திரிய மின்றே யிலதாகும்—இந்திரியம்
உண்டா மனதுண்டே லுண்டா மதுசீவன்
உண்டேலெங் காதார மோது.

எ-து. பஞ்சேந்திரியமென்னுந் தெரிவிருக்குமாயின் சகத்தோற்றமுண்டாயிருக்கும்; அவ்விந்திரியத்தெரிவு இல்லையாயின் சகத்தோற்றமுமில்லையாம்; அவ்விந்திரியமும் மனதுண்டாகிலுண்டாகியிருக்கும்; அம்மனமுஞ் சீவனுண்டாயி னுண்டாயிருக்கும். இங்ஙனமிருக்க, இப்போதுசகத்துக் காதாரமெங்ஙனே நீயேசொல்லுதி. எ-று.

அங்ஙனமாயினுஞ் சத்தியமாயிருக்குஞ் சகத்தைத் தோற்றமென்றதென் னையெனின், திருஷ்டிபேதத்தாலன்றி யுண்மையாகாதெனல்.

கண்ணாடி போலறிவு காண்பார்க்கெங் கேயுலகங்
கண்ணாடி மெய்யன்றிக் காணாமே—யுண்ணாடிற்

பிம்ப மிடவறிவே பேர்த்துப் பிறிதென்னும்
வம்புமதப் பித்தரைப்போல் வாய்.

எ-து. கண்ணாடிநோட்டம்பார்ப்போர்க்கு அக்கண்ணாடியிற்றோற்றும் பிரதிபிம்பங்காணுவாறுபோல, அறிவுநோட்டம்பெற்றோர்க்கு அவ்வறிவிற்றோற்றும் பிரதிபிம்பசகத்து எங்ஙனங்காணப்படும்? ஆசலின்கண்ணாடியைப்போலப் பிரதிபிம்பங்களை மெய்ப்பொருளாகக் காணுவாறுபோல் அறியப்படும்பொருளை யறிவைப்போல மெய்ப்பொருளாகக்கண்டிலம். சுருதியுத்தியனுபவத்தால் அகத்திற்சிந்திக்குமிடத்தில் அக்கண்ணாடியிடமாகவும் பிம்பம்வேறாகவும்பெற்ற பிரதிபிம்பம்போலாது பிரதிபிம்பஉலகத்திற்கு அறிவேபிம்பமும் இடமுமாமென நியாயத்தாற் கூறுதுமன்றிப் பித்தரைப்போல ஒழுங்கின்றிவாதிக்கும் வம்பர்களாகிய சமயவான்களைப்போல மூடவாதத்தால் இதற்குமாறாகச் சகத்துவேறென வாயாற்பிறழ்ந்துங்கூறேம், நீயறிதி. எ-று. சாக்கிரகற்பிதஉலகமும் சொப்பனகற்பிதஉலகமும் அறிவையன்றியின்றாதலின் பிம்பமிடமறிவேயென்றார்.

அ-கை.

அறிவேபிம்பமும்இடமுமாமென்ற தெங்ஙனமெனின்.

அறிவின் விகற்ப மனைத்துலக மாகி
யறிவி லுதித்தொடுங்கு மாங்கே—யறிவுதனைக்
காணி லிலைவிகற்பங் காணு விடத்துண்டாம்
பூணின் விகற்பநிலை போல்.

எ-து. அறிவானதுதனது சச்சிதாநந்த இலக்கணங்களை மறந்தவிகற்பமே சகலபுவனங்களாயும் அவ்விகற்பவுலகங்கள் உதித்தொடுங்குதற்குத் தானேயிடமாயுமிருக்கும்; இங்ஙனமிருப்பதை யறியவேண்டுமாயின் எவ்வாறு விரிவுற்றதோ, அவ்வாறு ஒன்றிலொன்றையடக்கி அவ்வறிவைக்காணின் விகற்பமென்பதின்றித் தான்மாத்திரமாய்விளங்கும். இங்ஙனங்காணுவிடத்து அறிவின்விகற்பம் நீங்காவாம். அதுநீங்காவளவுங் கற்பனைஉலகங்கள் உண்மையாகக் காணப்படும். பொன்னைப்பொன்னாகப் பணிகடோறுங் காணுவிடத்துப் பொன்னேபலவேறுவிகற்பப் பணிபேதமிலையாகக் காணுமாறுபோன்று. எ-று.

கூ-ம். அதி. நீத்தார்பெருமை.

அஃதாவது—முற்றத்துறந்த முனிவரது பெருமையைச் சொல்லுதலாம். அவ்வறமுதலாகிய நான்கினையு முலகத்துக்குள்ளவாறு அறிவிப்பவரவாதலா லிது வான்சிறப்பின் பின்வைக்கப்பட்டது.

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.

(இ-ள்.) நூல்களது நிச்சயமானது (தமக்குரிய) வொழுக்கத்திலே நின்று துறந்தவரது மகிமை, மேலான பல பொருள்களுள்ளும் (இதுவே மேலானதென்று) விரும்பும். எ-று.

தமக்குரிய வொழுக்கத்திலே நின்று துறத்தலாவது—தங்கள் தங்கள் வருணாசிரமங்களுக்குரிய ஒழுக்கங்கள் தப்பாமல் நடக்கப் புண்ணியம்வளரும், அதுவளரப் பாவந்தேயும், அதுதேய அறியாமைநீங்கும், அதுநீங்க நித்தியமிது அநித்தியமிது வென்கிற பகுத்தறிவும், நிலையில்லாத இம்மை மறுமையின்பங்களில் வெறுப்பும், பிறவித் துன்பங்களும்தோன்றும், அவைதோன்ற மோக்ஷத்திலாசையுண்டாம், அஃதுண்டாகப் பிறவிக்குக்காரணமாகிய வீண் முயற்சிகளெல்லாநீங்கி மோட்சத்துக்குக் காரணமாகிய யோகமுயற்சியுண்டாம், அவையுண்டாகத் தத்துவஞானம்பிறந்து எனதெனுமமகாரமும், நானென்னுமகங்காரமும் விடும். ஆதலினிவ் விரண்டு பற்றுக்களையும் மிம்முறையே வெறுத்துவிடுதலெனப்படும்.

சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

(இ-ள்.) உலகு—உலகமானது சுவையும், ஒளியும், ஊறும், ஓசையும், நாற்றமுமென்று சொல்லப்பட்ட பஞ்சதன்மாத்திரைகளது கூறுபாட்டை ஆராய்பவனறிவினிடத்தே. எ-று. ஐந்தின்வகையாவன—பஞ்சதன் மாத்திரைகளும், தூலபஞ்சபூதங்களும், ஞானேந்திரியங்களைந்தும், கன்மேந்திரியங்களைந்தும் ஆக இருபதுமாம். வகைதெரிவானென்றதனால்—தெரிகின்றபுருடனும், அவன் தெரிதற்குக் காரணமாகிய மான், அகங்காரம், மனமென்பவையும், அவற்றிற்கு முதலாகிய மூலப்பகுதியும் கொள்ளப்படும். இவ்விருபத்தைந்து தத்துவக்கூட்டமல்ல துலகெனவேறில்லையென்றுலகிருப்பையறிதலா லறிவினிடத்தாயிற்று. இவையே தத்துவஞானமெனப்படும். இதனை "யையஞ்சினப்புறத்தானே". யெனத் திருஞானசம்பந்த சுவாமிகளும் கூறியுள்ளார்.

திருநாவுக்கரசு சுவாமிகள்.

திருவையாறு-558-ப. "தொண்டலாற்றுணையுமில்லை.........கண்டலா தருளுமில்லை கலந்தபின் பிரிவதில்லை." தனிநேரிசை-601-ப. மெய்ம்மையா........."சிவகதிவிளையுமன்றே." 768-ப-சித்தத்தொகை. "தன்னிற்றன்னையறியுந்தலைமகன்." 704-ப-திருவேகம்பம். "சிந்தையுட்சிவமாய்நின்ற செம்மையே." 676-ப-திருவன்னி-ஞானங்காட்டுவர், நன்னெறிகாட்டுவர், தானங்காட்டுவர் தம்மடைந்தார்க்கெலாந், தானங்காட்டித்தன்றாளடைந்தார்கட்கு, வானங்காட்டுவர்போல் வன்னியூரரே.

ஊனினுளுயிரைவாட்டி யுணர்வினார்க்கெளியராகி, வானினுள் வானவர்க்கு மறியலாகாதவஞ்சர் நாணெனிற்றானேயென்னு ஞானத்தார் பத்தர் நெஞ்சிற், றேனுமின்னமுதுமானார் திருச்செம்பொன் பள்ளியாரே."

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1002-ப-வலிவலம். "பந்தித்த........தம்மடியார்க்குச், சிந்தித்தற் கெளியதாய்த்திருப்பாதஞ் சிவலோகந்திறந்தேற்ற வல்லானை." 1016-ப-திருக்கேதாரம். "பறியேசுமந்......யறிவானிலு மறிவானல." 1026-ப-திருவன்பார்த்தான்பனங்காட்டூர். "உரமென்னும் பொருளானை யுருகிலுள்ளுறைவானை." 1029-ப. "ஊனையுற்றுயிராயினீர்". (திருவீழிமிழலை) திருவொற்றியூர். 985-ப. "வழித்தலை உன்னைப்போலென்னைப் பாவிக்கமாட்டேன்." 988-ப. நீரே-மாயமாய மனங்கெடுப்பானை. சிவபரவேறின்மை.

சமாதி.

சிவனும் பரனும் வேறே யென்றியேற் றெரியக் கேணீ
சிவனற் பரத்தின் வேறேற் றெரிந்துகா ரியமத தாகு
மேவிய காரியந்தா னசித்தாகி விளியு மென்போற்
பாவிய கடம்போ லாகி நாசமும் பயமுமுண் டாம்.

சொரூபானந்த சித்தி.

தற்பர னுருவஞ் சித்தே தற்பர னிடையேயக்
கற்பித சிவன் றானும தானக் காலந்தச்
சிற்பொரு ளொன்றே வேறெனின் மற்றது சித்தாமோ
வற்பமும் வேறு காது சிதாகா ரத்தாலே.

மேய்ம்மோழி.

பசுபதி சைத னத்தாற் பகர்ந்திடி னொப்பு மாகா
பசுவவன் பெத்த னாகும் பதியவ னமல னென்றும்
பசுவவன் பாசந் தீர்க்கை பதிதொழி லாகுந் தீர்த்தாற்
பசுபதி பேதஞ் சொல்லிற் பரவைசேர் நதிக ளன்றே.

அ—கை.

அறிவின்விகற்பமே சகத்தாமென் றதையேற்கின் அதனாலுண்டாந் தடைகளைநீக்கற் குபாயங்கூறல்.

அறிவுசகத் தாயி னசத்துசட மாகா
தறிவுக்கு வேறெனினு மாகா—தறிவென்றீர்
என்று லறிவி னிலக்கணங்கண் டந்நெறியில்
நின்றுலப் போதறிவை நீ.

எ-து. அறிவேசகத்தாகப் பரிணமித்ததேனின், அசத்துசடதுக்கரூபமானசகத்துக்கு முதற்காரணமாயுள்ளஅறிவும் அசத்துசடதுக்கரூபமாக

வேண்டுமெனவரும்; வரின்எக்காலத்தும்இருந்து அறிவதாதலின் அங்ஙன மாகாது. ஆகாவிடத்து அறிவுக்குச்சகத்து வேறாகவேண்டுமெனவரும்; வரினும்அறிவுஅபரிச்சின்னமாதலின் அங்ஙனமாகாதெனக்கூறின் யானுய்யு மாறுதான்எங்ஙனே? அறிவினதுஇலக்கணத்தைச் சந்தேகவிபரீதமற விசாரித்துணர்ந்து அந்நெறிக்கண் நிற்பையாயின் யான்மறுத்துரைப்பதனைத்தையும் அப்போதறிவை. எ-று.

அறிவினதிலக்கணத்தையறியாது அறிந்தாற்போற்கூறின் அதனாலுண்டாங்குற்றங்கள் இனையவெனக்கூறுந்தோறும் யாதுரைக்கினும்மறுக்கின்றாரென்னும் வருத்தமுண்டாமென்பதையறிந்து அதனைத்தணிப்பான்வேண்டி அப்போதறிவை நீயெனக்கூறலாயிற்று. ௩௯.

திருமால்பேருமாறீர்த்தச்சருக்கம். ௩௪௧ X ௩௪௮-ப.

மூலவிருண்மலமடியமுகிழ்த்தொளிருஞ்சிவஞானமுடிவைமோனஞ்
சாலவருளினையுளத்துத்தங்காதங்கதுசலனந்தழைத்துமேன்மேற்
கோலுமதிகாரநிலைகூடுதலான்மறந்ததகதுகூடுமாறு
பாலவிழியழன்மதனப்பதங்கமுறக்கதங்கடிந்தோய்பணித்தியென்ன.

என்புகனிந்தின்புருவாயிருவிழியுமருவியினீரிறைப்பவீறி
லன்புருவாய்ப்பரவசனுயானந்தவேலைபடிந்தழுந்தித்தானுந்
தன்பெருமையறியாததன்மையனைச்சராசரங்கடானேயாய
பொன்புரியுஞ்சடையானைவிடையானையுடையானைப்போற்றல்செய்வாம்.

உணருமனுபூதியினுற்றிருவுருவமுணர்ந்தார்களுடலமூன்றிற்
புணருமுயிர்ப்பாவகமற்றழியாதசிதானந்தபோகமாகி
யிணரளிபோற்களியுறுவரித்தகையநினையடைந்தேனெல்லைபோகிக்
குணமகலுங்குறியாயமறையிறையேயினியேதுங்குறையிலேனே.

அறிவரியதினதருளாலவத்தையுயிரபிமானியைந்துகோசம்
பொறியகலுமுலகனைத்தும்பொய்யாகுங்கனவெனவேபோதமாகிச்
செறிவரியபரப்பிரமத்தெளிவாகிச்சூடும்படத்திற்றிகழநோக்கிக்
குறியகலுமறையிறையேயுனையடைந்தேனினியேதுங்குறையிலேனே.

சத்தையிலங்கிடவின்பத்தன்மையுனதேவேறுசகத்ததின்றாம் [க்கம்
பித்தியிற்சித்திரம்போலப்பிறங்குமுன்கண்விச்சையினிற்பிரியாநோ
வைத்தகிலம்பலவாக்கிமாயமெனமதிப்பவர்க்குமாற்றும்வான்பூங்
கொத்திலகுமறைவனத்தாயுனையடைந்தேனினியேதுங்குறையிலேனே.

வேறு.

கண்டேனுனசேவடிகாணலுமே
விண்டேன்மனமாயவிகற்பமெலா

முண்டேனுலகுள்ளனவோருருவாய்ப்
பண்டேமறைதேடியபண்ணவனே.

அளியேனுனதாளளவேயுணரத்
தெளிவாயுலகஞ்சிவமாயதுவே
யொளியேவெளியேயுணர்வேயுணருங்
களியேகதியாகியகண்ணுதலே.

ஏழாஞ்சூத்திரம் முற்றிற்று.

எட்டாஞ் சூத்திரம்.

அவதாரிகை.

அவ்வான்மா பிரஹ்மசொருபமாமென்பதை உருவகித்துமகா வாக்கியங்காரணமாக விச்சூத்திரங்கூறுகின்றது.

எட்டாஞ் சூத்திரம்.

ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
டந்நிய மின்மையி னரன்கழல் செலுமே.

இ-ள். ஐம்புலவேடரினயர்ந்தனைவளர்ந்தென—ஆத்மாவாகியசிறுபிள்ளாய் நீநான்சைதன்யமென்பதைமறந்து அதனால், அஞ்ஞானமாகியவேடச்சேரியை முன்னைவினையாலடைந்தும், வேட்டைவனமாகியஉலகத்தையடைந்தும், வேட்டைநாயாகியஅந்தக்காணவசத்தனாய்த் தசேந்திரியத்துவாரத்தினால் வேட்டைக்காரராகிய தன்மாத்திரைகளோடுங்கூடி வேடக்கோலமான சரீரத்தைத்தழுவிச் சீவாத்மாவென்னுநாமஞ்சிறப்ப வளர்ந்தனையென்று, தவத்தினில்தம்முதல்குருவுமாயுணர்த்த—தானியற்றியநிட்காமிய தவத்திற்கிரங்கித் தன்னுள்ளத்தகலாதுநின்ற ஆண்டவந்தமெய்ப்பொருளே ஞானசிரியவேந்தனுமாய்யெழுந்தருளி ஞானவேட்டையாடுவோன்காலைக்கண்டு, ஜீவராஜவேடப்பிள்ளாய் நீநம்மினத்தாய்; என்வண்ணமேநின்வண்ணம் அவித்தியாகாரியமான அந்நியர்வண்ணம்நின்வண்ணமன்றென மகாவாக்கியஉபதேசம்புரிய, (அது) விட்டந்நியமின்மையினரன்கழல்செலுமே—ஜீவேஸ்வரபேதமாய்நின்றுள்ள வாச்சியார்த்தத்தைக்கையறவிட்டு, எப்போதும்பிரமமேகூடஸ்தனும், கூடஸ்தனேபிரமமாமென்னும்அர்த்தம் ஏகமென்றே அசிபதமானது தவிதநாசத்தைவிளக்கியவண்ணஞ் சிவாநந்தியசாட்சாத்காரத்தைப்பெறும். எ-று.

(ப-ம்) ஆன்மாவாகியநீ தனதெதார்த்தநிலையைவிட்டு மறதிவயத்தனாய் அகமமதையையுற்றனையென்பார் :—ஐம்புலவேடரினயர்ந்தனைவளர்ந்தென, எனவும்,

தனதுள்ளத்தகலாது நின்றுள்ளசிவமே சாதனசதுட்டயபரிபாகத்தின் கண் குருமூர்த்தமாகவெழுந்து அருள்புரிந்ததென்பார் :—தம்முதல்குருவுமாய்த் தவத்தினிலுணர்த்தவெனவும்,

தஞ்சமாங் குருவுஞ் சொன்ன தத்துவ வழிதப் பாமற்
பஞ்ச கோசமுங் கடந்து பாழையுந் தள்ளி யுள்ளிற்
கொஞ்சமா மிருப்பும் விட்டுக் கூடஸ்த பிரம மென்னு
நெஞ்சமு நழுவி யொன்றாய் நின்றபூ ரணத்தைக் கண்டா

னென்பார் :-விட்டநியமின்மையினரன்கழல்செலுமேயென்றுங்கூறினர்.

(போ-ரை.) துக்கநிவர்த்திக்குத் தஞ்சமாய்நின்றுள்ள குருநாதனனுக்கிரகித்த தத்துவசோதனைவழித்தாய்ச்சென்று சிறிதுந்தவறாமல் பஞ்சகோசங்களையு மொவ்வொன்றாகக்கடந்து பாழையுந்தள்ளி :— உள்ளத்தின்கண்ணொழிந்த பற்றுக்களன்றி மிச்சமாகவொதுங்கி மறைந்துநின்ற அற்பவாசனாவிருப்பையும்விட்டுக் கூடஸ்தபிரமமென்னு நினைவும்மெல்லநழுவி :—ஏகமாகப்பிரகாசித்துநின்ற பரிபூரணசைதன்னியத்தை யகக்கண்ணால்தரிசித்தனன்.

தத்துவவழி, தத்துவமசியென்னும் வாக்கியவழியைத்தப்பாமல், கடந்து, தள்ளி, விட்டு, நழுவி, கண்டான்எனமுடிக்க. கொஞ்சமாமிருப்பென்பது போனதொழியமீந்தவாசனை. நழுவுதல்சுத்தசங்கற்பமும் சிறிதுசிறிதகலல். ஒன்றாய்நின்றபூரணத்தைக் கண்டானென்பது திரிபுடியிழப்பைக் காட்டநின்றது மெய்யே. கண்டானென்புழிக் காணுதல்ஞானம், காணப்படுதல்ஞேயம், காண்பான்ஞாதுரு ; இங்ஙனமிருக்கத் திரிபுடியிழப்பென லெங்ஙனங்கூடும்? இதுசொப்பிரகாசத்தின்மகிமை. என்னை, “ அத்துவிதவத்துவைச் சொப்பிரகாசத்தனியை ” என்றார்தாயுமானவர்.

(க-து.) குருநெறிச்சேறலாலாயபயனைக் கண்டனனென்பது. இது தான்ஞானகதப்பிரத்தியட்சமெனப்படுதல். இதனையறியாதார் யென்சொல்லினுமென்னை? இதனைத்தானேதானாக விளங்கலென்பர்சத்துக்கள்.

உ—ம். திருமந்திரம் மகாவாக்கியம்.

சீவ துரியத்துத் தொம்பதஞ் சீவனார்
தாவு பாதுரி யத்தினிற் றற்பத
மேவு சிவதுரி யத்தசி மெய்ப்பத
மேவி விடுந்தத் துவமசி யுண்மையே.

ஆறு றகன்ற வணுக்தோம் பகஞ்சுத்த
மீறுன தற்பத மெய்துப சாந்தத்துப்
பேறு கியசிவ னீங்கிப்பிர சாதத்து
வீறுன தொந்தத் தசிதத்வ மசியே.

தானென் றவனென் றிரண்டென்பர் தத்துவந்
தானென் றவனென் றிரண்டற்ற தன்மையை
தானென் றிரண்டுன்னுர் கேவலத் தானவர்
தானின்றித் தானுகத் தத்துவ சுத்தமே.

ஐம்புலவேடரினயர்ந்தனேவளர்ந்தேனஎன்பதற்கு உ—ம். ஷை.

ஆன்மாவே மைந்த னுயின னென்பது
தான்மா மறையறை தன்மை யறிகில
ரான்மாவே மைந்த னானுக் கிவனென்று
லான்மாவு மில்லையா லையைந்து மில்லையே.

சிவஞானவள்ளலார்.

மன்னையு மறந்து மிக்க வனசர வடிவ மாகித்
தன்னையு மறந்தி ருந்த தனையனைப் போன்று நீயு
மென்னையு மறந்தைம் போத வெயினர்தம் வடிவ மாகி
யுன்னையு மறந்தாய் நீயென் னுருவென வுணர்ந்து கொள்ளே.

சிவஞானசித்தியார் 8-சூ. 1-வது பாட்டு.

மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்தவனை யறியாது மயங்கி நிற்பப்
பின்னவனு மென்மகனீ யென்றவரிற் பிரித்துப்
பெருமையொடுந் தானுக்கிப் பேணு மாபோற்
றுன்னியவைம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையு மறியாது துயருறுந்தொல் லுயிரை
மன்னுமருட் குருவாகி வந்தவரி னீக்கி
மலமகற்றித் தானுக்கி மலரடிக்கீழ் வைப்பன்.

திருமந்திரம்.

எவ்வாறு காண்பா னறிவுதனக் கெல்லை
யவ்வா றருட்செய்வ னுதியான் றானு

மொவ்வாத மன்று ளுமைகாண வாடுஞ்
செவ்வானிற் செய்ய செழுஞ்சுடர்மா ணிக்கம்.

சிவஞானவள்ளலார்.

ஆதி திருநான் மறைமுடியி லறையுந் தத்வ மசியென்றே
யோதி லதுநீ யானுயென் றுரைக்கு மும்மைப் பதமாகப்
போதமுடையோ யிதன்பொருளை யெவ்வா றெடுத்துப் போதிப்பேன்
பேத மகன்ற வுள்ளத்தாற் காணும் பெரிய வாக்கியமே.

கன்னனுன் புளிஞனென்றே கவலையுற் றழுங்குங் காலைக்
கன்னநீ கிராத னன்று கௌந்திபுத் திரனென் றுற்போ
லன்னிய வுடனு னென்றே யயர்ந்துள மழியேன் மைந்த
வன்னிய மென்று கண்ட வறிவுநீ யுணர்ந்து கொள்ளே.

கல்லெலா மெறிந்து மீதிக் கையினை யெறிவா ருண்டோ
சொல்லிய கருவி யெல்லாந் தொலைத்தவன் மீதி யன்றோ
வல்லறீ ரவனே சோதி யாகிய பிரம மாவா
னெல்லையின் மறைக ளெல்லா மிவ்வண முரைக்கு மன்றே.

ஒருவனொரு தேயத்திற் பிரமசரி யாயுற்றான்
மருவிமற்றோர் நாட்டகத்தின் மகிழ்கிரகி யாயினான்
பரவிப்பின்னோர் மண்டலத்திற் பகர்துறவி யாய்நடித்தான்
விரவியகோ லம்போக்கின் வேறில்லை யவனிவனே.

குமாரதேவர் பிரமானுபவ அகவல்.

நானு ரெனவே ஞானநற் குருவை
வினவிடி லித்தகை விளங்கிய பிரமம்
நீயே யென்று நிச்சய மாக
தத்துவ மசிகொடு சாற்றின னன்றே.

சிவமேயாவுமாந்தன்மையெனல்.

திருஞானசம்பந்தசுவாமிகள் திருநாரையூர் 485-ம் ப.

வானமர் தீவளி நீர்நிலனாய் வழங்கும் பழியாகு, மூனம ரின்னுயிர் தீங் குற்ற முறைவாற் பிரிதின்றி." ஷ ஊழியு மின்பமுங் காலமு மாகி யுயருந் தவமாகி, யேழிசை யின்பொருள் வாழும் வாழ்க்கை வினையின் புணர்ப்பாகி, நாழிகை யும்பல ஞாயிறுமாகி நளிர் நாரையூர் தன்னில், வாழியர் மேதகு மைந்தர் செய்யும் வகையின்விளைவாமே."

திருநாவுக்கரசுசுவாமிகள்.

திருஆப்பாடி. 567-ம் ப. "ஆதியு மறிவு மாகி." "சிந்தையுந் தெளிவு மாகி." திருவண்ணாமலை. 585-ம் ப. "உருவமு முயிருமாகி யோதியவுல குக்கெல்லாம், பெருவினை பிறப்பு வீடாய் நின்றவெம் பெருமான்." திருச்சங் காட்டங்குடி 892-ம் ப. "உருகுமனத்......யுண்மைநின்ற, பெருகுநிலைக் குறியாளரறிவுதன்னை." தனித்திருத்தாண்டகம். 907-ம் ப. "நின்னாவார் பிறரின்றி நீயேயானாய்." திருமறுமாற்றத். 912-ம் ப. நிற்பனவு நடப்பனவு நிலனுநீரு நெருப்பினொடு காற்றாகி நெடுவானாகி, யற்பமொடு பெருமையுமா யருமையாகி யன்புடையார்க் கெளிமையதா யளக்களாகாத், தற்பரமாய்ச் சதாசிவமாய்த் தானுமியானுமாகிநின்ற தன்மையனை நன்மையோடும், பொற் புடைய பேசக்கடவோம் பேயர் பேசுவன பேசுதுமோ பிழையற் றேமோ.

திருவானைக்கா. 861-ம் ப. "ஊனாகி யுயிராகி யதனுணின்ற வுணர் வாகிப் பிறவனைத்து நீயாய்நின்றாய்." திருவேகம்பம். 864-ம் ப. பாந்தவன் காண் பல்லுயிர்களாகி யெங்கும்." திருநாகேச்சுரம். 867-ம் ப. துறந் தானை......நீர்நிலந்தீவெளிகாற்றாகி நிற்பனவுநடப்பனவுமாயினானை." முக் கூடல். 872-ம் ப. "ஊனவனையுடலவனை யுயிரானானை யுலகேழுமானானை." திருப்புத்தூர். 881-ம் ப. "புரிந்தமரர்......விரிந்துபலவுயிராகி விளங்கி னான்காண்." திருவலிவலம். 841-ம் ப. ஊனவன்காணுடறனக்கோ ருயி ரானான்காண்." திருவீழிமிழலை 844-ம் ப. "போரானை......பல்லுயிராய் நெடுவெளியாய்ப் பரந்துநின்ற நீரானை." திருப்புள்ளிருக்கும்வேளூர். 850-ம் ப. "மின்னுருவ விண்ணகத்தி லொன்றாய்." "இருளாய வுள்ளத்தி னிருளை நீக்கி......தெருளாத சிந்தைதனைத் தெருட்டித் தன்போற் சிவலோக நெறியறி யச் சிந்தைதந்த, அருளானை."

ஸ்ரீகைலாசம். 851-ம் ப. சில்லுருவாய்......பல்லுயிராய் பார்தோறும் நின்றாய்போற்றி."

திருமுதுகுன்றம். 870-ம் ப. தக்கனது "துறவாதே யாக்கை துறந் தான் றன்னை." திருவாரூர். 808-ம் ப. முன்னமவனுடைய நாமங்கேட்டாண் மூர்த்தி யவனிருக்கும் வண்ணங்கேட்டாள், பின்னையவனுடைய வாரூர் கே ட்டான் பெயர்த்துமவனுக்கே பிச்சியானா, ளன்னையையு மத்தனையு மன்றே நீத்தா ளகன்றா ளகலிடத்தா ராசாரத்தைத், தன்னைமறந்தாடன்னாமங்கெட் டா டலைப்பட்டா ணங்கைதலைவன்றாளே. திருவாலம்பொழில். 895-ம் ப. விரிந்தானைக் குவிந்தானை வேதவித்தை வியன்பிறப்போ டிறப்பாகி நின்றான் றன்னை."

சுந்தரமூர்த்திசுவாமிகள். திருவெண்ணெய்நல்லூர். 915-ம் ப. "ஊனா யுயிரானா யுடலானாய்." அரிசிற்கரைப்புத்தூர். 926-ம் ப. "தரிக்குந்தரை நீர்......சவிதாவியமானனானீர்." திருக்கலயநல்லூர். 936-ம் ப. "இலங்கை யர்கோன்......நிலக்கிளர்நீர் நெருப்பொடுகாற்றாகாயமாகி நிற்பனவும் நடப் பனவாம் நின்மலனூர் வினவிற்."

முற்கூறியமகாவாக்கியத்தின் இலக்கியார்த்தங்கள் இனையவெனக் கூறுகின்றது.

இகலிலா வறிவுமாத் திரமாகி நின்ற
இலக்கியமாம் பிரதமகூ டத்தவுயிர் கொள்ளிற்
புகரிலா வதுவிதுவே யிதுவதுவே யென்னப்
பொருந்துதா தான்மியம்வந் துறுமெனவே யறிக
பகரிலா வசிபதமிவ் விலக்கியார்த் தத்திற்
பரோட்சவப ரோட்சங்கண் மாயாகற் பிதமென்
றுகவிலா துணர்த்தியுறு பதமாமிம் முறைபா
லொன்றாகு மறிவேயுண் டெனல்வாக்கி யார்த்தம்.

(பொ-ரை.) அங்ஙனம்விட்டதனால் முரணெய்தற்கு இடம்பெறாத அறிவுமாத்திரமாக மிஞ்சிநிற்கப்பெற்ற இலட்சியார்த்தமாகப்பிரமத்தையும் பிரத்தியகாத்மாவையும்ஏற்குமிடத்து, குற்றமற்றபிரமங் கூடஸ்தனேயெனவும், கூடஸ்தன்பிரமமேயெனவும் ஏற்றறகியைந்தஐக்கியநிலைமை வந்தடையுமென்றேவிசாரித்தடைதி. சொல்லற்கரியஅசிபதமானது இங்ஙனங்கூறியலட்சியார்த்தத்தில் பரோட்சம்அபரோட்சமென்னப்பட்ட இவ்விரண்டையும் மாயாகற்பிதமென்று, மாறின்றியுணர்த்திநிற்றற்கியைந்த நிலைமையினதாகும் இங்ஙனம்இருப்பதுநோக்கி யிவ்வாறுயநெறியினால் அறிவொன்றேயுண்டெனக்கணிப்பது முற்கூறியமகாவாக்கியார்த்தமெனப்படுவதாம். எ-று.

மகாவாக்கியத்தின்லட்சியார்த்தம் வெளிப்படுத்துவானுதலிய மூன்று இலக்கணையினால் உவமானவுபமேயப்படி தூலமுதலியவற்றிற் சம்பந்தமான காரியவுபாதிகளைவிட்டு, அவத்தாத்திரயவிலட்சணமான சிவதுரியங்கடந்து அதீதமாய்நிற்பதுகூடஸ்தனெனவும், விராட்டுமுதலியவற்றுட்சம்பந்தமான காரணோபாதிகளைவிட்டு, அவற்றிற்காதாரமான பரதுரியமுங்கடந்து அதீதமாய்நிற்பது பிரமமெனவுங்கூறவந்தது இக்கூடஸ்தபிரமஐக்கியமான அத்துவிதஸ்வரூபமே பொருளெனக்காட்டற்கென்க. அதின்சம்பந்தமியாதெனின் கங்கைக்கண்ணுள்ள இடைச்சேரிசத்திக்கின்றதென்னுமிடத்தில் அக்கங்கை சத்திக்குமா? அதன்கரையிலுள்ளஇடைச்சேரியின் சத்தமென்றுகாண்பதுபோல, தூலாதிகளாற்றெரிவிக்கின்றதென்றவசனத்தில் சடமானதேகாதிகள் தெரிவிக்குமாவென்றதனைவிட்டு அதனிடமாயிருந்தசீவன் றெரிவிக்குமெனக்காண்பது விட்டஇலக்கணையெனவும், குந்தஞ்செல்கின்றதென்னில் அக்குந்தந்தனியேசெல்லுமாவென்று அதனைவிடாமற் குந்தத்தைச்சுமப்பவனைக்காண்பதுபோல, ஞானஞ்செல்கின்றதென்னின் அதுதனியேசெல்லுமாவென்று அதனைவிடாமல்அதற்காதாரமான இன்புருவாயீசனைக்காண்பது விடாதஇலக்கணையெனவும்; சோயந்தேவதத்தனென்பது, சோஅவனென்னுமீசனே, அயம்இவனென்னுஞ்சீவன், தேவதத்தனென்பதில் இவ்விரண்டின்ஐக்கியமானவஸ்து, இத்தேவதத்தனை யவ்விரண்டிடத்துங்கூட்

டிச் சோதேவதத்தனென்னின், அங்ஙனமுதையகாலத்தில் காசித்தலத்தில் இல்லறத்தோடுங் கூடியிருந்தவன்போல, விராட்டாகியவற்றிற்கூடியிருந்த ஈசனும், அயந்தேவதத்தனென்னின் இங்ஙனம்அர்த்தசாமத்திற் சிதம்பரத்திற் றுறவோடுங் கூடியிருந்தவன்போலத் தூலாதிகட்குவிலட்சணமாயிருந்தசிவனும் வாச்சியார்த்தமாகவும், உதயார்த்தசாமமென்னுங்காலமும், காசிசிதம்பரமென்னுந்தேசமும், துறவிகிரகஸ்தனென்னும்வேடமுமாய இவ்விருத்த தருமங்களைவிட்டு இவ்விரண்டுகாலத்தும் இவ்விரண்டுதேசத்தும் இவ்விரண்டு வேடத்தும்இருந்து அவ்விருத்தமானஅவனேயிவன், இவனேயவனென்னுமொருபுருடனைக்காண்பதுபோல, அனுக்கிரகஞ்செய்தல அதையடைதலென்னுங்காலமும், அகிலாண்டம்அண்டமென்னுந்தேசமும் சமஷ்டிவியஷ்டியென்னும்வேடமுமாய இவ்விருத்ததருமங்களைவிட்டு அவ்விரண்டுகாலத்தும் இரண்டுதேசத்தும் இரண்டுவேடத்துமுள்ள அவிருத்தமானஅப்பிரமமே இக்கூடஸ்தன், இக்கூடஸ்தனேயப்பிரமமென ஏகமானவிடத்துத் தன்னைவிடாமலஅவைகளைத் தனதுதேஜசாய்விட்டிருத்தல் இலக்கியார்த்தமாகவுங் காண்டலின் இதனைவிட்டுவிடாதஇலக்கணை யெனவுங்கொள்க.

விட்டுவிடாதஇலக்கணை, அருத்தஇலக்கணை, பாகத்தியாகஇலக்கணையென்பன, வொருபொருட்கிளவி. வேடங்களைவிட்டுப் புருடனைவிடாமற்கொள்ளுமிடத்து, அவ்வேடத்தோடுமேபுருடனை யொன்றாகக்காணுதலின் விட்டுவிடாதஇலக்கணையெனவும், அதன்பொருளைமாத்திரங் காட்டுதலின் அருத்தஇலக்கணையெனவும், இவ்விருத்ததருமமாகிய பாகுபாட்டைநீக்குதலின் பாகத்தியாகஇலக்கணையெனவுங்கூறுப.

வினா:—அற்றேல், இவ்வாக்கியார்த்தவிசாரம் இங்ஙனங்கூறிய இருவர்களில் யாவர்க்கு?

விடை:—சீவர்க்கு.

வினா:—அற்றேல், சீவன்தொம்பதத்தைவிசாரித்து அதனால்நீக்கவேண்டிய தூலாதியவத்தைகள் அனைத்தையுமநீக்கி யதனுடன்றனதுசங்கற்பமும் நீங்கநின்றவிடத்திற் சேடித்தகூடஸ்தனே தானாகவிளங்க, மேலிவனுக்குத் தற்பதவிசாரம்யாதுக்கு?

விடை:—இவன்அந்தர்முகத்தில் தூலாதியவத்தைகளனைத்தையும் நீங்கினசீவன்: தனக்குமேல்நின்ற கூடஸ்தனில்அதீதமாய் அதன்மயமாய்நிற்பினும் சீவகூடஸ்தமத்தியிலுள்ள வித்தையாரூபமான பிரகிருதிநீங்காமல் அடங்கிநிற்கும். அங்ஙனம்நின்றுபாகியப்படும்போது அவ்வவத்தைகள்தோன்றும். ஆதலின் அப்பிரகிருதிநசிக்குநிமித்தந் தற்பதசோதனையும்பண்ணவேண்டிற்றென்க. வினா:—அங்ஙனஞ்செய்யாவிடினென்னை? விடை:—பிரகிருதிநசிப்புஞ் சுவானுபவவிலாசமும் மறையுமென்க. வினா:—அங்ஙனமறைதற்குப்பிரமாணமுளதோ? விடை:—சொரூபானந்தத்தில், "தொம்பதத்தினுபாதிகெடச் சொரூபமதா மதுவே தொன்மையதாந் தற்பதசோ தனைசெயவும் வேண்டும், தம்பவுடன் மூன்றினுக்குஞ் சீவனுக்கு முதலாய்ச் சாற்றுதன்

மாத்திரைபகுதி தானுமிருப் பதினு, னம்பரிபூ ரணமறைந்து ஞானமின்றி முனம்போ னுடுமுயிராதலினு னுதனருட் படியே, யிம்பருபா தியும்போய்நிரு பாதிகமா மதனு லெப்பொருளைப் பொருளாகியிருப்பதுதன் னியல்பே" என்பதனுற்காண்க.

வினு :—அற்றேல்இங்ஙனம் தற்பதவிசாரத்தாற் சீவர்க்குப்பயனென்னை ?

விடை :— முன்புதொம்பதவிசாரத்தாலந்தர்முகத்திற் றூலாதிகற்பனு வத்தைகள்சம்பந்தமான வாச்சியார்த்தசொரூப ஜீவத்துவம்நீங்கி லட்சியார்த்தப் பிரத்தியகாத்மஸ்வருபமான கூடஸ்தனுனதுபோலத் தற்பதவிசாரத்தாற் பாகியத்தினுள்ள விராட்டாதியாகத்தோற்று மவத்தைகளின்சம்பந்தமான வாச்சியார்த்தசொரூபமாகியஈசத்துவம்நீங்கி இலட்சியார்த்தமானபிரமமாய் அதுவிதுவென்னுந்துவிதம்நீங்கி யத்துவிதசுத்தசைதன்னியனுன நிரதிசயானந்தமாயும் பிரகிருதிமுதலியயாவுந் தனதுசிற்பிரகாசமாயும் அகம்புறமின்றியசுவானுபவமாயும் விளங்குவதேபயனுமெனவறிக.

இராசனுடையபிள்ளை யொருவேடனிடத்தில்வளர்ந்து அதுகாரணமாக அவன் வேடனெனநினைத்துக்கொண்டிருந்தான்; அச்சமயத்தில் அவன் ராஜனெனத்தெரிந்தஒருவன் அவ்வேடனிடத்துவந்து "நீராஜன்" என்றான். அப்போது அவன்வேடனுயிருந்தவழியானே தான்ராஜனுகஅறியவும் காணவும்அனுபவிக்கவும்விரும்பினுன். பின்னர் அவனை ராஜன்வீட்டிற் கொண்டுபோய்விட, அவன்ராஜன்றானெனத்தீர்மானிக்கப்பட்டுப் பட்டாபிஷேகமாய் ராஜனுய்விட்டான். இதில்கவனிக்கவேண்டியவிஷயம்யாதெனில் வேடனுயிருந்தேஅதின்தவாராதன்னை ராஜனுகஅறியவும்காணவும்அனுபவிக்கவும் விரும்பி ராஜபதவியைஅடைந்தானென்பது. வேடனுய்நின்றராஜன், அவ்வேடவாயிலாகவன்றி வேறுவிதமாகத்தன்னை அறியவும்பார்க்கவும்அனுபவிக்கவும்எப்படிமுடியாதோ, அப்படியே (ஆரோபத்தில்) ஜீவனுய்நின்றபிரமம், தன்னையறியவேண்டின் ஜீவன்வாயிலாகவன்றி அறியவும்பார்க்கவும்அனுபவிக்கவும்முடியாவென்பது.

குமாரதேவர் அத்துவிதவுண்மை.

அரைய குமாரன் புலையருட னணுகி மறந்து மொருவரால்
அரைய குமார னெனவறியி லஃதெப் போது மறவாதின்
றரையி லாசா னெழுந்தருளித் தனைப்பார்த் ததுநீ யெனவுரைக்கின்
புரையி லதுவா மூவவத்தை பொருந்தும் பொழுது மறவானல்.

மகாராஜாதுறவு.

ஒருத்த னேரு ருளனை யொருவேந் தாக்கின் முன்னம்
இருக்கு மிடத்தை நீக்கி யேக ராச தானி

இருக்கு மன்றி முன்க ணிருக்கு மோதான் சொல்லாய்
திருக்கு நாட்ட முடையோர் செகத்தை மெய்யென் றுழலார்.

ஒருவேந்து—ஓரரசன். திருக்கு—அறிவு.

வேதாரணியபுராணம். மாகாசமச்சிய பிராசீனயோக்கியச்சருக்கம்.

வேத நதியின் மேன்மையினுன் மேவி மூன்றும் வியாகிருதி
யோத நான்கு மகசெனும்பே ருற்ற துளத்திற் றெளியவுறப்
போத மேவிப் பூமுதலாப் புகன்ற மூன்று மங்கமதற்
கேத மகன்ற வங்கியது விதுவே பிரம மெலாமுயிர்க்கே.

(இ-பு.) வேதநதியின் மகிமையினுன் மூன்றுவிதமாகிய வியாகிருதி மந்திரங்களை யுணர்ந்துசெபிக்கவே, மகசு (ஒளி) என்னும்பெயரையுடைய நான்காம்வியாகிருதி தோன்றியது. அதைமனத்தாற் சிந்திக்கவே, ஞான முற்பத்தியாகிப் பூலோகம், புவர்லோகம், சுவர்லோகமாகிய மூன்றுவியா கிருதிகளும் அம்மகசுவுக்கங்கங்களாக (ச்சூரியனென்னுமர்த்தத்தைவிளக்கும்) அம்மகசு அங்கியாயது. இம்மகசுவே எவ்வுயிர்க்கும் பிரமமாம். எ-ம்.

அங்க மூன்று மங்கிபர மாவி யாகு மெனப்பேதந்
தங்குந் தியான முறவங்கந் தானே யுலக மூன்றுகுந்
துங்க விரவி மகசாகுஞ் சொற்ற வனல்கால் சூரியனு
மங்க மாயி ஞன்காவ தாகு மதிய மங்கியதாம்.

(இ-பு.) இங்ஙனம் அங்காங்கிபேத தியானந்தோன்றவே, அம்மூன் றுலகங்களும் அங்கங்களாக, அங்கியாகியசூரியன் மகசுவாகும். முற்கூறிய மூன்று வியாகிருதிகளுட் பூலோகம்அக்கினியும், புவர்லோகம்வாயுவும், சுவர் லோகம்சூரியனுமாய் அங்கங்களாக, மகசுவாகியசந்திரன் அங்கியாகும், பர மாவி—பரமான்மா. எ-ம்.

இருக்கு முதன்மூன் றங்கமதா மெல்லை மகப்பூ ரணம்பரமாய்க்
குருக்கும் பிராணன் முதலாகக் குலவி னவற்றி னேதாவாம்
பெருக்கு நனவு முதலாய பிறழ்ச்சி யாயிற் பிறழ்மாயத்
திருக்கு மகற்றுங் கரியாகும் பிரம மகமாந் தேர்ந்திடினே.

(இ-பு.) இருக்குவேதம், யசுர்வேதம், சாமவேதமாகியமூன்றும் அங்கங் களாகும்போது நான்முகப்பிரமமாகிய மகசுவேஅங்கியாகும். பிராணன், அபானன், வியானனுகிய வாயுக்கண்மூன்றும் அங்கங்களாகும்போது அன்ன மாகியமகசு அங்கியாகும். சாக்கிரம், சொப்பனம், சுழுத்திகளாகியமூன்றும் அங்கங்களாகும்போது நான்காவதாகியதுரியமே அங்கியாகும், அம்மூன் றுக்கும் சாட்சியாகுந் துரியமாகியமகசுவே நானானேன். எ-ம். நேதா—நடத்துபவன்.

கூறு மங்கி யலதங்க மில்லை யாகுங் குறியதனாற்
றேறும் பரமா மெனையின்றித் தேடும் பொருளும் வேறில்லை
வேறு வேறு விவர்த்தமுற மேவு மதனால் விளைந்தமுதா
யூறும் பரநா னுலகீச னுயிரு மெனப்பே ருருவாமே.

(இ-பு.) அங்கியின்றி அங்கமில்லையாம். அதனால் அங்கஅங்கிபாவ மிறந்து தெளியும்பிரமமாகிய என்னைத்தவிரத் திரிசியமில்லையாகும். அஞ்ஞானத்தாலவை தோற்றுவது சுத்தியில்வெள்ளிபோல் விவர்த்ததோற்றமே யாகும். அதனால்நாசமில்லாத பூரணப்பிரமமாகியநானே உலகீசனுயிருமெனத் தோற்றும் நாமரூபமாகவுந் தோற்றுவன். எ-ம்.

இன்று மேலு முன்னுமெனை யின்றி யொன்று மிலைக்கருத்தன்
கன்று பயன்றுய்த் திடுவானு மலன்யான் கருமங் கதிமாயை
யொன்று மிலையாற் பந்தமுல குரைமாத் திரையாம் பிறப்பிறப்பு
நன்று தீது மிலையாகு நலமார் பிரம நானெனவே.

(இ-பு.) நன்மைவாய்ந்தபிரமம் நானேயென்று அநுபூதியிற் றெளிந்த மாத்திரத்தில் சங்கற்பிக்கு மென்னைத்தவிர நான்குகாலத்துந் திரிபுடியில்லையாகும். நான்அற்பமேனு மொன்றைச்செய்பவனும், கருமப்பயனாகிய சுகதுக்கங்களை யனுபவிப்பவனுமல்லன். (ஆதலால்) அகமமதையும், நல்வினை தீவினையும், பந்தமோட்சமும், மாயையும் சொற்பனம் கயிற்றரவுபோலில்லையாகும். பிறப்பிறப்பு, நன்மைதீமை, பந்தமோட்சம் உலகமென்பவையெல்லாம் வெறும்பேச்சுமாத்திரமேயாகும். எ-ம்.

இதனைஅத்துவிதமல்லவெனத் தாமேதம்மை வைதிகசைவரென மதிமருட்சியாற்கொள்ளும் துவிததாந்திரிக சைவர்கள்கூறுவர். எங்ஙனமெனின் சங்கரபாஷியத்தை, சுத்தாத்துவிதமார்க்கமாகிய சித்தாந்தசைவ சிவஞானபோத திராவிடமகாபாஷியத்தால் நியாயரீதியாகக் கண்டிக்கப்பட்டொழிந்தமையும், பிறவும்அம்மகாபாஷியம் வல்லார்வாய்ச் சித்தசமாதானத்தோடு கேட்டு உய்த்துணர்ந்துய்களென்றும். சித்தாந்தசைவம்—வேதாந்தமுடிபாகிய சைவம்என்றும். ௩௪௩-ம்பக்கத்திலெழுதியிருக்கின்றனர்.

இவர்மதஸ்தர்கள் சிவஞானபோதப்பேருரையென்னுந் தப்புரையைத் திராவிடமகாபாஷியமென்றும் அதையியற்றினரைத் திராவிடமகா பாஷியக் காரரென்றுஞ் சொல்லிக் கள்ளுண்டார்போற் களித்துக்கொள்வது பரம்பரை வழக்கம்.

சிவஞானபோதமூலத்தை யொத்துக்கொள்ளாமல் இவரினத்தார்செய்த அதன்தப்புரையை மகாபாஷியமென்றுகூறுவது உசிதந்தான் எனெனின் "சடகோபன்பாட்டைநம்பிச் சபைக்கேறாதே" என வைணவர்களுக்குள் பழமொழியொன்றுண்டு; அது அத்துவிதமாயிருப்பதால் அங்ஙனங் கூறற்கிடனாயிற்று. அதுபோலவே யிச்சிவஞானபோதமூலத்தை நம்பி வாதத்திலிறங்கு

வரேலது இவரினத்தாரை நட்டாற்றிற்விட்டுவிடும்; அது அத்வைதமாகியும் துவிதசண்டமாருதமாகியு மிருக்கின் றமையாலெனக.

நாம்இதுவரையிற்காட்டிய சுருதிமுதலிய பிரமாணங்களாலும் யுத்தியனுபவங்களாலும் அவ்வுரை பழுதானதென்று விவேகிகளுணர்வார்கள். சிவஞானபோதத்திற்கு வேதபாஷியகர்த்தரான வித்தியாரணியசுவாமிகள் அத்வைதபக்கமாக வுரைசெய்திருக்கின்றார். இவர்பக்கத்தினர் துவிதபக்கமாக முன்னுக்குப்பின் னுதைத்துக்கொள்ளும்படி யுரையெழுதி யிருக்கின்றனர். இதை அத்வைதிகள் என்சித்தசமாதானத்தோடு கேட்கவேண்டும். இவர்கள் அத்வைதவுரையை வல்லார்வாய்ச் சித்தசமாதானத்தோடும் சம்பிரதாயமாய்க் கேட்கவேண்டுமென்று நியாயமிருந்தும் இவர்என்கேட்கவில்லை? ஆகமங்களின்முடிபாகிய சிவஞானபோதமோ வேதத்தைச்சார்ந்து ஸ்பஷ்டமாய் அத்வைதப்பொருள் விளங்கவும், அதுசுருதியாதி பதினென்குவித்தைகட்கும் ஒத்துப்போகவும், தேவாரதிருவாசக திருமந்திரமுதலியநூல்களு மதற்கிணங்கிப்பேசவும், அல்லாமல் யுத்தியனுபவங்களுக்கும் பொருத்தமாய்ப்போகவும் இவைகளுக்கெல்லாம்மாறுக இவரினத்தவரியற்றிய போலிஅவைதிக தாங்கிரிகவுரையை ஏனோஅத்வைதிகள் சித்தசமாதானத்தோடு கேட்கவேண்டும்? இவர்கள்வாதஞ்செய்பவரிருக்குமூரிலேனுங் குடியிருந்திருப்பாராளுல் முதனூலாகிய பொதுநூல்களை விட்டுவிட்டு இவர்பக்கத்தினரது தப்பிதையையும் வழிபுடைநூல்களையும் யெதிர்ப்பக்ஷத்தாரிடத்திற் காண்பிக்கமுந்துரார்கள். இது கிணற்றுத்தவளை சமுத்திரம் இவ்வளவிருக்குமா இவ்வளவிருக்குமாவென்று கிணற்றிலேயே தாண்டித் தாண்டிக் குதித்துக் காட்டுவதுபோலுமென்றறிக.

திருநாவுக்கரசுசுவாமிகள். ஆதிபுராணம் 772-வது ப.

கூவலாமை குரைகடலாமையைக்
கூவலோடொக்குமோ கடலென்றல்போற்
பாவகாரிகள் பார்ப்பரிதென்பராற்
றேவதேவன்சிவன் பெருந்தன்மையே.

ஸ்ரீ சங்கர விஜயம்.

கரு-வது சருக்கம்.

ஸ்ரீ சங்கராசாரியருக்கும் ஸ்ரீ நீலகண்டாசாரியருக்கும் நடந்த சம்வாதம்.

சமுத்திரதீரத்தை விட்டு க்ஷமையுடையவராகிய ஸ்ரீ சங்கரர் கோகர்ணத்திற்குப் புறப்பட்டார். அவர் அங்குச் சமுத்திரஸ்நானம்செய்து, பார்வதிப்பிரியனுகிய மகாதேவனை யடைந்து, (நான்குயகாரங்களால் புஜங்கப்பிர

யாத மென்று சொல்லப்படு மிலக்கணமுள்ள) புஜங்கப்பிரயாதவிருத்தங்களால், இரம்மியமும் அற்புதப்பொருளுள்ளனவுமாகிய விசித்திரமான ஸ்தோத்திரங்களைச் செய்தார். அத்தோத்திரஞ் செய்த பின்னர், வணக்கமுடையோர்க்கு வேதாந்தவித்தையைச் சொல்லிக்கொண்டிருக்கும் இச்சங்கரரை ஹரதத்தரென்பவர்தெரிந்து, தமதாசிரியராகிய நீலகண்டரிடத்திற் சென்று பகவானே, சங்கரரென்னும் யதியானவர் தேவரீரை வெல்லவேண்டு மென்னும் விருப்புடையவராய்த் தன்வசமாக்கப்பட்ட, பட்டர், மண்டனர் முதலிய சீடர்களுடன் ஸ்ரீ பரமேசுவரனது ஆலயத்தி லிருக்கின்றனரென்றுகூறிய அவர் வாக்கியத்தைக் கேட்டுச் செவ்வையாய்க்கோக்கப்பட்ட அநேகப் பிரபந்தாத்நமாலைகளையுடையவரும், வியாசசூத்திரங்களுக்குச் சிவதத்துவபரமான பாஷியஞ்செய்தவருமாகிய சைவசிரேஷ்டரான நீலகண்டர், புன்னகைகொண்டு இவ்வாக்கியங்களைக் கூறுவாராயினர் :—

இம்முனிவர் சமுத்திரத்தை வற்றச்செய்யினும் செய்க. அல்லது ஆகாயத்தினின்றும் ஆதித்தனை வீழ்த்தினும் வீழ்த்துக. அல்லது வானத்தைப் படம்போற் சுருட்டினும் சுருட்டுக. எவ்வாற்றானும் அவர் என்னைச் சயித்தலிற் சமர்த்தராகார். பரபக்ஷலக்ஷணமான இருளைத்துரப்பதிற் சூரியனாகிய எனது தர்க்கங்களால் இப்போதே அநேகவிதமாய்ப் பீறப்படும் தமதுமதத்தை அவ்வெதியானவர் பார்க்கட்டு மென்று பிதற்றிக்கொண்டு மிகுந்த கோபமுடையவராய் நீலகண்டர் புறப்பட்டார்.

வெள்ளிய விபூதியாற் பூசப்பட்ட அங்கமும் நல்ல உருத்திராக்கமாலைகளால் அலங்கரிக்கப்பட்டகழுத்து முடையவராய்ச் சைவசாத்திரமோதிய சீடர்களாற் சூழப்பட்டுவரும் நீலகண்டரை, யதியாகிய ஸ்ரீ சங்கரர் கண்டார். மகரிஷி சங்கராசாரியரின் சமீபத்திற் சென்று சுகர் தந்தையாகிய ஸ்ரீ வியாசமுநிவராற்செய்யப்பட்ட ஆத்மசாஸ்திரத்திற் (சாரீரகமீமாம்ஸைக்) குமுன் கபிலாசாரியர் தம்சாஸ்திரத்தை ஸ்தாபித்ததுபோல இக்கவியாகிய நீலகண்டர் தமது பக்ஷத்தைச் செவ்வையாய் ஸ்தாபித்தார். நற்புத்திமான்களில் சிரேஷ்டராகிய சுரேசுவரர், பகவானே! அந்த எனது வெளிப்படும் தெளிவான வாக்கியங்களைக் கணமாத்திரம் காண்பீர்களாக என்று தமது ஆசிரியரை நிறுத்தித் தாம் விவாதஞ்செய்தனர். விவாதஞ்செய்யும் சுரேசுவரரைப் பார்த்து நீலகண்டர், சுமதியே! உனது சாமர்த்தியத்தை யானறிவேன் இம்முநிவர்தாமே இதற்கு விடை பகருக என்று யதிசிரேஷ்டரது முகம் நோக்கியிருந்தார்.

பரபக்ஷத்தாமரைத்தண்டுகளை முறித்துத் தின்பதில் அன்னம்போன்ற சொற்களால் அந்நீலகண்ட சிவாசாரியராற் செவ்வையாய்த் தாபிக்கப்பட்ட மதத்தைத் தண்டியாகிய ஸ்ரீ சங்கராசாரியர் கண்டித்தனர். பின்னர் நீலகண்டர் தமது பக்ஷரக்ஷணையை விட்டு அத்வைதத்தை நிராகரிக்க விரும்பியவராய்ப் பேசத்தொடங்கினர். (க)

நீலகண்டர்.

மிருந்தசமமுடையவரே! *க. தத்துவமஸி (அதுநீ) என்றல் முதலிய வேதாந்தங்களுக்கு நீர் சொல்லும் ஜீவேசுர அபேதலக்ஷணமான உமக்கிஷ்டமுள்ள அர்த்தம் யாதோ அது பொருந்தாது. என்னை? இருளொளிகளுக்கு விரோத தர்மமுடையனவா யிருத்தலின் தம்மில் அபேதம் சித்தியாதது போல ஜீவேசுவரர்களுக்கும் *உ. விரோததர்மமுடையனவா யிருத்தலின் அபேதம் பொருந்தாது. (உ)

*க. இது சாமவேத சாந்தோக்கியோபநிஷத்தின் சு-வது பிரபாடகத்துச் சுவேதகேதுவென்னும் புத்திரனுக்கு அவர்பிதாவாகிய உத்தாலகமுநிவரால் ஒன்பதுமுறை உபதேசிக்கப்பட்டது. இதனை விரிவாய் அறியவிரும்புவோர் தமிழில் செய்யப்பட்டுள்ள தத்துவமஸிமகாவாக்கியவுபதேச மென்னும் நூலிற் காண்க.

*உ. அற்பவறிவு, அற்பசக்தி, பாதந்திரத்துவமுதலியனவும், பேரறிவு, பெருஞ்சத்தி, சுவதந்திரத்துவமுதலியனவும் முறையே ஜீவேசுவரர்களிடத்துள்ள விரோததர்மங்களாம் இவற்றை விரிவாயறியவிரும்புவோர் ஸ்ரீ-விசார சந்திரோதயம் கக-வது கலையிற் காண்க.

விரோததர்மமுள்ள சூரியனுக்கும் பிரதிபிம்பத்திற்கும் அபேதம் நிகழ்வதுபோல சிவத்திற்கும் ஜீவனுக்கும் உண்மையாக அபேதம்நிகழ்கவெனின், அவ்வாறு சொல்லலாகாது. என்னை? வியோமசிவாதியாசாரியர்களின் வாக்கியப்படி கண்ணாடியிற்றோற்றும் பிரதிபிம்பம் *ந. மித்தையென் றறியப்படுதலால். (ந)

*ந. பிரதிபிம்பம் மித்தை; பிம்பம் சத்தியம். ஆதலால் பொய்யும் மெய்யும் ஒன்றெனல் எவ்வாறு பொருந்தும்?

கண்ணாடியிலுள்ள முகம் பிம்பமுகத்தினும் பேதமாமென் றருகிலுள்ளார் காண்டலால் பிரதிபிம்பித்த முகம் பொய்யாமென்பது தமது மதாநுசாரமான வார்த்தையாம். (ஆகவே) அபேதமெனல் எவ்வாறு பொருந்தும்? (ச)

மாயிகமான ஜீவனது அறியாமையும் ஈசுவரனது சர்வஞ்ஞத்துவமுமாகிய விருத்ததர்மங்களைப் பாதி (மித்தை யென்று நிச்சயி) க்குங்கால் இரண்டற்கும் சிற்சொருபத்தன்மையால் வேறுபாடின்மையால் அபேதமே வாஸ்தவமாமெனல் கூடாது. (ரு)

நூற்றுக்கணக்கான பிரமாணங்களால் நிலைத்துள்ள விருத்ததர்மங்கட்குப் பாத (பொய்யெனும் நிச்சய) முண்டாகமாட்டாது. அவ்வாறு (கேடுண்டாமென) அங்கீகரிக்கின், பேதம் நீர்வார்த்துவிட்டதாகும். எவ்வாறெனின், விபரீதமான ஆத்தன்மை குதிரைத்தன்மைகளின் பாதத்தால் ஆ குதிரைகட்கு வடிவொற்றுமையுளதா மென்னும் யுக்தியால் பேதம் நீர் வார்த்துவிட்டதாகும் என்பது பொருள். (சு)

பிரத்தியக்ஷாதிப் பிரமாணங்களாற் பெறப்பட்டது கெடுவதில் சம்மதமின்றெனின், யான் ஈசுவரனல்லன் எனப் பிரத்தியக்ஷாதிப் பிரமாணங்களால் பெறப்பட்ட ஜீவேசுவரபேதத்தின் நாசமும் விரும்பத்தக்கதன்று.

இவ்வாறு நூற்றுக்கணக்கான யுக்திகளால் அந்நீலகண்டர் வேதாந்தவாக்கியங்களால் பிரகாசிக்கின்ற அத்வைதமதத்தினை யானைக்கன்று மலர்ந்த தாமரைவனத்தைக் கலக்குவதுபோற் கலக்கினர். (அ)

சங்கரர்.

பின்னர் நீலகண்டராற் சொல்லப்பட்ட தோஷஜால (கூட்ட) ங்களைக் கேட்ட பகவான் ஸ்ரீ சங்கராசாரியர் கூறுகின்றார். இவ்வாறு கூறியது உமதிஷ்டப்படி இருக்குக. தத்துவமஸியென்னும் சம்பிரதாய சுருதிவாக்கியத்திற்குப் *௬. பராவர (பிரஹ்ம) த்தின்கண்ணுள்ள அபிப்பிராயத்தைக்கேளும்.

*௬. பரமாகிய (மேலாகிய) பிரஹ்மாதியர் எவ்வஸ்துவினை நோக்க அவரம் (தாழ்ந்தவர்) ஆகின்றனரோ, அது (பிரஹ்மம்) பராவர மெனப்படும்.

தத்துவமஸிவாக்கியத்தில் *௫. அவனே இவன் என்பதுபோன்ற விருத்தத்தன்மையுணர்ச்சி வாச்சியத்தின்கண்ணுள்ளதாம்; இலக்ஷியத்தின் கண்ணுள்ளதன்று. *௬. பாகலக்ஷணையால் அவ்விரோதம் ஒழியுங்கால் விரோதமின்றிய வாச்சியத்தைக்கொண்டு தத்துவமஸி யென்னும் இரண்டு பதங்கட்கும் ஐக்கியத்தை (சுருதி) வெளிப்படையாகக் கூறுதலால் விரோதமொன்றுமில்லை. (௧௦)

*௫. ஸோயம் தேவதத்த: அவனே இத்தேவதத்தன் என்னும் இலௌகிகவாக்கியத்தில் வாச்சியத்தின்கணுள்ள அந்த இந்த என்னும் விரோத பாகங்களை விட்டு மற்றப்பாகமாகிய தேவதத்தனது சரீரபிண்டமாத்திரம் இலக்ஷணையினல் கொள்ளப்படுகின்றதோ, அவ்வாறே இங்கும் வாச்சியத்துள்ள விரோதபாகத்தினை விட்டு விரோதமின்றிய சேதனமாத்திரத்தினை இலக்ஷணையினற் கொள்ளவேண்டும். இதுவும் விசாரசந்திரோதயமுதலிய நூல்களில் விரிவாய்க் கூறியிருத்தல் காண்க.

*௬. தத்துவமஸிமகாவாக்கியத்திற்கு பாகத்தியாகலக்ஷணையினல் ஐக்கியங்கூறும் சுருதிகளை ஸ்ரீ விசாரசந்திரோதயத்தின் ௧௧-வது கலையில் எடுத்துக்காட்டியிருக்கின்றது. ஆனதுபற்றி அவற்றை விட்டு ஆஸ்திகர்களுக்கு அச்சுருதியின் உபப்பிருஹ்மணமாயுள்ள புராணவாக்கியங்கள் முதலியவற்றுட் சிலவற்றை இங்கு எடுத்துக்காட்டியுள்ளன.

இவ்வாறு கூறியதில் உம்மாற் சொல்லப்பட்ட *௭. அதிப்பிரசங்கமெதுவோ அஃது உண்டாகாது. எதனல் ஆ குதிரைகளிரண்டற்கும் இலக்ஷணையினல் அபேதாநுபூதி யுண்டாகுமோ அத்தன்மைய அவ்விரண்டன், அபேதத்தை யுண்டாக்கும் பிரமாண மின்று. (௧௧)

*௭. ஆத்தன்மை குதிரைத்தன்மைகளை விட்டு ஆ குதிரைகளை ஒன்றெனக்காணல் எங்கும் பிரசித்தமின்மையின் அதிப்பிரசங்க மென்றார்.

நீலகண்டர்.

அவ்வாறாயின்; அவ்விருவருக்கும் அறியாமை முற்றறிவு என்னும் தர்மங்களோடுகூடிய ஜீவேசுவரவடிவங்களின் வேறாகிய இங்கு எதனால் இலக்ஷணையுண்டாகுமோ, அத்தன்மைய அறியப்படும் சொரூபமில்லையே யெனின். (௧௨)

சங்கரர்.

அவ்வாறன்று; செவ்வையாய்க் காணப்படுகின்ற ஜீவேசுவரவடிவம் கற்பிதமா மென்னும் யுக்தியினால் அவ்விரண்டற்கும் அதிஷ்டானமான சத்தியவஸ்துவானது எப்போதும் நியமஞ்செய்தலால் அறியத்தக்கதா யிருத்தலின். (௧௩)

தம்மாலும் அவ்வாறே திருசியதேகாதிகளில் யானெனுந் தன்மையும் அதன்சடத்துவமும் அங்கீகரிக்கப்படுகின்றன. அச்சீவனது பரிசிஷ்டம் (மிஞ்சியது) எதுவோ அவ்வோர் சத்தியவடிவமே அங்கீகரிக்கத்தக்கதாம். (௧௪

கற்பிதமாயிருத்தலின் அசத்தாகிய ஜகத்திற்கு இவ்வாறு *அ. யுக்தியினால் நிரூபிக்கப்படுந்தன்மையின்மையால் அவ்வோர் சத்தியமென்னும் ஈசுவரனதுஜகத்திற்கதிஷ்டானசொரூபமான வடிவம் அவசியம் அங்கீகரிக்கத்தக்கதாம். (௧௫)

*அ. சிற்றறிவுமுதலிய விருத்ததர்மவிசிஷ்டமான ஜீவாதிசொரூபம் கற்பிதம். திருசியமாயிருத்தலால்; இப்பிவெள்ளிமுதலியவற்றைப்போல என்றல் முதலியன. யுக்தி.

அதனால் இங்குச் சுருதியின்கண் அறியப்படுகின்ற *௯. நிருபாதிக இரண்டுசொரூபத்தின்கண்ணும் அறியாமை முற்றறிவு என்னும் இரண்டும் இல்லை; செவ்வரத்தம்பூவினின்றும் பெறப்பட்ட செம்மைக்கு நிருபாதிகமான ஸ்படிகத்தில் பற்றுதலுண்டாதலில்லையாதல்போல. (௧௬)

*௯. மாயை அவித்தையென்னும் உபாதிகளின்றிய. பிரத்தியக்குப் பிரஹ்மசைதன்னியங்க ளிரண்டிலும்.

அன்றியும், பேதபுத்தி யதார்த்தமாயின், பேதமுணர்பவர்கட்குப் பயத்தைச் *௧0. சுருதி சொல்லலாகாது. விபரீதவுணர்ச்சியுள்ளார்க்கே அனர்த்தசம்பந்த மிருக்கின்றது. பேதபுத்தியே விபரீதபுத்தியாகலின் பேதபுத்தி யுண்டாகலாகாது. (௧௭)

*௧0. "இரண்டாவதனால் பயமுண்டாகின்றது" என்பது தைத்திரீய சுருதி.

அப்பேதம் சுருதியின்கண் ணுள்ளதாயினும் யதார்த்தமன்றாதலின் *௧௧. அபேதமுணர்ந்தகாலத்துப் புருஷார்த்தம் கேட்கப்படுகின்றது. யான் சிவ

னல்லன் என்னும் மயக்கத்திற்குச் சந்திரனையளக்கும் புத்திக்குப் பாதமுண்டாதல்போலச் சாஸ்திரத்தால் பாத முண்டாகின்றது. (௧௮)

ஈசாவாஸ்யசுருதி.

*௧௧. எதன்கண் எல்லாப்பூதங்களும் விசேஷமாய் அறிகிறவனுக்கு ஆத்மாவேயாகின்றதோ. அத்தன்மைய ஏகத்துவ மறிகின்றவனுக்கு அங்கு, சோக மேது? மோக மேது? என்பது ஈசாவாஸ்யசுருதி. இவ்வாறு பேதத்தை நிந்தித்து அபேதத்தைப் புகழ்ந்து ஸ்தாபிக்கும் சுருதிகள் அநேகமுள. அவற்றை ஸ்ரீ விசாரசந்திரோதயத்தின் டிப்பணியிலுங்காண்க.

திருமந்திரம். தத்துவமஸிவாக்கியம்.

ஆகிய அச்சோயங் தேவதத் தன்னிடத்
தாகிய விட்டு விடாத லக்கணைத்
தாகுப சாந்தமே தொந்தத் தசியென்ப
வாகிய சீவன் பரன்சிவ னாதமே.

திருமந்திரம். கடுஞ்சுத்தசைவம்.

நானென்றுந் தானென்றும் நாடிநான் சாரவே
தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதந்
தானென்று நானென்ற தத்துவ நல்கலாற்
றானென்று நானென்றுஞ் சாற்ற கில்லேனே.

இவ்வாறிருத்தலான் அவ்வுபாதிகற்பனையின் நாசம் சுருதிசித்தமாம். ஆத்மபரைக்கியஞானத்திற்குப் பாதமில்லை. சுருதியிற்கூறப்பட்ட அப்பேதத்திற்கு எதனால் பாத முண்டாகுமோ அத்தன்மைய வேதத்தினும் பிரபலப்பிரமாணம் யாது காணப்படுகின்றது? (இல்லையென்றபடி.) (௧௯)

நீலகண்டர்.

கபிலர்முதலிய விருடிகளாற் பலவாறு பரமாத்மதத்துவமும் சொல்லப்பட்டிருக்க, அவற்றைவிட்டுத் தம்மால் நிரூபிக்கப்பட்ட இவ்வொன்றே எவ்வாறு கொள்ளத்தக்கதாம்? (௨0)

சங்கரர்.

பிரபலசுருதிப் பிரமாணத்திற்கு விரோதிக்குங்கால் பலமற்ற ஸ்மிருதிவாக்கியங்கள் அங்கீகரிக்கத்தக்கவை யாகாவென்னும் நியாயபலத்தால் வேதத்திற்கு விரோதமான இருடியின்வசனம் பிரமாத்தன்மையை யடையாது (பிராமாண்யமாகாது). (௨௧)

நீலகண்டர்.

அவ்வாருயின், இவ்வாத்மா தேகங்கடோறும் வேரும்; சுகதுக்காதி விசித்திரத்தன்மையைக் காண்டலால். என்னும், யுக்தியோடுகூடிய மகரிஷி வாக்கியம் சுருதியைப்போல மிக மேலானதாகக் கொள்ளத்தக்கதாம். (உஉ)

ஆத்மா வொன்றெனின், அப்போது மிருந்த துக்கமுடையோன் இளமையோடு கூடிய அரசனது சௌக்கியத்தை யடைவன். அன்றியும், இன்னுன் சுகமுடையோன் இன்னுன் துக்கமுடையோனென்னு மநுபூதியு முண்டாகாது; அவற்றிற் கபேதமிருத்தலின். (உங)

ஞானத்தோடுகூடிய இவ்வாத்மாவே கர்த்தா; அசேதனத்திற்குக் கர்த்திருத்துவம் காணப்படுவதில்லை. ஆகையால் போகத்திற்கும் அதுவே (ஆத்மாவே) கர்த்தாவாம். வேறு போக்திருத்துவம் ஒப்பின், (தேவதத்தன் செய்த கர்மபலபோக்திருத்துவம் சோமதத்தனுக்கா மென்னும்) அதிப்பிரசங்கத்தால் தோஷமுடையதாம். (உச)

இங்கு வேதத்தில் அல்லது உலகத்தில் புருஷார்த்த மென்பது துக்கநாசமாம்; சுகப்பிராப்தி யன்று: சகல சுகமும் துக்கத்தோடுகூடியிருத்தலால், விஷங்கலந்த அன்னம்போல, தள்ளப்படுந்தன்மை அதற்கிருத்தலின். புருஷார்த்தத்தன்மையில்லையென்னும் பேதிக்கப்படாத யுக்தியிருத்தலாலெனின்.

சங்கரர்.

அவ்வாறன்று; சுகாதி *கஉ. விசித்திரத்தன்மைக்கு மனதின் தர்மத்தன்மையால் ஆத்மாவை பேதிக்குந்தன்மை எவ்விதத்தாலும் பொருந்தாது. ஆனல் அவ்விசித்திரத்தன்மை மனதிலுள்ள பேதத்தை நிகழ்த்துகின்றது. (அது மனதின்தர்ம மென்பதிலோ காமசங்கற்பமென்னு மிவைமுதலிய சுருதிப்பிரமாணமா மென்பது தாற்பரியம்.) (உரு)

*கஉ. சுகாதி விசித்திரத்தன்மை மனதின்தருமமா யிருத்தலால் மனதைப்பேதிப்பதாகுமேயல்லாது ஆத்மாவை பேதப்படுத்துவதாகாது. இவற்றை ஒன்பதாஞ் சூத்திர மனனத்திற் காண்க.

சைதன்னியச்சேர்க்கைவிசேஷமே அசேதனமாகிய (இரண்டு) தேகத்தின்கண்ணும் கர்த்திருத்துவத்தை நிகழ்த்துவதாம். அதன் (சித்தின், சேர்க்கை விசேஷமின்) றிய புல்முதலியவற்றிற்குக் கர்த்திருத்துவ மின்றென்னும் கற்பனை சுருதியநுகூலமாயிருத்தலின் சிரேஷ்டமாம். (உஎ)

விஷயத்தினின்றெழுந்த சுகம் துக்கத்தோடுகூடியதாயினும், நாசமின்றிய பிரஹ்மசுகம் துக்கத்தோடுகூடியதன்று. "பிரஹ்மத்தின் ஆநந்தத்தினை யறிந்தவன் எதனின்றும் பயப்படான்." "ஒருமையை அறிகிறவனுக்கு மோகமேது? சோகமேது?" என்னு மிவைமுதலியசுருதியால்.) ஆதலால் அதுவே (பிரஹ்மாநந்தத்தின் அடைவே) புருஷார்த்தத்தன்மையதென் றறியத்தக்கதாம். துச்சமாகிய துக்கநாசமாத்திரம் (புருஷார்த்தம்) அன்று. (உஅ)

இவ்வாறு நூற்றுக்கணக்கான யுக்திகளால் நிரூபிக்கப்படும்பொருளினை யுடைய சுருதியைக்காக்கும் கஞ்சுகம் (சட்டை) போன்ற வாக்கியங்களால், யதியாகிய ஸ்ரீ சங்கராசாரியர் தமது அத்வைதமதத்தைச் செவ்வையாய் ஸ்தாபித்துப் பிறராற்செய்யப்பட்ட சாஸ்திரத்துச் சைவமதத்தைத் தாருண மான வசனங்களால் நிராகரித்து ஜயித்தார். (௨௯)

எதிராஜனால் ஜயிக்கப்பட்ட அச்சைவராகிய நீலகண்டர் கருவத்தையும் தமது பாஷியத்தையும் விட்டு, ஹரதத்தர் முதலிய தமது சிஷ்யர்களுடன் அம்மகரிஷியைச் சரணடைந்தார். (௩௦)

யதிசிரேஷ்டரால் வித்துவச்சிரேஷ்டராகிய நீலகண்டர் ஜயிக்கப்பட்டா ரென்பதைக்கேட்டு *௧௪. உதயனாசாரியர் முதலிய கவீந்திரர்கள் மிகத் திடுக்கிட்டு நடுங்கினார்கள். (௩௧)

*௧௪. நியாயகுசுமாஞ்சலி, ஆத்மதத்துவவிவேக முதலிய கிரந்தங்களின் கர்த்தா.

*௧௫. சௌராஷ்டிரமுதலிய அவ்வத்தேசங்களில் தமது பாஷ்யத் தைப் பரவச்செய்து பண்டிதர்களால் துதிக்கப்பட்டவராய்ப் பகவான் ஸ்ரீ சங்கரர் துவாராவதி யென்னும் புரத்திற் பிரவேசித்தார். (௩௨)

*௧௫. இது குஜராத்துதேசத்துள்ளது. இங்குதான் சோதிலிங்கம் பன்னிரண்டில் ஒன்றாகிய சோமநாதம் என்னும் க்ஷேத்திரமிருக்கின்றது.

ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகள் சரித்திரங்கள்.

(1) பிருகத்சங்கரவிஜயம் :—சிஷ்யர் பத்மபாதரெழுதியது.

(2) கேரளீயம் :—கேரளத்திற் சங்கரர் அவதாரகாலத்திருந்த சேரவமி சத்தரசனது ஆஸ்தானபண்டிதராலெழுதியது.

(3) மற்றொரு கேரளீயம் :—சங்கராசாரியர் சிஷ்யர்மடங்களில் திருசிவ புரமடத்திற் பட்டம்பெற்ற வொருவராலெழுதியது.

(4) வியாஸாசலீயம்:—வேதங்களுக்குரைசெய்த மாதவாசாரியரென்னும் வித்தியாரணியராலெழுதியது.

(5) சங்கரவிஜயவிலாசம் :—அவ்வாசாரியர் சிஷ்யமரபில்வந்த சித்விலாச முனிவராலியற்றியது.

(6) சங்கரவிஜயம் :—அனந்தானந்தகிரியாலியற்றியது.

(7) சங்கராப்யுதயம் :—இராஜசூடாமணிதீக்ஷிதராலருளியது.

(8) பதஞ்சலிவிஜயம் :—ஸ்ரீ ராமபத்திரதீக்ஷிதரால்வரையப்பட்டது.

(9) இராஜதரங்கணி:—கல்ஹண பண்டிதரெழுதியது. இதில் விக்கிர மாதித்தனுக்குமுன் சங்கராவதாரங் குறிக்கப்பட்டிருக்கிறது. துவாரகா சிலாசாசனங்களிலுஞ் சங்கரர் திக்குவிஜயம் எழுதியிருக்கின்றது. அனேகங் காவியங்களிலுஞ் சங்கரர் சரித்திரமுண்டு.

தொம்பதஇலக்கியார்த்தமாய கூடஸ்தனதுபதினொருவித பரியாயநாமங்களினையவெனவுணர்த்துகின்றது.

சீவன்மூன்றவஸ்தையிலுந் தனக்குவாய்த்த மூவகையதிஷ்டானன். சேதனன், அந்தரியாமி, விருப்பின்றிய அனுசந்தாத்திரு, சுயஞ்சத்தார்த்தன், அவிச்சின்னசீவன், பாரமார்த்திகன், துரியன், சான்றினன், பிரத்திகான்மா, குற்றமற்ற தொம்பதலட்சியார்த்தன் முதலியவைகூடஸ்தனது பரியாயநாமங்கள்.

விசுவாதி மூன்றினுக்கும் அதிட்டானமாயிருத்தலின் மூவகையதிட்டானனெனவும், அறிவேவடிவாயிருத்தலின் சேதனனெனவும், அகத்தினிறைந்திருத்தலின் அந்தரியாமியெனவும், அவாவின்றியெவற்றினும் அனுசந்தித்திருத்தலின் ஆவலிலனுசந்தாத்திருவெனவும், தானேயுண்மைப்பொருளாயிருத்தலின் சுயஞ்சத்தார்த்தனெனவும், கடாகாயம்போல் தேகத்தால்வளைபட்டிருத்தலின் அவிச்சின்னசீவனெனவும், யதார்த்தமாவிளங்கலின் பாரமார்த்திகனெனவும்' தானேசுயஞ்சித்தாவிளங்கலின் துரியனெனவும், எவற்றிற்குஞ்சாட்சியாவிளங்கலின் சான்றினனெனவும், உபாதித்திரியங்கட்கு விலட்சணமாநிற்றலின் பிரத்திகான்மாவெனவும், நீயென்னும்பதத்தின் நிச்சயப்பொருளாதலின் தொம்பதஇலக்கியார்த்தனெனவுங் கூறியவாறுகாண்க. உபாதித்திரியங்கள்மாறினுந் தான்மாறாதிருத்தலின் மூவகையதிட்டானன்.

தற்பதவிலக்கியார்த்தமானபிரமத்தின் ஆறுவிதபரியாயநாமங்களினையவெனவுணர்த்துகின்றது.

ஈசன்மூன்றவத்தையிலுந் தனக்குவாய்த்த மூவகையதிஷ்டானன், ஒருபரப்பிரமம், பாசமிறந்தபாதத்துவம், பரமான்மா, குணாதீதமானவிசுத்தசித்து, தற்பதலட்சியார்த்தன் இவைபோல்வனபிறவும் பிரமத்திற்குத்தொன்றுதொட்டுவழங்கும் பரியாயநாமங்கள்.

விராட்டாதிமூன்றினுக்கும் அதிஷ்டானமாயிருத்தலின் ஈசனென்றிடு மூவகையதிட்டானனெனவும், ஒப்பற்றபிரமமாதலின் ஒருபரப்பிரமமெனவும், மாயாதீதமாதலின் பாசமில்பாதத்துவமெனவும், மாட்சிமையான ஆன்மாவாதலின் பரமான்மாவெனவும், தாரதம்மியமிறந்த பரிசுத்தசித்தாதலின் படியிலாவிசுத்தசித்தெனவும், அதுவென்னும்பதத்தின் நிச்சயப்பொருளாய் விளங்கலின் தற்பதஇலக்கியார்த்தனெனவும் கூறியவாறுகாண்க. உபாதித்திரியங்கள்மாறினுந் தான்மாறாதிருத்தலின் மூவகையெனவேயுபாதித்திரயமென்றும்.

முற்கூறியகூடஸ்தப்பிரமமென்னுந் துவிதநாமம்இனையவென வுணர்த்துகின்றது.

மண்ணானதுபானைசட்டிமுதலிய பலவேறுவகைப்பட்ட வடிவங்களுக்கியைந்த பெயர்கொண்டுநிற்பதெங்ஙனமோ? அதுபோலவும்; பசியபொன்னொன்றே வேலைத்திறத்தாற்பலவேறுவகைப்பட்ட ஆபரணவடிவங்களாமாறு

போன்றும்; இத்தகையதெனக்கணித்தற்கியைந்த சுகுணமனைத்திற்கு முடன்படாதிறந்துநின்ற சுயஞ்சைதன்யமொன்றே முன்னர்க்கூறிய சீவன் முதலிய பலவேறுவிகற்பங்களாகப் பரிணமித்ததெனத் தொன்றுதொட்டு நீங்கற்கரிய ஆன்மஞானிகள்கணித்தியற்றிய ஞானநூலனைத்துந் திருக்கு விவேகமெனக்கூறுநிற்கும்.

கடமுதலியவிகாரங்கள் மண்ணையன்றியும், கடகமகுடாதியவிகாரங்கள் பொன்னையன்றியுமெங்ஙனமின்றே, அதுபோலச் சகசீவபரவிகற்பவடிவங்கள் ஞப்தியையன்றித் தினைத்துணையுமில்லையெனக்கூறியது புடைபெயர்ச்சிகாரணம்நோக்கியெனின் கர்த்தா, கர்மம், கிரியையகலா; அகலாவிடத்துத் திரிபுடியகலா; அகலாவிடத்துப் பிறவிப்பெருக்ககலா; அகலாவிடத்து மனோநாசமெங்ஙனம்வாய்க்கும்; வாய்த்தற்கிடஞ் சற்றுமின்மையின் அதனை மறுத்து ஏகமேவாத்துவைதம் வாய்த்தற்கு உபாதானவுபாதேயகாரணம் நோக்கியென்க. சகத்துக்கஞ்சியியற்றுவதாதலின் யோகநெறித்துமன்று. அறிவேகாரணகாரியமாய்முடிதலின் ஞானநெறித்தாமென்க.

ஆன்மா: சத்துமுதலிய ஐந்திலக்கணங்களையுமுடையதெனல். அறிவறியாமைபேதங்களிலும், நனவு, நினைவு, கனவு, சுழுத்தி, மூர்ச்சை, மரண முதலியஅவத்தைகளிலுஞ் சைதன்னியமாகியதனக்கோர் வாதையுமில்லாமலிருந்தபடியிருக்கின்றதெனல் சத்தெனப்படுவதாம்; எல்லாஅவத்தைகளிலும் அவ்வவற்றிற்கியைந்தவாறு தோன்றியொடுங்கும்விடயங்களை நின்றறிந்திடுமவசரம்பற்றிச் சித்தெனப்படுவதாம்; பிரியத்திற்குபயனுநிற்கு மவசரம்பற்றியநிலை யாநந்தமெனப்படுவதாம்; நிலையாயுள்ளஎன்றுஞ்சதோதயமாகவிளங்கும் அவசரம்பற்றிநித்தியமாம்; நமதுமனதில்விஸ்மரணைகாரணமாகப் பிரதிபலித்துக்கொண்டுவருஞ் சாதகத்திறத்தினாற் சமஸ்தத்தையுஞ் சம்பந்தித்துக்கொண்டுவரும் அவசரம்பற்றிப் பரிபூரணமெனப்படுவதாம் என்றுநிச்சயிப்பாயாக.

ஆன்மாசத்துமுதலியஐந்திலக்கணமுமுடையதெனக்கூறுதியேல், அவற்றுளானந்த மெவ்வுயிர்க்கண்ணும்விளங்காத காரணமென்னையெனின்; வெப்பமும்பிரகாசமுமே வடிவாயுள்ளஅக்கினியானது, விளக்கின்கண்பிரகாசமொன்றே மேலிட்டுவிளங்காநிற்கும். வெந்நீரின்கண் உட்டணமொன்றே மேலிட்டுவியாபித்திருக்கும். விறகின்கண்வெப்பமும் பிரகாசமுமாகியஇரண்டும் மேலிட்டுவிளங்கும். இங்ஙனமாயநிலைமைபோல், பரிசுத்தமானசத்தெனல்ஒன்றே மலைபுல்பூண்டுவிருட்சமுதலியவைகளில் விளங்கிநிற்கும், கடினப்புத்தியாகிய தாமதகுணத்தின்மூடவிருத்தியின்கண்ணும் ராசதகுணத்தின்கோரவிருத்தியின்கண்ணும் சத்துஞ்சித்துமாகிய விரண்டுமேவிளங்கும், சாத்துவிதகுணத்தின் சாந்தவிருத்தியின்கண் சத்து, சித்து, ஆநந்தமாகிய மூன்றுமேவிளங்கும்.

அறிவறியாமைப்பகுதி யனேகஅடுக்காக மேலுங்கீழும்நிற்பதினாலும், நனவுமுதலிய அவத்தைகள் தத்தமக்குள்மாறினும் இவற்றிற்கெல்லாம் அதிஷ்

டானமாய் நின்றுள்ளசைதன்னிய மிருந்தபடியிருப்பதாற் சத்தெனவும்; ஆங்காங்குவிளையுங் கற்பனைபேதங்களை யதுவதுவானதுபோலாகாது, நின்றறியுந்தகைமைத்தாற் சித்தெனவும், சமஸ்தகற்பிதங்களுந் தனதுபிரதிபலனமாக நிற்க அவ்வவற்றிலெழும்பிரியம் அன்னியமெனக்கருதி லெங்ஙனமேற்கப்படும்? கூடாமையாற் றற்பிரியமேயெனப்படும். படுதல்பற்றியாநந்தமெனவும், இங்ஙனநிகழ்தற்குக்காலவரையறை சற்றுமின்மையினித்தமெனவும், ஆகாயம்போ லெவையுந்தன்னோடுசம்பந்திக்கினுந் தனதுநிராந்தரத்தன்மைக் கிடையூறின்றித்தாக்கற்று நிறைவாயிருத்தலிற் பரிபூரணமெனவுங் கூறியதென்க.

அக்கினியானது தற்கிழமையாக வெப்பத்தையு மொளியையுந்தன்பாலுடையதேனும் விளக்கின்கண்ணும்புனலின்கண்ணும் ஒளியையும்வெப்பத்தையுந் தனித்தனியுடைத்தாயிருந்து விறகின்கண்வெம்மையொளியிரண்டையுங் காட்டுமாறுபோன்று, ஆன்மாவானது தற்கிழமையாகச் சத்துச்சித்தாநந்தத்தைத்தன்பா லியல்பாகவுடையதேனும் மூடவிருத்தியிற்சத்தொன்றையும், கோரவிருத்தியிற்சத்துசித்திரண்டையும், சாந்தவிருத்தியிற்சத்துசித்தாநந்தமூன்றையுங் காட்டுமெனவறிக. அக்கினியானது தனதுவெப்பத்தையும், ஒளியையும்விறகைப்போல் விளக்கின்கண்ணும் புனலின்கண்ணும் ஒருங்குவிளக்குமாயின் ஆன்மாவுந்தனது சச்சிதாநந்தமென்னு மூன்றுகுணங்களையும் சாந்தவிருத்தியைப்போல் மூடவிருத்தியின்கண்ணுங் கோரவிருத்தியின்கண்ணு மொருங்குவிளக்கும். விளக்கின்கண்ணும் புனலின்கண்ணும் வெம்மையொளி ஒருங்குவிளங்காததா லக்கினியின்குற்றமாகுமா? அதுபோலக் கோரவிருத்தியின்கண்ணும் மூடவிருத்தியின்கண்ணும் சச்சிதாநந்தமொருங்குவிளங்காததால் ஆன்மாவின்குற்றமாகுமா? ஆகாதே. விருத்திபேதத்தால் மூன்றுகத்தோன்றுவதேயன்றி ஆன்மாவாலன்றெனவுணர்க. மலைமுதலியவை வளருந்தன்மையிருத்தலினானும் சரித்தலில்லாமையினானும் அசரவுயிரென எவர்க்குந்தோன்றாமைபற்றிச் சத்தொன்றேவிளங்குமென்றும்; ஈரறிவுமுதல்ஐயறிவிறுவாயுள்ளவை சரிக்குந்தன்மைத்தென்றால், சரிக்குந்தன்மையில்லாத மலைபுல்முதலியவற்றை யோரறிவுயிரென்னலாகாதோ? அவற்றைமூடமென்னுதது இப்பி, சங்கு, எறும்பு, கறையான், தும்பி, வண்டு முதலியவைகளைப்பற்றியும், இவற்றைக்கோரவிருத்தியென்னுதது தஸ்மரணைசற்றுமின்றிய வானவர், மக்கள், நரகர், விலங்கு, புள்முதலியவற்றைப்பற்றியும்; இவற்றைச்சாந்தவிருத்தியென்னுதது சிவன்முத்தர், விதேகமுத்தர்களைப்பற்றியுமென்க.

சுப்பிரபோதம்.

சுத்தஞா னத்தா லெய்துந் துகளில்சா யுச்சிய முத்தி
யத்தன்மை யப்பி னப்புப் பாலிற்பா லெய்யி னெய்போன்
மெய்த்தன்மை யுயிர்ப ரத்தின் வேறின்றி யொன்றே யாகு
மத்தன்மை ஞானந் தன்னின் பெருமையை யளக்க லாமோ.

சமாதி.

சுருதியின் முடிவா லிங்ஙன் றுணிதலே ஞானம் வேறு
கருதிய ஞானமெல்லா மஞ்ஞான மாதுங் கண்டாய்
தெரியவிஞ் ஞானந் தன்னின் பெருமையைச் செப்ப லென்னே
யரிதினி யென்னு லுன்ற னனுபவத் தாலே யாகும்.

சிவப்பிரகாச தரிசனம்.

ஞானமுற் கருமந் தானு நவில்வுறிற் புலியு மாடு
மானநற் கருடன் பாம்பு மங்கியும் பஞ்சும் வெய்ய
பானுமற் றிருளு மென்னப் பழுதறச் சிதையுங் கன்ம
ஞானநற் பெருமை யின்ன நவின்மறைத் திறனி னோராய்.

கரும ஞான மிரண்டவ் விரண்டினுங்
கருமம் வேதத்தின் காலி னுழக்குனு
மொருமை நான்மறை யோங்கு சிரத்திலே
யிருமை ஞான மிருக்கவுங் கண்டதே.

கரும மேமுயல் வோரைக் கலைமறை
யிருமை யேவ லிராப்பகல் கொண்டது
பெருமை ஞானியைப் பீடுடை வேதமே
சிரம தாற்றுதி செய்திடும் வேறங்கேள்.

போதரத்நாகரம்.

காரணமா மொருபொருளைக் காணவத்தின் காரியமாம் பலவு மவன் கண்டானாகு, மோரண்மா மண்ணொன்றை யுணரவத்தி னில கிபகா ரியங்களெலா முணர்ந்தாற்போலக், காரணமா யுள்ளசிற் சத் தொன்றத்திற் காரியமா முலகெவைவு மாதலாலே, பூரணமா மொன் றுணர வுலகமெல்லாம் புரையறவே யறிவதுமெய்ப் பொருண்மை காணே.

எட்டாஞ்சூத்திரம் முற்றிற்று.

ஒன்பதாஞ் சூத்திரம்.

அவதாரிகை.

அவ்வான்மா திரிசியநாட்டத்துணரப்படாது பதியறிவைத் திருக்குநாட்டத்திற்கண்டு, பாசமாகியதிருசியத்தைப் பேய்த்தே ரெனவறிந்து நீக்குதற்குச்சாதனமாக ஸ்ரீ பஞ்சாக்கரத்தைச் சாம

வேதமகாவாக்கியநெறியிற் சிந்திக்குமென இச்சூத்திரமுணர்த்துகின்றது.

ஒன்பதாஞ்சூத்திரம்.

ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
யுராத் துனைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே.

(இ-ள்.) ஊனக்கண்பாசமுணராப்பதியை=அஞ்ஞான, ஆவரணசம்பந்தவிசேடக்கண்ணால், (பாசஞானத்தால்) அறியக்கூடாதசிவத்தை, ஞானக்கண்ணினிற்சிந்தைநாடி=சமானக்கண் (அருட்கண்) ணாகியபிரஹ்மாகாரவிருத்திஞானத்தால் தானேதானாகக்கண்டு, உராத்துனைத்தேர்த்தெனப்பாசமொருவ=பிருதிவிதத்துவமுதல் நாததத்துவமீறாகிய பாசசாலங்களைக் கானற்சலம்போல்வதெனக்கண்டு நீக்குதற்கு, தண்ணிழலாம்பதியஞ்செழுத்தைவிதியெண்ணும்=சனனமரணதுன்பமாகிய வெப்பத்திற்குக் குளிர்ந்தநிழல்போலும்அருளையுடைய சிவபெருமானது ஸ்ரீ பஞ்சாக்கரத்தை ஆன்மா சாமவேதமகாவாக்கியமுறைமைப்படி சிந்தித்துத்தெளியும். எ-று.

(ப-ம்.) அருட்டேகமேதனக்குச் சுபாவத்திலுள்ளஆன்மாவானது; சிருட்டிக்குமுன்சுழுத்திபோன்ற ஆணவமலத்திற்கட்டுண்டதுபோற் காண்பது பசுவெனவும்; சிருட்டியிற்சொப்பனம்போன்ற மருட்டேகமான மாயாசரீரத்தைப்பொருந்திச் சஞ்சரிப்பதுபோற்காண்பது சீவனெனவும்பெயர்பெறும்; இந்தப்பசுபாசஞானத்திற்குத் துரியாதீதசிவம்எட்டாதென்பார் :—ஊனக்கண் பாசமுணராப்பதியையெனவும்,

பிராந்தியினாற் கானலாதியிற்றோன்றும் நீராதிகள் அவ்வவற்றிற்குரிய முதற்காரணத்தைக் கண்டவிடத்துத் தடையின்றிநீங்கிவிடுமாறுபோன்று; பிராந்தியுலகமயமாகிய பாசத்திற்குமுதற்காரணமாகியசிவத்தைப் பிரஹ்மாகாரவிருத்திஞானத்தால் தானாகக்கண்டவிடத்துப் பாசமும், பிராந்திமயமாகிய உலகமும்அழியுமென்பார் :—ஞானக்கண்ணினிற்சிந்தைநாடி யுராத்துனைத் தேர்த்தெனப் பாசமொருவ வெனவும்,

அவ்வாறுசிவஞானத்தைப்பெற்றுப் பாசத்தையொழித்தற்குச்சாதனமாக ஆன்மாதுரியத்தில் பிரகாசியாநின்ற பிரணவதேகத்தைப்பொருந்தியபோது அதுரூபாரூபமுதலிய நமஆதியாக; சிவாசுருயுள்ளபஞ்சாக்கரவடிவங்களாதலாலவ்வடிவங்களைத் தத்துவமஸிமகாவாக்கியமுறைமைப்படி யொடுக்கிக்காணிலருட்டனுவைப் பழையபடியேபெற்று அத்துரியாதீதசிவமாய் விளங்கிநிற்குமென்பார் :—தண்ணிழலாம்பதிவிதி யெண்ணுமஞ்செழுத்தே யெனவுங்கூறினார். பதிஅஞ்செழுத்தை விதியெண்ணுமென்றமையின் ஆகமநெறியையும், துனைத்தேர்த்தெனப் பாசமொருவவென்றமையின் வேதாந்தநிச்சயத்தையு முணர்த்தியவாறுமாண்க

திருமந்திரம்.

நாலுஞ் சிகையு முணரார்நின் மூடர்க
ணூலது வேதாந்த நுண்சிகை ஞானமாம்
பாலொன்று மந்தணர் பார்ப்பார் பரமுயி
ரோரொன் றிரண்டு மோங்கார மோதிலே.

தண்ணிழலாம்பதிவிதி யெண்ணுமைந்தெழுத்தேயென்பதற் குதாரணங்கள்வருமாறு.

ஒழிவிலொடுக்கம். நிலையியல்பு.

தாமருந்தல் போலத் தமைச்சிவனுக் கூணாக்கி
தாமருளா லுண்டுபரை தானாகித்—தாமழிய
அஞ்செழுத்தா லர்ச்சித் தடியார்க் கடிமைசெயின்
பஞ்சமலக் கொத்தறு மப்பா.

(இ-ள்.) அஞ்செழுத்தால்=காரணபஞ்சாக்கரத்தினால், அர்ச்சித்து=சிவத்தைப்பூசித்து, அடியார்க்கு=சிவாவேசங்கொண்டசத்துக்களுக்கு, அடிமைசெயின்=அவரறிவின்வசமானால், தாமருந்தல்போல=தானொருவிஷயத்தைப்புசிப்பதுபோல, தமை=சீவனாகியதன்னை, சிவனுக்கு=சிவத்திற்கு, ஊணாக்கி=புசிப்பாகச்செய்து, தாம்=சீவனாகியதான், அருளால்=சிற்சத்தியினால், உண்டு=சிவானந்தத்தைப்புசித்து, பரைதானாகி=அச்சிற்சத்தியேதானாய், தாமழிய=அச்சத்தி சத்திமானாகிய பிரமப்பிரகாசமாய்க் கரைந்தால், பஞ்சமலக்கொத்து=மலமைந்திற்குங் காரணமாகிய மூலாஞ்ஞானம், அறுமப்பா=சத்தாமாத்திரமாய்க் கெடுமப்பா. எ-று.

தாமருந்தல்போலவென்றது: உவமேயத்தைக்காட்டும் உவமானமாம். தாமருந்தல்போலவென்றமையால்:-விஷயத்தையும். தாம்அருளாலுண்டென்றமையால்: சிவத்தையும். பஞ்சாக்கரமெனப் பொதுமையிற்கூறினமையால்: காரணமெனவும். பஞ்சமலக்கொத்தென்றமையால்: மூலாஞ்ஞானமும் வருவிக்கப்பட்டன.

(ப-ம்.) இக்கவியின்முன்புரைக்கு மத்துவிதமானசிரதிசயாநந்தம், பிரசன்னமாக வெளிப்படுத்துநிமித்தம்; ஓர்விடயத்தைப் புசிக்குங்காலத்திற் புசிப்பவனாகியஅறிவானும், புசிக்கப்படுவனவாகிய பொருளுமின்றி யவற்றினெதார்த்தசுக மாத்திரமாய்ச் சீவர்களிருப்பதைத் தாமருந்தல்போலெனவும். தமதானந்தத்தை யதனாதாரமானசிவ மனுபவிக்குமென்பதைத் தமைச்சிவனுக் கூணாக்கியெனவும். தமதறியாமை நீக்கத்திலுதையமான அறிவினாற்சிவானந்த மனுபவிப்பதைத் தாமருளாலுண்டெனவும். அவ்வறிவுதானாயிருப்பதைப் பரைதானாகியெனவும். அவ்வறிவு சிவானந்தமாய்க்கரைந்து சுயம்பிரகாசமாய்விளங்குகலைத் தாமழியவெனவும். நடுநின்றசீவனானவன், தமதிருபாலினும் வியாபித்திருந்த சிற்சத்தியினால், அதினிருபாலினும்வியாபித்திரு

ந்த சிவானந்தத்தைத் தெரிசித்திருப்பதை யஞ்செழுத்தாலர்ச்சித்தெனவும். அங்ஙனமெப்போதுந் தனக்குக்காரணமான தன்னைத்தானருச்சித்திருப்பவர்களானசத்துக்களை யடியாரெனவும். அவரையடுத்து அவரறிவின்வழியொழுகுதலே யடிமைசெயினெனவும். அச்சிவப்பிரகாசமாய் மறைப்பின்றிநிற்றலே ஆணவமலநீக்கமும். எதிரிட்டறிதலின்றித் தன்னைத்தானாகவேயறிதலே மாயாமலநீக்கமும். வேறொன்றைச்சென்றறிதற்குத் தன்னைவிடவேறொருபொருளில்லாமையே கன்மமலநீக்கமும். எப்போதுந்தற்றெரிசனமாய்நிற்றலே திரோதைமலநீக்கமும். எப்போதுந்தான் சொப்பிரகாசமாய்விளங்குதலே மாயாமலநீக்கமும். எப்போதுந்தனக்கு மறதியின்மையானதே மூலாஞ்ஞானநீக்கமுமாதலைப், பஞ்சமலக்கொத்தறுமெனவுங்கூறினர். இந்நூலாசிரியர் ஆகமநெறியா மென்பதுதோன்ற அஞ்செழுத்தா லர்ச்சித்தெனவும். வேதநிச்சயமுடையவரென்பத்தோன்றத் தமைச்சிவத்துக் கூணுக்கித் தாமருளாலுண்டெனவுங்கூறினர்.

நிரதிசயானந்தப் பிரமவஸ்துவானது சர்வவியாபகமாயிருந்து தன்னைநவநவமா யனுபவிக்குநிமித்தந் தனதுசங்கற்பரூபமான சீவத்துவமா யதன்புடைபெயர்ச்சியான வயிரம்பனாதிய பஞ்சவாயுக்களால். ஞானமுதலிய வந்தக்கரணங்களாய்நின்று, பிராணுதிபஞ்ச வாயுக்களாய்ச்சென்று, சுரோத்திராதிஞானேந்திரியங்களினின்று, வாக்காதிகன்மேந்திரியங்களாற்சென்று, சத்தாதிவிஷயங்களை, வாக்காதிகன்மவிஷயங்களால் சகலவிஷயங்களையு மனுபவிக்குமிடத்து இவைகளனைத்தினுந் தனதுவியாபகமான சிற்சுகமாகவே யனுபவித்துக்கொண்டிருப்பதைத் தானருந்தல்போலெனவுங்கொள்க. இவற்றைச் சீவனாதியகருவிக ளனுபவிப்பதாகக்காண்பது பெத்தத்திசையும், இக்கருவிகண்முற்றுஞ் சர்வவியாபகமான சிற்சுகமாய்க்காண்பது முத்தித்திசையுமாம்.

இதற்குதாரணம்.

ஓரரசன்றனக் கெதிரியாயுள்ளவரசனது போகங்களைத் தனதாக்கிக் கொள்ளவந்த கருத்தேயுடஞ்சபையில் சிம்மாசனத்திற்றுவக்கியபோது, அமைச்சனாதி தோட்டியீறாக நிறைந்துள்ளசபையில் யாவருடையசித்தமு மரசனுடையநோக்கத்தைப் பார்த்திருந்தபோது, அரசனது கருத்தான துவெளிப்பட அக்கருத்தின்வழியேஇயாவருஞ் செல்லவேண்டியகருவிகளோடுஞ்சென்று, தெவ்வரசைக்கிரகித்துத் தன்னரசின்கருத்திற் கொப்பிப்பதுபோலுமாம்.

பட்டணத்தார்.

அன்னறன் வீதி யரசிருப் பாது மணிபடையோர்
நண்ணொரு நாலொன்ப தாமவ ரேவனு நண்ணுமிவ்வூர்
துண்ணென் பரிக்கு மடைப்பள்ளி யான சுகமுமெல்லா
மெண்ணிலி கால மவமே விடுத்தன மெண்ணரிதே.

இங்ஙனமிவ்வருந்தலி லத்துவிதானந்த முதையமாமென்பதற்கு.

உதாரணம். ஞானவாசிட்டம்.

வெறியாரும் பொருப்புறைவோர் விழிப்புலத்தின் மேவாதோர் விளம்புகீத, நெறியார்மன் னவன்கேட்ட படியுரைப்ப நெடியவனே நினைவிற்கொள்வா, யறிவானு மறிபொருளுங் கூடியகூட் டரவி லெழு மறிவாநந்தம், பிரியாத வான்மதத்து வத்தெழுந்த தாமதனைப் பேணச்செய்வாம்.

(ப-ம்.) ப்ரக்ஞானமென்பார், அறிவானென்றும். பிரமமென்பார் அறிபொருளென்றும். இவ்விரண்டுங்கூடி நசித்தவிடத்துதித்தது கூடஸ்த பிரமமென்பார், கூட்டரவிலெழுமறிவா நந்தமென்றும். அறிவுஆநந்தமின்றி விளங்காமையால் அவ்வறிவே யாநந்தமும் அறிவையன்றி யாநந்தியாதபடியால் அவ்வாநந்தமே யறிவுமாய்ப் பிரிவற்றுவிளங்கிய தானென்பார், பிரியாதவாத்மதத்துவத் தெழுந்ததாமென்றுங்கூறினர். அறிபொருளென்பதீசனுரு.

சொல்லுநவானுங் கொள்பொருளுங் கூடலுயிர்க்கெல் லாம்பொதுவே
நல்லுமந்தக் கூட்டத்தே ஞானயோகிக் கவதான
முள்ளதேதங் கதுதானே யுபரான்மாவுக் கருச்சனையாந்
தெள்ளுமிந்நோக் கார்சகஞ் சேராமனத்தாற் சகத்துறைவாய்.

(ப-ம்.) ஞாதா ஞேயத்துடன்கூடி யனுபவிக்கும்போதி லவ்விரண்டு நீங்கிச் சுகபோதமாயிருத்த லாத்மாக்களின் சுபாவமென்பார் :—உயிர்க்கெல்லாம் பொதுவென்றும். அதைஞானிகடனது ஸ்வரூபமாக கிரிகிப்பாரென்பார் :—ஞானயோகிக்கவதானமென்றும். அதுவதுவாகவிளங்குமென்பார் :—உளதேதங்கதுதானே யுயரான்மாவுக் கருச்சனையென்றும். இச்சுவானுபவத்தாற் சீவன்முத்தனு, யிராசகாரியங்களைச் செய்வாயென்பார் :—இந்நோக்காற் சகஞ்சேராமனத்தாற் சகத்துறைவாயென்றுங்கூறினர். கருத்து. தனது சுவானுபவத்தைக்கூறி நீயுமப்படியே பூசித்துவிளங்குவாயென்பது.

வினு :—இங்ஙனமருந்தல் ஞானோதயத்திற்குச் சாதனமாகவிருக்குமானு லிவ்வருந்தல்பொருந்தல் ஞானசாதனத்திற் கிடையூறெனச் சுருதிகூறியதென்னை ?

விடை :—ஆத்துமாக்கடனது சங்கற்பத்தினுற் றன்னைமறந்து, அதனுற் றற்றெரிசனமின்றி யவ்வவித்தையிற் கட்டுப்பட்டிருக்கின்றதை வெளிப்படுத்தித் தற்றெரிசனஞ் செய்விக்குநிமித்தம், ஈசுபரன்கருணையினுல்தனுவும்; அதனிடயாகக் கரணமுங்கொடுத்து ; அதற்காகச்சிருட்டித்திருக்கிற புவனத்திலுள்ளபோகங்களை யனுபவிக்கும்போது, அன்னுன்குங்கரைந்து ஆனந்த மாத்திரமாயிருப்பதைத் தானுகக்கண் டிவ்வனுபவமே யாவினிடத்துங்கண் டனுபவித்திருக்கும்படி செய்வித்திருப்பதைச் சுருதிகள்தெரிவித்திருப்ப ;

இஃதாத்மகோடிகளனைவர்க்கும் பொதுவாயிருந்தும்; அதிதீவரபக்குவர் மாத்திர மிவ்வருந்தல்பொருந்தலாகியகாரியந் தனதெதார்த்தமானகாரணத்தை வெளிப்படுத்துஞ் சாதனமெனக்கண் டெப்போதுமனுஷ்டித்துத் தன்னெதார்த்தசுகமே யாவுமாய்க்கண்டு நித்தியதிருத்தி யடைந்திருக்கின்றார்கள். அங்ஙனம்விடையப்புசிப்பி லிரண்டற்றிருந்தும் அதுதோன்றாம லவ்விடையமே சுகமெனக்கண்ட மந்தபக்குவர்களுக்கு அவ்வருந்தல்பொருந்தல்களை நீக்கும்படிசுருதிகள் பூர்வபக்ஷவாக்கியமாகச் சொன்னதென்க. அற்றேலிச்சாதன முக்கியமன்றோவெனின் கெவுணமேயன்றி முக்கியமன்றாம். அஃதெங்ஙனமெனின் ஈசுபரன்கருணையினாலே தேகத்தைக்கொடுத்தது தேகியையறியு நிமித்தமேயன்றி வேறின்றாம். இத்தேகம்வடிவங்கொள்ளும்போதே யதற்குத்தாரகமாக அருந்தல்பொருந்தலையுங் கொடுத்திருக்கின்றார். அவ்வருந்தல் பொருந்தல் தேகபதனபரியந்த நீங்காததலா லவற்றைநீக்கக்கூடாது. அவற்றைநீக்கினாற் றேகமுநீங்கு மித்தேகநீங்கினால் முத்தியடைவதெப்போ, சாகரமுள்ளளவுந் தரங்கநீங்காததுபோலத் தேகமுள்ளளவு மருந்தல்பொருந்த னீங்காவாம். அதுநிற்க: முத்தியடைதற்குச்சாதனமாகத் தேகத்தைக்கொடுத்த வீச னதற்கிடையூறான அருந்தல்பொருந்தல்களைக் கொடுப்பரா இஃதுணரார்க்கு இயாதுகூறினுந்தெளிவரோ? இவ்வருந்தல்பொருந்தலையுடைய தேகமிருக்கும்போதே தேகியைத்தெரிசிக்கவேண்டும். சாகரஸ்நானஞ் செய்பவர்களில் சிலமூடர்களுக்குத் தரங்கந்தடையாயுஞ், சிலபுத்திமான்களுக்கு முற்றுஞ்சகாயமாக விருப்பதுபோல; இத்தேகத்துக்குரித்தான வருந்தல் பொருந்தல் மந்தனுக்கிடையூறாகவுந் தீவரதானுக்குச்சகாயமாகவு மிருக்குமென்க.

வினா :—அற்றேலிங்ஙன மருந்தல்பொருந்தலை நீங்காமன் ஞானம்பெற்றபே றுண்டோவெனின் ?

விடை :—வியாசர், சுகர்முதலான பிரமரிஷிகளும்; சனகாதியான க்ஷத்திரியர்களு மின்னுமனேகம்பேருண் டென்க.

வினா :—அற்றேலிவர்களில் சுகர்முதலியசில ரருந்தலையுஞ் சிலர்பொருந்தலையுநீக்கித் துறவின்கண் முக்திபெற்றனர்க ளென்பதென்னை ?

விடை :—இச்சுகாதியமுனிவர்களு மவற்றைத்துறந்ததேயின்றாம் மஃதெங்ஙனமெனி னருந்தல்பொருந்தலென்பதற்குப் பொருடெரியாதவர்க ளங்ஙனஞ் சொல்வதுபோலு மிருக்கின்றது. அஃதெங்ஙனமெனி னருந்தலிலன்னத்தையும் பொருந்தலின்மின்னாரையு மொப்புக்கொண்டவர்கள் சொல்வதேயன்றி யதனதருத்த முழுதுந்தெரிந்தவர்க ளங்ஙனங்கூறார்கள். அஃதென்னெனின் அன்னத்தைத்துறந்து கந்தமூலங்களைக்கொள்ளினு மவற்றையுந்துறந்து சருகுருநீர் க்ஷீரங்களைக்கொள்ளினு மவற்றையுந்துறந்து வாயு பக்ஷணம்பண்ணியு; மவற்றையுந்துறந்து சமாதியிலமிர்தபானம்பண்ணியு, மிவற்றில்தேகமுள்ளபரியந்தம் யாதாயினுமோ ரருந்தலிருக்குமேயன்றி வேறின்று. பொருந்தலுமித்தேகத்திற் சருமமுள்ளபரியந்த மின்னார்பெருந்தா

னீங்கினும் சிதோஷ்டணமுதலிய பரிசங்கலிருக்குமாகின் அவ்விரண்டு நீங்கவில்லையென்க.

உதாரணம். ஒழிவிலோடுக்கம்.

பூசி முடிப்பனவும் பூண்பதுவும் பொற்றுகிலும்
ஆசை மிகுத்த வரசியற்காங்—காசித்த
முண்டையர்க்கா காசிவன் முத்தருக்கே போகமல்லாற்
குண்டையொப்பார்க் கேனிதுவா கும்.

(க-து.) சிவாநந்தத்திற் காத்மாநந்தமு மாத்மாநந்தத்திற்குச் சிவாநந்தமும் புசிப்பாக வனுபவிக்குங்காலத்தி லிச்சிவபரமான துவிதநீங்கி யத்துவிதமான நிரதிசயாநந்தமே பொருளெனவனுபவிக்கு மிடத்துஞ் சகலமுந் தற்பிரகாசமாய் விளங்குமென்பது.

திருமந்திரம். தூலமாதிபஞ்சாக்கரங்கள்.

ஆரூறு நீங்க நமவாதி யகன்றிட்டு
வேறு கியபரை யாவென்று மெய்ப்பர
னீறுன வாசியிற் கூட்டு மதுவன்றே
தேறுச் சிவாய நமவெனத் தேறிலே.

சிவாய நமவெனச் சித்த மொருக்கி
யவாய மறவே யடிமைய தாக்கி
சிவாய வசிசிவ வென்றென்றே சிந்தை
யவாயங் கெடநிற்க வானந்த மாமே.

சிவன்சத்தி சீவன் செறுமல மாயை
யவஞ்சேர்த்த பாச மலமைந் தகலச்
சிவன்சத்தி தன்னுடன் சீவனர் சேர
வவஞ்சேர்த்த பாச மணுககி லாவே.

அங்கமு மாகம வேதம தோதினு
மெங்கள் பிரானெழுத் தொன்றி லிருப்பது
சங்கைகெட் டவ்வெழுத் தொன்றையுஞ் சாதித்தா
லங்கரை சேர்ந்த வருங்கல மாமே.

பழுத்தன வைந்தும் பழமறை யுள்ளே
விழித்தங் குறங்கும் வினையறிவா ரில்லை
யெழுத்தறி வோமென் றுரைப்பர்க ளேத
ரெழுத்தை யழுத்து மெழுத்தறி யாரே.

திருவாசகம்.

" நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்."

ஔவையார்.

சிவாயநமவென்று சிந்தித்திருப்போர்க், கபாயமொருநாளுமில்லை.

தேவாரம்.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
யோது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாம நமச்சி வாயவே.

பட்டணத்தடிகள்.

மாயநட்போரையுமாயாமலமெனுமாதரையு
வீயவிட்டோட்டிவெளியேபுறப்பட்டுமெய்யருளாந்
தாயுடன்சென்றுபின்றாதையைக்கூடிப்பின்றாயைமறந்
தேயுமதேநிட்டையென்றானெழிற்கச்சியேகம்பனே.

அஞ்சக் கரமெனுங் கோடாலி கொண்டிந்த வைம்புலனும்
வஞ்சப் புலக்கட்டை வேரற வெட்டி வளங்கள் செய்து
விஞ்சத் திருத்திச் சதாசிவ மென்கின்ற வித்தையிட்டுப்
புஞ்சைக் களைபறித் தேன்வளர்த் தேன்சிவ போகத்தையே.

சிவஞானவள்ளலார்.

அஞ்செழுத்துண்மை யறையுங்காலே, சிவாயநமவெனுந் திரு வாக்கியத்திற், சிவமருளான்மா திரோதைமலமிவை, பாந்தளைநவி யாப் பருவிடம்போன்றச், சிவன்றனைமறைபாச் சீவனைமறைக்கு, மதோமுகமாகி லறிவைமயக்கு, மூர்த்தமூர்த்தி னுருவழிந்தனவே.

அருளம்பலத்தி லருணுருவாகிச்
சிகாரப்பிரமந் திரைமலநீங்கி
யகாரவுயிர்தன் னடியிணைசேர்வான்
திருநடஞ்செய்யுந் திருத்தில்லைக்கணே.

பதிபசுபாசவிளக்கம்.

அஞ்செழுத்தினி லொருபுடை யரும்பதி யமரும்
வஞ்சமுற்றுள வொருபுடை பாசமாய் வதியுந்

துஞ்சலின்றிய வொருபுடை பசுவெனத் துலங்கு
மஞ்செழுத்தினின் மும்முத லறிந்தவர் பிறவார்.

பானுவா மிறையெழுத்து வதனொளி பரையெழுத்து
வூனமில் கண்ணேயாகு முயிரொனுந் தனியெழுத்துத்
தீனமில் விளக்கேயாகுஞ் செப்பிய திரையெழுத்து
நானெனு மிருளேயாகு நவையுறு மலவெழுத்தே.

நகரமாகிய சேரியை நஞ்சென வெறுத்து
மகரமாகிய மயலெலாம் வேரொடுங் களைந்து
வகரமாகிய வனத்தினி லிருந்திளைப் பாறிச்
சிகரமாகிய நகரியை யடைந்தனன் சீவன்.

பாசமாகிய விரண்டையும் படிறெனத் தள்ளி
நேசமாகிய விரண்டையு நெஞ்சிடை யழுத்திக்
காசநீங்கிய கண்ணென முத்தியைக் காண்பா
யாசைநீங்கிய நிலையிது விதற்கிலை யையம்.

மந்திர மாவது மஞ்செழுத் தேயந்த மந்திரத்தி
னைந்து பொருளையுங் காட்டி யிரண்டின் வழியடைத்து
முந்து மிரண்டின் வழியைத் திறந்துயர் முத்திதந்தான்
கந்தன் கணபதிக் கப்பன் கவிக்கச்சி யேகம்பனே.

ஒருதலை மாணிக்க முன்ன மெனக்குப தேசஞ்செய்தா
னிருதலை மாணிக்கம் பின்னரும் பேசி யிருளறுத்தா
னரிதலை மற்றை யயன்றலை சூடி யகங்கையின்மூ
வெரிதலைச் சூலத் தொடுநடிப் பான்கச்சி யேகம்பனே.

இங்குபஞ்சாக்ஷரீயென்றது ஸோஹம் (சிவோஹம்) பாவனையாம்; அதுவே பண்டைவாசனையையொழித்துச் சிவாநுபூதியி லழுந்துவிப்பதாகலின் அது அகார, உகார, மகார, பிந்து, நாதமென்னும் ஐந்தெழுத்துவடிவினதாகிய பிரணவமென்னும் ஓங்காரமென்பதும்; சிவாயநமவென்பதுமாம். ஸோஹம்என்பதே ஸகார, ஹகாரஉபாதிகளான மெய்யெழுத்துகளை விட்டபோது ஓம்எனநிற்கின்றது. இவ்விரண்டிற்குஞ் சிவமேயானென்பதுபொருள். சூதசங்கிதைமுதலிய நூல்களினுங்காண்க.

அசபை மூலசித்தி.

அஞ்ச மென்றெழும் வாக்கிய மெவருளு மொளிருமப் பரமத்தின்
றன்சு தந்தரத் தெழுதலி னசபைநற் சயம்புவென் றிடலாகுந்

துஞ்ச லின்றிமு வேழதா யிரத்தறு நூறுகாற் சுவயமேவ
வஞ்ச மின்றிநின் றெழுதரு பதுதனை யுணரவீ டேனும்வேதம்.

தத்துவசாரம்.

அசபை தன்னினின் றெழுதரு முழுவது நிலைபெறு மதின்மாறு
மிசையு மவ்வியல் பதுகொடு வுணர்வலி யோகரு முயல்கின்று
ரசைவி லாதுட னிலைபெற வென்பது வசபையி னினைவன்று
நிசம தாமுயிர் பரத்தினே கத்துவ நிகழ்த்துத னினைவையா.

பூரணப்பிரகாசம்.

அகம தென்றிடு முறையினி னுடன்முத லணுகிய தடையின்றி
மிகுப ரம்பர மாயிடு மிகுபர மதுவக மெனுமத்தாற்
றகவ தொன்றிய பரவுடன் மிடைதரு தகைவற வுளமெய்யா
மிகப ரந்திக ழிதமக மறவெறு மெலையறு சிவமாமால்.

ஆத லாலகம் பிரமமா வதுவென் வசபைநன் மொழியாலே
யேத மின்றிமா வாக்கிய மவாந்தர மிலகிய ப்ரணவத்தாற்
பேத மொன்றற வுரைசெய்த பரிசெனப் பெரியவா தாத்தோடே
யோது கின்றது வுவமைய தறமிகு மொளியுப நிடந்தானே.

அசபை முற்றிற்று.

ஸ்ரீ பஞ்சாக்கரம். ஆனந்தபோதம்.

அஞ்செழுத்தி னரும்பொருளை யறியக்கூறி னுக்கைமனம் பிராணாதி யனைத்தின் வேருய்த், துஞ்சலற வவற்றையுணர் நானேயந் தச்சொல்லிறந்த சுகசசிவமாய் முடிந்ததே னென்கை, யெஞ்சலிலா மறையனந்த கோடியானு மிசைத்திடுதற் கரும்பொருளஞ் செழுத்தாலிங்ஙன், வஞ்சமற வுணர்த்தியநன் மொழியி னுண்மை மதித்துவர் தம் பெருமையினை மதிக்க லாமோ.

இப்பரிசு சிவசீவ ரென்னும் வண்ண மிரண்டெனவங் கிடைக்கிடந்த வுபாதிநீக்கி, மெய்ப்பரிசு கரையிறந்து விளங்கா நின்ற விமல சதா சிவத்தையே மெய்ம்மை காட்டு, மொப்பரிய வஞ்செழுத்தை யிவணமெய்யே யுணர்ந்தவரொண் சிவமானு ருணரா தோயுஞ், செப்புறுவோ ரவர்களுமித் திருநாமத்தின் தேசதனுற் றீயபவஞ் செறு வர் காணே.

ஸ்ரீ அட்டாக்கரம். தத்துவரத்தினவலி.

நாரவெனவெழும்பதத்தின் பொருளைநாடி னரர்முதலாஞ்சீவான்ம பதத்தைக் காட்டு, மோர்வுபெறு மயனாய் வெனும்பதந்தானியாதி னுக்கு முதலாய விறையைக் காட்டும், போதுறு நமவென்ற விரண்டு பாதி பெருகுமமத் துவங்கழிபே ரின்பங் காட்டுஞ், சீரதுறு திருவட்டாக்கரமிவ் வண்ணஞ் சிற்சுகசத் தினையுபதேசித்த தாமே.

திருமந்திரம். உ-ம்.

அகார முயிரே யுகாரம் பரமே
மகாரஞ் சிவமாய் வருமுப் பதத்துச்
சிகாரஞ் சிவமே வகாரம் பரமே
யகார முயிரென் றறைதலு மாமே.

ஊனக்கண்பாச முணராப்பதியை ஞானக்கண்ணினிற் சிந்தைநாடியென்பதற்கு

உ-ம். திருமந்திரம்.

அருட்கண் ணிலாதார்க் கரும்பொரு டோன்று
வருட்கண் ணுளோர்க்கெதிர் தோன்று மரனே
யிருட்கண்ணி னோர்க்கங் கிரவியுந் தோன்று
தெருட்கண்ணி னோர்க்கெங்குஞ் சீரொளி யாமே.

பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்
தன்னை மறைத்தது தன்கர ணங்களாந்
தன்னின் மறைந்தது தன்கர ணங்களே.

மாயை மறைக்க மறைந்த மறைப்பொருண்
மாயை மறைய வெளிப்படு மப்பொருள்
மாயை மறைய மறையவல் லார்கட்குக்
காயமு மில்லைக் கருத்தில்லை தானே.

அறிவா யறியாமை நீங்கி யவனே
பொறிவா யொழிந்தெங்குந் தானான போத
னறிவா யவற்றினுட் டானா யறிவன்
செறிவாகி நின்றவச் சீவனு மாமே.

சீவ னென்னச் சிவனென்ன வேறில்லை
சீவ னார்சிவ னாரை யறிகிலர்
சீவ னார்சிவ னாரை யறிந்தபின்
சீவ னார்சிவ னாயிட் டிருப்பரே.

அத்துவிதவுண்மை.

தன்னைச் சீவனெனத்திரிபாய்த் தானின் றுணர்த லஞ்ஞானம்
தன்னைப் பிரமமெனத்துணிவாய்த் தானின் றுணர்த லேஞானம்
முன்னைத் தொடர்ச்சி விடயமது மூல வரவும் வாதனையும்
பின்னை யொருங்கே யொழிந்துவிடும் பேனல் விடுத லவைவேண்டா.

உராத்துனைத்தேர்த்தெனப்பாசமொருவனென்பதற்கு உ-ம்.

திருமந்திரம்.

பெருக்கப் பிதற்றிலென் பேய்த்தேர் நினைந்தென்
விரித்த பொருட்கெல்லாம் வித்தாவ துள்ளம்
பெருக்கிற் பெருக்குஞ் சுருக்கிற் சுருக்கு
மருத்தமு தத்தனை யாய்ந்துகொள் வார்க்கே.

பாகவதம்.

ஐயமில் லறிவி னாலே யழிவின்றி யகண்ட மாகி
மெய்யெனும் பொருளை நாடி மேவருங் கான னீர்போல்
வையக மாதி யாக வழங்கிய வுலக மெல்லாம்
பொய்யெனு மாயை யாலே பொருந்துமென் றெண்ணல் வேண்டும்.

வேதாந்ததீபிகை.

"உலகமொன்றேயுளது அதுஅழிவதில்லையென்னும் மாணாக்கனை நோக்கி, உலகம்காரியமேயன்றி காரணமல்லவென்றும், காரணமாவது எங்கும்பரிபூரணமான பரவஸ்துவேயென்றும், தாயிடத்துபிள்ளைஎப்படியோ, அப்படியே பரவஸ்துவின்கண் உலகுஉதித்ததென்று ஆசிரியர்கூற, மேலே மாணாக்கனுக்கும் ஆசிரியருக்குமுடக்குஞ் சம்வாதமாவது :—

(மா-ன்.) தாயிடத்துப் பிள்ளைபிறந்ததுபோல் பரவஸ்துவின்கண் உலகுதிக்குமாயின் தாய்வேறுபொருள் பிள்ளைவேறுபொருள்; அன்றியும்இரண்டுங் கண்டப்பொருள்கள், இவ்வுபமானப்பிரகார முவமேயத்தைப்பார்ப்போமானல் பரவஸ்துவுங்கண்டப்பொருள் உலகமுங்கண்டப்பொருளாகின்றன, இதுபரவஸ்து பரிபூரணமென்றுரைத்தற்கு விரோதமாகின்றதே.

(ஆ-ன்.) உலகமேபொருளென்றும் அதற்குக்காரணம் பிறிதொரு பொருளில்லையென்றுங்கூறும் சித்தாந்தத்தை மறுக்கவேண்டி இதற்குமேல் பொருளொன்றுண்டெனத் தாய்பிள்ளையுவமானங் கூறினதேயன்றி அதுவே சித்தாந்தமன்று. பின்னைப் பால்தயிராவதுபோல் பரிணமபக்ஷமாம். தாய்பிள்ளையுவமானத்திலுள்ள கண்டத்துவம்இதிலில்லை. இவ்வுவமானத்திற்கு உவமேயம் பரவஸ்துவேயுலகமாம்.

(மா-ன்.) ஆசிரியரே நிருஷரத்தோஷமில்லாவிடினும் வேறுபெருந் தோஷமுண்டாகின்றது. அஃதியாதெனின் பாலேதயிராவதில், பால்கெட்டுத் தயிராகின்றதென்பதாம். இவ்வுவமானப்படி பரம்கெட்டு உலகாகின்றது. அதனோடுநில்லாது பால்கெட்டுத்தயிரானால்அதுவுங்கெட்டு வேறுவேறாய் முடிவில் இன்னநிலைமைத் தென்றுவரைக்க இயலாமற்போம். அங்ஙனமே பரம்கெட்டு உலகாகி அதுவுங்கெட்டுவேறாய், அதுவுங்கெட்டுமற்றொன்றாகி ஈற்றில்இன்னநிலைமைத்தென்று கூறமுடியாமற்போம்.

(ஆ-ன்.) அஃதுண்மைதான் நாம்அபரிபூரணதோஷம் வாராமற்பொருட்டும் இரண்டுபொருள்களல்லவென்பதற்கும் பால்தயிருவமானங் கூறினதேயன்றி அதுவேசித்தாந்தமாகவன்று. பின்னைமண்கடம்போல் காரணகாரிய பக்ஷமாம். மண்கெடாமல் கடமாவதுபோல் பரவஸ்துகெடாமல் உலகாகின்றது.

(மா-ன்.) இதிலுந்தோஷமில்லாதுபோகவில்லை; மண்விகாரப்பட்டன்றோ கடமாகின்றது. அங்ஙனமே பரம்விகாரப்பட்டன்றோ உலகாகவேண்டும், நிர்விகாரமானபரத்துக்கு விகாரத்துவங்கற்பிப்பது நியாயமன்றே.

(ஆ-ன்.) உண்மைதான். பால்கெட்டுத் தயிராவதுபோல் மண்கெட்டுக் கடமாவதில்லையென்பதற்கும், தயிர்மீண்டும் பாலாகாமைபோலன்றிக் கடமீண்டு மண்ணாகுமென்பதற்கும் இவ்வுவமானமேயன்றி வேறன்று. இனி விகாரப்படாத வுவமானமுரைக்கின்றோம். அஃதாவது சூரியனும் பிரதிபிம்ப சூரியனும்போல, சூரியன்விகாரப்படாமல் எப்படிப்பிரதிபிம்பிக்கின்றானோ அப்படியேபரமும் விகாரப்படாமல் பிரதிபிம்பிக்கின்றது.

(மா-ன்.) இதிலுஞ் சங்கையில்லாமற் போகவில்லை; பிம்பப்பொருள் பிரதிபிம்பிக்கிறதற்கு ஆதாரமொன்றுவேண்டும். (ஜலம்போல்) எதுமற்றொரு ஆதாரத்தில் பிரதிபிம்பிக்கிறதோ அது அபரிபூரணப்பொருளாயிருக்க வேண்டுமேயன்றி, ஓர்போதும் பரிபூரணப்பொருளாகாது. ஜலத்தில்பிரதிபிம்பிக்கும் சூரியனும், கண்ணாடியிற் பிரதிபிம்பிக்கும் நமதுமுகமும் பரிபூரணப்பொருளாமா? சூரியனுநமதுமுகமும் ஒருஇடத்திலும் ஜலமும்கண்ணாடியும் பிறிதோரிடத்திலும் இருக்கின்றமையால், பிம்பப்பிரதிபிம்பவுவமானம் அபரிபூரணப்பொருளுக்கே பொருந்துமென்றவாறாயிற்று. இவ்வுவமானப் பிரகாரம் பரம்அபரிபூரணப்பொருளாகின்றது.

(ஆ-ன்.) பிம்பப்பிரதிபிம்பதிருஷ்டாந்தம் பரவஸ்து விகாரப்படுவதில்லையென்பதற்கு மாத்திரமே. இனிஅபரிபூரணதோஷ மில்லாமைக்கு வேறுதிருஷ்டாந்த முரைக்கின்றோம். அதுகயிற்றிற்பாம்பும், கிளிஞ்சிலில் வெள்ளியும் எப்படித்தோற்றமோ, அப்படியே பரத்தினிடத்துச் சிற்சடமாகிய வுலகு தோற்றமேயாம்.

(மா-ன்.) இதிலும்வினாநிகழ்கின்றது; கயிற்றைத்தவிர பாம்பில்லையெனத்தெளியின் பின்னர்பாம்புதோற்றுவதில்லை, உலகுகாரணத்தையன்றி

25

யில்லையென்றுணரினும் மீண்டுந்தோற்றுகின்றது. அதாவது மண்ணையன்றிக்கடமென்னும்பொருளின்றெனஆய்ந்தறியினும் பெயர்த்துந்தோற்றுவதைப் பார்க்கின்றோமன்றோ?

(ஆ-ன்.) உலகம்பொருளல்ல வென்பதற்குமாத்திரம் கயிற்றிற்பாம்பும் கிளிஞ்சிலில்வெள்ளியும் திருஷ்டாந்தமேயன்றி முற்றுமல்ல. இனியந்தத் தோஷமும்வாராமற் பரிகரிக்கின்றோம். அஃதியாதெனின், கானனீராம். கானலையன்றிநீர் முக்காலத்து மின்றெனத்துணியினும் மீண்டுந்தோற்றிக் கொண்டே யிருக்கின்றது, அதுபோலுலகம் அசத்தெனத்துணியினும் தோற்றிக்கொண்டேதானிருக்கும்.

(மா-ன்.) கானலினிடத்து நீரில்லையென்று தெளிந்தபின்னர்த் தோற்றினும் அது அநுபவத்திற்குவருவதில்லை; அஃதாவது நீர்அருந்தலாதிக்குதவுவதில்லை. உலகோஅவ்வாறன்று; பஞ்சேந்திரியங்களால் அநுபவிக்கப்படுகின்றன; ஆதலினித் திருஷ்டாந்தம்பொருத்தமுறாது.

(ஆ-ன்.) உலகம்அசத்தென்றுணரினும் பெயர்த்துந்தோற்றுமென்பது வரையில்மாத்திரம் கானனீர்திருஷ்டாந்தம். மற்றநுபவமாகின்றதைப்பற்றி வேறுதிருஷ்டாந்தங்கூறுவோம்: அஃதாவது சந்நிபாததோஷத்திற் காணுமுலகும், சொப்பனவுலகும் போலவாம். அவற்றிற்காணுமுலகு தோற்றமேனும் அநுபவத்தோடுங்கூடிய தோற்றமாம்.

திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகளு மிவ்வாறு நெஞ்சுவிடுதூதில் கூறியிருக்கின்றார். அதுவும் வருமாறு.

—சுகசொரூபம்

ஒன்றென்றே சொன்ன வுலகமே தென்றிடவே
நின்ற பழுதையிடை நீளரவம்—மன்ற
வுதிக்குமா றப்பொருளி லுண்டாமென் றோத
விதித்த பழுதை விளங்கின்—மதித்தபாம்
பேகு மதுபோ லெழிற்சிவங்கண் டும்முலக
மோகாதி தோற்ற லெனையென்ன—மோகமறக்
கானலினீ ரில்லையெனக் கண்டும்நீர் தோன்றுதல்போல்
ஈனமில்பொய் யாத்தோற்று மென்றிசைப்ப—வான
பழுதையினிற் பாம்பும் பகர்கான னீரும்
எழுமே தகையா யிவைதாங்—குழுமியே
நானுவா யோர்பொருளில் நண்ணுவதே தென்றிசைப்ப
ஆனது பொன்மண்ணி லாபரண—நானு
கடமாதி தோன்றுமொரு காரணம்போற் றோற்றுந்
திடமாநீ காணென்று செப்பத்—திடவான்

ஒருவன் றெழிலா னுளவா மிவைதாம்
மருவுமிவை யாவரால் வந்த—துரையெனவே
விண்ணிலிடைப் பீலி வெயிற்குஞ்சந் தோன்றுவபோல்
நண்ணு மெனவே நயந்துரைப்ப—என்னுமவை
பற்பலவா னாலும் பகருருவொன் றாமிவைதாந்
துப்புடைநா னுவுருவாய்த் தோற்றுவதென்—செப்புகெனக்
காந்தருவ மாநகர்போற் காணெனவே யந்நகர்தான்
போந்தவிவ காரமின்றுப் பொய்யாகும்—ஏய்ந்த
இவற்றுள் விவகார மேய்வதெவ னென்னக்
கவற்றுள் கனவு விவகாரம்—நவிற்றுதல்போல்
ஆமென் றுரைப்ப வதுநினைவின் வாதனையாந்
தோமுறுபொய் வாதனைதான் றாய்தாப—சேமப்
பொருட்கேதெனவந்தப் பூரணத்திற் றோன்றுந்
தருக்க நினைவாகுந் தானென்—றுரைப்ப
அதற்கு நினைவெழுமோ யாதென்று கேட்பக்
கதித்த கனலீலை கண்டாய்—இதைப்பொய்யென்
றுன்னுது கேட்டி யுளஞ்சற் றசைந்தக்கால்
முன்னும் பாமுயிர்கண் மொய்த்தெழுந்த—மன்னு
உலகமிவை தோன்று முளமிறந்தா லிந்தக்
கலகமெலாம் பொய்யாய்க் கனதை—யிலகியதோர்
மெய்யொன்றே யாகு மிளிரு முளத்துருவம்
நையா வுருவமொடு நாமமாம்—பொய்யுளந்தான்
உன்னினைவு தீதென்றே யூகத்தா னேக்குமிடத்
தந்நினைவு நாமவுரு வாகுங்காண்—அந்நினைவு
கோடி கணத்திற் குதித்தெழலா லிவ்வுலகு
நாடற் கருவுருவ நாமமாய்—பீடுபெறத்
தோற்று நினைவைத் துணித்தாற்சற் சிற்சுகமே
மாற்றற் கரிதாய் வயங்கலுறும்—சாற்றுமிதால்
உள்ளமே யிவ்வுலகா மிவ்வுலகே யுள்ளமாம்
உள்ளமலா தேயுலக மொன்றில்லை—யுள்ளே
மதுரந் தருஞ்சாத்தன் வன்கோயின் முன்னே
சதுரங்க மாபலமாத் தங்கும்—குதிரைகரி
தோா ளெனும்பெயருஞ் செப்பியபேர் கொள்ளுருவும்
நேராது பொய்யென்று நீக்கியே—தேருமிடத்

துற்றிடுமுக் காலத்து முள்ளமண்ணே மற்றெல்லாம்
வெற்றவெறும் பொய்யாய் விடுமிவைபோற்—சொற்ற
பெயருருவ மானவெல்லாம் பேணுது நீக்கிற்
செயிராறுசித் தொன்றே திகழும்.

அத்தோய்தபோததீபிகை.

இந்நாளனென்கின்ற அகம்விருத்தியாகிற சத்தியானது சன்னிபாதத்தை யடைந்தவன், மத்தியபானம்பண்ணினவன், உன்மத்தன், நித்திரைபண்ணு கிறவன், பேய்பிடித்தவன் ஆகியவிவர்கள் தங்களை விபரீதமாய்க் காண்கிறது போல: சாக்ஷியுந் தான் அசங்கராய் நிர்விகாரியாய்இருந்தாலும் அந்தத்துரகங் காரமாகிற பிசாசினாலே யாலிங்கனம்பண்ணப்பட்டு அதினாலே தான்றானே நானென்று விகாரியானவர்போலேஆனார்.

இந்நானென்கிற அகம்விருத்தியாகிற சத்தியானது சாக்ஷியைத்தா னிப்படி விகாரியாய்த் தோற்றுவிக்கிறதோ அல்லதுசாக்ஷியினிடத்திலே தான் றானிப்படி நானென்றுவிகாரியாய்த் தோற்றுகிறதோ என்றசீடனுக்கு.

ஆத்மாவைத்தவிரத் தனக்குவேறே சொரூபமில்லாமற் போகிறபடியி னாலே தான்றானே தோன்றமாட்டாது. பின்னையோவென்றாற்; றனக் கதிஷ்டானமான ஆத்மாவைத்தானே விகாரிபோற் காண்பிக்கிறது அஃதெப் படியெனில் ரச்சுவிலேயிருக்கிற சத்தியானது தான்றானே சர்ப்பமாய்த் தோன்றமாட்டாமல் ரச்சுவைத்தானே சர்ப்பம்போலெப்படித் தோற்றுவிக் கிறதோ, அதுபோலவும்; இன்னும் ஜலசத்தி, அக்கினிசத்தி, மிருத்திசத்தி யைப்போலவுஞ் சாக்ஷியினிடத்திலே யிருக்கிறமாயையும் ஆத்மாவைத்தவிரச் சொரூபமில்லாதபடியினாலே ஆத்மாவைத்தானே விகாரிபோல் நானென்று சீவனாய்த் தோற்றுவிக்கிறது.

ஆத்மா அசங்கர் ஆகாசம்போ லொருவிகாரமுமன்றியிலே நிர்விகாரி யன்றோ? அப்படிப்பட்டவரை மாயையெப்படி விகாரியாய்ச் சீவனாய்ப்பண் ணும், இது, ஆகாயத்தைப் புருடாகாரமாய்ச்செய்தலும் வாயுவைக்குதிர்செய் தலுங் கூடாதவாறுபோ லசங்கதமா மிதனைச்சந்தேகமறத் தெளிவிக்கவேண்டு மென்ற மாணுக்கனுக்காசிரியர் கூறுவதாவது.

கூடாததைக் கூட்டிவைக்கிறது மாயைக்குச்சுபாவந்தானே : இல்லாமற் போனாலதற்குமாயாசத்தியென்கிறபெயரே இல்லாமற்போகும் இல்லாததை உண்டானதுபோலத் தோற்றுவிக்கிற சாமர்த்தியத்திற்கே மாயாசத்தியென்று நாமம். நிராலம்பமாயிருக்கிறஆகாசமத்தியிலே கந்தருவநகரத்தைத் தோற்று விக்கிற இந்திரஜாலக்காரனுடைய சாமர்த்தியத்திற்கு மாயையென்று எப்ப டிப்பேருண்டாயிற்றோ அஃதெப்படிக் கூடாததைக்கூட்டிவைக்கிறதோ அது போலிந்த மாயாசத்தியுங் கூடாததைக் கூட்டிவைக்குமென்றறி.

இனிமுடிந்த திருஷ்டாந்தமேதென்றால் நித்திராசத்தியும் சொற்பனமு மென்றறி : அஃதெப்படியெனின் ஒருஜீவனிடத்திலேயிருக்கிற நித்திரா

சத்தி கூடாதசொற்பனங்களைக் கற்பிக்கின்றது அதுகிரகத்துக்குள்ளே நித்திரைசெய்கிறபுருடன் சொற்பனத்திலே பசுபட்சிமிருகாகாரமாய் நானாவித திக்கெல்லாம்போய்ப் பிரமிக்கிறான், இன்னுங்காசியிலுஞ் சேதுவிலும்போய் அலைகிறவனைத் தோற்றுகிறது, ஆகாசத்திலே பறக்கிறவனாகவும் தலைகீழாய் விழுகிறவனாகவும், தன்தலையைவெட்டித் தன்கையிலே கொண்டுபோகிறவனாகவும் கூடாததைக்காண்கிறான், இதுயுக்தமிப்படிக்காணலாம் இதுஅயுக்தமிப்படிக்காணலாகாதென்கிறதில்லை அதிலேயெப்படியெப்படிக் காண்கிறானோ வதுவதுவே யுக்தமென்கிறதொழிய ஒருவிவஸ்தையுமில்லை இப்படியற்பமாயிருக்கிற வொருநித்திராசத்திக்கே கூடாததைக்கூட்டிவைக்கிற மகிமையுண்டானால் மஹாமாயாசக்திக் கிப்படிப்பட்ட அநிர்வசநீயமாயிருக்கிற மகிமையுண்டாமென்கிறதிலே யென்னவாச்சரியம் கூடாததைக்கூட்டிவைக்கிறதே மாயைக்குச்சொரூபம். உ-ம். காதிகனதயாதி.

வாரீர்ஏகுரோ யிப்படிச் சொற்பனசமானமாய் சாக்கிரத்தும் பிராந்தியென்று சொல்லுகிறதெப்படி ? சொற்பனமானது வாசனாமயமாய்த்தோற்றி க்ஷணத்திலே யசத்தியமாய் நசித்துப்போகிறபடியினாலே யதைப்பிராந்தியெனல்யுக்தம் அங்ஙனமின்றிப் பிரமாணமூலமாய்ச் சத்தியமாய்த்தோற்றுகிற சாக்கிரத்தைப் பிராந்தியென்கிறதெப்படிக் கூடுமெனின்.

சாக்கிரத்துப் பிரமாணமூலமாய்த் தோனுகிறதென்றனையே அப்படிப்போலே சொப்பனமுஞ் சொப்பனங்காணுகிறகாலத்திலே பிரமாணமூலமாய்ச் சத்தியமாகத்தோணுகிறதேயொழிய அப்போதசத்தியமாய்த் தோற்றவில்லையே விழித்தபிற்பாடு சாக்கிரத்திலே யசத்தியமாய்ப்போகிறது அப்படிப்போலவே யிந்தச்சாக்கிரமும் தான்தோன்றும்போது பிரமாணமூலமாய்ச் சத்தியம்போற்றோன்றி ஞானத்திற் றன்னுடையசொரூபத்தில் விழித்தபோது அசத்தியமாய்ப் போமென்றறி.

சாக்கிரசொப்பனங்களிரண்டும் வாசனாமயங்களானபடியினாலே பிராந்திசொரூபமே சந்தேகமேயில்லை. சாக்கிரம் ஸ்திரப்பிராந்தியென்றுஞ் சொப்பனம் அஸ்திரப்பிராந்தியென்றுஞ் சொல்லுகிறபேதமன்றி வேறுபேதஞ் சற்றுமில்லை.

குமரகுருபரசுவாமிகள் நீதிநெறிவிளக்கம்.

ஐயந் திரிபின் றளந்துத் தியிற்றெளிந்து
மெய்யுணர்ச்சி கண்விழிப்பத் தூங்குவார்—தம்முளே
காண்பதுவே காட்சி கனவு நனவாகப்
பூண்பதுவே தீர்ந்த பொருள்.

குமாரதேவர் அத்துவிதவுண்மை.

நனவிற் றூனே ரிடத்திருக்க நவினித் திரையின் மோகத்தால்
கனவிற் றேசாந் தரமுதலாய்க் காணு மனேக விதமஃதின்

வினவி னுமு மகண்டமதாய் விளங்கி யசையா திருந்திடவே
கனவிம் பாயை தனில்விதமாய்க் காணுந் தேசாந் தரமுதலாய்.
கனவிற் றோன்றும் பொருளெல்லாங் கனவிற் கனவென் றுணர்ந்தக்கால்
நனவில் விவகா ரந்தோன்று நவிற்று மிந்தத் தகைமைபோல்
நனவிற் றோன்றுஞ் சகமனைத்து நமது சங்கற் பம்மெனவே
நனவிற் றோன்றி யிடுங்காலை நமது சொரூபந் தோன்றியிடும்.

மனத்திற் கனவிற் கனவெனவே மதிக்கி னந்த விவகாரத்
தனத்த முறினுங் கலக்கமுறா னதிகமுறினு மகிழ்ச்சியுறான்
மனததி னனவில் விவகார மயங்கி நீங்கா திருப்பனதின்
கனத்த சகஞ்சங் கற்பமெனக் கண்டாற் றனைநீங் காதிருப்பான்.

சிங்கா தனத்தில் வீற்றிருக்குஞ் சிறப்பா ரரசுங் கனவடைந்து
மங்காப் புலைத்தன் மையைமேவி வருந்து வோன்ற னனவுணரின்
அங்காஞ் சோக மோகமெலா மந்தக் கணமே நீங்குமதின்
இங்காஞ் சீவத் துவமோக மிரியுந் தனைத்தேர்ந் தக்கணமே.

கனவைக் கனவென் றுணர்ந்தக் கனவி னனவை நோக்கிடினக்
கனவை யொழிந்த வக்கணமே காணு நனவில் விழிக்குமதின்
நனவைச் சங்கற்ப மென்றுணர்ந்து நனவிற் றனையே நோக்கியிடில்
நனவை யொழிந்த வக்கணமே நமது சொரூபத் தேவிழிக்கும்.

கனவை யொழிந்து நனவதனைக் கண்டார் நனவி னின்றுபினக்
கனவை நோக்கி யிடின்முன்னங் கண்ட படியே தோன்றுமதின்
நனவை யொழிந்து தன்சொரூப நன்றா யுணர்ந்தோ ரதினின்று
நனவை நோக்கி நினைவுகொடு நாடின் முனம்போற் றோன்றியிடும்.

உறக்க மோக மதிற்கனவி லுலக முயிர்கள் விவகாரம்
சிறக்கு மெய்போற் றோன்றியதைத் தேரிற் பொய்யா யிடுமஃதின்
மறக்கு மாயா போகமதின் மாசார் தந்தம் வீடதெனப்
பிறக்கு மவைக டமைத்தேரிற் பேசும் பொய்யாய்ப் போய்விடுமால்.

ஒருவ னுளதா கையிற்கனவு முண்டா முறக்க மோகமதின்
ஒருவ னிலதா கையிற்கனவு மொருகா லையினு மிலதாகும்
சொரூப நமதுண் டாகையினாற் றோன்று நானா விதசகநம்
சொரூப மிலதே லிலையதனாற் றோன்று மனைத்துஞ் சொரூபமே.

படிகத் தடுத்த நிறங்களதிற் பத்திப் பாயு மந்நிறமாய்ப்
படிக மாகி நீங்கினதிற் பகரு மிந்தத் தகைமைபோன்

முடிவி னமது சொரூபத்தின் மோகஞ் செயுமா யையயிற்றேன்றும்
முடிவில் பந்தம் வீடதுமின் மொழிபு மாயை யென்பதுமில்.

பழுதை யதனிற் றேன்றியிடும் பாம்பை யுள்ள படிநோக்கில்
பழுதை யாயே தோன்றியிடும் பாம்பு மதுவாய் விடுமஃதின்
பழுதில் சிவத்திற் றேன்றியிடும் பன்மை யுலகை நோக்கியிடின்
பழுதில் சிவமே யாய்த்தோன்றும் பன்மை யுலகு மதுவாய்ப்போம்.

6-ம் சூ. க-வது உதாரணவெண்பா.

அசத்தறியாய் கேணீ யறிவறிந்த தெல்லா
மசத்தாதல் மெய்கண்டா ணுயி—லசத்தலாய்
நீரி லெழுத்து நிகழ்கனவும் பேய்த்தேரு
மோரிலிவை யின்றுமா றெப்பு.

இனியிவரினத்தவரான உமாபதிசிவாசாரியார் சங்கற்பநிராகரணம் மாயாவாதிசங்கற்பநிராகரணத்தில். "யானேயெவருமானேனென்றலின், அவ்வவர்சீறிய வவ்வவர்வானுள், செவ்விதினிரயஞ்சேர்த்துவர்." என்றுகூறியபடி தானல்லாதசிவனைத் தானாகப்பாவிக்கும் இம்மதவாதிகளுக்கு மறுமையில் வசிக்குமிடம் நிரயமேயாமென்பதை யவர்களது மதநூலைக்கொண்டே காட்டுதும். சிவப்பிரகாசம். கக-சூ. ௬-ம் செய்யுள். அண்டமேவிடவனைத்து மனைத்துதையுமண்டமேவிக், கொண்டல்போலவையுஞானக் குறைவிலாநிறைதலாலே, கண்டதோர்பொருளையந்தக் கருத்தினுற்காணிற்றானே, யண்டநாயகனுமேனி யானதேலையமின்றே. இதனுரையில் தானேயண்டநாயகனும், தானேசிவனுவன். என்றும்.

உண்மைநெறிவிளக்கம். ௬-ம் செய்யுள். பாதகங்கள்செய்திடினுங் கொலைகளவுகள்ளுப், பயின்றிடினுநெறியல்லா நெறிபயிற்றிவரினும், சாதிநெறி தப்பிடினுந் தவறுகள்வந்திடினுந் தனக்கெனவோர்செயலற்றுத் தானதுவா நிற்கில். நாதனவனுடலுயிரா யுண்டுறங்கிநடந்து நானுபோகங்களையுந் தானாகச்செய்து, பேதமறநின்றிவனைத் தானுக்கிவிடுவன் பெருகுசிவபோகமெனப் பேசுநெறியிதுவே. என்றும்.

சிவஞானசித்தியார். ௪௨-ம் சூ-ம். அறிவரியான்றனையென்னும் ௩-ம் செய்யுளில்: திருவேடஞ்சிவனுருவேயாகும், சிவோகம்பாவிக்குமதார் சிவனுமாவர், அரனுவர், குறியொடுதாமழியு நெறியதனுற்சிவமேயாய் நின்றிடுவர் என்றும்.

அரக்கொடுசேர்த்தி யென்னும்வெண்பாவில் யானேயுலகென்பனின். றென்றும்.

திருக்களிற்றுப்படியார்: தன்னைப்பெறுவதின்மேற் பேறில்லைதானென்றுந், எல்லாமாய்நிற்குமிவன்றான். என்றும். கூறியுள்ளார்கள். சிவனைமாத்திரம் நானேயென்றுகூறுவதால் ஷெ குற்றம்நேராதெனின்; விலநீர்நெருப்

புயிர் நீள்விசும்புநிலாப்பகலோன், புலனயமைந்தனே டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான், உலகேழெனத்திசை பத்தெனத்தான் ஒருவனுமே, பல வாகிநின்றவா தோணேக்கமாடாமோ. எனத்திருவாசகத்திலும், தானே திசையொடுதேவருமாய்நிற்கும், தானேயுடலுயிர் தத்துவமாய்நிற்கும், தானே கடன்மலை யாதியுமாய்நிற்கும், தானேயுலகிற் றலைவனுமாமே. என்று, திருமந்திரத்திலும் சிவனேஎப்பொருளுமா யிருக்கிறனென்று கூறுதலால் சிவனேயானென்று கூறியமாத்திரத்தில் எப்பொருளுநானேயென்று கூறிய தாகி; இவ்வாதநூல்களே உமாபதிசிவாசாரியார் கூற்றின்படி இவர்களைச் சிவோகப்பாவனைசெய்து நரகவாசிகளாகச் செய்கின்றது. யானேபிரமமென் பது கூடாதென்றும், சிவம்யானேயென்று கூறுதல்கூடுமென்று மயங்கக் கூறிய சிவஞானசித்தியார்; தான்கூறிய கருடபாவனைபோன்ற பாவனைத் வைதமே வேதத்தினபிப்பிராயமென்று தனதபிப்பிராயத்தை வேதத்தின் மேலேற்றிச் சொல்லியதையுங் கவனிப்பாம்.

"கண்டவிவையல்லேனு னென்றகன்றுகாணுக் கழிபாமுநானல்லேன்." என்று ஷெ சித்தியார் ஒன்பதாஞ்சூத்திரம் எழாவதுபாட்டில்கூறிய சிவனென வன் (சிவனெனென்று சோகப்பாவனைசெய்யுஞ்சீவன்) இவ்வொன்பதாஞ் சூத்திர வதாரணவெண்பாவில்; "சுட்டியுணர்வதனைச் சுட்டியசத்தென்னச், சட்டவினியுளாது சத்தோரான்—சுட்டியுணர்ந்த நீசத்தல்லை." யென்றுகூறிய படி சத்தன்றசத்தாம். அவன்சத்தையு மசத்தையுமறிதலினுற் சதசத்தா மெனி லவைசத்தில்டங்கா தசத்திலேயே யடங்குமென்க. இதுகானவீர் மயக்ககாலத்தச் சத்தாயுர், தெளிவகாலத் தசத்தாயுமாதல் காரணமாக வது சதசத்தென்று சொல்லப்படினுமுண்மையி லசத்தாதல்போ லுமென்க.

இன்னு ஷெ சித்தியார் மாயாவாதிமதமறுதலை யேழாவதுபாட்டில் "பேதையேஉளது மிலதுமல்லபொருள் பேசவாருமுளரோ;" என்றும். இச்சிவஞானபோத முதற்சூத்திரத் திலையித்தவென்னு மூன்றும்வெண்பாவி னுரையி லில்லதுமுள்ளது மல்லாதபொரு டோன்றுமென்னுஞ் சூனியவாதி களும், இல்லதுமுள்ளதுமாய பொருடோன்றுமென்னு மநேகாந்தவாதிகளு மறுக்கப்பட்டவா றறிக" வென்றும்; "உள்ளதாகியவுலகந் தோன்று" மென்றும் ஷெ சித்தியார் சுபக்கமேழாவதுசூத்திர மிரண்டாவதுபாட்டிற் "சத்தசத்தறிவதான்மாத் தான்சத்துமசத்துமன்று, நித்தனுப் சதசத்தாகி நின்றிடும்" என்றும், ஆன்மாசதசத்தாவது உளதிலதன்றென்று கூறுத லென்னை? முன்பின் சம்பந்தமறியாத மயக்கமன்றோ? அறிபடுபொருள் காரணமாக அறிவானப்பொரு ளாகின்றனென்னின் "உணருருஅசத் தென்னு மாறுஞ்சூத்திரப்படி அறிபடுபொருள்யாண்டு மசத்தேயாதலி னறி வானும்யாண்டு மசத்தாதல்வேண்டும்.

சதசத்து அசத்தேயென்பதற் குதாரணம். ரிபுகீதை.

"சதசத்தாய்த் தோற்றுவது மசத்தேயாகும்." இன்னும்யாவையுஞ் சூனியமென்னு மேழாஞ்சூத்திரத்தில் அசத்திலது என்றிருத்தலையு முணாற்

பாற்றும். ஆகவே: சதசத்தா யல்லதசத்தா யல்லதிலதாயுள்ள சீவன், சிவத்தைப்போன்ற சத்தானவனென்று ஷெ சித்தியார் மயங்கிக்கூறியதென்னையோ? வேதமானது பிரமத்தையுஞ் சீவனையுஞ் சமசத்தாகக் கூறுகின்றதாவெனிலோ, அஃதில்லவேயில்லை. அது வருமாறு:—

மகாநாராயணோபநிஷத்து 4-வது அத்தியாயம்.

பிரமசைதன்னியமானது அவை (அந்தக்கரணங்களில்) பிரதிபலிக்கின்றது; அப்பிரதிபிம்பங்களே ஜீவர்களென்று சொல்லப்படுகின்றன. சகல ஜீவர்களு மந்தக்கரணங்களை யுபாதியாக வுடையவர்களே.

யாஞ்ஞவல்கியோபநிஷத்து

"பகவானுன் ஈசுவரன் தன்னம்சத்தினாலே சீவனுய்ப் பிரவேசிக்கிறுன்."
கைவல்ய உபநிஷத்து: "அது நீயே, நீயே யது."

அமிர்தபிந்தோபநிஷத்து.

"அந்தப்பிரமமே நானென்றறிந்தாற் பிரமமேயாகின்றுன்."

அக்கினிபுராணம் ௩எசு-ம் அத்தியாயம்: பிரஹ்மஞானங்கூறல்.

இவ்வாத்மாவாகிய பரப்பிரஹ்மம் யானென்று விடுபடுகின்றுன். யான் சாக்கிர சொப்பனுதிகளின் சாக்ஷியான சின்மாத்திரன். அஞ்ஞானமு மதன்காரியமான சம்ஸாராதி பந்தனமுமில்லை. நித்தியசுத்தமும், பந்தமுக்தமும், ஆநந்தமும் அத்வயமுமான பிரஹ்மம் யான்; யான் பரஞ்சோதியும் விமுக்தமுமான பிரஹ்மம் ஓம். அகம்பிரஹ்ம பரம்ஞானம் சமாதி பந்தத்தினைக் கெடுப்பதாம். நீண்ட ஆநந்தமுடையதும் சத்தியஞான அநந்தமுமாம் பிரஹ்மம். இவ்வாத்மா பரப்பிரஹ்மம், அந்தப்பிரஹ்மம் நீயாகிறு யென்று குருவினுற் போதிக்கப்பட்ட ஜீவன் யான் பிரஹ்மம், புறம்பாக அந்தஇது ஆதித்தியன் அந்தஇது அகண்டம்ஓம். அசாரசம்ஸாரத்தினின்று விடுபடுகின்றுன். பிரஹ்மமுணர்ந்தவன் அந்தப் பிரஹ்மமா யிருக்கின்றுன்.

என்றுள்ள அத்வைதிகளின் சித்தாந்தம் வேதசம்மதமெனல் பெறப்படுதலின் ஷெ சித்தியார் நானே பிரஹ்மமென்பாரைத் தூஷித்தது. தன்னையே பதிகேடன், மாயாவாதி, பேயெனத் திட்டிக்கொண்டதோடு, வேதாகம முதலியவைகளையுந் தூஷித்ததாயிற்றென்க.

இதுவேயுமன்றி: அது அத்வைதசித்தாந்தத்தில் நான் என்பது வாச்சியார்த்தத்திற் சீவனென்றும், லட்சியார்த்தத்தில் கூடஸ்தனென்றும், நான் பிரமமென்பது வாச்சியார்த்தத்தில் பாதசமானுதி காரணத்தாலென்றும், லட்சியார்த்தத்தில் முக்கிய சமானுதி காரணத்தா லென்றும், கூறுவதைச்

சிறிதேனு மாழ்ந்தவுணர்ச்சியின்றிப் பாவிக்கப்படுவ தசத்தாகலின், நானே பிரம மென்பதில் பாவிக்கப்படும் பிரம மசத்தாமெனின்: ஒன்று மற்றொன்றைத் தானாகப்பாவிப்ப தசத்தாகுமேயன்றித் தனதெதார்த்த சொரூபத்தைப் பாதசமானாதிகரணப்படி தானெனப்பாவித்த லசத்தாகாது. எங்ஙனமெனின்: சாத்தனென்பவன் கொற்றனென்பவனைத் தானாகக் கருதுத லசத்தே; கொற்றன் சாத்தனிடத்தி லபாவமாயிருத்தலினால்: இதுபோன்று பூர்வபட்சியாரின் சித்தாந்தப்படி தானல்லாத சிவனைத் தானாகக்கருதுத லசத்தேயாம். வேடரிடத்தில் வளர்ந்த அரசகுமாரன் பின்னர்த்தா னரசனென்றும் வேடனன்றென்றுங் கருதுவதினா லவ்வரசத்தன்மை யவனிடத்தி லபாவமாத லெங்ஙனமின்றே, அங்ஙனமே அத்வைத சித்தாந்தப்படி சீவன் தன ததிஷ்டான வடிவத்தைத் தானெனக் கருதுவதினா லவ்வதிஷ்டானம் (பிரமம்) அசத்தாதலின்று. இதனால் துவைதபாவனை வேதசம்மதமன்றென்பது பெற்றாம். இன்னும்;

மாயாவாதி மறுதலை 1-வது செய்யுள்.

"யானேபிரம மென்றுரைத்து ஞாலம்பேய்த்தே ரெனவெண்ணி
யூனேபுகுந்து நின்றுயிர்கட் குபதேசங்க ளுரைத்துவரு
மானுமதிகே டனுமாய மாயாவாதி பேயாகித்
தானே யுரைக்குமந்நூலி னுண்மைதன்னைச் சாற்றிடுவாம்."

என்று கூறுகின்றது. இச்செய்யுளுக் கிவரினத்தவர் "ஆன்மாவுஞ் சிவமுமென்னாது அகம்பிரமமென்று சொல்லிப் பிரபஞ்சமெல்லாங் கானற்சலம்போலப் பொய்யெனக்கருதிக் கருப்பாசய நீங்காமனின்று தான் மற்றுள்ள ஆன்மாக்களுக் குபதேசங்கள் சொல்லித்திரிகிற நாணமில்லாத அறிவீனனாகிய மாயாவாதி பித்தேறி வேதாகமங்களுக்குப் பொருந்தாமற் றனக்குப்பொருந்தத் தானேசொல்லிக்கொள்ளு மந்நூலின துண்மையின் றன்மையைச் சாற்றுவாம் என்க" என்றும்,

"ஊனேபுகுந்து நின்றென்பது தான்பிரமமாயின், ஊனிற்புகுதல் வேண்டாமென்பது கருதியென்க, உயிர்கட்குபதேசங்க ளுரைத்துவருமென்பது சர்வ ஆன்மாக்களுந் தன்னைப்போலப் பிரமமாகையால், உபதேசஞ் சொல்லவேண்டாமென்பது கருதியென்க," என்றுமுரைகூறி யிருக்கின்றனர். இதில்:

(1) நானே பிரமமென்று கூறுதல்கூடாது.
(2) ஞாலத்தைப் பேய்த்தேர்போல் கூறுதல்கூடாது.
(3) எல்லாம் பிரமமாகையா லுபதேசம் புரிதல்கூடாது.

இவைகூடுமென்பவன் மதிகேடனு மாயாவாதியும் பேயுமாமென்பது முக்கிய விஷயம்.

இவ்வாறு மறுத்துக்கூறிய ஷை சிவஞானசித்தியார் சுபக்கம் பத்தாஞ் சூத்திரம் இவனுலகிலென்னு மொன்றாவதுபாட்டில் "அவனிவனாய் நின்ற முறை யேகனாகி" என்றும், சலமிலனாயென்னு நான்காம்பாட்டில் "தனை யடைந்தார் தம்மைத்தானாக்கி" என்றும், பன்னிரண்டாஞ் சூத்திரம் "அறி வரியானென்னும் மூன்றாம்பாட்டில் "சிவோகம் பாவிக்குமத்தாற் சிவனுமா வர், அரனுமாவர், குறியொடுதாமழியு நெறியதனாற் சிவமேயாய் நின்றிடுவ" ரென்றும், முன்பின் உதைத்துக்கொள்ளும்படி பேசியது விந்தையினும் விந்தையயன்றோ?

(1) நானே பிரமமென்பவன் மதிகேடனு மாயாவாதியும் பேயுமானால் அவனும் (சிவனும்) இவனும் (சீவனும்) ஏகமென்றும், சிவம், அகம் அதா வது சிவமே நானென்றும், அச்சீவன் சிவமேயென்றுங்கூறுஞ் சிவஞான சித்தியினாசிரியர்மாத்திரம் மதிகேடரு மாயாவாதியும் பேயுமாகாமற் போவ ரோ? நானே பிரமமா யிருக்கிறேனென்பது தொந்தத்தசி வாக்கியமானால் சிவமேநானா யிருக்கிறேனென்பது தத்துவமசி வாக்கியமாயிருக்கிறது. இதில் சொல்முன்பின்மாற்றிச் சொல்லப்படுகின்றதேயன்றிப் பொருளில் வித்தியாசமில்லை; இல்லையாகப் பிறர்கூறுவதுபோல் தானுங்கூறிவிட்டுப் பிறரைமாத்திரந் திட்டுவது மதியிலார் செய்கையிற் சேர்வதன்றி மற்றியா தாம்.

(2) ஞாலம் (உலகம்) பேய்த்தேர் (கானல்சலம்) என்று கூறுபவன் (அத்வைதி) மதிகேடன் மாயாவாதி பேயென்றுகூறிய அச்சிவஞானசித்தி யார் ஒன்பதாவது சூத்திர முதலாவது பாட்டில்: "ஆசைதரு முலகமெலா மலகைத்தேரா மென்றறிந்தகல" என்று முன்கூறியதை மறந்து முட்டுப் படக்கூறியது தனக்கழகு மொட்டை, பிறர்க்கழகு கூந்தலென்பதற்கின மாம்! உலகசத்தென்பது "உணருரு அசத்" தென்னு மேழாஞ்சூத்திரத் தானே நன்கு விளங்கும். அசத்தென்பதற்குப் பொருள் சத்தேயெனி னிவ்வாறு பதார்த்த வுணர்ச்சியின்றி மயங்கிக் கூறுவாரைக் குறித்தன்றோ அசத்திலதென்று கூறிற்று.

உலகம் அசத்து (காரியம்) என்பது பிரதிக்ஞை, உணருருவா (அவயவ யப் பாகுபாடுடையதா) யிருத்தலினா லென்பது ஏது, யாது யாது உணருரு, அது அது அசத்து, கடபடம்போலென்பது உதாரணம், என்னும் அனுமான வாக்கியமுங் காண்க.

காசிகாண்டம்.

கானலிடைத் தெண்ணீருங் கயிற்றினில்வா ளரவுமலைகடலிற்பட்ட
கூன்முதுகிப் பியிற்றோன்றும் வெள்ளியுமம் முதலுண்மை குறிக்கிற்றீரும்
ஆனவைபோ னினையறியிற் றோற்றுசக மனைத்துநில்லாதழியுமாற்றால்
தேன்விழ்பூங் கடுக்கையணி செல்வநின்றாறை கழற்றாட்சென்னிசேர்ப்பாம்.

கூர்மபுராணம்.

"ஆதலால் பிரமமொன்றே நித்தியம் அலகைத்தேரிற், பேதுறத்தோன்று நீரிற் பிரபஞ்சம் மருண்டு தோன்றும்" என்றும்,

மகோபநிஷத்து 4-ம் அத்தியாயம்.

"பாலைநிலத்திற்றோன்றும் சலமுழுதும் பாலைநிலமேதவிரவேறில்லை" அதுபோல மூன்றுலகமும் சகலபிரபஞ்சமும் விசாரணையினாற் சின்மாத்திரந் தானேயென்றும் கூறுஞ் சத்தப்பிரமாணமும். இதனை (உலகஞ் சத்தன்றென்பதை) நன்கு வலியுறுத்தும்.

தாயுமானர்: "விதிக்கும் பிரபஞ்சமெல்லாஞ் சுத்தவெயின்மஞ்சளென்னவே வேதாகமங்கள், மதிக்குமதனை மதியார் அவர்மார்க்கந் துன்மார்க்கம்" என்றபடி இவர் முன்னோர்கள் சொப்பனமுதலியன சத்தியமென்போர்கள் அது சங்கற்ப நிராகரணத்தில் "கனவின்பயனும், நனவின் பயனும், வினையின்பயனவை பொய்யெனவேண்டா" என்றும்,

"அசத்தறியாய் கேணி யறிவறிந்த தெல்லா
மசத்தாதல் மெய்கண்டா னுயி—லசத்தலாய்
நீரி லெழுத்து நிகழ்கனவும் பேய்த்தேரும்
ஓரிலிவை யின்றாமா றெப்பு."

இதற்குச்சிவஞானமுனிவருரை செயுங்கால், "நீரிலெழுத்துமுதலியன பொய்யென்பாரை மறுத்தற்கு நிகழேன்றடை கொடுத்தார்" என்றும் கூறினர். இதனால் இவற்றைப் பொய்யென்று கூறப்படாதென்பது இவரினத்தோர் கொள்கையென்க.

சிவஞானசித்தியார் 6-வது செய்யுள்.

மண்டனில்வாழ்வும் வானத்தரசயன் மாலார்வாழ்வு
மெண்டருபூதபேத யோனிகளியாவு மெல்லாம்
கண்டவிந்திரமா சாலங்கனாகழு திரதங்காட்டி
உண்டுபோலின்றாம் பண்பினுலகினை யசத்துமென்பர்.

என்று 3-வது பாட்டில் ஞாலமுழுவதும் இந்திரம், கனா, கழுதிரதம் (பேய்த்தேர்) போன்றனவென்றும்; 9-வது சூத்திரம் 6-வது பாட்டில் "குறித்தடியினின் றட்டகுணமெட்டுச் சித்திக்கோகநதன் முதல்வாழ்வு குலவுபதமெல்லாம், வெறுத்து நெறி யறுவகையு மேலோடு கீழடங்க வெறும் பொய்யென நினைத்திருக்க என்றும் கூறி, இவ்விரண்டிற்குமாறாக முன்னர் மாயாவாதி மதமறுதலை 8-வது பாட்டில் (உலகம்) விவகாரமன்று பரமார்த்தமா யவைசெறித்ததே" என்று கூறுதல் முன்பின் முரணன்றா?

இவ்வாறாயுள்ள மூரன்கள் அச்சிவஞானசித்தி முதலிய நூல்களில் விரிவாயுண்டு. இதனை அடியில்வரும் பிரமாணங்கள் நன்கு வலியுறுத்தும்.

சிவஞானமுனிவர் கலைசைப்பதிற்றுப் பத்தந்தாதி.

மனைமக்கள் கடம்பு மடந்தையர்பொன்
னெனவிப்படி யெய்தி மயக்கியிடுந்
தனையெய்ப்புறு மாயை விலாசமெலாங்
கனவிற் கழியாய் கலைசைக்கிறையே.

இளசைப்பதிற்றுப் பத்தந்தாதி.

"காட்டினு னுலகெலாங் கனவுபோன்மென."

அத்துவிதவுண்மை.

இல்லா மாயை தங்கணிலை யாரு நிற்க வம்மம்ம
பொல்லாப் பிறப்பிற் பட்டதுமாய்ப் பொக்க மிகவுந் தவிர்ந்ததுமாய்
நல்லா ரிணக்கஞ் சேர்ந்ததுமாய் ஞான விசார முதித்ததுமாய்
எல்லா மாம்வீ டடைந்ததுமா யார்க்குங் காட்டி மறைந்திடுமே.

வல்லா நீங்கிச் சற்குருவை யெங்குந்தேடி யடைந்தருளின்
நல்லா ருணரு ஞானநூ னவின்று விசாரஞ் செய்வதுவும்
பொல்லாமனத்தைபொடுக்கிநிட்டைபொருந்திநோக்கல்லாநோக்கும்
இல்லா மாயை தனைத்துணிவா யில்லை யெனவே காண்குதற்கே.

படியிற் பொருளின் மெய்பொன்று படிறென் றிந்த விருவகையு
முடிவின் மெய்பொய் யறிந்திடலா மொழியு மிந்தத் தகைமைபோல்
கொடிய வுலகை மெய்யெனவே கூறு மதையு மறிந்திடலாம்
முடிவிற் சகம்பொய் யேயாகு முத்தி யொன்றே மெய்யாகும்.

பந்த மின்றி வீடின்றி பரமே யெங்கும் விளங்கிடவும்
பந்தம் வீடுண் டெனவுரைத்தல் பார்க்கில் மாயா மோகமதில்
சிந்தை விரிவே பந்தமதாஞ் சிந்தை யொடுக்க மேவீடாம்
இந்த வகையாம் பந்தம்வீ டியம்பு மபவா தமதாகும்.

மாயை யதனில் மும்முதலும் வகுப்பாய் விளங்கி யிடுமந்த
மாயை நீங்கி லொருமுதலாய் வகுப்பொன் றின்றி விளங்கியிடும்
ஆய பிரம மென்றுளதோ வன்றே யில்லா மாயையுமுண்
டாய பிரம முள்ளளவு மந்த மாயைக் கழிவில்லை.

இந்த மாயைக் கழிவிலதே லிந்த வுயிருக் கொருக்காலும்
அந்த முத்தி யிலையென்னி லறையு முயிர்க டமைமறந்த
பந்த நீங்கி னக்கணமே பரமாய் விளங்கு மதையன்றி
இந்த வில்லா மாயைக்கழி விலதி னிலைவீ டெனல்கூடா.

தன்னை மறைத்த பந்தமதைத் தள்ளி நீங்கிற் றான்விளங்கும்
தன்னை மறந்த தேபந்தந் தன்னை யறிந்த தேமுத்தி
தன்னை விடவோர் பொருளில்லை தானே பிரமம் மாயையும்பின்
தன்னை விடவே றுய்விளங்கா தானே யாகி விளங்கியிடும்.

இல்லா மாயை தானிருந்தென் னிறந்தென் னவைபந் தமதாகா
இல்லா மாயை தனைமெய்யா யென்னு மதியே பந்தமதாம்
இல்லா மாயை தனைப்பொய்யா யென்னு மதியே முத்தியதாம்
இல்லா மாயை யில்லையென்றே யியல்பாய்த் தோன்றுந் தன்னிலையில்.

நினைவு நீங்கி லுருநாம நீங்கு மவையைத் தள்ளிடினு
நினைவு நீங்கு மற்றவையி னினக்கே திச்சை யதினின்று
நினைவு நீங்கி நின்றிடமே நிலைமை யான முத்தியென்று
நினைவு கொண்டன் னிலையைவிட்டு நீங்கா தென்று நின்றிடுக.

நினைவை நீக்கி நோக்கியிடி னிமல சொரூபந் தோன்றியிடும்
நினைவை மேவி நோக்கியிடி னிலையி லுலகந் தோன்றியிடும்
நினைவி லுலக மறிந்ததுவு நீங்கிச் சொரூப மறிந்ததுவும்
நினைவி னேக்கிற் றனில்லை நிகழு மாயா மோகமதில்.

கான னீருங் கயிற்றரவுங் கட்டை யதனிற் கள்வனுமே
ஆன வவைதம் மதிட்டான மாகு மவைக டோன்றளவும்
ஆன தவைமெய் போற்றோன்று மதுபோற் சகமு மதிட்டானம்
ஆன சொரூபந் தோன்றளவு மசத்தல் லாது போல்விளங்கும்.

மூல வக்க ரம்மதனின் மூன்றக் கரமு நின்றது போல்
நீல வுற்ப லம்மதனி னிறமுன் மூன்று நின்றது போல்
சீல மதனி னேக்கியிடிற் சீவன் பரமச் செக மூன்று
கோல மவையுஞ் சொரூப மதாய்க் கூடி நிகழு மொன்றுமே.

எல்லா மாகுந் தற்சொரூப மிருக்கு மளவு மாயையுமுண்
டில்லா மாயை யுள்ளளவு மீசன் புரியும் பஞ்சதொழில்
இல்லா தொழிந்து போவதில்லை யிதனற் சீவ பரமுண்டு
சொல்லா நின்ற விவர்க்குக்கரி சொரூபந் தானே பகுத்துநிற்கும்.

பகுத்து நின்ற தற்சொரூபம் பரசி வருக்குச் சாட்சியதாய்ப்
பகுத்து நிற்குஞ் சாட்சியையே பார்த்துத் தத்துவ மசியென்று
வகுத்து மாவாக் கியங்கூறு மற்றிச் சீவன் றனையல்ல [பார்த்தே.
தொகுத்துக் கேட்ட திவனெனிஞ் சொன்ன திவன்சாட் சியைப்

இந்தச் சீவன் கற்பிதமே யின்றி வேறோர் பொருளல்ல
அந்தச் சொரூப மிவனாகா னந்தச் சீவ னென்றாகும்
இந்தச் சீவ னதுநாமென் றெண்ணிச் சோகம் பாவிக்க
அந்தச் சொரூப மாய்விடுவ னவனை விடவே றிவனிலதின்.

இதனாற் பந்த முத்தியுமுண் டிதனாற் பந்த முத்தியுமின்
றிதனன் முத்தி பெற்றவனுண் டிதனன் முத்தி பெற்றவனின்
றிதனாற் பலவே யாகியிடு மிதனா லொன்றே யாகுமென
இதனா லவிரோ தமதாகு மிதுவே நமது சித்தாந்தம்.

இந்த நெறியி லனுதினமு மேகாந் தத்தி லொருநினைவாய்ப்
பந்த முத்தி மார்க்கமதைப் பகுத்து வந்த வழிப்படியே
தொந்த மகற்றிப் பழையபடி சொரூப மதனி னின்றிடென
இந்த வகையே யருள்புரிந்தா ளெனையாள் விருத்த வம்பிகையே.

கோர்த்துப் பத்துத் திசைகளினுங் குலவும் பதினா லுலகத்தும்
பார்த்து நோக்கு மிடமெல்லாம் பரமே நிற்க யானவமாய்க்
கூர்த்து நோக்கிப் பாராது கொடுமை களிலே நாட்கழித்தேன்
ஈர்த்து விருத்த வம்பிகைநின் றிங்கே தோவென்றாள் யான்கண்டேன்.

நானா வாகத் தோன்றிபிடு நாம ரூப மிவைபனைத்தும்
நானா வல்ல வொருநாமே நாடி மகிழுஞ் சித்திரங்கள்
தானுஞ் சித்தா காசத்திற் றன்னைத் தானே தான்றானே
தானுங் கருவி யினில்வரைந்து தானே நோக்கி மகிழ்ந்திடுதல்.

தங்கந் தானே பணிதிபாய்ச் சாற்றும் விதமாய் விளங்குதலின்
அங்க முதலாஞ் சகங்களா யறிவே விளங்குமயலில்லை
இங்கங் கென்றே பங்கொன்று மில்லை யகண்ட வறிவொன்றே.
துங்க வறிவு தோன்றளவுந் தோன்று நானா விதரூபம்.

இன்னா னன்னா னிதுவதுவென் றிபம்பு முலகம் வேறன்று
தன்னா னந்த லீலையினாற் றன்னைத் தானே தன்னிடத்தில்
அன்னா னின்னா னதுவிதுவென் றனந்த விதமாய்த் தான்பகுத்தே
உன்னா நின்று தானடிக்கு மொருகூத் தெனவே யியம்புவால்.

தங்க மொன்றே பணிதிகளிற் சாற்றும் விதங்கள் வெவ்வேறு
தங்க விலக்க ணமுமன்று தங்கம் விடவும் வேறன்று
தங்க மழியாப் பணியழியும் சாற்று மிந்தத் தகைமைபோல்
எங்கு நிறைசித் தாநம்மி லிலகு மிந்த வுலகமுமே.

தானுண் டாகி லுலகுண்டாந் தானுண் டாகி லுயிருண்டாம்
தானுண் டாகிற் பரமுண்டாந் தானுண் டாகில் வீடுண்டாம்
தானுண் டாகிற் பஞ்சதொழிற் றானுண் டாகுந் தனையன்றித்
தானுண் டோமற் றவையதனாற் றானே யனைத்தும் வேறில்லை.

மந்த விருளிற் கயிற்றரவின் மாறு பாடாய்த் தோன்றுதல்போல்
இந்த வுலகு முயிர்களுமவ் வீசன் றானு முயிரடையும்
பந்தம் வீடு மீசன்செய் பஞ்ச கிருத்தி யங்களுமே
அந்த நமது சொரூபத்தி லாரோ பிதமாய் நின்றிலகும்.

உண்டாய்த் தோன்றி ரமித்திடுத லொருநம் வடிவே யுருநாமம்
கண்டே யிடன்மாத் திரமல்லாற் கருதிப் பார்க்கின் வேறில்லை
பண்டே முதலித் தகவாகும் பலவாய்க் காணன் மைத்திரிவால்
விண்டாற் றிரிவை யேகமாய் விளங்கு நமது வடிவமே.

வேதாரணிய புராணம்.

சாதிதரும மாச்சிரமத் தரும மனைத்துந் தனித்தனியே
யோதிற் பலவாம் விதிநூலி னுணர்வாய் சுருக்கத் துரைத்தனமாற்
காதி யளித்தோ யெனவசிட்டன் கரைய மகிழ்ந்து கௌசிகனும்
போதித் தவனைப் பணிந்திதுவும் புகல்வா யென்னப் புகல்கின்றான்.

சந்நியாசி தருமம்.

தார மகாவாக் கியமாதி நக்க குரவன் றாப்பெற்றே
வார மாய கேள்விமுதன் மறையின் சிரத்தை மதித்தமலஞ்
சேர வுயிரும் பரமமுறுந் தெளிவு சீவன் முத்தியினின்
பார வுணர்ந்து சரீரமுத லனைத்து மிலையென் றனுபவித்தே.

மோன மாகி யோகநிலை முதிர்ந்தே காந்த முதல்வாய்ந்து
கான மூரின் புறமேவிப் பயிக்கங் காலஞ் செலவயின்றே
ஞான மாய நிலையினுட னண்ணுங் குணங்க ளனைத்தினையும்
ஈன மாக்கிப் பொறையாதி யேய்ந்து தாதுவிசைவற்றே.

இருவர்க்கும் பொது விதி.

ஓருவ ஞகித் தனிப்பிரமத் தொன்றி மற்ருென் றுணராமே
மருவன் முதலாந் துறந்தவர்தாம் வாயுந் தரும மடவாலா
ருருவ முவத்த லுரையாட லொக்க விருத்த லிவையாதி
வெருவி யகற்றல் பிரமசரி துறந்தோ ரிவர்க்கு விதித்தனவே.

வேறு.

[போற்றி
விழியுறுமப் பொருளனைத்து மாஞருவென் றிதமகிதம் விடுத்துப்
வழிபடவே விபரீத மாய்ந்துவிடும் விழாக்குழுவின் மதலை தேடி
யுழிதருவா னெனத்தோற்ற முற்றவற்றி னீசனுரு வுவந்து காணக்
கழியுமல மாயாதி கருதியசா தனமதனாற் கதியு மாமே.

சாதனமே தெனினுவி தற்பரத்தி னேகமுறத் தழையு ஞான [கும்
மேதமில்சா தனம்பரமா மதுவருதற் குபாயமினி யிசைப்போ மிங்
போதவன்ற னுலகளவு முறும்போகத் தாசையறல் பொறைமுன்னுக
வோதுகுணநிலையாமைநிலைமையுறும்பொருளுணர்ச்சியொழிவினுசை.

வேத தாற்பரிய நிச்சயமே ஞானமென்பது.

ஈண்டிசைத்த குணமுடைய சாதகனுக் கரும்பிரமத்திசைத்தமூன்று
காண்டமுறுமறையினதுதாற்பரியமெனத்தெளிவுகருத்துட்டோன்ற
மாண்டவிச்சை பரப்பிரம வடிவுயிர்க்குத் தருஞானம் வாயும் வாயப்
பூண்டமலச் சீவன்முத்தி புரந்துபரமுத்தியினும்பொலிவன்மாதோ.

ஞானகாண்டம்.

திரிவுவிகற் பறப்பிரம மதுநானே யகிலமும்பேய்த் தேரா மென்னப்
பரிவதுவே சீவன்முத்திப் பான்மையதா முடலினகப்பற்றுப்போலப்
புரிவதுவா முடலவத்தை புவனமதிற் போகமது புரப்போன் கொள்
விரியுமிவை யானலது வேறிலவாதனைப்பிறக்கமேயதன்றே.[வோன்.

இதுகாறுங் கூறிவந்த பிரமாணங்களாற் சிவஞானபோதமூலம் வேதாந்தத்தோடு ஒத்துப்போகின்றமையால், தாந்திரிகள் தங்கள் துவிதவுரையையும், அதனது வழிபுடை நூல்களையும் வேதாகமபாகிய தாந்திரிகநூல்களொன்றறிந்தடங்குவது நியாயமாகும்.

3-வது :—எல்லாம் பிரமமாகையால் உபதேசம்புரிதல் கூடாதென்பதைப்பற்றியும் விசாரிப்பாம். சிவஞானசித்தியார் 12-ம் சூத்திரம் 5-ம் செய்

யுள், "ஞானயோகக்கிரியா சரியைநான்கு நாதன்றன் பணிஞானி நாலினுக்குமுரியன்" என்றும், 7-ம் செய்யுளில், "பரப்பிரமமிவனென்றும் பரசிவன்றானென்றும், பரஞானமிவனென்றும் பராபரன்றானென்றும்; அரன்றருஞ்சீர் நிலையெல்லா மிவனே யென்றும், அருட்குருவை வழிபடவே யவனிவன்றானே; யிரங்கிவா ரணம்யாமை மீனண்டஞ் சினையை, யியல்பினொடும் பரிசித்து நினைத்தும்பார்த்தும்; பரிந்திவை தாமாக்கு மாபோற்சிவமே, பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந்தானே" என்றும்.

இருபாவிருபது "கண்ணுதலுங்கண்டக் கறையுங்கரந்தருளி, மண்ணிடையின் மாக்கண்மலமகற்றும்—வெண்ணெய்நல்லூர், மெய்கண்டானென்றொருகான் மேவுவரால் வேறின்மை, கைகண்டார் உள்ளத்திற் கண்." என்றும், "கண்ணகன்ஞாலத்துக் கதிரவன்றானென, வெண்ணெய்த்தோன்றிய மெய்கண்டதேவ, காரக்கிருகக் கலியாழ்வேனைநின், போரவின்பத் திருத்தியபெரும!" என்றும், 6-ம்பாவில், சுட்ட பெரியதிற்பெருமையுஞ் சிறியதிற் சிறுமையும், உரியது நினக்கே உண்மை—தேவரீர் கூடியதின்றன்மையென்று காட்டப்பட்ட பெரியயோனிக்குத் தக்கவாறு பெரியவறிவுஞ் சிறியயோனிக்குத் தக்கதாகச் சிறியவறிவும் வருகிற சுதந்திரம் அணுவுக்கணுவும் மகத்துக்குமகத்துமாயிருக்கின்ற தேவரீருக்கேயுரியது என்றும் கூறுவதால் இவரது ஆசிரியர்களும் இவர்களுமாத்திரம் மதிகேடனும் மாயாவாதியும் பேயுமாகாமல் போவரோ ?

சமாதானம் வருமாறு :—

சொப்பனவுலகில்தோன்றும் சராசரப்பொருள்களிற் சேர்ந்தமனிதருள் ஒருவன்குருவாயும், ஒருவன்சீடனுமிருத்தல் யாருக்குமனுபவமென்பதை யறிந்தார்க்கு இவர்களாக்ஷேபம் ஆபாச ஆக்ஷேபமாய்த் தோன்றுமென்க.

திருக்குத்திரிசிய விவேகம்.

நானெனவுநீயெனவு மிருதன்மைநாடாமல் நடுவேசும்மாத், தானமருந் தன்மைத்தாந்தானே தானாநிலையில் குருசீடனென்பதைக் கண்டிலேனெனல்.

நானென்ப தேதென்ற நானுன்னும் போதெல்லாம்
தானாகுஞ் சிற்சொருபந் தான்விளங்கும்—ஊனாதி
அன்னியமல் லாதிருக்க வாண்ட பெருமானே
என்னையுநீ யென்றுரைப்ப தெங்கு.

(எ-து.) எந்தெந்தக்கணத்தில் யானுவதியாது ? யானுவதியாது? எனயானுன்னுஞ் சமிதிகளிலெல்லாம் தானேதானாகவிளங்குஞ் சிற்சொருப

மானது நிகரின்றிச்சொலிக்கும். அங்ஙனஞ் சொலியாநிற்புழி மாமிசபிண்டமாகிய தேகமுதலிய சகலசடத்தோற்றங்களும் சித்துப்பேதங்களும் அபரிச்சின்னமாம்படித்தடுத்தாட்கொண்ட குருநாதனாகிய எமதுகர்த்தனே! இங்ஙனமாயநிலையில் என்னையென்று முன்னையென்று முரைக்குமா றெங்ஙனம்? (எ-று.) ஊனென்பதை தேக மென்றது காரண வாகுபெயர், பூர்வவாசனைமறைக்குமாதலி னூனும்போதெல்லாமெனவும், அறிவறியாமைபேதம் கடந்ததாதலின் ஊனுதியன்னியமல் லாதிருக்கவெனவும், அடிமைகூடஸ்தனும் ஆண்டான்பிரமுமாதலின், என்னையுனையெனவும், கூடஸ்தனேபிரமம், பிரமமேகூடஸ்தனென அசிபதவைக்கிய மென்பதுதோன்ற என்றுரைப்பது எங்கு எனவுங்கூறினர். கூறவே மோனநிலையென்பதாயிற்று. இரண்டற்று விளங்குகின்றேனென்ப தருத்தாபத்தியால் தோன்றக்கிடந்தமை காண்க.

குமாரதேவர் சுத்தசாதகம்.

பழுதையிற் கிளிஞ்சில் கட்டையி னின்றும்
பாம்பும் வெள்ளியுங் கள்வ னும்போல்
எழுதரு மாயோ பிதமதிட் டான
மிலங்கிடி விலாதது போலும்
முழுதுணர் சிவம்வந் துதித்தவிச் சீவன்
முத்தருக் குலகமின் றுதித்தல்
கழுதிர தம்போற் காட்சிமாத் திரமாய்க்
கவும்விவ காரமே யின்றாம்.

(இ-ள்.) இரச்சு, சுத்தி, தறியினின்றும் சர்ப்பமும் இரசிதமும் கள்வனும்போலத் தோற்றியகற்பிதங்கள், ரச்சு சுத்தி தறியாகிய அதிட்டானங்கள் விளங்கியவிடத்து அக்கற்பனைகள் இல்லையாய்ப்போனவாறுபோல; சர்வாதிஷ்டானமான பூரணஞான சிவமாகவந் துதயமாகிய இச்சீவன்முக்தர்களுக்கு கற்பிதப்பிரபஞ்சந்தோன்றாது. அவர்களுக்குப் பிரபஞ்சத் தோன்றுவது கானற்சலம்போலத் தோற்றன்மாத்திரமாய்த் தெத்தபடம்போல்வதின் அதனைப்பற்றுவதாகிய விவகாரமே யில்லையாகும்.

திருஷ்டாந்த முணர்த்துகின்றது.

கனவதுபோல் விவகாரமுண் டென்னிற் கனவதுநீங்கியே விழித்தால்
கனவிதன் றுணரு மாங்கவர் தமக்கக் கனவுவந் துதவுத லுண்டோ
கனவுமுன் கண்ட நினைவுமாத் திரமாய்க்காணு றும்அகத்ததுபோலக்
கனவிந்தவுலகுஞ்சீவன்முத்தருக்குக்காணன்மாத்திரமதாய் நிகழும்.

தண்ணிழலாம்பதி விதி யெண்ணுமஞ்செழுத்தே என்பதை சிரவணாதிமுறையி லுணர்த்துகின்றது.

இங்ஙனஞ்சுருதியினால் ஞானமுண்டாயினும் அதற்குமுரணான அஞ்ஞானாதி மூன்றின் இலக்கணமும் அவற்றைநிவர்த்திக்குஞ் சிரவணாதிமூன்றின் இலக்கணங்களுமுணர்த்தல்.

அஞ்ஞானம்; பொதுவாகப் பழுதையைப்பாம்பெனவும், கட்டையைக் கள்ளனெனவுங்கோடல். சந்தேகம்; பழுதையோ பாம்போவெனவும, கட்டையோ கள்ளனோவெனவுங்கோடல். விபரீதம்; ஸ்திரமாகப் பழுதையன்று பாம்பெனவும், கட்டையன்று கள்ளனெனவுங்கோடல். கேட்டல்; சிரவணமாகிய சட்விதலிங்கதாற்பரியம். சிந்தித்தல்; மனனமாகியயுக்தி, தர்க்கம், அனுமானமென்பன. தெளிதல்; நிதித்தியாசனம், மந்திரயோகம், பரிசயோகம், பாவயோகம், அபாவயோகம், மகாயோகமென்பன. சாட்சாத்காரம், சீவன்முத்தி, விதேகமுத்தி யென்பன. சன்மார்க்திரப் பழக்கத்தினாற் கற்பிதமாகியசடங் கிஞ்சித்துத்தோற்றத்தால் தான்சித்தென்பதை மறப்பது அஞ்ஞானமும், இதனைக்கெடுப்பது இச்சடத்தைக் காண்பவன் சித்தேயென்னுங் கேள்வியேசவணமும், இக்கேள்விபிருந்தும் அடிக்கடிசடந் தோற்றலால் நான்சித்தோ அலனோவென மயங்கல் ஐயமும், இதனைக்கெடுப்பது முன்னுள்ளசித்துத் தானென்னக்கண்டு அதைச்சிந்தித் திருக்கின்றதே மனனமும், இச்சிந்தனத்தாலுண்டாய சித்துத்தானாயினும் முற்கூறிய சகசீவபரம் உண்டெனக்காண்குதல் விபரீதமும், இதைக்கெடுப்பது முன்சிந்திப்பினுதித்தது தானாகியசித்தே யாவுமாய் விளங்குகின்றதென் றறிந்ததே தெளிவான நிதித்தியாசனமுமாம். சுவானுபவத்திற்குவிலக்கான அஞ்ஞானாதிகள்வரின், அவற்றையாங்காங்கு சிரவணாதிகளின் அனுஷ்டானத்தினாற் கெடுக்கவேண்டுமென்பது.

முற்கூறியசிரவணத்தில் உதயமான ஞானத்தைத் தீபமாகவும், அத்தீபம் புறவிருத்தியான காற்றினாலணையாமல் அகவிருத்தியினாற்சிந்திக்கும் மனனமாகியகாப்பே திரையாகவும், அந்தஞானதீபத்தைச் சதோதயமாகப் பிரகாசிப்பிக்குந் தெளிவாகிய நிதித்தியாசனமே தூண்டுகோலாகவுமுவமித்தல். அரணியாற்கடைந்தெடுத்த அங்கியாலேற்றிய தீபம்போல, ஆகமுதலிய அவத்தைகளை நீக்கினவிடத்துள்ள அத்துவிதப்பிரகாச சுயஞ்சைதன்னியஞ் சிரவணத்தினாலாதலி னஃதையங்கியெனவும், இங்ஙனமுண்டான சிற்பிரகாசதீபந் துவிதவாதத்தால் அணையாமற் றற்சிந்தனமாகியதிரையாற் றடுக்குதலால் அதுவேமனனமும், அச்சிற்பிரகாசத்தைத் தெளிவாகிய தூண்டுகோலால் நன்றாய்விளங்கச்செய்தலால் அது நிதித்தியாசனமுமாம். இவ்விரண்டும் அச்சிரவணத்திற்குச் சகாயமாதலால் அங்கமெனலாயிற்று.

இதுசிரவணாதிகளின் விசேடணவிசேடியங்கூறியது:—முன் முக்கிய மெனக்கூறிய சிரவணத்திற்குச் சட்விதலிங்க தாற்பரியங்கூறுகின்றது. அவைகள்; உபக்கிரமம், உபசங்காரம், அப்பியாசம், அபூர்வதை, பலம், அர்த்தவாதம், உற்பத்தியெனப்படும். சிருட்டிக்குமுன் உலகமானது உண்மையான பிரமசொரூபமாய் இருந்ததென்றும், அந்தப்பிரமத்திற்குச் சுவகதாதிமூன்றுமில்லையென்றும், பூரணத்துவஞ்சாதிப்பதே யுபக்கிரமமெனப் படுவதாம். உலகத்தைச் சிவத்தின்கண் அதுவாகக்கரைத்துப் பிறவிக்கடலகலுமாறு கூடஸ்தனுக்கும் பிரமத்துக்கும் ஐக்கியங்கூறி யத்துவிதஞ் சாதிப்பதே யுபசங்காரமெனப்படுவதாம்.

சிருட்டிக்குமுன்பின் எப்போதுஞ்சத்தாகத் தோன்றிவிளங்குவதே யுபக்கிரமமும், இங்ஙனந்தோன்றிய சத்தினம்சமாகச் சகசீவபரங்களைக் கரைப்பதே யுபசங்காரமுமாம். அத்துவிதத்திலுண்டாகிய ஸ்மரணம் உதித்துவிளங்கி யொடுங்குமிடத்தும் அவ்வத்துவித ஸ்வரூபமாகவே விளங்குமென்பது. இவ்விரண்டும் ஒருலிங்கமெனப்படும்.

கூடஸ்தனேபிரமமென்று மீண்டும்மீண்டுந் தெளியவுணர்த்துவது அப்பியாசமெனப்படுவதாம். தேகியென்போன் அஷ்டவிதப் பிரமாணங்களுக்கப்பாற்பட்டவனென்பது அபூர்வதையெனப்படுவதாம். பேதமின்றி விளங்குமோருயிரைமாத்திரங் காரணகாரியமிறந்து விசாரித்துத்தக்கவாறு உணர்தல் சமஸ்தவுயிர்களையும் விசாரித்துத்தெளிந்தது போலுமெனக்கோடல் பலமெனப்படுவதாம். கூடஸ்தசொரூபமாகவிளங்கும் பிரமத்திற்கு இடையில்நீங்காத பஞ்சகிருத்தியங்களையும், கர்த்திருத்துவத்தையும் உளவாகச்சாதித்தலே விளங்காநின்ற அர்த்தவாதமெனப்படுவதாம். கடோபாதிக்குமண்ணையும் நூலுக்குக் கோசகாரப்புழுவையும் உபாதானமெனக் கூறுமாறுபோன்று, முன்னர்ப்படைத்தபிரமமே சகத்திற்கு முதற்காரணமெனக்கூறுதல் உற்பத்தியெனப்படுவதாம்.

சாமவேதத்திற் பிரத்தியகான்மாவே பிரமமென ஒன்பதுதரம் போதித்தலே அப்பியாசமென்றார். முற்கூறியவண்ணம் யாவுஞ்சின்மாத்திரமாகச் சிந்திக்குமிடத்திற் சகசீவபரந்தோன்றின் அதின்சுபாவமேயிங்ஙனந் தோன்றுவதேனக்கண்டு அவற்றையதுவேயெனப் பழகுவதேயப்பியாசமெனவும், இங்ஙனமப்பியாசித்த அச்சித்தில் அதீதமாதலே யபூர்வதையெனவும், இத்துரியாதீதம் யாவுமாய்நிறைந்திருக்கின்றமையால் அதனையறிதல் யாவையுமறிந்ததாதலே பலமெனவும், இங்ஙனம்விளங்கிய சத்தனுக்கும், அதின் சத்தியாகிய சகசீவபரங்களுக்குஞ் சிருட்டியாதி கர்த்திருத்துவஞ் சொல்வது அர்த்தவாதமெனவும் ஆம். முதற்கட்சொன்ன இலிங்கத்தால் நிச்சயித்தபொருளினை ஐயந்திரிபின்றி யனுபவமாக அனுஷ்டித்தற்கும் அங்ஙனமனுபவித்தபொருளிலதீதமாதற்கும், அவ்வதீதமே யாவுமாய்விளங்குதற்கும், அங்ஙனம்விளங்கு

தலே மாகர்த்திருத்துவமென்பதற்கும் இந்நான்கு இலிங்கமும் வந்தனவென்பது. உற்பத்தி உண்டாதல். ஆகவே, இங்ஙனமுண்டாதற்கு உபாதானகாரணம் பிரமமென்பதாயிற்று.

வினு :—இங்ஙனமிருக்க இச்சகத்திற்கு உபாதானகாரணம் மாயையென்று சிலர்கூறுவதென்னே ?

விடை :—சுத்தியில் இரசிதம் புத்திமயக்காற் றோற்றல்போலப் பிரமத்தில் சகத்துற்பத்தி மாயாமயக்காற் றோற்றலினென்க.

வினு :—அற்றேல், இவரிங்ஙனங் கூறியகாரணமென்னே ?

விடை :—இச்சகஞ் சச்சிதாநந்தாம்சமாதலின் இதற்குக்காரணம் பிரமமெனக்கூறினுரென்க. எனவே, அவரதுதிருஷ்டிக்குச் சகம்நாமரூபமாதலினுனும், இவரதுதிருஷ்டிக்குச் சச்சிதாநந்தாம்ச மாதலினுனும் இங்ஙனம்வந்ததென்க. கடத்திற்கு உபாதானகாரணம் மிருத்திகையும், அம்மிருத்திகையில் கடமாதற்குப் பக்குவமுள்ளசத்தியு மென்பவைபோலவாம். காரணகாரியங்கட்கு ஒன்றற்கொன்று சம்பந்தங்களேக்காட்டி யவைகட்கு அதீதமான பிரமத்தை ஆறுலிங்கத்தாற் றரிசிப்பித்தலென்க. முற்கூறிய சிரவணத்தினுல் உதயமான ஆத்மசொரூபம் ஆதிமத்தியாந்தரகிதமா யெக்காலத்தும் ஒருபடித்தாய்ச் சதோதயமாக விளங்குமென்பதைச் சட்விதலிங்க தாற்பரியத்தால் விளக்குவித்ததென்பது.

யுக்தி, தர்க்கம், அனுமானமென்னும்மூன்றும் சிரவணத்திற்குப்பின் அடுத்துவரும் மனனத்திற்குத் துணைக்கருவிகளாம். ஆன்மா சாங்கியத்தில் ஏகமெனவும், ஏனையமதத்தில் அநேகமெனவுங்கூறுப. அவற்றுள் சரீரங்கடோறும் கூடியிருத்தலின் ஆத்மா ஏகமாம். அங்ஙனமாயின் இத்தேகம் இவனுக்கே சுகத்தைக்கொடுப்பதன்றி மற்றவர்களுக்குக்கொடாமையால் ஆத்மா அநேகமேயாம். ஆயின், அப்போகத்திற்கு நிலேசொல்லக்கூடாமையால் ஆன்மா வேகமேயாம். இவன்கர்மத்திற்கிடாய தேகம்வருதல் இவனுக்கேபோகமென்பதனுல் ஆத்மாஅநேகமேயாம். யாவர்க்குங் கன்மமிருப்பதனுல் ஆத்மா ஏகமேயாம். இவன் அபிமானத்தாற் செய்தகன்மமிவனுக்கேவருதலால் ஆன்மா அநேகமேயாம். இவ்வபிமானம் இத்தேகங்களிலுள்ள ஆத்மாவுக்கெல்லாம் இருத்தலின் ஆத்மா ஏகமேயாம் என்றவிடத்து ஒன்றும்முற்றுப்பெருது அநவத்தாதோஷ முண்டாமென இவற்றைநீக்கி யேகான்மாபக்கத்திற் போகமில்லேயென்றும் அநேகான்மபக்கத்தைக் கொள்ளினும் முற்கூறியவண்ணம் இதற்கும் போகஸ்திதியில்லேயெனவரும். அங்ஙனம்வரின் இவ்விருபட்சத்திற்கும் ஒக்குமாயினும் ஏகான்மபக்கத்தில் விம்பமாகிய ஆத்மாவானது கரணசலத்திற் பிரதிவிம்பமாம் நாநாவிதமாயிருத்தலிற் பலவிதமாய் போகானுபவம் எளிதிற்கூடுமெனவும், பிரதிபிம்பம்போல அநேகான்மபக்கமும் விம்பம்போல

ஏகான்மபக்கமும் ஆதலான் இவ்வநேகான்மபக்கங் கற்பிதமெனவும், ஏகான்ம பக்கம் யதார்த்தமெனவுங்கண்டு அதனைநீக்கி யிதையொப்புதலே யுக்தியெனக் காண்க.

தர்க்கம், அநுமானம் இரண்டுக்கூறிற் பெருகுமெனகிறுத்தி, மேல் நிதித் தியாசனத்திற்கு உருவமான மந்திரயோகமுதலிய ஐந்தையுங் கூறுகின்றது.

பிரணவமுதலிய மந்திரங்களை யிடைவிடாது தக்கவாறு சிந்தித்தலாற் சிவோதயமாயதின்கண் மனம்ரமித்தலே மந்திரயோகமெனப்படும். அந்த மந்திரயோகத்தோடு இங்கே விவகரிக்கும்மனமும், பிராணவாயுவுமொன்ருய்க் கூடி மூலாதாரத்திற்சிறந்த சுழுமுனைமார்க்கமாகச்சென்று சிரசின்மத்தியிலிருந்த வியாபகமான ஆத்மப்பிரகாசத்தில் மனமசையாது லயித்திருப்பதே பரிசயோகமெனப்படும். சிரசு சுவர்க்கமும், காது திக்குகளும், இருவிழிகள் சூரிய சந்திரர்களும், நெற்றிக்கண் அக்கினியும், இவைகளிருத்தற்குப் பாங்காக அமைந்தமுகமும், நாபி ஆகாயமும், பாதம் நிலமுமாக அமைந்த இவை பரம சொரூபமாக விளங்கிய விராட்புருஷனுக்கு வடிவமெனக்கூறினும், இவ்வாறன்றியும் அளவிறந்த பெரியபுஜங்களையும், அவைகட்கியைந்த ஆயுதங்களையும் ஆபரணங்களையும், தனக்கு அலங்காரமாகப்பொருந்திய பரமசிவத்தின் வடிவென விவற்றைக்கூறினும் இதுகாறும் நினைப்பூட்டிவந்த அவயவங்களில், “ஒவ்வொன்ருய் விடுத்துநின்ற அவயவிமாத்திரமா யுண்மையாம்பிரமத்தில் மனமடங்கல் பாவம்” ஒவ்வொன்ருக நியதிகளைந்து சோதனையில்மிஞ்சிநின்ற அவயவிமாத்திரமாகவும், யதார்த்தமாகவும் விளங்கும் பிரம சொரூபத்தில் மனம்லயிப்பதே பாவயோகமெனப்படும். இங்ஙனஞ் சென்றடையாநின்ற மனத்தால் எட்டொணுத ஒப்பற்ற பிரமத்தின் மனேலயமாதலே அபாவயோகமெனப்படும். சிருட்டிகாலத்தும், சங்காரகாலத்தும், ஞானகாலத்தும், அஞ்ஞானகாலத்தும் ஓர்படித்தாய்நின்று தானேதானுகவிளங்கும் பிரமத்தின்கண் மனேலயமாதலே மகாயோகமெனப்படும்.

பிரணவ அனுசந்தானத்தாற் பிரமமுதயமாதலின் மந்திரயோகமெனவும் இடைபிங்கலைகளையடைத்துச் சுழுமுனைமார்க்கத்திற்சென்று மூலாதாரமுதல் ஆக்கினையீருன தானங்களிலுள்ள தேவதைகளோடுக்கூடி மேற்பிரமானந்தத்திலுள்ள பிரமத்தோடுங்கலத்தலிற் பரிசயோகமெனவும், ஜீவேசுராசகங்களனைத்தையும் அவயவமாகக்கண்டு அவைகளை நீக்கினவிடத்துள்ள அவயவியைப் பிரமமாகப்பாவித்தலிற் பாவயோகமெனவும், அங்ஙனம் பாவிக்கும்மனதிற்கு அகோசரமாயுள்ள பிரமத்திற் பாவனுதீதமாய் நிற்றலின் அபாவயோகமெனவும், சங்கற்பம் உதிக்கொடுங்கினவிடத்தும் அறிவறிபாமையிடத்தும் ஒருதன்மையாய்விளங்கும் பிரமமே தானுய்விளங்கலின் மஹாயோகமெனவுங்கூறினர்.

வினு :—இங்ஙனக்கூறிய ஐந்தினுனும் ஒவ்வொன்றினும் பிரமத்தை யடைதலின் இவைகட்குத் தாரதம்மியம் வந்ததென்னை ?

விடை :—ஒன்றென்பதின்றி யாவுமாய் நிறைந்திருக்கின்ற பிரமம் இவ் வட்சரத்தின் அடங்கிநின்று வெளிப்பட்டதெனக் கண்டமையானும் அங்ஙனம் நிறைந்துள்ள பிரமம் இத்தேகாக்கிரத்தின் வெளிப்பட்டதாகத் தரிசித்தமை யானும், அவயவங்களை நீக்கினவிடத்துள்ள அவயவியைப்பார்க்கும் பாவனை யில் உதயமாமென்றமையானும், அப்பாவனையிறந்து அதீதமாய்விளங்கு மென் றமையானும், மனம் உதித்தவிடத்தொடுங்கின் உண்மைவிளங்குகின்றதென்ற மையானும், இவ்வைந்திற்கும் ஏகதேசமானதோஷங்களும் இவையொன்றற் கொன் றறிவுவியாபித்துவருதலின் உயர்வுதாழ்வான தாரதம்மியங்களும் உண் டாகும். இம்மூன்னிலைக ளியாவுமின்றிச் சிந்திக்குமனதின்கண் நிறைந்திருக் கின்றதென்னும் அத்துவிதவஸ்துவே முக்கியமெனவும், ஏனைய ஐந்துயோகங் களும் கவுணமெனவும் வந்தமையாலென்க.

இவைகளில் மந்திரயோகத்திற் பிரமம் உதித்ததென்பதற்கு மேற்கோள் பிரமகீதை : " நீம ரந்தொறு மடைந்தழி வுறுது தெரிவா, காமைநின் றரணி யால் வடிவுகாணு மதுபோ, லாமுடம்பி லழிவின்றி மறைகின்ற வமல, ஞே மெனும்பொரு ளுணர்ந்திட வுடம்பில் வெளியாம்" என்பதனுனும், பரிசயோக மென்பதற்குதாரணம் வாதவூரர் புராணம் : " மூக்கு ணம்புல னைந்துட னடை க்கி மூலவாயுவை யடைத்திரு வழியைச், சிக்கெ னும்படி யடைத்தொரு வழி யைத் திறந்து தாண்டவச் சிலம்பொலி யுடன்போய்த், தக்க வைந்தெழுத் தோரெழுத் துருவாந் தன்மை கண்டவர் தரும்பெரு வெளிக்கே, புக்க மூந்தின ரெமதுருப் பெறுவர் புவியில் வேட்டுவ னெடுத்தமன் புழுப்போல்" என்பதனு னும், பாவயோக மென்பதற்குதாரணம், வாசிட்டம் : " கரையறு பரமா காசங் கதித்தறப் பருத்த கண்டம், புரையறு மதன்கீ ழெல்லை யற்றவிண் பொற்றுட் கஞ்ச, நிரைபயின் முடிவி றிக்கு நீண்டற வுயர்ந்த தோள்க, ளுரையுயிர் நாஞ லோக மொளிகொ ளாயுதங் களாமே." என்பதனுனும் அபாவயோக மென்ப தற் குதாரணம் சுருதிசாரம் : " தனித்தசுவா னுபவாதீதம் பிரமோக மேதாற் றுனவனு யிருப்பதுஞ் சங்கற்பத் தானு, மனித்தமென விட்டிடிற்கு னியமாத லானு மதுமறவா விஷினினைவா யழிதலானு, மினித்த நிட்டை சாதகமா யிரு த்த லானு மேதுமல்ல மூடமென்றே யியம்ப லானுந், தொனித்த சுபா வமுங் கடந்த வதீதந் தானே சுயம்பிரகா சமெனவே சொல்வர் தாமே" என்பதனு னும், மஹாயோகமென்பதற்குதாரணம் ஞானவாசிட்டம் : " ஆங்கதுவே யதீதபத மாத லாலே யதுகிஞ்சி லன்றெங்கு மதுவே யாகும், பாங்குறுவீ டென்றும்ப ருலகி னில்லை பாதலத்திற் பூதலத்திற் பார்க்கி லில்லை, வீங்கியவா சைகளெல்லா மிறந்த காலை விரிந்தமன மிறப்பதுவே வீடென்றோது, மோக் ஷிவீ டெனக்குளதென் றுள்ளே யெண்ண முண்டாகின் மீண்டுமன முற்ப விக்கும்" என்பதனுனும், சகத்தானதுதயமாகின்ற தெவ்விடமோ வவ்விடத்

தின் மனோலயமாகுவதே மஹாயோகம்" என்ற பிரமானந்தவிவேக சமுத்திரமென்னும் நூலினுங்காண்க. இவ்வைந்துயோகமும் நிதித்தியாசனத்துக் கங்கமாகவும், சட்சமாதிக்கு அனுகூலமாகவுங்கண்டு இவற்றிற்கு அதீதமான பொருளைச் சகசத்தில் அனுஷ்டிக்கும்படிபாகக் கூறினாரென்பது.

பிரமானுபவத்திற் கிடையூறான பிரதிபந்த மூன்றினையும் இவைகளுக்கு மாறாய ஞானமுதலிய மூன்றி னிலக்கணங்களையும் கூறுதும். பூதப்பிரதிபந்தம்: ஆத்மதரிசனமாகியும், முன் அனுபவித்த விடயானுபவத்தைச் சிந்தித்தல்; வர்த்தமானப் பிரதிபந்தம் இப்போது காட்சிப்பட்ட விஷயங்களில் இச்சையுண்டாதல். ஆகாமியபிரதிபந்தம்: மேல்வரும் விடயலாபங்களைக் கருதிநிற்றல். இவையே இறந்தகாலம், எதிர்காலம், நிகழ்காலமென்பனவாம். குருமுகமாய் ஆத்மவிசாரஞ் செய்யுமிடத்து, முன்னனுபவித்த விடயவாசனை தாக்கி மனங்கலங்குவது பூதப் பிரதிபந்தமும், அங்ஙனம்விசாரித்த மெய்யுணர்வை யிப்போது விடயாசத்தியாதிகளாற்கெடுப்பது வர்த்தமானப் பிரதிபந்தமும், இன்னுஞ்சில பிறப்பெடுத்துப் பெரும்போகங்கள் அனுபவித்தாலல்லது இச்சைவிடாதென்கிற சங்கற்பம் வஸ்து நிச்சயந்தெரிந்தும் அஃது ஆகவொட்டாமற்செய்வது ஆகாமியப் பிரதிபந்தமுமாம். பிரதிபந்தம் தனக்குவேறாகநின்று பந்திப்பது நீக்குதற்காக வுணர்த்தியதென்பது. உபரதி, வைராக்கியம், ஞானமென்னு மூன்றினுக்குந் தனித்தனியே, காரணம், சொரூபம், காரியம், அவதி, பலம் என்னுமைந்திலக்கணமும் வத்தமையும், அவற்றுள்: உபரதிக்கு அட்டாங்கயோகஞ் செய்வதே காரணமும், அவற்றில் மனமொடுங்குதலே சொரூபமும், முன்னிக்கின கருமங்களிற் றிரும்பமயக்கம் வாராததே காரியமும், இவைகளாற் பூதப் பிரதிபந்தம் நீங்கும். கருமங்களனைத்தினு மனம் எழாமை அவதியும், பதப் பிராப்தியே பலமுமாம்.

வைராக்கியத்திற்கு விஷயங்களிற் றோஷதிருஷ்டிவருவதே காரணம். அவ்விடயவாசனையை நீக்குதலே சொரூபம். அங்ஙனம் நீக்கினவிடயத்திற் பின்னிச்சைபிறவாததே காரியம். இவைகளான் வர்த்தமானப் பிரதிபந்தம் நீங்கும். பதப்பிராப்திகளனைத்தையுந் துரும்பாக வுபேக்ஷித்தல் அவதி. மேலாயபதப்பிராப்தியே பலமுமாம்.

ஞானத்திற்குச் சிரவணமனன நிதித்தியாசன விசாரணையே காரணம். அவற்றால் அநாத்மசம்பந்தமின்றி ஆத்மாவைத் தனியேதரிசித்தல் சொரூபம். அநாத்மசம்பந்தமான அறியாமைக்குத்தான் சாட்சியாய்விளங்குவதே காரியம். இங்ஙனங்கூறிய விசாரஞானத்தினால் ஆகாமியப் பிரதிபந்தம்நீங்கும். அஞ்ஞானகாலத்தில் தேகந்தானா யிருப்பதுபோலப் பிரமந்தானாய் விளங்குவதே அவதி. முத்தியே பலமுமாம்.

ஒன்பதாஞ்சூத்திரம் முற்றிற்று.

பத்தாஞ் சூத்திரம்.

அவதாரிகை.

இந்தஇலக்கணு வாக்கியத்தைமாத்திரம் விடாதுசிந்திக்கின், முன்னர், சிரவணுதிமூன்றினுலு முதயமானஞானம் திடாபரோட்சமாதற் கேதுவான சமாதிகைக்கூடும். அதனுல், மலமாயை கன்மமற்றத் துவிதபாவ மிறந்திருக்குமெென இச்சூத்திர முணர்த்துகின்றது.

பத்தாஞ் சூத்திரம்.

அவனே தானே யாகிய வந்நெறி
யேக னுகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னெடு வல்வினை யின்றே.

(இ-ள்.) அவனேதானே ஆகியஅந்நெறி = வெவ்வேருன இடமுங், காலமும், வேடமும், அவனுமிவனுமென்று சொல்லப்பட்ட பேதங்களுக்கிடம்பெருத புருஷனையே விடாதுபற்றில், அவனேயிவன் இவனேஅவனென, ஏகத்துவம் விளங்கிநின்ற முறைபோல, ஏகன் ஆகி இறைபணி நிற்க = கூடஸ்தப்பிரம வைக்கியமான, அத்துவிதசொரூப அறிவாகித் தனக்குத்தானேசெய்பு மாசிரியபணிவிடையாகிய நிட்டையிலகலாது நிற்க, மலம் மாயை தன்னெடு வில்வினை இன்றே = ஆணவாதி பஞ்சமலங்களு மில்லாதொழியும். எ—று.

(ப-ம்.) ஒருபுருடன் பொருட்செல்வத்தை விரும்புங்காலத்து இப்பூவிற்காசனுகவும், அருட்செல்வத்தை விரும்புங்காலத்து வனத்திற்றுறவியாகவு மிருந்தபோதினும், அவ்வேடங்கட் கரசன்றுறவியென்னு நாமரூபமேயன்றி, யப்புருடன் எக்காலத்தினு மொருவனேயாவன். அவை யெங்ஙனமெனின்? ஆத்மகோடிகளைச் சம்ரக்ஷணை செய்யுநிமித்தம் அவர்களில் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ்செய்யுந் தொழிலுக்குரிய வாசவேடங்கொண்டபுருடனே, பின்புதன்னைச் சவரக்ஷணைசெய்யுநிமித்தந் தனதுகாருதிகளிற் குரூரமான காமக்குரோதாதிகளைக் களையுநிக்கிரகமும், விவேகமாதிகளைக்காக்தும் பரிபாலனமுஞ்செய்தற்குரிய தவவேடங்கொண்டானெனக் கண்டவக்கணமே, அவனேயிவன் இவனேஅவனென்னும் ஏகத்துவம் விளங்கும். அதுபோலவென்பார் :—அவனேதானே யாகியவந்நெறியெனவும்; சதோதயமாகவிளங்கிய வோர்வஸ்துவே தன்னுல்லாசத்தினுற் றனதம்சமாகத்தோற்றிய வாத்மகோடிகளைச் சம்ரக்ஷணைசெய்யுநிமித்த மவர்க

ளுள்ளத்தின்கண்ணிருந்து அவர்கள் துர்க்குணத்தைமாற்றிச் சற்குணங்களை வருவித்து அதனாற் றானாகவிளங்கச்செய்யுஞ் சிருட்டியாதி தொழிலுக்குரிய வீசரவேடங்கொண்ட பிரஹ்மமாகவும், இவ்வாத்மகோடிகளிடத்துத் தானிருப்பதைத் தானாகவேகாணுநிமித்தந் தானே தனித்தனியே தன்னைச்சிந்திக்கும் விசாரணைசெய்யுந் தொழிலையுடைய ஜீவவேடங்கொண்ட கூடஸ்தனாகவும், பிரமமேகூடஸ்தன், கூடஸ்தனேபிரமமெனக் காணும்போது, அவனிவனென்னுந் துவிதநீங்கிச் சுயஞ்சித்தாகவும் விளங்குமாதலி னவ்வெதார்த்தத்தை யுள்ளபடியறிவதே விட்டுவிடாத லக்கணையின் பயனென்பார், ஏகனாகியெனவும்; சொரூப நிட்டையாவது: அறிவேவடிவாய் விளங்கல். உண்மைஞானிகள்வேண்டுங் கைமாறிதனையேயன்றி வேறன்றெனக்குறிக்கநின்றது. இவர்கூறியகைமாறு, எனவே, பொருள் புகழ் அடிமை முதலியவை வேண்டியன்று. இவைவேண்டினோர் அசாசிரிய ரெனப்படுவோர். இவரேயுலகிற் பெரும்பான்மையோர். அவரரியர். ஆதலினிந்நிலை வழுவற்கவென்றாயிற்று. வழுவற்கவென்றது, நீ வழுவின் அந்நிலை வழுவும், வழுவின் முன்போற் சகந்தோன்றும், தோன்றின் அகமமதையுண்டாம், உண்டாயின் பந்தவினைவுக்கிடமாம், இடமாயின் தளையாம், தளையாயின் பிறவிக்கிடமாம், இடமாயின் ஒழிவின்றாம், இன்றாயின் அமைதியின்றாம், இன்றாயின் நித்தியதிருத்தியின்றாம், இன்றாயின் அல்லலே யொழிவின்றிய பயனாய்முடியும். ஆதலால், முன்னரவைகளால் நீ பட்டவருத்தத்தை யுன்னுக. உன்னிடில், சொரூப நிட்டனா யிருப்பை. இருத்தலே கைமாறென்பார் இறைபணி நிற்கவெனவும்; "ஐயனே யெனதுளேநின் றனந்தசன்மங்களாண்ட மெய்யனேவுபதேசிக்க வெளிவந்த குருவேபோற்றி" என்ற, கைவல்லியநவநீதப்படியும், "ஆனந்தங்குரு அறிவேசேடனென்ற" தத்தாத்திரையசுவாமிகள் சாம்பிரதாயப்படியும், "தேட்டந்திரண்ட திருமேனி" யென்ற வள்ளலார்வாக்கியப்படியும், தனதறிவிற்சாதாரமான வானந்தோதயத்தில் அவ்வறிதல்கரைதலால் அவ்வினைகணீங்குமென்பார், மலமாயைதன்னொடு வல்வினையின்றே எனவுங், கூறினார்.

அவனேதானே யாகியவந்நெறி, யேகனாகி என்பதற்கு உதாரணம்.

திருமந்திரம்.

ஆகிய வச்சோயந் தேவதத் தனிடத்
தாகிய வவ்விட் டாகாய முபாதான
மேகிய தொந்தத் தசிபென்ப மெய்யறி
வாகிய சீவன் பரன்சிவ னாமே.

ஆகிய வச்சோயந் தேவதத் தன்னிடத்
தாகிய விட்டு விடாத விலக்கணைத்

தாகுப சாந்தமே தொந்தத் தசியென்ப
வாகிய சிவன் பரன்சிவ ஞமே.

தானவ ஞக வவனேதா ஞயிட
வான விரண்டி லறிவன் சிவமாகப்
போனவ னன்பிறு காலா மாபுறத்
தானவ ஞருமோ ராதித்த தேவரே.

திருவாசகம்

இந்திரிய வபமபங்கி யிறப்பதற்கே காரணமாய்
அந்தாமே நிரிந்துபோ யருகாகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அந்தமிலா வானந்த மணிகொடில்லைக் கண்டேனே.

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
வத்தனெனக் கருளியவா ருர்பெறுவா ரச்சோவே.

பண்டாரமும்மணிக்கோவை.

தானவ ஞகிய தன்மைபெற் ருனடி தாழப்பெற்ருற்
ருனவ ஞகிப தன்மைபெற் றுப்வனத் தன்மையின்றித்
தானவ ஞகிய தன்மைபெற் றேற்கரு டாழ்சடிலத்
தானவ ஞகும் பெறுமா சிலாமணிச் சம்பந்தனே.

எற்கமலஞ் செப்பு மெழின்மா சிலாமணிதாட்
பொற்கமலஞ் சென்னி பொலிவித்தே—னற்கமலை
யூரிற் குறுகினே னேர்மாத் திரையளவென்
பேரிற் குறுகினேன் பின்.

திருவிளையாடற்புராணம்.

நத்தனயன் றனக்கரிய நாயகனுக் கன்புடையா ணவில்வா டேவ
தத்தனபந்தருமனைவிபொடுபோந்துசிறுபோதுதையலாயின் [னஞ்
டித்தனயன் றனைப்பார்த்துக்கோடியெனவைத்தகன்று னென்னுமுன்
சித்தரைப னங்கலங்கச் சிறிமணவாட்டிதன்மேற்செற்றங்கொண்டாள்.

இறைபணி நிற்கவென்பதற்கு உதாரணம்.

திருமந்திரம்.

வேண்டார்கள் கன்மம் விமலனுக் காட்பட்டோர்
வேண்டார்கள் கன்ம மதிவிச்சை யற்றபேர்
வேண்டார்கள் கன்ம மிகுசிவ யோகிகள்
வேண்டார்கள் கன்ம மிகுதியோ ராய்ந்தன்பே.

பத்தர் சரியைப் படுவோர் கிரியையோ
ரத்தகு தொண்ட ரருள்வேடத் தாகுவோர்
சுத்த வியமாதி சாதகர் தூயோகர்
சித்தர் சிவஞானஞ் சென்றெய்து வோர்களே.

சார்ந்தமெய்ஞ் ஞானத்தோர் தானவ னாயினோர்
சேர்ந்தவெண் யோகத்தார் சித்தர் சமாதியோர்
ஆய்ந்த கிரியையோ ரர்ச்சனை தப்பாதோர்
நேர்ந்த சரியையோர் நீணிலத் தோரே.

மலமாயைதன்னொடு வல்வினையின்றே யென்பதற்கு உதாரணம்.

திருமந்திரம்.

தானவ னாகித் தானைந்தா மலஞ்செற்று
மோனம தாமொழி யான்முத்த ராவது
மீனமில் ஞானா னுபூதியி லின்பமுந்
தானவ னுயுற லானசன் மார்க்கமே.

பிரபுலிங்கலீலை.

இருவினை தாம்வரும் யானென லாலவ்
விருவினை யால்வரு மின்பொடு துன்ப
மிருவினை யானென லின்றெனி லில்லை
யிருவினை யில்லெனி லில்லை பிறப்பே.

மெய்ஞ்ஞான நிலயம்.

பூத பௌதிக மாய்ப்பொலி பேதமும்
ஏத மின்றி யிருஞ்சிவ மாய்விடப்
போத மாமனு பூதியிற்கண்டவர்
ஆதி யாமதி வன்னுச் சிரமியே.

மெய்ம்மொழி.

தாக்கிலா ஞானயோகத் தன்மைதான் யாதோவென்னில்
சாக்கிரங் கனுச்சுழுத்தி துரியந்தான் றுரியாதிதம்
சாக்கிர மதனிற்கண்டு சதுர்த்தச கரணம்யாவும்
சாக்கிரா தீதமாதல் தற்பர மாவதென்றான்.

சமாதி.

ஆதலா லாகா யத்திற் கடாகாயம் வேறுனற்போல்
பேதமி லான்மா சிவன் பரனெனப் பிராந்தியாலே
யோதிடா நின்ற தன்றி யுணர்விடைப் பேதமின்று
னீதியி னிறைந்த சிவ னிலையதிவ் வண்ணமென்றே.

சிவானந்தமாலை.

மித்தையுடற் கட்டறுத்து மெய்யருளாய் மெய்யொழிக்குந்
தத்துவமுங் கேவலமுஞ் சார்வகற்றிச்—சுத்தத்
தனியாகித் தானும்போய்த் தற்பரமாய் விட்டாற்
சனியா னிதுசத் தியம்.

ஔவையார்.

நன்றென்றுந் தீதென்று நானென்றுந் தானென்று
மன்றென்று மாமென்று மாகாதே—நின்றநிலை
தானதாந் தத்துவமாஞ் சம்பறுத்தா ராக்கைக்குப்
போனவா தேடும் பொருள்.

தாயுமானர்.

"தன்னையறிந் தவர்தம்மைத் தானுகச்செய்தருளுஞ் சமத்தை" "அத்துவித வனுபவத்தை.........நினைவுக்குள்ளே, வைத்துவைத்துப் பார்ப்பவரைத் தானுகவெந்நாளும் வளர்த்துக்காக்குஞ், சித்தனைமாத்தூவெளியை.'

"பாராதியண்டமெலாம் படர்கானற்சலம்போற் பார்த்தனையே முடிவினின்று பாரெதுதானின்ற, தாராலுமறியாத சத்தன்றேவதுவா யங்கிருநீ யெங்கிருந்து மதுவாவைகண்டாய்."

அப்பொருளு மான்மாவு மாரணைநூற் சொன்னபடி
தப்பில்லாச் சித்தொன்றுஞ் சாதியினு—லெப்படியுந்
தேரிற் றுவிதஞ் சிவாகமமே சொல்லுநிட்டை
யாருமிடத் தத்துவித மாம்.

கேட்டலுடன் சிந்தித்தல் கேடிலா மெய்த்தெளிவால்
வாட்டமறு வுற்பவநோய் மாறுமோ—நாட்டமுற்று
மெய்யான நிட்டையினை மேவினர்கட் கன்றோதான்
பொய்யாம் பிறப்பிறப்பும் போம்.

திருவிளையாடற்புராணம் : மண்சுமந்தபடலம்.

உம்மைநா னடுத்தீரோ லுலகியல் வேத நீதி
செம்மையா லிரண்டு நன்றாய்த் தெளிந்தது தெளிந்த நீரான்
மெய்ம்மையாஞ் சித்த சுத்தி விளைந்தது விளைந்த நீரால்
பொய்ம்மைவா னவரி னீந்திப் போந்தது சிவன்பாற் பத்தி.

வந்தவிப் பத்தி யாலே மாயையின் விருத்தி யான
பந்தமாம் பவஞ்ச வாழ்க்கை விளைவினுட் பட்ட துன்பம்
வெந்தது கருணை யாகி மெய்யுணர் வின்பந் தன்னைத்
தந்தது பாதஞ் சூட்டித் தன்மய மாக்கிற் றன்றே.

சச்சிதா னந்த மாமத் தனிப்பர சிவமே தன்ன
திச்சையா லகில மெல்லாம் படைத்தளித் தீறு செய்யும்
விச்சைவா னவரைத் தந்த மேலவன் பிறவித் துன்பத்
தச்சமுற் றடைந்தோர்க் கானு வின்பவீ டளிக்கு மன்னோ.

மந்தரங் கைலை மேருப் பருப்பதம் வார ணாசி
யிந்தநல் லிடங்க டோறு மிகபர போகம் யார்க்குந்
தந்தருள் செய்தெம் போல்வார் தமமனம் புறம்போ காமற்
சிந்தனை திருத்தி ஞானத் திருவுரு வாகி மன்னும்.

ஒப்பவர் மிக்கோர் வேறற் றொருவனு யெங்குந் தங்கு
மப்பாஞ் சுடரே யிந்த வாலவா யுறையுஞ் சோதி
கைப்படு கனிபோன் மேனாட் கண்ணுவ னுதி யோர்க்கு
மெய்ப்பொருள் விளங்கித் தோன்று வேதத்தை விருத்தி செய்தான்,

"அவனேதானேயாகிய" என்னுமிச்சூத்திரத்தில், "ஏகனாகி இறைபணிநிற்க, மலமாயைதன்னொடு வல்வினையின்றே" என்றதனால், அவனேதானுவதோடு ஏகனாகிவிளங்காவிடில், மலமாயையுளதாம். அஃதுளதாகவே அவனேதானாதலும் ஏகனாதலும் இயையா. அவனேதானாதலும் ஏகனாதலும் இலாவிடத்து, துவிதமாகவேயிருக்கும். யாண்டுதுவிதமோ (சிவம் உயிர் என்னுமிருபொருள்) எங்குளவோ, அங்கு மலமாயையுளவாம். யாண்டு

அத்துவிதமோ (சிவபொன்றே) யுளதோ அங்குமலமாயை இலவாம். எங்கு மலமாயையுளதோ அங்கு, அபேதமுத்தியின்றாம். அஃதாகவே பந்தமுள தென்பது தேற்றமாம். இத்துவித சைவசித்தாந்திகள், முத்தியில் சிவம் சீவனாகிய இருபொருளையும் சத்தாயொப்பியிருக்கின்றமையால் இவர்களுக்கு மலமாயையொழிய வகையில்லை. அஃதுளதாகவே ஐக்கிய முத்தியுமில்லை. இவருக்கு முத்தியும்பெறவேண்டும்; துவிதமுஞ் சாதிக்கவேண்டும்; மல மாயையுங் கழியவேண்டும்என்றால் மேற்கூறியசூத்திரம் இடங்கொடாது. அன்றியும் உபநிஷத்களும், புராணாதிகளும் ஒப்பவில்லையென்பதைப் பன் முறை யெடுத்துக்காட்டியுள்ளேம். சுருதியாதிகட்கும், ஆகமமுடிவிற்கும் மாறாக (பேதவாதமாகிய) துவைதஞ்சாதித்து அதுவேமுத்தியென்ற இவர் களதுமுத்தி, வாய்முத்தியேயன்றி யுண்மையதன்று. இவர்களுடைய முத் தியில் துவைதமிருக்கின்றதாலும், அத்வைதத்தை எஞ்ஞான்றும் நிந்திக்கின் றமையானும், முன்மொழிந்த சூத்திரப்படி இவர்கள்முத்தியில் மலமாயை போக வேதுவில்லாமையால், இவர்க்கு மலமாயையேமுத்தியாம். அஃதொ ழிந்த ஏகத்துவமுத்தியின்றாம். ஆகலின், இவர்கள் மெய்கண்டார் பரம் பரையைச்சார்ந்த துவிததாந்திரீக சைவசித்தாந்திகளே மாயாவாதிகளென்ப தில் யாதொரு ஐயமுமில்லையென்றறிக.

அற்றன்று :—முத்தியில் இரண்டுபொருள். அதாவது, சிவசீவர்பேதம் ஒப்புவதில்லை யென்றாலோ? இரண்டுபொருள் ஒப்பாவிடில் எத்தனைபொ ருளிருக்கின்றன? ஒன்றெனில், அவ்வொன்று சிவமா? உயிரா? சிவ மென்னில், அது அத்வைதபக்ஷமாயிற்று. உயிரென்னில், அப்போதங்கிரு ந்த சிவமெங்கேபோயிற்று? சிவமில்லையென்ப திவர்கள்மதமன்று. ஒன்று மல்ல, இரண்டுமல்லவென்னின், பின்னையெத்தனை? மூன்று, நான்குமுத லியன சொல்லலாமா? கூடாது. பந்தகாலத்தில் இரண்டேயிருந்தமையா னென்க.

சித்தாந்ததரிசனம்.

அத்துவித மொன்றேயா மாங்கிரண் டின்மையெனி
லத்துவித மன்றோ வது.

துவித மிரண்டாகு மத்துவித மொன்றாகு
துவிதமயல் கெட்டோய் துணி.

அத்து விதத்துக் கருத்தம் பலவென்னுஞ்
சிற்றறிவு கொண்டுசில கீழ்.

இனி, சிவஞானசித்தியார் ஆறும்சூத்திரம் ஒன்பதாவது செய்யுளின் சிவஞானசுவாமிகளுரையில் "சிவமுமுயிரும் ஒன்றென்பாரை நோக்கி, அங் ஙனம் அறிவதொருபொருள் உண்டென்பதுபற்றி வேறாய்நிற்றல் பெற்றாம்.

வேறென்பாரைநோக்கி, அறிவுக்கறிவு பிறிந்து தோன்றாமைபற்றி வேறென்னும் அறிவுக்கெட்டாது உடனாதல்பெற்றும். அவ்வளவே கூறுவாரை நோக்கி, அவ்வறிவினுள்ளாக நீர்நிழல்போ லொற்றித்து நிற்றல்பற்றி உயிரே சிவமெனும்படி ஒன்றாதல் பெற்றும். ஆகலான், அப்பெற்றித்தாய அத்துவிதநிலையை யருளினாலே யநந்நியமாகக் காண்டலே தக்கதென்பதாம்" எனக்கூறப்பட்டிருக்கின்றது.

இதில், சிவஞானசுவாமிகள் ஒன்றென்பாரையும் வேறென்பாரையும் மறுத்துத் தமதுசித்தாந்தம் நீர்நிழல்போல், ஒன்றாதலெனச் சொல்லுகின்றார். இதுமிக ஆபாசம். சூரியனுக்கெதிரிற் பொருளிருந்தால் அப்பொருளின்நிழல் பூமியில் அல்லது பக்கத்தில்படும். சூரியன் உச்சியில்வந்து பொருளும்பூமியில் படும்படியிருந்தால் அப்போது அப்பொருளின்கீழ் நிழலிருக்குமென்பது அநுமானமாம். இதன்படியே சூரியனுச்சியிலிருக்கும்போது பூமியிலிருக்கும் நீரினது நிழலும் நீரின்கீழிருக்குமென்பது அநுமானமாம். இந்த உவமானத்தையே யுயிர்க்கும் சிவனுக்கும் சிவஞானசுவாமிகள் உவமானமாய்ச்சொல்லி ஒற்றுமைப்படுத்தி ஒன்றென்றும் அநந்நியமென்றுஞ் சொல்லுகிறார். நீரும்நிழலுமாகிய இரண்டும் சத்துப் (மெய்) பொருளாயிருந்து ஒன்றா ? அசத்துப் (பொய்) பொருளாயிருந்து ஒன்றா ? சதசத்துப் (மெய்பொய்) பொருளாயிருந்து ஒன்றா ? இவ்வினாவுக்குச் சத்துப்பொருளாயிருந்து ஒன்றெனின், இரண்டு சத்துப்பொருள் இரண்டு சத்துப்பொருளா யிருக்குமேயன்றி, ஒரு சத்துப்பொருளாகாது. கடபடம்போல். இரண்டு அசத்துப்பொருள் ஒன்றாகுமெனின் அசத்தென்பது பொய்யாதலால், இல்லாத இரண்டு பொருள்கள் ஒன்றாதலென்பது வெற்றுரையாம். இது ஆகாயத்தாமரையும், மலடிமைந்தனும் ஒன்றாதல்போலாம். சதசத்துப்பொருளாயிருந்து ஒன்றாகுமெனின் ஷெ இருவகைக்குற்றங்களும் வந்துபொருந்தும். இது கானனீரும் கயிற்றரவும் ஒன்றாதல்போலாம். சத்து, அசத்து, சதசத்துக்கள் ஒன்றாதலென்பதில் இவ்வளவுதோஷ மிருக்கின்றமையின் இது பொருத்தமில்லா வாதமென்றறிக.

மேற்கூறிய நீர்நிழலாகிய இரண்டில் நிழலென்பது இருள் ; அது சூரியன் இல்லாதிருக்கும்போதே யுளது. சூரியன்வந்தபோது எதிரிலுள்ள பொருள் சூரியனை மறைக்கின்றமையால், அந்தப் பொருளளவுவரையில் முன்னிருந்தஇருள் அப்படியேயிருக்கின்றது. பொருள் இருந்தாலும், இல்லாவிட்டாலும் சூரியன்ஒளி படுகிறவரையில் அந்த இருள் போகாது. ஆதலால் நிழலென்றுசொல்லப்படும் இருளுக்கும் நீராகிய பொருளுக்கும் யாதொருசம்பந்தமுமில்லை. சம்பந்தமற்றதைச் சம்பந்தமுள்ளதாகவைத்து இயற்கையாயுள்ள இருளைப் பொருளின் நிழலெனச் சொல்வதுகூடாது. இருளென்பது தேயுவின்குணமான ஒளியின்குறைவு. ஒளியின் குறை

வென்பதனால் இருளும் தேயுவின்குணமென்றேயாயிற்று. தேயுவின்குணத்துக்கும், மற்றப்பொருளுக்கும் என்னசம்பந்தம்? ஒருபொருளுக்கும் அதன் குணத்துக்கும் ஒற்றுமை சொல்லலாம். ஒருபொருளுக்கும் மற்றொருபொருளின் குணத்துக்கும் ஒற்றுமை சொல்லலாமா? இது கடத்திற்கும், வாழைப்பழத்தின்ருசிக்கும் ஒற்றுமைசொல்வதுபோ லிருக்கின்றது. இதைப் போலவே நீருக்கும் நிழலுக்கும் ஒற்றுமைசொல்வதென்க.

இந்த உவமானம் எவ்வளவுஆபாசமோ அவ்வளவு ஆபாசம் உயிருக்கும் சிவத்துக்கும் ஒற்றுமைசொல்வதி லிருக்கிறது. நீர் எப்படிப்பொருளோ அப்படியே உயிர் பொருளாகும். நிழலென்பது எப்படி மற்றொருபொருளாகிய தேயுவின்குணமோ, அப்படியே சிவமென்பது உயிரல்லாதவேறொரு பொருளின் குணமாகவேண்டும். ஆதலால் உயிருக்குஞ் சிவத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. கடபடமாகியபொருளுக்கும், வாழைப்பழத்தின் ருசியாகிய குணத்துக்கும் எப்படியொற்றுமை சொல்லப்படாதோ, அப்படியே உயிராகிய பொருளுக்கும் மற்றொருபொருளின்குணமாகிய சிவத்துக்கும் ஒற்றுமை சொல்லப்படாது. சிவமென்பது குணமாகிறபோது அதற்குக் குணியொன்றிருக்க வேண்டுமன்றோ? அக்குணிப்பொருள் யாது? நிழலாகிய இருளென்னுங் குணத்துக்குத் தேயு என்னும்பொருள் எப்படிக் குணியோ, அப்படியே சிவமாகியகுணத்துக்குக் குணிப்பொருள் யாது? குணமும் குணியும் அபேதமாகலின் சிவமும் அதன்குணியும் அபேதமாக வேண்டும். குணங்களைக் கற்பனைப்படுத்திச் சிவத்தைக் குணாதீதமென வேதாகமஇதிகாச புராணாதிகள்கோஷிக்க, அவைகளுக்குமாறாகப் பொருளான சிவத்தைக் (கழிக்கத்தகும்) கற்பனைக்குணமாக்கிக் கூறுவதுபொருத்தமாமோ?

இன்னும், மேற்படி சிவஞானசித்தியார் சுபக்கம் ஒன்பதாஞ்சூத்திரம் ஏழாவதுபாட்டில் "சோகமெனப்பாவிக்கத் தோன்றுவன்வேறின்றி" யெனக்கூறுகின்றது. இதில் 'சோகம' என்பது ஸ+அகம் எனப் பிரிக்கப்படுதலினாலும் ஸ என்பதற்குச் சிவமென்றும், அகமென்பதற்கு நானென்றும் ஆண்டுப்பொருளாதலினாலுஞ் சோகம்பாவனையாவது சிவம் நானென்னும் பாவனையாயிற்று.

இப்பாவனையை மேற்படிசித்தியார் மேற்படிபாட்டில் "விண்டகலுமலங்களெல்லாங் கருடத்தியானத்தின் விடமொழியுமதுபோல விமலதையுமடையும், பண்டைமறைகளு மதுநானானேனென்று பாவிக்கச்சொல்லுவதிப் பாவகத்தைக்காணே." என்றுகூறிற்று. இதன் கருத்தாவது: விஷநீங்கக் கருடனைத்தானாகப் பாவிப்பதுபோல மலங்கழலச் சிவனைத்தானாகப் பாவிக்கவேண்டுமென்பதும், இதுவே வேதத்தினபிப்பிராய மென்பதுமாம். இச்சிவஞானசித்திகூறுங் கருடபாவனையைச் சிவஞானபோதத்திற் குறை

கூறிய சிவஞானசுவாமிகள் மேற்படிபோதம் அவனேதானேயென்னும் பத்தாஞ்சூத்திரவுரையில் "ஈண்டொற்றுமைப்படுதலாவது குடமுடைந்தவழிக் குடாகாயமும் ஆகாயமும்போல வொருபொருளா யொற்றுமைப்படுதலோ? அன்றிக்குற்றியை மகனென்பதுபோலத் திரிவுக்காட்சியா னொற்றுமைப் படுதலோ? அன்றிமண்ணே குடமென்பதுபோல ஒன்றுதிரிந்தொன்றா யொற்றுமைப்படுதலோ? அன்றிவெள்ளையுந் தாமரையும்போலக் குண குணித்தன்மையா னொற்றுமைப்படுதலோ? அன்றித்தீயு மிரும்பும்போல ஒன்றினொன்று விரவுதலா லொற்றுமைப்படுதலோ? அன்றிப் பாலு நீரும் போலப் பிரிக்கப்படாத சையோகத்தா னொற்றுமைப்படுதலோ? அன்றிக் கருடனு மாந்திரிகனும்போல பாவனைமாத்திரையா னொற்றுமைப்படுதலோ? அன்றிக் காய்ந்தவிரும்பினீர்போல வொன்றினொன்றிலயமாயொற்றுமைப் படுதலோ? அன்றிப்பேயும்பேய்பிடி யுண்டவனும்போல ஆவேசத்தி னொற்று மைப்படுதலோ? அன்றியிந்தனத்தினெரிபோல விளங்காமையா னொற்று மைப்படுதலோ? அன்றிஞாயிற்றினொளியின் விளக்கொளிபோலச் சத்தி கெட்டுநிற்றலா னொற்றுமைப்படுதலோ? அன்றித்தலைவனுந் தலைவியும் போல இன்பநுகர்ச்சிமாத்திரையா னொற்றுமைப்படுதலோ? அன்றி நட்டா ரிருவர்போல நட்புமிகுதியா னொற்றுமைப்படுதலோ? அன்றிஆவும் ஆமா வும்போல ஒப்புமைமாத்திரையா னொற்றுமைப்படுதலோ? என்றவச் சமய வாதிகண் மதம்பற்றிநிகழு மின்னோரன்ன ஐயப்பாடுகளையெல்லா நீக்குதற் பொருட்டவனேதானே யாகியவந்நெறியென உவமையெடுத்துக்காட்டி யோ தினரொன்றும், ஈண்டுக்கூறிய ஒற்றுமைக்கட்படு மியைபாவதென்னையெனி னதுவருகின்ற சூத்திரத்திற் பெறப்படுமென்றுங்கூறியது 'அவனேதானே யாகியவந்நெறி யேகனாகியென்னு' மிப்பத்தாஞ்சூத்திரத்தை யொழித்தற் கன்றா? மேலேநீக்குதற் பொருட்டென்றுகூறி மறுத்தலினாற் கருடபாவ னைபோன்ற பாவனையைச் சிவஞானசித்திகூறியது தவறென்றாயிற்று.

மேற்படிகருடத்தியானம்போன்ற பாவனாத்வைதமு மொப்பாது ஒருவ ரோடொருவர் பிணங்கிக் கடம்படம்போல முத்தியிற் சீவேசபேதத்தைக் கூறுங் கொள்கையுடையார்க்கு மேற்படி சிவஞானசித்தி, "மலமகற்றித் தானாக்கியென்றும், தனையடைந்தார்தம்மைத் தானாக்கியென்றும், சிவோகம் பாவிக்குமத்தாற் சிவனுமாவர்; அரனுமாவர்; குறியொடுதாமழியு நெறியத னாற்சிவமேயாய் நின்றிடுவரொன்றும், அவனிவனாய்நின்றமுறை யேகனாகி யென்றுங்" கூறுதல்யாவு மெற்றிற்காம்? இவ்வாறாயுள்ளமூரண்க ளச்சிவ ஞானசித்தியில் விரிவாயுண்டு.

கருடபாவனையைக்குறைகூறுவது தவறென்பதற்கு உதாரணம்.

போதிக்கத்தக்க ஞானாசிரிய னெப்போதுஞ் சற்கருமஞ் செய்யவேண்டு மென்று வேதமுதலிய சகலகலைகளு மொருமிக்கத் தனித்திருத்தலைச் சொல்

லுதலாற் சாதகனுகிய பரிபாக மாணுக்கனது, பாசவலியைக் கெடுக்க வல்ல வனுகிய ஞானுசிரியனேனு மம்மாணுக்கனேனு மெடுத்துக் கொண்ட சற்கிருத்தியத்தை யுடலோடன்றி யிடையில் விடலாகாதென்றும், தனதான்மவிலக்கணத்தையுந் தெரிவித்துதேகமே நானென்றிருந்த தன்மை போல என்னைநீதெரிந்து அவனே நானென்னும் ஐக்கியங்கொண் டிரண்டற நிற்பையாயின் சாதற்கியைந்த விஷமானது கருடத்தியானஞ்செய்ய நீங்கு மாறுபோ, லவித்தைநீங்கிவிடு, மிதனைநன்குணர்தியென் றெமதல்லமன் கோரக்கதேவனுக்கு விளக்குவித்தனன். ஞானுசிரியனருளினுல் தனக்கு ணர்த்திய மகாவாக்கியார்த்தத்தை யையந்திரிபறத்தெளிந்து, உண்மையெ னற் கியையாத தேகமுதலிய சகலபற்றுக்களையுநீக்கி, யுண்மைநிலை யினைய தெனக்கண்டு, தானதைச்சேர்ந்து, தானதுவெனக்காணும் மயக்கநீங்கித் தானேதானுகித் தேவர்களுமறிதற்கரிய மிக்கசீர்த்தியையுடைய கோரக்க தேவனப்போதே நிர்விகற்பசமாதிபி னிலேத்தனன். இதனுல, சர்வமும மித்தையெனலேயும், சர்வம் பிரமமெனலேயும், சர்வம் நானெனலேயும் பெற் ரும். தானதைச்சேர்ந்தென்றது; தானதுவாகப்பழகலே. தானதுவென் பதை மருளென்றது; தானுடலானுலன்றே தான்சைதன்யமாகலாந் தானி ரண்டுமென்மையின் சுத்தவாசனையுங் கழறற்கென்க.

திருமந்திரம்.

கருட னுருவங் கருது மளவிற்
பருவிடந் தீர்ந்து பயங்கெடு மாபோற்
குருவி னுருவங் குறித்தவப் போதே
திரிமலந் தீர்ந்து சிவனவ னுமே.

வேதாந்தசூளாமணி: அவதாரிகை.

யசுர்வேத மகாவாக்கியார்த்தத்தினுன் மேற்கூறியபரவஸ்துவிற்குச்
சுவகதாதிபேதமின்றெனலே யுணர்த்துகின்றது.

சுருதியினு ளேகமே வாத்துவித மென்னுஞ் சொற்கிடையு
ளேகமெனுஞ் சொல்லதனுக் கயிக்க,

மருதினுண ரேவவெனு மிடைச்சொற்குத் தேற்ற மத்துவித
மெனுமொழிக்குத் துவிதவிலக் காகக்,

கருதுபொருள் வருதலினு லிம்முறையே மாயா கற்பனைகள்
கடந்துநிர வயமாகி யென்றுந்,

திரிதலில்சின் மயமாகு மொருபிரமந் தனக்குத் தெரிந்தசுவ
கதமுதலா யினமூன்று மிலேயே.

(இ-ரை.) சுருதியினுளேகமே வாத்துவிதமென்னுஞ் சொற்கிடையுள் = எ-து. யசுர்வேதத்திற் கூறிய ஏகமேவாத்வைதமென்னு மொழியில், ஏகமெனுஞ் சொல்லதனுக் கயிக்க மரிதிலுண ரேவவெனு மிடைச்சொற்குத்தேற்றம் = எ-து. ஏகமென்னும் பதத்திற் கயிக்கியமும், அரிதிலுணரப்பட்ட ஏவவென்னும் இடைச்சொல்லுக்குத் தேற்றமும், அத்துவித மெனுமொழிக்குத் துவித விலக்காகக் கருது பொருள் வருதலினால்-எ-து = அத்துவித மெனு மொழிக்குத் துவிதத்திற்குமாறாகக் கருதற்கியைந்த பொருளுமுறையே வருவதினால், இம்முறையேமாயா கற்பனைகள்கடந்து நிரவயமாகி = எ-து. இம்முறை நெறித்தாக மாயாகற்பிதங்களை யியல்பாகவேகடந்து அவயவமெனல் சற்றுமின்றி, என்றுந்திரிதலில் சின்மயமாகு மொருபிரமந் தனக்குத் தெரித்த சுவகதமுதலாயின மூன்றுமிலை = எ-து. தன்னிலையினின்று மாறாதென்று மொருதகைத்தா விளங்குஞ் சின்மாத்திரமா நின்றுள்ள வொப்பற்ற பிரமத்திற்கு முன்னர்த்தெரிவித்த சுவகதமுதலிய மூன்றுபேதமுமில்லையென்றுணர்க = எ-று. ஏ = அசை. ஏகத்துவமுறுவிடத்து அத்வைதமெனல், விவர்த்தமா முடியுமாறுபற்றி, ஏவவென்னுமிடைச்சொ லிடையிற்றந்ததென்க. ஏவவெனல் ஏகாரத்தை. எனவே ஏகமாதற்கியைதலே யத்துவிதமென்றாயிற்று. ஆகவே, ஏகாரம் நிலைமொழிவருமொழிக் கிடையினின்று தேற்றப்பொருள் தரக்கண்டாம். இவர்கருத்தும் அதுவாதலின் ஏகமெனும் சொல்லதனுக் கயிக்கியமும், ஏவவெனும் இடைச்சொற்குத் தேற்றமும், அத்துவிதமெனு மொழிக்குத் துவிதவிலக்காகக் கருதுபொருளும் வருதலினாலென்றார். இம்மூன்றிடத்தும் எண்ணும்மைகள் எஞ்சிநின்றன. இவ்வாக்கியநெறித்தாகவே யென்பார், இம்முறையேயென்றார். மாயாகற்பனைகள் கடந்தென்றதனால், விசாதிகத்தையும், நிரவயமாகியென்றதனால், சுவகதபேதத்தையும், என்றுந்திரிதலில் சின்மயமாகும் என்றதனால், சுசாதிகத்தையும் கொள்க. கொள்ளவே இம்மூன்றுமின்றியது பிரமமென்றாயிற்று. மரத்திற்றோன்றிய பத்திரபுட்ப பலாதிகட்கு வெவ்வேறு தன்மையிருத்தல்போலச் சத்திற்றோன்றிய சகசீவபரங்கட்கு வெவ்வேறுதன்மையின்மையிற், சுவகதமும், மரத்திற்கினமாய மரமிருத்தல்போலச் சத்திற்கினமாகச் சகசீவபரம் வேறின்மையிற், சுசாதியும், மரத்திற்குக்கல் மாறாயிருத்தல்போலச் சத்திற்குமாறாகச் சகசீவபரம் வேறின்மையின், விசாதியுமாகிய இம்மூன்றுபேதமும் பிரமத்திற்கின்றென்க.

வினா :—சத்திற்றோன்றிய சகசீவபரங்கட்குச்சடத்துவ கிஞ்சிக்ஞத்துவ சர்வக்ஞத்துவாதி பேதத்தன்மைகளிருக்கச் சுவகதமின்றென்பதென்னை ?

விடை :—சகமாதிகட்குச்சடத்துவாதித்தன்மை நுண்ணியவறிவுளோர் கூறார். அதெப்படியெனின் : சடமாயிருப்பது சகம், கிஞ்சிக்ஞனாயிருப்பவன் சீவன், சர்வக்ஞனாயிருப்பவன் பரன், என்னுமிடத்-திம்மூன்றினுமிருப்

பது சத்தேயாதலின் இவற்றிற் சத்துத்தன்மையைக் காண்பதேயன்றி வேறுதன்மையைக் காண்கிலராதலிற் சுவகதபேதமின்றென்க.

வினு :—முற்கூறியசத்தைப்போல இச்சகசிவபரங்களினுஞ் சத்திருக்கச் சுசாதியின்றென்பதென்னே ?

விடை :—அச்சத்தைப்போல வேறோர்சத்தென்பதின்றி அச்சத்தேயிருத்தலிற் சுசாதிபேதமின்றென்க.

வினு :—மாயாவிகாரமான சகசிவபரங்கள் தொன்றுதொட்டிருக்க, விசாதி யின்றென்பதென்னே ?

விடை :—அவையுஞ்சத்தாயிருந்து விளங்குதலின், விசாதிபேதமின்றென்க.

வினு :—அற்றேல், பிரமத்திற் சச்சிதானந்தமென்னும் பேதம்விளங்கச் சுவகத மின்றென்பதென்னே ?

விடை :—சூரியனது அழகே பிரகாசம் ; அப் பிரகாசமே சூரியனுதல் போலச் சத்தினது தேஜஸே சித்தும், அத் தேஜஸான சித்தேசத்தும், அவ் விருமையி னொருமையே யானந்தமுமாய் வேறுபாடிறத்தலின் சுவகதபேத மின்றென்க.

வினு :—சத்தைப்போல வியாவகாரிகம், பிராதிபாதிகம், பாரமார்த்திகம் என மூன்று சத்திருக்கச் சுசாதியின்றென்பதென்னே ?

விடை :—அங்ஙனமிருத்தல் சத்தொளியின் பிரதிபலனமேயன்றிச் சத்தன்றாதலிற் சுசாதிபேதமின்றென்க.

வினு :—அதிதப்பிரமத்தின் ஆனந்தானுபவம் நவநவமா யனுபவித்தலின் விசாதிபேத மின்றென்பதென்னே ?

விடை :—அது சச்சிதானந்தவொருமையே சுவானுபவமெனத் தோன்றுத பேதவாதிகட் கங்ஙனந்தோன்றுவதன்றி, அவ்வனுபவமுள்ள அபேதவாதிகட் கங்ஙனந்தோன்றாதாதலின் விசாதிபேதமின்றென்க.

வினு :—இவைகட்குப் பிரமாணமுண்டோ ?

விடை :—அறிஞர்க்குல கானந்தமயமென்பதனுனும்.

வாசிட்டம் : தாசுரன்கதை.

விளக்கு மிரவியு மலருமுண்டா முண்டாம் வீசொளியும்
பகற்பொழுதும் விரையும் போலத்,

துள்க்கமில்சித் துண்டாகி னுண்டா ஞாலந் தோற்றரவு
மாத்திரமே சொரூப மாகும்,
கிளர்த்தபர மார்த்தத்தா வில்லை யென்னக் கேட்டனுமே
பாற்கடல்போற் கெம்பீ ரத்தால்,
அளக்கரிதாய்ச் சீதளமா யமலமாகி யற்புதமா நின்மொழி
யென் றண்ணல் சொல்வான்.

பொருகடலிற் றிரைமுதலாய்ப் பிறந்த வெல்லாம் புனலாகி
விளங்காமற் புழுதி யாமோ,
வொருபொருளாம் பிரமமாத் திரமே யல்லா லுபயமெனுங்
கற்பனைப்பே ரொன்று மில்லை,
யெரியிடத்திற் சூடுமாத் திரமே யல்லா லிரண்டுண்டோ
வவ்வகைபோ லென்று மொன்றுஞ்,
சரியைகிரி யாயோகப் பதத்தின் முற்றிச் சாதனங்க
ணிறைந்தவர்க்கே சாற்றல் வேண்டும்.

" சத்தேசித் தாகுமய லெனிலசத்தா மசத்தாஞற் சாக்ஷி யெங்கே, சித்தேசத் தாகுமய லெனிற்சடமாஞ் சடங்களுக்குத் திதியு மில்லை, யொத்தே தோன் றியசத்துஞ் சித்துமல்ல சுகமாகு மூகத்துக்கோர், வித்தேயக் நியமாகிற் சடமசத்தாஞ் சுகானுபவம் விளக்கிடாதே" என்ற கைவல்யநவநீதத்தினனும்.

ஏகமென்னும் பதத்தினற்சுவகதமும், ஏவவென்னும் பதத்தினற் சுசாதியும், அத்துவிதமென்னும் பதத்தினல் விசாதியுமின்றெனுஞ் சுருதியினனும், சர்வம் பிரமமயமென்னும் பிரமோபதேசத்தினனும்,

" கசனுயர்சமாதிநீங்கி......மிசையுயர் கற்பநீர்போன் மேதினியெங்குகானே" என்றகவியினனும்; "மேனியிற் புறத்தினுள்ளின் மேலொடு கீழிற்றிக்கில், வானில்வை யகத்திலெங்கு மியானன்றி மற்றென்றில்லை, யானிலாவிடமுமில்லை யெனதிடத்தியாதுமில்லை, தானிகழ்பொருள் வேறில்லை சச்சிதாநந்தமென்றான்." என்னுங் கசமுனிசுவானுபவத்தினனும்,

" இல்லாதவிடமில்லையா னென்க்குமலம் யாதுமில்லை, எல்லாருந்தொழுமீச னெனக்கவத்தையெவையுமில்லை, வில்லாரும்புருவத்து வேலாரும்விழியாய்கேள், நில்லாதவுலகத்தை மிகநீங்கிநிற்பேனன்." "ஒன்றுடனுந் தோய்வில்லா னெத்தார்மிக்காரில்லா னுலகமில்லான், நின்றநினைவுக்கெட்-

டா நித்தன்காணப்படா னெஞ்சினிற்பான், பொன்றுபிறப்பிலிமுதலா மறி வினனிட்களன்பழையோன் பொருள்களில்லோன், என்றுநினைந்தடிக்கடி யும் பிரமமெனநோக்குதலே யியல்பதாகும்.'' என்னுந்தேவிகாலோத்திரத்தி னனும், யாவுந்தன்மயமாய் விளங்குதலா லெப்போதுஞ் சுவகதாதிபேதம் பிரமத்திற்கின்றெனக.

வினு :—பரவியாபகத்துள் சகசீவபரம் தத்தம்குணங்களோடு விளங்கின தாக விஸ்வரூபதரிசனத்திற் கிருஷ்ணசுவாமி காண்பித்ததென்னை ?

விடை :—முன்புபாகியத்திற் பேதமாகக்கண்டவிசயனுக்கு அவைநீங்கு நிமித்தம் அகத்திற்பேதாபேதமா யிருப்பதைக்காண்பித்து அதற்குமேல் அபேதமான பிரமஸ்வரூபத்தைக் காண்பிப்பதற்கேயன்றி வேறின்றெனக.

வினு :—அங்ஙனம் அயிக்கியவஸ்துவை மேற்றரிசிப்பதற்குப் பிரமாண முண்டோ ?

விடை :—அந்நூலிற்றானே "பிரமமானோர் பிரமநெருப்பிடைப் பிரம மாகிய மந்திரந்தன்னினுற், பிரமமாய சருவுடன்பெய்துபின், பிரமமேயடை வாரவர்பின்னுங்கேள்.'' "அறிவதாகிய வங்கியிலேகொள, அறிவையே சில ராகுதிபண்ணுவார், செறிவதாஞ்சமத் தீயிடையேசில, ரெறிவதாய புலன்களையீவர்கள்.'' "உந்தியப்பொறி யைந்தையுமொக்கவே, யிந்தியத் தழல் வாயிடுவார்சிலர். நந்தியத்தொழில் யாவையுஞானநெய், சிந்தியோக வெந் தீயிடுவார்சிலர்.'' என்றகவிகளினுனும், "போதமாகும் புனிதத்தழலி னுட், பேதபாவனைப் பேரவிபெய்வனேல், ஆதிசோவுடை பாசியவனென, வேதம்யாவும் விளங்கவிளம்புமால்'' என்னும் பிரபுலிங்கலீலைக்கவியானும், "சர்வபூதங்களிலு மாத்மாவினையும், ஆத்மாவில் சர்வபூதங்களையும் செவ்வை யாய்க்கண்டு, ஆத்மயாகஞ்செய்வோன் சுவாராஜ்யத்தினை அடைகின்றான்'' என்னும் மனுதர்மத்தினுனுங் கண்டுகொள்க.

வினு :—இச்சுவகதாதிபேத மொருவருமொப்பவில்லையோ ?

விடை :—பரவியாபகத்திற்சீவர்கள் பின்னபின்னமாயிருக்கின்றாரென் கிற விசிட்டாத்துவிதிகள் சுவகதமும், பரசிவசமானம் ஆத்மாவென்கிற விசி ட்டாத்துவிதபக்ஷங் கிஞ்சித்தொப்புக்கொண்டவர்கள் சுசாதியும், பரம்வேறு, சீவர்கள்வேறு, அப்பரத்தினதருளா லிசசீவர்கள் தத்தங்குணங்களோடுஞ் சுகித்திருக்கின்றார்க ளென்கிற துவிதிகள் விசாதியுமுண்டெனை இப்பேத வாதிக ளொப்புவரென்க,

வினு :—அவர்கள் அனுபவந்தான்யாது ?

விடை :—நிஷ்களஸ்வரூபமான பரவாசுதேவசமுகத்திற் சீவர்கள் அவ் வடிவமாயிருந்து அவனதருளாற் பரமாநந்தம் அனுபவிப்பரென்கிற விசிட்

டாத்துவிதிகளனுபவமும், நிஷ்களஸ்வரூபமான பரமசிவத்தினது பேரானந்தத்தை நிஷ்களஸ்வரூபமான ஆத்மாக்களனுபவிப்பாரென்கிற சிவசமானத்துவமென்னும் விசிட்டாத்துவித ஏகதேசிகளனுபவமும், நிஷ்களஸ்வரூபமான பரவாசுதேவசமுகத்தில் ஆத்மாக்களெவரெவ ரெத்தன்மையரோ, அவரவரத்தன்மையி லேற்றங்குறைவின்றி யுபாசிப்பதினல் அவர்கொடுத்த ஆநந்தத்தை யனுபவிப்பவரென்கிற துவிதிகளனுபவமுமாமென்க.

வினு :—இவர்களுக்கு இவ்வனுபவத்தால் முத்தியின்றோ ?

விடை :—பரமாத்மபேதமான பதமுத்தியேயன்றி யவைகளேகமென்னு மபேதமான அயிக்கியமுத்தியின்றென்க.

திருவாய்மொழி : திருமழிசையாழ்வார்.

இன்ருக நாளையே யாக இனிச்சிறிதும்
நின்ருக நின்னருளென் பாலதே—நன்ருக
நானுன்னை யன்றி யிலேன்கண்டாய் நாரணனே
நீயென்னை யன்றி யிலை.

திருமங்கைமன்னன்.

இரும்புநன் றுண்ட நீர்போ லெம்பெரு மானுக் கென்றன்
அரும்பெற லன்பு புக்கிட் டடிமைபூண் டுய்ந்து போனேன்
வரும்புயல் வண்ண னுரை மருவியென் மனத்து வைத்து
கரும்பினின் சாறு போலப் பருகினேற் கினிய வாறே.

இரும்புநன் றுண்ட நீரும் போதரும் கொள்க வென்றன்
அரும்பிணி பாவ மெல்லா மகன்றன வென்னை விட்டு.

யானுநீ தானே யாவதோ மெய்யே யருநர கவையுநீ யானல்
வானுய ரின்ப மெய்திலென்மற்றைநரகமே யெய்திலென்னெனினும்
யானும்நீ தானுய்த் தெளிதொறு நன்று மஞ்சுவ னரகநா னடைதல்
வானுய ரின்ப மன்னிவீற் றிருந்தா யருளுநின் றாள்களை யெனக்கே.

யானுந் தானு யொழிந்தானை யாது மெவர்க்கு முன்னேனை.

நம்மாழ்வார்.

மேவுந் தன்மய மாக்கினன் வல்ல னெம்பிரான் விட்டுவே.

சித்தியார்: 8-ம் சூ. 37-ம் செ.

பன்னிறங்க ளவைகாட்டும் படிகம்போ லுள்ளம்
பலபுலன்க ணிறங்காட்டும் பரிசுபார்த் திட்
டிந்நிறங்க ளென்னிறமன் றென்று தன்ற
னெழினிறங்கண் டருளினு லிந்நிறத்தின் வேறாப்
பொய்ந்நிறமவம் புலநிறங்கள் பொய்யெனமெய் கண்டான்
பொருந்திடுவன் சிவத்தினொடும் போதான் பின்னை
முன்னிறைநீர் சிறைமுறிய முடுகி யோடி
முந்நீர்சேர்ந் தந்நீராய்ப் பின்னீங்கா முறைபோல்.

'சிறைசெய்யநின்ற செழும்புனலினுள்ள' மென்னும் 8-ம் சூத்திரம் உதாரண வெண்பாவும்;

கூர்மபுராணம்: உத்திரகாண்டம், 2-ம் அத்தியாயம்.

கங்கையை முதல வாய பற்பல நதியுங் கல்லென்
பொங்குதெண் டிரைய வாரி புகுதிலொன் ருகு மாபோற்
றங்கிய ஞான பாதஞ் சார்ந்திடி லான்மா யாவுஞ்
சிங்கலில் பிரமந் தன்னிற் பிறிதின்றி யொன்றுப் சேரும்.

நித்தியா நந்த மாகி நிமலமாம் பிரமந் தன்னை
தத்துவ வித்தா யுள்ளோர் பிரணவந் தன்னு லொன்று
முத்தம தியானஞ் செய்யா வுளமுவந் தெனது தாளிற்
பத்திசெய் தென்பால் பாலிற் பால்கலந் தென்னச் சேர்வார்.

யசுர்வேதத்தில் கைவல்லிய உபநிஷத்.

"சர்வஸ்வரூபியாயும் இந்தப்பிரபஞ்சத்திற்கு முக்கியஇருப்பிடமாயும் சூட்சுமத்தினும் அதிசூட்சுமமாயும் நித்தியமாயு மிருக்கின்ற பரப்பிரஹ்ம மெதுவோஅதுநீ; நீயேயது. ஜாக்கிரசுவப்ன சுஷுப்திமுதலியவைகளில் எந்தப்பிரபஞ்சம் விளங்கிக்கொண்டிருக்கிறதோ அது பிரஹ்மமே. அது நானேயென்றறிந்தால் சகலபந்தத்திலிருந்தும் விடுபடுகிறான்.

சாட்சியாயும் சின்மாத்திரமாயுமிருக்கிற சதாசிவன் நான்தான், என்னிடத்திலிருந்தே சகலமுமுண்டாகின்றன; என்னிடத்திலேயே சகலமுமிருக்கின்றன; என்னிடத்திலேயே சகலமும் லயமடைகின்றன; அந்தஅத்துவயமான பிரஹ்மம்நானே. (நான்சிவன் என்றவிடத்தில் சங்கற்பவிகற்பமும்

ஜீவனும் அவஸ்தாத்திரயங்களும் ஞாதருஞான ஞேயங்களுமில்லை. அது சிவன்மாத்திரமாய்நிற்கும் துரியாதீதநிலை)

யசுர்வேதத்தில் அமிர்தபிந்தூபநிஷத்.

அந்தப்பிரமமே நானென்றறிந்தால் பிரமமேயாகிறான்......அந்தப் பிரமமே நானென்று நினைக்கப்பட்டிருக்கிறது.

ஸாமவேதத்தில் மைத்திராயண்ணியோபநிஷத் 5-ம் பிரபாடகம்.

எப்போதுமுண்டாக்கப்பட்ட ஜீவாத்துமாக்கள் பிரமத்தினுடைய தேஜஸின் பிரதிபிம்பமாக விருக்கின்றார்கள்.

யசுர்வேதத்தில் ஸ்கந்தோபநிஷத்.

அவனேபரமேசுரன், அவனேபிரஹ்மம், அந்தப்பிரமந்தான் நான். சமுசயமில்லை. ஜீவனேசிவன், சிவனேஜீவன். அந்தஜீவன் சிவனேதான். உமியினால் கட்டுப்பட்டிருக்கிறபோது நெல்லாயிருக்கிறது; உமியற்றதானால் அது அரிசியாகிறது. அப்படித்தான்ஜீவனுங் கட்டுப்பட்டிருக்கிறான். கருமநாசமானால் எப்போதும் மங்களசுவரூபியாகிய சிவனாயிருக்கிறான். பாசத்தினால் கட்டுப்பட்டிருக்கிறவரையில் ஜீவனாயிருக்கிறான். பாசத்திலிருந்து விடுபட்டால் அப்போது சிவனாயிருக்கிறான். சிவனே ஜீவனென்பது எப்படிக்கூடுமெனின் கயிறேபாம்பாவதுபோலவும், பிம்பசூரியனே பிரதிபிம்பசூரியனாவதுபோலவும், மனமேசொப்பனவுலகமும், அவ்வுலகத்திலுள்ள ஜீவர்களுமாவதுபோலவும் ஆம்.

சரியையாதி மூன்றுங்கடந்த ஞானபாதத்தில் சமாதிக்குச்சாதனமான சுவேச்சை, விசாரணை, தனுமானசி யென்கின்ற மூன்றும் அப்பியாசபூமியெனவும்; சத்துவாபத்தி, அசம்சத்தி, பதார்த்தாபாவனை, துரியமென்கின்றநான்கும், அனுபவபூமியெனவும்; இவற்றினிரலே, பிரமவித்து, பிரமவரன், பிரமவரியான், பிரமவரிட்டனெனல் சீவன்முத்தர்களது தாரதம்மியங்களெனவும், இன்னும் இவ்வனுபவமாகிய புருடனுக்கு முற்கூறியமூன்றுபூமியுஞ் சாக்கிரமும், நான்காம்பூமி சொப்பனமும், ஐந்தாம்பூமி சுழுத்தியும், ஆறும்பூமி துரியமும், எழாம்பூமி துரியாதீதமுமெனவுங்கொள்க. இவைகள் அப்பியாசத்திற் றாரதம்மியமாதலன்றியும், அனுபவத்தினுந் தாரதம்மியமிருப்பதைக்கண்டிவ்வவதிகட்கு அதீதமாகவேண்டி ஞானபூமியினிலக்கணங்களை யுணர்த்தியது. இனிச்சமாதியின் இலக்கணமுணர்த்துகின்றது.

உபாதியை யடைந்துகொண்டு விளங்காநின்ற கிரியானுவித்தம், சத்தானுவித்தம், நிர்விகற்பமெனற்கியைந்த புறம்அகமென்னும் இரண்டுபேதத்தால் எண்ணத்தக்க சட்சமாதிகளாகிய இவற்றை யடைவனாதலின் இவைகளை முறையே யிவ்விடத்துக்கூறுதும்.

புறத்தின்மூன்றும், அகத்தின்மூன்று மாகச் சட்சமாதியாம். இவ்வநு சந்தானக் கிரிசியத்தை யனுசரித்துவருதலால் திரிசியானுவேதமெனவும், திருக்குவான சத்தையனுசரித்துவருதலால் சத்தானுவேதமெனவும், இவ்விரண்டையும் அனுசரியாமல் சுவயமாய் விகற்பமின்றிச் சச்சிதானந்தமாய் வருவது நிர்விகற்பமெனவும், திரிசியத்திற் றன்னைக்காண்பது புறமெனவும், தேகாதியகக்காணத்திற் றன்னைக்காண்பது அகமெனவுங்கொள்க.

புறத்திரிசியானுவித்தம் :—காணப்பட்ட திரிசியங்களின் மாயையின் றன்மையான நாமரூபத்தைநீக்கிப் பிரமாம்சத்தால் யதார்த்தமாகவிளங்கிய சச்சிதாநந்தமாய்விடாது அனுசந்தானஞ் செய்துவருவது. புறம்பிலுள்ள விடயங்களின் நாமரூபதிருஷ்டியின்றிச் சச்சிதானந்த திருஷ்டியாகப் பழக வேண்டுமென்பது.

புறச்சத்தானுவித்தம் :—முன் அனுசந்தித்துவந்த சச்சிதாநந்தமே பிரம சத்தென அனுசந்தித்துவருவது. சச்சிதாநந்தமே பிரமமாகப் பழகவேண்டு மென்பது.

புறநிருவிகற்பம் :—இங்ஙனமாய சமாதிகளில் இடைவிடாது பழகிவந்தால் எழும் மேலாய பிரமாநந்தத்தில் மனங்கரைந்துநிற்றல். யாதோர் சேட்டையுமின்றி நிஸ்தரங்கசமுத்திரம்போல் அமைதிபெற் றிருக்கவேண்டு மென்பது.

அகத்திரிசியானுவித்தம் :—இத்தேகாதி யந்தக்கரணங்களால்வரும் காமக்குரோதாதிகளின் சேட்டைக்குத்தான் சாட்சியென்றறிவது. அகத்திலுள்ள சகலதத்துவங்களுக்குந் தான்சாட்சியா யிருப்பதாகப் பழகவேண்டு மென்பது.

அகச்சத்தானுவித்தம் :—அசங்கமாநின்றுள்ள சச்சிதாநந்த சொப்பிரகாச வடிவமே தானெனச்சிந்தித்தல். சங்கத்தியாகமாய்த் தனித்துவிளங்கிய சச்சிதாநந்தமே ஆத்மாவெனப் பழகவேண்டுமென்பது.

அகநிர்விகற்பம் :—மேலிடுகின்ற தனதனுபூதிரசந்தோன்றுங் காரணத்தான் முற்கூறிய திரிசியானுவித்தஞ் சத்தானுவித்தமிரண்டு மொருங்கே யகன்று, யசைவற்ற தீபமெங்ஙனமோ, அங்ஙனமே பக்தசங்கற்பமற்றிருத்தல். ஆத்மாநந்தத்தின் முன்பழகினவிரண்டும்நீங்கி மனங்கரைந்து நிச்சலமாய் நிற்கவேண்டுமென்பது.

இங்ஙனமாய ஆறுவிதசமாதியினாலும் யாதொன்றினும் பற்றுதலற வொழுகும் யோகீசுவரனுக்கு அவன்மனம் எங்கெங்கு செல்லுகின்றதோ, அந்தவிடமெல்லாஞ் சமாதியெனக்கூறலாம்.

வினா :—திரிசியானுவேதத்திற்குஞ் சத்தானுவேதத்திற்குஞ் சவிகற்ப சமாதியென வொன்றாச்சொல்வானேன் ?

விடை :—நாமரூபமானதிரிசியத்தை விகற்பித்துச் சச்சிதாநந்தத்தைக் கிரகித்தலினாலும், சச்சிதாநந்தமே பிரமமெனச்சிந்திக்கும் பேதமிருத்தலினாலும் இவ்விரண்டுக்கும் ஒரேநாமம் வந்ததென்க.

புறச்சமாதிமூன்றுந் தற்பதசோதனையாம். அவற்றில் முன்னைய இரண்டும் வாச்சியார்த்தமான ஈசனையும், பின்னைய ஒன்றும் லட்சியார்த்தமான பிரமத்தையும் விளக்கும். அகச்சமாதிமூன்றும் தொம்பதசோதனையாம். அவற்றின்முன்னைய இரண்டும் வாச்சியார்த்தமான ஜீவனையும் பின்னையவொன்றும் லட்சியார்த்தமான கூடஸ்தனையும் விளக்கும். இவ்விரண்டும் அசிபதத்தின் வாச்சியார்த்தமெனவும், இவற்றின் அயிக்கமான அத்துவித ஸ்வரூபமே லட்சியார்த்தமெனவும் இங்ஙனம் அனுபவமுள்ளவனே சதாசமாதியை யுடையவனென்பதும் இவற்றினும்மேலாய இறைபணியின்றென்பதும் பெறப்பட்டது.

ஆன்மா ஆனந்தவடிவ மென்பதற்கு மேற்கோள் :—"மன நிறைந்திடினமுதமாய் நிறைந்திடும் வையம்." என்பதனாலறிக.

நிர்விகற்பசமாதிக்குச் சாதனமாயிருக்கிற இயமம்முதலான பதினைந்தங்கமும் அதன்விபரமும் யாதெனின் சொல்லுகின்றோம். அவைதெனின்? இயமம், நியமம், தியாகம், மௌனம், தேசம், காலம், ஆசனம், மூலபெந்தம், தேகசமத்தன்மை, லக்ஷியதிருஷ்டி, பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை. தியானம், சமாதியென்று பதினைந்தங்கங்கள். இவற்றின்விபரம் வருமாறு :—

1. சர்வம்பிரமமென்கின்ற விவேகக்கியானத்தினாலே இந்திரியக்கூட்டத்தினுடைய நிரோதத்தை யடிக்கடிபழகுவதே இயமம்.

2. அந்தவிவேகக் கியானத்தைத்தானே விஜாதீயவிர்த்தியன்றிச் ஸஜாதீயவிர்த்திப் பிரவாகரூபமாகக் கிடைக்கும்படி நியமமாய்ப்பழகுவதே நியமம்.

3. சர்வாதிஷ்டான சச்சிதாநந்தப் பிரமசொரூபத்திற் கற்பிக்கப்பட்ட நாமரூபப்பிரபஞ்சம் அதிஷ்டானத்தைக் காட்டிலும் வேறன்றென்று தள்ளுவதே மகான்களுக்குச் சம்மதமான தியாகம்.

4. சகலவாக்குகளும் மனதோடேகூட யாதொருசொரூபத்தை விஷயிகரிக்கமாட்டாமற் றிரும்பிவிடுகின்றனவோ; யாதொன்றானது சகலயோகிகளினாலும் அடையும்படியான நித்தியமௌன சொரூபமோ, அப்படிப்பட்ட சொரூபத்தை யெப்போதும் நினைப்பதே மௌனம். வாக்குமாத்திரம் நிரோதமாகிய மௌனம் அவிவேகிகளுக்கேயொழிய விவேகிகளுக்கன்று.

5. யாதொருசொரூபத்திற் கீழ்மேல் நடுவொருவிடத்திலும் ஒருஜனமும் பரமார்த்தமாகக் கிடையாதோ; யாதொரு சொரூபத்தினாற் சகலமும்

ஆகாசத்தினற்போல வியாபிக்கப்பட்டிருக்கிறதோ, அந்தச்சொரூபமே விவேகிகளுக்கு வசிக்கும்படியான சுத்ததேசம்.

6. யாதொரு சொரூபமானது பிரமாதிசகல சராசரப் பிரபஞ்சத்தையும் நிமிஷகாலத்திற் கற்பனைபண்ணுகிறதோ, அப்படிப்பட்ட அகண்டானந்த அத்தொய்த சொரூபமே காலம்.

7. எப்படித்தேக அவயவங்களை வைத்துக்கொண்டிருக்கிறதினாலே மனதுக்குத் தேசமூலமாய் வருத்தந்தோன்றாமலெப்போதும் பிரமானுசந்தானம் கிடைக்குமோ, அதுவே சுகமாயிருக்கப்பட்ட ஆசனம்.

8. யாதொரு சொரூபஞ் சகல ஜகத்திற்கும், அதைத்தோற்றுவிக்கிற சித்தத்திற்கும், மூலமோ; அதுவே ராஜயோகிகளிருக்கிறதற்கு யோக்கியமான மூலபெந்தம்.

9. சிரவணமனன நிதித்தியாசன பெலத்தினாலே மனதுசமமான பிரமசொரூபத்தில் லயித்திருப்பது தேகசமத்தன்மையேயொழிய காய்ந்த கட்டையைப்போல வொழுங்காகத் தேகத்தை வைத்துக்கொள்வதஃதன்று.

10. விவேகக் கியானமாகிய திருஷ்டியினாலே சகலசகத்தையும் பிரமமயமாகப் பார்ப்பதே லக்ஷியதிருஷ்டி அல்லது ஞாதா, ஞேயம், ஞானமென்று சொல்லப்பட்ட திரிபுடியானது யாதொரு சொரூபத்தி லுண்டாகி யடங்குகிறதோ, அந்தச்சொரூபத்திற் றிருஷ்டிவைப்பதே லக்ஷியதிருஷ்டி. அப்படியில்லாமல் மூக்குநுனி முதலானதிற் றிருஷ்டிவைப்பது லக்ஷியதிருஷ்டியன்று.

11. சித்தமுதலானசகல கற்பிதவஸ்துக்களையும் அதிஷ்டான பிரமசொரூபமாகப் பார்த்துச் சகலசித்தவிர்த்திகளையும் நிரோதிப்பது பிராணாயாமம். அதிலஞ்ஞான தற்காரியமான சகல பிரபஞ்சத்தையும் பேதிபண்ணித் தள்ளுவது இரேசகம். பின்புநிருபாதிகமான பிரமசொரூபமே நாமென்கிற சித்தவிர்த்தியைச் சம்பாதிப்பது பூரகம். அந்தச் சித்தவிருத்தியைச் சலியாமல் நிறுத்திக் கொள்வது கும்பகம். இந்தப்பிராணாயாமமும் விவேகிகளான ராஜயோகிகளுக்குச் சொல்லப்பட்டது. அவிவேகிகளான அடயோகிகளுக்குப் பிராணசலன நிரோதரூபமான பிராணாயாமம் மேற்சொல்லப்பட்டிருக்கிறது.

12. திரிசியமான சகலவிஷயங்களையும் ஆத்மசொரூபமாகப்பார்த்து மனதைத் திருக்குரூபமான ஆத்மாவினிடத்திற் றிருப்பிக்கொள்வது பிரத்தியாகாரம்.

13. மனது எந்தெந்த விஷயத்திற்போகிறதோ, உடனே யந்த விஷயத்தைப் பிரமசொரூபமாகப் பார்த்து, அந்த மனதைச் சொரூபத்தி லிருத்திக் கொள்வது தாரணை.

14. ஒருபற்றுமன்றியிற் சச்சிதானந்தபரிபூரண பரமாத்வைத பிரத்தியகபின்ன பிரமசொரூபமேநாம், நாமே யஃதென்று பழகப்பட்ட தொடர்ந்த விர்த்திப்பிரவாகமே பரமானந்தத்தைக் கொடுக்குந் தியானம்.

15. அந்த விர்த்திப்பிரவாகந் தானேசத்தாதி விஷயந் தோன்றுமலிருக்கும்போது சவிகற்பசமாதி. இந்தப்பதினைந் தங்கத்தையும், நிர்விகற்பசமாதி கிடைத்து நித்தியநிரதிசய நிருபாதிகபரமானந்த அநுபவம்வரைக்கும் நடுவிலே விட்டுவிடாமல் வெகுசிரத்தையோடே பழகினால், அதினாலெவ்விதமும் ஈசுவரானுக்கிரகத்தினாலே நிர்விகற்பசமாதி சாக்ஷாத்காரங் கிடைத்து ஜீவன்முக்திச் சுகம் கிடைக்குமென்று ஸ்ரீ சங்கராசாரிசுவாமிகளாலே அபரோக்ஷாத்மானுபூதிப் பிரகரணத்திற் சொல்லியிருக்கின்றது.

இனி வாக்குமௌனம், கரணமௌனம், காட்டமௌனம் சுழுத்திமௌனமென்னு நான்கனுள்: வாக்குமௌனம் வசனத்தை யடக்குதலும், கரணமௌனம் இந்திரியங்களை வலிந்தடக்குதலும், காட்டமௌனம் செய்கின்ற பிராணாயாமத் தொழில்களில் திடசித்தையைப்பொருந்தி யிந்திரியங்களை மிகுந்தவலியையுடைய அடயோகத்தினால் ஜெயித்தலும், சுழுத்திமௌனம் பலவித மயக்கத்தையுடைய விச்சகத்தை ஐயந்திரிபறவாராய்ந்து தானாகிய அறிவானந்தத்தைப்பெற் றப்பூரண ஞானவடிவமாகிய சிவஸ்வரூபமே சகலசகத்துமென்னும் முடிவான சித்தாந்தமே சீவன்முக்தர்க்கியல்பினதாகும். ஆனந்தானுபூதி யுடையவர்க்காயினும், அவை யில்லாதவர்களுக்காயினு மொருதுன்பமு நெருங்காத சுழுத்திமௌனமே பிரமானந்தமென்று சத்துக்கள்கூறுப.

சத்தாகவும், அசத்தாகவும், சதசத்தாகவும் விளங்காநின்றயாவும் சித்தியாநந்தமாயிராநின்ற சிதாகாசமே யென்றெண்ணிச் சமத்துவமுஞ் சாந்தமும் பெற்றுள்ள வச்சுழுத்திமௌனத்தினரும், சாங்கியரும், யோகியருமென விருதிறப்படுவர்.

தெளிவாகிய கல்வியறிவினாலும், நாடோறுஞ்செய்யும் பூரணநிஷ்டையினாலும், பிரமாணவிசாரணையினாலும் பிரமமெனத்தன்னை புணர்ந்தவர்களே சாங்கியயோகரெனவும், யுக்தியாதியால் பிராணாதி பவனங்களடங்கின விடத்தி லெளிதாக அந்தமில்லாத மேலானபதத்தை யடைந்தவர்களே யோகயோகியரெனவுமாம். சாங்கியரடையும் நித்திய உபசாந்தபதமே யோகியர்க்குமிடமாகும்.

வாசனையென்னும் வலையினாற் கட்டுப்பட்ட வேகமுள்ள பிராணனும், மனமுமாகிய விரண்டும் பொருந்தியயற்றுங் கிரியைகண் முழுதுங்கெடுமாயினதுவே பிரமபதமாகும்.

பத்தாஞ்சூத்திரம் முற்றிற்று.

பதினொன்றாஞ் சூத்திரம்.

அவதாரிகை

இதுகாறுங்கூறிவந்ததில் எல்லாமா யல்லவுமாய் நிற்பது கண்ணெனப் பொருள்படுதலின், அக்கண் இனையதெனக் கண்டவிடத் தன்றித் தெளிவுபடாதென்பது கருதியும், பகிர்முகத்தில் திருக்கு காட்டம் வாராமையால் தியக்கமுண்டாவதைக் குறிப்பாலுணர்ந்தும், திரிபுடியிற்றானே அவ்வனுபவம் அவ்வான்மாவின்கணுள தாக மகாவாக்கியங்காரணமாக இச்சூத்திர முணர்த்துகின்றது.

பதினொன்றாஞ் சூத்திரம்.

காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போல்
காண வுள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா வன்பி னரன்கழல் செலுமே.

(இ-ள்.) காணும் கண்ணுக்குகாட்டும் உளம்போல் = காணப்படுவனவாகிய திரிசயத்தைக்காணுஞ் சிதாபாச அறிவுக்கு (அதான) ஞாதுரு, ஞானஞேயமெனமூன்றாக விகற்பித்துக்காட்டும் ஆத்மாவைப்போல, காண உள்ளத்தைக்காட்டலின் = (சற்குரு) காண்பானாகிய அவ்வாத்மாவையே திருக்குகாட்டத்தில் ஞேயமாக அறியும்படி நான்கு மகாவாக்கியங்களையு முன்னிட்டுக் காட்டலின், கண்டு = காண்பான் வெளிப்பட்டவிடத்துத் திரிசியமில்லாமையால் எனையஞான ஞேயமாகியவிரண்டுந் திசைகாணமற்போகத் தானெனப்படுவதே அபேதமாயுள்ள அறிவானந்தப் பொருளென ஐயந்திரிபறக் கண்டு, அயரா அன்பின் அரன்கழல் செலும் எ = நிரந்தர அன்பினா லச்சிவமேதானாகவிளங்கும் நிரதிசயானந்தத்தைப்பெறும். எ-று.

(ப-ம்.) அறிவானறித லறிவெனவிம்மூன்றும் அறிவான்மறையிலென்பார்:—காணுங்கண்ணுக்குக் காட்டுமுளம்போலெனவும். அறிவான் மறையாக்காற் காணுவிரண்டுமென்பார்:—காண உள்ளத்தைக் காட்டலிற் கண்டெனவுங்கூறினர். "அன்புஞ்சிவமு மிரண்டென்ப ரறிவிலார், அன்பே சிவமாவ தாரு மறிகிலார், அன்பே சிவமாவ தாரு மறிந்தபின், அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே" யென்பார்:—அயராவன்பி னரன்கழல்செலுமே யென்றுங்கூறினர்.

வாசிட்டம்: சனகராஜன்கதை, இருக்குவேத மகாவாக்கிய நிருபணம்

வெறியாரும் பொருப்புறைவோர் விழிப்புலத்தின் மேவாதோர் விளம்புகீத, நெறியார்மன் னவன்கேட்ட படியுரைப்ப நெடியவனே நினைவிற்கொள்வாய், அறிவானு மறிபொருளுங் கூடியகூட் டாவிலெழு மறிவானந்தம், பிறியாத வான்மதத் துவத்தெழுந்த தாமதனைப் பேணல் செய்வாம்.

(பொ-ரை.) வாசனைநிறைந்த மலையிலிருப்பவர்கள், நேத்திரவிடயத்திற் குப் பொருந்தாத சித்தர்கணங்கள், தங்களனுபவத்தைப் பேசாநின்ற கீதையை, நீதிகணிறைந்த சனகராசன் கேட்டவண்ணமே யாஞ்சொல்ல, ஸ்ரீராமா மனதிற்றறிப்பாய். ஞாதாவும், திரிஸ்யமும் கூடுங்கூட்டத்திலுண்டாகின்ற ஞானசுகமானது பிரிவுபடாத ஆத்மஞானத்திலுண்டானதாம். அவ்வாத்ம ஞானசுகத்தை விரும்பவேண்டுமென் றெருசித்தர் சொன்னார். எ-று.

(ப-ம்.) ப்ரக்ஞானமென்பார், அறிவானென்றும், ப்ரம்மமென்பார். அறிபொருளென்றும், இவ்விரண்டுங்கூடி கசித்துவிடத்துதித்தது கூடஸ்த பிரமமென்பார், கூட்டரவிலெழு மறிவானந்தமென்றும், அறிவு ஆனந்த மின்றி விளங்காமையால், அவ்வறிவேயானந்தமும், ஆனந்தம் அறிவையன்றி யானந்தியாதபடியால் அவ்வானந்தமே யறிவுமாய்ப் பிரிவற்றுவிளங்கியதா னென்பார், பிறியாதவாத்துமதத்துவத் தெழுந்ததாமென்றுங் கூறினர். அறிபொருளென்பதை ஈசனுருவெனக்கொள்க.

எசுர்வேத, சாமவேத மகாவாக்கியார்த்த நிருபணம்.

காண்பானுங் காண்பனவுங் காட்சியும்வா தனையுடனே கழலவிட்டு
சேண்பாவு காட்சிக்கு முதலொளியா மச்சொரூபஞ் சிந்தைசெய்வா
மேண்பாலா முள்ளதில தெனுமிரண்டி னிடைபெய்தி யிறவிலாதாய்
மாண்பான வொளிக்கெல்லா மொளியாயச் சொரூபத்தை மதித்தல்
[செய்வாம்.

(பொ-ரை.) ஞாதாவும், திரிஸ்யமும், ஞானமும், வாசனையோடும் நீங்கச்செய்து, உயர்வானபார்வைக்கு முதற்ப்ரகாசமாகிய அவ்வாத்ம சொரூபத்தை தியானஞ்செய்வோமென் றெருசித்தரும், நிலையானகுணமுடைய சத்தசத்தென்னும் இரண்டினடுவான வியாபகத்தையடைந்து முடிவில்லாததாய் மாட்சிமையான ப்ரகாசங்களுக்கெல்லாம் ப்ரகாசஞ்செய்விப்பதாகிய வாத்மஞானஸ்வரூபத்தைச் சிந்திப்போமென் றெருசித்தருஞ் சொன்னார். எ-று.

(ப-ம்.) அகமென்பார், காண்பானென்றும்; பிரமமென்பார் காண்பனவென்றும்; அஸ்மியென்பார், காக்ஷியென்றும்; இம்மூன்றினசுத்தமான ஜீவேஸ்வர பிரமத்தோடும், இவற்றின் சுத்தமான கூடஸ்தபிரம அவிக்கியத்தையும் நீக்கென்பார், வாதனையுடனே கழலவிட்டென்றும், இவையாவுமாய் விளங்குவது ஸ்வயம்பிரகாசமென்பார், முதலொளியாமென்றுங் கூறிப்பின்பு, தற்பதமென்பார் உள்ளதென்றும், தொம்பதமென்பார் இலதென்றும், அசிபதமென்பார் இரண்டினிடையெய்தியென்றும், இச்சீவேஸ்வர கூடஸ்தபிரமமென்கின்ற நான்குசைதன்னியமுநீங்கிய சுயஞ்சைதன்யமென்பார், ஒளிக்கெல்லாமொளியாயச் சொரூபமென்றுங் கூறினர். இலதென்பதைச் சீவசிதாபாசனெனக்க.

அதர்வணவேத மகாவாக்கியார்த்த நிரூபணஞ்செய் திவைகளைத்தவிர வேறனுபவங் கூடாதேனல்.

அகமகமென் றனைத்துயிரி னிடத்து மிருந் தனவரத முரைப்பதாகி
நிகழொளிபா யான்மதத் துவமான சொரூபத்தை நினைதல்செய்வாந்
திகழிதப குகையுறையுந் தேவதையை விட்டயலே தெய்வந்தேடன்
மிகவரிபகவுத்துவத்தைபெறிந்துசிறுமணிதேடும் வேட்கைபோலாம்

(பொ-ரை.) நானனென்று சகலவாத்மாக்களிடத்துமிருந்து சதாகாலமுஞ் சொல்லுவதாய் ப்ரகாசமாக விளங்காநின்ற ஆத்மஞானமாயவஸ்துவை சிந்திப்போமென் றெருருசித்தரும் சொன்னர். விளங்காநின்ற தனதுளத்தி லெழுந்தருளியிருக்கும் தெய்வத்தைவிட்டு வேறனதெய்வந்தேடுதல் மிகவுமருமையான கையிலிருக்குங் கவுத்துவரத்தினத்தை யெறிந்துவிட்டு சங்குமணிதேடுகின்ற ஆசையைபொத்திருக்கும். எ-று.

(ப-ம்.) அயமென்பார், அகமகமென்றனைத்துயிரி னிடத்திருந்தென்றும், இவ்விரண்டாகியும் விளங்குகின்ற பிரமமென்பார், நிகழொளியா மாத்துமதத்துவமான சொரூபமென்றுங் கூறினர். அனைத்துயிரினிடத்து மிருந்தென்றதை ஈஸ்வரபதமெனக்கொள்க.

நிராசையுள்ளவர்க்கிவ் வனுபவங்கிடைக்குமேயன்றி அஃதிலார்க்கின்றேனல்.

மாளாத காதலெனும் வர்ச்சநா பிக்கொடியின் வனத்தைச்சுட்டு
நீளாசை யனைத்துமறுத் தவர்க்கன்றோ விப்பயன்றானோரநிற்குங்
கோளான பொருளனைத்தின் முன்பொடுபின் பினிமையிலாக்குற்றந்
மீளாதபாவனையாற்கட்டுண்பார்வேசரியேவேறொன்றன்றால். [கண்டு

(பொ-ரை.) முடிவில்லாதவாசையென்கின்ற விடவல்லியின் காட்டையெரித்து மிகுந்த இச்சைகளியாவையுங் கெடுத்தவர்க்கல்லவா இவ்வாத்மலாபமானது கிடைக்கும். தீமையானவஸ்துகளனைத்திலும் முன்னும் பின்னுமின்பமில்லாத குற்றத்தைப்பார்த்திருந்தும் திரும்பாதபாவனையால் பந்தப்படுபவர்கள் கழுதையேயல்லாமல் வேறொன்றுமல்ல. எ-று.

உற்பத்திப்பிரகரணம்: ஆத்மஸ்வரூபநிரூபணம்.

தோன்றியவை விளக்கத்தா லுண்மையா மைம்பொறிக்குந்
தொடர்பாய்நிற்கும், ஆன்றபதார்த் தங்களெலா மறிவினா லொழிந்
துண்மை யாகமாட்டா, ஏன்றறிவா னறிபொருளா மிரண்டினிடை
யறிவானுக் கியைந்தரூப, மூன்றியறி பொருளறிவா னறிவிலிவை
யுற்றிடுவ துயர்ந்தவீடு.

(பொ-ரை.) தோற்றப்பட்ட மாயாவஸ்துக்களானவை ஞானப்ரகாசத்தினால் உள்ளனவாகும். பஞ்சேந்திரியங்களுக்கும் சம்பந்தமாயிருக்கின்ற மிகுந்த வஸ்துக்களியாவும் ஞானத்தினாலல்லாமல் உள்ளவைகளாகமாட்டாவாம். உண்டாகிவரு ஞாதாவும் ஞேயமுமாகிய இரண்டினுடையமத்தியில் ஞானாத்மாவுக் கிசைந்தவடிவம் சார்ந்தறியப்பட்ட விடயவஸ்துக்களும் இவைகளை யறியப்பட்ட ஞாதாவும் ஞானமு மில்லாததாகியும் இவைகளைப் பொருந்துவதாகியு மிருக்கின்றதே மேலான மோக்ஷமாம். எ-று. திரிபுடிக்கு விலக்ஷணமாகியுஞ், சலக்ஷணமாகியு மிருக்கின்ற வஸ்து மத்தியகதசொரூபமாய் விளங்குமென்பதாம்.

ஆத்மானுசந்தான நிரூபணம்.

ஓரிடம்விட் டோரிடத்தே யுள்ளமுறி லவற்றினடு வுண்மையாகிப்
பேரிலதா யுணர்விலதாய்ச் சடமிலதா யதுநீயாய்ப் பிரியேலென்றுங்
கூரியபுந் தியினாலே யூகித்துக் குடும்பியெனுங் குறிப்பைமாற்றித்
தூரியதாம் படிமனத்தின் றுவக்கறுத் துவிருந்தபடி துணிந்துநிற்பாய்.

(பொ-ரை.) ஒருவிடயத்தினின்று மற்றொன்றில் மனம் பொருந்தினால் அவ்விரண்டின் மத்தியில் சத்தாமாத்திரமாகியும், நாமமில்லாததாகியும், அறியத்தகாததாகியும், விடயமில்லாததாகியும் இருக்கின்ற அதுவென்னும் பிரமமும் நீயென்னுங்கூடஸ்தனும் ஐக்கியமான சிதானந்தஸ்வரூபமாய், எக்காலமும் பிரிவற்றிருப்பாய், மிகுந்த நுட்பமாகிய வறிவினால் யுத்தியாய் விசாரித்து, நான் சம்சாரியென்கின்ற கருத்தைக்கெடுத்து வேரோடு கெடும்படி மனத்தின் றொந்தங்களைக் கெடுத்து சுபாவமாயிருந்தபடியே தெளிந்திருப்பாய். மனதை யாத்மாவிற் கரைக்கவேண்டுமென்பதாம்.

பிரமகீதை: கேனோபநிஷத தாற்பரியமுரைக்கு மத்தியாயம்.

தனக்குமெய்ப் பிரமம் விடயமா யிராமற் ருனதன் சாட்சியா யிராமற்
றனிற்பிறி தறத்தா ஞகவப் பாத்தை யறிந்தவன் ருனறிந் தவனுந்
தனிற்பிறிந் தறியா தவனறிந் தவனு மறிந்தவன் ருனறிந் திலனு
முனற்கரும் பிரம முணர்ந்தவர்க் குணர்வன் றுணர்வுறுர் தமக்கு
[ணர்ந் ததுவாம்.

அமிர்தசாரம்: அதீததரிசனம்.

அறிவெள் பதனு லறியும் பொருளு
மறிவு மறிவானு மாகும்—பிறிதின்றிச்
சொல்லாட வில்லாத் துரியாதீ தம்பிறக்க
வெல்லா மவிழ விரு.

ஸ்ரீகுமாரதேவர்.

அறிபொரு ளறிவோ னறிவினைக் கொடுப்போ னுனமுப் பொருளுமோர் விடயம், பொறியுறப் பிடித்தா லுளவிதை விடுத்தோர் பொருளொா டுதன்முன ரிடையே, பிறிவறத் தோன்றுஞ் சொரூபமின் னிலையிற் பேசுமுப் பொருள்களு மிலவாம், கிறியற வறிதியென்றனள் விருத்த கிரியமர் பெரியநா யகியே.

வள்ளலார்சாஸ்திரம்: ஞானவிளக்கம்.

சத்து மசத்துஞ் சதசத்து நீயல்ல
சுத்தசிவ நீயென்று சொல்லினன்—மொய்த்தெழுந்த
கல்லாலின் கீழிருந்து கதிகாண நால்வர்க்குஞ்
சொல்லாமற் சொன்ன துரை.

ஒருபொருளை நீத்தங் கொருபொருளைப் பற்றி
யிருபொருளும் போக்கி யிடையே—யொருபொருளு
மற்றநிலை யேதோ வஃதுன் னிலையென்றான்
குற்றமற்ற ஞான குரு.

ஆக்கைநீ யல்ல வறிவுநீ யென்றுமறை
வாக்கியங்கள் நான்கும் வகுத்துரைத்து—நோக்காமல்
மீட்சிதரு மீசன் விழியெதிராய் முன்னின்று
காட்சிதா வென்னுங் கடை.

கம்பராமாயணதோத்திரப்படலம்

பிறியிலா வுயிரு முடலும்வா சகத்துப் பேர்களாய்ப் பொருளு மாய்க் கெனவும், வெறியுநன் மலரு மெள்ளுமெண் ணெயும்போல் விரிந்தவப் பொருள்களின் மேவிக், கருவிமேன் முயலுங் காரிய மாகிக் கண்ணுமாய்க் கருத்தனு வாகி, அறிவுமாய் அறியப் படுவதா யறிவா ராயினு யாருனே யறிவார்.

திருமந்திரம்.

வேதாந்தங் கண்டோர் பிரமவித் தியாதரர்
நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற யோகிகள்
வேதாந்த மில்லாத சித்தாந்தங் கண்டுளோர்
சாதா ரணமன்ன சைவ ருபாயமே.

விண்ணினைச் சென்றணு காவியன் மேகங்கள்
கண்ணினைச் சென்றணு காப்பல காட்சிகள்
எண்ணினைச் சென்றணு காம லெனப்படு
மண்ணலைச் சென்றணு காப்பசு பாசமே.

ஒன்று மிரண்டு மிலதுமா யொன்றாக
நின்று சமய நிராகார நீங்கியே
நின்று பராபரை நேயத்தைப் பாதத்தாற்
சென்று சிவமாதல் சித்தாந்த சித்தியே.

சன்மார்க்க சாதனந் தான்ஞான ஞேயமாம்
பின்மார்க்க சாதனம் பேதையர்க் காய்நிற்குந்
துன்மார்க்கம் விட்ட துரியத் துரிசற்றோர்
சன்மார்க்கந் தானவ னாகுஞ் சன்மார்க்கமே.

நீங்காச் சிவானந்த ஞேயத்தே நின்றிடப்
பாங்கான பாசம் படரா படரினு
மாங்கார நீங்கி யதனிலை நிற்கவே
நீங்கா வமுத நிலைபெற லாமே.

ஞேயத்தே நின்றோர்க்கு ஞானாதி நின்றிடு
ஞேயத்தின் ஞாதுரு ஞேயத்தில் வீடாகு
ஞேயத்தின் ஞேயத்தை ஞேயத்தை யுற்றவர்
ஆயத்தி னின்ற வறிவறி வாரே.

தற்பர மல்ல சதாசிவன் ருனல்ல
நிட்கள மல்ல சகள நிலைபல்ல
வற்புத மாகி யநுபோகக் காமம்போற்
கற்பனை யின்றிக் கலந்துநின் ருனே.

முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்கா
ளகத்திற் கண்கொண்டு காண்பதே யானந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்ருற் சொல்லுமா றெங்ஙனே.

ஆத்மபோத டீகா.

(அ-கை.) ஞாதுருஞானஞேயமென்கிற. திரிபுடிஞானமுண்டாயிருக்கும்போது ஏகத்துவபாவனையான தெப்படிக்கூடுமென்று சங்கித்துக்கொண்டு அதற்குச் சமாதானஞ்சொல்லுகின்ருர்.

சு. அறிகிறவனும் விர்த்திஞான்மாயு மறியப்பட்ட விடயங்களாயுமிருக்கின்ற திரிபுடிகளுடைய பேதப்பிரதீதியானது மாயாவவித்தையா காரியங்களுக் கன்னியரான வாத்மாவினிடத்திலில்லை. பின்னையோவென்ருல்? மாயாவவித்தியா கற்பிதங்களான ஜீவேசுராளிடத்திலே யிருக்கின்றது. ஆனலாத்மா வெப்படி விளங்குகிருரென்ருற் சிதானந்த வேகசொரூபியாய்த் தானேதானுய் விளங்குகிருர்.

(பொ-ம்.) மாயாவவித்தையா விலக்ஷணமாயிருக்கின்ற சுத்தசைதன்னியத்திலே ஞாதுருமுதலான பேதங்களொன்றுமில்லை கேவலஞ் சச்சிதானந்த சொரூபியானபடியினு லாபாசங்களொன்ருமேஞ் சேராமற் ருனேயாய் விளங்குகின்ருர்.

அத்தக்கரணமாகிற அரணி(கட்டை)யிலே மனனமாகிற மேலரணியை வைத்துச சொரூபத்தியானமாகிற மதனவியாபாரத்தைச் சர்வகாலமுஞ் செய்யும்போ துண்டாகாநின்ற பிரமாபரோக்ஷ சாக்ஷாத்காரரூபமாகிய வகண்டாகார விர்த்திக்ஞானமாகிற வக்கினிச்சுவாலையானது ஆவரண விக்ஷேபமாதிப் பரிவாரங்களுடனேகூடிச் சொச்சொரூபத்தை யறியவொட்டாமல் மறைத்துக்கொண்டிருக்கிற மூலாக்ஞானமாகிற விந்தனத்தைத்தகிக்கு, மிப்படியஞ்ஞானமதன்பரிவாரத்தோடும் பஸ்பமானவுடன், இந்த முமுக்ஷுவானவனுத்மசாம்பிராச்சிய சிம்மாசனத்திலே பட்டாபிஷேகம் பண்ணப்பட்டுக் கிருதகிருத்தியனுகவிருப்பன்.

சிவஞானமுனிவர்—கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதி.

(ஞாதுரு, ஞான, ஞேயம்.)

மாய னாயினை மறையவ னானாய் மன்னு யிர்த்தொகை யனைத் தையு மொடுக்கும்; பாயு மால்விடை யுருத்திர னானாய் பன்னு மூவர்க்கு மூலமாய் நின்றாய்; ஞேய மாயினை ஞாதிரு வானாய் நிகழு ஞானமு மாயினை யெந்தாய்; வேய தோளுமை பங்குறை நீல மிடற்ற னேதிருக் கலைசையுத் தமனே.

மண்ணீர் விசும்பு கனல்கா லருக்கன் மதியாவி யென்னு முறையா
லெண்ணீர்மைகொண்டவிவையெட்டுமன்றியுலகென்பதில்லையிவையே
யண்ணா வுனக்கு வடிவாகு மென்னி லவைதோ றுயிர்க் குயிரதாங்
கண்ணான தெய்வமெவர்வே றுளார்கள் கலைசைப் பதிக்கி றைவனே.

திருவேகம்பர்—ஆனந்தக்களிப்பு.

ஞானமு ஞேயப் பொருளும்—பற்றும்,
ஞாதாவு மில்லையென் பார்க்கரியாராம்,
ஞானமு ஞேயப் பொருளும்—பற்றும்,
ஞாதாவு மாய்ப்பகுப் பார்க்குமெட் டாராம். ஆனந்தம்.

சிவஞானசித்தியார் ௰௧-ம் சூத்திரம் 2-ம் செய்யுள்.

பரஞானத் தாற்பரத்தைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் பலஞான மஞ்ஞான விகற்பம்
வாச்சியவா சகஞானம் வயிந்தவத்தின் கலக்கம்
தருஞானம் போகஞா திருஞான ஞேயங்
தங்கியஞா னஞ்சங்கற் பனைஞான மாகுந்
திருஞான மிவையெல்லாங் கடந்தசிவ ஞானம்
ஆதலாற் சீவன்முத்தர் சிவமேகண் டிருப்பர்.

(போ-ரை.) அபரோக்ஷஞானத்தாற் பரசிவத்தைத்தரிசித்தோர் அச் சிவந்தானாகவே கண்டுகொண்டிருப்பர், அதனால் திரிசியப்பொருள்களைக் காணமாட்டார். "யாவையுஞ்சூனியஞ்சத்தெதிர்" என்றபடி அத்திரிசி யத்தைக் கருவிகளோடுங் கூடிநின் றறியவருஞானம் விஷயகதப் பிரத்தி

யக்ஷஞானமாம். சுருதியினல் அஞ்ஞானபேதங்களை யாராய்ந்தறியுஞானம் சாத்திரசன்யமாகிய பரோக்ஷஞானமாம், அச்சாத்திரம் பலவேறுவகைப்பட விரிந்துகிடக்குமாதலால் அபக்குவர்க்கு இதுசரியோ அதுசரியோ என்ற கலக்கமுண்டாகும். தனுகரணபுவனபோகங்களை மெய்யெனநம்பி அனுப விக்குந் திரிபுடிஞானம் கற்பனைபெருகிய சங்கற்பபேத ஞானமாகும், அழ யெஞானமாவது திரிபுடிரகிதமான சிவஞானமாதலால், சீவன்முத்தர் அனு பூதியிற் சிவமேதானுகக் கண்டுகொண்டிருப்பர். இதனைப் பன்னிரண்டாஞ் சூத்திரத்தில். "அறிவரியான்றனையறிய" வென்னுமூன்ருஞ்செய்யுளில். "குறியோடுதாமழியு நெறியதனுற் சிவமேயாய் நின்றிடுவர்." என்பதற் குரை அவ்வாறு கூடுங்காலத்து குறியும் குறிக்கின்றதாமுமின்றி நின்றதன் மையானும் சிவமேயாவர் என திருவாவடுதுறை ஆதீனச் சைவப்பிரசாரகர் தூத்துக்குடி, பொ. முத்தையபிள்ளை யெழுதியவாற்ருனும் உய்த்துணர்ந் துய்க. மாதவச்சிவஞானயோகிகள் உரையைத்தழுவியது.

ஷ 8-ம் சூத்திரம் 22-ம் செய்யுள்.

சன்மார்க்கஞ் சகலகலை புராண வேத சாத்திரங்கள் சமயங்க டாம்பலவு முணர்ந்து, பன்மார்க்கப் பொருள்பலவுங் கீழாக மேலாம் பதிபசுபா சந்தெரித்துப் பரசிவனைக் காட்டு, நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான ஞேயமொடு ஞாதுருவும் நாடா வண்ணம், பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றி ஞானப் பெருமையுடை யோர்சிவனைப் பெறு வர் காணே.

என்றுங் கூறியவைகளை மறைத்துக் கொண்டமுக்காருதிகளை மேற் கொண்டு ஷ சித்தியார் மறுத்தலை யெடுத்துக்காட்டுதும்.

சிவஞானசித்தியார்.

நீடு வேதமன வாக வேகமெனு நீதி தானிகழ்வ தாகுமே
ஞாடி ஞாதுருவு ஞான ஞேயமுட ஞளு நான்மறையு மோதவா
லோடு மாகுமுன தேக மோதுமிவை யூன மாகியுரை மாறுகோள்
கூடு மாகுமநு பூதி தானுமது கூடி டாதறிவி லாமையே,

என்னுஞ் செய்யுளுக்கு இவரினத்தவர்கள் "அநாதியே யுண்டாகிய வேதம் வரையறையாகப் பிரமமொன்றேயென்று சொல்லுவதாக நீ சொன் ஞய்; அப்படியாயின் அந்த வேதத்தில் ஞாதுருஞானஞேயமாதிய மூன்று முதலு முண்டெனவேதெரிந்து நாடோறுஞ்சொல்லுதலால் நீ ஒன்றென்று சொல்லுஞ்சொல் அவ்வேதவாக்கியங்கொண்டே பின்னிடாநிற்கும். இன் னும் நீ பிரமம் ஒன்றேயென்றும், அகம்பிரமமென்றுஞ் சொல்லுஞ்சொற்

கள் குற்றப்பட்டுத் தத்துவமசியென்னும் வாக்கியத்தோடு மாறுகோடலைப் பொருந்தும். உனக்கு ஆன்மா வில்லையாதலாலே அநுபூதிதானு முண்டாக மாட்டாது" என்றுரையிட்டிருக்கிறார்கள். அது கூறியவிஷயத்தைக் கவனிப்பாம்.

(1) பிரமம் ஏகமென்றுகூறியவேதம் ஞாதுரு, ஞான, ஞேயமுண்டென்றுங்கூறுதலால் அவ்வேதத்தினாலேயே பிரமம் ஒன்றென்னுஞ்சொல் பின்னிட்டுப்போம் என்பதும்,

(2) உனக்கு (வேதார்த்திக்கு) ஆன்மா வில்லையாகையால் அநுபூதி கூடாதென்பதுமாம்.

முதலாவதின்மறுப்பு: பிரமம் ஏகமென்று கூறியவேதம் ஞாதுரு, ஞான, ஞேயத்தைப்பற்றிக் கூறியதினால் அதற்கு (வேதத்திற்கு) ஞாதுரு, ஞான, ஞேயமென்பவை சத்தாயுண்டெனச் சம்மதமன்று.

வராகோபநிஷத் 2-ம் அத்தியாயம்.

"இருக்கிறதென்கிறவஸ்து இருக்குமானால் அப்படியிருக்கிற லட்சணத்தையுடையது பிரமந்தான்" என்றும்;

ஷை 3-ம் அத்தியாயம்.

"கிளிஞ்சலில் வெள்ளிஎப்படிக் கற்பிக்கப்பட்டிருக்கிறதோ அப்படியே என்னிடத்தில் மாயாமயமான மகதாதிஜகத்தானது கற்பிக்கப்பட்டிருக்கிறது" என்றும்;

ஆத்மபோதோபநிஷத்.

"பழுதையில் பாம்புமுதலியனபோல் பிரபஞ்சத்திற்காதாரரூபமாய்ப் பிரமசத்துமாத்திரமே சூழ்ந்துகொண்டிருக்கிறது. ஆகையால் ஜகத்தில்லை" என்றும்;

கூறுதலினால் வேதம் ஞாதுரு, ஞான், ஞேயமென்று கூறுதலினாலேயே ஞாதுருவாதிகள் சத்தாகா. ஞாதுரு, ஞான், ஞேயங்கள் விவகாரத்திலுண்டென்றும், பாரமார்த்திகத்தி லில்லையென்றும், வேதம்விதந்துகூற, அஃதறியாது பிரமம் ஏகமென்று கூறியவேதம் ஞாதுரு, ஞான, ஞேயமுண்டென்றுங் கூறுதலால், அவ்வேதத்தினாலேயே பிரமம் ஒன்றென்னுஞ் சொல் பின்னிட்டுப்போமென்றுகூறிய சிவஞானசித்தியே வேதப்பொருளையறிய விரகின்றிப் பின்னிட்டது. வேதப்பொருளை யறியாது வேண்டியபடி கற்பித்துக்கொண்டு வெளிவந்தாடிக்கும் வேதபாகியமான சிவஞானசித்தி

முதலிய நூலினை யிவர்துணைக்கொண்டது எருமைவாலைப்பிடித்து ஏரியி லிறங்கினதற்கினமாமென்க.

பிரபுலிங்கலீலை—இட்டலிங்ககதி.

தனுவுள வளவுமோர் தகுநற் செய்கையும்
மனமுள வளவும்பா வனையு ஞானமுண்
டெனவுள வளவுஞே யமுமி யைந்தவன்
பினையுள வளவுநோய் பிறர்க்க கற்றுமே.

(இ-ள்.) தேகமுள்ளவரையும் தகுந்த ஒப்பற்ற நற்செய்கைக்கும், மனமுள்ளமட்டும் அது நசிக்கததக்க பாவனைக்கும், ஞானமுண்டெனக் கொள்ளுமளவும் பேதரகிதமான வானந்தத்திற்கும், உள்ளவாறுசெய்யவிசைந்தவன், பின்னர்த்தானுள்ளவளவும் பிறவிரோயை அபலவருக்கு நீக்கவல்லவனுவான். ஞேயமெனல் பிரியத்தை எனவே, ஞெப்திக்கயலாகாது நிற்றலைப் பெற்றும்.

ஷை கதலிவனகதி.

பூத நீயலை பொறிகளு மலையலை புந்தி
யேது நீயலை யிவற்றினை மயங்கியா னென்னும்
போத நீயலை யென்றிவை யனைத்தையும் போக்கிச்
சோதி யாகிய பிரமமே நீயெனச் சொல்லி.

(இ-ள்.) பஞ்சபூதங்களு நீயல்லை, ஐம்பொறிகளு நீயல்லை, புத்தியு நீயல்லை, மற்றவெதுவு நீயல்லை, இவற்றை மெய்யென மயக்கமுற்று நானென்றுகொள்ளும் அறிவு நீயல்லை, என்றூராய்ந்து இவைகளையெல்லா மொருங்கேயொழித்து, சோதிவடிவமாகிய பிரம (ஸ்வரூபமே) நீயென்றுவிளக்கி,

(ப-ம்.) நீயாகியவறிவையன்றிச் சுயஞ்சோதியும், சுயஞ்சோதியை யன்றிப் பிரமமெனலும் வேறின்மையின், சோதியாகிய பிரமமே நீயெனச் சொல்லியென்றூர். குணகுணியெனப் போதிப்பாரைமறுக்கச் சோதியாகிய பிரமமென்றூர். காலைமாலையால் ஒளிகுன்றியதுபோற் றோற்றினுஞ் சூரியனுக் கியல்பன்றாதல்போன்று பருவத்தாலான்மா வொளிகுன்றியதுபோற் றோற்றினு மதற்கியல்பன்றென்க. இங்கே போதமெனல் கற்பனுவறிவை.

ஞேய ஞானஞா துருவெனு மிவைபல நிற்கு
மாயின் வேறறு முத்தியன் றதுசக மாமென்
றேயு மாறிது வதுவெனுஞ் சுட்டிலா வியல்பை
மாயை மாறிய தேவிபா லருளினன் வள்ளல்.

(இ-ள்.) ஞேய, ஞான, ஞாதருவென்கின்ற இவைகள் பலவாக வெங்கனுநிற்குமாயின் ஐக்கியமுத்தியன்று; அம்முத்தி திரிஸ்யமாகிய பதமுத்தியாமென்று பொருந்தும்வண்ணம் கூடஸ்தபிரமமென்னுஞ் சுட்டிறந்த இயல்பை, என்றுமிருந்தபடியிருக்கு மியல்புவடிவை மாயாசம்பந்தங் கடந்த மாதேவியிடத்தில் அல்லமன் அனுக்கிரகித்தான். இவை பலநிற்ற லெனல். திரிபுடியல்லாத காட்சிப்பொருள் கருத்துப்பொருளின்றெனக் காட்டற்கென்க. வேறறுமுத்தியென்றதனல், ஐக்கியமுத்தியென்றுங் கற்பனையிறந்த விடத்தாதலின், இதுவதுவெனுஞ் சுட்டெனலைக் கூடஸ்தபிரமமென்றுங் கொண்டாம். இங்கே யியல்பெனல் அதிஷ்டான வாரோபங் கடந்த நிலையை, எயுமாறெனல், தக்கசிந்தனை திண்மைக்கியைந்த (நிலையை) யெறிவை.

இரண்டாவதின்மறுப்பு:— உனக்கு (வேதாந்திக்கு) ஆத்மாவில்லை, ஆகையால் அநுபூதிகூடாதென்று கூறியதும் மிகுவிந்தையாயிருக்கின்றது! அநுபூதியென்பது ஈண்டுத்திரிபுடியற்றநிலையை, அதாவது ஜீவத்துவங் கழன்றநிலை, இந்நிலையைத்தான் அநுபூதிமான்கள் அப்பிரதிபந்த அபரோட்ச சாட்சாத்காரமென்று கூறுப.

அவ்வநுபூதியில் வேதாந்திக்கு ஆன்மாவில்லையென்று ஷை சிவஞான சித்தியார் கூறுவது "மாண்டூக்கிய உபநிஷத்தில், இந்த எல்லாவஸ்துக்களும் பிரமந்தான். இந்தப் பிரணவம் ஆத்மாவாகிய பிரமந்தான். இந்த ஆத்மாவானது நான்குபாதங்‡ களையுடையது" என்று கூறும் பிரமமாகிய ஆத்மாவையா? அல்லது இருவினைவயத்தாற் பிறந்துழலும். சீவனாகிய ஆத்மாவையா? இவ்விரண்டில் எது? பிரமமாகிய ஆன்மாவில்லையென்பது கூடாது. வேதாந்திக்கு அநுபூதிநிலையில் சர்வதுவைத முமபாதமாய் ஆத்மாவே அதாவது பிரமமே மிஞ்சுகின்றதென்பது வேதாந்தத்தின் சித்தாந்தமாதலாலென்க. ஆன்மாவென்பது சீவான்மாவையுங் குறித்தலால், ஷை சிவஞானசித்தி வேதாந்திக்கு அநுபூதிகூடாது. ஆன்மா இல்லாமையா லென்றது சீவான்மா இல்லாமையாலெனின், சீவான்மாவுள்ளவிடத்தில்

---

‡ சர்வசார உபநிஷத்து:—பிரஹ்மம், சத்தியம், ஞானம், அநந்தம், ஆனந்தம். சத்தியம்= அவிநாசி. அவிநாசியாவது தேசகாலவஸ்து நிமித்தங்கள் நசிக்குமிடத்து எது நசிக்கிறதில்லையோ அஃதவிநாசி. ஞானமாவது =உற்பத்திநாசமில்லாத இடைபீடின்றிய சைதன்னியம் ஞானமெனப்படும். அநந்தமாவது= கடம், ஆபரணம், படங்களில், மண், சுவர்ண, நூலினைப் போல அவ்வியத்தாதி சிருஷ்டிப் பிரபஞ்சங்களில் பூர்ணவியாபகமான சைதன்னியம் அநந்தமெனப்படுகின்றது. ஆநந்தமாவது சுகசைதன்னியசொரூபமும் அபரிமித ஆநந்தசமுத்திரமுமான அவசிஷ்டசுகஸ்வரூபம் ஆநந்தமெனப்படுகின்றது.

ஞானஞேயங்கள் அவசியமிருக்கு மாகலினனும், இதுவே திரிபுடியாகலின னும், திரிபுடியுள்ளவிடத்தில் துக்கமே நிகழுகின்றதினலும், துக்கநீக்கம் திரிபுடி நீக்கத்திலாகலினனும் அத்தகையநிலையில் சீவான்மா இருக்கவே ண்டுமென்பது சிவபூசைகாலத்தில் நாஸ்திகபுத்தி யிருக்கவேண்டுமென்பது போலாம். மேலும் துக்கசொரூபனுகிய சீவன், தனதெதார்த்த சொரூபத் தில் பாத *சமானுதிகரண மடைவதற்குமுன்னர் அநுபூதியுண்டாமென்பது ஆமைமயிர்போலாம். இன்னும் சீவனுள்ளநிலை பேதநிலையாகலின் ஆண்டு அநுபூதியுண்டெனல் அசங்கதமாமென்றறிக.

உண்மையானபிரமத்தில் இன்மையான சகசீவபரந் தோற்றுமாயின், அந்தப்பிராந்தி யாருக்குவருமென்ற வினவிற்கு விடை :—

"பொய்ப்பொருள் கற்பிதமாயிற் றவிகாரியாகப் பொருந்துமுயி ரிடத் தெனின்முன் பிராந்தியார்க் கென்னி, லொப்பில்சதி பதிரதிமாலுருவச் சொற் பனந்தா னெருமுனிவன் பாலுதிப்பி லதனலங் கவனுக், கெப்பழுது மிலாததுபோற் சான்றுமான் மாவி லிலங்குதந வுருவமாம் பகுதியினன் மருளு, மெய்ப்பரிய ஞாதிருவும் பிராந்தி ஞா னமும்பொய் விடயஞே யமும் வரினு மவற்கிடையூ றிலையே."

(இ-ரை.). பிருதிவிமுத னுததத்துவ மிறுவாக்கிடந்த பொய்ப்பொ ருளாகியதத்துவங்க ளென்றும் நிர்விகாரியாக விளங்கிக்கொண்டிருக்கும் ஆன்மாவிடத்தெங்ஙனங் கற்பிதமாக வுதித்ததெனின், முற்கூறிய பிராந்தி யானது யாருக்கெனவினவரும். அங்ஙனம்வரின் நிகரில்லாத கற்புடைத்

* சமானுதிகரணம்=வெவ்வேறு அர்த்தங்களுடன்கூடிய இரண்டுபதங் கள் ஒரேவேற்றுமைப்பலத்தால் ஒரேபொருளைக் குறிப்பித்தல் சமானுதிகா ணமாம். அதுவும் முக்கிய சமானுதிகரணமென்றும், பாத சமானுதிகரண மென்றும் இருவகைப்படும். எந்தவஸ்துவிற்கு எந்தவஸ்துவுடன் சங்கம் எப்போதும் அபேதமாயிருக்கிறதோ, அந்தவஸ்துவிற்கு அதனுடன்சங்கம் முக்கிய சமானுதிகரணமெனப்படும். இதற்குதாரணம்: கடாகாசத்திற்கு மகாகாசத்துடன் சங்கம் எப்போதும் அபேதமாயிருத்தலின் முக்கிய சமா னுதிகரணமாம். எந்தவஸ்து பாதிக்கப் (பொய்யென்று நிச்சயிக்க) பட்டு எத்துடன்சங்கம் அபேதப்படுகிறதோ, அந்தவஸ்துவிற்கு அதனுடன்சங்கம் பாத சமானுதிகரணமெனப்படும். இதற்குதாரணம்: பிரதிபிம்பமுகமும், யதார்த்தமுகமும், அல்லது ஆரோபமான அரவும் அதிஷ்டானமான கயிறு மாம். பிரதிபிம்பமுகமும் அரவும்பாதிக்கப்பட அவற்றினுக்கும், பிம்பமுக மும் கயிறுமாகிய இவற்றினுக்கும் பாத சமானுதிகரணமாம். இவ்வுவமை களுக்கிணங்க முக்கிய சமானுதிகரணத்துக்குக் கூடஸ்தபிரமத்தையும், பாத சமானுதிகரணத்துக்குச் சீவபிரமத்தையும் அறிவுடையோர்க ளமைத்துக் கொள்வார்கள்.

தலைவியும் தலைவனுங் கூடியனுபவிக்கும் ரதிகாங்கிசையென்னு முருவமாக வோர் சொப்பனமானது ஓர் யோகீசுவரனிடத்தி லுதிக்துமாயின், அந்தச் சொப்பனத்தால் அங்ஙனமாக நின்றுள்ள வந்தயோகீசுவரனுக்கு யாதோர் கலக்கமு மில்லாதமையுமாறுபோன்று, என்றுஞ்சாட்சியாய் நின்றுள்ள ஆன்மாவினிடத்தில் விளங்காநின்ற குணரூபமாக நின்றுள்ள மூலப்பிரகிருதியினல் மருளத்தக்க மெய்யையிழந்த ஞாதாவும், பிராந்திஞானமும், மித்தியா விஷயமான ஞேயமுந் தானேவரும். வரினும், அந்த ஆன்மாவாகிற புருஷனுக்குக் கலக்கமில்லை. எ-று.

(க-து.) யோகீசுவரனுக்குத் தன்பாலெழுந்த மோகசொப்பனத்தாற் சற்றுங்கலக்கமில்லாத வாறுபோன்று ஐயந்திரிபின்றி விளங்கும் ஆன்மாவுக்குத் தன்பாலெழுந்த பிராந்தித்திரிபுடியாற் சற்றுங்கலக்கமில்லை என்பது.

சகசநிஷ்டையையுடைய யோகிக்கு இச்சாக்கிரத்திற் பிரார்த்தவசமாய் எவ்வித அனுபவம்வந்தாலும், அவற்றைத்தனது பிரமானந்தமாய் அனுபவித்தலின் இவ்வுவமானங் கூறியதென்க. உயிர் அவிகாரியென்றதனற் கூடஸ்தனும். ஆகவே, அதுவே பிரமமென்பதாயிற்று. முனிவன்போல ஆத்மா, கனவைப்போலச் சங்கற்பம், சதிகேளிமயக்கம்போலத் திரிபுடிகள்.

தானேதிருக்குந் திரிசியமுமாயின் திரிபுடிவாக் கணக்கென்னையென்ற வினவிற் குத்தரங்கூறல்.

வெண்பா.

அறிவா னறித லறிவனவிம் மூன்றும்
அறிவான் மறையி லறிவான்—மறையாக்காற்
காணு விரண்டுமெனிற் காணுவா றெங்ஙனென
மாணு வஃதுரைப்ப மற்று.

(எ-து.) காண்பான் வெளிப்படாவிடத்துக் காணப்படுவனவாகிய திரிசியமே ஞாதுரு ஞான ஞேயமென மூன்றாக விகற்பித்துக்காட்டும். காண்பான் வெளிப்பட்டவிடத்துத் திரிசியமில்லாமையால், ஏனைய ஞாதுரு ஞான ஞேயமாகிய இரண்டும் இன்னதிசையெனக் காணமற்போகுமென்று ஆசிரியர்கூற, அங்ஙனங்கூறில் அவை காணமற்போனவிதம் எவ்வாறென்று மாணக்கன்வினவ, அதற்காசிரியர் மாணக்கனே! அதனையாம் விளங்கக் கூறுதுங்கேளுதி:—

ஞாதுரு ஞான ஞேயமென்பவற்றுள் ஞாதுருவையன்றி ஞானமும், ஞானத்தையன்றி ஞேயமும் இல்லாமையானும், ஞாதுருவின் புடைபெயர்ப்பே ஞானமாதலினாலும், ஞானமாவது தொழிற்பெயரென்பது தோன்றக்

காட்சியென்பதினானும், இதனையறியாத ஞாதுருவைப்போல் இதனையும் பொருளாகக்கொள்வாரை மறுத்தற்கு அறிதலென்றும், ஞானகதப் பிரத்தியட்சம் விடயகதப் பிரத்தியட்சமென்னும் இரண்டனுள், விடயகதப்பிரத்தியட்சத்தில் அவ்விடயம் அசேதனமாயுஞ் சடமாயுமிருத்தல்பற்றிக் காண்பான் காட்சி வேறுள்ளனவாய் அனுமானித்தல் மாத்திரமேயன்றிப் பிரத்தியட்சமாய் அனுபவித்தச் விடயத்தையாதலால் அறிவான் அறிதல் அறிவன இம் மூன்று மறிவான் மறைபிலென்றும், ஞானகதப் பிரத்தியட்சத்தில் விளங்கும் அறிவானில், அறிபடுபொருளும் அதுபற்றிக்காணும் அறிதலும் இல்லாமையால், அறிவான் மறையாக்காற் காண இரண்டுமென்றுங் கூறினர்.

மேல்கவிக்குத்திருட்டாந்தங்கூறல்.

சித்திரநாட் டத்தாற் செயலொடுசெய் வான்காணுஞ்
சித்திரக னாட்டத்தாற் செய்கையொடு—சித்திரமும்
இல்லா ததுபோலா மீங்கிவற்று ளேதுண்மை
இல்லாத தேதிங் கிசை.

(எ-து.) ஓர்படத்தில் வரைந்திருக்குஞ் சித்திரத்தை நாடு நாட்டத்தால் அதனைவரைதலும் வரைதற்கர்த்தாவுங் காணவிடினும் அனுமானத்தால் உள்ளனவாகக் காணப்படுவர். சித்திரிகனாகிய வரைதற்கர்த்தாவை நாடு நாட்டத்தால் வரைதலாகிய செய்கையும் வரையப்பட்டனவாகிய சித்திரமும் அவனையன்றி யில்லாமைபோற் காணப்படுவனவாம். இதனையறிந்து இங் கேகூறிய திருக்குதிரிசிய மென்பவற்றி லுள்ளதியாது? இல்லாததியாது? அதனையிங்குச் சிந்தித்துச் சொல்லுதி. எ-று.

சித்திரம் அசேதனமுஞ் சடமுமாதலிற் செய்கையுஞ் செய்வானுமின்றி அமையாததுபற்றி அனுமானத்தாற் காணுமென்றார். இதனால் அனுமானித்தவாறு காணுமை பொய்யெனவும், கண்டல் மெய்யெனவுங்கருதி, அவனையறிய வினவியதென்பது தோன்றக்கிடந்தது.

நித்தமுமிங்ஙன முயலவேண்டுமென்றீர். முடிவின்றோவென்ற மாணாக்கனை நோக்கிக் காலவரையறை யிக்கவிபிற் கூறுகின்றார்.

எத்தனை நாண்ஞா தாவு ஞானமு மிருக்கு மென்பை
யத்தனை நாளும் வேண்டு மப்பாலோர் செயலும் வேண்டா
நித்தமும் வெளிபோற் பற்று ஞேயமாத் திரமாய்ச் சிவன்
முத்தரா னவர்வி தேக முத்திபெற் றிருப்ப ரென்றும்.

(இ-ள்.) எத்தனைநாண் ஞாதாவு ஞானமுமிருக்குமென்பை. எ-து. எவ்வளவுகாலங் காண்பானுங்காட்சியு மென்னைவிட் டகலவில்லை யென்பையோ—அத்தனைநாளும் வேண்டுமப்பாலோர் செயலும்வேண்டாம். எ-து.

அவ்வளவுகாலமு மிவ்விடைவிடாமுயற்சி வேண்டுமேயன்றித் திரிபுடியறிலப்பாலோர்முயற்சியும் வேண்டுவதின்று. நித்தமும் வெளிபோற்பற்றா ஞேயமாத்திரமாய்ச் சீவன்முத்தானவர், எ-து. எப்போதுந் தன்னையொன்று பற்றினுந் தானொன்றையும்பற்றாத பூதாகாயம்போலச் சகலகற்பிதங்களுந் தன்னைப்பிற்றினுந் தானொன்றையும்பற்றாத சிதாகாயமாத்திரமாகச் சிவகற்பிதங்கடந்த சீவன்முத்தர்கள் விதேகமுத்திபெற் றிருப்பரென்றும், எ-து. விதேகமுத்திபெற்றுக் காலவரையறையின்றித் தானேதானாக விளங்கிநிற்பர் எ-று.

விடயம்பயனாகப்பெறின் ஞாதுரு ஞானம்வேண்டும், அறிவு தன்னைத் தானே பயனாகப்பெறின், ஞாதுரு ஞானம் யாதுக்கு? எனவே, தானே ஞாதுரு ஞான ஞேயமெனப்பெற்றாம். விடயந்தனது கற்பிதமாதலின், திரிபுடிவேண்டும். ஞானந் தனததிட்டானமாதலின் திரிபுடிவேண்டுவ தின்று. திரிபுடியைத்தனது விருத்திஞானத்தைக் கொடுத்துக்காணின், அனைத்துஞ் சொப்பிரகாசமாக விளங்கும். அங்ஙனங்காணுவிடிற் திரிபுடி மயமாய் நிற்கும். இதனைத் தினவனுபவத்திற் காணலாம். புராணம் போனம்பிக்கையன்று. பிரத்தியட்சம். நீ முன்னர்க் கற்பிதமாயவிடத்துத் திரிபுடியுங் கற்பிதமாயிற்று. நீ யிப்போது சொப்பிரகாசமாகப்பழகில் திரிபுடியுஞ் சொப்பிரகாசமாக விளங்கும். அங்ஙனமாயதும் நினது முயற்சி காரணமாகவன்றோ? இங்ஙனமாவதும் நினது முயற்சி காரணமாகுமெனக் கூறவேண்டுமோ? அப்போது விடயமானதுபோல, இப்போது சின்மயமாவை யென்பதுறுதியாதலால், சின்மாத்திர மயமாகச் சின்னாட்பழகில் திரிபுடியுமங்ஙனமாம். ஆதலின் அப்பாலோர் செயலும் வேண்டாமென்றார். பகிர்முகத்தில் ஞேயம் வியத்தையும், அந்தர்முகத்தில் ஞேயம் ஞானந்தையுங் குறிக்கின்றது. ஆதலிற் சிதாகாயமென்றாம்.

(க-து.) பொன்னைப் பற்பலபணிபேதங்க ளாக்கற்குப் பன்னாள் வேண்டும். அவையனைத்தையும் பொன்னாயுருக்கற்கு நிமிடமாகிற சின்னாள்வேண்டும். அதுபோலத் தன்னைக் கற்பிதமாகிய சகசீவபாமாக்கற்குப் பன்னாள்வேண்டும். அவற்றைத் தானாக்கற்குத் தவமுடிந்தோனுக்குச் சின்னாள்வேண்டும். ஆதலினீ பழகுகவென்பது. இங்ஙனமாய முயற்சிவிடாதோரே சீவன்முத்தாகிப் பின்னர் விதேகமுத்தானார். இதனையு முணர்தியென்பார். ஞேயமாத்திரமாய்ச் சீவன்முத்தானவர் விதேகமுத்தி பெற்றிருப்பாரென்றார். இதுகாறுமுரைத்த துபதேசமார்க்கமென வுணர்க.

பிரமகீதை சாந்தோக்கிய உபநிடதார்த்தமுரைத்த அத்தியாயம்.

காண்பவன் றானே யாகுங் காண்பவை யென்ற யாவுங்
காண்பவன் றன்னில் வேறென் றின்மையிற் றனையே காணுந்

பூண்பதொன் றின்றி நின்ற பூரண மதுநீ யென்ற
மாண்டவார்த் தைக்கு முள்ள பொருளிது மற்றொன் றில்லை.

நீயென் கின்ற வார்த்தைக்கும் பொருளா யென்று நிற்பதுவே
நானென் கின்ற வாசகத்தின் பொருளாய் நின்று நாடுவது
நானென் கின்ற வாசகத்தின் பொருளாய் நாடி நிற்பதுவே
நீயென் கின்ற வாசகத்தி னிற்கும் பொருளு நிலைபெறவே.

நானே முழுது மெனையொழிய நாடிற் சிறிதும் வேறில்லை
யான பொருளை யருமறைதா னறையும் படியா னதனாலும்
யானு மிசைத்த படியாலு மிதுவே திடமா யுளபொருடா
னூன மின்றி நான்முகனு முரைத்த துங்கட் குண்மையிதே.

தன்னிலே யாக்கப் பட்ட கனவினி லுலக மெல்லாந்
தன்னுணர் நனவ தாகத் தனிலவை யடங்கு மாபோற்
றன்னிலே தோன்றுமெல்லாப் பொருள்களுந் தானே யானாற்
றன்னிலே தன்னிற் றானே யாமதே தனில்வே றின்றே.

தாயுமானார் ஆகாரபுவனம் சிதம்பரரகசியம்.

தானான தன்மயமே யல்லா லொன்றைத் தலையெடுக்க வொட்டாது தலைப்பட் டாங்கே, போனாலுங் கற்பூர தீபம் போல பேர்யொளிப் பதல்லாது புலம்வே றின்று, ஞானாகா ரத்தினொடு ஞேய மற்று ஞாதுருவு நழுவாம னழுவி நிற்கு, மானாலு மிதன்பெருமை யெவர்க்கார் சொல்வா ரதுவானா லதுவாவ ரதுவே சொல்லும்.

ஆரண மார்க்கத் தாகம வாசி யற்புத மாய்நடந் தருளுங் [கண்ணா
காரண முணர்த்துங் கையுநின் மெய்யு கண்கண்மூன் றுடையவென்
பூரண வறிவிற் கண்டில மதனாற் போற்றியிப் புந்தியோ டிருந்து
தாரணி யுள்ள மட்டுமே வணங்கத் தமியனேன்வேண்டிடத்தகுமே.

தத்துவஞானதீபிகை.

மலர்புரையு நயனமுளனு சீவனெனு மூன்றும் மருளிலவா யசைவறநின் றிடுமாயி னந்த, நலமமரு நிலைதானே பதிநிலையா மவைதாம் நசையொடுசற் றசையிலது பசுநிலையாம் விடயத், தலகறவுற் றிடினதுவே பாசநிலை யாகும் ஆதலினா லாரியனா விந்நிலைதே ரறிஞர், சலமுறவே யெப்பொழுது முதனிலைவிட் டயர்வாய் சற்றேனு மிடைகடையா நிலைகளில்வந் தழியார்.

மண்முதலாந் தத்துவங்க ளின்மயமா குதலே மாற்றறிய பாச நிலை யாமவற்றின் வேருய், எண்ணுமறி வாய்நிற்றல் பசுநிலையா மங்க இயல்புணர்த்த மருளுடையான் றனையின்ப வடிவா, நண்ணு மொரு பொருளெனவே நன்குணர்ந்தம் மயமாய் நணுகுவதே பதி நிலையா மெனவுணர்மா தவர்கள், அண்ணனிலை கதியெனவோர்ந் ததனைமறந் துறங்கார் அறிவினர் மற்றவற்றி னவர்போல வுறங்கார்.

ஞாதுருஞா னஞ்ஞேய மென்றுரைசெய் பேதம் நவிலுவழக் கூறுநிலையே பாநிலையா மந்த, ஞாதுருவா திகடோன்று நிலைசிவ நிலையாம் நணுகுமவற் றென்றுதல் சகநிலையா மெனவே, ஆதர வோ டறிவுறுமெய் யடியரொரு பொழுதும் அரியபரா நந்தநிலை விட்டுலகத் தலையும், பாதகர்போ லாசிரியன் மொழிகடந்தே மற் றைப் பாழ்நரகில் வீழ்ந்தழியார் பந்தமெனக் கண்டே.

அறிபொருளீ தறிபடுமோர் பொருளீதென் றுணரா அவநிலை யே சகநிலையா மவைகளிரண் டினையும், குறியினவ்வவ் விலக்கணங் க ளாலறிந்து வேருக் கொளுநிலையே யுயிர்நிலையாங் கூறியவப் பொ ருள்கள், செறியுமொரு பரசிவமாம் பொருளெனநன் குணர்தல் சிவநிலையா மென்றறிவோர் சிவநிலைவிட் டேனை, உறுநிலைக டமைப் பொருளா மதித்தவற்றி னுழலார் உழல்பவர்மற் றையரெனநீ யுற்று ணர்வாய் மன்னே.

வையமதி லேயுள்ள பொருள்களென தென்னும் வாஞ்சையது மாயைநிலை மருவுமனைத் தினையும, ஐயமற வுடையவனு னெனுமக ந்தை தானே ஆணவத்தி னிலையிவைதா மற்றநிலை ஞானம், துய்ய சிவ ஞானத்தாற் சோதிமய மான சுகசொருபக் கடல்படிதன் முத்தி நிலை மற்றை, யையுமிரு நிலைகள்பெத்த நிலையெனவே கூறி நாயடி யேற் கருளுமொரு நாதனருள் வாழி.

ஜீவன்முத்திக்குச் சொரூபமென்ன? அதற்குப் பிரமாணமென்ன? ஜீவன்முத்தி எந்தச்சாதனத்தாற் சித்திக்கும்? ஜீவன்முத்தி சித்தித்ததினுல் பிரயோசனம் யாது? என்னும் வினுக்களுக்கு விடைகள் வருமாறு :—

1—கருத்திருத்துவ போக்திருத்துவ சுகதுக்காதிரூபமான் சித்ததருமந் துக்கரூபமான்படியினுலே பந்தமென்று சொல்லப்படும், ஜீவித்திருக்கிற புரு ஷனுக்குச் சித்ததருமமான அந்தக்கருத்திருத்வாதிபந்தம் நீங்குகிறதே ஜீவன் முத்திக்குச் சொரூபம்.

2—கடவல்லி, பிரகதாரண்ணியம், தாபநீயம் முதலானசுருதிகள் ஜீவன் முத்தியிற் பிரமாணம், ஸ்மிருதிகளும் பிரமாணம். ஸ்மிருதிகளில் ஜீவன்முக்தன், திடப்பிரக்ஞன், பகவத்பக்தன், குணாதீதன், பிராமணன், அதிவர்ணாச்சிரமியென்று இதுமுதலான நாமங்களாலே ஜீவன்முக்தி யுண்டென்று சொல்லப்படுகின்றது. வாசிட்டத்தில் ஏ ராமா! லௌகிக வைதிகமான சகல கருமத்தையும் விட்டுப்போட்டு ஆத்மவிசாரத்தையே சதா பண்ணிக்கொண்டிருக்கிற புருஷாளுக்கு முக்திச் சீவன்முத்தியுண்டாய்ப் பின்பு விதேகமுத்தி யுண்டாகும். தேகேந்திரியாதி யிருக்கிறது மில்லாததுமே பேதம். அனுபவகாலத்தில் தொய்தப்பிரதீதியில்லாதது இரண்டிற்குஞ் சரியென்று வசிட்டர் கூறியுள்ளார்.

3—சீவன்முத்திக்குச்சாதனம்: தத்துவஞானம், வாசனாட்சயம், மனோநாசமூன்றுமாம். இம்மூன்றுஞ் சமமாக அப்பியாசிக்கப்பட்டதேயானால், ஜீவன்முத்தியாகிய பலத்தைக்கொடுக்கும். தனித்தனி யெவ்வளவுகாலமப்பியாசித்தாலும் பலத்தைக் கொடுக்கமாட்டா. ஏனெனில், பஞ்சாக்ஷராதி மந்திரங்களில் முதல்நாள் ஓரக்ஷரம் மறுநாள் ஓரக்ஷரம் அதற்குமறுநாள் ஓரக்ஷரமாக எவ்வளவுகாலஞ் செபித்தாலும், அவைகளெப்படி சாஸ்திரத்திற் சொன்னபடி பலத்தைக்கொடாவோ; லோகத்தில் கறிபருப்பு, அன்னமுதலானவைகளில் ஒன்றொன்று கிடைத்ததுகொண்டு எப்படித் திருப்திக்கேதுவான போசனஞ் சித்திக்கமாட்டாதோ அதுபோல வெகுகாலஞ் சமமாகவப்பியாசியாத தத்துவஞானாதிகளுஞ் சித்தியைக் கொடுக்கமாட்டா.

இந்தமூன்றுக்குள்ளே யிரண்டிரண்டாகச் சேர்ந்து மூன்று துவந்துவமுண்டு. அவைகளாவன:— மனோநாசமின்றேல் வாசனாட்சயமின்று; வாசனாட்சயமின்றேல் மனோநாசமின்று; தத்துவஞானமின்றேல் மனோநாசமின்று; மனோநாசமின்றேல் தத்துவஞானமின்று; வாசனாட்சயமின்றேல் தத்துவஞானமின்று; தத்துவஞானமின்றேல் வாசனாட்சயமின்று என்றும் வாசிட்டத்தில் உபசாந்திப் பிரகாணத்திற் சொல்லியிருக்கின்றது.

இனி யுத்திசொல்லுகிறோம்: தீபச்சுவாலையின் பரம்பரைபோலே விர்த்திகளுடைய பரம்பரைரூபமாகப் பரிணமத்தையடைகிறதே மனது. இந்த மனமானது அது இது அப்படி இப்படி அதுகூடும் இதுகூடாது அதுவல்லது இதுபொல்லாது அதைப்பண்ணவேண்டும் இதைவிடவேண்டுமென்று இவைமுதலானதை மனனம் பண்ணுகிறபடியினாலே மனதென்று பெயர். இந்த மனத்தினாசமேதெனில்? விர்த்திரூப பரிணமத்தை விட்டுப்போட்டு நிரோதாகாரமாகப் பரிணமிக்கிறதே மனோநாசம்.

இத்தப்படி பதஞ்சலிபகவான் யோகசாஸ்திரத்திற் சூத்திரம்பண்ணியிருக்கின்றார். அதாவது: வாசனையாவதேதென்றால் முன்பின்னொன்றையுமாலோசியாமற் சீக்கிரத்தி லுண்டாகாநின்ற குரோதாதிவிர்த்திக்கேதுவான

சித்தத்தினுடைய சூக்ஷ்ம அவத்தையாகிய சமஸ்காரமானது வாசனையென்றுசொல்லப்படும். இது அனாதிதொட்டு இருதயத்தில் வசிக்கிறபடியால் இதற்கு வாசனையென்று பெயர்.

இதனுடைய க்ஷயமாவதேதென்றால்: விவேக சென்னியமாயிருக்கிற சாந்தியாதிவாசனை திடமாகும்போது பாகியநிமித்தத்தினாலே குரோதாதி விர்த்தி யுண்டாகாமலிருக்கிறதே வாசனாக்ஷயம்.

இப்படியாகவுள்ளளவில் விர்த்திகளுடைய அடக்கமாகிய மனோநாச மில்லாவிட்டால் விர்த்திகளுண்டாகும்போது ஒருக்காற் பாகியநிமித்தத்தாற் குரோதாதி யுண்டாகுமானதால் வாசனாக்ஷயமில்லை. அப்படி வாசனாக்ஷய மில்லாதபோது விர்த்திகள் மேன்மேலுண்டாமானதால் மனோநாசமில்லை. இப்படி மனோநாசவாசனாக்ஷயத் துவந்துவத்தில் யுத்திசொல்லப்பட்டது.

தோன்றாநின்ற ரூபரசாதியான சகலஜகத்தும் பாமார்த்தமாகப் பிரத்தியகபின்ன பரப்பிரமசொரூப மிந்தச்சகத்து வேறாகத்தோன்றினபோதிலும், மாயாமயமானதால் எதார்த்தமாக இல்லவேயில்லையென்கிற நிச்சயமே தத்துவஞானம். இது எதார்த்தத்துவத்தை யறிகிறபடியினாலே தத்துவஞான மென்றுபெயர்.

இந்த ஞானமெப்போது சித்திக்குமென்றால்: தோன்றாநின்ற நாமரூபப் பிரபஞ்சமெல்லாம் எப்போது சச்சிதாநந்த சொரூபமாகத் தோன்றுகிறதோ வப்போதுசித்திக்கும். இந்தத் தத்துவஞான மில்லாதபோது ரூபரசாதிவிஷயங்கள் சத்தியமென்கிற பிரமை திடமாயிருக்கும். ஆனதால், அந்த ரூபரசாதி கோசரவிர்த்திகள் விறகுபோடப்போட அக்கினிச்சுவாலை நசியாததுபோல நசிக்கமாட்டா. ஆனதால், தத்துவஞான மில்லாவிட்டால் மனோநாசமில்லை. அப்படியே மனோநாசமில்லாதபோது விர்த்திகளினாலே ரூபரசாதிவிஷயங்கள் கிரகிக்கப்படுமானதால், பிரமத்தைத்தவிர வேறொன்று மில்லை. பிரமமேயிருக்கிறதென்கின்ற தத்துவஞான முண்டாகமாட்டாது. இப்படித் தத்துவஞானம் மனோநாசத்துவந்துவத்தில் யுத்திசொல்லப்பட்டது.

குரோதாதிவாசனைகள் நசியாதபோது சாந்தியாதிவாசனை இல்லாதப்படியினாலே தத்துவஞான முண்டாகமாட்டாது. அப்படியே பரமாத்துவைதமான பிரமசொரூபமேயெல்லாம், அப்பிரமமே நாமென்கிற தத்துவஞான மில்லாவிட்டாற் குரோதாதிவாசனைக்கு நிமித்தமான பாகியவிஷயஞ் சத்தியமென்கிற பிரமை போகாததினாலே வாசனாக்ஷயமில்லையென்கிறதே நிச்சயம். வாசனாக்ஷயம் தத்துவஞானமென்கிற துவந்துவத்தில் யுத்திசொல்லப்பட்டது. இப்படி வியதிரேகமுகமாக அன்னியோன்னிய காரணத்துவமும் யுத்தியுஞ்சொல்லப்பட்டன.

இனி அன்னுவயமுகமாக இத்தமூன்று துவந்துவங்களுக்கும் ஒன்றுக் கொன்று காரணத்துவமுண்டென்கிறதில் யுத்திசொல்லுகிறோம்:—அஃதே தென்றால், மனோநாசம்வந்தால் வாசனையைக் கிளப்பிவிடுகிறதில் நிமித்த மான பாகியவிஷயந் தோன்றாதபடியினாலே வாசனைக்ஷயித்துப்போம். அப் படி வாசனைக்ஷயித்தால் ஏதுவில்லாததினால் குரோதாதிவிர்த்தி யுண்டாக மாட்டாது. ஆனதால் மனதுநசிக்கும். இது மனோநாச வாசனக்ஷயத் துவந்துவம்.

அகண்டாகாரவிர்த்தி யொன்றினாலே பிரத்தியகபின்ன பிரமசொரூ பத்தை அறியவேண்டுமென்று சுருதியிற் சொல்லியிருக்கிறபடியினாலே பிரமாகாரவிர்த்தி யொன்றைத்தவிர மற்றசகல மனோவிர்த்தியின் நாசம்வந் தால் தத்துவஞானமுண்டாகும். அப்படியே தத்துவஞானம் வந்தால், மித் தியாரூபமான சகத்திற் சசசிருங்கத்தைப்போல விர்த்தியுண்டாகாதபடியினா லும், ஆத்மசொரூபம் அறிந்திருக்கிறபடியால் மறுபடி விர்த்திக் குபயோக மில்லாதபடியினாலும் விறகில்லாத அக்கினிபோல மனது நசித்துப்போம். இது மனோநாச தத்துவஞானத் துவந்துவம்.

சத்துரு, மித்துரு, பந்துவிடத்திலும், தன்னுடைய தேகத்திலும், பின் னும் உத்தம, மத்திம, அதமங்களாயிருக்கிற உபாதிகளிலுஞ் சமமாயிருக்கிற ஆத்மா ஒருவரே; அவரே நாமென்று திடாபரோக்ஷ ஞானமுள்ளவனுக்குத் தன்னுடைய சரீர அவயவத்தைப்போலப் பிறருடைய சரீரத்திலும் என் கோபம்வரும். வரமாட்டாதென்று வார்த்திகாசாரியால் சொல்லியிருக்கிற படியினாலே தத்துவஞானம்வந்தால் வாசனைக்ஷயிக்கும். அப்படியே குரோ தாதி வாசனக்ஷயரூபமான சாந்தியாதிவந்தால் தத்துவஞான முண்டாகும். இது வாசனக்ஷய தத்துவஞானத் துவந்துவம்.

இதனைவசிட்டர் சங்கிரகித்துச் சொல்லியதாவது:—வாரீர் ராமா! தத் துவஞானத்துக்குச் சிரவணாதி சாதனம். வாசனக்ஷயத்துக்குப் பிரதிகூல வாசனைப்பழக்கம் சாதனம். மனோநாசத்திற்குத் தியானஞ் சாதனம். ஆனபடியால் இத்தன்மைத்தென்று பிரித்தறிந்துகொண்டு சகல போகத் தாசையையுந் தூரத்தில் விட்டுப்போட்டு, எவ்வருத்தப்பட்டாகிலும் எந்த உபாயத்தாலாகிலும் இத்தமூன்றையுஞ் சம்பாதித்துப் போடுவோமென்கிற உற்சாகமாகிய முயற்சியை நடுவிலே விட்டுவிடாமல் திடமாகப் பலன்கிடை க்கும்வரைக்கும் பண்ணுவதே தத்துவஞானாதிமூன்றுங் கிடைக்கிறதற்குச் சாதனம்.

ந—ஞானரக்ஷை, தவம், விஷமவாதமில்லாமை, துக்கநாசம், சுகாவிற் பாவம் என்னும் ஐந்தும் ஜீவன்முத்திக்குப் பிரயோசனம்.

ஞானேதயத்திற் சங்காணுமிருக்கப் பிராரத்துவம் எங்ஙனம் நுகர்வ தென்ற வினவிற்கு இருவகைப்பிரமையால் விடைபகர்கின்றது:—

இடையில்வந்த பிராந்தியொழிந்த அக்கணமே கிளிஞ்சில் காரணமாக எய்திய வெள்ளிப்பிராந்தி யெங்ஙனங் காணுதொழியுமோ, அதுபோல விசார ஞானத்தினால் அஞ்ஞானங்கெட்ட அக்கணமே, இத்தவுலகமெனல் சற்றுமே காணப்படுதலில்லை; இல்லாதிருக்க எங்ஙனம் பிராரத்துவபோக நுகர்தற் கியையுமெனக்கேட்கில், நமது பிராந்திகாரணமாகக் கிளிஞ்சலிற் றோற்றிய வெள்ளியானது நிருபாதிகப் பிரமையெனப்படுவதாம். அதனால் இங்ஙன மாய குணங்காரணமாக விசாரித்துணர்ந்த அக்கணமே வெள்ளியென்கின்ற பிராந்திவடிவ மொழிந்துவிடும். அங்ஙனமாகாது பந்தமுறற்கியைந்த இச்சகத்து சோபாதிகப்பிரமை யெனப்படும். அக்காரணத்தால் இது முன்னர்க் கூறிய நிருபாதிகம் போல்வதன்றாம். அஃதெங்ஙனமெனின், ஓர் தடாகத்தி னுயர்ந்த கரையிலிருப்போன் தடாகஜலத்திற் றன்றலைகீழதாக இருக்கக்காண் பது பொய்யெனவே, தான்கொண்ட தெளிந்த சித்தத்தோடிருப்பினும் நீரி லதோமுகமாகக்காணுந் தனதுவடிவம் நீங்காதுதோன்றுத லெங்ஙனமோ அதுபோல, மூலவகங்காரங் காரணமாக அதனையடித்துவருகின்ற சீவபாவ முதலியவைகளே முழுதுமித்தை, அவைதானல்ல. விலட்சணமாக நின்றறி யுங் கூடஸ்தன்றானென்றே பையத்திரிபற வுணரினும், சீவபாவ முதலியவை கள் சம்பந்தித்த வுலகங் காணப்பட்டுக்கொண்டிருத்தலாற் சீவன்முத்தனென் போனுக்கு அனுபவித்தற்கியைந்த பிராரத்தாநுபவ போகத்தையேற்று விவகரி ப்ப துடன்பாடாகும். இதனால் சகத்தில்லவேயில்லை. நிருபாதிகம் = உபாதி யின்மை. எனவே, சகத்தோற்ற மின்மையெனவும், சோபாதிகம் = உபாதி யிருத்தல்போலத் தோற்றுதலெனவும், தடாகச்சாயை பொய்யாயினும் நீங் காதுநிற்றல்போல, தேகாதிப்பிரபஞ்சம் பொய்யாயினும் நீங்காதுநிற்றலின் பிராரத்துவமகலாதென்பதுங் கருத்தாயிற்று. இரசிதப்பிராந்தி நிருபாதிகப் பிரமையாதலின் நீங்கும். இச்சகஞ் சோபாதிகப்பிரமையாதலின் நீரின்கண் தானதோமுகமாக இருத்தல் மித்தையெனத்தெரிந்தும், அத்தோற்ற நீங்காதது போலச் சித்துருவமாகியதான் சகசீவபரமாய்த் தோற்றுதல் மித்தையெனத் தெரிந்தும், அவை நீங்காமற் றோற்றலின் பிராரத்தப் புசிப்பிருத்தற் கையமின்றென்க. நிருபாதிகப்பிரமையாகிய சுத்திகாரசிதந் தோற்றல்மாத்திரமே யன்றிப் பிரதிபலியாமையி னிங்ஙனமாதை நீக்கிச்சோபாதிகப்பிரமை சலத்திற் பிரதிபலித்தசாயை அச்சலமுள்ளபரியந்தந் தோற்றுதல்போல மாயாப்பிரதிபல னஞ் சகத்தாதலினானும் அஃதுள்ளமட்டும் இஃதுந் தோற்றுவதனானும் அஃ தும் பிராரர்த்தமுடிவில் நீங்குதலினானும் அப்பிராரத்தானுபவத்தை யைய மின்றி யங்கீகரிக்கவேண்டுமென்பது.

சீவன்முத்தர்க்குரிய சற்குணங்கள் நான்காவன:—மைத்திரி, கருணை, முதிதம், உபேட்சையெனப்படும். அவற்றுள்: சத்துக்கள் தனதுருவமா நிற்ற லின் அவரிடத்துநீங்காத அன்பே மயித்திரியும், பவக்கடலிற் சுழல்வாரை நோக்கி யேனோவாளா துக்கிக்கின்றார்கள். இவர்க்கென்று இத்தீங்கொழி

மென்னு மிரக்கமேகருணையும், ஈசுரார்ப்பணமாகச்செய்யும் புண்ணியரிடத்தி லவர்நோக்குச் சித்தசுத்திக்கேதுவாய் அகமுகப்படுங் குறியால்வரும் விருப்பமே முதிதையும், இராகத்துவேஷங்களாற் சுகதுக்கங்களை யனுபவிக்கும் பாவிகளைத் துரும்பென விருப்பு, வெறுப்பு இன்றி விடுதலே யுபேட்சையுமாம். இந்நான்கும் உலோகானுக்கிரக நிமித்தமாகச் சீவன்முத்தனிடத்தி னிகழுமென்பது.

சீவன்முத்தர்க்குரிய பதினைந்தினிலக்கணமாவன :— வாசனாட்சயமான மனது தத்துவஞானத்திற் கரைந்து நிற்றலாகிய ஞானரக்ஷையும், அம்மனம் இந்திரியங்கட் கொருமையால் அபரோட்சஞானத்தை நாடிநிற்றலாகிய தவமும், இங்ஙனஞ்செய்தல் மெய்த்தவமென வுலகோர் வழிபடலாகிய சம்வாதமும், இவற்றான் மனோதன்ம இன்மையாகிய துக்கவொடுக்கமும், அதனாற் சகல பந்தமும் நீங்கி நித்தியானந்த முண்டாதலாகிய சுகாவிற்பாவமுமாகிய ஐந்துமாம்.

இவையன்றியுஞ் சீவன்முத்தர்க்குரிய தசவித அடையாளங்களாவன: குரோதமின்மையும, வைராக்கியமும், பஞ்சேந்திரியங்களை யடக்குதலும், நன்னெறிகளையே தாற்பாலனவாகிய சமையும், தமையும், யாவர்க்கும் பிரியமாகக் காண்கையும், லோபகுணமின்மையும், உதாரத்துவமும், நிர்பயமும், அகங்காரமின்மையுமென அறிதி.

தனக்குவேறான வஸ்துவொன் றின்மையினால் குரோதமின்மையும், தன்னைத்தவிரப் பிரியவஸ் தொன்றின்மையின் நிராசையுற்றிருப்பதே வைராக்கியமும், பொறிகளை விடயங்களிற் செல்லவொட்டாமற் மெய்யுணர்விற் செலுத்துவதே ஐம்பொறிகளடக்கலும், அகத்திற் கற்பனையெழாமலடக்கி யதார்த்தத்திற் செலுத்துவதே சமையும், புறத்திற் றிரிசியத்தி லெழவொட்டாமல் அவற்றினுள்ள சத்தில்நிறுத்துவதே தமையும், மகான்கள் சங்கத்திற்கூடி ரமித்தலே ஜனப்பிரயத்துவமும், தற்பிரியத்தைச் சீவர்களடைய வேண்டுமென்கின்ற அன்பிருத்தலின் அலோபமும், தனக்குள்ள வஸ்துக்களியாவையும் விரும்பினார்பாற் கொடுத்துவிடுவதே கொடையும், சம்சாரதுக்கபயத்தினாற் சரணாகதி யடைந்தவனைக் காக்குந்தன்மையே அபயமும், தனதுநிச்சய மிங்ஙனமென மதித்திருந்துஞ் செருக்கின்மையே நிருமதமும் ஆம். சீவன்முத்தனது ஸ்வரூபந் தெரிந்தடையுநிமித்த மவரதடையாளங்களை கூறிபது:—''தெரிவரிய சீவன்முத்தனால் சேடர்க்குமுத்தியும், பத்தர்க்கு நல்வினையும், உதாசீனர்க்குப் புண்ணியலபமும், பாவிகட்குப் பாவவிரிவு முறுமென்பது'' தீவிரதர பக்குவத்தால் இவரேநம்மை யிரட்சிக்கத்தக்கவரென நம்பிச் சரணாகதியடைந்து இவரது அனுக்கிரகமாகிய பிரமோபதேசத்தினாற் பிரமமேதானாகநிற்றலிற் சேடர்க்குமுத்தியும், பிரிவில்லாத அன்பினால் இவரேநாம் அடையத்தக்க கதியை அடைவிக்கத்தக்கவரென வழிபாடுடைய பத்தர்களுக்கு ஈசுரார்ப்பணமாகச் செய்யும் நல்வினையும், அவரது சரித்திரத்தினால் விளங்கிய பரிசுத்தாடை

யைக்கண்டேஞ் செல்வச்செருக்கினல் ஓர் லட்சியம்பண்ணுதவர்களுக்குப் புண்ணியக்ஷயமும், அவர் திருவடிவை நேரேதரிசிக்கும்போது அவர் கடாக்ஷந்தங்கலிற் பாவிகட்குப் பாவவிரிவும் உண்டாமென்க. அனுக்கிரகமுடையார்க்கு தருமக்ஷயமான நிக்கிரகம் வரலாமோ? காமியத்தருமத்தாலுண்டான ஐசுவரியமமதையால் மகான்களை லட்சியஞ்செய்யாது அவமதிக்கநேரிமே; அதனுல் புண்ணியநசிப்புவரும்; வரின் பின் அன்புண்டாதற் கேதுவாதலின் அஃது கிருபையேயெனக்கொள்க.

பதினேன்ருஞ்சூத்திரம் முற்றிற்று.

பன்னிரண்டாஞ் சூத்திரம்.

அவதாரிகை.

அவ்வான்மா மலம்நீங்கிச் சிவஞானத்தைப்பெறுதற்குச் சிறந்த சாதனமாயுள்ள சாதுசங்க முதலியவற்றை இச்சூத்திரம் தொகுத்துக் கூறுகின்றது.

பன்னிரண்டாஞ் சூத்திரம்.

செம்மலர் நோன்ருள் சேர லொட்டா
வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயந் தானு மரனெனத் தொழுமே.

(இ-ள்.) செம்மலர்நோன்ருள் சேரலொட்டா வம்மலங்கழீஇ = சிவவேடம்பூண்ட அவ்வான்மா பரமசிவத்தினது சிவந்த தாமரைமலர்போன்ற வலிய திருவடிஞானத்தைப் பெறுதற்குத்தடையாயுள்ள அப்பஞ்சமலங்களையும் ஞானநீராற்கழுவி, அத்திருவடி ஞானத்தைப்பெறுதற்கு, அன்பரொடு மரீஇ = அத்திருவடி ஞானத்தைப் பெற்றிருக்கும் அடியார்களுடன் கூடியும், மாலறநேயமலிந்து = மயக்கமறமனத்தி லன்புநிறைந்தும், அவர்வேடமும் ஆலயந்தானு மரனெனத்தொழும் = அவ்வடியார்களது மெய்வேடங்களையும், சிவாலயங்களையும் பரசிவமாகவேகண்டு வணங்குதல்வேண்டும். எ-று.

(ப-ம்.) ஒப்புயர்வற்றதென்பார் — செம்மலரெனவும், பிறவிக்குக் காரணமாகிய பஞ்சமலங்களையு நீறுபடுத்தும் வலியுடையதென்பார்—நோன்

ரூளெனவும், அத்திருவடிஞானத்திற்குத் தடையாயுள்ள மலங்களைக் கெடுத்தல்வேண்டுமென்பார்—சேரலொட்டா வம்மலங்கழீஇயெனவும், அதற்குச் சாந்தி, விசாரம், சந்தோடம், சாதுசங்கமாகிய சாதனங்க ளின்றியமையாதென்பார்—அன்பரொடுமரீஇ எனவும், ஆதரவில்லையாயி லனைத்தும் பயன்படாதென்பார்—மாலறநேயமலிந்தெனவும், அசங்கியபக்தி யுடையவர்களது பிறவிநோயைக் கெடுத்தற்குரிய திருநீறுமுதலிய சாதனங்களைப் பூண்டிருக்கும் அடியார்களையும் சிவலிங்கப் பெருமானது ஆலயங்களையும் பூரணபாவனையா லச்சிவசொரூபமாகவே காணவேண்டுமென்பார் — அவர் வேடமு மாலயந்தானு மரனெனத்தொழுமே யெனவுங்கூறினர்.

ஒப்புயர்வற்றதும் பிறவிப்பிணிக்கு மருந்துமாம் என்பதற்கு உதாரணம்—"தாதாய் மூவே ழுலகுக்குந் தாயே நாயேன் றனையாண்ட, பேதாய் பிறவிப்பிணிக்கோர் மருந்தே" என்ற திருவாசகத்தானுணர்க.

பாடுதுறை.

முத்தே வருந்தேடு மூலப் பொருடன்னை மொய்குழ லாயடி கேளாய்
பித்தா முபாதிப் பெருந்துயர்ப் பவ்வப் பிறவிப்பிணிக்கோர்மருந்தா
மத்தாடு மைம்புலன் றன்னின் வழிமாறி மனவுரை மாண்ட வருளே
சித்தா யொளிருஞ் சிவப்பிர காசர் திருவடித் தாமரை காணே.

ஷ தரவுக்கொச்சகக்கலிப்பா.

இறையுணர்த்து மளவினிலெக் காலமுமெய் யுணர்வானேங்
கறையுடல மளவெனமுன் கலங்குவதங் கென்னேடி
நிறையவனல் விறகிருக்க நிகழ்மதன மில்லாக்காற்
சிறுகறையா னரித்துணல்போற் றிகழ்ந்திடுங்காண் சாழலோ.

ஒப்பரியா னெண்மலர்த்தா ளளித்தலுமே யுலகுயிர்மற்
றெப்பொருளுங் கண்டதிலை யென்செய்தவா றியம்பேடி
யெப்பொருளு மாய்நின்ற திணையடியே யாதலினான்
மெய்ப்படவே கண்டவர்க்கு வேறிலைகாண் சாழலோ.

தேவாரம்.

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போன்
மறைய நின்றுளன் மாமணிச் சோதிய
னுறவு கோனட் டுணர்வு கயிற்றினான்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே.

திருமந்திரம்

கண்டேன் கமழ்தரு கொன்றையி னனடி
கண்டேன் கரியுரி யான்றன் கழலிணை
கண்டேன் கமல மலருறை வானடி
கண்டேன் கழலதெ னன்பினுள் யானே.

உரையற்ற தொன்றை யுரைசெய்யு மூடர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாண லாகுமோ
திரையற்ற நீர்போற் சிந்தைதெளி வார்க்குப்
புரையற் றிருந்தனன் புரிசடை யோனே.

திருவடியைச சேரவொட்டாதது பஞ்சமலங்கள் என்பதற்கும்,
அவை நீங்குதற்கும் உதாரணம்.

சிவஞானவள்ளலார் சித்தாந்ததரிசனம்—பாசவியல்.

பாசவிய லைந்து பகுப்பா யிருக்குமதை
யீசனருள் கொண்டியம்பு வாம்.

மலமாயை கன்மமா மாயை திரோதாயி
குலமொன் றுவேறுங் குணம்.

ஆணவம்.

தண்டுலத்தைச் சில்லுமியுந் தாம்பிரத்தைக் காளிதமு
மண்டுதல்போ லாவிமறைக் கும்.

ஈச னருளுதய காலத் திறக்குமிது
பேசுவா மாயைப் பெயர்.

ஆரு றுக்குள்ளா யகப்பட் டுயிர்சுழலு
மாறுப் பிரானை மறந்து.

இம்மாயை நட்ட மெழிற்சோகம் பாவனையாற்
கன்மமலக் கட்டுரைப்பேன் காண்.

ஊழ்வினையாற் சஞ்சிதமு முலவில்பிரா ரத்தமுமேல்
வீழுமா காமியமு மே.

விருப்பும் வெறுப்புமாய் வேண்டல்வேண் டாமை
மரிப்போ டுதிப்பும் வரும்.

சஞ்சிதமுன் கட்டுவினை சற்குருநோக் காற்சரியும்
பஞ்சுமலை பட்டநெருப் பாய்.

உள்ளப் பொசிப்பெல்லா முண்டொழிப்ப தன்றியினைத்
தள்ளப் படாதெவர்க்குந் தான்.

கொடுப்பானு மீசனதைக் கொள்வானு மீச
மடுக்கா வெதிர்வினைகள் வந்து.

அவிகாரி யீச னருளுதய காலஞ்
சவிமாளுங் கன்மமலந் தான்.

ஓமாதிவாக்கா யுயிரறிவுக் கூதியமா
மாமாயை தன்னைவகுப் பாம்.

வேதாக மங்கலைகள் விஞ்ஞானர் மாலாதி
நாதர்க் குடலாதி நாடு.

எண்பத் தொருபதமு மேழ்கோடி மாமனுவு
மைம்பத்தோ ரக்காமு மாம்.

சரிதாதி மூவர்க்குச் சாலோக மாதி
விரிபதமுன் றுசியுமே வும்.

இரவிலெழு சந்திரன்போ லென்றாழ் வருமளவும்
விரிஅபா ஞானமாம் விந்து.

இந்தவிந்து ஞானமின்றே லெவ்வுயிர்க்கு மெஞ்ஞான்றும்
பந்தமுத்தி யில்லைபாம் பார்.

மாமாயை யீசனருள் மாறு தெதிர்ந்தன்றிப்
போமாறு முண்டோ புகல்.

மறைப்புருவ மாயறிவின் மாறுசெயும் பொல்லாச்
சிறப்புமலஞ் சொல்வாந் தெரித்து.

அன்னை யருட்சத்தி யாவிமலம் பொன்றப்
பின்னைத் திரோதானப் பேர்.

இருவினை யொப்பாவிக் கெய்தளவுஞ் செய்யுந்
திரைமயக்க மாறித் தினம்.

செகத்தை மறைத்துச் சிவங்காட்டிப் பின்னர்
அகத்தை மறையா தருள்.

மலமொழிந்த காலத்து மாறும் திரோதை
சலமில் சிவஞானந் தாய்.

பஞ்சமலத் தாவிடுக்கண் பட்டுயிர்க ளெஞ்ஞான்று
நஞ்சணிகண் டத்தனைநா டா.

கோடிசிவ புண்ணியத் தாற்குவியும் பின்னர்மனம்
நாடுஞ் சிவனை நனி.

சாந்தியாதிசாதனங்கட் குதாரணம்:

திருவாசகம்.

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
யடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
னடியார் நடுவு ளிருக்குமரு ளைப்புரி யாய்பொன்னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியு வண்ண முன்னின்றே.

வாசிட்டம்.

ஓதுகின்ற பொருண்முழுது முன்பின் கூட்டி
யுணர்பவர்க்கல் லதுபசுவை யொப்போர்க் கெல்லாந்
தீதகன்ற குருவுண்மை செப்பா ரன்றே
திகழ்சாந்தி விசாரமொடு செறிசந் தோடஞ்
சாதுசங்க மெனவீட்டின் வாயில் காக்குஞ்
சதுஷ்டயரு முறவாகிற் றடைவே றுண்டோ
மேதினிகா வலர்மனையிற் கடைகாப் பாளர்
விடுவதுபோல் வீட்டிலவர் விடுவ ரன்றே.

(பொ-ரை.) ஆசிரிய ரனுக்கிரகஞ்செய்கின்ற அருத்தங்களியாவையுந் தொடக்குங்கருத்தையு முடிக்குங்கருத்தையுஞ்சேர்த்து அறிபவர்க்கேயன்றி, பார்த்த விடயமயமாகும் பசுத்தன்மையை யொப்பான சீவத்தன்மையை யுடைய சகலருக்கும் குற்றமற்றவாசிரியர் தத்துவஞானத்தைச் சொல்லார். பிரகாசியாநின்ற சாந்தியும், விசாரணையும், மிகுந்த சந்தோஷமும், சாதுசங்கமுமென்று சொல்லப்பட்ட மோக்ஷத்தின் வாயிலைக்காக்கின்ற நான்குபேர்களும் இஷ்டமானால் மோக்ஷமடைதற்கு விக்கினமுண்டோ? பூமியைச்

சாக்கின்ற வரசர்களின்வீட்டின் வாயிலைக்காப்பவர்கள் இராசதரிசனத்துக்கு விடுவதுபோல மோக்ஷத்திலவர்கள் விடுவார்கள். எ-று.

(க-ரை.) முமூட்சுக்களுக்குச் சாந்திமுதலிய நான்கு குணங்களும் வேண்டுமென்பதாம்.

அன்னால்வர் தமிலொருவ னன்பா னாலு
மனைவருமொத் தன்பாவ ராத லாலே
பன்னாளு மிகமுயன்று யாது நீத்தும்
பற்றியொரு வரையேனும் பழக வேண்டு
மன்னாத பிறப்பறுக்க நல்லோர் நன்னூன்
மாதவத்தா லறிவைமுதல் வளர்க்கவேண்டு
மின்னாத மாயையெனு நஞ்சம் போத
மென்கின்ற காருடமந் திரத்தான் மீளும்.

(பொ-ரை.) அந்நால்வர்களில் ஒருவனன்பானால் நால்வருமொத் தன்பராவார்கள். ஆகையினால் சதாகாலமு மிகவுமுயற்சித்து, அதற்கிடரானவைகளி லேதானாலுந்தள்ளி யொருவரையாவது பிடித்துக்கொண்டு பழக்கஞ்செய்யவேண்டும். நிலையில்லாத சனனத்தைக்கெடுக்க சத்துக்கள் சங்கத்தினாலும், ஆத்மஞானசாஸ்திர விசாரணையினாலும், மகாநிஷ்டையினாலும் பிரக்ஞையை முதன்மையாக விருத்திசெய்யவேண்டும். துன்பமாகிய சம்சாரமென்கின்ற விடமானது ஞானமென்கிற கலுழமந்திரத்தினால் திரும்பும். எ-று.

(க-ரை.) சாந்தியாதி குணங்களைப்பெற்றுச் சுருதிகுருசுவானுபவங்களினால் வளருஞானத்தினால் மாயையைக் கெடுக்கவேண்டுமென்பதாம்.

சாந்தியுமதையடைந்தவ னிலக்கணமுங் கூறல்.

நல்லவருந் தீயவரு மன்னை போல
நம்புதற்கா யமுதன்ன நண்ணி னாலு
மல்லன்மலர் மகட்புணர்ந்த போது மொவ்வா
மகிழ்ச்சிதருஞ் சாந்தியுளோர் மாணஞ் செல்வங்
கொல்லமரெப் தினுமசையார் புலனைந் தாலுங்
குற்றமுநன் மையுநுகர்ந்து குளிரார் வாடார்
தொல்லறிஞர் மகம்புரிந்தோர் முனிவர் மொய்ம்பர்
தூயவரியா ரினும்விளங்குந் தூய்மை யோரே.

(க-ரை.) சகலசெல்வங்களும் வலியவருமகிழ்ச்சிக்கு மேலானமகிழ்ச்சியைக் கொடுக்கின்ற சாந்தியுள்ளவ னென்றினாலுஞ் சுகதுக்கமடையாமல் அறிஞர்முதலான சகலருக்கு மேலானவனென்பதாம்.

சாந்தியையடைதலும் ஆத்மவிசாரமுமுறைத்தல்.

ஆரியர்பே ணுவதாகி யயலோர்க் கெல்லா
மரிதான சாந்தியமு தருந்தி மேலோர்
சீரியவீட் டினையுற்றார் நீயு மந்தச் செயல்புரிவாய்
நன்னூலாற் றெளிந்த சுத்த
நேரியபுந் தியினாலே விசாரந் தன்னை
நிறைத்திடுக வதுநிறைந்தா னிகரில் புந்தி
கூரியதாய் வீடுணரும் விசாரந் தானே
கொடும்பவநோய்க் கருமருந்தாங் குறிப்பு ளோர்க்கே.

(க-ரை.) சாந்தியையடைந் தாத்மவிசாரஞ்செய்தால் சனனநாசமாம் என்பதாம்.

விசாரணையின்பலமும் சந்தோடவிலக்கணமுங்கூறல்.

கருகியகங் குலின்மறையாக் கதிர்க்கு மட்காக்
காண்பரிய பொருளெல்லாங் காணுங் கண்ணாற்
றெருளுறநா னுலகம் வந்த வாறென் செறிபிறவி
யாரதெனுந் திகழ்வி சார
மிருளுறுமா பத்தினுக்கு மருந்தா மப்பா
லேற்றமுள சந்தோட மேதென் றோதில்
வருபொருளி லின்பமறத் துய்த்து வாரா
வனபொருளிற் றுன்பமிலா மகிழ்ச்சி தானே.

(க-ரை.) விசாரஞானத்தினாற் சித்தையுஞ் சடத்தையுஞ்சிற்சடமான மாயையையும் விசாரித்து அஞ்ஞானத்தைக்கெடுத்து ஆநந்தத்தை யடைய வேண்டுமென்பதாம்.

சந்தோடத்தின்பலமும் சாதுசங்கமுங்கூறல்.

நிகரறுசந் தோடவமு தமையப் பெற்று
னெடும்போக நஞ்சாமந் நிறைசந் தோட

மகலுறவா சையில்விழுநெஞ் சறிவை நோக்கி
லழுக்குறுகண் ணாடியிலா நம்போற் றோன்றா
மகிழ்குணமெய் தியபுருட மகிமை யோனே
மாதவரு நாதிபரும் வணங்கா நிற்பர்
சகமெனுமா யையைவெல்லத் தக்கோர்க் கெல்லாந்
தப்பாத சகாயமாஞ் சாது சங்கம்.

(க-ரை.) பூரணமகிழ்ச்சிநீங்க விடயசுகத்தி லழுந்துகின்ற மனது ஆத்மஞானத்தைப்பார்க்கில் களங்கமுள்ள கண்ணாடியில் முகத்தைப்போலத் தோன்றாதாதலால், முமுட்சுக்கள் சகலபோகங்களும் உகக்கும்படியான பூரணசந்தோடத்தையும் சம்சாரத்தை வெல்லத்தக்க சாதுசங்கத்தையும் அடையவேண்டுமென்பதாம்.

சாதுசங்கத்தின் பலன்கூறல்.

அறக்குறைவை நிறைவாக்குஞ் சம்பத் தாக்கும்
ஆபத்தைச் சுபமாக்கு மசுபந் தன்னைச்
சிறக்குமுயர்ந் தவர்கூட்ட மென்னுங் கங்கைச்
சீதநீ ராடினர்க்குச் செந்தீ வேள்வி
பிறக்கரிய தவந்தானந் தீர்த்தம் வேண்டா
மிடர்பந்த மறுத்தெவர்க்கு மினியோ ராகிப்
பிறப்பெனும்வே லைப்புணையா முணர்வு சான்ற
பெரியோரை யெவ்வகையும் பேணல் வேண்டும்.

(பத-ரை.) மிகவுமற்பமான அறிவைப் பூர்ணமாக்குவதாயும், விடயங்களால் வருமாபத்துக்களை அஃதின்றிய சம்பத்தாக்குவதாயும், ஒன்றிலுஞ்சேரியாத அமங்கலத்தை சர்வத்திலுஞ் சுகிக்கின்ற மங்கலமாக்குவதாயிருக்கின்ற சிறந்தமகான்கள் சங்கமென்கின்ற சானவியினது குளிர்ந்தசலத்தில் ஸ்நானஞ்செய்தவர்களுக்கு சிவந்த அக்கினிகாரியமான யாகங்களும் கெடாததபசுகளும், மகாதானங்களும், புண்ணியதீர்த்தங்களும் வேண்டுவதில்லை. துக்கமாகிய பந்தாசஞ்செய்து யாவர்க்குமினிமையுள்ளவராயும், சனனமென்னுஞ் சமுத்திரத்தைக் கடப்பதற்குக் கப்பலாயுமிருக்கின்ற அறிவுநிறைந்த மகான்களை யெவ்விதத்திலுஞ் சேரவேண்டும். எ-று.

சீவனையெருதாகவுருவகப்படுத்தி யவன்படுந்துன்பத்தை யறிவித்தல்.

ஆசைவன் பாசத் திரளினாற் கட்டுண் டரும்பிணி யீக்கடிக் கணுங்கி
யேசுறுபோகக்கதைகளான்மொத்துண்டிச்சை முட்கோலினுலைந்
காசுறு கருமச் சேற்றிலே யழுந்திக்கடுஞ்சகக்காட்டிலேசுழன்று[து
வீசுமா மோகத் தளிர்நிழற் றுயிலும் வீரனே சிவனு சீமருது.

சீவனைக்கரையேற்ற வேண்டுமெனல்.

மேவுறு துன்பப்பெருஞ்சுமைசுமந்துமீட்சிபோக்கிவையுடற்புண்ணு
வீவறு பிறவிக் குழியில்வீழ் சீவ வெருத்தினை யிக்குழி நின்று
மோவலின் முயல்வரெடுப்பதேவலியாமுயர்ந்தஞானிகளுறவுளதே
னுவிகர் நாவாய்த் தருவபோ லாக நல்குவர் பவக்கடல் கடக்க.

(க-ரை.) சீவன் சிவமாதற்கு மகான்களதுசகாயமன்றியு மனதின் சகாயமும் வேண்டுமெனல்.

சீவன் சிவமாதற்கு மகான்களது சகாயமன்றியு
மனதின் சகாயமும் வேண்டுமெனல்.

எவ்விடத் தில்லை நல்லஞா னிகளா மீர்ங்கனி மலர்குளிர்சோலை
யவ்விடங் *கானன் மேடதா மாங்கே யமர்பவ ரறிவிலா ரன்றோ
கவ்விய செல்வ நட்புநூல் சுற்றங் கருமமா திகளெலாமுதவாச்
செவ்விய மனமே யுதவுறல் வேண்டுஞ்சிவனைச்செல்கதியேற்ற.

*கானன்மேடு = பேய்த்தேரையுடைய பாலைவனம்.

அன்பில்லையாயின் யாவும்பயன்படாவென்பதற் குதாரணம்.

பிரபுலிங்கலீலை.

துறவற மனைய றஞ்சீர் தூயநற் கல்வி நல்லோ
ருறவொடு மகங்க டான மொண்டவம் விரதம் பூசை
யறிவிவை யனைத்து மில்லை யாதர வில்லை யாயிற்
பெறுவன மெய்வ ருத்தம் பெரும்பொரு ளழிவு மாமே.

அவ்வடியவர்வேடத்தையும், ஆலயத்தையுமரனெனத்
தொழுதற் குதாரணம்.

திருவிளையாடற்புராணம்.

அதிக நல்லற நிற்பதென் றறிந்தனை யறத்து
ளதிக மாஞ்சிவ புண்ணியஞ் சிவார்ச்சனை யவற்று
ளதிக மாஞ்சிவ பூசையு ளடியவர் பூசை
யதிக மென்றறிந் தன்பரை யர்ச்சனை செய்வாய்.

எனைத்துயிர்க்கு முறு தியிக பரமென்ப வவைகொடுப்பா னெல்லாந் தானு, மனைத்துயிர்க்கு முயிராகு மரனென்ப வவனறிவார்க் கங்கம் வாக்கு, மனத்துறுமெய்ப் பத்திவழி வருமென்ப வப்பத்தி வழிநிற் பார்க்கு, வினைத்துயர்தீர்த் திடவெடுத்த வடிவென்ப தவ னடியார் வேட மன்றே.

திருமந்திரம்.

படமாடக் கோயிற் பகவற்கொன் றீயி
னடமாடக் கோயி னம்பர்க்கங் காகா
நடமாடக் கோயி னம்பர்க்கொன் றீயிற்
படமாடக் கோயிற் பகவற்க தாமே.

ஆறிடும் வேள்வி யருமறை நூலவர்
கூறிடு மந்தணர் கோடிபே ருண்பதி
னீறிடுந் தொண்டர் நினைவின் பயனிலை
பேறெனி லோர்பிடி பேறது வாகுமே.

ஏறுடை யாயிறை வாவெம்பி ரானென்று
நீறிடு வாரடி யார்நிகழ் தேவர்க
ளாறணி செஞ்சடை யண்ண லிவரென்று
வேறணி வார்க்கு வினையில்லை தானே.

உள்ளம் பெருங்கோயி லூனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசற்
றெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே.

பூதி யணிவது சாதன மாதியிற்
காதணி தாமிர குண்டலங் கண்டிகை
யோதி யவர்க்கு முருத்திர சாதனந்
தீதில் சிவயோகி சாதனந் தேரிலே.

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூச மகிழ்வாரே யாமாகிற்
றங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே.

தேவிகாலோத்தரம்.

சித்தசலனம் போகத்திற்பற்றுதலுக் கேதுவென்று திட்டாந்தமாகச் சொல்லுமிடத்து, நிராலம்பத்தில் நிர்ச்சலனமாயிருக்கிற மனந்தானேமோக்ஷத்தையடைவதற்கு யோக்கியமென்று அருளிச்செய்கின்றார்.

மருவிய பொருண்மே லன்பாய் வானரம் போற்ச ரித்துத்
திரியுமச் சித்தந் தன்னைத் திருத்திச்சூ னியத்தே நின்றால்
மருவினோர் பிரித லின்றி வானவ ரறிவுக் கெட்டாப்
பொருவிலா நித்த சுத்தப் பொருளினை யடைவ ரன்றே.

(இ-ள்.) மருவிய பொருண்மேல் அன்புஆய் = சுத்தாசுத்தமாயிருக்கிற போகங்களிற் பற்றுதலாய், வானரம்போல் = இனியபழங்களையுடைய சாகையில்தொங்கி இடைவிடாமல் ஒன்றைவிட்டொன்றைப் பற்றிக்கொண்டு உதராக்கினியினால் வருத்தப்படுகிற வானரம்போல, சரித்துத்திரியும் அச்சித்தந்தன்னைத் திருத்திச்சூனியத்தே நின்றால் = முன்சொன்ன சுத்தமாயை அசுத்த மாயாபோகங்களிலே பற்றியிருக்கிற ஆசையினால் பரபரப்பாய்ச் செல்லுகின்ற சித்தத்தைமீட்டுச் சர்வோபாதி சூனியமாய்ச் சச்சிதானந்த பரிபூரணமாய் விளங்கும் சிவத்திலே நிலைபெறப்பண்ணினால், மருவினோர் பிரிதலின்றி வானவரறிவுக்கெட்டாப் பொருவிலா நித்தசுத்தப் பொருளினையடைவர் = அங்ஙனம் பொருந்தினவர்கள் பிரிவற்றதாய்த் தேவர்கள் அறிவுக்குமெட்டாததாய் உவமையில்லாததாய் நித்தியசுத்தமாயிருக்கிற சிவசாயுச்சியத்தை யடைவார்கள். எ-று.

"சித்தம்" என்பது பஞ்சபாசங்களை நீக்கி நின்மலமாயிருக்கிற ஆன்மசைதன்னியத்தை யென்றறிக.

திருவாசகம்.

புத்தர் முதலாய புல்லறிவிற் பல்சமயந்
தத்த மதங்களிற் றட்டுளுப்புப் பட்டுநிற்கச்
சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கு
மத்தன் கருணையினாற் றோணோக்க மாடாமோ.

பாடுதுறை.

இப்படிவே றறவிறைவன் யாவையுந்தா னாயிருக்க
மெய்ப்படவே சமயங்கள் பிணங்குவதென் விளம்பேடி
செப்பிடவே திமிரமுறு நயனத்தோர் மதிபலவா
மப்படியே யறுசமய மலத்திடுங்கான் சாழலோ.

திருமந்திரம்—பக்தியுடைமை.

பெத்தத்துந் தன்பணி யில்லை பிறத்தலான்
முத்தத்துந் தன்பணி யில்லை முறைமையா
லத்தற் கிரண்டு மருளா லளித்தலாற்
பத்திப்பட் டோர்க்குப் பணியொன்று மில்லையே.

வரைவுமாட்சி.

தான்வரை வற்றபின் னாரை வரைவது
தானவ னானபி னாரை நினைவது
காமனை வென்றகண் ணாரை யுகப்பது
தூமொழி வாசகஞ் சொல்லுமி னீரே.

மனமாயை மாயையிம் மாயை மயக்க
மனமாயை தான்மாயு மற்றொன்று மில்லை
பினைமாய்வ தில்லை பிதற்றவும் வேண்டா
தனையாய்ந் திருப்பது தத்துவந் தானே.

அணைந்தோர் தன்மை.

மலமில்லை மாசில்லை மானாபி மானக்
குலமில்லை கொள்ளுங் குணங்களு மில்லை
நலமில்லை நந்தியை ஞானத்தி னாலே
பலமன்னி யன்பிற் பதித்துவைப் போர்க்கே.

ஞானவிளக்கம்—சிவஞானவள்ளலார்.

மலமில்லை மாசில்லை மாணுபி மானங்
குலமில்லை யென்னறிவின் கூற்றிற்—கலக
மலமுண்டு மாசுண்டு மாணுபி மானக்
குலமுண்டு கிரிசியக்கூற் றில்.

சம்பந்தர் பேரறிவும் வாகீசர் தன்னுறவு
நம்பியா ரூரன்ற னட்பினையு—மன்புருவாந்
திண்ணனார் பேரன்புஞ் சிறுத்தொண்டர் பத்தியையு
மண்ணலே யெற்கீந் தருள்.

திருவாத வூரர்க்கு வைத்ததிரு நோக்கங்
கருவாதை போயொழியக் காட்டி—யொருவாத
பஞ்சமலக் கொத்தைப் பறித்த திருக்கரத்தை
யஞ்சலிசெய் தாற்போமை யம்.

ஆகாயம் போலுன் னறிவுபரி பூரணமா
யேகானு பூதி யெழுந்தாலு—மாகாயம்
போமளவு மாளவந்த புண்ணியனைப் போற்றிநினைந்
தாமளவுஞ் செய்யர்ச் சனை.

வாழி திருச்சனகர் வாழி சனற்குமரர்
வாழி சனாதர் மறைச்சனந்தர்—வாழிமறைக்
கல்லாலின் கீழிருந்த கண்ணுதலார் மாமேரு
வில்லார் மணிச்சிலம்பு மே.

தாயுமானார்.

ஆரண மார்க்கத் தாகம வாசி யற்புத மாய்நடந் தருளுங், காரண முணர்த்துங் கையுநின் மெய்யுங் கண்கண்முன் றுடையயென் கண்ணே, பூரண வறிவிற் கண்டில மதனாற் போற்றியிப் புந்தியோ டிருந்து, தாரணி யுள்ள மட்டுமே வணங்கத் தமியனேன் வேண் டிடத் தகுமே.

சிவஞானசித்தியார்—8-சூ. 32-செ.

ஞாலமதின் ஞானநிட்டை யுடையோ ருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவதொன் றில்லை

சீலமிலை தவமில்லை விரதமோடாச் சிரமச்
செயலில்லை தியானமிலை சித்தமல மில்லை
கோலமிலை புலனில்லை கரண மில்லை
குணமில்லை குறியில்லை குலமு மில்லை
பாலருட னுன்மத்தர் பிசாசர்குண மருவி
பாடலினோ டாடலிவை பயின்றிடினும் பயில்வர்.

(போ-ரை.) மேற்கூறிய ஞானநிட்டையினையுடைய சீவன்முத்தருக்கு, இவ்வுலகத்தின்கண் நல்வினைதீவினைகளாகிய இருவினைகளுமில்லை. வினைகளைச்செய்தாராயினும் ஒருபயனை நாடுவதுமில்லை. பலனைக்கருதாது வினைகளைச்செய்யுங்காலத்தும், சமயாசாரங்கள், தவம், விரதம், ஆச்சிரமதருமம், தியானபாவனைகள், சித்தசஞ்சலம், தானிற்குஞ் சமயத்திற்கேற்ற வேடம், விடயங்களைவிடுதல், பற்றுதல், அந்தக்கரணங்களையடக்கல், சத்துவ குணத்தில் மேம்பட்டிருக்க வேண்டுமென்ற நியமம், ஒருகுறியின்கணேமனத்தைநிறுத்துதல், குலாசாரதருமத்தில் ஒழுகுதலாகிய இவையாவுமில்லை. இவ்வாறொன்றுமின்றிப் பாலரைப்போல இவையெல்லாஞ் செய்யாதிருப்பினுமிருப்பர்; ஒருக்கால்செய்யினும் பித்தர்போல நியதியின்றி நேர்ந்தவாறு செய்வர். அவ்வாறு செய்யுங்காலத்தும் பேய்பிடிக்கப்பட்டவன்போல் தேகத்தில் தானென்னும் போதம் அற்றுச் சிவமேதானாக நின்றுசெய்வர். இதுவன்றி பரமானந்தமேலீட்டால் பாடலாடல்களைச் செய்திடினுஞ் செய்வர். எ-று.

பாலர் சிலதொழிலைச்செய்யினும் பயன்கருதாதுசெய்வர். ஆதலாலவ்வுவமை மாயாமல நீக்கத்தையும், பித்தர் விருப்புவெறுப்பின்றி ஒரு தொழிலைச் செய்வாராதலால் அவ்வுவமை கன்மமலநீக்கத்தையும், பேய்பிடியுண்டவன் தன்னைமறந்து தொழிற்செய்வனாதலால் அவ்வுவமை ஆணவமலநீக்கத்தையுங் குறித்தவாறறிக.

ஷை 12-ம் சூத்திரம் 3-ம் செய்யுள்.

அறிவரியான் றனையறிய யாக்கை யாக்கி
யங்கங்கே யுயிர்க்குயிரா யறிவுகொடுத் தருளாற்
செறிதலினாற் றிருவேடஞ் சிவனுருவே யாகுஞ்
சிவோகம்பா விக்குமத்தாற் சிவனு மாவர்
குறியதனா லிதயத்தே யரனைக் கூடுங்
கொள்கையினா லானவர் குறிபொடுதா மழியு

நெறிபதனாற் சிவமேயாய் நின்றிடுவரென்று
னேசத்தாற் றொழுதிடுநீ பாசத்தார் விடவே.

(போ-ரை.) ஈசனுக் கன்பில்லா ரடியவர்க் கன்பில்லா ரெவ்வுயிர்க்கு மன்பில்லார் தமக்கு மன்பில்லார், பேசுவதென் னறிவில்லாப் பிணங்களைநா மிணங்கிற் பிறப்பினிலு மிறப்பினிலும் பிணங்கிடுவர் விடுநீ, யாசையொடு மரனடியா ரடியாரை யடைந்திட் டவர்கரும முன்கரும மாகச்செய்து, கூசி மொழிந் தருண்ஞானக் குறியினின்று கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே என்று மேற்கூறியவாறு அறிவில்லாதாருடைய இணக்கத்தை விடுதற்பொருட்டு யாதுசெய்யவேண்டுமெனின், சிவனடியாரைச் சிவனெனவே தேறி அன்புடன் வழிபடல்வேண்டும். சிவனடியார் சிவமாவதெவ்வாறெனின், சிந்தனைக்கதீதனாகிய பரம்பொருள் உலகத்திலுள்ளார் தன்னையறிதற்பொருட்டு திருநீறு கண்டிகைமுதலிய திருவேடமாகிய தனதுவடிவத்தை தன்னன்பர்க்குக் கொடுத்து உயிர்க்குயிராய்நின்று, அவ்வன்பர் அறிவினை விளக்கி அருளினால் அவரோடுகலத்தலால், அத்திருவேடமுடைய மெய்யன்பர் சிவமேயாவர். சிவோகம் பாவனையானும் அவர் சிவமேயாவர். இருதயத்தானத்தில் ஒருகுறியின் கண்வைத்து முதல்வனைக் கூடுஞ்செயலானும் அவர் சிவமேயாவர் அவ்வாறு கூடுங்காலத்துக் குறியும் குறிக்கின்றதாமுமின்றி நின்றதன்மையானும் சிவமேயாவர். எ-று.

அத்வைதிகளே சிவனடியார்களும் சாதுக்களும்.

வேதமுதலிய கலைகளில் முதன்மையாகச் சிறப்பித்துச் சொல்லப்படுவது அத்வைதிகளையே ஷை கலைகளில் முடிவாகச்சொல்லப்படும் விஷயமும் அத்வைதமே. அப்படிப்பட்ட அத்வைதத்திற்குச சாதனமாக ஷை வேதமுதலியவைகளில் விதிக்கப்பட்டவை நித்திய, நைமித்திய கருமங்கள் செய்தல், விபூதி ருத்திராக்ஷங்கடரித்தல், சிவபூசைசெய்தல், சிவதலத்தில் வசித்தல், சிவாலயதரிசனஞ்செய்தல், சிவபுராணங்கேட்டல், சிவபணிபியற்றல், சிவனடியாரைப்பேணல், சிவநாம சங்கீர்த்தனஞ்செய்தல், காயத்திரி, பிரணவம், பஞ்சாக்ஷரமுதலிய ஜபஞ்செய்தல், இயமநியமாதி யெண்வகை யோகஞ்செய்தல், உபரதி வைராக்கியங்களை யநுசரித்தல், வேதசாஸ்திரப் பிரமாணங்கட்குக் கட்டுப்பட்டுப்பேசுதல், ஆஸ்திகபுத்தி, அன்பு, இனியவைகூறல், பொறுமை, யடக்கம், டம்பமின்மை, பொறாமையின்மை, புறங்கூறாமை, உபகாரம், அருள், கொல்லாமை, புலாலுண்ணாமை, இன்னாசெய்யாமை, வெகுளாமை சத்தியமுதலிய சிறந்த சற்குணங்களைப்பெறுதல், நித்தியாநித்தியவிவேகம், இகமுத்திரார்த்த பலபோகவிராகம், சமாதிசட்கசம்பத்தி, முமூட்சுத்துவம் ஆகிய இவைகளைப்பெற்று, பிரபலசுருதிப் பாண்டித்யமும், பிரமஞானநுபூதியினையுஞ் சகஜமாய்ப்பெற்றுள்ள சற்குரு சந்நிதானத்தில் சிரவண, மனன, நிதித்தியாசன, சமாதியினால் சாட்சாத்கார மெய்ந்நிலையைப் பெறுதலுமாகிய இவைகளாம்.

சிவம், விஷ்ணு, சூரியன், விநாயகர், சுப்பிரமணியர், அம்பாள்முதலிய தேவதாபக்திகளுஞ் சாதனமாம்; இப்படிப்பட்ட சாதனங்களை வேதோக்தமாகவாவது, வேதத்துக்கு விரோதமில்லாதபடி ஆகமோக்தமாகவாவது செய்யலாம்.

சூதசங்கிதை வேதாவிரோதமுரைத்த அத்தியாயம், 7-ம் செய்யுள்.

துவிதமறை யளவையிச்சி யாதுதொகு காட்சிமுத லளவைகட்குத்
தவிர்தலில்கோ சரமாய்மூக் கியப்பயனி லாததாய்த் தங்கலாலே
யவிர்மறைமூக் கியவளவை யன்றுதுவி தத்திற்கா யினுமவ்வேதம்
துவிதத்தை யநுவாத முன்செய்தத் துவிதமே சொல்லுமீற்றில்.

என்று வேதத்தின்சித்தாந்தமான அத்வைதத்தைச்சொல்லி, 8வதுசெய்யுளில்

மிருதிபுரா ணஞ்சைவா கமந்தருக்கம் பாரதமுன் விளம்பு நூல்கள்
கருதுறுமத் துவிதபர மேயுரைக்குஞ் சிலசுருதி கடியஞ் ஞானப்
பெருநிவர்த்தி மூலமா கவும்பேசுஞ் சிலசுருதி பிறங்கா நிற்கும்
ஒருவில்விதி மூலமா கவுமத்து விதப்பொருளை யுரைக்கு மாலோ.

என்றும், பிரமகீதை கேனோபநிடதார்த்தத்தில் 29,30,31வது செய்யுட்களில்

இதுவே முடிந்த நிலமெல்லாத் தர்க்கங் களுக்குங் காட்சியே
முதலாம் பிரமா ணங்களுக்கு மொழியும் வேதாந்தங்களுக்கும்
விதமாம் புரா ண மனைத்தினுக்கு மிருதி களுக்கும்வேதத்தின்
மரமாம் விச்சை யனைத்தினுக்கு மன்னு மாபா ரதத்துக்கும்.

மேபன் சைவா கமங்கட்கும் அரியாகமத்துக் குமெனது
பொய்யின் றிபவா கமத்துக்கும் புத்தா கமங்கட் குமருகன்
செய்யு மாக மத்துக்குஞ் சித்த ரியக்கர் கந்தருவ
ருய்யும் பரிசு மற்றுள்ளோ ருரைத்த வாக மங்கட்கும்.

"உவமையிற் பரமாத்துவிதமா மிந்தவொண் பொருள்."

என்றும், வேதமுதலியகலைகளில் சிவபக்திமுதலிய சாதனங்களெல்லாம் அத்வைதானுபவம் பெறும்பொருட்டே விதிக்கப்பட்டனவெனக் கூறுகின்றமையினானும், 'துவிதஞானம் வேதசாஸ்திரசம்மதமும்' யுக்தியநுபவசம்மதமும் அல்லவென்பதற்கு வேண்டியநியாயமும், பிரமாணங்களும், நாமும் மற்றவர்களுங் காட்டியிருக்கின்றோமாகலின், ஷை சாதனங்கள் யாவும் அத்வைத சித்தாந்தத்திற்கே யுரியவென்பதற்கு யாதும் ஐயமின்றெனக. மாயாவாத துவித தாந்திரிக சைவசித்தாந்திகளும் சில சாதனங்களைச் செய்கின்றார்களே அதுவரையிலுள்ள பலனையேனு மடையமாட்டார்களாவென்னின்?

அடையார்கள். அவர்கள் சதா வேதநிந்தை, சாஸ்திரநிந்தை, வேதசம்பந்தமான கருமநிந்தை, வேதாந்தநிந்தை, அத்வைதநிந்தை, பெரியோர்நிந்தை முதலிய பலநிந்தைகளைச்செய்து அதிபாதகத்தைத்தேடிக்கொள்ளுகின்றார்களானதால், அவர்களது வஞ்சச்செய்கைபொதிந்த சாதனங்கள் சாதனம்போல் மேலுக்குத்தோன்றினும் உண்மையிலது சாதனமாகவேமாட்டாது; பின்னைப் பாதகமேயாமென்க.

இனிச்சுருதி ஸ்மிருதி புராண இதிகாச ஆகம சாஸ்திரங்கட்கு அத்துவிதமே சித்தாந்தமென்றும், அப்படிப்பட்ட அத்வைத சித்தாந்தத்திற்கே மேற்கூறியவைகள் சாதனங்களாமென்றும் ஷெ சுருதியாதிகளைக்கொண்டே நிரூபிக்கின்றோம்.

திருவிளையாடற்புராணம்.

உண்மாசுகழுவுறு நீற்றன்றேஉபநிடத முறைப்பக்கேட்டும்.

தேவாரம்.

வேதத்திலுள்ளது நீறு வெந்துயர்தீர்ப்பது நீறு.

அதர்வணவேதம்—நாரதபரிவிராஜகோபநிஷத், 7-ம் உபதேசம்.

துரியாதீதனுக்குப்பஸ்ம (விபூதி) ஸ்நானம்......பகூதனுக்குத்திரிபுண்டரம். ஹம்ஸனுக்கு ஊர்த்தவபுண்டரமும், திரிபுண்டரமும். பரமஹம்ஸனுக்குப் பஸ்மதூளனமும்.

சுக்கிலயசுர்வேதம் பைங்களோபநிஷத் 4-ம் அத்தியாயம்.

அநேகமானகருமம், சௌசம், யக்ஞயம், ஜபம், அப்படியே தீர்த்தயாத்திரை முதலியவைகளைத் தத்துவத்தை யறிகிறவரையி லனுஷ்டிக்கவேண்டியது.

யசுர்வேதம் வராகோபநிஷத் 4-ம் அத்தியாயத்தில்

அத்வைதஞான சாதனத்துக்காக அஷ்டாங்கயோகஞ் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் நியமத்தில் ஆஸ்திக்கியமும், ஈசுவரபூசையும், தியானத்தில் ஈசுவரதியானமும் சொல்லப்பட்டன.

ஈசுவரகீதை—பத்திமை அத்தியாயம்.

சந்ததம் வேத மியாவையும் பரமாச் சாற்றவும் படுவதிங் கெனையே
அந்தண ரெல்லாம் வேள்வியி னானும் அங்கியிற்போற் றுவதெனையே
எந்தலோ கத்தும் பிதாமகன் முதலாமியாவருமிறைஞ்சுவதெனையே
சிந்தையை யொருக்கி யோகிக ளுளத்தே தியானமுற் றிருப்பது
[மெனையே.

ஏக னாகி நிற்கின்ற யானே யெல்லா இமையவர்க்கு
தேகம் பண்ணி யவற்றுள்ளே திகழப் நிற்ற லாய்ச்செய்யும்
யாக மெல்லா மெனைக்குறித்தே யிபற்று கின்று ரவற்றிலவிர்ப்
பாகங் கொள்வே னவற்றின் பயனுங்கொடுக்கப்படுவேனன்.

ஷ யோக அத்தியாயம்.

கருத்திலா மூடர் காட்டமா திகளிற் காண்பர்கற் றவர்களா காயத்
தருக்கனிற் புனலிற் காண்பரா குதியி லருச்சனை செய்யுமந் தணரவ்
வெரிக்கணே காண்ப ரெங்குமாய் நின்ற எனதுலிங் கத்தினை நேரே
ஒருங்கிப பரம யோகிக ளென்று மொழிவறக்காண்பர்தம் முளத்தே.

மஹா இதிகாசமாகிய சிவரகசியம் 6-ம் அம்சத்திலுள்ள ரிபுகீதை 34-ம் அத்தியாயம்.

பரமான அன்புடனே பரசிவத்தைப் பாங்காக ஆராதித் தருள் பெற்றோர்க்கே, உரமான அகம்பிரம நிச்சயந்தா னனமற உள் ளத்தி லதிபா நிற்கும், திரமான அகம்பிரம நிச்சயத்தைத் தியக்க மறச் செறிந்தவரே முத்த ராவார், வரமான பரமசிவப் பதந்தன் னை வருத்தத்திலோ ரையமில்லை வாய்மை தானே.

ஷ ஷ ஷ ௬-வது அத்தியாயம்

பரிவுடனே யுபநிடத பாடத்தாலும் பரமசிவ பத்தர்க்கே தா னத்தாலும், புரைபறவே திவ்யமா லிங்கத்தின்கண் பூரணமாம் பரமசிவ பூசை யாலும், பரவுசிவ தலங்களிலே வாசத் தாலும் பல விதமா மற்றுமுறு நியமத் தாலும், பிரமமதாம் பரமசிவ னரு ளன் டாகிப் பின்னமிலா வகண்டான்ம போத முண்டாம்.

ஷ ஷ ஷ 39-வது அத்தியாயம்.

பொருவில்சிவ பூசனையே முதலாம் பத்தி புரிந்ததனல் சிவ கருணை பொருந்தி னோர்க்கே, சருவமுமே பிரமமென்று மதுநா னென்றும் சாற்றியவிவ் வகண்டபர ஞானந் தோன்றி, மருவமிக வரிசான முத்திப் பேறும் மற்றவருக் கிலையெனவே முன்பு கந்தன், அரியசிவ பத்திமிகுஞ் சைகீ சவ்யற் கருளியவா றகிலர்க்கு மறைந் தான் குதன்.

ஷெ ஷெ ஷெ 43-ம் அத்தியாயம்.

அன்றியுமே விதியுடனே நியம மாக அமலமதாம் விபூதியினு லங்க மெல்லாம், நன்றுறவே பணிந்துதிரி புண்ட ரத்தை நலமாகச் சந்ததமுந் தரிப்போ ருக்கே, துன்றியநற் பரமசிவ கருணை யுண் டாம் தோன்றியவக் கருணையினுற் சித்தந் தூய்தாய், என்றுமொரு விக்கினமு மின்றி நன்று யிருமையிலா அகம்பரமஞானந்தோன்றும்

பத்தியுடன் விபூதியுடைத் தார ணந்தான் பாசுபத விரதமெ னப் பகர லாகும், சத்தியமாய் விபூதியுடைத் தார ணத்தாற் சடி தியினி லகண்டபர ஞான முண்டாம், உத்தமவிப் பாசுபத விரதந் தன்னை ஒருவருட மனுட்டித்துன் பாதம் பெற்றேன், அத்தனின தருளாலின் றகண்ட ஞானம் அடைந்தவனுப் ஆன்பாவி லமர்ந்து நின்றேன்.

ஷெ ஷெ ஷெ 44-ம் அத்தியாயம்.

உலகினிடை யந்தணரே யாதி யாக வுற்பத்தி பொருந்தியிடுஞ் சீவ ரெல்லாம், இலகுமறை விதித்தபடி முன்பு கன்ம மிகழாது செயவேண்டுஞ் செய்யுங் காலேத், திலகமதா மறைமுடிவில் விதிக் கப் பட்ட திவ்வியமாம் விபூதியினை நியம மோடு, சலனமறச் சந்தத முந் தரிக்க வேண்டுஞ் சற்றுமிதி லனுதரவே செய்ய வொண்ணு.

பூதியினு லங்கமெலா நன்றுய்ப் பூசிப் பொருவிறிரி புண்டரமு மணிந்து கொண்டு, மாதவனே நியமமுட னுருத்தி ராக்க மாலே களுஞ் சிரமுதலி றரித்துக் கொண்டிங், கோதியிடு முருத்திரபஞ் சாக்ஷ ராதி யுத்தமமா மந்திர முஞ் செபித்துக் கொண்டு, நீதியுட னிகழுமகா லிங்கத் தின்கண் நித்தியமா யர்ச்சனையுஞ் செய்ய வேண்டும்.

அத்தனுடைப் பூசனைபோ லன்பர் பூசை யநுதினமு மாதரவா யியற்ற வேண்டும், உத்தமமா யோதியவோர் சிவத லத்தி னுட னுள்ள பரியந்தம் வசிக்க வேண்டும். சுத்தமாஞ் சிவநாம கீர்த்த னத்தைச் சோர்வறவே சந்ததமுஞ் செய்ய வேண்டும், மெத்தவு மே யுத்தமமாஞ் சாம்ப மூர்த்தி மேனியுடைப் பாவனையும் பண்ண வேண்டும்.

சூதசங்கிதை, சூதகீதை, சர்வவேதாந்தசங்கிரகம்.

வேதவே தாங்க மாதி விரும்பத்தி யயனஞ் செய்தல்
போதமற் றவைசெய் வித்தல் பொலிந்தவே தார்த்த பத்தி
மேதகு மறைவி ரோத மேவுநா லுபேட்சை சாந்தி
காதலார் தாந்தி மற்று ஞானங்க மென்பர் கற்றோர்.

சிவமலி ஞானங் கங்க ளவற்றினுந் தேவர் போற்றும்
சிவலிங்கப் பூசை யாற்றல் சிவலிங்கப் பதிட்டை செய்தல்
சிவனமர் தலங்க டோறுஞ் சென்றுசென் றன்பிற்போற்றல்
சிவனடி யார்கள் பூசை சிறப்புற நாளுஞ் செய்தல்.

புண்ணிய நீறு ருத்தி ராக்கம்பொற் புறத்த ரித்தல்
கண்ணிய ஞான வாசான் கழலிணை சேவை செய்தல்
நண்ணிய ஐந்தெ ழுத்து முதலாநன் மனுச்செ பித்தல்
எண்ணிய விவைநன் கென்பா ரிரு வினை பொருவி னோரே.

ஷ கடவல்லியோடு சுவேதாசுவதரம்.

தானமக முதலான புண்ணியத்தா லியோகசித்தி தழைய வுண்டாம்
ஆனவத னல்ஞான முண்டாகு முத்தியத னாலுண் டாகும்
ஈனமிலிப் பிரமவித்தை விபூதியக்க மணிபுனையின் சாந்த ருக்கும்
தூநலமார் அத்தியாச் சிரமிகட்கும் போன்பிற் சொல்லல் வேண்டும்.

பிரமகீதை சாந்தோககிய உபநிஷத்.

அன்பரா யுள்ளீர் கேண்மி னறிவித்த பொருண்மெய் யன்றே
லென்சிர மிற்று வீழ்வ தென்றன னிதுவு மன்றி
யின்பமே யளிக்கு மீச னிவ்விடந் தன்னின் வந்து
தன்பெருங் கருணை யாலுந் தளர்வறப் பண்ணு கின்றான்.

அப்பொழு தளவி லாத வருளுரு வாய வீசன்
செப்பிடு மூவ ரேத்துந் திருவுரு வுடைய சோதி
பொப்பிலா மதியுஞ் சூடி யுமையொரு கூற னாகி
யிப்படி வானோர் காணும் படியுள வியல்பின் வந்தான்.

நித்தரா யுள்ள வானோர் நிறைமலர் மாரி மேன்மே
லுய்த்தனர் மிக்க வன்பா லுரைத்தனர் துதிக ளெல்லாம்
பத்தர்வே தங்கள் சொன்ன படியிலே பணிந்து வாழ்த்தி
யித்தன்மைத் தாய வேறுஞ் செய்தன ரிறைவர் காண.

ஓடி ஞர்சிலவர் ஒக்க நின்றவர்க ளொருவ ரோடொருவர் தழுவினர்
கூடியொன்புடைவைமேலெறிந்துசிலர்கொண்டுகொண்டுவிளையாடினர்
ஓடி வந்துபிரி யத்தி ஞேடொருவ ரொருவ ருச்சியை முகந்தனர்
ஆடி ஞர்கள்சில ரன்பி ஞலறிவ தொன்றி லாதபடி யாகவே.

உமையோடு கூடி யுளஞய வீச ஞெழியாத தேவர் செயல்கன்
டமையாத வன்பு மிகவாகி யங்கை யருளோ டமைக்க வயன்மா
லிமையோர்க ளோடு முனியாயி ஞேர்க ளிடர்தீரும் வண்ணமருளா
லமையாத வங்க ணதுவைத்தல்கண்டதருள்பெற்றுநின்றதனைவோர்.

சத்திய மாகி வேத மொன்றுமே யளவை யாகு
மித்தன்மைப் பொருளை யெல்லா வுலகரும் அறியும் வண்ண
நித்தரா மன்ப ரேத்து நிறைந்தமெய்க் கருணை யீசன்
மெய்த்தகு பொருளீ தென்றே விளம்பிடல் செய்ய லுற்ருன்.

உலக மியாவு முயிர்பலவு நானே சிறிதும் வேறில்லை
யலகி லறிவா லாய்ந்திடினு மாயா விடத்து மருத்தமிதே
திலக மாய மறைதுணிந்து திகழ்த்தும் பொருளு மிதுவென்ற
னிலகுந் தன்மை யனுபவமு மிதிலோ ரைய முளதன்ருல்.

இவ்வாறு பலசெய்யுட்களில் தேவர்கள் பிரமதேவஞல் அத்வைதஞான மூபதேசிக்கப்பெற்று அப்போது அங்குவந்த பரமசிவனைத்தரிசித்து, ஆநந்த சாகரத்தில்மூழ்கி ஆர்ப்பரிக்கப் பரமசிவன் பிரமதேவன் உங்கட் குபதேசித் தது மெய்யேயெனத் தெளிவுறுத்திய விஷயஞ் சொல்லப்பட்டிருக்கிறது.

திருவிளையாடற்புராணம். வேதத்துக்குப் பொருளருளிச்செய்தது.

ஆதியி லான்ம தத்துவ மான வலர்மகன் பாகமு நடுவி
னீதியில் விச்சா தத்துவ மான நெடியவன் பாகமு முடிவி
லோதிய சிவதத் துவமென லான விருத்திர பாகமு முதிக்கும்
பேதியிம் மூன்றி லெண்ணிறத் துவங்கள் பிறக்குமிம் மூன்றினு
[முறையால்.

ஓதரு மகார முகாரமே மகார முதித்திடும் பிரணவம் விந்து
நாதமோ டுதிக்கும் வியத்ததா ரகத்தி னல்லகா யத்திரி மூன்று
பேதமாம் பதத்தாற் பிறக்குமிக் காயத் திரியிரு பேதமாம் பேதம்
யாதெனிற் சமட்டி வியட்டியென் றிரண்டு மேதுவாம் வேட்டவைக்
[கெல்லாம்.

இன்னவை யிரண்டு மிவனருள்வலியாலீன்றநான்மறைபைந்நான்கும்
பின்னிவ னருளா வளவில வான பிரணவ மாதிமந் திர மு
மன்னவா றுன தாரகத் தகரா மாதிபக் கரங்களு முதித்த
சொன்னவக் கரத்திற் சிவாகம நூலிச் சுரவர னடுமுகத் துதித்த.

கீட்டிசைமுகத்தொன்றடுத்தநாலைந்திறகிளைத்ததாலிருக்கதுதென்பா
லீட்டியவிரண்டாய்வேதநூறுருவோடெழுந்ததுகுடதிசைமுகத்தி
னீட்டிய சாம மாயிர முகத்தா னிமிர்ந்தது வடதிசை முகத்தி
னூட்டிய வொன்ப தருவொடு கிளைத்து நடந்தது நான்கதாமறையே.

அருமறை நால்வே றுகையால் வருண மாச்சிர மங்களு நான்கா
தருமம்யாகாதிகருமமுமறையின்றகைமைபிற்றோன்றினமறையுங்
கருமநூன் ஞான நூலென விரண்டாங் கருமநூ லிவனருச் சனைக்கு
வரும்வினையுணர்த்துஞானநூலிவன்றன்வடிவிலாவடிவினையுணர்த்தும்

முதனுகர் நீராற் சினைதுழைத் தாங்கிம்முழுமுதற்கருத்துநல்லவிபின்
பதமிவன்வடிவப்பண்ணவர்பிறர்க்குந்திருத்தியாம்பரனிவன்முகத்தி
விதமுறுநித்தமாதிமுவினைக்கும்வேண்டியங்குலகவர்போகங் [ன்
கதிபெற வியற்றுஞ் சிவார்ச்சனை வினைக்குங் காரண மிச்சிவகோசம்.

மறைபலமுகங்கொண்டலறிவாயிளைத்துமயங்கவேறகண்டபூரணமாய்
நிறைபரம் பிரம மாகுமிக் குறியைக் கருமநன் னெறிவழாப் பூசை
முறையினு ஞான நெறியினிப் பொருளையருளினுன் மயக்கற மயங்கு
மறிவினுந் தெளிவ துமக்குநா முரைத்த வருமறைப் பொருள்பிறர்க்
[கரிதால்.

கருமத்தான் ஞானமுண்டாங் கருமத்தைச் சித்தசுத்தி
தருமத்தா லிகந்தசித்த சுத்தியைத் தருமநல்கு
மருமைத்தாந் தருமத்தாலே சாந்தியுண் டாகுமாண்ட
பெருமைத்தாஞ் சாந்தியாலே பிறப்பதட் டாங்கயோகம்.

கிரியையான் ஞானந்தன்னுற் கிளர்சிவ பத்திபூசை
தரிசனஞ் சைவலிங்க தாபனஞ் செய்தலீசற்
குரியமெய் யன்பர்பூசை யுருத்திர சின்னந்தாங்கம
லரியதே சிகன்பாற்பத்தி யனைத்தையுந் தெரியலாகும்.

மறைவழி மதங்கட்கெல்லா மறைபிர மாணம்பின்சென்
றறைதரு மிருதியெல்லா மவைக்கனு குணமாமின்ன

முறையினுன் மார்த்தமென்று மொழிந்ததம் மார்த்தஞ்சேர்ந்த
துறைகள்வை திகமாமேலாச் சொல்வதிச் சுத்தமார்க்கம்.

தெருட்பெறு போக வீடுகா ரணமாய்ச் சிவமய மாமறைப்பொருளை
யிருட்கெட வுரைத்தே மிப்பொருட் கதிக மில்லையிப் பொருளெலா
[முமக்கு
மருட்கெடத் தெளிவ தாகென வினைய வழிவழி மாதவர் புறத்தை
யருட்கைபாற் றடவி யிலிங்கத்துட் புகுந்தா னருள்பழுத் தன்னதே
[சிகனே.

திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம்—திருக்கழுமலம்.

பத்திப்போர் வித்திட்டே பரந்தஐம் புலன்கள்வாய்ப்
பாலேபோகா மேகாவாய்ப் பகையறு வகைநினையா
முத்திக்கே விக்கத்தே முடிக்குமுக் குணங்கள்வாய்
மூடாவூடா நாலந்தக் கரணமு மொருநெறியாய்ச்
சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப் பரம்பொருள்
சேர்வார்தாமே தானாகச் செயுமவ னுறையுமிடங்
கத்திட்டோர் சட்டங்கங் கலந்திலங்கு நற்பொருள்
காலேயோவா தார்மேவுங் கழுமல வளநகரே.

இலிங்கபுராணம்—தியானவிதி.

அருத்தியின் ஞான மின்றி முத்திவீ டடைதல் கூடா
விரிப்பரு ஞானந் தானுந் தியானத்தா லன்றி மேவா
துரைத்திடு தியானந் தானும் ஓங்கிய ஞானம் வல்ல
குருத்தனி யருளி னல்லாற் கூடுத லரிய தாமால்,

வாயுசங்கிதை—இருடிகள் பிரமலோகமடைந்தது.

அருளுநான் மறைக ளுரைத்திடு தரும மாசையின்றுபறிந்தியற்றில்
தெரியுமற் றதனுற் பாவபுண் ணியங்க ளொத்திடுமொத்திடிற்சிறந்த
பொருவறு சிவமா யோகம்வந் தெய்து மெய்திடிற் புகலுதற்கரிதாய்
மருவொணு தாகி யுயர்வற வுயர்ந்த மாசிலா முத்தியெய் திடுமால்.

௯ வாயுபகவான் அடைந்தது.

யாங்கள்முற் காலை ஞானமொன் றின்றியன்னவாகனன் றனையெய்தித்
தீங்கற ஞான முதவென வுரைப்பத் திங்கள்வே ணியனடி முன்னி
ஓங்கிடு வேள்வி புரிமினக் காலை யுலவைவேந் தும்முழை யடைந்து
பாங்கினில் ஞான மும்மதுளங் கொள்ளப் பாற்படப் பகர்வனென்
[றுரைத்தான்.

சூதசங்கிதை—சமாதிவிதி.

நடந்தாலு மிருந்தாலும் நவின்றாலுந் துயில்கொண்டு
கிடந்தாலும் விழித்தாலும் கிளர்முடிமன் னவர்முதலோர்
தொடர்ந்தாலுந் தொழுதாலுந் துதித்தாலு மவமதித்துக்
கடந்தாலும் மெய்ஞ்ஞானி கமலவிலைப் புனல்போல்வான்.

இனையஞானி தனைப்பரனென் றெண்ணாதேவ னவமதித்தான்
அனைபபாவி நெடுங்கால மள்ளலனைத்து மழுந்திடுவான்
வனையுஞானி யெவன்மனைச்செல் வானச்செல்கை மாத்திரத்தான்
நினையும்போகம் பற்பலவு நிரம்பவுறுமம் மனையாளி.

இன்னுமவன்றன் பிதிர்குழு வேற்றமாகி முத்தியிடை
மன்னுஞானி யருட்பார்வை வயங்கவெவன்மேற் படினுமவன்
றன்னுபாவ மெலாமொழிந்தோன் றாயஞானிதா னுதித்த
மின்னுகுலமும் புனிதமுறு மேவுவாளன் னையுமுத்தி.

செய்யஞானி தரிசனமே தேவதேவன் றரிசனமாம்
ஐயவவன்றங் கிடுபூமி யமைந்தசிவபுண் ணியபூமி
தெய்வவவனை வணங்கிடுதல் சிவபிரானை வணங்கிடுதல்
பொய்யிலவனுக் கியற்றுபணி பூதநாதற் கியற்றுபணி.

மருவுகுதலை மழவுமனி வள்ளத்தருமை யறியாது
பெருகவிகழு மதுபோலப் பித்தின்முழுகும் பேருலகம்
பொருவின்ஞானி யருமைதனைப் போற்றாதிகழ்ந்துபுகரடையும்
கருவன்மலத்தை யிருங்கயிலைக் கடவுளருளா லறுத்துள்ளீர்.

அன்றுசடலிற் கொதித்தெழுந்த வாலகால மமுதாக்கி
நன்றுபொலியு நம்பெருமா னளினமலர்த்தா ளிடைப்பத்தி
பொன்றுமவர்க்கேமெய்ஞ்ஞானமுறுமற்றோருக்குறாதென்றும்
துன்றுஞான மகிமையெலாஞ் சொல்லப்புகினெள் பலசுழியும்.

பிரமகீதை—கேனோபநிஷத்.

பரமாத்துவித ஞானியே பரதேவதைதா னவனேயித்
திரமாமுத்தி யானிங்குச் செப்பும்பொருள்செய் வினையாலு
முரமாந்ததீசி கௌதமனு லுண்டாஞ்சாப வுரையாலுங்
கரமாமனிதர் நெஞ்சதனிற் காதல்செய்யா தொருகாலும்.

ஆரணத்தன் னியமில்லாச் சிவன்றன் பாலு மத்துவித வேத னத்து மடைதற்குள்ள, காரணமாஞ் சிவலிங்கார்ச் சனத்துஞ் சாலக் காய்வதுவு மேயன்றி யுருத்திராக்க, தாரணத்துந் திரிபுண்டர தார ணத்துஞ் சர்வாங்கோத் தூளனத்துந் தாமேகாய்வர், சீரி னக்குஞ் சிவனென்னு முரையுந் தங்கள் செவியாலுங் கேளார்செய் வினையாற்றீயோர்.

தொல்லைநல் வினையாற் சுருதிநன் மிருதி சொன்னவா றணிந் தவத் தூயோ, ரெல்லையிற் பரமாத் துவிதவே தனத்தை யுள்ளவா றுணரவே யுணர்வர், நல்லவிப் பரமாத் துவிதஞா னியைநா ராயண னுருத் திரனும், எல்லையில் லாத தேவரும் பூசித் தேத்தவும் படுமிவ னென்றும்.

ஓதிய தோட மெல்லா மொழிந்துள ராகி யுற்ற
வேதவே தாந்தந் தன்னின் மிகநிட்டை யுடைய நல்லோ
ரியாதுந்தம் மிதயத் துள்ளா யிரண்டலா ஞான மத்தைப்
போதகஞ் செய்யத் தக்கோ ராவர்கள் புரையற் றோர்க்கே.

சுரரினுத் தமரே யெல்லாத் துக்கமுந் தொலைப்ப தாகிப்
பரிவொடொண் குரவன் பார்த்த பொழுதிலே பரமா னந்தப்
பொருவிலாச் சிவரூ பத்தை யடைவித்துப் புரண மாக்கும்
பெரியவத் துவித ஞான முங்கட்குப் பேச லானேம்.

இவ்வாறு சூதசங்கிதைமுதலிய பலமகாபுராணங்களிலும் முடிவாக அத்வைத சித்தாந்தஞ்சொல்லி, த்வைதசித்தாந்தத்தைமறுத்து, ஷ்டி அத்வைத சாதனமாகச் சிவபூசை, சக்திபூசை, அடியார்பூசை, சிவாலயதரிசனம், வருணாசிரமதருமம், தீர்த்தமான்மியம், பிராயச்சித்தம், தானம், எண்வகையோகம், ஞானிபணிவிடை, கருமயாகம், பிரணவம், காயத்திரி, பஞ்சாக்ஷரமுதலிய வாசகயாகம், மானசயாகம், ஞானயாகம், சிவப்பிரசாதம்,சிவபக்தி,சிவத்தலத்தில் வசித்தல், பஸ்மருத்திராக்ஷதாரணம், சிவநாமகீர்த்தனம், சாதனசதுஷ்டயம், சிரவண, மனன, நிதித்தியாசன, சமாதி, சாக்ஷாத்காரம் வரையில் சொல்லப்பட்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட பிரமாணங்களினாலேயெல்லாம் அத்வைத ஞானிகளுக்குச் சிவபூசையாதிகள் சாதனமாகவும், சாத்தியமாகவும் கூறப்பட்டிருக்கின்றனவென்றும், அப்படிப்பட்ட அத்வைதஞானியின் தரிசனத்தால் பாவங்கள் போமென்றும், அவனது தரிசனம் சிவதரிசனமென்றும், அவன் தங்கிய பூமி சிவஸ்தலமென்றும், அவனைவணங்குதல் சிவனை வணங்குதலென்றும், அவனதுபணி சிவபணியென்றும், அவனையிகழ்ந்தபாவிகள் நரகடைவார்களென்றும், அவன் பரதேவதையென்றும், அவனை நாரணன் சிவன்பிரமனும் எல்லையில்லாத் தேவர்களும் பூசித்தேத்துவார்களென்றும், அவனிருக்குமிடத்திலிருப்பது முத்தியென்றும், அவனுக்குச்சிவனும் நாரணனும் பிரமனுஞ் சமானமாகாரென்றும், அவனுக்குடல்பொருளாவியைக் கொடுப்பவர்கள் ஞானத்தைப்பெற்றுப் பிறவியறுப்பார்களென்றும், அப்படிப்பட்ட பரமாத்துவிதத்தைத் ததீசி, கௌதமர், கண்ணுவர், பிருகு முதலியோர் சாபத்தைப் பெற்றவர்கள்மனம் காதல்செய்யாதென்றும் ஏற்படுகின்றமையால், அப்படிப்பட்ட மகாத்துமாக்களை மாயாவாதிகளென்றும் சிவபக்திமுதலிய சாதனங்களவர்களுக்கில்லையென்றுஞ் சொல்வது என்னபாதகப்பயனோ? இங்ஙனமாய வதிபாதகத்தொழிலை மேற்கொண்ட அசாத்துக்களது அசாஸ்திர அயோக்கிய வார்த்தைகளை உத்தமரெவருங்கண்டு மயங்கிக் கெட்டுப்போகா வண்ணம் அதனதுண்மையைச் சாஸ்திரப் பிரமாணங்களோடு எடுத்துக்கூறுவது எமது கடமையாயிற்றென்க.

வேதமுதலிய சாஸ்திரங்களில் முடிவாக அத்வைதமே சொல்லுகின்றதென்பதற்கும், துவைதத்தை தும்சஞ்செய்கின்றதென்பதற்கும், அத்வைத ஞானத்திற்குச் சிவபக்திமுதலியன சாதனமாமென்பதற்கும் பிரமாணங்களிதி லனேகமாகக் காட்டப்பட்டிருக்கின்றமையானும், சாத்தியமான அத்வைதஞானமும், அதற்குச் சாதனமான சிவபக்திமுதலியனவும் வேதாந்தச் செல்வர்களுக்கே யுரியனவென்பதாயிற்று.

துவிததாந்திரிக சைவசித்தாந்திகள் சுருதிமுதலிய நூல்களுக்குமாறுகத் தப்புரை தப்புநூல்களைக் கற்பித்துக்கொண்டு மற்றையர்களையெல்லா நியாயமின்றித் தூஷிக்கின்றனர்கள். இவர்களுக்குச்சாதகமாகச் சத்பிரமாணங்கள் கிடையா. அதாவது, சிவஞானபோதமூலத்துக்கு விரோதமாக எழுதிக்கொண்ட துவிதவுரையும், அதற்கனுகூலமான சிவஞானசித்தியார் முதலிய நூல்களுமேயன்றிச் சுருதிமுதலிய பிரமாணங்களிவர்கட்கில்லையென்றாயிற்று.

ஆனல் அத்வைதத்திற்குச் சாதனமாகச் சொல்லியிருக்குஞ் சாதனங்களை மாத்திரம் தங்களுக்குரியதெனப் போலியாகக்கொள்வதோடு, தேவார, திருவாசக, திருமந்திரங்களையும், இன்னுமவைபோன்ற நூல்களையுந் தங்களுக்குமாத்திர முரியனபோலவும், அத்வைதிகளுக் குரியனவல்லபோலவும்

கொஞ்சம் பேசிக்கொள்ளுகின்றார்கள். இது குடிக்கூலிக்கு வந்தவன் வீட்டுச்சீட்டுப் பிறப்பித்துக்கொள்ளப் பார்ப்பதுபோலவே யிருக்கின்றது.

ஷ விபூதி உருத்திராக்ஷாதிகளின் சூட்சுமார்த்தத்தைப் பார்க்குமிடத்து அவைகளும் அத்வைதபக்ஷமாகவே யிருக்கின்றமையான், அவற்றானுமிவாது துவைதசதிற்கு எதுஞ் சாதனமில்லையென்க. ஸ்தூலார்த்தமேனும் பயன்படாதோவென்னின், அதுவுமத்வைத சாதனமா யிருப்பதாலும் அவ்வத்வைதமிவர்கட்கு விரோதமாயிருப்பதோடு, அதையிவர்கள் சதா தூஷிப்பதாலும் பாவமேயதிகரித்து அடையவேண்டிய சாத்தியமில்லாமற் போதலாலும், ஷ ஸ்தூலப்பயனு மிவர்களடையமாட்டார்க ளென்பதுவே திண்ணம். வேதாந்திகளுக் கத்வைதஞானமும், அதற்குச்சாதனமான விபூதி, உருத்திராக்ஷாதி சாதனங்களுமுள்ளன. இவர்களுக்கோ வத்வைதஞானமுமில்லை; அவ்வத்வைதத்திற்குச் சாதனமான விபூதிருத்திராக்ஷாதி சாதனங்களுமில்லை ஆதலால் பூர்வபக்ஷிகள் சாதனத்தைக் கைக்கொண்டு மேற்கொள்வது போலியாமென்பதைக்கூட மாயவர் சுபாவங்கள், சீலங்கள், குறிகளா லாய்ந்தறிய வேண்டும்.

சண்மத சட்சாத்திரங்களின் அபிப்பிராயமுணர்த்தல்.

மந்த வைராக்கியத்தையுடைய சுபசர்ததியென்னுமரசன் வைஷ்ணவம், சைவம், காணபத்தியம், சாத்தேயம், சௌரம், ஸ்மார்த்தம்முதலிய மதவாதிகளையழைத்து தூங்காமல் விழித்திருக்கும் தேவன் யாவனென்று கேட்க:--

விஷ்ணுவுபாசகனது உத்தரம்.

கேளும் அரசனே! சகல வேதாந்த சிரோமணியான வாசுதேவனைச் சிவனும், பிரமனும் நித்தியம் சேவிக்கிறார்கள். வாசுதேவன் பரோபகாரி; பக்தருக்கு ஹிதஞ்செய்பவர்; சங்குசக்கர கதாபத்மதாரீ; மங்கள ஸ்வரூபி; தயாநிதி. இப்படிப்பட்ட மகாவிஷ்ணுவானவர் நிஜபக்தர்களையறிந்து. அவர்களுக்கு க்ஷேமத்தை யுண்டுபண்ணுகிறார். சக்தி, கணேசர், சூரியன், சிவன் என்னுமிவர்க ளவராக்ஞைப்படி நடக்கிறார்கள் என்று பாரதமும், பத்மபுராணமும் நிருசிம்ஹதாபனீ, ராமதாபனீ, கோபாலதாபனீ என்னுமுபநிஷத்துகளும் சொல்லுகின்றன. விஷ்ணுவே சகத்காரணன்; அவரே உபாஸிக்கத்தக்கவர்; மற்றவரன்று. விஷ்ணுவுக்குச் சிவன் உத்தம பக்தனாயிருந்தாலு முபாஸிக்கத்தக்க சொரூபத்தைத் தரிசிக்கவில்லை. சிவன் சவம் போல் அமங்கள ஸ்வரூபி. சாம்பல், உடுக்கை, யானைத்தோல், மண்டையோடு இவைகளைத் தரிக்கப்பட்டவன்; யாருக்குத்தான் க்ஷேமத்தை யுண்டு பண்ணப்போகிறான்? அவன் பிள்ளையாகிய கணபதியும் மனுஷ்ய மிருக ரூபங்களைத் தரிக்கிறான். சடாஹடமாய் நிந்திக்கத்தக்க ஸ்திரீயாயு மசுசியாயும், அவகுணவிசித்திர கபடஸ்வரூபியாயும், பராதீனமாயுமிருக்கிற தேவி

யைத் தியானித்து அவள்சமான ரூபத்தைத்தரித்து அவளை விரும்பிச்சேவிக்கும் நரன் கழுதையைப்போன்றவன். சூரியனே இராப்பகலோய்வில்லாமலலைகிறான். இவனை யுபாஸிப்பவனு மப்படியேயலைவான். ஆகையால் மகாவிஷ்ணுவே சேவிக்கத்தக்கவர். நாரதபாஞ்சராத்திரத்தில் விஷ்ணு பூஜாத்தியானவிதிகள் விவரிதத்துள்ளன. இவைகள் நான்கையு நிஷேதித்ததினால் ஸ்மார்த்த உபாஸனையும் நிஷேதிக்கப்பட்டதாய்விட்டது. ஏனெனில் சிவன்முதலிய நாலுதேவதைகளும் விஷ்ணுவுக்குச் சமானமென்று சமபுத்தியுடன் உபாஸிப்பதாலென்க.

சிவவுபாஸகனது உத்தரம்.

சிவ உபாசகராகியமுனி மேற்சொன்னதைக்கேட்டுக் கோபங்கொண்டு கண்சிவந்து சொல்லுகிறார்:—அரசனே! நான்சொல்வதற்கு அநேககோடி பிரமாணங்களுண்டு. கேட்கும் வரங்களெல்லாங் கொடுத்தருளும் பரமசிவனுக்குச் சமானம் யார்? மகாவிஷ்ணுவால் யாசிக்கப்பட்டுத் தன்னுடைய சகல ஐசுவரியங்களையுங் கொடுத்தான்; பஸ்மத்தைத் தரித்தார். இக்காரணத்தினாலேயே தோலாதியையுந்தரித்தார். அவருக்கு நல்லது பொல்லாது கிடையாது; எல்லாஞ்சமந்தான். நக்கினமாயிருந்துகொண்டு வைராக்கியத்துக்குச் சமானமான சுகமின்றென்றுபதேசிக்கிறார். ஞானமாகிய பெருங்கொடை யளிக்கின்றார். நரனும் நாரியுங் காசியிலிறந்தால் கற்பவாச சங்கடத்தைவிட்டு சாயுஜ்யமோக்ஷத்தை யடைகிறார்கள். சிவசமானமாகிச் சர்வதிவ்வியபோகங்களையு மனுபவிக்கிறார்கள். அப்போது லிங்கசரீரத்தைவிட்டுப் பிரஹ்மத்தை யடையும்படியான அத்வைதபோதத்தைச் செய்கிறார். யாவரையுஞ் சமமாயிரக்ஷித்து முக்தியளிக்கின்றார். சிவனுக்குச் சமானமான தாதா ஒருவருமில்லை. விஷ்ணுதனது பக்தர்களைமாத்திர மிரக்ஷிக்கிறார். ஹரிசேவகன், ஹரன் சேவியனென்று வியாஸர் கந்தபுராணத்திற்சொல்லியிருக்கிறார். இராமேச்வரத்தில் இராமச்சந்திரன் பரமசிவனைப் பூஜித்திருக்கிறார். பாரதபத்மபுராணங்களிற் சகலதேவர்களைவிட ஹரிசிரேஷ்டரென்றதின் தாற்பரியத்தை யுற்றுநோக்குமிடத்துச் சிவனுக்கே ஈசுவரத்துவம் பிரதீதியாகின்றது. இவ்வாறு அப்பயதீக்ஷிதர் சகலபுராண மிதிகாசங்களுக்குந் தாற்பரிய மெழுதியிருக்கின்றார். அங்குப் பாரதத்திலுள்ள பிரசங்கமாவது: அசுவத்தாமாவால் நாராயணாஸ்திரமும், ஆக்கினேயாஸ்திரமும் பிரயோகித்ததில் வெகுசேனைகள்மரித்தும் பஞ்சபாண்டவர்கள் மரிக்காமையால், அப்போது ரதத்தைவிட்டுத் தனுர்வேதத்தையும் ஆசாரியரையும் திரஸ்கரித்து வனத்துக்குச்சென்றபோது அவரை வியாஸர் சந்தித்து, ஓ! பிராஹ்மணா! நீ ஆசாரியரையும் வேதத்தையும் நிந்திக்கலாகாது. அர்ச்சுனனும் கிருஷ்ணனும் நரநாராயணரூபங்கள். இவர்கள் சிவனைமிகப்பூஜித்திருக்கிறார்களாதலினிவர்கள் பக்திக்கதீனமாகித் திரிசூலியான மகாதேவன் இவர்கள்ரதத்துக்கு முன்னின்று இவர்கள்பேரில் பிரயோகிக்கு மஸ்திரசஸ்திரங்களின் சாமர்த்தி

யத்லாத நாசஞ்செய்கின்றாரென்பதாம். இதனால் மகாபாரதத்தில் மகாதேவருடைய கிருபையால் நாராயணரூப கிருஷ்ணனுக்கு விபூதியுண்டாயிருக்கிறதென்பது சித்திக்கிறது. ஆதலால் விஷ்ணுசரித்திரத்தைப் பிரதிபாதிக்குங் கீர்த்தம் சிவனுடைய ஆதிக்கத்தைப் பிரதிபாதிக்கின்றது. எங்ஙனமெனின் விஷ்ணு சேவியன் சிவபக்தன் ஆனதால் சிவனே பரமசேவியனாகிறார். ஹரிபக்தர்களுக்குள் உத்தமமானவர். சிவனுக்கே மகாதேவனென்றும் மகேசனென்றும் பெயர், மற்றத் தேவர்களுக்குத் தேவரென்றும், ஈசரென்றும் பெயர். அமங்களரூபதெய்வங்களைவிட்டு மங்களஸ்வரூப சிவனை யுபாஸிக்க வேண்டியது விஷத்தையுண்டு தேவர்களின் பயத்தை நீக்குவித்தார். இவருடைய குமாரரான கணேசர் சகலவிக்கினங்களையும் உடனே போக்குகிறார். கார்யத்தில் காரணகுணமிருத்தலால் விக்கினங்களைப் போக்குபவர் சிவனென்றறியவேண்டியது. ஜனனமரணதுக்கஞ் சிவத்தியானத்தால் நாசமாகும் சேவிக்கத்தக்கவன் சதாசிவனே விவேகியானவன் சமாதியோடு விழிக்கக்கடவன். பாசுபத தந்திரத்தில் சிவபூஜாவிதிகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அவ்விதிப்படிபூஜித்து தியானஞ்செய்க. நாரதபாஞ்சராத்திரமதம் பொய். அது சூத்திரபாஷியத்திற் கண்டித்திருக்கிறது. அதனை யனுசரித்த இராமானுஜாதி நவீன வைஷ்ணவர்கள் மதமும் கல்பதருவினுரையாகிய பரிமளத்திற் கண்டித்திருக்கிறது. ஆதலால் சிவசேவையில் சித்தத்தைச் செலுத்தி விரும்பிய புருஷார்த்தத்தினையடைக.

கணேசபூஜகனது உத்தரம்.

கணேசன் சிவனது புத்திரனென்றும், காரணத்தின் குணங் காரியத்திருப்பதாகவுஞ் சொன்னதைக்கேட்டுக் கணேசபூஜகன் கோபத்துடன் சொல்லுகின்றான். அரசனே! இவ்விருவரும் பொய்யை நிஜமெனச் சாதிக்கின்றார்கள். அஃதாவது, கணேசன் சிவபுத்திரனென்றும், பராதீனனென்றுஞ் சொல்வது. இவ்விஷயமாய் வியாஸர் புராணத்திற் சொல்லியிருக்கிற ஒரு கதையைச் சொல்லுகிறேன் கேட்பீராக:—திரிபுரசங்காரத்தில் ஹரிஹராதி தேவர்களெல்லாங் கணேசனைப் பூஜிக்காமையால் வெற்றிபெறாதவர்களாய்ப்பின் கணேசனைப் பூஜித்துத் திரிபுரர்களை ஜயித்தார்கள். எவனையாராதித்து வெற்றிபெற்றனரோ, அவனே சேவிக்கத்தக்கவனென்றறிக. தசரதனுக்கு ராமன் புத்திரனானதுபோல் பரமசிவனுக்குக் கணபதி புத்திரராயிருந்து விக்கினங்களைப் போக்கினார். கணேசபுராணம் வியாஸரால் சொல்லியது. அதிற்கணேசனே யெல்லாவற்றிற்குங் காரணமென கூறியுள்ளார். அவருடைய துதிக்கையிலிருந்து ஹரி, ஹரன், விதி, ரவி, சத்திமுதலிய யாவருஞ் ஜனித்தார்கள். க்ஷணநேரந் தியானிக்கினும் விக்கினங்களைப் போக்குவார். இப்படி யிரவும்பகலும் விழிப்புள்ள விநாயகக்கடவுளைப் பக்தியுடன் நிஷ்காமமாய் பூஜிக்கவேண்டியது.

தேவிபக்தனுடைய உத்தரம்.

கணேசன் சக்திக்குக்காரணமென்றதைக்கேட்ட பகவதிபக்தன் அரசனே! இம்மூவருஞ் சொல்லியதெல்லாமப்பிராமாணம். ஏனெனின் சக்தியில்லையாயின், சகல தேவர்களும் பிணத்துக்குச் சமானமாவர்கள். சக்தியில்லாதவர் ; அசமர்த்தரானதா லெப்படிக்காரியத்தை யுண்டுபண்ணுவர். சக்தியை அதிகமாக வுபாசித்ததால் ஹரி, ஹரன், சூரியன், கணபதி முக்கியமானவராய் சகலத்திற்கு மதிகாரியாய் நானாவித சக்தியையுடையவரானார்கள். சக்தியென்பதே பகவதியின்ரூபமாய் சாமானியம் விசேஷமென நிற்கும்.

1. எல்லாப்பதார்த்தங்களிலும் தத்தங்காரியத்தைச் செய்யுஞ்சக்தி பகவதியின் சாமானிய ரூபம்.

2. அஷ்ட புஜாதிகளுடன்கூடிய மூர்த்திவிசேஷ ரூபம்.

பகவதியின் சாமானியரூப சக்தியம்சத்தின் மிகுதியால் விஷ்ணு,சிவன், கணேசன், சூரியன் என்னு மிவர்களுடைய மகிமை பிரசித்தமாயிருக்கிறது. சக்தியின்றேல் அமங்களஸ்வரூபியாவர்கள். ஷை நிராகார ரூபசக்திக்கு அநேக அம்சங்களிருப்பதுபோல, ஸாகாரரூபசக்திக்கும் அநேக அம்சங்களுண்டு. அவற்றுள் காளீரூபம் பிரதானம். மகேசுவரீ, வைஷ்ணவீ, கௌரீ, கணேசீமுதலியனவும் பிரதான அம்சங்களே. பகவதியின் உபாசனையால் தத்தம் மாகேசுவரீமுதலிய அம்சங்களைப்பெற்று முக்கிய பக்தர்களாயிருக்கிறார்கள். ஏனெனில் தியானஞ்செய்வோனுக்குத் தியேயரூபத்தையடைவதே தியானத்தின் பரம அவதியாகும். ஆகலால் விஷ்ணுவாதியோர் முக்கிய உபாஸகர்கள்.

மதனத்தா லமிர்தமுண்டானபோது, சுராசுரர்களுடைய விவாதத்தைத் தீர்க்க விஷ்ணுவுக்குச் சாமர்த்தியமில்லாமல் பகவதியி னம்சத்தைத் தியானஞ்செய்து, அந்த உபாஸிய (மோகினி) ரூபத்தைப்பெற்று, அவ்விவாதத்தை நீக்குவித்தனர். அப்படியே சிவனுஞ் சமாதியிற் பகவதியைத்தியானஞ்செய்து பாதிசரீரத்தி லுபாஸியவடிவத்தைப்பெற்றனர். ஒவ்வொருகாலத்து விக்ஷேபத்தால் சமாதியில்லாமற் போனமையால், சிவனது முழுசரீரமு முபாஸிக்கத்தக்கதாகவில்லை. இதனால் எல்லாத்தேவர்களும் பகவதியி னுபாசகர்களாகின்றார்கள். அவ்வுபாசனை யிருவகையில் இதுகாறுந் தக்ஷிணமார்க்கஞ் சொல்லிற்று.

இனி உத்தரமார்க்கமாவது :—சகல புருஷார்த்த போகமோக்ஷங்களைப் பெறுதற்கு மகாமாயையைத் தியானிப்பதற் கன்னியமான சாதனம் ஜகத்தில்லை. பகவதியின்பக்தன் சகலபோகங்களை யனுபவித்தும், கர்ப்பவாசத்

தை யடைகிறதில்லை. முன்னோர்க ளனுஷ்டித்துவந்த பஞ்சமகாரங்களையு மொருபோதும் விடலாகாது. எல்லாத்தேவர்களும், ஞானிகளு முதல்மகாரத்தை யெப்போதுஞ் சலத்தைப்போலச் சாப்பிட்டார்கள். மகாரங்களைச் சேவிக்கும் விதிகள் பரமசிவனால் பரோபகாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. வியாஸர் தேவிபாகவதத்தைச் செய்திருக்கிறார். உபபுராணத்திற் காளியை வர்ணித்திருக்கிறார். பகவதியின் பக்திதான் மேலாகச்சொல்லியது. ஹரி, ஹரன், சூரியன், கணேசன்முதலியோர் பஞ்சமகாரங்களால் மூழ்கிய மனதுடையவர்களாய் பகவதியைப் பூஜிக்கிறார்கள். ஜகத்ஜனனியாகிய தேவியே விழிப்புள்ளவளாதலி னிவளைச்சேவிப்பவர் பரமானந்தத்தை யடைவார்கள். மத்பம், மாம்சம், மைதுனம், முத்திரை, மந்திரம், பஞ்ச மகாரங்கள்.

சூரியபக்தனுடைய உத்தரம்.

சூரியபக்தன் தேவிமகாத்மியத்தைக்கேட்டுக்கோபங்கொண்டு அரசனே! நானுண்மையாகச் சொல்வதைக்கேள். அவர்களுடைய மதங்களெல்லாம் மிகவும் பாபமும், இழிவுமாயுள்ளவைகள். ஜகத்திற் சொல்லப்படும் கெட்ட குணங்களெல்லாம் தேவிமார்க்கத்தி லுத்தமமாகச் சொல்லியிருக்கின்றன. பஞ்சமகாரங்களாகிய விபரீதத்தைச்சொல்லுஞ் சம்புதந்திர மனுஷ்டிக்கத் தக்கதன்று. தக்ஷிணசம்பிரதாயஞ் சிரேஷ்டமாய் எல்லாராலு மனுஷ்டிக்கத்தக்கதாயிருந்தாலும், இவர்களுடைய மனது எதில் கட்டுப்படுகிறதோ அந்தச்சூரியனில்லையாயின், எல்லோரும் அந்தகராவர். எங்குமிருள்கவிந்து கொள்ளும். மற்றப் பிரகாசவஸ்துக்களெல்லாஞ் சூரியனுடைய அம்சங்களே. பிறருடைய ஹிதத்தின் பொருட்டுத்தான் ஆகாயத்தி லோயாமலலைகிறான் சகலகாரியங்களுங் காலாதீனமானதால் அதனையே சென்றகாலம், நிகழ்காலம், வருங்காலமென்று சொல்வார்கள். எல்லாஞ் சூரியனிலிருந்தே யுண்டாகின்றன. அவர் கோபத்தா லெல்லாம் பஸ்மமாகின்றன. இவருக்கு ஸாகாரம், நிராகாரமென இரண்டு ரூபங்களுண்டு. நிராகாரப்பிரகாசம் சகல நாமரூபங்களிலும் வியாபித்திருக்கிறது. எதை வேதாந்தி பாதிசப்தத்தால் வியவகரிக்கிறானோ, அது நிராகாரப்பிரகாசரூபமான சூரியனுடைய சாமானியரூபமாம். அதுவே சகத்துக்கெல்லா மதிஷ்டானமாம். அதனையறியாததினால் ஜசத்துவடிவவிவர்த்தமுண்டாகிறது. அந்த நிராகாரப் பிரகாசமே அந்தக்காண விருத்தியிலுள்ள பிரதிபிம்பத்தோடு ஞானமென்று சொல்லப்படும். "அகம்பானு (யான் சூரியன்)" என்று அந்தக்கரணவிருத்தி பிரகாசத்தின் பிரதிபிம்பத்தோடுண்டாகும்போது அஞ்ஞானம் நிவிருத்தியாக ஜசத்தும் நிவிருத்தியாகிறது. சூரியனுடைய ஸாகாரரூபமாவது — பிராதக்காலத்தில் அவருடைய தேஜசு பிரகாசிப்பது. சந்திரன், நக்ஷத்திரம், தீபமுதலிய வதனம்சமே. அதற்கு நிராகாரரூபம், ஞேயம், ஸாகாரரூபம், தியேயம் (தியானிக்கப்படுவது) இது வேதாந்தங்களில் நிர்க்குண

சகுணப்பிரமமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தகாரமின்றிய அவரைப் பார்த்தே எல்லோரும் தங்கள் தங்கள்கர்மத்தைச செய்கின்றார்கள் ஒருபோதுந் தூங்காமல் விழித்திருக்கின்றார். அவரைத் தியானஞ்செய்வதனலந்தகாரமொழிந்துபோம்.

முற்கூறியமதத்தி னநுவாதத்தோடு ஸ்மார்த்தமதம். ஐந்துபாஸகர்களும் பரஸ்பரம் விருத்தவசனங்களைச சொன்னதுபோல அநேகபண்டிதர்களுந் தங்கள்தங்கள் புத்திக்கெட்டியபடி விருத்தமாகவே பேசினர்கள்;

வைஷ்ணவமதத்தில் விஷ்ணுவுக்குச் சமானமான வேறு தெய்வமில்லை எல்லோரும் விஷ்ணுபக்தர்களே. அவரது ராம, கிருஷ்ண, நாராயண முதலிய நாமங்களுக்குச் சமானமாய்ப் பிறதெய்வங்களின் நாமங்களை நினைப்பவன் நாமாபராதி. அவனுக்கு ராமாதி நாமோச்சாரணங்களின் யதார்த்த பலனுண்டாகாதென்றும், சைவமதத்திலும் சிவனுக்குச் சமானமான வேறு தெய்வமில்லை. சிவனுடைய நாம உச்சார்ணத்தின் பலன் விஷ்ணுநாம உச்சாரணத்தா லுண்டாகாதென்றும், மற்றெல்லோருடைய மதங்களிலுந் தமதுபாஸிய தெய்வத்துக்குச் சமானமில்லையென்றுங் கூறுவர். ஸ்மார்த்த மதத்திலோ எல்லாத் தேவர்களுஞ் சமமே. ஆதலால் மேற்சொல்லிய ஐந்து மதங்களுக்கும் விருத்தமாயிருக்கின்றது.

நாமாபராதங்கள் பத்தாவன

1. சத்புருஷர்களின்நிந்தை, 2. அசத்புருஷர்களிடத்தில் நாமத்தின் மகிமையைச் சொல்லுதல், 3. விஷ்ணு, சிவன் என்பவர்களிடத்தில் பேதஞானம், 4. சுருதி, 5. சாஸ்திரம், 6. குருவாக்கியத்தில் சிரத்தை, 7. நாமத்தி லர்த்தவாதப்பிரமத்தி னநுஷ்டானம், 8. அநேக பாபங்களைப்போக்கு நாமந்தனக்கிருக்கிறதென்னும் புத்தியினல் நிஷித்தகர்மங்களைச் செய்தல், 9. பெரும்புண்ணியத்தை யுண்டுபண்ணுவது நாமமென்னும் புத்தியினல் விகிதகர்மங்களை விடுதல், 10. மற்றதருமங்களோடு நாமத்தைச் சமானமாயறிதலென்னும் பத்துமாம்,

ஆறு சாஸ்திரங்கள்

1. பூர்வமீமாம்சை, 2. உத்தரமீமாம்சை, 3. நியாயம், 4. வைசேஷிகம், 5. சாங்கியம், 6. யோகம். இவைகளின் விஷயம்.

1. பூர்வமீமாம்சையில் :—ஜகத்து சொரூபத்தால் அநாதி, அநந்தம், பிரவாகரூபம், சம்யோக வியோகமுடையது. ஜகத்காரணம் :—ஜீவாதிருஷ்டம், பரமாணு. ஈசுரன் :—இல்லை. ஜீவன் :—சடசேதனாத்மகவிபு, நாநா, கர்த்தா, போக்தா. பந்த எது :—நிஷித்த கருமம். பந்தம் :—நரகாதிதுக்க சம்பந்தம். மோட்சம் :—சொர்க்கப்பிராப்தி. மோட்ச சாதனம் :—வேத விகிதகருமம். அதிகாரி :—கருமப்லாசக்தன். பிரகடகர்த்தா :—ஜைமினி.

பிரதானகாண்டம் :—கருமகாண்டம். வாதம் :—ஆரம்பவாதம். ஆத்மபரிமாண சங்கையை :—விபுநாநா. பிரமாணம் :—ஷட்பிரமாணம். கியாதி :—அக்கியாதி. சத்தை :—ஜீவஜகத் பரமார்த்தசத்தை. உபயோகம் :—சித்தசுத்தி.

2. உத்தராமீமாம்சையில்:—ஜகத்து:—நாமரூபகிரியாத்மகம், மாயாபரிணாமம், சேதனவிவர்த்தம். ஜகத்காரணம் :—அபின்ன நிமித்தோபாதான ஈசுவரன். ஈசுரன் :—மாயா விசிட்டசேதனம். ஜீவன் :--அவித்தியா விசிஷ்ட சேதனம். பந்த ஏது :—அவித்தை. பந்தம் :—அவித்தியாதத்காரியம். மோட்சம் :—அவித்தியாதத்காரிய நிவிர்த்தி பூர்வக பரமானந்த பிரமப் பிராப்தி. மோட்சசாதனம் :—பிரமாத்மைக்கிய ஞானம். அதிகாரி :—மலவிக்ஷேப தோஷரகித சதுஷ்டய சாதனசம்பந்நன். பிரகடகர்த்தா :—வேதவியாஸர். பிரதானகாண்டம் :—ஞானகாண்டம். வாதம் :—விவர்த்தவாதம். ஆத்மபரிமாணசங்கியை :—விபு, ஏகம். பிரமாணம் :—ஷட்பிரமாணம். கியாதி :—அநிர்வசநீயக்யாதி. சத்தை :—பரமார்த்த ரூபாத்மசத்தை, வியாவகாரிக பிராதிபாசிக ஜகத்சத்தை. உபயோகம் :—தத்வஞான பூர்வகமோட்சம்.

3. நியாயத்தில்:— ஜகத்து:— பரமாணுவினு லாரம்பிக்கப்பட்ட சம்யோகவியோக ஐக்ய ஆகிருதிவிசேஷம். ஜகத்காரணம்:—பரமாணு ஈசுவராதிநவம். ஈசுவரன் :—நித்திய இச்சாஞானுதிகுணவான், விபுகர்த்தா விசேஷன். ஜீவன் :—ஞானுதி சதுர்த்தச குணமுடைய கர்த்தா, போக்தா, ஜடவிபு, நாநா. பந்த ஏது :—அஞ்ஞானம். பந்தம் :—21 துக்கம். மோட்சம் :—21 துக்கத்துவம்சம். மோட்சசாதனம் :—இதர பிந்நாத்ம ஞானம். அதிகாரி :—துக்கஜிஞ்ஞாசு குதர்க்கி. பிரகடகர்த்தா :—கௌதமர். பிரதானகாண்டம் :—ஞானகாண்டம். வாதம் :—ஆரம்பவாதம். ஆத்மபரிமாண சங்கியை :—விபுநாநா. பிரமாணம் :—பிரத்தியட்ச வநுமானவுபமான சப்தம் நான்கும். கியாதி :—அந்யதாக்யாதி. சத்தை :—ஜீவசகத் பரமார்த்த சத்தை. உபயோகம் :—மனனம்.

4. வைசேஷிகத்தில் :—ஜகத்து :—நியாயமதப்படியே. ஜகத்காரண முதல் அதிகாரிவரையில் ஷை. பிரகடகர்த்தா :—கணுதர். பிரதானகாண்டம் :—ஞானகாண்டம். வாதம் :—ஆரம்பவாதம். ஆத்மபரிமாணசங்கியை: விபுநாநா. பிரமாணம் :—பிரத்தியட்சம், அநுமானம் 2. கியாதி :—அந்யதாக்யாதி. சத்தை ;—ஷை. உபயோகம் : —ஷை.

5. சாங்கியத்தில் :—ஜகத்து :—பிரகிருதி பரிணுமத்ரயோவிம்சதி தத்வாத்மகம். ஜகத்காரணம் :—திரிகுணுத்மகப் பிரகிருதி. ஈசுரன் :—இல்லை. ஜீவன் :—அசங்கசேதனவிபு, நாநா, போக்தா. பந்த ஏது :—

அவிவேகம். பந்தம் :—அத்யாத்மாதி திரிவிததுக்கம். மோட்சம் :—மூவித துக்கத்துவம்சம். மோட்சசாதனம் :—பிரகிருதி புருஷவிவேகம். அதிகாரி : சக்திக்தவிரக்தன். பிரகடகர்த்தா :—கபிலர் பிரதானகாண்டம் :—ஞான காண்டம. வாதம் :—பரிணாமவாதம். ஆத்ம பரிமாணசங்கிபை :—விபு நாநா. பிரமாணம் :—பிரத்தியட்சம், அநுமானம், சப்தம் 3. கியாதி :— அக்கியாதி. சத்தை :—ஜீவஜகத் பரமார்த்த சத்தை. உபயோகம் :—துவம் பதார்த்தசோதனம்.

6. யோகத்தில் :—ஜகத்து :—சாங்கியமதப்படி. ஜகத்காரணம் :— கருமாநுசாரப் பிரகிருதி, அதன் நியாமகவீசுரன். ஈசுரன் :—கிலேசகரும விபாகாசய அசம்பத்த புருஷவிசேஷன். ஜீவன் :—அசங்கசேதனவிபு, நாநா, கர்த்தா, போக்தா. பந்த ஏது :—அவிவேகம். பந்தம :—பிரகிருதி புருஷ ஸம்யோக ஜந்ய அவித்யாதி பஞ்சக்கிலேசம். மோட்சம் :—பிரகிருதி புருஷ சம்யோகாபாவபூர்வக அவித்தியாதி பஞ்சக்கிலேச நிவிர்த்தி. மோட்சசாதனம் :—நிருவிகற்ப சமாதிபூர்வக விவேகம். அதிகாரி :—விட்சிப்தசித்தவான். பிரகடகர்த்தா :—பதஞ்சலி. பிரதானகாண்டம் :—உபாசனகாண்டம். வாதம் :—பரிணாமவாதம். ஆத்மபரிமாண சங்கியை :— விபுநாநா. பிரமாணம் :—ஷ 3. கியாதி :—அக்கியாதி. சத்தை :—ஷ. உபயோகம் :—சித்தை காக்கிரியம். பஞ்சகிலேசம் :—அவித்தை, அஸ்மிதை (மூலாங்காரம்) இராகம், துவேஷம், அபிநிவேசம் (மரணபயம்).

உத்தரமீமாம்சையின் மதமிந்நூலுரையில் வியக்தமாகச் சொல்லியிருக்கின்றன. ஆகையால் மற்ற சாஸ்திரங்களின் மதங்களிதற்கு விருத்தம். ஏனெனின் வேறு சாஸ்திரங்களில் பேதவாதமும், இதிற் பேதங்கண்டிக்கப்பட்டு அபேதவாதமுங் கூறியதால், சகல சாஸ்திரங்களின் சித்தாந்தமும் பரஸ்பரம் விருத்தமாம்.

சுபசந்ததியென்னு மாசன் மேற்கூறிய சாஸ்திரநிபுண பண்டிதர்களின் விருத்தவசனங்களைக் கேட்டு முன்னிலுமதிக சந்தேகத்தோடும் யோசனையில் மூழ்கியிருந்தான். அப்போது தகப்பனிடம்வந்த தர்க்கதிருஷ்டி ஐயா! என்னயோசனை வியாகூலம் என்னவென்று கேட்க :—உபாஸிக்கத்தக்க தெய்வமெதுவென்பதில் நூதன சமுசயங்களுண்டாயின. யார் சொல்வதுண்மை. யெல்லோரும் யுக்திப்பிரமாணங்களுடன் பேசுகிறார்களென்றவுடன் தர்க்கதிருஷ்டி சொல்லுகிறான் :—காரணரூப முபாஸிக்கத்தக்கது. காரியரூபம் விடத்தக்கது. காரணரூபத்தின் நாமங்கள் பல. இதுவே வேதத்தின் முக்கிய சித்தாந்தம். இதிகாசபுராணங்களில் வியாஸர் சொல்லிய சித்தாந்தமுமிதுவே; வேறன்று. இந்த மர்மத்தைப் பண்டிதர்களறியாமல் பிறர்மதத்தைக் கண்டிக்கிறார்கள். பாரதத்துக்கு வியாக்கியான

மெழுதிய நீலகண்டபண்டிதர் ஆரம்பத்தி லிப்பிரசங்கத்தைச் செய்திருக்கிறார். அன்றியுமுத்தமமான சுருதிசித்தாந்தங்களையும் காட்டியிருக்கிறார். வியாசர் வாக்கியத்தில் விரோதமின்மையைக் காட்டுதும் : விஷ்ணு, சிவன், கணேசன், தேவி, சூரியன் என்னும் யாவரும் ஈசுவரர்கள்தாம். எந்தப் பிரகரணத்தில் பிறதெய்வம் நிந்தித்திருக்கிறதோ, அதனது நிந்தையா லதனுபாசனையைவிடுதலில்ல வியாசருக் கபிப்பிராயமன்று. சிவாதிதேவதைகளினிந்தை விஷ்ணுவின் ஸ்துதியினால் விஷ்ணுவுபாசனையிற் பிரவிருத்தித்தற்கும், விஷ்ணுவாதி தேவதைகளினிந்தை சிவத்தின் ஸ்துதியினால் சிவவுபாசனையிற் பிரவிருத்தித்தற்கும் ஹேதுவாம், ஒருபிரகரணத்தில் பிறதேவதையினிந்தை யதனுபாசனையைத் தள்ளுவதற்கா யிருக்கும்பக்ஷத்தி லெல்லாத் தேவதைகளி னுபாசனைகளையுந் தள்ளும்படிநேரிடும். ஆகையாலன்னிய தேவதையினிந்தை ஒன்றனது ஸ்துதியுபாசனையின்பொருட்டே; மற்றதினுபாசனையை விட்டுவிடுதற்காகவன்று. திருஷ்டாந்தம் :—வேதத்திலக்கினி ஹோத்திரத்துக்குள்ள சூரியோதயத்துக்கு முன்னும் பின்னுமாகிய இரண்டில் முற்காலப்பிரசங்கத்திற் பிற்காலத்தையும், பிற்காலப்பிரசங்கத்தில் முற்காலத்தையும் நிந்திக்கப்பட்டிருக்கிறது. அதனால் ஹோமத்தை விட்டுவிடுங் கருத்தெனக்கொண்டு நித்தியகர்மத்தைவிடுதல் பொருந்தாது. ஆகையால் முற்காலஸ்துதியின்பொருட்டுப் பிற்காலநிந்தையும், பிற்காலஸ்துதியின் பொருட்டு முற்காலநிந்தையுஞ் செய்யப்பட்டிருக்கின்றதுபோல, ஒரு தெய்வத்தினுபாசனாப் பிரசங்கத்தில் பிறதேவதையி னிந்தைக்குத் தாற்பரியம் அத்தெய்வத்தின் ஸ்துதியுபாசனையிலாம் : பிறதெய்வத்தினிந்தையி லன்றென்பதாம். ஸைந்தவபதம் குதிரையையும், உப்பையு மறிவிக்கின்றதுபோலவுமாம். 1. தேவயானம், 2. பிதிர்யானம், 3. ஜாயஸ்வமிரியஸ்வம் என்னும் பேதங்களால் சமுசாரமார்க்கங்கள் மூன்றாம்,

1. சூரியமண்டலத்தைப் பேதித்துக்கொண்டு பிரஹ்மலோகத்துக்குப் போகுமார்க்கந் தேவயானமார்க்கமாம். இதனையே அர்ச்சிமார்க்கமென்றுங் கூறுவர்.

2. சந்திரமண்டலத்தைப் பேதித்துக்கொண்டு இந்திரலோகரூபமான பிரஹ்மலோகத்துக்குப்போகு மார்க்கம் பிதிர்யானமார்க்கமாம். இதனையே தூமமார்க்கமென்றுங் கூறுவர்.

3. அடிக்கடி ஜனனமரணங்களுக்குக் காரணமான மிருத்தியுலோகத்துக்கு வருமார்க்கம் ஜாயஸ்வ மிரியஸ்வமார்க்கமாம். இம்மூன்றும் சமுசாரமார்க்கங்களாம். நான்காவதாகிய பிரஹ்மஞான ரூபமார்க்கம் மோக்ஷமார்க்கமாம்.

(வேதாந்த சூடாமணி) அவதாரிகை.

ஞானத்தான் முத்திபெற்றிருக்கும் வியாசாதி மஹா ரிஷிகளுக்கு இச்சித்திவந்த காரணமியாதென்ற வினாவிற்கு உத்தர முணர்த்துகின்றது.

வேதவியா சாதிகட்கு..................தவிற்குறைவின் ரூமால்.

(போ-ரை.) வியாசர் முதலிய ரிஷிகளுக்குமுத்தி சித்தியெனப்படும் இவ்விரண்டு நிலையும் வாய்த்திருந்தனவே, யாதுகாரணத்தாலோ வெனக் கேட்கில், அந்த வியாசர் முதலிய ரிஷிகளுக்கு மேற்கூறிய இரண்டு தவமும் உள்ளனவாம்; ஆதலினால், அவற்றா லெய்தும் பலம் இரண்டும் அவர்கட்கே யாகும். ஒவ்வொருதவம் ஒவ்வொருவருக்கேயாயின், ஒவ்வொரு பலனே வந்துவாய்க்கும். அந்தக்காரணத்தால் விரோதமில்லையாம். சிரேஷ்டமாகிய சாபாநுக்கிரக வல்லமையில்லாதவர்களாய் விதிநிடேதங் கடந்துள்ள சீவன் முத்தர்களைக் கன்மாநுஷ்டர்க ணிந்தைசெய்வார்க ளெனக்கேட்கில், அந்தக் கன்மிகளுக்கு விடயத்தின்கண்ணே மாறாதுழலும் நிர்மூடர்களால் நிந்தை வருமாதலின் அதனால் மகான்களுக்குக் குறைவில்லையாம். எ-று.

ஆல்—அசை. விதியென்றதனால் நிடேதம் வருவித்தாம்.

வினா :—ஞானிகட்கு இக்காமியத்தவம் இன்றென்பதென்னை?

விடை :—தனக்குவேறாய் அநித்தமாயுள்ள சிவலோகாதி பதத்தையடைய விருப்பமின் றாதலினானுந் தனக்கு வேறின்றாய்த் தானே தானாய் விளங்குமிடத்து ஒன்றுவேண்டுதலும், ஒன்று தள்ளுதலு மின்மையாதலினாலுமென்க. காமியத்தவத்தாற் சித்தியும், நிஷ்காமியத்தவத்தான் முத்தியும் வருமாயினும் முத்தியின்றிய சித்தியோர்க்குச் சாபானுக்கிரக சாமர்த்திய முண்டாயிருந்தும் பிறர்க்கு விரோதமாய்த் தனக்குப் பயனின்றி யிருத்தலின், இந்திராசல முதலான வித்தைசெய்வோனுசவும், சித்தியின்றிய முத்தியோர்க்குச் சாபானுக்கிரக சாமர்த்தியம் இன்றாயினும் பிறர்க்கு விரோதமின்றித் தனக்குப் பயனாயிருத்தலின் இவன் வித்தையைப்பார்க்குஞ் செல்வனாக விருத்தலின் ஈவோரில் எற்போர் அதிகமாகார்போல் முத்தியுள்ள ஞானவானுக்குச் சித்தியுள்ளோர் சமானாதிக மாகாரென்க.

வினா :—அங்ஙனமாயின் முத்திமாத்திரம்பெற்ற ஞானிக்கு இச்சித்தி முத்தியும் பெற்றவர்க ளதிகாலரோ?

விடை :—தனக்கெனவின்றிப் பிராரத்தத்தினாற் சாபானுக்கிரக சாமர்த்தியமுண்டாம். அவையுண்டானவிடத்து அகம்பாவ மிருத்தலினானும், அவ்வகம்பாவம் இவர்கட்கு இன்மையினானும் அதிகாராகாரென்க.

வினா :—அங்ஙனமாயின் யாவரும் அவர்களை முக்கியமாகக் கூறுவதெதற்றினுக்கு?

விடை :—சிவர்கள் வேதத்தினுள்ள மஹாவாக்கிய நிச்சயம் உண்மையாகக்கொண்டு முத்தியையடையுநிமித்தம் அவ்வாக்கியார்த்த நிச்சயத்தைச் சுருக்கிச்சொல்லுவதில் விசுவாசந்தோன்றி யச்சாபானுக்கிரக சாமர்த்தியத்தினாற் பயமுண்டாம். அதன்வழி யொழுகவேண்டி ஈசுரசியதிப்படி வர்தவர்களாதலினாலென்க.

வினு :—அற்றேல் இச்சாபனுக்கிரக சாமர்த்தியமில்லாத ஞானிகளை யஃறுடைய கன்மிகள் தூஷிப்பார்களே ?

விடை :—அவர்களை விடயமோகத்தை யுடையோர் தூஷித்தலினல் அக்கன்மிகளுக்கு ஓர்குறைவின்ருயதுபோல, இக்கன்மிகள் தூஷிப்பினல் ஞானிக்கோர் குறைவு மின்றென்க.

இச்சித்திகள் ஈசுரனுடைய வல்லபமாதலின் இவையுள்ளவர்களைத் தேவத்தன்மையாக நம்பி யவர்களால் விதிக்கப்பட்ட விதிப்படி யுயிர்களொழுக வேண்டி, அவர்கட்கு இவ்வினேதமாயுள்ள சாபானுக்கிரக சாமர்த்தியம் ஈசுரானுக்கிரகத்தின லுண்டாயிற்றென்பது.

அவதாரிகை.

முற்கூறிய ஜீவன்முத்தன் பிராரத்த வசத்தாற் பலவித நடையை யுடையவனுனலும், அது அவனது சித்துவிலாசமாகக் காணவேண்டுமென வுணர்த்துகின்றது.

உலகிறந்த சிவன்முத்த..................மொருசிறிது முருமல்.

(பொ-ரை.) லௌகிகநடை, வைதிகநடையெனல் சற்றும் உள்ளத்தின் கணின்றிய சிவன்முத்த னென்போன் றன்ளற்கொண்ணுத பிராரத்துவ கன்ம சம்ஸ்காரத்தால் அனுபவிக்கின்ற வஸ்துக்களைப் பலவாகக் கிரகித்தும், மவுனமாகவிருந்தும், நவநவமாக விளங்கும் அனுபூதித் திறங்களைப் பலபலவாக எடுத்துச்சொல்லியும். உபதேசித்தற் கியைந்த நெறிகளைச் செய்தும், பிறவி நோய்க்காக விசனமுற்றும், அந்நியமின்மைபற்றி மகிழ்ந்தும், மிகவும் பலவேறு விகற்பவேடங்களைப் புனைந்தும், வஸ்திரந் தரித்தல் சற்றுமின்றியும், அதனையுடுத்தும், பலவேருக கல்விகளிற் பயிற்சியுற்றும், யாதொன்றுங் கல்லாது மாதர்கள்பாற் புணர்ச்சிவேண்டி அவர்களை யகலாதிருந்தும் எனக் கூறப்படுவனவாகிய இங்ஙனம் அளவிறந்த நடக்கைகளில் நிற்பினும், இவையனைத்துங் கிருபாவிநோத லீலையென்றே சந்தேகஞ் சற்றும் எய்தாமல் அந்தச் சீவன்முத்தனைச் சிவசொரூபமென்றே நம்புவாயாக. எ-று.

எ—தேற்றம், இங்குள்ள வும்மையனைத்தும் எண்ணும்மை.

சிவன்முத்தனுற் செய்யப்பட்ட பலவிதமான நடைகள் உலோகானுக்கிரகமாகவேயன்றி, அவற்ருல் அவனுக்கோர் பலர்பல மின்மையின், அந்நடைகளை யாத்மவுல்லாசமென்றே காணவேண்டுமென்பது.

அவதாரிகை.

விதேகமுத்தன் இலக்கணமும், அதனை யடைதற்கு ஏதுவான நித்திய கருமமுதலான அநுஷ்டான மரபு இருபதாகக்கூறவான் ருெடங்கி நித்திய கருமாதியவாறும் உணர்த்துகின்றது.

என்றுமெவ் விடத்தினுமோ ருடம்புமூ றொன்று
யிருந்தசச்சி தாநந்த சிவசொரூப மாத
னன்றிதரு விதேககை வல்லியமென் றிசைப்பர்
நவின்றவிதை யெய்துமா றெவ்வாறிங் கென்னிற்
பொன்றலினித் தியகருமா னுட்டான மதனாற்
புண்ணியமப் புண்ணியத்தாற் பாவவொழி வதனாற்
குன்றலறு சித்தசுத்தி யதனாற்பொய்க் குடும்பக்
குற்றநெகிழ் வதனான்மெய்த் துறவுதுற வதனால்.

(பொ-ரை.) எந்தக்காலத்திலேனும் எவ்விடத்திலேனும் எழுவகைத் தோற்றத்தில் யாதோருடம்புமாகாமற் பேதமின்றி யொன்றாயிருந்த சச்சிதானந்த சிவசொரூபமாதலே யெவற்றினும் மேலாய நன்றி தருகின்ற விதேக கைவல்லியமெனச் சத்துக்கள் கூறுநிற்பர். இங்கேசொல்லிய இந்த விதேகமுத்திநிலையை யிங்கெய்துமார்க்கம் எங்ஙனமெனக் கேட்கின், உயிர்கள் வழிபடற்கு என்றும் நசியாது நின்றுள்ள நித்திய கன்மானுஷ்டானமும், அக்கன்மானுஷ்டானத்தாற் புண்ணியமும், அப்புண்ணியத்தாற் பாவநாசமும், அப்பாவநாசத்தால் என்றுஞ் சுருங்காத சித்தசுத்தியும், அந்தச்சித்தசுத்தியாற் பொய்யாகிய குடும்பத்தால் விளைந்த பந்தத்தளர்ச்சியும், அந்தப் பந்தத்தளர்ச்சியால் மெய்த்துறவுபூணலும், அந்த மெய்த்துறவு பூணலால், எ-று.

காலதத்துவமென்பார் என்றுமெனவும், சகலபுவன போகங்களும் என்பார் எவ்விடத்தினுமெனவும், சராசரவுயிர்களாகிய பௌதிகமென்பார் ஒருடம்பெனவும், இவையாவு மின்றென்பாருளுதெனவும், பரிபூரணமா யிருந்ததென்பார் ஒன்றாயிருந்தெனவும், காலத்திரயத்திலும் அழிவின்றி நித்தியமாயிருந்ததென்பார் சத்தெனவும், ஆதி மத்தியாந்த ரகித சதோதமாய் விளங்குமென்பார் சித்தெனவும், தடையற்ற நிரதிசயானந்தமென்பார் ஆனந்தமெனவும், மூன்றும் பிரிவின்றி யொன்றாய் மங்களகரமாய் விளங்குகின்றதே பிரமமென்பார் சிவசொரூபமெனவும், அதுவே யுண்மையானதென்பார் ஆதலெனவும், அதுவே யதீதபதமான முத்தியென்பார் விதேககைவல்லியமெனவுங்கூறினர். விதேகமுத்தியென்பது தேகஞ்சின்மாத்திரமாதலே, எனவே, சீவன்முத்தியிற் சீவன் சிவமாய் விளங்குவதுபோலப் பிராரத்தானுபவ நீக்கத்திற் றேகச் தேகியின் தேஜசா யானந்தமாத்திரமாய்ச் சேடித்துநிற்பதென்க.

வினா :—அந்றேல், உலகரைப்போல ஞானவான்களுக்கும் உயிர் பிரியவும், அங்ஙனம் பிரிந்த தேகத்தைத் தகனஞ் செய்யவுங் கண்டிருக்கின்றோமே, அங்ஙனமாக எங்ஙனம் பூரணமாயிற்று ?

விடை :—பஞ்சபூத பௌதிகங்கள் பூரணமாக விளங்க இத்தேகமாத்திரமாக விளங்கவில்லை, இஃதும் அங்ஙனமே விளங்குமென்க.

வினா :—அற்றேல், இச்சகம் பூரணதிருஷ்டியாய்ப் பார்க்கிற் பூரணமாய்த் தோன்றுவதேயன்றிப் பூரணமாய்க் கரையாததுபோலத் தேகமும் அங்ஙனம் பார்க்குமிடத்து அதுவாய்த் தோற்றுவதேயன்றி அதுவாய்க் கரையவில்லையே?

விடை :—அஸ்தியாதிய கடினரூபமாயுள்ள இத்தேகம் ஓர் சித்தியினாற் பரமாணுரூபமாய்ப் பந்தனம்பண்ணின வீட்டின்கணின்று வெளிப்படுதல்போலச் சைதன்னிய சிந்தனையாற் றேகஞ் சைதன்னிய ரூபமாதற்குச் சந்தேகமென்னையென்க.

வினா :—அற்றேல் இங்ஙனமாயின் அதற்குப் பிரமாணமுண்டோ?

விடை :—பாரதத்தில் வியாச வசிஷ்டாதிய மஹாரிஷிகளும், இகத்தில் ஆசாரியசுவாமிகள் முதலியோரும், இன்னும் மாணிக்கவாசக சுவாமிகளும் தேக சேடமின்றிச் சோதியாய்க் கரைந்தாரென்பதும், இன்னும் அல்லமாப்பிரபுதேவர் சீவன்முத்தித் தசையிற்றானே கோரக்கர் கட்கம் பரிசியாமற் சாயையா யிருந்தாரென்பதும் இன்னும் அநேகமு முண்டென்க.

வினா :—அற்றேல், யாவரும் ஏன் அனுஷ்டிக்கவில்லை?

விடை :—கிஞ்சிக்ஞத்துவமான சீவன் சர்வக்ஞத்துவமுள்ள சிவத்தைச் சிந்தித்து அது நீயென்னும் பகுப்பறச் சுத்த சைதன்யமாதற்கே சிருஷ்டி தொடங்கி யிதுகாறும் வருந்தும் வருத்தத்திற்கு அளவின்மையா யிருத்தலினானும், இச்சடத்தைச் சித்தாகக் கரைத்தற்குள்ள வருத்தம் இவ்வளவென மட்டிடக்கூடாமையாலும், எவரும் அனுஷ்டிக்கும்படி சுருதிகள் சொல்லாமையாலும், ஆசிரியரும் நிரந்தரமாய் அநுஷ்டிக்கச் சொல்லவில்லையாதலாலும் ஏகதேசத்தில் உண்டென்க.

வினா :—இனிச் சீவன்முத்தியில் விதேகமுத்தித் தன்மையும், விதேகமுத்தியிற் சீவன்முத்தித் தன்மையும் உண்டென்பது எங்ஙனம்?

விடை :—சீவன்முத்தித் தன்மையாயிருந்து உபதேசாதிகள் செய்யுமிடத்துந் தேகமின்றிச் சாயைமாத்திரமாயிருந்த அல்லமாப்பிரபுதேவர் போல இருப்பது சீவன்முத்தியின் விதேகமுத்தியெனவும், விதேகமுத்தித் தன்மையாற் பரிபூரணமாயிருந்துஞ் சகசீவபரங்களை யியக்காமல் இயக்குவிக்கும் பரமேசனைப்போல இருப்பது விதேகமுத்தியிற் சீவன்முத்தியெனவுங் கொள்க.

விதேகமுத்தித்தன்மை யிஃதென விளங்கக்கூறியது.

அவதாரிகை.

நிறுத்தமுறையால் முத்தி விருப்பமாதிய பதினொருவித மாபுணர்த்துகின்றது.

முத்திவிருப் பதனானே புறக்கரும மொடுக்க
மொழிந்ததனால் யோகநிலை முயற்சியது தன்னாற்
பொய்த்தலறு துரியவிழை வத்துரிய விழைவாற்
புகலருமா வாக்கியவா ராய்ச்சியத னானே

யத்துவித ஞானமத னாலவித்தை நாச
மதனாற்பொய்த் துவிதமயக் கழிதலத னாலே
மெத்துசுக துக்கநினை வழிவதனால் விருப்பு
வெறுப்பறுத லதனாலொண் விதிவிலக்கோய் வதனால்.

(போ-ரை.) முத்திவிருப்பும், அந்த முத்திவிருப்பத்தால் புறக்கரும நாசமும், அந்தப் புறக்கருமநாசத்தால் யோகநிலையை யடைதற்கியைந்த முயற்சியும், அங்ஙனமாய முயற்சியால் என்றும் நசியாத ஆத்மப்பிரியமும், அவ்வாத்மப் பிரியத்தால் சொல்லற்கரிய மகாவாக்கிய வாராய்ச்சியும், அவ்வாராய்ச்சியால் அத்துவித ஞானமும், அவ்வத்துவித ஞானத்தால் அவித்தையா நாசமும், அந்த வவித்தையா நாசத்தால் பொய்யான துவிதமயக் கொழிதலும், அந்தத் துவிதமயக் கொழிவால் எவரும் மெச்சுகின்ற சுகதுக்க நினைவொழிவாதலும், அவ்வொழிவால் விருப்பு வெறுப்பொழிதலும், அவ்வொழிவால் ஒள்ளிய விதிவிலக்குக் கெய்ப்புகாண்டலும், அங்ஙனம் எய்ப்புக்காண்டலால், எ-று.

அவதாரிகை.

முன்னிருத்த முறையால் இருவினையாதிய மூன்றின் இலக்கணமும், இவ்விருபது சோபானத்திற்கும் அதீதமான விதேக கைவல்லிய இலக்கணமும் உணர்த்துகின்றது.

வினையிரண்டு மகறலதனாற்றேக பாவ
விச்சிந்நி யதனாலே பாசமெலா மொழிதல்
பினையறைந்த வதனாலே பராபரமாய் முடிவாய்ப்
பெயர்சாதி குறிபெறா தொன்றாகி வாக்கு
மனமிறந்து நித்தியா னந்தமய மாகி
மறுவிலா விதேககை வல்லியம்வந் தெய்து
மெனவறிந்து தெளிந்திடுக சுருதிகுரு பரனா
லின்பவீ டடையுநெறி விரும்புறுமுத் தமரே.

(போ-ரை.) நல்வினை தீவினை என்னுமிரண்டுவினையும் நாசமெய்தலும், அந்த நாசத்தால் தேகான்மபுத்தி நீங்கலும், அந்நீக்கத்தால் பாசம் அனைத்தும் ஒருங்கொழிதலும், முடிவிற்கூறிய இந்தப் பாசவொழிவால் பராபரமாகவும், எவற்றிற்கும் முடிவாகவும், இன்னபெயர், இன்னசாதி, இன்ன குறியெனப் பெறாது ஏகமாகவும், மனோவாக்குக் கெட்டாது நித்தியானந்தமயமாகவும் விளங்குங் களங்கமற்ற விதேக கைவல்லியம் வந்து வாய்க்குமென்று தீர்ப்பாக வறிந்து தெளிதி. இது சுருதி குருவாற் பேரின்ப வீடடைதற்கு நெறித்தாதலின் இதனைச் சத்துக்கள் விரும்பா நிற்பர்.

ஏகார மூன்றும் அசைநிலைகள்.

உதயபூர்வம் ஐந்து கடிகைக்குள்ளான உஷத்காலத்தில் விழித்துச் சுசியோடுங்கூடத் தான் வழிபடு கடவுள் வணக்கத்தோடும், விதிப்படி மலசல உபயத் துவாரசுத்திசெய்வதே சுவுசவிதியெனவும், மேற் றந்ததாபன சப்தத் துவார சுத்திசெய்வது தந்ததாபன விதியெனவும், தீர்த்தத்திற் படிந்து மஞ்சரீரசுத்திசெய்வது ஸ்நானவிதியெனவும், மூன்று சுத்தியோடு தான் சிவசொரூபமாக விபூதிதரிப்பது அனுஷ்டானவிதியெனவும், பிரணவாதி மந்திரங்களால் உருவேற்றுவது ஜபவிதியெனவும், பூதசுத்தி முதலிய பஞ்ச சுத்திகளோடுந் தான் சிவசொரூபமாயிருந்து சோடசவுபசாரத்தோடு சிவத்தைப் பூசிப்பது பூஜாவிதியெனவும், மேற்பிராணபலியோடுங்கூட ஆத்ம திருப்தி பண்ணுவிப்பது போஜனவிதியெனவும் ஆகிய சப்தவிதிகளும் இங்ஙனமபரான காலத்திலுஞ் செய்கின்றது மிடையிற் றியான பரனுயிருப்பதுமாதலின் நித்திய கருமானுஷ்டானமெனவும், இவ்வனுஷ்டானஞ் சற்கருமமாய்த் தூய்தான புண்ணிய விசேடமாதலிற் புண்ணியமாமெனவும், அத்தூய்மையாற் பாவகருமஞ் சேர்தற்கு இடமின்மையிற் பாவவொழிவெனவும், அதன் நீக்கம் நிர்மலமாதலிற் குன்றலறு சித்தசுத்தியாமெனவும், அச்சித்தசுத்தியின் விடயத்தின் உண்மை தெரிதலிற் பொய்க்குடும்பக் குற்ற நெகிழ்வாமெனவும், அத்தோஷ திருஷ்டியினுல் ஒன்றினும் பற்றின்மையின் மெய்த்துறவாமெனவும், அவ்விரத்தி சுகவேதுவாயிருத்தலின் முத்தி விருப்பமாமெனவும், அம்முத்தி விருப்பம் அகமுகத்திற் சார்ந்து பாகிய கன்மமொடுங்கலிற் புறக்கரும வொடுக்கமாமெனவும், அவ்வொடுக்கம் மனோ நிக்கிரகத்தை நாடலின் யோகநிலை முயற்சியாமெனவும், அம்முயற்சி தனித்திருப்பதை நாடலிற் பொய்த்தலறு துரிய நிலைவாமெனவும், அத்துரியமிஃதென அறியும் பரமாத்ம விசாரஞானம் வேண்டுதலிற் புகலரு மாவாக்கிய ஆராய்ச்சியாமெனவும், அவ்விசாரம் அபேதமாதலின் அதன்சாரமான அத்துவித ஞானமாமெனவும், அவ்வத்துவிதஞானம் அபரோட்சமாதலின் அவித்தியா நாசமாமெனவும், அவித்தையா நாசத்தில் அக மிதமென்னும் பிராந்தி நீங்கலிற் றுவிதமயக் கொழிதலாமெனவும், அவ்வொழிதலில் இன்ப துன்பம் நீங்கலிற் சுகதுக்க நினைவொழிவாமெனவும், அவ்வொழிதலின் இராகத்துவேஷ மின்மையின் விருப்பு வெறுப்பறுதலெனவும், அது நீங்கவே யிது செய்யத்தக்கது, செய்யத்தகாததென்னுஞ் சங்கற்ப விகற்ப மின்மையின் விதிவிலக் கோய்வாமெனவும், இவற்றால் சொர்க்க நரகமின்மையின் வினை யிரண்டும் நீங்குமெனவும், இந்நீக்கத்தில் நாமரூப பாவனையின்மையிற் றேகபாவ விச்சிந்தியாமெனவும், இவ்விச்சிந்தியினுல் அவாவனைத்தும் அன்பாய்க் கரைதலிற் பாசமெலா மொழிதலெனவும், அப்பாசமாகிய மூலாஞ்ஞானம் நசித்தவிடத்திற் பரமாகிய ஈசுரத்தன்மையும், அபரமாகிற சீவத்தன்மையு நீங்கி யானுயென்னும் பிரமகூடஸ்த அயிக்கமான அத்துவித சொரூபமாதலிற் பராபரமெனவும், இவ்வத்துவித பதத்திற்குமே லொரு பதமுமின்மையின் முடிவாயெனவும், இதற்கோருருவ மின்மையிற் பேர்

பெறுதெனவும், இஃதொன்றின் அம்சமாகாமையிற் சாதி பெறுதெனவும், இஃதிங்ஙன மிருக்குமென ஓர்அடையாளமின்மையின் குறிபெறுதெனவும், இஃதெங்கும் பரிபூரணமாக நிறைந்திருத்தலின் ஒன்றாகியெனவும், இதை வாக்கினாற் றுதிக்கத்தொடங்கின் அத்துதி முடிவுபெறாது அதிற்கரைதலின் வாக்கிறந்ததெனவும், இதை மனதினாற் சிந்திக்கத்தொடங்கின் அச்சிந்தனைத்தின் மனம் அதுவாய்க் கரைந்துபோதலின் மனமிறந்ததெனவும், இங்ஙனமியாவுங் கரைந்தவிடத்து நிரதிசயானந்தமாய் நிறைந்து நிற்றலின் நித்தியானந்தமயமாகியெனவும், இக்கலங்கங்களனைத்தும் நீங்கித் தானே தானாய் விளங்கலின் மறுவிலா விதேக கைவல்லியமெனவுங் கூறினார்.

இங்ஙனம் விதேக கைவல்லியத்தையடையும் நிமித்தம் முதலிய நித்திய கருமானுஷ்டான முதற் பாசம் ஈறாய மரபு இருபதில் முன்னைய எட்டும் பாகிய சாதனமெனவும், இடையின் மூன்றும் ஆந்தரிய சாதனமெனவும், மேலொன்றுஞ் சாதியமெனவும், ஏனைய எட்டும் நீங்கல் சாதனசாத்தியமெனவுங்கொள்க.

வினா ;—இவற்றில் வஸ்து நிச்சயம் உபக்கிரமத்திலாவது, உபசங்காரத்திலாவது கூறாது மத்தியிற் கூறியதென்னை ?

விடை :—அவ்வஸ்து சர்வதோமுகமாயிருந்து யாவுமாய் விளங்குதல் அனுபவமாதலினாலும், சுருதிகள் மத்தியகத ஸ்வரூபமென விளம்புதலினாலும், விசாரத்தில் ஒன்றிற் சார்பில்லாது நடுநிலையாய் விளங்குதலினாலும், சாதனத்தில் ஆசிரியர் உபதேச அனுஷ்டானத்தில் யாவிற்குஞ் சாட்சியாய்க் காண்கையினாலும், சாத்தியத்தில் யாவும் பரிபூரணமாய் விளங்குதலினாலும், மரபினும் மத்தியகதமே கூறினாரென்க.

வினா :—இங்ஙனங்கூறிய மரபிற் சீவன்முத்தித் தன்மையைக்கூறாது விதேக கைவல்லியத்தை மாத்திரங் கூறியதென்னை ?

விடை :—சீவன்முத்தியே விதேகமுத்தி யாதலினென்க.

வினா :—அற்றேல், அஃதிரண்டாகக் கூறுவதென்னை ?

விடை :—தந்தபடமென்னு மிடத்திற் படத்திற்கு நாமரூபம் இருப்பதுபோலத் தோற்றுவது மாத்திரமேயன்றி, அஃதின்மைபோல, ஞானத்தினாற் றேகபாவநீங்கியும இருப்பதுபோலத் தோற்றுவதுமாத்திரமேயன்றி, யஃதில்லாமையால் அத்தோற்றத்தைச் சீவன்முத்தியெனவும், அது நீங்கினதே விதேகமுத்தியெனவும் நாவை நாவென்றாற்போலக் கூறினாரென்க.

அதி தீவிர பக்குவான்மாக்கள் விதேகமுத்தியடையுஞ் சோபான மரபு இங்ஙனமெனவும், இங்ஙனம் அதையடைந்த ஸ்வானுபவ உல்லாசம் இனையதெனவும் உணர்த்தியதென்பது.

தத்துவமல் லாத சராசரங்க ளெங்கணுமா
தத்துவத்தைச் சோதித்துத் தானதற்—கித்துறையே
அன்றிப் பிறிதிலையா லாய்ந்துய்மி னிந்நூலை
யன்றிச் சுருக்கமெஃ தாம்.

பன்னிரண்டாஞ் சூத்திரம் முற்றிற்று.

சிவஞானபோத மூலமும், வேதாந்ததீபிகையென்னுமுரையும் முற்றிற்று